அன்பு மலர்

சுத்தானந்த பாரதியார்

ஏழை படும் பாடு

விக்தர் ஹ்யூகோ எழுதிய நாவல்களில் மிகப் புகழ் பெற்றது "லே மிஸரபிள்" (Les Miserables). இம் மொழியின் பொருள், "கஷ்டப்படும் ஏழைகள்" அல்லது "ஏழை படும் பாடு." உலகில் சமூகக் கொடுமைகளாலும் அரசாங்கத்தின் சுயேச்சாதிகாரச் சட்டங்களாலும் பரம ஏழைகள் எப்படி வருந்துகிறார்கள் என்று இந்த நாவலில் படம் பிடித்தாற்போலக் காணலாம்.

Re. 1/8 Re. 1/8

ன் பு நி ல யம்:

அதிபர்

1 8 1938

பாரதியார்

டும் பா

நாவல்களில் மிகப் புகழ்
" (Les Miserables). இ
"கஷ்டப்படும் ஏழைகள்"
பாடு." உலகில் சமூக
ங்கத்தின் சுயேச்சாதிகார
ழைகள் எப்படி வருந்துகிறு
ில் படம் பிடித்தாற்போல

ஓம். சக்தி ... நிலையம்

Re. 1

அன்பு நிலையம்:

....
அதிபர்

அன்பு நிலய

வெளியீடுகள்

அன்பு மலர்கள் :-

- பைந்தமிழ்ச் சோலை
- இராமலிங்க விஜயம்
- இன்பமாலை
- தரும சாதனம் (மூலம்)
- உடலுறுதி
- பொதுநெறி (உரையுடன்)
- திருக்குறள் இன்பம்
- இன்று மனிதனும் இனி வரும் மனிதனும்
- வரகவி தாகூர்
- தியான மாலை
- புதுமையும் பழமையும்
- திருநூல் அல்லது தூயவாழ்வு
- யோகசித்தி
- தமிழுணர்ச்சி
- புத்தர் கருணை
- ஏழை படும் பாடு



ஜாம்வல்ஜான்

[பக்கம்: 39

அன்பு மலர்—21

ஏழை படும் பாடு

புலவர் மணி விக்தர் ஹ்யூகோவின்

'லே மிஸரபிள்'

சுவாமி சுத்தானந்த பாரதியார்

அன்பு நிலயம்
இராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா

First Printed : *Nov. 1938*

PRINTED BY
THE PROGRESSIVE PRINTERS
MADRAS

பதிப்புரை

எமது நிலயத்தின் 21-வது அன்பு மலரை ஏழைப் பங்காளனை இறைவன் மலரடியில் வைத்து வணங்குகிறோம். விக்தர் ஹ்யூகோ பிரெஞ்சுக் கவியரசர், நாவலரசர், சுதந்திர வீரர். அவர் நூல்களிலெல்லாம் மிகச் சிறந்ததாக உலகம் போற்றுவது லே மிஸராபிள். அது சுமார் 3000 பக்கங்கள் கொண்ட மிகப் பெரிய நாவல்.

சுவாமி சுத்தானந்தபாரதியார் பிரெஞ்சு மொழியில் தேர்ச்சிபெற்றுக் கவிப்புலமை வாய்ந்தவர்; விக்தர் ஹ்யூகோவின் காவியங்களையும், நாவல்களையும், நாடகங்களையும் ஆர்வமுடன் படித்து நன்கு சுவைத்தவர்; உலக நாவல்களிற் சிறந்த இந்த லே மிஸராபிள் கதையைத் தமது எளிய இனிய ஆவேச நடையில் அழகாக எழுதியெமக்களித்தார். உலகில் சமூகக் கொடுமையாலும், ஈரமற்ற சட்டங்களாலும் ஏழைகள் படும்பாட்டை இந்நூலிற் படிக்கையில் உள்ளம் கரைகின்றது. திருப்பித் திருப்பிப் படித்துச் சுவைக்கவேண்டிய இலக்கிய மணிகளில் இந்நூல் ஒன்றாகும்.

இந்நூலின் சில பகுதிகள் இரங்கூன் தனவணிகனில் வந்தன. அவற்றைப் படித்ததும், ஆவேசத்துடன், "நான் இந்த அரிய நூலை வெளியிடுகிறேன்" என்று முன்வந்தார் இராயவரம் தமிழ்மணி, திரு. வை. கோவிந்தன் அவர்கள். பெருஞ்செலவில் இந்நூலை அவர் வெளியிட்டுத் தமிழருக்கு உதவியிருக்கிறார். "அன்புஇராமு" தமிழ் நாட்டு வீர இளைஞரில் ஒருவர்; சிறந்த தமிழபிமானி;

தேசத்தொண்டர்; சீர்திருத்தப்பிரியர்; புதிய இலக்கியங்களை வெளியிடுவதில் பேரார்வங்கொண்டவர். இவர் அன்பு நிலயத்தின்பால் பேரன்புடையார். இவ்வொப்பற்ற இலக்கிய மணியை வெளியிட்ட இவரது வண்மைக்கு நாங்கள் மனமார்ந்த நன்றி செலுத்துகிறோம்.

இதே மாதிரி நமது நிலயத்திலிருந்து சுமார் பத்து நாவல்கள் வெளியிடக் கருதியுள்ளோம். இறைவனருளும் அன்பர் துணையும் எம்மை யூக்குக!

அன்பு நிலயத்தார்

பொருளடக்கம்

ஏழை படும் பாடு

ஏழை யெளியவர்கள்—படும்
இன்னலை யெண்ணினுல் என்மனம் வேகுதே!
கோழைக் குருடர்களாய்—கல்வி
கொஞ்சமும் இன்றி குடிக்கக் கஞ்சியின்றி
சூழுந் துயரிடையே—அவர்
தூண்டிற் புழுப்போலத் துன்பந் துடிக்கின்ருர்
கேள்வி முறையில்லையோ—இவர்
கேடுற் றழுங் கண்ணீர் நாடெல்லாம் பாயுதே (ஏழை)

ஏழைத் தொழிலாளர்—நாட்டில்
ஏங்கித் தவிப்பதை யென்னேன்று சொல்லுவேன்?
வாழ வகையும் உண்டோ....? ஒரு
வாய்ச்சோறு சாப்பிட நாயாய் உழைக்கின்ருர்
பாழும் பணக்காரர்—இந்தப்
பஞ்சை மக்களுக்கு வஞ்சனை செய்கின்ருர்
தோழர்களே கொடுமை—ஐயோ
சொல்ல முடியாது நெஞ்சு துடிக்குதே........! (ஏழை)

ஓட்டைக் குடிசையிலே—ஐயா
ஒன்பது பேர்கள் குடித்தனஞ் செய்கின்ருர்.
ஆட்டுங் குளிர் பனியில்—கந்தல்
ஆடையும் இன்றி வெடவெடக் கின்றனர்.

வாட்டும் பசிக் கொடுமை—கடன்
வாங்கிப் படுந்தொல்லை தாங்கமுடியாதே....!
மாட்டுக்கு மேய்ச்சலுண்டு—சேக்கு
மாடுபோல் வேலைசெய் மாந்தர்க் குணவில்லை. (ஏழை)

ஆலைத் தொழிலாளர்—பலி
ஆடுகள் போலே முதலாளி யாட்சியில்,
வேலைப் படுகளத்தில்—மனம்
வெட்டுண் டுயிரினை விட்டுண்டு வாழ்கின்றார்
மூலை யிருளினிலே—வெய்யில்
முஞ்சியும் பாராது தேய்ந்து வெளுக்கின்றார்
காலச் சுழற்சியிலே—இவர்
கட்டுகள் விட்டு விடுதலை காணுமோ ? (ஏழை)

துக்கம் பெருகுதையே—பசித்
துன்பத்தால் ஏழை துடித்துத் துடித்தழும்
பக்கம் திரும்பிடினே—கண்
பார்த்துச்செங் கண்ணீர் வடித்து வடித்துயிர்
மிக்க வருந்துதையே—இவர்
வீட்டு மனைவியர் ஊட்ட விதியின்றி
மக்களுடன் அழுவார்—அவர்
மானமும் விற்றுணர் போனகத்திற் கந்தோ! (ஏழை)

—சுத்தானந்த பாரதி.

ஏழை படும் பாடு

விக்தர் ஹ்யூகோ மிகப் பெரிய பாவலர், நாவலர்; பத்து வயது முதல், தனது அனுபவக் களஞ்சியத்தைப் பதினுயிரக் கணக்கான பாக்களாகவும், மிகப் பல நாவல்களாகவும், நாடகங்களாகவும் எழுதியுள்ளார். பத்தோன்பதாவது நூற்றுண்டில், பிரான்ஸில் மிகப் பெரியவர் விக்தர் ஹ்யூகோவே. நேப்போலியனுக்குப் பிறகு முடியாட்சி தலைதூக்கியது; அதைத் தகர்த்த வீரருள் விக்தர் ஹ்யூகோ ஒருவர். அதற்காகப் பலமுறை நாடுகடத்தப்பட்டு வருந்தினுர். அரசியல் இடர்கள், குடும்பத் துயர்கள் அனைத்தையும் பொறுத்துக்கொண்டு, ஹ்யூகோ உலகிற்கு அற்புதமான இலக்கியப் பணிபுரிந்துள்ளார். 1848-ம் ஆண்டு, மீண்டும் குடியரசு ஏற்பட்டது. அது முதல், விக்தர் ஹ்யூகோ பிரெஞ்சுச் சட்டசபையில் அரிய பொது நலப்பணி புரிந்தார்; ஏழை யெளியவரிடம் இளகிய மனமுடையவர்; அவர்களுக்காகச் சட்டசபையில் உருக்கமாகப் பேசினுர். பிரெஞ்சுப் பல்கலைக் கழகத்திலும் இவர் அற்புதமான இலக்கியப் பணியும் கல்விப் பணியும் புரிந்தார். பிரெஞ்சுக்காரர் இவரை அதி மனிதனுகவே (Superman) கருதுகின்றனர்.

சமீபத்தில் இவரது நூற்றாண்டுத் திருவிழா சிறப்பாக நடந்தது. இவர் பெயரால் ஒரு மாளிகை கட்டி, அதில் இவரது கையெழுத்துப் பிரதிகள், எழுதுகோல், இவர் செதுக்கிய மரச் சித்திரங்கள், இவர் கையாண்ட சாமான்களெல்லாம் வைக்கப்பட்டுள்ளன. விக்தர் ஹ்யூகோ எழுதிய நாவல்களில் மிகப் புகழ்பெற்றது "லே மிஸரபிள்" (Les Miserables). இம்மொழியின் பொருள், "கஷ்டப்படும் ஏழைகள்" அல்லது, "ஏழை படும் பாடு", உலகில் சமூகக் கொடுமைகளாலும் அரசாங்கத்தின் சுயேச்சாதிகாரச் சட்டங்களாலும் பரம ஏழைகள் எப்படி வருந்துகிறார்கள் என்று இந் நாவலில் படம் பிடித்தாற்போலக் காணலாம்.

---

1. சாது உத்தமர்

பதினாறாவது லூயி தூக்கு மேடையில் இறந்தான்; முடியரசு மண்ணில் உருண்டது; குடியரசுக் கொடி வானளாவிப் பறந்தது. ஏழை யெளிய வரைக் கொடுமை செய்த பிரபுக்களின் தலைகள் ஆடிப் புளியம்பழம் மாதிரித் தூக்குமேடையினின்று உதிர்ந்தன. கூடைகூடையாகத் தலைகள் குழி வெட்டிப் புதைக்கப்பெற்றன. இந்தப் பயங்கர ஆட்சியால் மீதியிருந்த கனவான்களும், தனவான் களும் கலக்கமெடுத்து, அமெரிக்கா, இங்கிலாந்து, ஸ்பெயின், இத்தாலி முதலிய நாடுகளுக்கு ஓடி யொளிந்து தப்பினர். அப்படி இத்தாலிக்கு ஓட்ட மெடுத்தவர்களில் மிரியல் (Myriel) என்பவர் ஒரு வர். இவர் தகப்பனார் அரசியற் சபை அங்கத் தினர். மிரியல் பெரிய அறிவாளி; இரக்கமுள்ள வர்; பொதுநல வேட்கை கொண்டவர். இத்தாலி யில் இவரது மனைவி யிறந்தார்: பிள்ளைகளும் இல்லை. தமது உற்றார் உறவினரும் புரட்சிக்குப் பிறகு நடந்த இரத்த ஆட்சியில் மடிந்தனர். மனித னுக்கு இதைவிடத் துயர் வேறென்ன வேண்டும்? உலக வாழ்வின் துன்பம் முழுதும் மலைபோன்ற அலையாக எழுந்து மிரியல்மேல் மோதியது! உலகை நீத்தார்; 'இனி நான் ஏழை எளியவருக்காகவே வாழுவேன்' என்று விரதம் பூண்டார்; கிறிஸ்து சமயத் தத்துவத்தில் தேர்ந்தார்; சாதுவானார்.

பிரான்ஸு தலைவரின்றித் தத்தளிக்கும்போது நெப்போலியன் தலை தூக்கினான். அவன் கோர்ஸிகாவில் ஒரு வக்கீலின் மகன்; அவனது தாய் மற்றொரு ராணி லக்ஷ்மீபாய்; கோர்ஸிகா விடுதலைக்குப் போர் புரிந்தவள். நெப்போலியன் ஏழு வயதில் ராணுவக் கல்வி கற்கப் பிரான்ஸிற்கு வந்தான்; கல்வி கற்றுப் பீரங்கிப் புலவனானான்; அரசாங்கப் படையில் உத்தியோகம் பெற்று, மென்மேலும் ஓங்கி, இத்தாலிப் படைக்குத் தலைவனானான். இத்தாலியில் அவனடைந்த மகத்தான வெற்றிகளால் நெப்போலியன் செல்வாக்கு ஓங்கியது. அதன் பிறகு எகிப்தைப் படையெடுத்துச் சில காலம் அரசாண்டு, பிரான்ஸிற்கு வந்தான். அச்சமயம் குடியரசு தள்ளாடிக் கொண்டிருந்தது. நெப்போலியன் ஆட்சியைக் கைப்பற்றினான்; முதலில் சர்வாதிகாரியாயிருந்து பிறகு சக்கரவர்த்தியாக முடிசூட்டிக் கொண்டான். அச்சமயம் வெளிநாடுகளுக்குச் சென்ற பலர் தாய் நாட்டிற்குத் திரும்பி வந்தனர். நமது மிரியலும் வயோதிகராகப் பாரிஸுக்கு வந்தார். நமது நண்பர், ஒரு பாதிரியார், அவரை வரவேற்றார். இப்பாதிரி நெப்போலியன் நண்பர். ஒரு நாள் நெப்போலியன் அவர் வீட்டிற்கு வந்தான். மிரியல் நெப்போலியன் கண்ணில் பட்டார். ஆட்களை அறிவதில் நெப்போலியன் மகா நிபுணன்; "இந்த நல்ல மனிதர் யார்?" என்று வினவினான். மிரியலே முன்வந்து

பதில் சொன்னார்:—"ஐய, தாங்கள் ஒரு நல்ல வனைக் காண்கிறீர்கள்; நான் ஒரு பெரிய மனிதனைக் காண்கிறேன். எனது நன்மையும், தங்கள் பெருமையும் ஒன்றிற்கொன்று ஒத்தாசையா யிருக்கட்டும்."

நெப்போலியன் மிரியலை விரும்பி நன்மதித்தான். இவரை ஒரு நல்ல கிராமத்திற்குப் பாதிரியாக அனுப்பினால் ஜனங்கள் திருந்துவார்கள் என்று கண்டான். "உத்தமரே! திங்கு (Dinge) என்னும் ஊருக்குப்போம்; அங்குள்ள சர்ச்சைத் தலைமை வகித்து நடத்தும்" என்று பணித்தான். மறு நாளே நமது உத்தமர் பணியை ஏற்றுக்கொண்டார்.

2. உத்தமர் தியாகம்

ஊர் மகாஜனங்கள் சாது மிரியலை அரச விருதுகளுடன் வரவேற்றுப் பீடமேற்றினார்கள். திங்குமடம் மிகப் பெரிய கல் மாளிகை; அறுபது பேர் தாராளமாக வசிக்கலாம்; உண்ண, இருக்க, படுக்க, படிக்க, குளிக்க, விருந்தாளிகளை வரவேற்க விசாலமான அறைகள்; எல்லாம் நாசூக்காக அலங்கரிக்கப் பெற்றவை. பின்னால் உலாவப் பூவும், கனியும், பசுமையும் குலுங்கும் தோட்டம். இருப்பது மூன்றே பேர்: 1. நமது சாது மிரியல், 2. அவரது முதிய சகோதரி பாப்திஸ்தை (Baptistine), 3. அவளுக்குத் துணையாக மகுளாரி

(Magloire) என்ற கிழவி. அண்ணனைப்போலவே தங்கை பாப்திஸ்தையும் அன்பு மயம். தனது ஆயுள் முழுதும் புண்ணிய நூல்களைப் படிப்பதும், சிந்திப்பதும், தாராளமாகப் பரோபகாரங்கள் செய்வதுமாகக் காலங்கழித்தாள்; முதுமையால் உடல் தளர்ந்தாலும் மனந் தளரவில்லை; ஈகை தளரவில்லை. அண்ணனிடம் அன்பும், வணக்கமும் மிகுந்தவள். மிரியல் குடும்பத்தில், நமது சாதுவும் இவளுந்தான் மிச்சம். பிதுரார்ஜிதத்தினின்று அவளுக்குச் சுமார் எழுபது ரூபாய் வருமானம் வந்துகொண்டிருந்தது; தன் மட்டிற்குப் போதும். சாதுவுக்கு மடத்து வருமானம் ரூ. 2,200-க்கு மேல் வந்தது. இவ்வளவு பெரிய மாளிகையும், இவ்வளவு பணமும் தனக்கு மிகையென வுணர்ந்தார் சாது.

மடத்திற்கு அடுத்து ஒரு சிறிய வைத்தியசாலை; சாது அதைப் பார்த்தார். உடனே அதன் வைத்தியரைத் தமது மாளிகைச் சாப்பாட்டறைக்கு அழைத்துச் சென்று பேசினார்:

சாது:—வைத்தியரே, தங்கள் கட்டிடத்தில் எத்தனை நோயாளர் உளர்?

வை:—26 பேர்.

சாது:—அத்தனை பேருக்கும் விசாலமாக இடமிருக்கிறதா?

வை:—அதுதான் இல்லை; நெருக்கம்; புழுக்கம்; காற்றில்லை; கஷ்டப்படுகிறார்கள்; தொத்து நோய்கள் வரும்போது இன்னும் கஷ்டம்.

சாது :—ஆம் : உண்மை. (சற்று யோசித்து) வைத்தியரே, இன்று முதல் இந்தப் பெரிய மாளிகை உமது ; உமது சிறிய கட்டிடம் எனக்குப் போதும். நோயாளிகளைத் தாராளமாகப் படுக்க வையும். ஏழைகள் இதிற் சுகமாயிருக்கட்டும். கொண்டாரும் உமது சாமான்களை !

மறு நாளே சாது மிரியல் தமது பெரிய மாளிகையைக் காலி பண்ணிச் சிறிய கட்டிடத்திற் குடிப் புகுந்தார். 'என்ன தாராளம் ! என்ன தயாளம்!' என்று ஊரெல்லாம் வியந்தது. இம்மட்டோ? ரூ. 2,200-ம் தானமாகிறது ! சமயக் கல்வி மாணவர், சமய சங்கம், சாதுக் கூட்டம், உள்ளூர் உபதேசியார், வெளியூர் உபதேசியார், யருசலத்திலுள்ள சமய சபை, தாய்மார்களுக்குதவி, சிறையுண்டோர் குடும்பத்திற்குதவி, சிறைச் சீர்திருத்தம், குற்றவாளிகள் நடத்தையை திருத்த வுதவி, தமது இலாகாவிலுள்ள பள்ளிக்கூட உபாத்தியாயர்களுக்குதவி, ஏழைப்பெண்களுக்குக் கல்வி, ஏழை யெளியவருக்கு உதவி—அனைத்திற்கும் முறையாகப் பங்கிட்டுத் தமக்கு ரூ. 140 மீதி வைத்துக்கொண்டார். வெளியே சென்று உபதேசங்கள் செய்ய, சீடர்களைப் பார்க்கக் கொள்ள, சவாரிச் செலவிற்காக அரசாங்கம் ரூ. 400 மேற்கொண்டு தந்தது. அதுவும் தருமமானது : வைத்தியசாலையிலுள்ள நோயாளர்க்குதவி, தாய்மார்க்குதவி, கண்டெடுத்த குழந்தைகளுக்குதவி, அனாதையான குழந்தைகளுக்

குதவி செய்ய அத்தனையும் செலவிட்டார். தாம் போகவேண்டிய இடங்களுக்கு நடந்தே சென்றார். இது தவிர, கலியாணம், கார்த்திகை, நாள், கிழமைகளில் வரும்படி வரும்: வேண்டுகோள் செலுத்துவோர் காணிக்கை வரும். இவற்றில் மடத்துச் செலவும் கோயிற் செலவும் போக மீதியை ஏழைகளுக்கே வழங்குவார். ஒருபுறம், ஏழை யெளியவர் வந்துகொண்டே யிருப்பார்: கேட்டவர்க்கு இல்லை யென்பதில்லை. மற்றொருபுறம், காணிக்கைகள் வரும். நம்பிக்கையாகப் பணத்தைக் கொடுத்து வைக்க வேண்டிய பேர்கள் நமது சாதுவிடமே தருவார்கள். பணம் பெருவாரியாகத் தானமாகும்; தண் பட்டபாடுதான். ஆனால், தாம் மிகமிக எளிய வாழ்வே வாழுவார்: நொந்தவருக்கு ஆறுதலளிப்பார். ஊர் முழுதும் அவர் அன்பைப் புகழ்ந்து "இவர் வந்தது நமக்கு நல்ல காலம்" என்று போற்றியது. ஊரார் மிரியலுக்கு, "உத்தமர்" எனப்பெயர் தந்தனர்.

---

3. உத்தமர் அன்புரை

உத்தமர் மேற்பார்வையில் பல கோயில்கள் இருந்தன. பல பாதிரிகள் வேலை செய்தனர். சவாரிகளுக்காக ஏற்பட்ட சர்க்கார்ப்படி தானமாகி விட்டதால், காலால் நடந்தே தமது கிராமத்தை

மேற்பார்ப்பார்: மலைநாடு, கரடுமுரடான நிலம்; இருந்தாலும், கிழவர் சளைக்காது தமது கடமையைச் செய்வார்; சில சமயம் கழுதை மேலேறிச் செல்வார்: இதைக் கண்ட செல்வர் சிரிப்பர். "ஏசுநாதர் ஏறிய வாகனத்தில் (கழுதையில்) நான் ஏறிச் செல்வதில் ஏச்சென்ன ?" என்பார் உத்தமர்.

ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று, ஆண் பெண் ஒவ்வொருவரையும் கண்டு க்ஷேமம் விசாரிப்பார்; நல்லுரை சொல்வார்; நீண்ட தத்துவோபதேசங்கள் செய்து கொண்டிருக்கமாட்டார்; சுருக்கமாகப் பேசி, அநுபவங்காட்டி, "அதோ! அந்த ஊர் ஜனங்கள் இப்படி நடந்து பயன்பெறுகிறார்கள். நீங்களும் அப்படி நடந்தால் பயனுண்டு" என்று இனிமையாகப் பேசுவார்: "ஏழைகள், விதவைகள், அநாதைகளுக்கு நல்லுதவி செய்யுங்கள். அறுவடைக் காலங்களில் ஒருவருக்கொருவர் சாகுபடிக்கு உதவி செய்யுங்கள். குடும்பக் கலகங்களால் வழக்குகளைப் பெருக்கிப் பணத்தை அநியாயமாக விவகாரங்களுக்கு வாரி இறைக்கவேண்டாம். வீட்டில் ஒருவருக்கொருவர் அன்பு, ஆதரவாயிருங்கள். அதோ! அந்த மலைமேல் வசிக்கும் மனிதர் எவ்வளவு ஒற்றுமையுடன் வாழுகிறார்கள், பாருங்கள்! ஒரு உபாத்தியாயரை அமர்த்திப் பிள்ளைகளுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுங்கள். எழுதப் படிக்கத் தெரியாவிட்டால் வெட்கமில்லையா? எல்லாரும் ஒட்டுறவாயிருங்கள்" என்று இவ்வாறு இதமொழி கூறி, மனி

தரை வெகு எளிதாகத் திருத்துவார்; அவர்கள் சொல்லும் குறைமுறைகளையெல்லாம் இருந்துகேட்பார்; சிந்திப்பார்; விதாயகம் சொல்வார்; ஈகையைப் பற்றிய நீண்ட சொற்பொழிவாற்றுவதை விட, ஈந்து காட்டுவார். திங்கு மாதா கோயிலில் ஒரு பாதிரி ஈகையைப்பற்றி மேற்கோள் உபமானங்களுடன் பேசித் தள்ளினார்: "ஈகையில்லாதவர்க்கு நரகம், ஈந்தவருக்குச் சுவர்க்கம்" என்று சொன்னார். நரக வேதனைகளை வருணிக்கவே, அங்கிருந்த ஒரு கருமிச் செல்வன் கதிகலங்கி, பசக்கென்று ஒரு பைசா எடுத்து ஒரு பிச்சைக்காரனுக்குத் தந்தான்! இதை நமது உத்தமர் தங்கைக்குக் காட்டி "சுவர்க்க லோகத்தை ஒரு பைசாவுக்கு வாங்கும் அந்த வியாபாரியைப் பார்!" என்றார். 'மனிதன் சித்த சுத்தியுடன், இயல்பாகவே தானதருமம் பரோபகாரங்கள் கடமையெனச் செய்யவேண்டும். நரக பயத்தாலும், விண்ணாசையாலும் அவற்றைச் செய்வது வாணிபமாகும்' என்பது உத்தமர் கருத்து. உத்தமர் ஏழைகளை 'எங்கு, எங்கு' என்று தேடிச்சென்று, பசி தீர்ப்பார். ஒருநாள் ஏழைகள் கட்டுப்படவில்லை. ஒரு செல்வனிடம் சென்றார். "ஐயா, தாங்கள் ஒரு உபகாரம் செய்ய வேண்டும்" என்றார் உத்தமர். நமது மடாதிபதிகளைப்போலப் பெருந்தொகை கேட்பாரோ என்று ஆள் பின் வாங்கினான்: "உத்தமரே, என் செலவிற்கு ஏழைகள் இருக்கிறார்கள்" என்றான். "அதுதான் நான் வேண்டியது; எனக்கு

ஏழைகளைத் தந்துதவுங்கள்!'' என்றார் உத்தமர். அன்று ஏழைகள் பாடு வேட்டைதான்! "ஏழைக ளுக்கு இரங்குங்கள். அவர்கள் துயரம் கொடிது; காற்றில்லாத குடிசைகளில் அடைந்து கிடக்கிறார் கள்; சுற்றிலும் அழுக்கு; வரிக்குப் பயந்து ஜன்னல் கூட வைப்பதில்லை; நோயால் வருந்துகிறார்கள்; மெழுகுதிரி வாங்கக் காசில்லை; தீவர்த்திகளைச் சம யங்களில் ஏற்றிக்கொள்ளுகிறார்கள். ஏழைகள் இரு ளில் அடைந்து கிடக்கிறார்கள்! சமைக்க விற கில்லை; முட்டை போட்டெரித்து ரொட்டி தட்டுகி றார்கள்; நாளாகி உலர்ந்துபோன ரொட்டியைத் தண்ணீரில் ஊற வைத்துச் சாப்பிடுகிறார்கள்! சகோ தரர்களே, ஏழைக் கிரங்குங்கள்! உங்களைச் சுற்றி வருந்தித் தவிக்கும் ஏழைகளைக் கண்பாருங்கள்!'' என்று உபதேசிப்பார்; "வாருங்கள், எளியவர் களே, இந்த மாளிகையில் இருங்கள்!'' என்று அழைப்பார். உத்தமர் படிப்பாளி; இருந்தும், சதா ரண ஜனங்களிடம் இலக்கணமாகப் பேசித் தள்ள மாட்டார். "தம்பி! சௌக்கியமா? வெள்ளாமை எப்படி? வீட்டில் எல்லாரும் நல்லா யிருக்காங்களா? சாப்பாடு சௌரியத்திற்கு உண்டென இருக் குதா? ஏதாச்சு வேணுமானுக் கேளு. சங்கோசப் படாதே'' என்று **கிராமிய பாஷையிலேயே** பேசி ஆறுதல் செய்வார். இதனுல், பொதுஜனங்களுக்கு அவரிடம் பிரியம் அதிகரித்தது. உத்தமர் மற்ற சாமியார்களைப் போலத் தனிச் செருக்குடன் அமுல்

செலுத்தமாட்டார்; கடுமையாகப் பேசமாட்டார். எப்படிப்பட்ட குற்றவாளியையும் திருத்தப் பார்ப் பாரேயொழிய வருத்தப் பாரார். "சதையும் புல னும் இருக்குமட்டும் ஆசாபாசங்கள் விடுவதில்லை; அவற்றை அடக்கமுடியாது: மனிதன் ஏதேதோ பிழை செய்கிறான். எல்லாரும் ஞானியாகவும், சாதுவாகவும் இருக்க முடிகிறதா? இல்லை. ஆனால், கூடியமட்டிலும் மனதை அடக்கியாளுங்கள்: மனச் சாட்சிக்கு விரோதமில்லாது நடந்து வாருங்கள். குற்றங் குறைகள் ஒழியத் துணை செய்யும்படி ஆண் டவனைப் போற்றிப் பணியுங்கள். பாவமே இல்லா திருப்பது தேவதைகளுக்குத்தான் முடியும். உல கமே பாவக்காடு; மனிதர் கூடிய மட்டிலும் பாவ வழியினின்று விலகி நேர்மையாக நடந்துகொள்ளுங் கள். பெண்கள் பாவம் செய்கிறார்களா? யார் குற்றம்? கணவன்மார்கள் ஒழுங்காயிருந்தால் பெண்கள் வழிதப்புவார்களா? ஆண்கள் ஒழுங்கா யிருங்கள்; பெண்களும் ஒழுங்காயிருப்பார்கள். வயிற்றுக் கொடுமையால் ஏழைகள் பாபகாரியங் களைச் செய்கிறார்கள். அது யார் குற்றம்? பணக் காரர் குற்றமே! ஏழைகளுக்குத் தராது அவர்கள் பணங் குவித்து இடம்பக் கூத்தாடுகிறார்கள். அத னால் பலர் உண்ண வழிக்க விதியில்லாது இழி தொழில் செய்து பிழைக்கிறார்கள். குழந்தைகள் பாபஞ் செய்கின்றனவா? யார் குற்றம்? பெற்றோர் கள் குழந்தைகளை ஒழுங்காகக் கவனிக்காத குற்றமல்

லவா? அறியாதவர்களுக்கு அறிவைப் புகட்டுங்கள் இது, அறிவாளிகள் கடமை. கல்வியை அனைவருக்கும் இலவசமாகத் தரவேண்டும். அப்படிச் செய்யாத சமூகம் குற்றவாளியாகும். எவன் தன்னைச் சுற்றி மடமையிருள் பரவக்கண்டும் அறிவொளி யேற்றாதிருக்கிறானோ, அவனே குற்றவாளி" என்று தைரியமாகச் சொல்லி ஏழையெளியவருக்குப் பரிந்து பேசுவார் உத்தமர்.

---

4. தூக்கு மேடையிலும்

உள்ளூரில் ஒரு கொலைக் கேஸ்: ஒரு விகடன் ஜனங்களை உற்சாகப்படுத்தப் பச்சை பச்சையாக விகடம் பேசுவான்; எழுதுவான். விகடன் பாடு சங்கடந்தான். அதிகாரிகள் அவன்மேல் ஒரு கொலைக்குற்றம் சாட்டித் தூக்குத் தண்டனை விதித்தார்கள்; நாளைத் தூக்குமேடை யேறவேண்டும். இன்று பிராயச்சித்தம் நடத்த ஒரு பாதிரி வேண்டும். ஜெயில் பாதிரி நோயில் விழுந்து கிடந்தான். மற்றொரு பாதிரியைக் கேட்டார்கள்: அவர் "அந்தக் கோமாளிக்கு, அந்த இடத்தில், நான் வந்து பிராயச்சித்தம் செய்து வைப்பதாவது" என்று மறுத்தார். கேட்டார் நமது உத்தமர்: "பாதிரி சொல்வது நியாயந்தானே; அது அவர் வேலையல்ல; அது என் வேலை" என்று அப்படியே எழுந்து வந்தார்;

சிறைக்குள் நுழைந்தார். குற்றவாளியின் அருகே
யமர்ந்து, அன்பு, ஆதரவாக நன்மொழி பேசி, அவ
னைத் தேற்றினார்! அவனுக்குத் தந்தை, தமயன்,
நண்பன் போலானார்: ஊனுறக்கமில்லாது அவ
னுக்கு உலகியல்பையும், உண்மையறிவையும் விளக்
கினார். மறுநாள் கைதியைத் தூக்குமேடையில்
ஏற்றினார்கள். உத்தமர், தாமும் மேடை விட்டத்
தில் ஏறினார். சுற்றி நிற்கும் ஜனங்கள் கண்டு வியந்
தனர். கைதி கழுத்தில் சுருக்கிடப் போகிறது.
உத்தமர் அவனைத் தழுவிக்கொண்டார்! "அன்பனே,
மனிதன் உன் கழுத்தை முறுக்கிறான். கடவுள் உன்
னைக் காப்பார்; நம்பு; உன் மனித சகோதரனே
உன்னை வாழ்வினின்று தூக்குகிறான். அன்பனே,
தெய்வத் தந்தை உன்னை ஏற்பார்! செல்! நம்பு,
கடவுளையே நம்பு, நினை, தொழு! நிலையற்ற உலக
வாழ்வினின்று விடை பெற்றுக் கொள்கிறாய். இனி
நித்திய வாழ்வு பெறு! தந்தை அங்குள்ளார்"
என்று ஆறுதல் சொல்லிக் கீழேயிறங்கினார். குற்ற
வாளியும் புன்னகையுடன் உயிர் நீத்தான்!

தூக்குக் காட்சி உத்தமர் மனக்கண்ணை விட்டு
நீங்கவில்லை. 'தூக்கு மேடை தச்சன் செய்த மர
வேலையில்லை; மனித சமூகத்தின் பாவமே அந்த
வடிவாக நிற்கிறது. மனிதரைத் தூக்கு மேடை
உண்கிறது! தூக்குத் தண்டனை ஏன்? குற்றவாளி
யைத் திருத்தக் கூடாதா?'——என்றெல்லாம் நெடு
நாள் சிந்தித்திருப்பார். ஒரு வீட்டில் இழவு விழுந்

தால், தாமே வலிந்து சென்று சாகக் கொடுத்தவர்களுக்கு ஆறுதலளிப்பார். மனைவியிழந்த கணவன், கணவனிழந்த மனைவி, பிள்ளையிழந்த தாய், அனாதைகள் எல்லாரிடமும் மனமிளகப் பேசி, பொறுமையும் ஆறுதலும் அளிப்பார். கடுஞ் சாவினால் வருந்தும் வீட்டிலும் உத்தமர் புகுந்தால் துயரம் தணியும். இக் கிழவர் உள்ளம் உலகளாவிய கருணைக் கடல் என்பர்!

5. உத்தமர் வாழ்க்கை

தமது பெரிய மாளிகையை மருத்துவச் சாலைக்குக் கொடுத்து, உத்தமர் வைத்திய சாலையாயிருந்த சிறிய வீட்டிற் குடிப் புகுந்தார் என்று முன்பே சொன்னோம். இவ்வீட்டைப் புகுந்து பார்ப்போம்: இது ஒரு மாடிவைத்த வீடு; மாடியில் கிழத்தங்கை பாப்திஸ்தையும், வீட்டுவேலை செய்யும் கிழவி மகுளாரியும் இருந்தனர். கீழேதான் உத்தமர் வசித்தார். கீழே மூன்று அறைகள்; பின்னால் ஒரு தோட்டம். முன் அறை ரஸ்தாவை நோக்கியது; இதுதான் சாப்பாட்டறை; இதன் கதவைச் சாத்துவதில்லை; யாரும் தாராளமாக வரப்போக எளிதாகும்படி திறந்து வைத்தார்; "மருத்துவனும், மத போதகனும் வீட்டுக் கதவை எப்போதும் திறந்தே வைத்திருக்க வேண்டும். மருத்துவனுக்கு

ரும், மன நோயாளரும் எந்த வேளையிலும் வருவர்.

உடல் நோயாளர் வருவர்; என்னிடம் பசி நோயாள ரும், மன நோயாளரும் எந்த வேளையிலும் வருவர். வீடுதேடி வந்தவர் பெயரைக் கேட்கக் கூடாது; அவர் துயரைத் தீர்ப்பதே கடமை” என்பார் உத்தமர். முன்னே கதவிலிருந்த இரும்புத் தாழ்ப்பாளைக் கூட நீக்கிவிட்டார். ஒரு கொக்கிமட்டும் அதிலிருந்தது. இரண்டாவது படுக்கையறை: இதன் கதவு தோட்டத்தைப் பார்த்திருந்தது: இதில் ஒரு சாதாரண இரும்புக்கட்டிலும், பிரம்பு நாற்காலியும் இருந்தன. இதன் ஒருபுறம் புத்தக அலமாரி; ஜன்னலுக்கருகே எழுதுவதற்குப் பெரிய மேஜை நாற்காலி; இந்த அறையைத் தாண்டினால் சாமி வீடு; அதில் தான் கடவுள்வணக்கமும், மத போதனையும் நடக்கும். கொல்லைப்புறம் சிறிய சமயலறை; அதற்கடுத்துக் குளிர்காய்வதற்குக் கணப்புள்ள சிற்றறை. பெரிய பெரிய மனிதர்கள் உத்தமரைப் பார்க்கவும், சமயபோதனை பெறவும், வந்து செல்வர். ஏழைகளும் இடைவிடாது வருவர். அவர் எல்லாரையும் முக மலர்ந்து உபசரிப்பார். வீட்டில் இடம்பமான சாமான் எதுவும் கிடையாது. தங்கம் வெள்ளிச் சாமான்களெல்லாம் விற்று ஏழைகளுக்குக் கொடுத்து விட்டார். சாப்பிடுவதற்கு வெள்ளித் தட்டு, கரண்டியுண்டு. “இவை கூட எனக்குச் சம்மதமில்லை” என்பார்; தங்கை வற்புறுத்தியதால் ‘இருக்கட்டும்’ என்று விட்டுவைத்தார். வெள்ளியாற் செய்த இரண்டு அழகிய விளக்குகள் உண்டு; பரம்

பரைப் பொருளானதால் மன்னிப்பு; யாராயினும் விருந்தாளி வந்தால்தான் அவற்றை ஏற்றுவது. வீட்டில் இரண்டு பசுக்கள்; ஒரு பசுவின் பால் தனக்கு; மற்றொரு பசுவின் பாலை நோயாளிகளுக்கு அனுப்புவார்.

சாது உத்தமர் மிக மிக எளிய வாழ்வே பெருமையென வாழ்ந்தார். ஏழை யெளியவர் துயரத்தை நீக்க என்ன செய்யலாம் என்றே எப் போதும் சிந்திப்பார். ஒரு மடாதிகாரியின் பொறுப்பு மிகப் பெரிது: ஓயாது வேலை; அரசாங் கத் தபால்களுக்குப் பதில் எழுத வேண்டும்; ஊர் அதிகாரிகளைத் தினம் வரவேற்றுக் கலந்துகொள்ள வேண்டும்; சமயக் கூட்டங்கள், வழிபாடுகள் நடத்த வேண்டும்; கோயில்களையும், கிளை மடங்களையும் அடிக்கடி சென்று பார்த்துக் குறைதீர்க்க வேண் டும்; மதக் கல்வி சரியாக நடக்கிறதா என்று மேற் பார்க்க வேண்டும். மத சம்பந்தமான கேள்விகள் குவியும்; பதிலளிக்க வேண்டும். சமய வூழியர்களி டையே யுள்ள மனஸ்தாபங்களைத் தீர்க்கவேண்டும்; அன்றன்று அரசாங்கத்தாருக்குத் தனது இலாகா நடப்பு விவரங்களை யறிவிக்கவேண்டும்; அரசாங்கச் சவால்களுக்கு உடனுக்குடன் ஜவாபனுப்ப வேண்டும்—ஆயிரம் வேலைகள்! பாக்கி வைக்காது தமக்குரிய கடமையைச் செய்வார் கிழவர்; மீதி நேரம், ஏழைகளுக்குத் தொண்டு செய்வார். கால் நடையாகச் சென்றே ஜனங்களைக் கண்டு ஒட்டுற

வாகப் பேசுவார். பணமிருந்தால் உடனே ஏழைகளைப் பார்க்கச் செல்வார்; வேண்டியதைத் தருவார். பணமில்லா விட்டால் பணக்காரர்களிடம் செல்வார்; அவர்கள் தரும் காணிக்கைகளை ஏழைகளுக்கே பங்கு வைப்பார். "உத்தமரே, தங்கள் வீட்டைப் பெரிதாகக் கட்டிக்கொண்டு நல்ல சௌரியத்துடன் வாழுங்கள்" என்று பணந்தருவோர் சொல்வர். "ஆகா, தாருங்கள், வந்தனம்!" என்று வாங்கி ஓசைப்படாமல் பாம ஏழைகளுக்கு வீடு கட்டித் தருவார்; சாப்பாட்டுக்கு வழி செய்வார்.

உத்தமர் உறக்கம் சுருக்கம்; எப்போதும் ஏழைகள் வடிவாகவே கடவுளை நினைப்பார். அதிகாலையெழுந்து அனுஷ்டானங்களை முடித்துக் கொஞ்சம் ரொட்டியைப் பாலில் தோய்த்துச் சாப்பிடுவார்; மத்தியானமும் அதேமாதிரி; இரவில் அத்துடன் காய் கறிகளை வேகவைத்துச் சேர்த்துக்கொள்வார்; விருந்தாளி வந்தால் அவர்களுக்குப் பிரியமானதைத் தயாரிப்பார்; யார் வீட்டிலாயினும் தட்டு முட்டாயிருந்தால், தனது உக்கிராணத்திலிருந்து பண்டங்களைத் தருவார்; அதற்காகவே கைவசம் பண்டங்களைச் சேர்த்து வைத்திருப்பார். சாயங்காலம் தோட்டத்தில் வேலை செய்வார். தங்கை பயிர்க் குழி போட்டிருந்தாள். உத்தமர் அழகான பூஞ் செடிகளைப் பிள்ளைபோல வளர்ப்பார்; உணவுப் பொருளைப் போல அழகுப் பொருளும் அவசியமானதுதான் என்பார். இரவு 9 மணிக்கெல்லாம் கிழவிகள்

இருவரும் மாடிக்குச் சென்று படுக்கை போட்டுக் கொள்வர். உத்தமர் தனியாகத் தோட்டத்தில் நெடுநேரம் உலாவித் தியானித்துவந்து படுப்பார்.

---

6. அச்சமற்ற உத்தமர்

திருடர்கூட உத்தமரிடம் அன்பு வைத்தனர். திங்கு மலைகளில் கிரவாட்டன் (Cravatte) என்ற பக்காத் திருடன்: அவன் கீழ் ஒரு பெரிய திருட்டுப் படை; சுற்றுக் கிராமங்களில் அவன் செய்யும் அட்டூழியம் சொல்லி முடியாது. போலீஸார் எவ்வளவு வலைபோட்டுத் தேடியும் அவனைக் கண்டு பிடிக்க முடியவில்லை. கண்ணயர்ந்தால் கிரவாட்டன்! கண்விழித்தால் ஆளைக்காணோம்! பிடிக்கவரும் ஆட்கள் தலைக்குப் பிடித்தது சனியன். கிரவாட்டன் என்றால் ஊரெல்லாம் நடுக்கம்; மாதா கோயில்களிற் கூடப் புகுந்து கொள்ளையடிப்பான். ஒருநாள் உத்தமர், "அவனைப் பார்த்தே தீருவேன்; அவனுக்கும் சன்மார்க்கம் போதிக்கவேண்டியது எனது கடமை" என்று கிளம்பினார். ஊரதிகாரி தடுத்தார்: "ஐயோ உத்தமரே, என்ன அசட்டுத்துணிவு! அந்தத் திருடன் உம்மை வெள்ளறிக்காய் மாதிரி நறுக்கி யெறிவானே; அதுவும் தனியே போகிறீர்; திரும்பிவர முடியாது....போகாதேயும்" என்று குறுக்கே விழுந்தார். "ஐயா, எனது உயிரைப் பத்திரமாகக் காப்

பாற்ற நான் இவ்வுலகில் வாழவில்லை; பிற வுயிர்களுக்கு நல்வழி காட்டுவதே என் கடமை. கிரவாட்டனைப் பார்த்து நல்ல உபதேசங்களைச் சொல்லுகிறேன்; சமீபத்தில் ஒரு பெரிய கோயிலில் உள்ள தங்கச் சாமான்களையெல்லாம் கொள்ளையடித்திருக்கிருன். அதைப்பற்றியும் நேரே கேட்கிறேன்'' என்று கிளம்பி மலையேறினர். கிரவாட்டனைத் தேடினர்; தட்டுப்படவில்லை. மலைமேல் தனக்குரிய ஒரு சிறு கோயில் இருந்தது. அதில் உபதேசமும் தொழுகையும் நடத்திக்கொண்டிருந்தார் சாது. அப்போது, இரண்டு குதிரை வீரர் வந்தனர்; ஆட்கள் மாறு வேடம்; ஒரு பெரிய பெட்டியை அக்கோயில் பாதிரியிடம் கொடுத்து மறைந்து போனர்கள். பெட்டிமேல், "பூஜ்யர் உத்தமருக்குக் கிரவாட்டன் அன்பளிப்பு" என்று எழுதியிருந்தது. திறந்து பார்த்தால் அத்தனையும் பொன்னும் வைரமுமாக மின்னின! முன்சொன்ன கோயிலிற் கொள்ளைபோன சாமான்களே அவை.

நாள் 15 ஆயிற்று. தனியேபோன கிழவர் வரக் காணும். 'சரி கிரவாட்டன் ஆளைச் சரிபண்ணியிருப்பான்' என்று ஊரெல்லாம் துயரப்பட்டது. திடீரென வந்தார் உத்தமர்! "பார்த்தீர்களா, கிரவாட்டன் என்னை எப்படிக் கொள்ளையடித்திருக்கிறனென்று!" என்று நகைப் பெட்டியைக் காட்டினர். எல்லாரும் வியந்தனர்! அப்பெட்டியை உரியவரிடம் சேர்த்தார். உத்தமருக்குப் பயமே

கிடையாது: "மனத்தில் பயமிருந்தால்தான் வெளி யிலும் பயம்; மனப்பகையே வெளிப்பகை" என் பார். அன்பு, உண்மை, நேர்மை, ஈகை—இவையே அவர் மதம். நெப்போலியன் தனது மனைவி ஜோஸ பைனைத் தள்ளிவைத்து, ஆஸ்திரிய இளவரசியை மணம்புரிய விரும்பினான். போப் அதை மறுத் தார். நெப்போலியன் போப்பை மிரட்டினான்; பிரான்ஸிலுள்ள பெரிய மடாதிபதிகளைச் சபை கூட்டி விஷயத்தை முடிவு பண்ணச்சொன்னான்; உத் தமரையும் அச்சபைக்கு அழைத்தான். நெப்போ லியன் பேராசையும் அகந்தையும் உத்தமருக்குப் பிடிக்கவில்லை; அங்கு வந்தவரின் இடம்ப நாடகமும் பிடிக்கவில்லை. 'ஆ, ஏழைகள் உண்ணச் சோறில் லாது சாகின்றனர்; இந்த மனிதர் என்ன இடம்பக் கூத்தாடுகின்றனர்!' என்று மனஞ் சலித்து, ஊருக் குத் திரும்பினார். நெப்போலியன் எல்பா (Elba)வி னின்று தப்பிவந்து, பூர்போன் அரசனை விரட்டி, மீண்டும் பிரான்ஸின் அரசனானான்; கோயில்களிலெல் லாம் நெப்போலியன் வாழ்த்துப் பாடினர். நமது உத்தமர் அவ்வாறு செய்யாது, கடவுள் வாழ்த்தே பாடினார். உத்தமர் பழுத்த சுதந்திர வாதி; குடி யரசைவிரும்பினார்; எனினும், பேராசையும் அகங் காரமும் கொண்டு போர்வெறி பிடித்து, நாட்டின் இளைஞரை யெல்லாம் களபலி வைக்கும் அரசாட்சி அவருக்குப் பிடித்தமில்லை. 'மனிதருக்கு மனிதர் அன்பு வளர வேண்டும்; ஆணவம் ஒழிய வேண்டும்;

போர்வெறி நீங்கவேண்டும்; ஏழைகள் வயிறார உண்ணவேண்டும்; உலகெங்கும் அமைதி நிலவ வேண்டும்' என்பதே அவர் சிந்தனை.

---

7. உத்தமர் தோற்றம்

இப்போது (1815) உத்தமருக்கு 75 வயது; ஆள் குட்டை; கொஞ்சம் பருமன்; அதிகக் கூனில்லை; பெரிய மண்டை; உருண்டை முகம்; விசாலமான நெற்றி; கருணைக் கண் மலர்கள்; புன்னகை தவழும் வாய்; எளிய தோற்றம்; குழந்தை மனம்; கரவற்ற பேச்சு; தடி பிடித்தால் சுறுசுறுப்பான நடை. யாராயினும், 'கஷ்டப்படுகிறார்கள், சாகுந்தருவாயிலிருக்கிறார்கள்' என்று காற்று வாக்கிற் கேட்டாலும் போதும். உடனே கம்பூன்றி விருவிரென்று போய் ஆக வேண்டியதைச் செய்வார். இப்படிப்பட்ட புண்ணியவாளருக்குப் பகைவரும் இல்லாமலில்லை. "போலி, வேஷம், பாசாங்கு" என்று கேலி செய்வார் சிலர். சில நாஸ்திகருக்கு அவரைக் கண்டால் வெறுப்பு. ஒரு நாஸ்திகப் பிரபு இவர்மேல் புகார் எழுதிவிட்டார்: "சாமியாவது பூதமாவது; சுத்தப் பைத்தியக்காரத்தனம்; நன்றாகத் தின்று குடித்துச் சுகிப்பதே இன்பம்! நாட்டிற்கு நாடு படை சேர்த்துப் போர் புரிகிறது; இப்போது அன்பாம் அன்பு! அன்பு,

இரக்கம் எல்லாம் கோழைகள் வேதாந்தம்; சாமி, மதம், நரகமெல்லாம் வெறும் பூச்சாண்டி!" என்று சக்கையாக வெளுத்தார்!

உத்தமர் சரியான பதிற் சொன்னார்:— "நாஸ்திக வாதக்காரரே! கடவுள் நம்பிக்கையுள்ள ழாந்தார்க்கே (Jeanne d' Arc) பிரான்ஸைக் காத்தாள்; அவளும் நாஸ்திகையாயிருந்தால் அவ்வாறு பகைவர் கையிற்பட்டுத் தீயில் விழுந்து சாக வேண்டாம் பாரும்! பண வெறி, பதவிமோகம், பேராசை, மோசம், பொய், பாவம், பகை, கொள்ளை எல்லாம் நாஸ்திக மில்லாவிட்டால் எந்தக் குழியில் விழுந்தொழிவது? 'கடவுள் இருக்கிறார்' என்ற பயமிருந்தால் பொய்ச்சாட்சி, விபசாரம், கொலை, களவுக் கூட்டங்கள் சங்கடப்படுமல்லவா? 'கடவுளாவது, மண்ணாவது' என்றால் தொல்லை இல்லை; மனிதனுடைய அகங்காரம் வைத்ததுதான் சட்டம்; பஞ்சமாபாதகங்களுக்கும் வேட்டைதான். ஆனால் மகாப் பிரபுவாகிய தங்களைச் சொல்லவில்லை; காலத்தின் கோலத்தைச் சொல்லுகிறேன்" என்று அமைதியாகப் பேசவே, எதிராளி பதிற் சொல்ல முடியவில்லை. இப்படிப் பேசிப் பகைவரிடமும் உத்தமர் அன்பாகவே நடந்துகொள்ளுவார்.

இத்தகைய அன்புக் கனி ஒரு திருடனைச் சாதுவாக்கிய அதிசயத்தை அடுத்த பகுதியிற் காண்போம்.

---

8. சீ, சீ, போ!

மாலை 5 மணி; திங்கு நகரத்தில் ஒரு புதுமனிதன் நுழைகிறான்: அவனுக்கு நாற்பத்தாறு வயதிருக்கும்; ஆள் கட்டுக்கோப்பான கடாயன்; தாடியும், தலைமயிரும் பம்பரையா யிருக்கின்றன; பல ஒட்டுக்கள் போட்ட மஞ்சட் சட்டையும், நீலக் கால்சராயும் அணிந்திருக்கிறான். ஒரு கோட் பையில் தனது சாமான்களைச் சுமந்து, பெரிய முண்டுத்தடி பிடித்து, மெல்ல நடந்து வருகிறான்; நீண்ட தொலை நடந்து உடல் வேர்த்துப் புழுதி யேறி யிருக்கிறது. பசிக்கிரகத்தில் ஆள் தளர்ந் திருக்கிறான். எல்லாரும் இவனைக் குறிப்பாகப் பார்க்கிறார்கள். வழியிற் காணும் போலீஸ்கார னுக்குச் சலாம் வைக்கிறான். போலீஸ்காரன் இவனை விறைத்துப் பார்த்து, எங்கே செல்கிறானென்று குறித்துக் கொள்ளுகிறான்.

இனிப் பசி தாங்கமுடியாது, ஏழை ஒரு பெரிய சாப்பாட்டு விடுதியில் நுழைகிறான். அது மிகவும் புகழ்பெற்ற லாபார் (Labarre) உணவுக் கடை. அதன் முதலாளி ஒரு காலம் நெப்போலியனுக்கு விருந்தளித்துப் புகழ்பெற்றவர். உள்ளே, சமயல் ஊரெல்லாம் மணக்கிறது. சில வியாபாரிகள் முன் பணம் கொடுத்து விருந்துண்ணக் காத்திருக் கின்றனர்.

நமது ஏழை சமையலறையிற் புகுந்தான்.

முதலாளி:—என்ன வேண்டும்?

ஏழை:—பசி தலையைச் சுற்றுகிறது; உண்ண வேண்டும்; நடந்து நடந்து தளர்ந்து போனேன்; இளைப்பாற இடம் வேண்டும்.

முதலாளி:—இரண்டும் கிடைக்கும்; பணந்தர வேண்டும்.

ஏழை:—ஆகா; பணம் வைத்திருக்கிறேன்; தருகிறேன்.

முதலாளி:—சரி; அப்படி உட்காரும்.

ஏழை:—பசி, குடலைப் பிடுங்குகிறது; விரைவில் உணவு தயாராகுமா?

முதலாளி:—ஆஹா!...........முதலாளி ஆளைக் குறிப்பாகப் பார்த்தான்; மறைவாக ஒரு சீட்டெழுதி ஒரு பையனிடம் கொடுத்து, "பதில் வாங்கி வா" என்றனுப்பினன். பையன் சிட்டாய்ப் பறந்து பதில் கொணர்ந்தான். அதைப் பார்த்ததும், முதலாளி முகஞ்சுளித்து ஏழையை நோக்கினன்:

முதலாளி:—ஐயா, உமக்கு இங்கே சாப்பாடு கிடையாது.

ஏழை:—ஏன்? பணந்தர மாட்டேனென்று பார்த்தீரோ? இதோ! பணம் வைத்திருக்கிறேன், பாரும்!

முதலாளி:—பணம் கிடக்கட்டும்; இங்கு இடமில்லை.

ஏழை:—ஐயா, எனக்குக் கட்டில் மெத்தை வேண்டாம்; குதிரை லாயத்தில் ஒரு மூலைதாரும், போதும்.

முதலாளி:—முடியாது; அங்கே குதிரைகளுக்கு இடம் சரியாயிருக்கும்.

ஏழை:—அப்படியானால் உமது களஞ்சியத்தில் சற்று ஒண்டியிருக்கிறேன்; மிகவும் களைப்பா யிருக்கிறது.

முதலாளி:—உமக்கு இங்கே சாண் இடங்கூடக் கிடையாது; போம்.

ஏழை:—ஐயா, முதலில் சாப்பாட்டைப் போடும்; பிறகு இடத்தைப்பற்றி நினைப்போம்.

முதலாளி:—இன்று விருந்தாளிகள் அதிகம்; உமக்குச் சாப்பாடிராது.

ஏழை:—என்னய்யா, அண்டா அண்டாவாகச் சமைத்துக் கொட்டியிருக்கிறீரே; இந்த அற்ப ஏழைக்கு ஒரு வாய்ச் சோறுதானா பஞ்சம்?

முதலாளி:—எல்லாம் இந்த வியாபாரிகளுக்குத் தான் காணும்.

ஏழை:—அவர்கள் பன்னிருவர்தானே; இருபது பேருக்குச் சமைத்திருக்கிறீரே; ஐயா, பசி என்னைக் கொல்லுகிறது.

முதலாளி:—நடவாது; போம்.

ஏழை:—இது சாப்பாட்டுக் கடை; பணந்தருகிறவரை, 'பசிக்கு உணவில்லை' யென்று துரத்துவது என்ன நியாயம்?

முதலாளி:—போதும் உமது பேச்சு; உம்மை இன்னாரென்று சொல்லட்டுமா? நீர் ஜாம்வல்ஜான் (Jean-val-jean) அல்லவா? போலீஸ் மூலம் உமது

செய்தி யறிந்தேன். பாரும் போலீசார் எனக் கனுப்பிய இந்தச் சீட்டை.........!

ஏழை திகைத்தான்........!

முதலாளி :—மரியாதையாக வெளியேறும்....

ஏழை தனது தோட்பையைத் தூக்கிக் கொண்டு பேசாமல் வெளி யேறினான்.

தெருவிலுள்ளவர்களெல்லாரும் அவனைக் குறித்துக்காட்டி இழிவாகப் பேசுகின்றனர். முன்னிருட்டில் ஏழை பசிக் கிரக்கத்துடன் தளர்ந்து தள்ளாடிச் செல்லுகிறான்; தெருத் தெருவாயலைந்து ஒரு சிறு சாராயக் கடைக்கு வருகிறான்; மெல்ல உள்ளே செல்லுகிறான்.

கடை முதலாளி :—யார் அங்கே?

ஏழை :—பசிக்கிறது; பணந் தருகிறேன்; உணவும், படுக்க இடமும் வேண்டும்.

முதலாளி :—சரி; இங்கே கணப்புக்காயும்; ஒரு நாழிகைக்குள் சாப்பாடு கிடைக்கும்.

ஏழை மனிதன் இளைப்பாறிக் கொண்டிருக்கும் போது, ஒரு மனிதன் அவனைக் குறிப்பாகப் பார்த்தான்; உடனே கடைமுதலாளியின் காதில் ஏதோ ஓதினான்.

முதலாளி ஆத்திரத்துடன் வந்தான்; ஏழையின் பிடரியைப் பிடித்து, "போ வெளியே, சீ, சீ, போ, உடனே!" என்று தள்ளினான்.

ஏழை :—உனக்கும் தெரிந்து போயிற்று?

முதலாளி :—ஆம், அந்தப் பெரிய உணவுக்

கடையிலிருந்து சீட்டு வந்தது; உன் செய்தி யறிந்தேன். போ உடனே!

ஏழை, பேசாமல் வெளியே சென்றான். தெருவில் சிறார்கள் கல்லெடுத்தடித்தனர்: கூச்சலிட்டேசினர்; தடியைக் காட்டி அவர்களைவிரட்டி மேற் சென்றான்; ஊர்ச் சிறைச்சாலைக் கெதிரே வந்தான். "ஐயா, சோர்ந்து தளர்ந்து நடக்க முடியாமல் தவிக்கிறேன்; இரவில் முடங்கிக் கிடக்கச் சிறிது இடந்தாரும்" என்று காவலாளியைக் கெஞ்சினான்.

"இங்கே கைதிகளுக்குத் தான் இடம்; சிறை சத்திரமல்ல—போம்" என்று கண்டிப்பாகப் பேசிக் கதவை மூடினான் காவலாளி.

இனி நடக்க வியலாது, ஏழை தள்ளாடிக் கொண்டு ஒரு வீட்டுப் பலகணியில் எட்டிப் பார்த்தான். உள்ளே இரண்டு காதலர் சொகுசாக விருந்துண்கின்றனர்; அவர்களது அருமைக் குழந்தைகள் பேசும் மழலையைக் கேட்டு மகிழ்ந்து சிரிக்கின்றனர். 'ஆ! இவர்கள் இப்படி மகிழ்வானேன்! நான் உலகோரால் இகழப்பட்டுச் சாவானேன்? மகிழ்ச்சி பொங்கும் இந்த வீட்டில் ஒரு பிடிசோறு கிடைக்கலாம்!' என்று கதவைத் தட்டினான்.

— "யாரது?"

— "பகலெல்லாம் பசியுடன் நாற்பது மைல் நடந்து வந்திருக்கிறேன். கொஞ்சம் உணவும் இடமும் வேண்டும். பணந் தருகிறேன்."

— "பணந் தந்தால் இரண்டும் கிடைக்கும். ஆனால் நீர் சாப்பாட்டு விடுதிக்குச் செல்லலாமே?"

— "அங்கு இடமில்லை என்று சொல்லி விட்டார்கள்."

— "லாபார் விடுதிக்குச் சென்றீரா?"

— "ஆம்; அவர் என்னை ஏற்றுக் கொள்ளவில்லை."

— "சாராயக் கடையில் இடமில்லையா?"

— "அங்கும் மேற்படியே...."

வீட்டுக்காரன் ஏழையைச் சந்தேகத்துடன் பார்த்தான். "நீ மனிதனா?" என்றான். அவனது மனைவி ஆளைப்பார்த்து நடுங்கினாள். வீட்டுக்காரன் துப்பாக்கியை நீட்டி, "போ, உடனே!" என்று அரற்றினான்.

ஏழை:—ஐயா, நாக்கு வரண்டு போயிற்று; தாகத்திற்காயினும் தாருங்கள்.

வீட்டுக்காரன்:—இதோ, துப்பாக்கியால் ஒரு வேட்டுத் தருகிறேன்! சீ, போ, பேசாமல், உடனே! இல்லையேல் சுடுவேன்!

ஏழை விதியை நொந்து தன்வழிச் சென்றான். அக்டோபர் இரவு; காரிருள்; ஆல்ப்ஸ் மலையின் குளிர்வாடை புலிபோலப் பாய்ந்து கௌவுகிறது! நரி பன்றிகள் கூடப் பொந்துகளில் ஒளிந்தன. ஏழையின் உயிர் துடிக்கிறது. ஒரு சிறு தோட்டம் எதிர்ந்தது; அதில் ஒரு மரக் குச்சில் இருந்தது; சுவரேறிக் குதித்து அக்குச்சிலிற் சற்று ஒண்டியிருந்தான் ஏழை! 'வவ், வௌ, வௌ, வப், ஹுர், புர், வப்!' என்று திடீரென்று சீறி ஏழையின் மேற்

பாய்ந்தார்? யார்? பைரவ ஸ்வாமி தான்! அது பைரவர் பங்களா. தனது வீட்டிற் புகுந்த அன்னியனை விரட்டியடிக்க நாய்கூட விடுதலைக் கிளர்ச்சி செய்கிறதல்லவா? 'இந்த நாய்கூட என்னைத் துரத்துகிறதே, தலைவிதி! நாயினும் கேடானேன்!' என்று நொந்துகொண்டே ஊருக்கு வெளியேயுள்ள மலைப்புறங்களை நோக்கினான் ஏழை. ஊர் வாசல் பூட்டியிருந்தது. நகருக்குள் திரும்பி வருகையில் மாதாகோயில் தென்பட்டது. அதனருகே, ஒரு சிறு அச்சுக்கூடம் இருந்தது. இந்த அச்சுக்கூடத்திலேதான் எல்பாத் தீவிலிருந்து தப்பி வந்த நெப்போலிய மன்னனின் முதல் அறிக்கை வெளியிடப்பெற்றது. அச்சுக்கூடத்தின் வாசலில் ஒரு கல்மேடை யிருந்தது. அதில் நீட்டிப்படுத்தான் ஏழை! வேறு கதியில்லை. ஒரு கிழவி கோயிலுக்குச் சென்று அந்தவழியே வந்தாள்.—"கன்மேல் யார்? என்ன செய்கிறாய்?" என்றாள் கிழவி.

—"அம்மா நான் நெடுவழி நடந்து, களைத்துப் பசியோடு இங்கே படுத்திருக்கிறேன்."

—"கல்லில் ஏன் படுக்கிறாய்?"

—"அம்மா, பத்தொன்பதாண்டுகளாக நான் கட்டையிலே படுத்தேன். இன்று, கல்லிலே படுக்கிறேன்."

—"நீ போர் வீரனா?"

—"ஆம், அம்மா, நான் வீரனே!"

—"நீ உணவுச்சாலையில் இருக்கலாமே."

— "பணமில்லை! ஏழை."

— "என்னிடம் நாலு காசுதான் உள்ளது."

— "தாருங்கள்."

— "ஆனால், இதைக்கொண்டு நீ பசியாற முடியாதே. இரவு, குளிர், வாடை, பட்டினியுடன் ஒரு உயிர் இவ்வாறு வருந்துவது சரியல்ல. யாரும் உனக்கு இரங்கவில்லையா?"

— "எல்லாக் கதவுகளையும் தட்டினேன்; கையலுத்துப் போனேன்."

— "அதோ தெரிகிறதே ஒரு சிறிய மனை; அதன் கதவைத் தட்டினையா?"

— "இல்லை."

— "அந்தக் கதவைத் தட்டு, போ!"

[இப் பெண்மணி நமது சாது மிரியலிடம் மிகவும் அன்புள்ள உத்தமி.]

---

9. சாதுவின் கருணை

சாது மிரியல் கடுமையான எழுத்து வேலைக்குப் பிறகு இப்போதுதான் சாப்பிட உட்கார்ந்திருக்கிறார்; மகுளாரியும் பாப்திஸ்தையும் பரிமாறப் போகின்றனர். அப்போது, "ஊரில் யாரோவொரு திருடன் வந்திருக்கிறானாம்; பொல்லாதவனாம்; எல்லாரும் இரவில் கதவை சாத்திக்கொண்டு, உள்ளே

கவனமாயிருக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். நமது வீட்டிற்குச் சரியான தாழ்ப்பாள்கூட இல்லையே" என்று மகுளாரி சொல்லுகிறாள். சாது கணப்பண்டை யமர்ந்து, பரோபகார சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறார். "அண்ணா, மகுளாரி சொல்வதைக் கேட்டீர்களா?" என்றாள் பாப்திஸ்தை. "என்ன, ஏதாவது அபாயமா?" என்று வினவினார் சாது. மகுளாரி மீண்டும் ஊர்வதந்தியைச் சொல்லித் தீர்த்தாள்.

சாது:—உண்மைதானா?

மகுளாரி:—ஆமாம் என்றாள்; அந்த அபாயமான மனிதன் இந்தப் பக்கந்தான் திரிகிறானாம்; நமது வீடு பத்திரமேயில்லை; கதவுக்கு நல்ல தாழ்ப்பாள் போடவேண்டும்: யாரானாலும் எச்சாமமானாலும் உள்ளே வர இடங்கொடுக்கிறீர்கள்.

இச்சமயம் கதவை யாரோ இடித்தார்கள்.

"வாருங்கள்!" என்று திறந்து வரவேற்றார் சாது.

வந்தது நமது ஏழைதான். மகுளாரி ஆளைக் கண்டு நடுங்கினாள்: தமயனின் அமைதியைக் கண்டு பாப்திஸ்தை அச்சம் விடுத்தாள்.

ஆளைப்பார்த்தார் சாது: கந்தை யுடுத்தி, பசியாலும் குளிராலும் வாடிக்களைத்து விகாரமாயிருந்தான். ஏழை சாதுவைப் பார்த்தான். 'நீயார்' என்று கேட்குமுன், தனது கதையைத் தானே சொல்லத் தொடங்கினான்:—

—"ஐயா, நான் ஜாம்வல்ஜான்; நான் ஒரு கைதி; பத்தொன்பதாண்டுகள் கடுஞ்சிறை காத்தேன். நான்கு நாளைக்கு முன்னேதான் என்னை விடுதலை செய்தனர்; துலோனிலிருந்து (Toulon) கால் நடையாக இன்று இங்கு வந்தேன். பசி துடிக்கிறது; இரண்டு உண்டிச்சாலைகளில் நுழைந்தேன், விரட்டியடித்தார்கள்; நாய்கூட என்னைச் சிந்தவில்லை; திறந்த வயல்களிற் படுக்கச்சென்றேன். நகரக் கதவடைத்திருந்தது. திரும்பிவந்து அங்கொரு கல்லிற் படுத்திருந்தேன். ஒரு உத்தமி தங்கள் கதவைத் தட்டச் சொன்னாள். தட்டினேன், திறந்தீர்கள். இதென்ன உணவுச் சாலையா? பணம் தருகிறேன். நான் 19 ஆண்டுகள் சிறையில் வேலைசெய்து சேர்த்த 104 பிராங்கள் (சுமார் 13 ரூபாய்) உள்ளன. தயவுசெய்து உணவும் இடமும் தாருங்கள். பசி காதையடைக்கிறது!"

—"மகுளாரி, இன்னொரு ஆளுக்குச் சாப்பாடு பரிமாறு, உடனே!"

—"ஐயா உண்மையைச் சொல்லுகிறேன்: நான் கைதி; இதோ என் ஜெயில் பட்டயம்; உங்களுக்குப் படிக்கத் தெரியுமா? எனக்குத் தெரியும்; சிறையில் கற்றுக்கொண்டேன். பாருங்கள் இந்த மஞ்சட் காயிதத்தை........"

"ஜாம்வல்ஜான்....இன்னவூர்....திருட்டிற்காகச் சிறையில் அடைக்கப்பட்டான்; நான்குமுறை தப்பியோட முயன்று கடுமையான தண்டனை யடைந்

தான். பத்தொன்பது ஆண்டுகள் சிறையிலிருந்தான்; அபாயமான மனிதன்: இவனை யாரும் உள்ளே வர விடாதீர்கள்" என்று அந்தக் கைதிப் பட்டயத்தில் எழுதியிருந்தது.

"பார்த்தீர்களா, நான் கைதி, திருடன்; எல்லோரும் என்னை நாய் மாதிரி விரட்டியடித்தார்கள்; தாங்களோ என்னைக் கதவு திறந்து வரவேற்றீர்கள். இது சாப்பாட்டு விடுதியா? உண்ண உணவும் படுக்கவிடமும் தருவீரா?" என்றான் ஏழை.

"மகுளாரி, அந்த அடக்கமான அறையில் ஒரு ஆளுக்குப் படுக்கை விரி" என்றார் சாது; உடனே விருந்தாளியைக் கவனித்தார்.

"ஐயா, இப்படி யுட்காருங்கள்: இந்த நெருப் பண்டை குளிர்காயுங்கள்: இதோ சாப்பாடு தயார்; உடனே தாங்கள் படுத்துறங்கலாம்" என்றார் சாது.

ஏழை:— மெய்தானா? என்னையும் தாங்கள் மனிதனாக மதிக்கிறீர்களா? 'போடா நாயே' என்று விரட்டியடிக்காமல் இந்தக் கைதியை 'ஐயா வாருங்கள்' என்று உபசரிக்கிறீர்களே! ஆ, உணவு! ஆ, படுக்கை! கட்டில் மெத்தையுடன் எனக்கும் படுக்கை! தாங்கள் மிகவும் நல்ல கிளப்புக்காரர்; உங்களுக்குப் பணம் தந்து விடுகிறேன்; தாங்கள் கிளப்புக் காரரல்லவா?

சாது:—நான் மாதா கோயில் பூசாரி.

ஏழை:—ஆ, பூசாரி! தைரியமான பூசாரி! இவ்வூரின் பெரிய கோயில் சாமியாரா தாங்கள்? இப்

போது தெரிந்துகொண்டேன். தங்களிடம் கருணையுள்ளது; மனிதத் தன்மையுள்ளது; வெறுப்புமில்லை. ஆனால், நான் தங்கள் உபசாரத்திற்குப் பணம் தர வேண்டாமா?

சாது:—வேண்டாம்; தங்கள் பணத்தைத் தாங்களே வைத்துக் கொள்ளுங்கள்........தங்களிடம் 104 பணம் உள்ளதல்லவா?

ஏழை:—கூட 15 காசுள்ளது; வழியில் ஒரு வண்டிக்கு உதவி செய்து சம்பாதித்தேன்.

சாது:—ஐய, வைத்துக்கொள்ளுங்கள்.

ஏழை:—தாங்கள் மிகவும் நல்ல சாமியார். சிறையிலும் எங்களுக்குபதேசிக்க ஒரு சாமியார் வந்தார். ஆனால், அவர் சொன்னது எங்களுக்கு விளங்கவில்லை.

இதற்குள் சாப்பாடு பரிமாறினாள் மகுளாரி.

சாது:—ஐய, கணப்பண்டை அமைதியாக உட்கார்ந்து, இருந்து, மெல்ல உண்ணுங்கள். மகுளாரி, இந்த விளக்கு மங்கலாயிருக்கிறதே: மெழுகு திரி விளக்குகள் இரண்டையும் எடுத்து வா; வெள்ளித் தட்டுகளைக் கொண்டு வந்து வை.

மகுளாரி இரண்டு வெள்ளி விளக்குகளை ஏற்றி வைத்தாள்; ஆறு வெள்ளித் தட்டுகளையும் வெள்ளிக் கரண்டிகளையும் கொண்டு வந்து வைத்தாள்.

சாது:—தாங்கள் எவ்வளவோ வருந்தி நொந்து போயிருக்கிறீர்கள்.

ஏழை:—ஆமாம், சாமி! ஆமாம், நாயினும் கேடானேன்! கை கால்களில் கனமான விலங்கு

கள்; படுக்க வெறும் மரப் பலகை; உண்ண வரட்டு ரொட்டி: சூடு குளிர் பாராது கடிய வேலை, சவுக்கடி; மூச்சு விட்டால் போச்சுது! தலைவலி காய்ச்சல் வந்தால் கவனிப்பாரில்லை; நாய்கூடத் தேவலை; 19 ஆண்டுகள் கடுஞ்சிறை வருந்தினேன்; என் வயது 46; ஆயுள் முழுதும் நான் நாயினும் கேடாக வருந்த வேண்டுமென்று மஞ்சட்சீட்டுக் கொடுத்திருக்கிறார்கள், சாமீ!

சாது:—ஆம், தாங்கள் மிகவும் இடர்ப்பட்டிருக்கிறீர்கள். குற்றங்களை வருந்தினால் கடவுள் மன்னிப்பார்! வெறுப்பும் பகையும் விடுத்து, அன்பும் இரக்கமும் கொண்டால் இன்புறலாம்.

சாது கடவுள் வணக்கம் சொல்லி ஏழையின் பக்கத்தில் அமர்ந்து சாப்பிட்டார்.

ஏழை:—தாங்கள் நல்ல சாமியார்: இந்தத் திருட்டுக் கைதியையும் 'ஐயா' என்றழைத்து நன்கு உபசரிக்கிறீர்கள். சுவாமிகளே, நான் திருடன்; என் வாழ்வு மிகப் பரிதாபமானது.

சாது:—பரவாயில்லை. நன்றாகச் சாப்பிடுங்கள்; தங்களைப்பற்றி எதுவும் சொல்லத் தேவையில்லை. இது என் வீடல்ல.

ஏழை:—பின்னே?

சாது:—இது ஏசுநாதர் வீடு! இக் கதவைத் திறந்து வருவோரின் ஊர்பேர் கேட்பதில்லை. அவர்களுக்கு என்ன குறை, என்ன தேவை என்றறிந்துதவுவதே என் கடமையாகும். தங்கள் விருத்தாந்தம்

எனக்கு வேண்டாம். என்னைப் போலத் தாங்கள் ஒரு உயிர்; பசியினால் வருந்துகிறீர்கள்; நன்றாகச் சாப்பிடுங்கள்; இதைத் தங்கள் வீடாகவே கருதுங்கள். இங்கிருக்கும் பொருளெல்லாம் தங்களதே. பெயர் சொல்லுமுன்பே தங்களுக்கு ஒரு பெயர் உள்ளது?

ஏழை :—மெய்தானா? என் பெயர் தங்களுக்குத் தெரியுமா?

சாது:—ஆம், உங்கள் பெயர் 'எனது சகோதரன்.'

ஏழை :—ஆ, என்ன கருணை! தங்களைக் கண்டதும் என் பசியெல்லாம் பறந்து போயிற்று!

பெரிய பிரபுக்களோடு எவ்வளவு பெருமையுடன் விருந்துண்பாரோ, அப்படி இந்த ஏழையுடன் சாது உண்டார்! ஏழை வயிறார நன்றாகச் சாப்பிட்டான். சாப்பிடும்போதே சாது இன்னுரை சொன்னார்: "பிரெஞ்சுப் புரட்சி நாட்களில் என் குடும்பம் நலிந்தது. நீங்கள் இப்போது செல்லும் போந்தார்லே (Puntarley) என்னும் ஊரின் பக்கத்தில்தான், நான் அப்போது குடியேறினேன். அது நல்லவூர்; அங்கே பல தொழில்கள் நடக்கின்றன. நானும் ஒரு தொழில் செய்தே பிழைத்தேன். காயிதம், எழுதுகோல், தோல் பதனிடல், சாராயம் வடித்தல், எண்ணெய் பிழிதல், கடிகாரம் செய்தல், இரும்பு வார்த்தல், செம்புருக்கல், தார்செய்தல் முதலிய எத்தனையோ தொழில்கள் அங்கு நடக்கின்றன. ஏதாவது ஒரு தொழில் கற்றால் யாரும் வறுமையில்லா

மல் ஒழுங்காக வாழ முடியும். மனிதன் பசிக்கொரு தொழிலும், கடவுளிடம் மனமும் கொண்டு, பிறர்க்குதவி செய்து வாழவேண்டும்" என்றெல்லாம் பல பயனுள்ள மொழிகள் பேசினர். எல்லாம் ஏழை மனத்திற் பதிந்தன.

சாப்பாடு முடிந்ததும், சாது ஏழையைப் படுக்கையறைக்கு இட்டுச்சென்றார். "ஐயா, இரவு இங்கே அமைதியாக இளைப்பாறுங்கள். காலை நீங்கள் புறப்படுமுன் எங்கள் பசுவின் பாலைச் சாப்பிட்டுச் செல்லலாம். ஐய, கடவுள் உம்மைக் காப்பாராக! நிம்மதியாக உறங்குங்கள்; நான் இதோ பக்கத்தில் கூடத்தில் உறங்குகிறேன்" என்றார் சாது.

ஏழை:—வந்தனம், சாமி! ஆனால், ஆராய்ந்தீரா சாமி! நானே திருடன். என்னைத் தங்கள் பக்கத்தில் பஞ்சுமெத்தை போட்டுப் படுக்கச் சொல்லுகிறீர்களே! ஒருக்கால், இத்திருடன் தங்களைக் கொலை செய்தால் என்ன செய்வீர்கள்?

சாது:—அது கடவுளிச்சை. அவனன்றி எதுவும் நிகழாது. கடவுள் உன்னைக் காப்பாராக!

இவ்வாறு கள்ளனை ஆசிர்வதித்துச் சாது தோட்டத்திற்குச் சென்றார். அங்கு, நள்ளிரவு மட்டும் வானின் அற்புதங்களையும் கடவுட் பெருமையையும் தியானித்தார். ஏழைகளுக்கு இரங்கும்படி கடவுளை வேண்டிக்கொண்டு பிறகு வந்து உறங்கினர்.

திருட்டு ஜானும் நன்றாக உறங்கினன்.

10. ஜாம் வல்ஜான்*

இந்த ஏழை யார்? கேளுங்கள் அவன்கதையை:

ஜாம்வல்ஜான் பரம ஏழை; எழுத்தறியாதவன்; இளமையிலேயே பெற்றோரை யிழந்தான்; தாய் காய்ச்சலால் இறந்தாள். தந்தைக்கு மரம் வெட்டுந் தொழில்; ஒரு நாள் ஒரு பெரிய மரத்தின் கிளைகளை வெட்டும்போது தவறி விழுந்து இறந்தான். அனாதையான ஜாம்வல்ஜானை அவனது தமக்கை வளர்த்து வந்தாள். தமக்கைக்கு எட்டுச் சிறு குழந்தைகளுண்டு. மூத்த குழந்தைக்கு எட்டு வயது; கடைசிக் குழந்தை பிறந்தபோது கணவனை யிழந்தாள். அந்தோ! இத்தனை குழந்தைகளையும் தம்பியையும் காப்பாற்ற ஏழைக் கைம்பெண் என்ன பாடு பட்டிருப்பாள்! நாளெல்லாம் கூலி வேலை செய்து எப்படியோ குடும்பத்தைக் காப்பாற்றினாள். ஜாம்வல்ஜானுக்கு வயது வந்ததும் தந்தையைப் போலவே அவன் மரம் வெட்டிச் சம்பாதிக்கத் தொடங்கினான்; தன்னை அன்புடன் வளர்த்த தமக்கையை ஆதரிப்பதே தனது கடமையெனக் கருதினான்.

---

*Jean val Jean: இம்மொழியை பிரெஞ்சில் "ழாம் வல் ழான்" என்றே உச்சரிக்க வேண்டும். ஆங்கிலத்தில் இதை John val John (ஜான் வல் ஜான்) என்று எழுதுவர். இங்கு ஆங்கிலத்தின் உச்சரிப்பையே தருகிறோம்.

தனது சுகத்தை மறந்தான்; வந்த கூலியை அப்படியே அக்காளிடம் கொண்டுவந்து தந்தான்; அவள் குழந்தைகளைத் தனது குழந்தைகளைப் போலவே பரிவுடன் பேணி வந்தான்: பகலெல்லாம் உழைத்து மாலை ஏழுமணிக்கு வருவான்: கலத்தில் இட்ட சோறைப் பேசாமல் குனிந்துண்பான்; நல்ல சுவையான பண்டங்களைக் குழந்தைகளுக்குத் தருவான். வெய்யிற்காலத்தில் நல்ல கூலி கிடைக்கும். மழைக்காலம் கஷ்டந்தான். ஒரு சமயம் அடை மழை பிடித்துக்கொண்டது: கையில் காசில்லை; வேலையுமில்லை. குழந்தைகள் பசியால் அலறித் துடிக்கின்றன. என் செய்வான் ஏழை?

தனது குடிலுக்கருகே மாரி இளாதன் (Marie Elande) என்னும் ஒரு ரொட்டிக்காரன் இருந்தான். அவனிடமே ஜாம்வல்ஜான் வழக்கமாக உணவுப் பொருள்கள் வாங்குவது. சிறுவர் அவன் பெயர் சொல்லி ஏதாவது பணிகாரம் வாங்கித் தின்பர். அதற்கான பணத்தைத் தந்து விடுவான் ஜான்; கடன் வைத்துக் கொள்ள மாட்டான். ரொட்டிக்காரன் கல் நெஞ்சன்.

மழை யிருட்டு; ரொட்டிக்காரன் உஷாராகக் கதவைச் சாத்திப் படுத்துக் கொண்டான். ஓசைக் கேட்டது. பட படார்! கண்ணாடி உடையும் சத்தம்! திடுக்கிட்டெழுந்து விளக்கேற்றிப் பார்த்தான், கண்ணாடி ஜன்னலை உடைத்துக் கையை உள்ளே விட்டு ஒருவன் தனது ரொட்டியைத் திருடிக்

கொண்டு ஓடக் கண்டான். ஆளைத் துரத்தினன் ரொட்டிக்காரன். ரொட்டியை வீசி யெறிந்து ஓடினன் ஆள். ரொட்டிக்காரன் ஆளைப் பிடித்தான்; ஆள் ஜாம்வல்ஜானே! கண்ணாடி குத்தி, ஜான் கை இரத்தம் ஒழுகியது. இரக்கமற்ற ரொட்டிக்காரன் ஏழை ஜானைப் போலீசுக்கு இழுத்துச் சென்றான். இந்த ஏழையைப் "பக்காத்திருடன், கொள்ளைக் காரன்" என்று குற்றஞ் சாட்டினர் அதிகாரிகள். "ஐயா, நான் ஏழை; மரம்வெட்டிப் பிழைப்பவன். மழைக் காலம்; வேலையில்லை; வீட்டில் எட்டுச் சிறு குழந்தைகள் கடும் பட்டினி கிடந்தழுகின்றன. அந்தப் பரிதாபம் தாங்க மாட்டாது, ரொட்டிக்கிடங்கில் ஒரே ஒரு ரொட்டி யெடுத்தேன்; அதையும் போட்டு விட்டேன்; ரொட்டி யெடுக்கையில் கண்ணாடி குத்திக் கையில் புண்ணானதுதான் மிச்சம். வேறொரு பிழையுமறியேன்" என்றெல்லாம் அழுது முறையிட்டான். திருடன், பொய்யன், அபாயமான மனிதன் என்று நெடுங்குற்றஞ்சாட்டி 5 ஆண்டுகள் கடுங்காவல் விதித்தனர் சட்டப்புலிகள்!

22-4-1796-ல் ஜாம்வல்ஜானை வலிய விலங்குகள் மாட்டித் துலோன் (Toulon) சிறையிலடைத்தனர். அக்காலம் கழுத்திலும் விலங்கு பூட்டுவர். பெவரோல் கிராமத்தில் மரம்வெட்டிப் பெரிய குடும்பத்தைத் தாங்கி வந்த பரம ஏழை பசிக்கொடுமையால் ஒரு ரொட்டித்துண்டைக் களவாடிக் கடுஞ்சிறையில் 24,601-வது எண் கைதியானன்! ஆ! தமக்கை

குழந்தைகள் என்ன வாயின! ஏழுவயதுக் குழைந்தையுடன் பாரிஸில் ஒரு அச்சுக்கூடத்தில், தமக்கைகாயிதம் மடித்து, அச்சுக் கூலிப் பிழைப்பதாக யாரோ சொல்லக் கேள்விப்பட்டான். மற்றக் குழந்தைகள் என்னவாயினவோ தெரியாது. சிறையில் கடுமையான வேலை. ஜாம்வல்ஜானுக்கு எந்த வேலையும் கடினமில்லை; ஆள் பிமசேனன். படிப்பில்லாவிட்டாலும் அவனுக்கு இயலறிவு மிகுதி. சமூகச் சட்டங்களாலும் அரசியற் சட்டங்களாலும் தன்னைப்போன்ற ஏழைகள் படும் பாட்டை அடிக்கடி சிந்திப்பான்; வேலையெல்லாம் முடித்து இரவில் தனியாக நெடுநேரம் சிந்தனை செய்வான். 'என்ன உலகம், என்ன மனிதர், என்ன சட்டம்! இரக்கமில்லாமல் ஏழைகளை நசுக்குகின்றனர். சிறு குழந்தைகள் பசி பசியென்று அழுவது கண்டு பொறுக்காமல் ஒரு ரொட்டி திருடினேன். திருடினது குற்றந்தான்; அதற்கு, இப்படியா கடுஞ்சிறையும் கொடிய வேலையும் தருவது? எதற்காக ரொட்டியைத் திருடினேன்? பசிக்கொடுமையால் அல்லவா? அந்தப் பசிக்கொடுமையைத் தீர்ப்பாரில்லையே! ஏழைக்கு இரங்குவாரில்லையே! நாளெல்லாம் வேலைசெய்தும் என்னைப் போன்றோர் பெண்டு பிள்ளைகளுடன் பட்டினி கிடப்பானேன்? காலாடாது வேலையேவும் மாந்தர் செல்வச் சிறப்புடன் கொழுப்பானேன்? பசி தவிக்கும் ஏழைக்கு உழைப்பும் பிழைப்பும் உண்டு

பண்ண வேண்டுமெல்லவா ? அதற்கு மாறாக அரசியற் சட்டம் ஏழைகளை நசுக்குகிறது. உழைத்தாற் கூடச் சரியான கூலி தருவதில்லை. ஏழைக்கு இனி துரைப்பாரில்லை. வாழ்வு வறுமைப்போர் ; அத்துடன் அதிகாரிகள் கொடுமை. என்னை எல்லாரும் வெறுக்கின்றனர். எல்லாரையும் நான் வெறுக்கிறேன். எனக்கு நியாயம் செய்வாரில்லை. மனிதரை வெறுக்கிறேன் ; உலகை வெறுக்கிறேன். சமூகம் ஏழை எளியவரை நசுக்கும் கொடுமையை வெறுக்கிறேன்' என்பான். சமூகக் கொடுமை என்னும் புயற்கடலில் தத்தளிக்கும் தனது வாழ்வை நினைப்பான். 'இவ்வளவு கொடுமை செய்யும் சட்டத்தை ஒழிக்கவேண்டு'மெனப் பல்லைக் கடிப்பான். 'இக் காவலரை ஏமாற்றி இச் சிறையைவிட்டு ஓடிப் போகிறேன், பார்' என்று சபதங்கூறுவான். அவ்வாறே நான்கு ஆண்டுகளுக்குப் பின் ஒருநாள் விலங்குகளை உதறியெறிந்து சுவரேறிக் குதித்துச் சிறையினின்று தப்பி ஓடிப்போனான் ஜாம்வல்ஜான். இரண்டு நாள் சுதந்திரமாகத் திரிந்தான்; மூன்றாம் நாள் அகப்பட்டான். இந்தக் குற்றத்திற்காக இன்னும் மூன்றாண்டுகள் (அதாவது எட்டாண்டுகள்) தண்டனை விதித்தனர். ஆறாவது ஆண்டில் மறுபடியும் தப்பியோடி ஒரு கப்பலில் ஒளிந்திருந்தான்; அவனைக் கண்டுபிடித்த சிப்பாயுடன் மல்லுக் கட்டினான். தப்பியோடிய குற்றத்துடன் சண்டைபோட்ட

குற்றமும் சேர்ந்து இரட்டை விலங்கு மாட்டி 13 ஆண்டுகள் கடுஞ்சிறை காக்கச் செய்தனர். இரண்டாண்டுகள் சென்று மறுமுறை தப்பியோட முயன்று சிறைவாசம் 16 ஆண்டுகளுக்கு நீடிக்கப் பெற்றான். 16-வது ஆண்டு தப்பியோடப் பெருமுயற்சி செய்து 19 ஆண்டுகள் சிறைவாசம் பெற்றான். முடிவில் 1815, அக்டோபர் மாதம் விடுதலை பெற்றான். விடுதலை பெற்றுமென்ன? கைதிப் பட்டயம் தந்தனர். அதனால், மனித சமூகாயம் இவனை நாயினும் கேடாக நடத்தியது. சிறையில் கடிய வேலை செய்து 171 பிரான் சம்பாதித்தான். பாவம்! இந்த ஏழையின் பணத்தில் 67 பிரான்கள் பிடித்துக்கொண்டு மீதியை யீந்தனர்! சிறையை விட்டு வெளிவந்ததும் ஒரு கடையில் சரக்குச் சுமந்து, கடுமையாக வேலை செய்தான். முதலாளி இவன் வேலையை மெச்சினான். ஒரு டாணாச் சேவகன் முதலாளியின் காதில் ஏதோ ஓதினான். மற்றக் கூலிகளுக்குத் தருவதைவிட எட்டுக் காசு குறைவாகத் தந்தான் முதலாளி. “ஏன், நான் அதிக வேலை செய்தேனே?” என்று கேட்டான் ஏழை. “போடா நாயே, உனக்கிது போதும்!” என்றான் முதலாளி. அந்தோ! இந்த ஏழையின் காசைத்தானா இந்த முதலாளி திருடிக் கொள்ளவேண்டும்? இவ்வாறு சிரமப்பட்டு, முடிவில் சாது மிரியலின் வீட்டில்தான் ‘அன்பு’ என்பது இன்னதென் றறிந்தான்!

11. அன்னமிட்ட வீட்டிற் கன்னமிடல்

ஜாம்வல்ஜான் நான்கு மணிநேரம் அயர்ந்து தூங்கி, இரவு இரண்டு மணிக்கெல்லாம் விழித்தெழுந்தான். அது அவன் வழக்கம். வீட்டில் எல்லாரும் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தார்கள். எங்கும் இருட்டு; ஜாம்வல்ஜான் தான் சிறையிலும், மாந்தரிடையும் பட்ட கொடுமைகளையும் இழிவையும் சிந்தித்தான்; சாது மிரியலின் அற்புதமான கருணையையும் வியந்தான்; 19 ஆண்டுகளில் 13 ரூ. சம்பாதிக்கத் தான் பட்டபாட்டை எண்ணினன். உடனே தான் சாதுவுடன் சாப்பிட்டபோது கண்ட ஆறு வெள்ளித் தட்டுகளும், வெள்ளிக் கரண்டிகளும், வெள்ளி விளக்குகள் இரண்டும் அவன் ஆசையைக் கவர்ந்தன. 'ஆ! இவற்றை விற்றால் சிரமப்படாமல் கொள்ளைப் பணம் கிடைக்குமே!' என்று நினைத்தான். தனது நினைப்புக் குற்றமென்று அவனுக்குத் தோன்றவில்லை. 'இவ்வளவு கருணையாளன் வீட்டிலா திருடுகிறாய்?' என்று மனச்சாட்சி பளிச்சென்று ஒரு சாட்டை கொடுத்தது. அது அவனது கல் நெஞ்சில் உறுத்தவில்லை. இரவில் மகுளாரி வெள்ளிச் சாமான்களை ஒரு கூடையில் வைத்துப் பூட்டிய இடம் அவனுக்கு நன்கு தெரியும். இருட்டில் தடவித் தடவிச் சென்றான்; அலமாரியைத் திறந்தான்; கூடையுடன் வெள்ளிச் சாமான்கள் அத்தனையும் எடுத்துக் கொண்டான்; அருகிலிருந்த ஒரு மெழுகுதிரி விளக்கையும் எடுத்துக் கொண்

டான். ஆனால், அது இரும்பு விளக்கு. பூனை போலக் கூடத்திற்கு வந்தான். அங்கே கருணைக் கடலான சாது மிரியல் கண்ணயர்ந் திருந்தார். பார்த்தான் கள்வன்; மனம் 'படக் படக்' என்று அடித்துக் கொண்டது. முன்னே தான் கண்ட மாந்தரைப் போலிருந்தால் இவர் மண்டையை உடைத்திருப்பான். தனக்கும் பரிவுகாட்டி உபசரித்த இந்த வள்ளலின் முன்னே கள்வனின் கல் நெஞ்சமும் உருகிப்போயிற்று. ஒரு திருடன் பக்கத்தில் எவ்வளவு நிம்மதியாக உறங்குகிறார்! வாசற்கதவு திறந்தே யிருக்கிறது. நிலா வெளிச்சம் அவர் முகத்தில் வீசுகிறது. என்ன சாந்தம்! என்ன தயாளம்! இக் கருணை வடிவைக் கண் கொட்டாது பார்த்து நின்றான் கள்வன்: 'ஐ, இவ்வளவு அன்பு நிறைந்த மண்டையையா என் தடிக் கம்பால் உடைப்பது? ஆ, இந்த நாய்க்கும் கருணை காட்டி, அன்னமளித்த இந்த அன்புக்கரங்களை முத்தமிட வேண்டும்!' என்று நினைத்தான். 'டாண்! டாண்!!' என்று மணி நான்கடித்தது. இனி, இவர் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தால் நமக்கு இந்த வெள்ளிச் சாமான் தக்காது என்று நினைத்தான்; ஜன்னலேறி வீட்டுக் கொல்லையில் குதித்தான்; தோட்டத்தில் கூடையை வீசியெறிந்தான்; வெள்ளித் தட்டுகளைத் தன் பைக்குள் போட்டுக்கொண்டான்; ஒரே தாவில் தோட்டச் சுவற்றைக் கடந்தான்; ஆள் மாயமாய்ப் போனான்.

12. உபதேசம்

அதிகாலையில் எழுந்து அனுட்டானங்களை முடித்துக்கொண்டு சாது மிரியல், 'மனித சமுதாயத்திற்கு நன்மை யருளுக' என்று கடவுளை நினைத்துத் தோட்டத்தில் உலாவினர். அப்போது, மகுளாரி விரைந்தோடிவந்து, "ஐயா, வெள்ளிச் சாமான் வைத்திருந்த கூடையைப் பார்த்தீர்களோ?" என்றாள்.

சாது:—ஆம், இதோ கூடை! இங்கே கிடந்தது!

மகுளாரி:—ஐயோ, தெய்வமே! அதிலிருந்த வெள்ளிச் சாமான்கள் களவு போயினவே! எனக்கு அப்போதே தெரியும். இப்படித் திருடனை வீட்டிற்குள் அழைத்து, விருந்து வைத்து, பக்கத்தில் மெத்தை போட்டுப் படுக்க வைத்து உபசாரம் செய்வார்களா? வெள்ளிச் சாமான்களெல்லாம் களவு போயின! இதோ, இந்தச் சுவரேறிக் குதித்து ஆள் ஓடியிருக்கிறான்.

திருடன் கூடை யெறிந்து ஒடிந்துபோன ஒரு செடியைச் சரிப்படுத்தி நிமிர்த்தார் சாது; சற்று மௌனமா யிருந்தார். பிறகு மகுளாரியை நோக்கினர்:

சாது:—இந்த வெள்ளிச் சாமான்கள் நம்மதா?

மகுளாரி:—பின்னே யாருது?

சாது:—நெடுநாளாக இந்த இடம்பச் சாமான்

கள் நமக்கு வேண்டாமென்றே நினைத்திருந்தேன்; ஏழைகளுக்கே இவற்றைத் தர வேண்டுமென்றிருந்தேன். நேற்று வந்தவர் யார்? ஒரு ஏழை தானே!

மகுளாரி:—இனி, எதில் சாப்பிடுவீர்கள்?

சாது:—தகரத் தட்டில்லையா?

மகுளாரி:—தகரம் வேகமடிக்குமே.

சாது:—இரும்புத் தட்டு?

மகுளாரி:—அதுவும் வேகமடிக்கும்.

சாது:—மரத்தட்டு, மண் தட்டு........எதிலாயினும் சாப்பிடுவோம். அதற்கென்ன கவலை............?

அன்று காலை ஜாம்வல்ஜான் உட்கார்ந்த இடத்திலே யமர்ந்து, சாது ஒரு கிண்ணப் பாலில் ரொட்டியை ஊறப் போட்டுக் கையினால் எடுத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

அப்போது சிலர் கதவைத் தட்டினர்.

"வாருங்கள்" என்றார் சாது.

நான்கு பேர்கள் வந்தனர். அவர்களில் மூவர் போலீஸ்காரர்: நான்காவது நமது ஜாம்வல்ஜான். திருடன் பேந்தப் பேந்த விழித்தான்.

போலீஸ்காரர் வணக்கம் செய்து செய்தி சொல்லு முன்னே சாது அறிந்துகொண்டார்.

சாது:—(ஜாம்வல்ஜானைப் பார்த்து) ஆ, வந்தீரா நண்பரே! தங்களை மீண்டும் காண மகிழ்ச்சியடைகிறேன்! நண்பரே, வெள்ளித் தட்டுக்களை மட்டும் எடுத்துக்கொண்டீரே; இந்த வெள்ளி விளக்குகளை ஏன் மறந்தீர்? இவை 200 பிரான் பொறுமே.

இருட்டில் தெரியாது இரும்பு விளக்கை எடுத்துச் சென்றீர். இந்தாரும் இந்த வெள்ளி விளக்கையும் வைத்துக் கொள்ளும்! ஏழை, பிழையும்!

போலீஸ்:—எஜமான், பிறகு இவன் சொன்னது மெய்தானா? நாங்கள் 4 மணிக்கு இவனைக் கண்டோம்; சந்தேகப்பட்டுச் சோதித்தோம். வெள்ளிச் சாமான்களைக் கண்டோம்—இவன்....

சாது:—(புன்னகை பூத்து) 'ஒரு நல்ல கிழவர் எனக்கு இவற்றைக் கொடுத்தார். நேற்றிரவு அவர் வீட்டில் விருந்தாளியாகத் தங்கினேன்' என்று தானே சொன்னான். அது உண்மை.

போலீஸ்:—பிறகு, நாங்கள் அவனை விட்டுவிடுகிறோம். வணக்கம்....

சாது:—வந்தனம்.

ஜாம்வல்:—என்னை விட்டு விட்டா போகிறார்கள்?

போலீஸ்:—ஆம்....

சாது:—நண்பரே, இந்த வெள்ளி விளக்குகளையும் வைத்துக்கொள்ளும்.

ஜாம்வல்ஜான் உடல் நடுங்க அவற்றை வாங்கிக்கொண்டான். இந்தத் தரும மூர்த்தியின் அன்பு அவனை அன்றே புதிய மனிதனாக்கியது.

சாது:—நண்பரே, இன்னொன்று சொல்லுகிறேன். இனி, நீர் வரும்போது கொல்லை வழியாகப் போகவேண்டாம். வாசற்கதவு எப்போதும் திறந்தேயிருக்கும். தாராளமாக வந்து வேண்டியதை யெடுத்

துச் செல்லலாம். போலீஸ் நண்பர்களே, இனிச் செல்லலாம்.

போலீசார் சென்றதும் சாது ஜாம்வல்ஜான் காதில் இரகசியமாகச் சொன்னார்:—

"நண்பா, மறக்காதே; இந்த வெள்ளிச் சாமான்களை விற்று ஒரு தொழில் செய்து போக்கிய மாகப்பிழைக்க மறக்காதே."

ஜாம்வல்ஜான் மனத்தில் அப்போது எழுந்த எண்ணங்கள் வார்த்தை காணாது திகைத்தன. மீண்டும் சாது அழுந்தச் சொன்னதாவது :—

"ஜாம்வல்ஜான், என் சகோதரா, இனி நீ கெட்டவனல்ல; நீ நல்லவனாவாய்; என் வெள்ளியைக் கொடுத்து, உனது ஆன்மாவைச் சாத்தானிடமிருந்து திருப்பி வாங்கிக் கடவுள் கையிற் கொடுக்கிறேன்! இனி உத்தமனாக வாழ்வாயாக!"

---

13. இரக்கக் கண்ணீர்

ஜாம்வல்ஜான் ஒரு இடமகன்ற பொட்டலிற் செல்லுகிறான். அங்குமிங்கும் சிறு புதர்களே யுள்ளன; ஆளரவ மில்லை. மனத்தில் ஒரு பெரிய போர் நடக்கிறது. அவனால் மேற்செல்ல முடியவில்லை. பொழுதும் பட்டது; மாலை 6 மணி; ஒரு புதரின் பக்கத்தில் அமர்ந்து சிந்தனையில் ஆழ்ந்

தான்; நெடுநாள் நரக இருளில் வருந்தி ஒரு புதிய கதிரைக் கண்டது போலுணர்ந்தான். அப்புதிய கதிர் சாது மிரியல் வடிவாகவே யிருந்தது. சாதுவின் அன்பும், கருணையும் அவனுள்ளத்திற் பதிந்து போயின. மனித சமுதாயத்திடம் அவன் கொண்டிருந்த வெறுப்பு மெல்ல விலகியது! இருப்பினும், இன்னும் சாத்தானுடன் மனம் போர் புரிந்து கொண்டுதானிருந்தது; வெற்றி பெறவில்லை.

அப்போது, அங்கு பன்னிரண்டு வயதுள்ள ஒரு பிச்சைக்காரப் பையன் வந்தான். அவன் ஒரு பொம்மையாட்டி; ஆடிப்பாடிக் காசுவாங்கிப் பிழைப்பவன். அன்று அவனுக்கொரு வெள்ளிப் பணம் கிடைத்தது. அதைச் சுண்டிச் சுண்டிப் பிடித்து விளையாடிக் கொண்டே வந்தான். ஒரு தரம் சுண்டும்போது பணந்தவறி ஒரு புதரண்டை விழுந்து மறைந்தது. பணத்தைத் தேடும்போது அங்கு ஜாம்வல்ஜான் இருப்பதைக் கண்டான். ஜாம்வல்ஜான் அந்த வெள்ளி நாணயத்தைக் காலின் கீழ் அழுத்திக்கொண்டு சும்மா இருந்தான்.

பையன் :—ஐயா, என் பணத்தைத் தாரும்.

ஜாம்வல் :—உன் பெயரென்ன?

பையன் :—என் பெயர் சின்னச் சேர்வை (Petit Gervai). என் பணத்தைத் தாரும்.

ஜாம்வல்ஜான் பையனைப் புலி மாதிரி பார்த்தான்.

பையன் :—உம், உம், என்பணம்....அதைக்

கொண்டுதான் என் வீட்டில் கஞ்சி காய்ச்சவேண்டும் ....கொடுங்கள் ஐயா, உம்-உம்.

ஜாம்வல்:—போகிறாயா என்ன?

பையன்:—காலை எடுங்கள். பணம் அங்கிருக்கிறதே, உம்-உம்.

ஜாம்வல்:—இன்னும் நிற்பாயா? போகிறாயா, மண்டையை உடைக்கட்டுமா?

இவ்வாறு சொல்லித் தடிக்கம்பை உயர்த்தவே, பையன் புலிமுன் மான் போல நடுங்கி, "என்பணம்! என் வெள்ளிப்பணம்!" என்று அழுதுகொண்டே ஓடி மறைந்தான்.

ஜாம்வல்ஜான் அந்தப் பக்கமே பார்த்து மரம் போல நின்றான். மனச்சாட்சி அவனுக்குச் சவுக்கடி கொடுத்தது. 'இன்னுமா இந்தத் திருட்டுத்தனம்' என்று யாரோ தன்னைக் கண்டிப்பது போலுணர்ந்தான். 'ஐயோ, ஏழைப் பையனிடமா இந்தக் காசைத் திருடினேம்! என்ன கொடுமை! என்ன பாவம் செய்தோம்!' என்று இரங்கினான் ஜாம்வல். உடனே அவனது கல்மனம் கரைந்தது. இரக்கம் அவனைப் பற்றிக்கொண்டது. பையன் மறைந்த திசையை நோக்கி ஓடினான். "சின்னச் சேர்வை—, அப்பா சின்னச் சேர்வை! இந்தா உன் பணம்!" என்று உரக்கக் கூவினான் ஜாம்வல். பதிலில்லை, ஆளில்லை! அப்போது ஒரு குருக்கள் எதிர்ந்தார்.

ஜாம்:—ஐயா, ஒரு சிறு பையன், 12 வயதுப் பையன், இந்த வழியே செல்லப் பார்த்தீர்களோ?

குரு :—இல்லையே.

ஜாம் :—அவன் பெயர் சின்னச் சேர்வை; ஏழைப் பையன். அவனிடம் இந்தப் பணத்தைத் தரவேண்டும்.

குரு :—நான் காணவில்லையே....!

ஜாம் :—இந்தாரும் இந்த இருபது காசுகள். ஏழைகளுக்குத் தாரும்.

குரு :—சரி.

ஜாம் :—ஐயா, நான் திருடன்; என்னைக் கைது செய்யுங்கள்.

குருக்கள் பணத்தை வாங்கிக்கொண்டு விரைந்தோடினார்.

ஜாம்வல்ஜான் அந்த இடத்திலேயே உட்கார்ந்து தேம்பித் தேம்பி யழுதான். இருபது ஆண்டுகளுக்குப் பின், அவன் அழுவது இதுதான் முதல் தடவை! அவனது பாபச் சுமையெல்லாம் கரைந்து கண்ணீராக வெளியேறியது! 'சகோதர, உன்னைச் சாத்தானிடமிருந்து மீட்டுக் கடவுளிடம் கொடுத்தேன்; இனி உத்தமனாயிரு!' என்று சாது மிரியல் அவனுள் பேசினார். இதயந் துடிக்குமளவும் அந்த இன்சொல்லை அவன் மறவான். 'கைதி ஜாம்வல்ஜான், திருட்டு ஜாம்வல்ஜான், கல்நெஞ்சு ஜாம்வல்ஜான், இறந்துபோனான். இப்போது அவனுள் உயிரோடிருப்பது சாது மிரியலே!

'ஆ, நான் துச்சன்! என்ன பிழைசெய்தேன்! அந்த மஹானைப்பார்த்து, அவருடைய உபதேசம்

பெற்ற பிறகும் எனது திருட்டுப் புத்தி போக வில்லையே! சீ, ஏன் பிறந்தேன்? ஆ கடவுளே, என்னை மன்னித்தருள், இப்பாவியை மன்னித்தருள்' என்று நெடுநேரம் அழுதான்; திடீரென்றெழுந்து திங்கு நகரை நோக்கினான்: சாதுமிரியல் வாசல் முன் வந்தான்; முழந்தாளிட்டுப் பணிந்தான். "எனது பாவத்தை மன்னிக்கவேண்டும். இன்று முதல் நான் தங்கள் உபதேசப்படி உத்தமனாக வாழ அருள் புரியவேண்டும்! என் கண்கண்ட கருணைத் தெய்வமே!" என்று கண்ணீர் வடித்து நின்றான். அன்பு, கள்வனையும் நல்லவனாக்கியது.

---

14. காமப் பித்தர்

பாரிஸ் அரண்மனைச் சோலையின் அழகைச் சொல்ல வேண்டியதில்லை! இந்த இளவேனிற் காலத்தில் அது கந்தர்வலோகம் போல விளங்கு கிறது; மலரழகு குலுங்குகிறது. 'காதல், காதல்' என்று குயில்கள் கூவுகின்றன. வண்டுகள் ஆண் மலர்களுக்கும் பெண் மலர்களுக்கும் இடையே தூது நடக்கின்றன. 'இதுவே எங்கள் விண்ணகம்' என்று புட்கள் பாடுகின்றன.

இவ்வனம், புட்களுக்கு மட்டுமல்ல, இளங்கதா லர்களுக்கும் இன்பவுலகாகும். இங்கே காதல் விருந்

துண்பவரில் மிகவும் பரவசங் கொண்டவர் அந்த நான்கு ஜோடிக் காதலர்தான் என்று யாரும் சொல்லுவர். அவர்கள் தோள்மேல் தோள் போட்டு நடக்கின்றனர்; முத்த வெள்ளம் பொழிகின்றனர்; ஒருவரை யொருவர் உயிரெனத் தழுவிக் கொள்ளுகின்றனர். 'கண்ணே! இன்ப விண்ணே!' என்று கொஞ்சுகின்றனர்.

பட்டப் பகலில் இவ்வளவு வெட்ட வெளிச்சமாகக் காதலிக்கும் இவர்கள் யார்? ஆண்கள் நால்வரும் வெளியூரிலிருந்து வந்து பாரிஸில் படிக்கும் வாலிபர்கள்; பாரிஸ் ஜனசமுத்திரத்தில் இளமைப் புயலாற் கொந்தளிக்கும் நான்கு அலைகள்; நல்லவர்களுமில்லை, கெட்டவர்களுமில்லை: அறிஞருமில்லை, மடயருமில்லை; குஷியான வாலிபர்கள். தமது மார்பில்பட்ட மன்மத பாணங்களைக் கொண்டே பெண் வேட்டையாடும் வாலிபர் நால்வரும் வேட்டைத்தோழர். இவர்களில், பிளாஷிவல், ஃபாவரிட் (Favourite, செல்லம்) என்னும் யுவதியைக் காதலித்தான். லிஸ்தோலியே (Listolier) என்பவன் தாலியா (Dhalia) என்னும் யுவதியிடம் மனத்தைப் பறிகொடுத்தான். ஃபாமேல் (Fameuil) என்பவன் ஜெபீன் (Zephine) என்னும் குமரியிடம் உயிர் வைத்தான். இவர்களுக்கெல்லாம் தலைவனான ஃபெலிக்ஸ் தோலோமியே (Felix Tholomyes) ஃபாங்தேன் (Fantaine) என்னும் உத்தமியின் காதலைப் பெற்றான்.

இந் நான்கு நங்கைமாரும் இளவேனிலைப் போன்றே வனப்பும் அழகும் மிக்கவர்கள். நால் வரும் துணிதைக்கும் தொழில் செய்து பிழைக்கும் ஏழைகளே. இவர்களில், ஃபாவரிட் என்பவள் மாய வலை வீசி ஆண்கள் மனத்தைச் சிக்க வைப்பதில் மிக வும் அனுபவம் வாய்ந்தவள். நீண்டகாலம் கலியாண மில்லாது வாழ்ந்த ஒரு கணக்கு வாத்தியார் ஒரு வீட்டிற்குப் பாடம் சொல்லிதரப் போனார். அந்த வீட்டு வேலைக்காரியின் கண்கள் பாய்ந்து இவர் மனத்தைப் பற்றிக்கொண்டன. இருவரும் காத லித்தனர்: இவர் மகளே ஃபாவரிட். இவளது இயற் பெயர் தெரியவில்லை. இவள் லண்டனில் சில காலம் வசித்தாள்: லண்டன் வாலிபர்களிடம் ஃபேவரிட் (செல்லம்) என்ற பெயர் பெற்றுக்கொண்டு பாரி சுக்கு வந்தாள்: வயது 23 தான் ஆகிறது. இதற் குள் இவளிடம் எத்தனை பேர் மனம் பறி கொடுத் தனர் என்று கணக்கிட முடியாது. தாலியாவும் ஜெபீனும் இவளை வியந்து பின்பற்றிய தோழிகளே! எனில், அவர்கள் கதையை வளர்க்கவேண்டியதில்லை. மூன்று பேரும் ஆண்வேட்டையில் முதற்பரிசு பெற்ற வர்கள். எப்படியாவது குடித்துக்களித்துத் தமா ஷாக இருக்கவேண்டியது: அதுவே இவர் குறிப்பு.

ஃபாங்தேன் (Fantaine) என்னும் யுவதி இந்த அனுபவங்களெல்லாம் இல்லாத அபலை; தான் பிறந்த ஊர் மாந்த்ரேல் (Montreuil) என்பது மட் டுந் தெரியும்; பெற்றோர் இன்னாரென்று அவளுக்கே

தெரியாது. அவள் தானே தனக்கு "ஃபாங்தேன்" என்று பெயர் வைத்துக் கொண்டாள். அவளுக்கு உறவினர் யாரும் கிடையாது. அனாதையாக எடுப்பார் கைப்பிள்ளையாக வளர்ந்தாள். ஃபாங்தேன் பத்து வயதில் வயலில் வேலை செய்து பிழைத்தாள்; அத்துடன், துணி தைக்கவும் கற்றுக் கொண்டாள். அக்காலம் எண்ணிறந்த ஏழைப் பெண்கள் சட்டை பாவாடை தைத்துப் பிழைத்தனர். ஃபாங்தேன் 14 வயதில் வயிற்றுப் பிழைப்பிற்காகப் பாரிசுக்கு வந்தாள். நன்றாக வேலை செய்து, பசித்துண்டு காற்றாட வாழ்ந்ததால், ஃபாங்தேன் உடலுறுதியும் கட்டழகும் பெற்றிருந்தாள். அவளது முத்துப் பல், முகிற் கூந்தல், கிளி மூக்கு, பவழச் செவ்வாய், மலர் விழி, வேய்த் தோள், இளமையின் செழுமையால் விம்மியெழுந்த மார்பு, மயில் போன்ற சாயல், குயில் போன்ற குரல், அன்ன நடை, அடக்கம், பொறுமை—இவற்றை வியக்காத கண்களில்லை! எனினும், அவள் கண்கள் இன்னும் யாரையும் பார்த்து வியக்கவில்லை. வீடுகளில் சட்டை பாவாடை தைத்து, வந்த கூலியைக் கொண்டு வயிறு வளர்த்தாள். அவளது அழகு பல வாலிபரைக் கவர்ந்தபோதும், எந்த வாலிபனும் அவள் மனத்தைக் கவரவில்லை; கைபடா நாண்மலர் போல வனப்புற்றிருந்தாள். ஆயினும், வயிற்றுப் பசிக்கடுத்து வாலிபத்தின் மனப்பசி யொன்று இயல்பாயிருக்கிறதல்லவா? அந்தப் பசி அவளையும்

பக்கென்று பற்றியது. அவள் வேலை செய்யும் இடத்திற்கருகே, பல கல்லூரி மாணவர்கள் வசித்தனர். அத்தனை பேரும் சுமார் 20 வயதிற்கு மேற்பட்ட இளங்காளைகள். அவர்கள் மனத்திற்குக் கண்ணி வைக்க வாலிபப் பெண்களும் அதே தெருவிற் குடிப் புகுந்தனர். முன் சொன்ன ஃபாவரிட், காலியா, ஜெபீன் போன்ற யுவதிகள் அவ்வாறே அத்தெருவிற் குடிப் புகுந்தனர்.

ஃபாந்தேனுக்கு இவர்கள் நட்புக் கிடைத்தது. அடிக்கடி இவர்கள் நடத்தும் வம்பர் மகா சபைகளுக்குப் போய் வந்தாள். அவள் மனமும் ஒரு காதலனை அவாவியது. ஒரு நாள் வேலை செய்து திரும்பும்போது தோலோமியே ஜோராக அலங்கரித்துக் கொண்டு, சிட்டி படித்துக் கொண்டு அவளெதிரே வந்தான். இருவர் கண்களும் கூடின; நாணத்தால் ஃபாந்தேன் பேசவில்லை. எனினும், ஒவ்வொரு மாலையும் வேலையினின்று திரும்பும் போது, இருவர் கண்களும் ஒரு கூடமான புன்னகையுடன் சந்தித்து வந்தன. தொலோமியேவிற்கு முப்பது வயதிருக்கும்; அவன் பணக்காரன்; அவனுக்குப் பிதுரார்ஜிதத்தினின்று மாதம் ரூ. 500 வந்தது; சகல சுக போகங்களையும் கவலையில்லாது மனப்படி அனுபவிக்கப் பாரிஸில் மாணவனாயிருப்பதே தக்கவழி என்று நினைத்தான்; கட்டில்லாக் காளை போலத் திரிந்தான்; ஷோக்கில் இம்மி குறையமாட்டான்; தமாஷில் அவனிடம் எல்லோ

ரும் கடன் வாங்க வேண்டும். அவன் பேசினால், பொழுது போவதே தெரியாது கேட்டுக் கொண்டிருப்பர் நண்பர். அவனுடன் எப்போதும் ஒரு ஜமா இருக்கும். முதன்மையாக, மேற்சொன்ன மூன்று வாலிபரும் இருப்பர். நினைத்ததை உடனே செய்து தீர்க்கவேண்டும்—அதுவே அவன் குறிப்பு. நண்பருடன் நன்றாகக் குடிப்பான்; பெண்களுடன் நடனமாடிக் களிப்பான். அவன் உலகில் மிகவும் விரும்புவது பெண்ணின்பமே! அவன் பற்கள் உதிர்ந்து போன காரணம் தெரியவில்லை; தலையும் வழுக்கை விழுந்தது; அவனது ஓயாச் சிரிப்பினால்தான் இன்னும் அவனிடம் வாலிபம் குடிகொண்டிருக்கிறதென்றறிகிறோம். இக் கில்லாடி ஃபாந்தேனை விடாது தொடர்ந்து, வசப்படுத்திக் கொண்டான். அவளைத் தினம் அழைத்துச் சென்று உல்லாசமாகப் பேசுவான், விருந்தூட்டுவான். ஃபாந்தேனும் தொலோமியைத் தன் கணவனாகவே பாவித்தாள். அவனைத் தவிர வேறொரு ஆடவனைத் தொடுவதில்லை. அதற்காக, மற்ற மூன்று யுவதிகளும் செய்யும் பரிகாசங்களைப் பொறுத்திருப்பாள். தொலோமியுடன் ஓராண்டு சந்தோஷமாகக் காதலுறவு பூண்டதன் பயனாக அவளுக்கொரு பெண் குழந்தை பிறந்தது. அக் குழந்தையின் பெயர் கோஸத் (Cosette). இப்போது அக் குழந்தைக்கு ஓராண்டு நிறைந்தது. இந்த இரண்டாண்டுகள் தொலோமியே ஃபாந்தேனை இணை பிரியாது நேசித்துத் தனது விருப்பத்தை

நிறைவேற்றிக் கொண்டான். அதே மாதிரியே அவனது சகாக்களும் தங்கள் காதலிகளுடன் உடலும் உயிரும் போலிருந்தனர். தனது ஆசை முழுதையும் ஃபாந்தேன் தொலோமியிடம் வைத்தாள். அவனை, "என் இன்பமே!" என்றழைத்து வந்தான் தொலோமியே: அவளது ரோஜா உதடுகளில் தேனருந்தும் வண்டாகவே யிருந்தான்.

---

15. காமக் களியாட்டம்

இன்று, நான்கு காதலர்களும் சிற்றின்பத்தின் சிகரத்தைக் காணத் தீர்மானித்துத் தங்கள் காதலிகளுடன் கைகோத்து, இளவேனிற் காட்சிகளூடு அன்றில் பட்சிகள் போலச் செல்லுகின்றனர். தொலோமியே குஷியாகப் பாடுகிறான் :—

இன்பமா யிருப்போம் !
இகத்தினிற் சுகிப்போம் !
அன்பினிற் களிப்போம் !
ஆசையை நிறைப்போம் !
துன்பத்தை மறப்போம் !
துயர்களைப் பொறுப்போம் !
நண்பரே, காதலாம்
நல்விருந் துகப்போம் !

எல்லாரும் பாடிக் கை கோத்தாடுகின்றனர். பிறகு

படகேறி ஸேன் (Seine) நதியைத் தாண்டி, நெஞ்சை அள்ளும் வனப்பு வாய்ந்த "ஷாம்ப் ஏலிசே" (விண்-பொழில்)க்குப் போகின்றனர். அங்கே பொம்பார்தா (Bombarda) என்னும் ஊண் விடுதி (Restaurant) யுள்ளது. அங்கே இக் காதலர்கள் சௌகரியமான இடம் அமர்த்திக் கொண்டனர். ஊரில் புரட்சி வேகமும் போர் முழக்கமும் அடங்கி அமைதியா யிருந்ததால், இங்கே ஜனங்கள் இரவிலும் வந்து உலாவினர். காதலர் பலர் வண்டிகளில் வந்து இறங்கிச் சந்தோஷமாக இங்கு உலாவினர். அவர்களால் பொம்பார்தா ஊண் விடுதிக்கு நல்ல வருமானம் கிடைத்தது.

நமது நான்கு காதலர்களும் இன்பச் சிகரத்தில் இருக்கக் காண்கிறோம்: சுவையான உணவுகளைச் சாப்பிட்டு, மதுபானஞ் செய்கின்றனர். காமக் கனல் பறக்கிறது. ஒருவரை யொருவர் அள்ளி விழுங்குவது போலத் தழுவிக் கொள்ளுகின்றனர்! முத்த வெள்ளத்தில் நீந்துகின்றனர்! "நீயே என் உலகம்! நீயே என் சுவர்க்கம்! உன்னைப் பிரிந்தால் உயிர் விடுவேன்! உன்னைப் பிரிந்தால் ஸேன் நதியில் உடனே விழுந்து சாவேன்! அந்த வார்த்தையேன்? உயிரும் உடலும், நெஞ்சும் துடிப்பும்போல் ஒன்றியிருப்போம்! உன்னை இணை பிரிந்தால் நான் மூச்சிழப்பேன்" என்று கொஞ்சிக் குலாவுகின்றனர். தொலோமியே குடி-வெறியில் நூறு எருமைக் கடாய்கள் சேர்ந்தது போலப் பாடுகிறான்:—

காதலே கள்ளாம்: கள்ளினும் இனிய
மாதரின் செவ்வாய் மதுவைக் குடிப்போம்!
காதலே யின்பம்: கலவியே சுவர்க்கம்:
காதலே வாழ்வின் கைகண்ட பலனும்!

ஆட்டமும் பாட்டமும், குடியும் கூத்தும், சிரிப்பும் விளையாட்டும் அமளிபடுகின்றன! திடீரென்று தொலோரியே அடைமழை மாதிரி சொற்பொழியக் கிளம்பிவிட்டான்:

"நண்பர்களே, மிதமாகக் குடிப்போம் (இன்னொரு போத்தல் குடித்து); மிதமாகக் காதலின்பம் அனுபவிப்போம் (காதலியைத் தழுவி); எதிலும் மிதம் வேண்டுமல்லவா? அமிதம் நஞ்சல்லவா? குடி மிகவும் கெடுதல் (இன்னொரு போத்தல் உள்ளே போகிறது)! பெண்ணாசை பொல்லாதது (ஒரு முத்தமிட்டு)! அந்த ஹெலனாலே (Hellen) யல்லவா திராய்ப்போர் (Trojan war) மூண்டு அத்தனை கிரேக்க வீரர் இறந்தனர். அவள் முகம்மட்டும் ஆந்தைமாதிரி யிருந்திருந்தால் திராய்ப்போரே வந்திருக்காதல்லவா! அழகினாலே தான் உலகில் தொல்லைகள் வருகின்றன. (காதலி உன்னழகைப்பற்றிச் சொல்லவில்லை)!

நண்பர்களே, நான் சொல்லுகிற புத்திமதியைக் கேளுங்கள்: மிதமாக உண்ணுங்கள்! மிதமாகக் குடியுங்கள்! மிதமாகக் காதலியுங்கள் (மற்றொரு முறை குடித்துத் தழுவி)!"

ப்ளாஷெவெல் குடிவெறியில் மற்றொருபுறம் தொண்டை கிழிகிறான்:—

"மது, மாது, இரண்டுதான் எனக்கு வேண்டும்! பெண்ணின்பமே விண்ணின்பம்! பெண்ணே, உன்னிடம் உயிரை வைத்தேன்."

தோலோமியே:—அடசீ! பெண்ணு! தூ! நொடிக்கொரு மாறுதலடையும் சஞ்சல மனமுள்ள பெண்ணை, யாராயினும் நம்புவாரு? நண்பா, நான் சொல்லுவதைக் கேள். பெண்ணை நம்பினால் நீ நாசமாய்ப் போவாய்: பொறாமைப் பாம்புகள்! சீ! பெண்ணு (காதலியைத் தழுவிக்கொண்டு)! நண்பா, நல்லது சொல்லுகிறேன், பெண்ணைத் தழுவாதே!

பிளாஷேவேல்:—தொலோமியே, நீ குடி வெறியில் பிதற்றுகிறாய்!

தோலோமியே:—நானு குடித்தேன்! சீ, பொய்! நீதான் குடிவெறியுடன் காமவெறி பிடித்தலைகிறாய்.

ஃபாவரிட்:—எல்லாரும் சந்தோஷமாயிருப்போம்.

எல்லாரும்:—ததாஸ்து!

சந்தோஷக் கூத்தால் வீடு இரண்டாகிறது. 'என் தங்கமே ஃபாவரிட்! என் முத்தே ஜேபின்! கண்ணே தாலியா, என் மோகனக் கிளியே ஃபாந்தேன்! என் உயிரே, என் உடம்பே, என் கண்ணாளா—' என்று ஏகக் கூச்சல், ஆடல் பாடல், ஊடல் கூடல்!

இவ்வாறு நெடுநேரம் காதல் அமளியும், இடையிடையே தொலோமியேவின் பிரசங்கங்களும் நடந்தன. தொலோமியே இலக்கியப் பேச்சிற் கிளம்பி

விட்டால் ஹோமர், தாந்தே, விர்கில், ஷேக்ஸ்பியர், மோலியர், ரஸீன் எல்லாம் மலைபருவிமாதிரிக் கொட்டித் தீர்ப்பான். எல்லாம் பெண்களின் சஞ்சல சித்தத்தைப் பற்றியும் மிதவாதத்தைப் பற்றியுமே பேச்சு.

சிற்றின்பச் சிகரத்திலேறி யேறிக் குதித்தாயிற்று. தொலோமியே தனது நண்பருக்கு ஒரு கண்குறி காட்டினான். எல்லோரும் சிரித்தனர். அருமைக் காதலிகளை மறுமுறை தழுவி முத்தமிட்டனர். எமது "அருமை காதலிகளா சற்று இருங்கள். வண்டி கொண்டு வருகிறோம்" என்று நான்கு பேர்களும் வரிசையாகக் கை கோத்து வெளிக் கிளம்பினர். "விரைவாக வாருங்கள்; நாங்கள் ஆவலாகக் காத்திருப்போம்" என்றனள் ஃபாந்தேன்! "வருகிறேன் கண்ணே! விடைபெற்றுக் கொள்ளுகிறேன்!" என்றான் தொலோமியே.

காதலர் சென்று பதினைந்து நிமிஷத்திற்கெல்லாம் ஒரு குதிரை வண்டி வேகமாகச் செல்வதைக் கண்டனர். ஒரு மணி நேரங் கழித்தும் காதலர் வரவில்லை. ஃபாந்தேன் கவலைப்பட்டுக்கொண்டிருந்தாள்.

அப்போது அவர்களுக்குச் சாப்பாடு பரிமாறிய பையன் ஒரு கடிதம் கொடுத்தான்.

ஃபாவரிட் :—யார் இக் கடிதம் தந்தது?

பையன் :—அந்த நான்கு கனவான்களும். அவர்கள் சென்று ஒரு மணி நேரத்திற்குப் பின் இக்கடிதத்தைத் தங்களிடம் தரச் சொன்னார்கள்.

ஃபாவரிட் கடிதத்தைப் பிரித்துப் படித்தாள் :-

“காதலிகளா, எங்களுக்குப் பெற்றோர்கள் இருக்கிறார்கள். நீங்கள் பெற்றோரை அறியீர். எங்களை அருமையாக வளர்த்த தாய் தகப்பன்மார்களை நாங்கள் மதித்து நடக்க வேண்டும். அது, எமது கடமை. நாங்கள் நேராக எங்கள் பெற்றோரிடம் செல்லுகிறோம்; உங்களைப் பிரிந்து செல்லுகிறோம்; உங்கள் மாயவலைகளை உதறிச் செல்லுகிறோம்; சுமார் இரண்டு ஆண்டுகளாக உங்களுக்குச் சுகத்தைக் கொடுத்தோம். அதற்காக நீங்கள் எங்களுக்கு நன்றி செலுத்த வேண்டும். நீங்கள் இனி வேறு காதலரைத் தேடிக் கொள்ளலாம். இன்று சாப்பாட்டுக் கூலி தந்தாயிற்று.

இங்ஙனம்,

1. ப்ளாஷெவெல் 2. ஃபாமேல்
3. லிஸ்தோலியே 4. தொலோமியே.”

நான்கு பெண்களும் திகைத்தனர்! ஃபாவரிட், “இது நல்ல கூத்துத்தான்! காதற் கனவு முடிந்தது!” என்றாள்.

‘ஆ! நாதா’ என்று சோர்ந்தாள் ஃபாந்தேன்!

“அடி, தைரியமாயிரு! இந்தப் பசங்கள் போனால் அங்கே இன்னும் இவர்களை விட வனப்பான வாலிபர்கள் இருக்கிறார்கள்!” என்றனர் மற்றை மூவரும். இந்த மாதிரி அனுபவம் அவர்களுக்கு வழக்கம்; ஒரு காதலனை அனைவதும், பிரி

வதும் அவர்களுக்கு விளையாட்டுத்தான். ஆனால், ஃபாந்தேன் தொலோமியேயே தனது கணவனென்று கருதினாள். அவன் மூலம் ஒரு மகளையும் பெற்றாள். இனி வேறொரு காதலனை அவள் தேட விரும்பவில்லை!

---

16. தென்னாடியர்

குழந்தை

மேற்சொன்ன காமக் கூத்து நடந்து பத்து மாதங்களாயின. ஃபாவரிட், ஜெபின், தாலியா மூவரும் வேறு காதலரைத் தேடி மறைந்தனர். உலகை அறியாத ஃபாந்தேன் ஒரு 'கில்லாடியை' நம்பி மோசம் போனாள்; அவனை நம்பித் தலை து தைக்கும் தொழிலையும் கைவிட்டிருந்தாள். தொழிலுமில்லை, பணமுமில்லை, ஆதரவில்லை, தனியள்! 22 வயது நல்ல பெண், என்ன செய்வாள்? அவளுக்கு எழுதப் படிக்கவும் தெரியாது; கையெழுத்துப் போடத்தான் தெரியும். எப்படியோ தொலோமியின் விலாசத்தை யறிந்து மூன்று கடிதங்கள் போட்டாள்: பதிலில்லை. தொலோமியே சில ஆண்டுகளுக்குப் பிறகு சர்க்கார் வக்கீலானான்: லூயி பிலிப் மன்னனின் சலுகையைப் பெற்றான். அவன் நடத்தை மட்டும் அப்படியே யிருந்தது. ஃபாந்தேனுக்கு வேறு காதலனைத் தேடவும் மனமில்லை: 'ஒரு

குழந்தை தனக்குப் போதும்; இதை எப்படியாவது காப்பாற்றிவிடுவோம்' என்று தைரியங்கொண்டாள். 'இது யாருக்குப் பிறந்த குழந்தையோ' என்று, ஊரார் ஒரு மாதிரிப் பேசத் தொடங்கினர். பாரிஸில் பிழைக்கவும் வழியில்லை; செலவு அதிகம்; தான் பிறந்த ஊராகிய மாந்த்ரேலுக்கு (Montreuil) உடனே புறப்படத் தயாரானுள்; தனது நகைநட்டு சாமான்களை யெல்லாம் விற்றதில் 200 பிரான்கள் (ஒரு பிரான் சுமார் 2 அணு) கிடைத்தன.

இந்தப் பத்து மாதமும் அவள் தனக்கேற்பட்ட கடனைத் தீர்த்தாள்; மீதி 28 பிரான்களே யிருந்தன; குழந்தையை முதுகில் தூளிகட்டிச் சுமந்து கொண்டு பாரிஸினின்று ஒரு காலையில் புறப்பட்டாள். வேதனையாலும், சரியான உணவில்லாததாலும் ஃபாந்தீன் துரும்பாய் இளைத்திருந்தாள்; அத்துடன் குழந்தைக்குப் பாலூட்டி வந்தாள். புகை மூடிய சித்திரம் போலானது அவளுடைய மேனியழகும், இளமையும், நடந்து நடந்து காலிளைத்து முடிவில், சொற்ப வாடகைக்கு ஒரு கட்டை வண்டியிலேறி மாலை 6 மணிக்கு மோம்ஃபெர்மேல் ரொட்டிக்காரத் தெருவிலுள்ள ஒரு சிறிய சாப்பாட்டுக் கடைக்கெதிரே வந்தாள்.

அதுவே, தேன்ருடியர் சாப்பாட்டுக் கடை அதன் வாசலில் ஒரு படம் தொங்கவிட்டிருந்தது: வாதர்லூப் போரில் காயம் பட்ட ஒரு பெரிய தளகர்த்தனை ஒரு மனிதன் முதுகிற் சுமந்துசென்று

காப்பாற்றுவதாகப் படம் எழுதப்பட்டிருந்தது. அதன் கீழ், "வாதர்லூ வீரன்" என்று எழுதியிருந்தது. இந்த வீரனே தென்னடியன்! இதன் உண்மையைப் பிறகு விளக்குவோம். இந்தக் கடை வாசலில் ஒடிந்து சிதைந்து துருப்பிடித்த ஒரு பழைய வண்டியிருந்தது. அதன் அடியில் தொங்கிய சங்கிலியைப் பிடித்து, இரண்டு சிறு பெண் குழந்தைகள் மகிழ்ந்து விளையாடிக்கொண்டிருந்தன: ஒன்றிற்கு $2\frac{1}{2}$ வயது: மற்றொன்றிற்கு $1\frac{1}{2}$ வயதிருக்கும். தாயார் இக் குழந்தைகளின் விளையாட்டைப் பார்த்துக் களிப்படைகிறாள்; மெல்லிய குரலிற் பாடுகிறாள் :—

வீரமணி பெற்றெடுத்த
    வீரமணிப் பிள்ளைகளா !—
வீரப் புகழோங்கி
    வாழ்வீர் விளக்கொளிபோல்
ஆரிரரோ-ராராரோ........!

இச்சமயந்தான் ஏழை ஃபாந்தேன் எதிர்ந்தாள்; தன் குழந்தை அயர்ந்து தூங்கியது; எதிரே விளையாடும் இரண்டு குழந்தைகளையுங் கண்டு பூரித்தாள்; உடனே குழந்தைகளின் தாயிடம் பேசத் தொடங்கினாள் :— "தங்கள் குழந்தைகள் மிகவும் இனிய குழந்தைகள்."

தன் குழந்தைகளைப் புகழ்ந்தால் தாய்க்கு உச்சி குளிருமல்லவா?

தென்ருடியள் ஃபாந்தேனுடன் முகங் கொடுத்துப் பேசினுள்: "வாருங்கள் என் பெயர் தேன்ருடியள். நாங்கள் இங்கு சாப்பாட்டுக் கடைவைத்திருக்கிரும்; நல்ல சாப்பாடு போடுகிரும்."

ஃபாந்தேன்: "நான் கூலி வேலே செய்து பிழைத்தேன். என் கணவர், இந்தக் கைக் குழந்தையை விட்டுக் காலஞ் சென்ருர். பாரிஸில் வேலேயில்லே. மாந்த்ரேலுக்கு நடந்து வந்தேன். குழந்தை தூங்குகிறது; என் கண்ணு!" என்று ஃபாந்தேன் ஒரு முத்துமிட்டதும், கோஸத் கண் விழித்து, நகைத்துக்கொண்டே கீழே இறங்கி முன்ஞல் இரண்டு குழந்தைகள் விளேயாடுவதைக் கண்டு சந்தோஷமாகத் தாவிச் சென்ருள். "மூன்று பேரும் விளேயாடுங்கள்" என்ருள் தென்ருடியள்.

குழந்தைகள் விளேயாடும் போதே இரண்டு தாய் மார்களும் தத்தம் வரலாறுகளேப் பேசத் தொடங்கினர்.

தேன்ருடியள் :—குழந்தைக்கு என்ன பெயர்?

ஃபாந்தேன் :—கோஸத்.

தேன் :—வயதென்ன?

ஃபாந் :—மூன்ரும் பிராயம் நடக்கிறது.

தேன் :—இந்த மூன்று குழந்தைகளும் அக்கா தங்கைகள் போலவே ஒட்டுறவாக விளேயாடுகின்றன!

ஃபாந் :—ஆம், என் கோஸத்திற்குத் தங்கள் குழந்தைகளுடன் இருக்கப் பிரியமாயிருக்கிறது.

தேன் :—ஆம், மூன்று குழந்தைகளுடைய அழகாக விளையாடுகின்றன.

ஃபாங் :—அக்கா, தாங்கள் என் கோஸத்தை வைத்துக் கொள்ளுகிறீர்களா? நான் வேலை செய்து பிழைக்கப் போகுமிடத்தில் குழந்தை கூட இருந்தால் வேலை நடைபெறாது; தெய்வாதீனமாகத் தங்களைச் சந்தித்தேன். தங்கள் குழந்தைகளும் எனக்குப் பிடித்திருக்கின்றன. இரண்டு குழந்தைகளுடன் மூன்றாவது குழந்தையாகக் கோஸத் இருக்கட்டுமே! நான் சீக்கிரம் திரும்பி வந்து குழந்தையை எடுத்துச் செல்லுகிறேன்.

தேன் :—ஏதோ பார்ப்போம்........

ஃபாங் :—யோசனை வேண்டாம் அக்கா : வைத்துக் கொள்ளுங்கள். மாதம் 6 பிராங் அனுப்புகிறேன்.

இப்போது வீட்டுக்குள்ளிருந்து ஒரு கரடித் தொண்டை பேசியது :—

"ஏழு பிராஙுக்குக் சல்லி குறைந்தாலும் முடியாது; ஆறுமாதப் பணம் முன்னால் தரவேண்டும்."

ஃபாங்தேன் :—அப்படியே தருகிறேன்.

மறுபடியும் கரடித்தொண்டை பேசுகிறது :—

"அதைத் தவிர இன்று சாப்பாட்டிற்கு 15 பிராங்."

தேன் :—அவர்தான் என் கணவர், மொத்தம் 57 பிராங் தரவேண்டுமென்கிறார்.

ஃபாங் :—ஆஹா, தருகிறேன்! கையில் 28

பிராண்கள் உள்ளன; வைத்துக் கொள்ளுங்கள். நான் காலால் நடந்து சென்று மாந்த்ரேலில் கூலி வேலை செய்து சம்பாதித்து மீதிப் பணத்தைக் கொண்டு சிக்கிரம் எனது செல்லக்கிளியைப் பார்க்க வருவேன்.

உள்ளிருந்து மீண்டு, "குழந்தைக்குப் பாவாடை சட்டை யிருக்கின்றனவா?" என்று உறுமினன் தென்னடியன்.

ஃபாங் :—ஆஹா, இதோ உயர்ந்த பட்டுடுப்புகள் உள்ளன. உடைக்குக் குறைவில்லை.

எல்லாம் பேசி முடிந்தன; கையிலிருந்த பணம் துணிமணிகளெல்லாம் குழந்தையுடன் தென்னடியரிடம் ஒப்புவித்தாள் ஃபாங்தேன்; அன்றிரவு அங்கே தங்கினள்; குழந்தையை வேண்டுமட்டும் கொஞ்சிக்குலாவினள். மறுநாட்காலை மனத்தைக் கோஸத்திடம் வைத்துக் கண்ணீர் சிந்தி, வெற்றுடல் தாங்கிப் பிழைப்பு தேடச் சென்றாள் பேதை ஃபாங்தேன். கைக்குழந்தையை விட்டுப் பிரியும் தாயின் மனம் எவ்வாறு துடிக்கும்? பெற்றவருக்கே அத்துயரம் தெரியும்! "நல்ல காரியம் செய்தாய்; பணம் ஆதாயம்; இந்தச் சட்டை பாவாடைகளை நமது பெண்ணுக்கு உடுத்துவோம். நமக்கு நல்ல வரும்படி!" என்றான் தென்னடியன்.

"சந்தேகமில்லை; நல்ல லாபம்!" என்றாள் தென்னடியள்.

---

17. வாதர்லூத் திருடன்

இந்தத் தென்னடியர் யாவர்? பிணந்தின்னிக் கழுகு, வஞ்ச நரி, திருட்டு நாய், கொலைகாரப் புலி—இத்தனையும் சேர்ந்தே தென்னடியர். "வாதர்லூ வீரன்" என்று வாசலில் விளம்பரம் ஒட்டியுள்ள இரகசியம் 'என்ன?

சற்று வாதர்லூப் போர்க்களஞ் செல்வாம்: பெயர் தான் வாதர்லூப் போர்; போர் நடந்ததெல்லாம், அதனின்று 4 மைலுக் கப்பால், ஹூகோமோந்து (Hougomont), செய்ண்ட் ஜான் மலை (St. John Hill), பாப்லோத்து (Popelotte) முதலிய கிராமங்களில். இந்தக் கிராமங்களெல்லாம் பீரங்கிகளுக்கு இரையாகி வெந்து சுடுகாடாயின: இங்கே மலை மலையாக ஆங்கில, ஜர்மானிய, பிரெஞ்சுப் பிணங்கள் குவிந்தன; இரத்த வெள்ளம் பெருகியது. 18-6-1815 இரவு நிலாவெளிச்சத்தில் இங்கு நடந்த கொடுமை போரல்ல, படுகொலை என்றே சொல்லத் தகும். இங்கே, வெல்லிங்டன் வெல்லவில்லை; நெப்போலியன் தோற்கவில்லை: விதியே ஆங்கிலேயர் பக்கமிருந்து, ஒரு மலைபோன்ற வீரச்சிங்கத்தை வீழ்த்தியது. முதல்நாளிரவு நெப்போலியன் கையே வலுத்திருந்தது. எதிரிகள் மலைமலையாக விழுந்து குவிந்தனர். நெப்போலியன் கண்கொட்டாது படை நடத்தினன்; தானே பீரங்கிப் படைகளை வகித்தான். மழை கொட்டியது; களம் முழுதும்

சகதி; குண்டுகள்கூட ஈரத்தில் பயனற்றன. இருந்தும், பிரெஞ்சுப் படைகள் நெஞ்சுரத்துடன் நின்று போர் புரிந்தன. மறுநாட் காலையில் தனது படை அணிகளாகப் பிரிந்து, "தேசத்திற்கே உயிர் தருவோம்! தேசத்திற்கே வெற்றி பெறுவோம்!" என்னும் பாட்டைப் பாடிக்கொண்டு கம்பீரமாகப் போர் முனைக்குச் சென்று 'V' வடிவில் நின்றது. "சபாஷ்! எல்லாம் அற்புதமாக அமைந்தன. நாமே வெல்வோம், இந்த ஆங்கிலேயர்களுக்கு நல்ல பாடம் புகட்டுவோம், நண்பர்காள்! இன்று இங்கு உற்சாகமாகக் களியாட்டம் (Ball) ஆடுவோம்!" என்று வெகு துணிவுடனும், நகைச் சுவையுடனும் பேசினான் நெப்போலியன்.

இடியும், மழையும், புயலும் பொருட்டில்லை! இயற்கையின் பயங்கர முகத்தைக் கண்டு திகைக்கவில்லை; நெப்போலியன் கடும்போர் புரிந்தான். எதிரிகள் திகைத்து மலைத்து நின்றனர் எனினும், அந்தோ! விதி வேறு நினைத்தது. ஒரு நெருக்கடியான சமயத்தில் 2000 பிரெஞ்சுக் குதிரை வீரரும், 500 வாள் வீரரும் எதிரியை முட்டப் பாய்ந்தனர். அப்போது, அவர்கள் செல்லும் நிலம் அழுந்தி ஆங்கு ஒரு பெரிய பள்ளம் தோன்றி அத்தனை பேரும், 'குதிரைகளும் அந்தக் கிடங்கில் விழுந்தனர். பகைவர் அவர்களைத் தொக்கி மிதித்துக்கொன்று குழியிற் புதைத்துவிட்டனர். இருப்பினும், மனந்தளராது நெப்போலியன் பொருதினான்.

சிகரற்ற அணிவகுப்பும், பயிற்சியும், போர்த்திறனும் பெற்ற சோமர்ஸெட்டேப் படையை முன்னே நிறுத்தி வெல்லிங்டன் போர் கொடுக்கிறான். முன்னிருக்கும் ஆங்கில வீரன் விழவிழப் பின் வரிசையினின்று வீரர் வந்துகொண்டேயிருக்கின்றனர். 'நமக்கெங்கே வெற்றி கிடைக்கப்போகிறது' என்று ஆங்கில வீரர் தளர்கின்றனர். 'போ முன்னே: உறுதியாக நில்; சொன்னதைச் செய்; எதிர் பேசாதே!' என்று வெல்லிங்டன் கட்டளையிட்டு நிற்கிறான். அணித் தலைவர் தலைகள் உருளுகின்றன! வீரர் உடலைப் பீரங்கிகள் புகைத்தெறிகின்றன! மாலை 5 மணி வரையில் நெப்போலியன் பக்கமே வெற்றி உறுதியாயிருந்தது. வெல்லிங்டன்கூட மனச்சோர்வுற்று, 'இரவு, அல்லது புளூஷர் (Blucher) வரலாகாதா' என்று விம்மினான்.

வெல்லிங்டன் புளூஷரை எதிர்பார்த்தான்; நெப்போலியன் புளூஷரை வேறு பக்கம் திருப்பி விரட்ட அனுப்பிய குரூஷி (Grouchy)யை எதிர் பார்த்தான். புளூஷர் வந்துவிட்டான்; குரூஷி வரவில்லை; தாமதத்தால் ஏமாற்றிவிட்டான்! நெப்போலியன் தொலைநோக்காடி வைத்துப் பார்த்துக் கொண்டேயிருந்தான். எங்கும் பனி மூடியிருந்தது. தொலையில் ஒரு சுவரிட்டாற் போலத் தோன்றியது. அதென்ன? சுவரா, மரத்தொகுதியா? இல்லை. குரூஷியின் படையா? இல்லை. அச்சுவர் மெல்ல மெல்ல அருகே வந்தது. ஆ! அதுவே வலுத்த ஜர்மன் படை! "நெப்போலியன் வாழ்க, வாழ்க!"

என்று ஊக்கங்கொண்டு போர்புரிந்த வீரர் தாது விழுந்தது! முன்னும் பின்னும் தீ மழை! நெப் போலியனின் திறமையுள்ள சூட்சிகளெல்லாம் ஐந்தே நிமிஷத்தில் வீழ்ச்சியடைந்தன! பகைவர், பிரெஞ்சு வீரரைச் சுட்டுத் தள்ளுகின்றனர்; சிறை யுண்ட வீரரையும், மண்டையிலும் நெஞ்சிலும் சுட்டுக் கொல்லுகின்றனர்; இனித் திறனில்லை. "முடிந்தவர்கள் தப்பியோடுங்கள்" என்ற உத் திரவு பிறந்தது; மீதியிருந்தவர், அங்குமிங்கும் அலங்கோலமாக ஓடினர். ஆனல், வீராதி வீரர் போர் புரிந்து மாளுவதே கடமை யென்று இன்னும் துப்பாக்கிப் பிடித்து எதிரே வந்த பகைவரைச் சுட்டு வீழ்த்தினர். "நே" என்னும் சூரன் ஐந்து குதிரைகளையிழந்து ஆருவது குதிரை யேறிப் போர்புரிந்தான்; உடம்பை குண்டு துளைத் தது. "இனி இணங்கு; எனது சிறையாளி நீ" என்றனர் பகைவர். "நான் ஆங்கிலேயன் கையில் சிறைப்பட்டிறவேன். ஒரு பிரெஞ்சு வீரன் நாட்டிற் காக எப்படிப் போர்க்களத்தில் உயிர்விடுகிறுன் என்று உலகம் பார்க்கட்டும்!" என்று கம்பீரமாகப் பேசி, கடைசி இரத்தத் துளியிருக்குமட்டும் பகை வரைப் பொருதியே தீர்த்தான். "நே, வாழ்க" என்று வீரர் முழங்கினர்! "பகைவரை எதிர்த்துச் சாங்கள்; இணங்கிச் சாகாதீர்" என்றுன் நே! இவ் வாறு இறுதிமட்டும் போராடித் தங்கள் கைக்கு வந்த பகைவரைக் கொன்றே இறந்தவர் பலர்.

இந்த அமளியில் நெப்போலியன் எங்கே? 'தனது நம்பிக்கையெல்லாம் பாழாய் முடிந்தது, விதிப்பயனே' என்றுணர்ந்தான் வீரமணி. எனினும், இறுதியில் ஒரு மூச்சுப் பார்த்துவிடுவது என்று இன்னும் வீராவேசத்துடன் முன்சென்று பகைவரை வெட்டிக்கொண்டிருந்தான்! பகைவர் அவனைச் சுட்டு விழ்த்தும் அபாயத்திலிருந்த போது, 'நெப்போலியன் இறந்துபோனான்' என்ற ஒரு சத்தம் பிறந்தது. பெட்ராண்டு, பெர்னார்டு என்னும் இரண்டு நன்றியுள்ள வீரர் முன்னே பாய்ந்து நெப்போலியனைக் கொணர்ந்து, மாறு வேடத்துடன் பாரிஸுக்குத் தப்பியோடச் செய்தனர். 'மீண்டும் படைதிரட்டி வந்து பகைவரை வெல்வேன்' எனச் சென்றான் நெப்போலியன். அது கைகூடாது, விதி அவனை ஹெலனத் தீவிற்குக் கொண்டேகியது.

வாதர்லூப் போர் ஐரோப்பாவை மாற்றியமைத்தது. போர் முடிந்தது. 18-6-1815 இரவு, நிறைமதி காந்துகிறது. போர்க்களம் முழுதும் பிணமலை; இரத்தச் சேறு; பிணக்காடு! ஆங்கில வீரர் களத்தைக் காவல் புரிகின்றனர். இச்சமயந்தான் கொள்ளை நடக்கும்; திருடர் வருவர்; பிணங்களின் அணிமணிகளைக் கொள்ளையிட்டுச் செல்வார். பிணந்தின்ன வருவது நான்கு கால் நரிகள்; பணந்தின்ன வருவது இரண்டுகால் நரிகள். இவர்களில், சிப்பாயகளும் உண்டு. வழிப்பறித் திரு

டர்களும் உண்டு. இரவில் இவர்கள் கொள்ளை கொள்வர். காலையில் பார்த்தால் பிணங்கள் ஆடைகூட இல்லாது முண்டமாக உருட்டப்பட்டிருக்கும்.

வெல்லிங்டன் மிகவும் கண்டிப்பான ஆள்; தனது வீரர் யாரும் பிணங்களின் சாமான்களைத் தொடக்கூடாதென்று உத்திரவிட்டுப் பலமான காவல் வைத்திருந்தான். யாராயினும் பிணத்தருகே வந்தால் சுட்டுப் பிணமாக்கிவிடுவர் காவலர்.

இவ்வளவு கண்ணுங் காவலுமாயிருக்கும் போதும், அதோ ஒரு திருடன் நரி மாதிரி பதுங்கிப் பதுங்கி வருகிறான்! முன் பின் பார்க்கிறான்: நடுநிசி; காவற்காரர்கள் தூங்குகின்றனர். வெகு தொலைக்கப்பால் சில வீரர் லோந்து சுற்றுகின்றனர். திருடன் இரத்தச் சேற்றில் நடந்து, பிணங்களை இங்குமங்கும் புரட்டிப் பார்க்கிறான். கிடைத்த பொருளெல்லாம் அவனது நீண்ட சட்டைப்பைக்குட் செல்கின்றன. கிடைத்ததை யெல்லாம் தடவியெடுத்துக்கொண்டு குதிரைப் பிணங்களும், மனிதப் பிணங்களும் மலையாகக் குவிந்து கிடக்கும் ஒரு மூலைக்கு வருகிறான். அப்பிணமலைக்கு அடியில் ஒரு கை நீட்டப்பட்டிருக்கிறது. அக்கையில் ஒரு வைர மோதிரம் உள்ளது. நிலாவில் வைரம் 'டால்' வீசுகிறது. திருடன் விடுவானா? அதைப் பறித்துக் கொண்டு திரும்புகையில் ஏதோவோ அவன் காலைப் பிடித்தது; ஆம்:

அந்த மோதிரம் போட்ட கைதான் அவன்

காலைப்பற்றியது. பிறரானால் பயந்திருப்பார்; இத்திருடன் பேய் பிசாசிற்குக் கூட அஞ்சாதவன். "ஏன் இழுக்கிறாய்; பிணமே! ஹ ஹ!" என்று சிரித்துக் கொண்டே பிணத்தைத் தும்பலினின்று வெளியே இழுத்துப் பார்த்தான். அது, ஒரு பெரிய ராணுவ உத்தியோகஸ்தன் உடல்; அதில் உயிர் துடித்துக் கொண்டிருந்தது. உணர்வு மட்டுமில்லை; "சரி, சரி, உனக்கு உயிரிருக்கிறதா? உன் சட்டையிலே என்ன வைத்திருக்கிறாய் பார்ப்போம்!" என்றான் தென்னடியன்.

சட்டை மேலே ஒரு வெள்ளிச் சிலுவை யிருந்தது. அதைப் பசக்கென்று பறித்துக் கொண்டான். சட்டைப் பையைத் தடவினான். ஒரு தங்கக் கடியாரம் இருந்தது; இன்னொரு சட்டைப் பையில் ஒரு பணமுடிப்பு இருந்தது. இரண்டையும் கைப்பற்றிக் கொண்டு வேறு பக்கம் நோக்கினான் திருடன். அப்போது, 'உஸ் அப்பாட! வந்தனம்!' என்று அந்த உத்தியோகஸ்தன் உணர்வு பெற்றுப் பேசினான். சிறிது தூரத்தில் லோந்துக்காரர்கள் சத்தம் கேட்டது. ஆதலால், திருடன் நெஞ்சு பட படத்தது.

"ஆ! உயிர் வந்தது! போரில் யார் வென்றது?" என்றான் உத்தியோகஸ்தன்.

திருடன்:—ஆங்கிலேயர்.

உத்தி:—ஆ! எனது தேசம் தோற்றதோ? இதோ, எழுந்து நாட்டிற்காகப் போர் புரிகிறேன்!

என் உயிரைக் காத்த நண்பா, என் சட்டைப் பையில் ஒரு கடியாரமும், பண முடிப்பும் உள; அவற்றை நீ யெடுத்துக்கொள்.

திருடன்:—(தடவிப் பார்த்து) தங்கள் சட்டைப் பைகளில் ஒன்றுமில்லையே?

உத்தி:—ஐயையோ! யாரோ எனது பொருளைக் கொள்ளையடித்துவிட்டனர்.

திருடன்:—ஐயையோ! எந்தப் பாவிப்பயல் அப்படிச் செய்தது? அவன் நாசமாய்ப் போக!

உத்தி:—நண்பா, நீ யார்?

திருடன்:—உன்னைப் போலவே நானும் பிரெஞ்சுப் படையைச் சேர்ந்தவன். நான் சீக்கிரம் போக வேண்டும். அகப்பட்டுக் கொண்டால் ஆங்கிலேயர் சுட்டுப் போடுவர்.

உத்தி:—சகோதரா, படையில் உனக்கு என்ன உத்தியோகம்?

திருடன்:—நான் ஸார்ஜெண்டு (Sergeant).

உத்தி:—உன் பெயர்?

திருடன்:—என் பெயர் தேன்ருடியன்.

உத்தி:—இந்தப் பெயரை நான் மறவேன்; உரிய காலத்தில் உனக்குத் தக்க உதவி செய்வேன். என் பெயர் போம்மேர்ஸி (Pontmercy) நினைப்பில் வைத்துக்கொள்.

திருடன்:—ஆஹா....!

---

18. பேயிடம் அகப்பட்ட சேய்

இந்தத் திருட்டுத் தென்னாடியனே, தான் வாதர்லூ வீரனென்றும், ஒரு தளகர்த்தனை முதுகிற் சுமந்துசென்று பெரிய அபாயத்தினின்று காத்து உயிர்ப்பிச்சை கொடுத்ததாகவும், படமெழுதி மாட்டித் தன்னை விளம்பரப் படுத்திக்கொண்டிருக்கிறான். இவனுக்கு வாய்ந்த மனைவியோ, புலிக்கு வாய்ந்த பதினாறடி வேங்கை மாதிரிதான். தென்னாடியன் தனக்கு எல்லாம் தெரிந்ததாகப் புகழ்ந்து கொள்வான்; இதில் துளி, அதில் துளி, காற்றுவாக்கில் கேட்டதை வைத்துக்கொண்டு சகல கலாவல்லவன் மாதிரி வாய்வீசுவான்; அகப்பட்டுக்கொண்ட ஆளின் தலையில் கையைவைத்துப் பையைத் தடவிக்கொண்டு தான் விடுவான். தென்னாடியள் கணவனைவிட 15 வயது இளையள்; பூதாகாரமானவள்; தந்திரக் கொடுமையில் அவனைவிடப் பதினைந்து மடங்கு பெரிய அரக்கி; பெண்ணுருவெடுத்த கொடுமை. அவள் தத்தாரிப் புத்தகங்களெல்லாம் படித்து நடத்தை கெட்டவள்; தன் விருப்பத்திற்கு இரண்டில்லாது நடப்பதால் கணவனிடம் பற்று வைத்திருந்தாள். இருவரும் சேர்ந்து கதியற்ற குழந்தை கோஸத்தைப் படுத்திய பாடு சொல்லி முடியாது. இரண்டு புலிகள் கையில் அகப்பட்ட மான்குட்டி போலக் கோஸத் உயிர் துடிக்கத் துடிக்க வருந்தித் தவித்தாள்.

ஃபாந்தேனிடம் கைப்பற்றிய 57 பிரான்களும் நெடுநாள் பாக்கியிருந்த வீட்டு வரிக்குச் சரியாய்ப் போயின. கடையில் வருவாய் மிகவும் குறைவு. ஃபாந்தேன் அந்தப்புறம் போனதும், இந்தப்புறம் கோஸத்தைக் கொடுமை செய்யத் தொடங்கினர் இருவரும். கோஸத்திற்காகக் கொடுத்த பட்டுப் பாவாடையைத் தெனார்டியர் பாரிஸில் கொண்டு போய் 60 பிராஜனுக்கு விற்று வந்தாள். இந்தப் பணம் செலவானதும் கோஸத்தை ஏதோ தருமத் திற்காகச் சோறுபோட்டு வளர்க்கும் அநாதைக் குழந்தையாகவே கருதி நடத்தினர்; தாய் தனது அருமை மகளுக்காகத் தந்த அணிமணிகளை யெல் லாம் தமது இரண்டு பெண்களுக்கும் தந்தனர்; கோஸத்திற்குக் கிழிந்த அழுக்குச் சட்டையும் பழம்பாவாடையும் உடுத்தினர். எல்லாரும் சாப் பிட்டு உலர்ந்துபோன பழைய ரொட்டித் துண்டு களையே அவளுக்குத் தின்னத் தந்தனர். ஃபாந்தே னின் அருமைக் குழந்தையை நாய்பூனையை விடக் கேவலமாக நடத்தினர். பிள்ளைப் பாசம் பற்றிய ஃபாந்தேன், அடிக்கடி தனது நண்பரைக்கொண்டு கோஸத்தின் க்ஷேம லாபங்களுக்குக் கடிதம் எழுதிப் போடுவாள். "கோஸத் நன்றாகச் சாப்பிடுகிறாள்; அழகாகச் சிறித்து விளையாடுகிறாள்; ராஜாத்தி போல வளருகிறாள்; கவலைப்பட வேண்டாம்" என்று கூசாமல் பதில் போடுவர் தெனார்டியர். ஆறுமாதம் ஆயிற்று: ஃபாந்தேன் வாக்களித்தபடி

மாதந்தவறாமல் தனது கூலிப் பணத்திலிருந்து ஏழு பிரான்கள் அனுப்பி வந்தாள். "ஏழு பிரானைக் கொண்டு என்ன செய்வது? 12 பிரான் அனுப்ப வேண்டும்; குழந்தை இரண்டாள் தீனி தின்கிறது. பட்சணங்கள் வேறே தின்று தீர்க்கிறது! குழந்தை நாளுக்கு நாள் களிப்புடன் பெருத்து வளருகிறது!" என்று 'உடான்' அடித்துவிட்டான் தெனார்டியன். பேதை பாந்தேன் மகள் சுகமாயிருக்கிறாள் என்று நம்பி, அவ்வாறே 12 பிரான் அனுப்பி வந்தாள்.

சில பெண்களிடம் இரண்டு தன்மைகளுண்டு: ஒன்று, தாய்த் தன்மை; மற்றொன்று, பேய்த் தன்மை. தாய்த்தன்மை வரும்போது, 'அன்பே, கிளியே, உயிரே' என்று கொஞ்சுவர்! பேய்த்தன்மை வரும்போது, 'போடு பூசை, உன்னைக் கட்டையிலே வைக்க. கையை ஒடி! ஈரத்துணி போட்டுக் கழுத்தை அறு! உன் அப்பன் சவரனைப்போலே தான் இருக்கிறது உன் லட்சணம்!' என்று பிள்ளையைப் போட்டு வெதுப்பி எழாந்திருநாள் நடத்தி விடுவர். தெனார்டியளுக்குத் தாய்க் குணத்தைவிட இரண்டு மடங்கு அதிகம் பேய் வெறி. தாய்க் குணத்தைத் தன் இரண்டு மக்களிடத்தும் காட்டினாள். "என் அருமை எபோநி (Eponine), என் ஆருயிர் அசலம் (Azelma), என் செல்ல ராஜாத்திகளா! அந்தத் தரித்திரத்துடன் சேராதீர்கள்," என்று கொஞ்சுவாள் இப்புறம். மற்றொரு புறம் கோஸத்தைப் புலிபோலப் பார்த்து, "கொல்லு

முண்டையை; பன்றி போலச் சாப்பிடுகிறாயே நாலாள் தீனி; வேலை செய்வதற்கென்ன கொள்ளை? வயிற்றுக்கு கொட்டிக்கும்போது கீழே ஏன் இந்தப் பருக்கை சிந்தினாய்? உன் அப்பன் வீட்டுக் காசு கொண்டு வருகிறாயோ? உனக்கு அப்பன் இருந்தானென்றோ? உன்னைப் பாடையிலே வைக்க, குடிக்கும்போது கீழே தண்ணீரை ஏன் சிந்தினாய்? உம், உம், போடு மண்டையிலே! போடு தவடையிலே!" என்று ஏதாயினும் சாக்கு வைத்துப் பாவம், பச்சைப் பிள்ளையைப் பிணங்கொத்திக் கழுகு மாதிரிப் பிடுங்கியெடுப்பாள் அரக்கி; தனது செல்லக் குழந்தைகளோ அம்மாளில் பாதி: "அம்மா, சாப்பிடும்போது என்னையே பார்க்கிறாளடி இந்த தரித்திர கோலத்; இதோ பாரடி என்னை அழகுகாட்டுகிறாள் இந்த அவலட்சணம்!" என்று ஏதாயினும் பொய்யும் கோளும் ஏற்றிவிடுவர். உடனே தென்றுடியப்பேய் குற்றமறியாக் குழந்தையை, "ஏண்டி லவ்வாடி, என் குழந்தைகள் சாப்பிட்டால் உனக்குப் பொறுக்கவில்லையோ? நீயும் கொட்டிக் கொள்ளுகிறாயே ஒரு கலம். உன் மூஞ்சியிருக்கும் லட்சணத்திற்கு என் செல்வக் குழந்தைகளை அழகு வேறு காட்டுகிறாயா? குரங்கு, தேவாங்கு!" என்று போட்டு வெதுப்புவெதுப்பென்று வெதுப்பித் தீர்ப்பாள். "நான் இல்லையம்மா!" என்று வாயைத் திறந்தால் போயிற்று. "பொய், பொய் சொல்லுகிறாயா? தரித்திர மூதேவி! நாக்கிலே சூடு

போடவா!" என்று மேலும் அடித்து நொருக்கு வாள். ஊரில், "இந்தக் குழந்தை யார்?" என்றால், "அனாதைக் குழந்தை; பாவம், தருமத்திற்காகச் சோறு போட்டு வளர்க்கிறோம்; நம்ம குழந்தை யைப் போலத்தானே அந்தக் குழந்தையும்!" என்று மதிப்பாகப் பேசிக்கொள்ளுவர் தென்னாடியர். உள்ளுக்குள்ளே, "ஏதோ, ஊரிலே பெற்று, தகப்பன் பெயர் தெரியாத பிள்ளையை அவள் நம்மிடம் தள்ளி விட்டுச் சென்றாள்; பணம் நிரம்பத் தந்தால்தான் இந் தக் குழந்தையை வைத்துக்கொண்டிருப்போம்" என்பர். இவ்வாறு இரண்டாண்டுகள் எமகண்டப் பட்டாள் குழந்தை. அதன் பிறகு, "உன் குழந்தை நாளுக்கு ஒரு சுற்றுப் பெருத்து வருகிறது; 'போடு போடெ'ன்று, போட்டதெல்லாம் தின்று நன்றாகக் கொழுத்திருக்கிறது. 12 பிரான் எந்த மூலை? மாதம் 15 பிரான் அனுப்பினால்தான் பிள்ளையை வைத்துக் கொள்வோம்" என்றெழுதினர் தென்னாடியர். ஏழைத்தாய் மிகவும் இடர்ப்பட்டு 15 பிரான் அனுப்பி வந்தாள்.

கோஸத்திற்கு ஐந்தாண்டு நிரம்பப் போகிறது: "எஞ் சோற்றைத்தின்று நன்றாகக் கொழுத்துப் போனாய்; இனிமேலே நீ வேலை செய்ய வேண்டும்" என்று குழந்தையைக் கடிய வேலையேவினர் தென் னாடியர். 'இந்தா, அவரைப்போய் அழைத்து வா! கடை திறந்திருக்கிறதா, பார்த்துவா! உட்காராதே! இதோ, இந்தக் கூடத்தைப் பெருக்கு; சாப்பிட்ட

இடத்தைச் சுத்தம் செய்; தெருவைப் பெருக்கு; பாத்திரங்களை முத்துப்போலத் தேய்த்துக்கழுவி வை; இந்தா, ஒரு தோண்டி தண்ணீர் சுமந்துவா; இந்தா, இவரோடே சந்தைக்குப் போய் சாமான்களைத் தூக்கிவா; தின்கிறாயே, வேலை செய்யக் கொள்ளையென்ன? சரியாக வேலை செய்யா விட்டால், வைப்பேன் பூசை!" என்று அட்டகாசஞ் செய்வாள் தென்னாடியள்; தென்னாடியனும் மேற்படியே. குழந்தை புலியைக்கண்ட கன்று மாதிரி அஞ்சி நடுங்கி வாய்பேசாது சொன்னதைச்செய்து, வைக்கும் பூசைகளையும் பொறுத்துக்கொண்டிருக்கும். கவலையாலும், அச்சத்தாலும், பசிக்கேற்ற உணவில்லாமலும், கடுமையான வேலையாலும் குழந்தை மனமுடைந்து, உடலிளைத்து எலும்பாய்ப் போயிற்று. "ஏன் குழந்தை இப்படித் துரும்பாய்ப் போனது?" என்று யாரேனும் கேட்டுவிட்டாற் போதும். "சும்மா நொருக்குத் தீனியும் பெருக்குத் தீனியுமாகத் தின்றுகொண்டே யிருக்கிறது; வேலை கிடையாது; நோய் வந்து இளைத்துப் போனது; இதற்குத் தீனிபோட்டு ஆற்றவில்லை" என்று வாயளப்பர் தென்னாடியர். ஆனால் 'வெட வெட'வென்று நடுக்கும் குளிரில் அதிகாலையில் பெரிய துடைப்பம் பிடித்து வாசலைப் பெருக்கும் இந்தக் குழந்தையைப் பார்த்து இரங்காதவரில்லை. அந்த ஊரில் முதலில் எழுந்து தெருப்பெருக்குவது இக் குழந்தையே! இவ்வளவு அதிகாலையில் எழுந்து

தெருப்பெருக்கும் இச்சிறிய மெல்லிய குழந்தைக்கு ஊரார், "வானம்பாடி" என்று பெயரிட்டனர். ஆனால், சோலை வானம்பாடி போலப் பாடவில்லை; அவள் வாழ்வு, கண்ணீர் அருவியானது. மனத்தில் நடுக்கமும், முகத்தில் ஏக்கமும், கண்ணில் வற்றாக் கலக்கமும், உடலில் அழுக்கைக்கொண்டு பாவக் கோலக் காலங்கழித்தாள். தாயார் மோந்ரேலில் (Montreuil) தொழிலில் ஊன்றிக் கொண்டாள். நாளெல்லாம் பாடுபட்டு வயிறு வளர்ப்பவளாதலால், தனது அருமைக் குழந்தையை வந்து பார்க்கக்கூட அவளுக்கு நேரமில்லை. பேய் கையில் அகப்பட்டுச் சேய் இங்கு தவிக்கிறது. இனி ஏழைத் தாயின் நிலைமையைக் காண்போம்:

18. தந்தை மதேலன்

1. மதேலன் தொழில் வளம்

பன்னிரண்டு ஆண்டுகளுக்குப்பின், 1818-ல் ஃபாந்தேன் பிறந்தவூரான மோந்த்ரேலுக்கு வந்து சேர்ந்தாள். இப்போது இவ்வூர் கல்வி, தொழில், வாணிபம், செல்வம் அனைத்திலும் அற்புதமான முன்னேற்றமடைந்திருந்தது. நீண்டகாலமாகவே இவ்வூர் தார், கில், கருப்புசாயக் கட்டிகள், கண்ணாடி வளையல்கள் முதலிய தொழில்களுக்குப் பேர் போனது. அத்தொழில்கள் இப்போது அமோக

மாகப் பெருந்துப் புதியமாதிரி நடக்கின்றன, அதனல் ஊரெல்லாம் உழைப்பும், பிழைப்பும், செழிப்பும் அடைந்துள்ளது; இதற்குக் காரணம் **தந்தை மதேலன்.** 'மதேலன்' என்றல் அந்த ஊரா ரெல்லாம் கையெடுத்துக் கும்பிடுவர்.

ஊரெல்லாம் போற்றும் இந்த மதேலன் யார்? சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, (டிசம்பர் 1815) ஒரு நாள் மாலையில், ஐம்பது வயதுள்ள ஒரு மனிதன் மோந்த்ரேலுக்கு வந்தான். சாதாரண உடை, தோட்பை, ஒரு முண்டுத்தடி—இவற்றுட னேதான் அவன் வந்தான். அச்சமயம் அவ்வூரில் போலீஸ் அதிகாரி வீட்டில் தீப்பிடித்தெரிந்தது. உள்ளே இரண்டு சிறு குழந்தைகள் அகப்பட்டுக் கொண்டன. இந்தப் புதுமனிதன் தீவீட்டிற்குள் பாய்ந்து அக் குழந்தைகளைத் தூக்கி வந்து காப் பாற்றினன். இந்த உதவிக்காகப் போலீஸ் அதிகாரி நன்றி செலுத்தி அவன் ஊர் பேர் கேட்காமல் அன்புடன் அங்கு வசிக்கச் செய்தார். அப்போது அவனது பேச்சு நடத்தையெல்லாம் ஒரு கூலியைப் போலவே யிருந்தன.

அந்த மனிதன் வெகு சுறுசுறுப்பா யிருந்தான். அவன் ஒரு புதிய தொழிலைக் கற்று வந்தான். ஊள்ளூரில் நடந்த கருஞ்சாயம் (Jet), வளையல், கண்ணுடித் தொழில்களை அவன் புதிய முறையில் செய்யத் தொடங்கினன். அதாவது, அரக்கும் கோந்தும் சேர்த்து இவற்றை நயமாகவும் மலிவாக

வும் செய்தான். அவனிடம் இருந்த சிறு தொகையை இத்தொழிலிற் போட்டு வேலை தொடங்கினான். அவன் விளைவித்த சரக்குகள் ஏராளமாக விற்றன. ஸ்பெய்ன், பெர்லின், லண்டனி லிருந்தெல்லாம் அவன் புதுமுறையிற் செய்யும் கருஞ் சாயக் கட்டிகளுக்கு (Jet) ஏராளமான வேண்டுகோள் வந்து குவிந்து, வண்டி வண்டியாக மோந்த்ரேலினின்று வியாபாரிகள் இச்சாயத்தை வாங்கிச் சென்றனர். இத்தொழிலால் இவ்வூர் முதன்மையான வர்த்தக நிலையமானது. முதல் ஆண்டே மாதந்தோறும் ஆயிரக்கணக்கான பவுன்கள் லாபம் வந்தன. இரண்டாவது ஆண்டு இத்தொழிலை நடத்திய புதிய மனிதன் ஏழை யெளியவர்களுக்கு ஏராளமான உழைப்பும் பிழைப்பும் உண்டாக்க இரண்டு மிகப் பெரிய தொழிற்சாலைகளைக் கட்டினான். ஒன்று ஆண்களுக்கு; மற்றொன்று தனியாகப் பெண்களுக்கு: அதில் எந்த ஏழையும், எச்சமயமும் சென்று வேலை கேட்கலாம். வேலை செய்ததும் அத்தொழிற்சாலையிலேயே உணவு கிடைக்கும்; தக்கக் கூலியும் கிடைக்கும். "மனச்சாட்சிக்கு உண்மையாக நடந்துகொள்ளுங்கள்: ஆண்கள் மரியாதையாகவும் அன்புடனும் நடந்துகொள்ளுங்கள்; பெண்கள் கற்பை உயிரெனப் போற்றுங்கள்; பசிக்கு ஒரு தொழிலைச் செய்து பிழையுங்கள்; யாரிடமும் பிச்சை கேட்க வேண்டாம். மனத்தை இறைவனிடம் செலுத்தி அறவழியில் ஒழு

குங்கள்! நாம் நேர்மையாக நடந்தால் இறைவன் நமக்குத் துணை செய்தருளுவான்!" என்று அடிக்கடி புதிய மனிதன் தன்னிடம் வேலை செய்யும் தொழிலாளிகளுக்கு நன்மொழி கூறுவான். ஆணும் பெண்ணும் தனித்தனியாகப் பிரிந்து தொழில் செய்ய இம் மனிதன் ஏற்பாடு செய்ததால், தொழிலாளிகளிடையே விபசாரக் குற்றம் ஏற்பட இடமில்லாதிருந்தது. பெண்கள் தக்க பாதுகாப்பும் போதுமான கூலியும் பெற்றனர். இல்லறத்தார் கற்பு நெறியுடன் எளிய வாழ்வும் கடவுளன்பும் கொள்ளும்படி, இம் மனிதன் வற்புறுத்தினன். யாராயினும் பெண்களை பலாத்காரஞ் செய்தாலும், எந்தப் பெண்ணாவது விபசாரம் செய்தாலும், இக் கிழவன் பொறுக்க மாட்டான். இவனது கட்டுப்பாட்டால் மோந்த்ரேலில் விபசாரக் குற்றங்கள் மிகவும் குறைந்தன. முன்னே ஊரில் வறுமையும், மடமையும், சூதும், கொள்ளையும் மலிந்திருந்தன. ஏழைகள் உண்ணச் சோறின்றி, இருக்கக் குடிலின்றி வருந்தினர். இப்போதோ எல்லோருக்கும் நல்வேலை; வறுமையில்லை; குடும்பத்திற் கேற்ற சிறு சிறு வீடுகள் உள்ளன; அவரவர் ஒழுங்காகப் பிழைக்கின்றனர்; முன்னே ஏங்கிய முகம் இன்று புன்னகைக்கிறது.

2. மதேலன் ஒழுக்கமும் அறவினையும்

இவ்வாறு, ஒரு ஊரைச் சுவர்க்கலோகமாக்கிய இந்தப் புதியன் யார்? வறுமை போக்கி வளமை

யாக்கிய இந்த மனிதன் யார்? இருளை நீக்கி ஒளியைப் பெருக்கிய இந்தப் பெரியோன் யார்? இடர் தவிர்த்து இன்பம் பரப்பிய இந்த இனியோன் யார்? அழிநடை போக்கி அறவழி காட்டும் இந்த அறவோன் யார்? இவனே மதேலன்! ஏழை யெளியவர்கள் இவனைத் தமது தந்தை யென்று கொண்டாடினர். ஆதலால், ஊரெங்கும் இவனைத் "தந்தை மதேலன்" (Father Madeleine) என்று அருமையாக அழைப்பர். இதைத் தவிர இவனது பிறப்பு வளப்பம், ஊர் உறவு, முன் வரலாறுகள் யாருக்கும் தெரியா; நமக்கும் பின்னால்தான் தெரியும். இப்போது நாம் எவ்வளவு சிந்தித்தாலும், சோதித்தாலும் தந்தை மதேலன் சொந்த வரலாறு நமக்குப் புலனாகாது.

இன்னும் கேளுங்கள்: மதேலன் பிரமசாரி; அவனுக்கு ஒரே மனைவிதான்; அவள் யார்? பரோபகாரமே அவன் மனைவி! ஒப்புரவில் வரும் இன்பமே அவன் பெற்ற மகன்! மற்றப்படி ஒரு பெண்ணைக் காதலித்து இல்லறம் நடத்த வேண்டுமென்ற எண்ணமே மதேலனுக்கில்லை. மணம் புரிந்து மக்களைப் பெறாமலே அவனுக்குத் தந்தைப் பட்டம் கிடைத்தது விந்தை! அவன் தந்தைதான்; யாருக்கு? ஏழை யெளியவர்களுக்கு; அவனுக்குத் தாராளமான அன்புப் புதல்வர் உண்டு; யார்? ஏழை யெளியவர், தொழிலாளர்! ஊரில் சோம்பேறியாக ஒருவன் திரிந்தால், மதேலன் அவனைக் கூப்பிடுவான்:

"ஐய, ஏன் காலத்தை வீணுக்குகிருய்? இந்தா ஒரு தொழில் தருகிறேன்; செய்; பிழைக்கலாம்; ஒழுங்காக வாழலாம்" என்று சொல்லி அச்சோம் பேறியைச் சுறுசுறுப்பான தொழிலாளியாக்கு வான். ஒரு பிச்சைக்காரனைக் கண்டால், "சகோ தரா, மானமிழந்து பிறரிடம் கையேந்திப் பிழைப் பானேன்? உனக்கு உடலில் வலுவிருக்கிறது; வா; ஒரு வேலை செய்: சுயேச்சையாக உண்டு பிழைக்க லாம்" என்று அவனைத் தொழிலாளியாக்குவான். "நேர்மையாயிருங்கள். மனச் சாட்சியை மதித் தொழுகுங்கள்; பெண்கள் கற்புடனிருங்கள்; ஆண் கள் உண்மையாயிருங்கள்; எங்குமுள்ள இறைவனை நினையுங்கள்!" என்று எல்லாத் தொழிலாளிகளுக் கும் மனத்திற் படும்படி இனிது கூறுவான் மதே லன். மதேலன் பெரிய முதலாளியாயினும் தன் னிடம் வேலை செய்யும் ஒரு ஏழைத் தொழிலாளி போலவே வாழ்ந்து வந்தான். அவன் தனக்காக வாழவில்லை; ஏழைகளுக்காகவே வாழ்ந்தான். இரக்கமே அவன் வடிவெடுத்து வந்தது. வந்த மூன் ருண்டுகளில் சுமார் லட்ச ரூபாய் ஏழைகளுக் காகவே அவன் செலவிட்டான்: ஊரிலுள்ள வைத் தியசாலை மிகவும் சிறிதாயிருந்தது; நோயாளருக் குச் சரியான வசதியில்லை. அதை விசாலமாக்கிக் கூடப் பத்து நோயாளர் தங்கிச் சிகிச்சை பெற ஏற்றதாகச் செய்தான். ஏழைத் தொழிலாளர் வசிக்கும் தெருக்களிலேயே தானும் சிறுகக் கட்டி

ஈகை பெருக வாழ்ந்தான். அங்கு, ஒரு இடிந்து போன பழைய கட்டிடத்தில் குழந்தைகள் கஷ்டப் பட்டிருந்து படித்தனர். மதேலன் இரண்டு பக்காக் கட்டடங்கள் கட்டினான். ஒன்றை ஆண் குழந்தைகள் படிக்கவும், மற்றொன்றைத் தனியாகப் பெண் குழந்தைகள் படிக்கவும் கொடுத்தான். உபாத்தியாயர்களை அதிகமாக்கி, அவர்கள் சம்பளத்தையும் இரண்டு பங்காக்கினான். குழந்தைகளின் கல்விச் செலவை யெல்லாம் தானே பொறுத்துக் கொண்டான். மதேலனை வியந்து போற்றினர் பெற்றோரும், குழந்தைகளும். மதேலத் தாத்தாவைக் கண்டால் சிறு குழந்தைகளுக்குப் பரமானந்தம்! எந்தக் குழந்தை மதேலனிடம் சென்றாலும், கை நிறைய பட்சணமும் புன் சிரிப்புமாகவே வரும். குழந்தைகள் பைபிளை நன்றாகக் கற்கச் செய்தான் மதேலன். பள்ளிக்கூட உபாத்தியாயர்களுக்கு வேண்டிய சௌகரியங்களை யெல்லாம் செய்து கொடுத்தான்; "பிள்ளை வளர்க்கும் தாய்ச்சியும், கல்வியளிக்கும் ஆசானுமே நாட்டின் முதன்மையான ஊழியர்" என்பான். மற்றொரு பெரிய தருமம் கேளுங்கள்: தனது தொழிலாளிகளை 55 வயதிற்குமேல் வேலை செய்ய விடுவதில்லை. ஒரு பெரிய தீனர் விடுதி கட்டினான்; அதில், வயது சென்ற கிழவர், கைகால் ஊனமான ஏழைகள், பரிதாபப் பட்டவர்கள் அனைவருக்கும் தகுந்த பாதுகாப்புகளைத் தந்து காப்பாற்றினான். அக்காலம் பிரான்

விலேயே இந்த மாதிரி தீனர் விடுதி கிடையாது. அவனது தொழிற்சாலை பரம ஏழைகளைக் கை தூக்கி விட்டது. தொழிலாளருக்கெல்லாம் நல்ல விடமைத்துக்கொடுத்து அவர்கள் உடல் நலத்தைக் கவனிக்க ஒரு பெரிய வைத்தியசாலையை அமைத்தான். அவர்கள் கவலை தீர்த்தான். இத்தகைய தருமவானை, பரோபகாரியை, ஏழைப்பங்காளனைத் 'தந்தை' என்றழைப்பதுடன் 'தாய்' என்பதும் பொருந்தும். தந்தை மதேலன் தினந்தவறாமல் பைபிள் படித்துருகுவான்! பூஷர் (Fouche) என்ற பாதிரியாரிடம் அத்யாத்ம விஷயங்களைக் கேட்பான்; ஞாயிறு தவறாமல் மாதா கோயிலுக்குச் சென்று மதபோதனைகளைக் கருத்துடன் கேட்பான், தொழுவான். கோவிலில் ஏழைகளுடனே உட்காருவான். மதேலன் பக்திக்காந்தம் சுற்றியிருப்பவர்களுக்கும் பரவியது. அவனைப்பார்த்து, சில நாஸ்திகர் கூட ஆஸ்திகராயினர்.

3. பொறுமைக்காரர்

இவ்வாறு, மோந்த்ரேலின் இரக்ஷகனாக விளங்கிய தந்தை மதேலன் அன்பையும், தூய வாழ்வையும், தொழில் வளர்ச்சியையும், பொதுநலத்தையும், ஏழைகளுக்கு அவன் செய்யும் அளவற்ற தான தருமங்களையும் பல பெரியார் மூலம் அறிந்த பிரெஞ்சு மன்னன் லூயி XVIII, அவனுக்கு நகரத் தலைவர் (மேயர்) பதவியும், "பொதுநல வீரன்" என்ற பட்ட

ரூபாய் அளித்து, அப்பட்டணத்தைக் குறிக்கும் ஒரு வெள்ளிச் சிலுவையும் அனுப்பினான்.

எவ்வளவு நல்லவனையும் சில பொறாமைப் பித்தர் தூற்றுதொழியார்! “தந்தை மெகேலனா? யாருக்குத் தந்தை? ஏதோ இனந்தெரியாத பேர் வழி; குருட்டதிட்டம் அடித்தது; பணத்தாசை பிடித்தவன் என்றுமட்டுமா? பண்ணி, ஏராளமாகச் சம்பாதித்துவிட்டான். தனக்குப் புகழ்வர வேண்டுமோ, இல்லையா? அதற்காக, ‘ஏழைகளுக்கு உதவு கிறேன்: பள்ளிக்கூடம் கட்டுகிறேன்; ஆஸ்பத்திரி வைக்கிறேன்’ என்று நாடகமாடுகிறான்: தன்னை மகா பக்தனென்று பிறர் சொல்லவேண்டுமென்று சொல்லுவதற்குப் போய்க் கண்ணை மூடிக்கொண்டு, சற்று உட்காருகிறான். உருத்ராட்சப் பூனை! நான் சொன்னது பொய்யானால், இதோ பாருங்கள்! அதிகாரி களைக் காக்காய்பிடித்து, அரசாங்கத்திலிருந்து பொய்ச் பன்னைச்சொல்லி, பெயர் பதவியும் எப்படியோ சம்பாதித்திருக்கிறான். எல்லாம் போலி, வேஷம், மோசம்—பாருங்களேன்!” என்று சில காமாலைக் கண்ணர் மெகேலனைத் தூற்றினர். இத் தூற்றல்களை மெகேலன் பாராட்டாமல் கடவுள் சாட்சியாகத் தன் பணிகளைச் செய்து வந்தான்.

‘பட்டம் பதவி பெறவே இவ்வாறு வேஷம் போடுகிறான்’ என்றவர்களெல்லாம் மூக்கில் விரல் வைக்கும்படி ஒரு காரியம் செய்தான் மெகேலன்: “யான் எளியவாழ்வில் தாழ்மையுடன் இருந்து

எனக்கியன்ற பணிகளை ஏழை எளியவருக்குச் செய்கிறேன்; அதுவும் ஏசுநாதர் பெயரால் செய்கிறேன். அவனிச்சை தரும் செல்வத்தை அவன் மைந்தருக்குக் கரும் ஒரு ஊழியன், நான். எனக்குப் பட்டமும், நகரத்தலைமையும் வேண்டா. நான் எளியனுள் எளியவனுகவே இருக்க விரும்புகிறேன்" என்று அரசாங்கத்திற்கு அறிவித்து, பட்டத்தை வெள்ளிச் சிலுவையுடன் திருப்பியனுப்பிவிட்டான்.

இப்போதும் பொறாமைக்காரர்கள் விடவில்லை: "பிழைக்கத் தெரியாத படசாம்பிராணி! படிப்புச் சுன்னம் போலிருக்கிறது; லௌகிகம் தெரியவில்லை; உலக நடை தெரியவில்லை. இவருக்கு மேயர் பதவி கொடுத்தால் ஊர் வாழ்ந்துபோகும்" என்று வாக்கைத் துருத்தினர். ஊரிலுள்ள ஏழைகளும் பெரியார்களும், 'தந்தை மதேலனே நகரத் தலைவனுக இருக்கவேண்டு' மென்று வற்புறுத்தினர்.

மதேலன் வந்து 5 ஆண்டுகள் ஆயின. அவனல் ஊர் அடைந்துள்ள செழிப்பைப் பார்த்து 1820-ல் பிரெஞ்சு மன்னன் மீண்டும் மேயர் பதவியை ஏற்புக் கொள்ளச் சொன்னன். இத்தடவையும் மதேலன் மறுத்தான்: "பதவி வேண்டா. நான் எளியவனுக இருந்தே ஏழைகளுக்குத் தொண்டு செய்வேன்" என்றன். 'அதெல்லாம் முடியாது. நாங்களே எமது தலைவராயிருக்கவேண்டு' மென்று ஊர் முழுதும திரண்டுவந்து வற்புறுத்தவே, மதே

லன் சம்மதிக்க நேர்ந்தது. தந்தை மதேலன், மேயர் மதேலனுனான்.

---

19. மேயர் மதேலன்

பெரிய மந்திரி பதவி வந்தும், நமது காங்கிரஸ் தலைவர் எவ்வளவு எளிய வாழ்வு வாழ்கின்றனர்! எவ்வளவு சுறுசுறுப்பாகச் சுயநலமற்றுப் பொது நலமே மூச்சாக வாழுகின்றனர்! அவ்வாறே, மேயர் மதேலனும் வாழ்ந்தான்; தான் வந்தபோது எப்படி எளிய நடை கொண்டிருந்தானோ, அப்படியே செல்வமும் பட்டம் பதவியும் வந்த பின்பும் இருந்தான். அவனுக்கு 55 வயதாயிற்று. தலை நரைத்துப் போயிற்று என்றாலும், மதேலன் பலவானா யிருந்தான். இன்னும் தன் கையால் ஏதாயினும் தொழில் செய்வான். அவன் விழிகள் உள்ளே கடவுளையும், வெளியே ஊரிலுள்ள மக்கள் குறைகளையும் கவனிக்கும். ஒரு பெரிய தொப்பி, கழுத்து முதல் கால்மட்டும் நீண்ட ஒரு கஞ்சுகி (Coat), இவையே அவன் உடை. ஏழை யெளியவருக்குத் தர, சட்டைப் பையில் எப்போதும் கொஞ்சம் பணம் வைத்துக்கொண்டே வெளியிற் செல்வான். மேயர் உத்தியோகத்திற்குரிய அலுவல்களைச் சுறுசுறுப்பாக முடித்ததும், நேராக வீட்டிற்கு வந்து தனித்திருந்து, நன்னூல்களைப் படிப்பான், சிந்திப்

பான். அவனிடம் பேச்சு அதிகமாயிராது. அவன் எப்போதும் சிந்தனையில் ஆழ்ந்திருப்பான்; யாரையும் வணக்கமுடன் வரவேற்பான்; அவர்கள் மனமறிவான்; வேண்டியதை, "இந்தாருங்கள்" என்று தருவான்; புன்னகை புரிவான்; தனியாகவே இருக்க விரும்புவான்; ஒரு நல்ல நூலை முன்னே வைத்துப் படித்துக் கொண்டே சாப்பிடுவான். அவன் நல்ல நூல்களைக் கற்று, நாளுக்கு நாள் அறிவிற் பெருகினன். அவன் தனியாக வயல்களில் உலாவுவான்; அப்போது கைத் துப்பாக்கி ஒன்று கொண்டு போவான். அவன் குறி தவருது சுடுவதில் ஒப்பற்றவன்; எனினும், பட்சிகளையும் சாதுவான விலங்குகளையும் சுடமாட்டான்; அவற்றிற்குக் கனிகளும் பருப்பும் அளிப்பான்; ஊருக்குத் தீமை செய்யும் கொடிய விலங்குகளைச் சுடுவான். அவன் வைத்த குறி தப்பாது. அவன் மகா பலசாலி; நொடியில் விழுந்த வண்டிகளைத் தூக்கி நல்ல பாதையிற் சேர்ப்பான்; இடக்குப் பண்ணிப் படுத்துக்கொள்ளும் குதிரைகளைக் கையால் தூக்கி எழுப்புவான்; கட்டுக் கடங்காது ஓடும் முரட்டுக் காளைகளைக் கொம்பைப் பிடித்து, நிறுத்தி, அடக்குவான். அவன் ஒரு கிராமத்திற்கு வந்தால், ஏழைகள் பாடு கொண்டாட்டந்தான். அவன் அவர்கள் குடில்களுக்குச் சென்று, "சௌக்கியமா? சாப்பாட்டிற்குத் தட்டில்லாமல் இருக்கிறதா?" என்று கருத்துடன் விசாரிப்பான். "என், மகளுக்குச்

கலியாணம் பண்ண வேண்டும்; பணமில்லை” என்றால், உடனே 200 பிராங்க் பையிலிருந்து எடுத்துத் தந்து, “இதை வைத்துக்கொண்டு, சிக்கனமாகக் கலியாணத்தை நடத்து; கவலைப்படாதே” என்று புன்னகைசெய்து செல்வான். தாத்தாவைச் சூழும்பேரப் பிள்ளைகள் போலச் சிறு குழந்தைகள் மதேலனைச் சூழ்வர். மதேலத் தாத்தா காசு தருவார்; பொம்மை வாங்கித் தருவார். குழந்தைகள், “இதோ, தாத்தா கொடுத்தார்” என்று அவன் கொடுத்த பொருள்களை வீட்டில் காட்டும். விவசாயிகளுக்குப் பயிர்த் தொழில் நுட்பங்களை மதேலன் சொல்லுவான். “இப்பயிருக்கு இன்ன உரம் போட வேண்டும்; பூச்சி பிடிக்காது; பயிரை இப்படிப் பாதுகாக்கவேண்டும்” என்றெல்லாம் பல பயனுள்ள விவசாய நுட்பங்களை அவன் சொல்லுவான்: எதையும் வீணாக்காது, தக்க பயனுக்கும் வழியைக் காட்டுவான்: மாதா கோவிலில் சாவு மணி யடிக்கக் கேட்டால், உடனே கருப்புடை தரித்துச் சென்று துக்கங் கேட்பான்: மக்களை இழந்தவர்க்கு ஆறுதல் சொல்லுவான்: பிரேதச் சடங்குகளிற் கலந்து கொள்வான். உணவிற்கில்லாது எந்த வீட்டிலாயினும் வருந்தினால், மதேலன் ஓசைப்படாமல் உள்ளே நுழைந்து, குறிப்பான இடத்தில் பணம் வைத்துத் திரும்புவான். வீட்டார் திகைப்புடன், “எந்த மகராசன் புண்ணியம் இது!” என்று வியந்து வாழ்த்திக்கொண்டே பணத்தைப் பயன்படுத்துவர்.

சிலருக்கு மதேலன் மந்திர வாதி என்ற எண்ணம் உண்டு. மதேலன் வீட்டில் ஒரு இரகசியமான தனியறை இருந்தது. அதில் அவன் தனியாயிருந்து பைபிள் படிப்பான்; தொழுவான். 'அதில் தான் ஏதோ குட்டிச் சாத்தான் வேலை நடக்கிறது. அதனால் தான் இந்த மனிதன் பணக்காரனானன்' என்று சிலரிடையே பேச்சு உலாவியது. ஒரு நாள் சில நண்பர் வந்து, அந்த அறையைக் காட்டவேண்டுமென்று கேட்டனர். 'தாராளமாகப் பாருங்கள்' என்று அறையைத் திறந்தான் மதேலன். அங்கே குறளியுமில்லை; குட்டிச் சாத்தானுமில்லை; வெள்ளியினால் ஆன இரண்டு மெழுகு திரி விளக்குகளும் ஒரு பைபிளும் இருந்தன. ஆனால், 'மதேலன் ஒரு பெருந்தொகையை லஃபித்துப்பாங்கில் (Laffitte) போட்டு வைத்திருக்கிறான்' என்று ஜனங்கள் பேசிக்கொண்டது மட்டும் உண்மை.

சாது மிரியல் காலமானார்

1821-ல் மதேலன் திடுக்கிடும் படியாக ஒரு பத்திரிகைச் செய்தி வந்தது. "திங்கு நகரில் மகா பரோபகாரியாக விளங்கிய பெரியார் சாது மிரியல் தமது 82-வது வயதிற் காலஞ்சென்றார். இறுதிக் காலத்தில் அவருக்குக் கண் பார்வை மங்கியது. அதனால் புறத்தே பார்க்கும் பார்வையை உள்ளே திருப்பி, அவர் உள்ளத்திலுள்ள இறைவனையே தியானித்திருந்தார்; தங்கை பாப்திஸ்தை அண்ணா

னுக்கு அன்புடன் தொண்டு செய்தாள். சாது இறுதி மட்டும் உடலுறுதியுடன் மேன்மேலும் அதிகமான பரோபகாரங்களைச் செய்து கொண்டிருந்து, அனயாசமாக உடற் சட்டையை உதறிச் சென்றார்.

இச் செய்தியை உடனே தனது நகரப் பத்திரிகையில் பிரசுரித்து, மதேலன் துக்கங் காத்தான்; கறுப்புடை பணிந்தான். இவனது செய்கையைக் கண்டவர் வியந்தனர்; சாது மிரியலுக்கும் மதேல னுக்கும் ஏதோ உறவுள்ளது என்று கருதினர். "மதேலரே, தாங்கள் மிரியலுக்கு மச்சான் முறையோ?" என்று ஒரு பெண்மணி கேட்டே தீர்த்தாள். "இல்லை" என்றான் மதேலன். "ஆயின், தாங்கள் இன்று கறுப்புடையணிந்து துக்கம் காப்பானேன்?" என்றாள் அப் பெண்மணி. "சிறுவயதில் நான் அவரது குடும்பத்தில் சேவகனயிருந்தேன்" என்றான் மதேலன். மதேலனது செய்கையில் மற்றொரு விநோதம் என்னவென்றால், சவாய் பிரதேசத்திலிருந்து (Savoyard) வரும் ஒவ்வொரு சிறுவனையும் அவன் கூப்பிட்டு, 'உன் பெயரென்ன?' என்று கேட்டு அவனுக்குப் பணம் தந்தனுப்புவான்.

நாளாக நாளாக, மதேலனது ஈகையும், கருணையும், எளிய தூய வாழ்வும் ஊரார் உள்ளத்தைக் கவர்ந்தன. 'போலி, பாசாங்கு' என்று கேலி செய்த பகைவர்கூட அடங்கி, மதேலனை நன்கு மதித்தனர். மதேலன் செய்யும் தன்னலமற்ற தருமம் சுற்றுப்புற

மெங்கும் பழமொழி பெற்று விளங்கியது. திங்கு நகரத்தில் புகழ் பெற்ற சாது மிரியல் போலவே, மோந்த்ரேல் நகரத்தில் மதேலன் எல்லார் அன்பிற்கும் உரியவனுக விளங்கினுன். அவன் சொல் வேத வாக்கானது; யாராயினும் இருவருக்குப் பகை விவகாரம் நேர்ந்தால், இருவரையும் ராஜியாக்குவான் மதேலன்; குடும்பக் கலகங்களைத் தீர்த்து வீடுகளில் ஒற்றுமையுண்டாக்குவான்; ஏழைகள் நீதி மன்றங்களுக்குப் போகாமல் விவகாரங்களைத் தானே தீர்ப்பான். அவன் சொல்லிற்கு இரண்டில்லை. அவனிடம் எல்லாரும் அவ்வளவு மதிப்பும், நம்பிக்கையும் கொண்டிருந்தனர்.

---

17. பகைவன் ஜாவர்

ஈனம், வஞ்சம், மூர்க்கம், பொருமை, கொடுமை ஆகிய இவையே, நாய், நரி, புலி, பாம்பு, சிங்கம் முதலிய விலங்குகளாக உலவுகின்றன. மனிதனிடத்தும் இந்த விலங்குகள் கூட்டம் கூட்டமாக நிறைந்து வளருகின்றன. மனித நரி, மனித நாய், மனித வேங்கை, மனிதப் பாம்பு, மனிதத் தேள், மனித முதலை, மனிதப் பன்றிகளும் உள்ளன. மனமே மனிதன். சற்றும் இரக்கமில்லாது பிறரை அழிக்கவே மனங்கொண்ட ஒரு மனிதனை என்

னென்பது? அவன் மனிதப் பேய். அத்தகைய பேயொன்று மோந்த்ரேலில் இருந்தது. சப்பை மூக்கு, குகை போன்ற மூக்குத் தொளை, வாள் போன்ற கோரப் பற்கள், வெளியில் தெரியும் படி அகன்ற உதடுகள்; காண்டா மிருகம் மாதிரி கன்னத்தில் மடிப்பு, பயங்கரமான நெருப்பு விழிகள், ஒட்டை சிவிங்கிபோல உயரம்; இவைகளோடு நீண்ட சட்டையணிந்து, பெரிய தொப்பி தரித்து, யாரையும் மதிக்காத செருக்கு நடை நடந்து வரும் அந்த மனிதன் யார்? அவனே ஜாவர் (Javert). அவனைப் பார்த்தாலே புலி, வேட்டை நாய், நரி, கரு நாகம் ஆகிய எல்லாம் சேர்ந்தே இந்த வடிவானது என்பது தோன்றும். அவன் சிரித்தாலும் புலிபோ லிருக்கும். சினத்தையே இரண்டு நெருப்புருண்டைக ளாகத் திரட்டி வைத்தாற் போன்றன அவன் விழி கள். புலியிடம் சிக்கிய மானும், ஜாவரிடம் சிக்கிய ஆளும் தப்புவதில்லை.

யார் அந்த ஜாவர்? ஜாவர் ஒரு சிறையில் பிறந்தான். அவன் தந்தை சிறை காத்தான்; தாய் குறி சொல்லிப் பிழைத்தாள். ஜாவர் இரக்கமற்ற முரட்டியல்பு கொண்ட வேட்டை நாய் போல வளர்ந் தான். அவனுடைய இயல்பிற் கேற்றபடி குற்றவாளி களைக் காவல் புரியும் வேலை அவனுக்குக் கிடைத்தது. அவனது கல் நெஞ்சம் நாளுக்கு நாள் ஆட்களை நசுக்கும் இரும்பானது. அவன் சர்க்கார் உத்திரவு களைக் கண்டிப்பாக நிறைவேற்றுவான். “இந்தக்

கைதியைப் பட்டினி போட்டுக் கொல்லு; இவனை இரத்தம் கக்கும்படி சவுக்கினால் விளாசு; இவனிடம் நாள் முழுதும் வேலை வாங்கு; இவனை வண்டியிழுக்கச் சொல்லு; இவன் கைகால்களைச் சங்கிலிகளால் பலமாகப் பூட்டு'' என்றெல்லாம் உத்திரவு வந்தால், வெகு ஊக்கத்துடன் ஒன்றிற்குப் பத்தாகச் செய்து முடிப்பான் ஜாவர். இத்தகைய கல் நெஞ்சனுக்குப் பொலீஸ் இலாகாவில் நல்ல பெயர் கிடைத்தது விந்தையன்று. ஜாவர் படிப்படியாக உயர்ந்து 40-வது வயதில் பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஆனான். அவன் துலோன் சிறையிலும் சில காலம் வேலை பார்த்தான்.

இந்த ஆண்டுதான் ஜாவர் மோந்த்ரேலுக்குப் பொலீஸ் அதிகாரியாக வந்து சேர்ந்தான். இந்த மனிதனே நமது மதேலனுக்குச் சனியனானான். மதேலன் தெருவில் போகும்போதும் வரும்போதும் ஜாவர் அவனைப் புலிபோலப் பார்ப்பான்; அவன் பின்னே மறைந்து சென்று வேவு பார்ப்பான். ஊரெல்லாம் மதேலனைக் கையெடுத்துக் கும்பிடும். ஜாவர்மட்டும் நகரத் தலைவனான மதேலனைத் துரும்பு மாதிரி மதித்துச் செருக்குடன் நிமிர்ந்து நிற்பான்; பின்னால் நாக்கைத் துருத்துவான். திடீரென்று ஜாவர், மதேலன் முன்னே தோன்றுவான்; அவனைக் கூர்ந்து பார்த்து மறைவான்; 'இந்த மனிதனை நான் பார்த்திருக்கிறேன்; ஆம், ஆம், அவன்தான் இவன்; இவனா நகரத் தலைவன்? இருக்கட்டும்....' என்று

ஜாவர் :—அவன் துலோன் சிறையிலிருந்த ஜன்மக் கைதி.

இவ்வாறு வெடுக்கென்று பேசி, மதேலனையே முறைத்துப் பார்த்தான் ஜாவர். போஷல்வான் மூச்சுத் திணறினான்; உடனே மதேலன், "பயப்படாதே, போஷல்வான்; ஏதோ கடவுள் பெயரால் எனது முதுகைத் தந்து வண்டியைத் தூக்கி விடுகிறேன்" என்று சக்கரத்தின் கீழே படுத்தான்; மூன்று தடவை முக்கி முயன்று, வண்டியைக் கிளப்பித் தன் முதுகின் மேல் சக்கரத்தை வைத்துக் கொண்டான். எல்லாரும், "தந்தையே, தந்தையே, அபாயம்! அபாயம்!" என்றலறினர். போஷல்வான் கூட, "தந்தை மதேலன், தாங்கள் கோடிப்பேருக்கு உதவி செய்யும் புண்ணியவான்; எனக்காக உயிர் தரவேண்டா; இந்த அற்பக் கிழவன் இறந்தாற் பரவாயில்லை" என்று தடுத்தான். மதேலன் விடாப்பிடியாகச் சக்கரத்தைத் தாங்கி நகர்த்தி, போஷல்வானை அப்புறம் புரட்டி விட்டுக் காப்பாற்றியே தீர்த்தான்.

ஊரரெல்லாம் மதேலனைப் போற்றினர். ஜாவர் மட்டும், "சரியான ஜன்மக் கைதி" என்றான்.

போஷல்வான் தொடையில் வலுத்த காயம் ஏற்பட்டது. மதேலன் தொழிலாளருக்காக ஒரு வைத்திய சாலை ஏற்படுத்தி யிருக்கிறானல்லவா? அங்கே உத்தமமான இரண்டு முதிய பெண்டிர் நோயாளிகளுக்கு அன்புடன் சிகிச்சை செய்தனர்.

மதேலன் ஃபோஷல்வானை அங்குச் சேர்த்துக் காயத்தைத் தீர்த்தான்; மறு நாளே 1000 பிரான்க் அவனுக்கு அனுப்பி, “தாங்கள் இந்தத் தொகைக்கு ஒரு நல்ல குதிரையும் வண்டியும் புதிதாக வாங்கிக் கொள்ளுங்கள்” என்று சீட்டொன்றெழுதி வைத்தான். ஃபோஷல்வான் பழைய பகையை முற்றும் மறந்தான்; “தாங்கள் எனது ரக்ஷகர்” என்று மதேலனைப் பணிந்து நன்றி செலுத்தினான். ஃபோஷல்வானுக்கு முழங்கால் வழங்காமற் போயிற்று. வயதும் ஆயிற்று. ஆதலால் மதேலன் சிபார்சு செய்து, பாரிஸில் உள்ள ஒரு கன்னியர் மடத்தில் தோட்ட வேலையில், ஃபோஷல்வானை அமர்த்தினான். இந்த நன்றியுள்ள கிழவன் மதேலனுக்கு எவ்வாறு அரிய துணை செய்தானென்பதைப் பின்னுல் காண்போம்.

---

19. வறுமையில் வேசியானுள்

மதேலன் தொழிற்சாலையில் ஃபாந்தேன் என்பவள் வேலை பார்த்தாள். அவளுக்குச் சரியான கூலி கிடைத்தது; இருக்கச் சௌகரியமான இடமும் கிடைத்தது. அவள் போதிய துணிமணிகளும் வாங்கிக்கொண்டாள். கவலையற்ற வாழ்வினுல் அவளது இளமை, காலைத் தாமரையைப்போல மீண்டும் எழில் பெற்று விளங்கியது. ஆனுல் அவள் தன்னை ஒரு கன்னியென்றே சொல்லிக் கொண்டாள்; தென்னுடி

ஜாவர் :—அவன் தூலோன் சிறையிலிருந்த ஜன்மக் கைதி.

இவ்வாறு வெடுக்கென்று பேசி, மதேலனையே முறைத்துப் பார்த்தான் ஜாவர். போஷல்வான் மூச்சுத் திணறினான்; உடனே மதேலன், "பயப்படாதே, போஷல்வான்; ஏதோ கடவுள் பெயரால் எனது முதுகைத் தந்து வண்டியைத் தூக்கி விடுகிறேன்" என்று சக்கரத்தின் கீழே படுத்தான்; மூன்று தடவை முக்கி முயன்று, வண்டியைக் கிளப்பித் தன் முதுகின் மேல் சக்கரத்தை வைத்துக் கொண்டான். எல்லோரும், "தந்தையே, தந்தையே, அபாயம்! அபாயம்!" என்றலறினர். போஷல்வான் கூட, "தந்தை மதேலன், தாங்கள் கோடிப் பேருக்கு உதவி செய்யும் புண்ணியவான்; எனக்காக உயிர்தரவேண்டா; இந்த அற்பக் கிழவன் இறந்தாற் பரவாயில்லை" என்று தடுத்தான். மதேலன் விடாப்பிடியாகச் சக்கரத்தைத் தாங்கி நகர்த்தி, போஷல்வானை அப்புறம் புரட்டி விட்டுக் காப்பாற்றியே தீர்த்தான்.

ஊராரெல்லாம் மதேலனைப் போற்றினர். ஜாவர் மட்டும், "சரியான ஜன்மக் கைதி" என்றான்.

போஷல்வான் தொடையில் வலுத்த காயம் ஏற்பட்டது. மதேலன் தொழிலாளருக்காக ஒரு வைத்திய சாலை ஏற்படுத்தியிருக்கிறானல்லவா? அங்கே உத்தமமான இரண்டு முதிய பெண்டிர் நோயாளிகளுக்கு அன்புடன் சிகிச்சை செய்தனர்.

மதேலன் ஃபோஷல்வானை அங்குச் சேர்த்துக் காயத்தைத் தீர்த்தான்; மறு நாளே 1000 பிரான்க் அவனுக்கு அனுப்பி, "தாங்கள் இந்தத் தொகைக்கு ஒரு நல்ல குதிரையும் வண்டியும் புதிதாக வாங்கிக் கொள்ளுங்கள்" என்று சீட்டொன்றெழுதி வைத்தான். ஃபோஷல்வான் பழைய பகையை முற்றும் மறந்தான்; "தாங்கள் எனது ரக்ஷகர்" என்று மதேலனைப் பணிந்து நன்றி செலுத்தினுன். ஃபோஷல்வானுக்கு முழங்கால் வழங்காமற் போயிற்று. வயதும் ஆயிற்று. ஆதலால் மதேலன் சிபார்சு செய்து, பாரிஸில் உள்ள ஒரு கன்னியர் மடத்தில் தோட்ட வேலையில், ஃபோஷல்வானை அமர்த்தினுன். இந்த நன்றியுள்ள கிழவன் மதேலனுக்கு எவ்வாறு அரிய துணை செய்தானென்பதைப் பின்னுல் காண்போம்.

---

19. வறுமையில் வேசியானுள்

மதேலன் தொழிற்சாலையில் ஃபாந்தேன் என்பவள் வேலை பார்த்தாள். அவளுக்குச் சரியான கூலி கிடைத்தது; இருக்கச் சௌகரியமான இடமும் கிடைத்தது. அவள் போதிய துணிமணிகளும் வாங்கிக்கொண்டாள். கவலையற்ற வாழ்விஞல் அவளது இளமை, காலைத் தாமரையைப்போல மீண்டும் எழில் பெற்று விளங்கியது. ஆனுல் அவள் தன்னை ஒரு கன்னியென்றே சொல்லிக் கொண்டாள்; தென்னுடி

யருக்கு ஒழுங்காகப் பணம் அனுப்பி வந்தாள். அவளுக்கு எழுதப் படிக்கத் தெரியாது. ஆதலால் பிறரைக்கொண்டு கோஸத்திற்கு அடிக்கடி கடிதம் எழுதிப் போட்டாள்.

உலகில் சில வம்பர்கள் உண்டு; அவர்களுக்குப் பிறர் உண்டுடுத்து நன்றாயிருந்தால் பொறுமை உண்டாகும். அந்த மாதிரி வம்பிகள் ஃபாந்தேன் வேலை செய்யும் தொழிற் சாலையில் ஏராளமா யிருந்தனர். தந்தை மதேலன், பெண்களுக்காக ஏற்பட்ட தொழிற்சாலைக்கு அரிதாகவே வருவான்; அத்தொழிற்சாலையின் மேற் பார்வைக்காக விக்தூர்னே என்னும் ஒரு மாதை நியமித்திருந்தான்; இம் மாதிடம் எப்போதும் தொழிற்சாலைக்கு வரும் ஏழைகளுக்குக் கொடுக்க 100 பிராங்க் இருக்கும்படி செய்தான். மேற்சொன்ன வம்பிகள் ஃபாந்தேனைப்பற்றி விக்தூர்னேயிடம் நாளும் கோளேற்றி வந்தனர். இந்தக் கோட்சொல்லிப் பேய்களால் எத்தனையோ நல்லவர்களுக்கு ஆபத்து வருகிறது. தொழிற்சாலையில் வேலை முடிந்ததும், எல்லாருங்கூடி ஃபாந்தேனைப்பற்றியே ஆகாததும் போகாததும் பேசி வந்தனர். அவர்கள் வம்பின் சில துணுக்குகளைக் காண்க:—

“அதோ பாரடி, அவள் ஒய்யார நடையை. என்ன தளுக்கு! என்ன மினுக்கு! தனக்குத்தான் அப்படி முகில் போலக் கூந்தல் இருக்கிறதென்று தெரிய வேண்டுமாம். அதை அவள் எவ்வளவு நாசூக்குப் பண்ணி வாரிவிட்டுக் கொள்ளுகிறாள் பாருங்கள்.

தனக்குத்தான் அவ்வளவு அழகான பல் இருக்கிற தென்று தெரிய வேண்டுமாம். தெருவில் காணும் ஆண்பிள்ளைகளுக்கெல்லாம் அவள் பல்லையிளித்துக் காட்டுகிறுள்; கற்புக்கரசிபோலப் பேசுகிறுள். அவள் பண்ணுகிற ஷோக்கையும், அவள் கண்ணையும் பார்த்தால், கற்புப் பயந்தோடிப் போகுமே" என்று சிலர் வாயளப்பர். "அடி, கேட்டாயா செய்தி, அவள் யாருக்கோ கடிதம் எழுதி யெழுதிப் போடுகிறுள்; யாரோ கள்ளக் காதலனை வைத்துக் கொண்டிருக்கிறுள். இவளும் நாணும் கற்பா யிருந்து வாழவில்லையா?" என்று மற்றும் சிலர் வம்பளப்பர். "எனக்குத்தெரியும் அந்த இரகசியம். அவளுக்காகக் கடிதம் எழுதிக் கொடுப்பவரிடம் மெல்லக் கேட்டேன். அவளுக்கொரு பெண்ணும். அதன் பெயர் கோஸத்தாம். மோம்பெர்மேலில் தென்னுடியர் வீட்டில் இரகசியமாக அவளை விட்டு இவள் இங்கு வந்திருகிறுள்" என்றுள் ஒரு நங்கை. "என்னடீ அதிசயம்! இவளுக்குப்பெண்ணு? புருஷனில்லாதவளுக்கு எப்படிப் பெண் வந்தது? தெரிந்தது குட்டு. பத்து வருஷமாகப் பாரிஸிலே அவனேடேயும் இவனேடேயும் போய்த் திரிந்து, ஒரு பெண்ணைப் பெற்றுக் குட்டுத்தெரியாதே தென்னுடியர் வீட்டிலே விட்டு இவள் இங்கு வந்திருக்கிறுள். ஓடுகாலிக்கு வீடு பிடிக்குமோடீ! இங்கு இவள் யார் யாரை வலை போட்டு மயக்கி வைத்துக்கொண்டிருக்கிறுளோ!" என்றுள் மற்றொரு மாது.

“சீ, நாம் இந்த விபசாரியுடன் வேலை செய்வதாவது!—இவளை எப்படியாவது கிளப்ப வேண்டும் அவள் போக்கு, சந்தி சிரிக்க வேண்டும்; நாம் பார்க்க வேண்டும்” என்றெல்லாம் வம்பர் மாசபை நெடுநேரம் பேசி முடித்ததும், மறுநாளே ஒன்றுக்குப் பத்தாக விக்தார்னையிடம் கோளேற்றி விட்டனர் புக்கொடியோர். ஃபாந்தேன் கோஸெத்தைத் தெனர்டியரிடம் விட்டு வந்த உண்மையை விக்தார்னை நேராக அறிந்து கொண்டாள்; ‘ஃபாந்தேன் வியாபாரம் செய்தே அந்த மகளைப் பெற்றாள்; அதனால் இங்கும் இரகசியமாக ஆட்களை வலை போடுகிறாள்: அதனால்தான் அவ்வளவு மினுக்குப் பண்ணுகிறாள்’ என்று ஃபாந்தேன் மீது பழி சுமத்தினாள். விக்தார்னை ஐம்பத்தாறு வயது கிழவி: நரைத்துத் திரைத்து, ஒட்டி உலர்ந்து அவலட்சணமாயிருந்தாள். அவளது நெஞ்சு நஞ்சு: அவள் ஒரு மதபோதகனது விதவை: மதப் பற்றுள்ளவள். அதனாலேதான், மதேலன் அவளை இங்கு அமர்த்தினான். விக்தார்னைக்கு எல்லாரும் தன்னைப்போல மனமும் உடலும் உலர்ந்து வறண்டு இருந்தால்தான் பிடிக்கும். அழகு, இளமை, காதல் என்பது அவளுக்குப் பிடிக்காது. தொழிலாளிடையே விபசாரம் கூடாதென்ற ஒரு விதியும் இருந்தது. ஃபாந்தேனின் அழகும் இளமையும் மலர் முகமும், வண்டு மொய்த்த கூந்தலும், முத்துப் பல்லும், அன்ன நடையும், கிழவிக்குப் பிடிக்கவில்லை. ஒருநாள் அவள் திடீரென்று

ஃபாந்தேனைக் கூப்பிட்டு, "ஃபாந்தேன், இந்தா 50 பிராங்க்; தந்தையார் மதேலர் இதைக் கொடுத்து உன்னை வேலையை விட்டு நீக்கி, ஊரைவிட்டுப் போகச் சொல்லும்படி கட்டளை யிட்டார்" என்றாள்.

ஃ ஃ ஃ ஃ

ஏழை ஃபாந்தேன் கதியற்றவளானுள்; ஊரை விட்டுப் போக முடியாது; சில்லரைக் கடன்காரர்கள் கழுத்தைப் பிடித்தனர். வீட்டு வாடகை பாக்கி; "நீ வாலிப அழகி; ஊரில் போய்ச் சம்பாதித்து வாடகை தா" என்றான் வீட்டுக்காரன். வம்பிகள் அவளைப்பற்றி ஊரில் கண்ட பொய்களை யெல்லாம் பரப்பினர்; யாரும் அவளை வேலைக்குவைத்துக்கொள்ளாதபடி செய்தனர். இதனிடையே தென்னுடியன் வேறு கிட்டி போட்டான். என்ன செய்வாள் எழுத்தறியாத ஏழைப் பெண்! வீட்டில் அதிகப்படியாயுள்ள சாமான்களை யெல்லாம் விற்றுச் சில கடன்களை அடைத்தாள்; பலகணியில்லாத ஒரு குடிசையில் குடி புகுந்தாள்; ரொட்டியும் தண்ணீரும் உண்டாள்; வெளிச்சத்திலேயே சாப்பிட்டு, இரவு விளக்குச் செலவை மிச்சப்படுத்தினுள்; கட்டிலை விற்று, வாடகைக்குப் பதிலாகக் கொடுத்து, ஒரு பலகையில் படுத்தாள்; போர்வீரருக்குப் பெரிய சட்டைத் துணிகள் தைக்கும் வேலையில் அமர்ந்தாள். நாளெல்லாம் தைத்தும், பன்னிரண்டு காசு தான் கிடைத்தது. அதுவும் பிறகு 9 காசாகக் குறைக்கப் பட்டது. நாளெல்லாம் தைத்துத் தைத்து, முதுகில்

அவளுக்கு வலி யெடுத்தது. அதிக வேலையாலும் போதிய உணவில்லாமையாலும் ஃபாந்தேன் உடல் இளைத்தது. இருமல் கண்டது. அடிக்கடி காய்ச்சல் வந்தது. இச்சமயம் தென்னாயன் பணத்திற்கு நெருக்கினான். "உன் மகளுக்குப் பாவாடையில்லை. அதற்கு 10 பிராங்க் வேண்டும். உடனே அனுப்பா விட்டால் கோரக் குளிரில் நடுங்கிக் காய்ச்சல் வந்து செத்துப் போவாள்" என்று கடபுடலாகக் காயிதம் எழுதினான். என்ன செய்வாள், ஏழைத் தாய்! கையில் பத்துக் காசுகூட இல்லை. குழந்தை குளிரில் தவிப்பதைக் கேட்கவும் அவளுக்கு மனக் தாளவில்லை. அன்றே அவள் ஒரு நாவிதனிடம் சென்று, "ஐயா. எனது கூந்தலைத் தருகிறேன். என்ன தருகிறீர்கள்?" என்று கேட்டாள். "அழகான கூந்தல்! பத்துப் பிராங்க் தரலாம்" என்றான் நாவிதன். "சரி, வெட்டுங்கள்" என்றாள் ஃபாந்தேன். கார் புயல் போலும், வண்டு மொய்த்தது போலும், அகிற்புகை போலும், கரிய அருவி போலும் அழகாகச் சுருண்டு விரிந்த ஃபாந்தேன் கூந்தல் இருந்த இடத்தில் தரையில் கிடந்தது. தனது மொட்டைத் தலையைத் தொப்பியால் மறைத்துக் கொண்டு, 10 பிராங்க் பெற்றுத் தையற்காரனிடம் சென்று, அதனை மகளுக்கு அழகான பாவாடை தைத்து. உடனே தென்னாயனுக்கு அனுப்பினாள் ஃபாந்தேன். "அடசீ, பணமன்றோ கேட்டேன்; சட்டைப்பாவாடையா அனுப்பினாள்! அதுவுஞ் சரி.

என் மகள் எபோனிக்கு இருக்கட்டும்" என்று வைத்துக்கொண்டான் தென்னுடியன். கோஸத்திற்குப் பழைய கந்தலைத் தந்தான் அப்பாபி. ஃபாந்தேனுக்குத் தையல் வேலையின் கடுமையால் முதுகில் பிடிப்பு ஏற்பட, வலி பொறுக்க முடியாமல் அவள் வருந்தினுள். பிழைக்க வேறு வழியுமில்லை. தன்னை இந்தக் கதிக்குள்ளாக்கியது மதேலன்தான் என்று நினைத்து அவனைச் சபித்தாள், வெறுத்தாள் அப்பெண்மணி.

இச்சமயம் தென்னுடியன் ஒரு அவசரக் கடிதம் எழுதினுன்: "கோஸத் அபாயமான சுரத்தால் வருந்துகிறுள். அதற்கு அபூர்வமான மருந்துகள் வாங்கவேண்டும். எங்கள் கையில் பணமில்லை. ஒரு வாரத்தில் 40 பிராங்க் அனுப்பவேண்டும்; தவறினுல், குழந்தை செத்தே போவாள்." ஆ! என்ன செய்வாள் ஏழை ஃபாந்தேன்! தாய் மனம் தணலிற்பட்ட புழுப்போலத் துடித்தது. அப்போது அங்கு ஒரு பல் வைத்தியன் வந்தான். அவன் அழகாகவும் உறுதியாகவும் உள்ள பற்களை விலைக்கு வாங்குவது வழக்கம். அவன் விகடமாகப் பேசுவான்; எல்லாரும் பல்லிளிக்கையில் யார் பல் நல்லதென்று பார்ப்பான்; "தங்கள் முன் பல் இரண்டிற்கும் 40 பிராங்க் தருகிறேன், என்ன சொல்லுகிறீர்கள்?" என்றுன் ஃபாந்தேனிடம். "நன்றுயிருக்கிறது. யாராயினும் பல்லைத் தருவார்களா?" என்று கூறி மறுத்தாள் ஃபாந்தேன். "பிராங்க் சம்மதமானுல் இன்று சாயங்காலம்

எனது சாவுக்கு வாருங்கள்” என்று சொல்லிச் சென்றான் பல் வைத்தியன்.

பாந்தேன் தென்னார்டியன் கடிதத்தை மீண்டும் படித்தாள்: ‘என் குழந்தையைவிட இந்தப் பல் பெரிதா?’ என்று நினைத்தாள்; அன்று மாலைப் பல் வைத்தியனிடம் சென்றாள்: மறுநாட் காலை, கோஸத்திற்கு 40 பிராங்க் அனுப்பினாள். முன் பல்லிரண்டும் பிடுங்கியதால் வலி பொறுக்கமுடியாது மறுநாள் முழுதும் மயங்கிக் கிடந்தாள் பாந்தேன். குழந்தைக்காகத் தாய் செய்யும் தியாகம் என்னே!

ஆனால், கோஸத்திற்குக் காய்ச்சலா? அதுதான் இல்லை. ‘நல்ல வேளையாக நமக்குப் பணம் வந்தது; அடுத்தமாதம் இன்னும் 5 டிகிரி அதிகமான காய்ச்சலென்றெழுதி 100 பிராங்க் அனுப்பச் சொல்லுவோம்’ என்று கொடுமையாகச் சிரித்தான் தென்னார்டியன்.

இப்போது பாந்தேன் கதியென்ன? திக்கற்ற இந்தப் பேதையின் கதியென்ன? தொழிலில்லை: நோய்: உண்ணச் சோறில்லை: விளக்கில்லை: வீட்டு வாடகைக்குப் பணமில்லை: வீட்டுக்காரன் அவள் சாமான்களைத் தூக்கி வெளியே எறிந்துவிட்டான். ஐயோ! கொடுமை! கொடுமை! நாய்க் கூடு மாதிரி ஒரு சிறு பொந்து கிடைத்தது: அதில் வசித்தாள் ஏழைப் பெண். சிறிது கவனமில்லாமல் நிமிர்ந்தால் படாரென்று மண்டை உடையும்; வீடு அவ்வளவு நறுங்கல், குட்டை. முதுகு வலி, இருமல், காய்ச்சல் எல்லாம் பொறுத்துக் கொண்டும் நாளைக்கு 10 மணி

நேரம் தைத்து, 9 காசு பெற்றாள்; இது அரை வயிற்றிற்குக் கூடப் போதாது. இச்சமயம் கடன்காரர் வேறு தாறுமாறாகப் பேசி, "வை, பணத்தை" என்று வேட்டை நாய் மாதிரி சூழ்ந்தனர். அத்துடன் தென்னடியன், "100 பிரான்க் அனுப்பவேண்டும். இல்லாவிட்டால் கோஸத்தைத் தெருவில் விரட்டியடிப்பேன்" என்று கண்டிப்பாக எழுதினான். ஒருபுறம் கடுமையான வேலை செய்தும் கஞ்சிக்குக் கட்டாத வறுமை நோய்; மறுபுறம் கடன்காரர் தொல்லை; அதைவிடப் பெரிய தொல்லை தென்னடியன் அரிப்பு; இன்னொருபுறம் பிள்ளைப் பாசம், மழைக்காலம், நெருப்பில்லை; நல்ல துணியில்லை—ஆ! என்ன துன்பம்! வீட்டுச் சாமான்களெல்லாம் விற்றுத் தீர்ந்தன. சட்டியும் அகப்பையுமே பாக்கி. இனி இருப்பது மானந்தான். இதுகாறும் நாலு பேருக்கு முன் செல்ல நாணமுற்ற ஃபாந்தேன் இப்போது அச்சம், நாணமெல்லாம் உதிர்த்தாள்; முன்னே பாரிஸில் தன் தோழி ஃபாவரிட் போலத் தானும் இருக்கத் துணிந்தாள். 'நான் நிரம்பப் பணம் சம்பாதித்துக் கோஸத்தையும் அழைத்து வைத்துக் கொள்வேன்' என்றாள்; தன்னிடம் இருந்த ஒரு பட்டுடையை அணிந்து கொண்டாள்; தலைக்கு ஒரு டோப்பா வைத்துக் கொண்டாள்; அதன்மேல் ஒரு அழகிய தொப்பி வைத்துக்கொண்டு, ஒய்யாரமாகக் கண் வலை வீசி நடந்து தெருச்சுற்றத் தொடங்கினாள்; வேசியானாள்.

பாங்கேனை வேசியாக்கியது யார்? பசி, வறுமை. வறுமை வந்ததேன்? சமூகக் கொடுமையால். ஒருவாய்ச் சோற்றிற்கும், துணிக்கும் இவ்வாறு பெண்களை மானமிழக்கச் செய்கிறது சமுதாயம். ஐரோப்பியர், பைபிளைப் பின்பற்றும் கிறிஸ்தவர்கள் என்பது பேர். பைபிள் கோயில்களில ஞாயிறு தோறும் முழங்குகிறதே யொழிய, சமுதாயத்தின் தினசரி வாழ்வில் அமைவதில்லை. மேனாட்டில் அடிமைத்தனம் இல்லையென்பது பேர். பெண்ணடிமையின் மிக்க கேவலமான நிலைமையே விபசாரம், விலைவாழ்வு. மெல்லியர் அழகையும், மானத்தையும் விற்றுப் பிழைக்கும்படியான நிலைமைக்குள்ளான ஒரு சமுதாயம் நாகரிகம் பெற்றதென்றும், உத்கர்ஷமுள்ளதென்றும் எவ்வாறு சொல்ல முடியும்? பெண்கள் கண்ணீர், பட்டினி, அடிமைத்தனம், சமூகத்தின் அவமதிப்பு, அன்பின்மை ஆகிய இவையே வேசி வடிவாக நிற்கின்றன.

---

20. ஜாவர் கல் நெஞ்சு

பெண் வேட்டையாடும் சில காமப் பித்தர்களைப் பற்றி முன்பே கூறினோம். மற்றொரு வகையினர் உள்ளனர். இவர்களுக்கு அப்பன் வைத்த சொத்துக் கொஞ்சம் இருக்கும்; மைனர்க் காளை

கள்; ஷோக்காகச் சட்டைகளைப் போட்டுக்கொண்டு, பட்டணங்களுக்கு வந்து, இடம்ப நாடகம் போட்டுத் தமது வலையில் பெண்களைச் சிக்க வைப்பது இவர் தொழில்.

இப்படிப்பட்ட ஷோக் பேர்வழி யொருவன் மாந்த்ரேலில் இருந்தான். அவன் பெயர் பாமா டபன் (Bamatabois); படாடோபன் என்றாலும் பொருந்தும். இவன் முன்னே நாம் பார்த்த தொலோமியனுக்கு மூத்தண்ணா. ஹாயாக சாப்பிட்டுச் சட்டைகளைப் போட்டுக்கொண்டு, ஆள் மினுக்கினால், வாள்விழியாரை வசப்படுத்துவதே அவன் வேலை. 1823ஆ, ஜனவரி மாதம் பனிக்கட்டி கொட்டுகிறது. ஒரு காப்பிக் கடையில் பாமாடபன் சுமார் நான்கு சட்டைகளுக்குமேல், கழுத்து முதல் கால் வரையில் நீண்ட ஒரு கம்பளிச்சட்டை போட்டுக் கொண்டு, முழங்கால் வரையில் உயர்ந்த ஜோடுகளை மாட்டிக்கொண்டு, தலையில் அழகான ஒரு தொப்பியுடன், மீசையை ஒரு கையினால் திருகி விட்டுக் கொண்டு, மற்றொரு கையினால் ஒரு பெரிய சுருட்டைப் புகைத்துக் கொண்டிருந்தான். அப்போது அங்கு ஒரு அழகான நங்கை தோன்றி இங்குமங்கும் மெல்ல உலாவிக் கொண்டிருந்தாள். அவளையே குறி வைத்த படாடோபன், "அடி சிறுக்கி, ஹ, ஹ, ஹ, உன்னைத் தெரியாதோ!" என்று சிரித்தான். பெண் பேசாமல் உலாவிக் கொண்டிருந்தாள். "வெட்கம் வேறா? உனக்கு முன் பற்கள்

இல்லை; தெரியாதோ!" என்று எண்ணி நகைத்தான். அவன் கேலிக்கெல்லாம் பதில் பேசாது நங்கை மௌனமாக உலாவிக் கொண்டிருந்தாள். "அடி என்னைப் பார்த்துப் போகக் கூடாதோ?" என்று முறைத்துப் பார்த்தான் படாடோபன். பின்னும் பேசாது சென்றாள் நங்கை. அக்கொடியோன் மெல்ல அவள் பின்னே சென்று, ஒரு பனிக் கட்டியை எடுத்து அவள் முதுகில் பலமாக அடித்தான். "ஆ! ஐயோ! எந்தப் பாவியடா இப்படி என்னை அடித்தது? வலி உயிர் போகிறதே!" என்று நங்கை அழுது துடித்தாள். படாடோபன் சிரித்தான். அவன் மேல் புலிபோலப் பாய்ந்தாள் நங்கை; அவன் தொப்பியைத் தட்டிவிட்டுக் காலால் துவைத்தாள்; கையால் அவனைச் சக்கையாக வெதுப்பி விட்டாள். "ஐயோ! பேய் என்னைக் கொல்லுகிறது!" என்று அவன் அலறினான். காப்பிக் கடையிலிருந்தவர்களெல்லாம் கூடினர்; தெருவெல்லாம் சுற்றி வேடிக்கை பார்த்தது; திடீரென்று ஒரு போலீஸ் அதிகாரி தோன்றி, அந்த நங்கையைக் கைது செய்து இழுத்துக்கொண்டு போய் டாணாவில் அடைத்தான். போலீஸ் அதிகாரி ஜாவர். நங்கை பொந்தேன். பொந்தேனுக்கு ஆறு மாதம் கடுஞ் சிறைத் தண்டனை விதித்தான் ஜாவர்.

"ஐயோ! என்னை விட்டு விடுங்கள்; ஜாவர், புண்ணியமுண்டு, என்னை விட்டு விடுங்கள். என் மேல் குற்றமில்லை; நான் குடித்திருந்தேன்; எனது துன்

பங்களை மறக்கவே குடித்தேன்; அந்தப் படாடோபன் என்னைக் கேலி செய்தான். அவனை நான் விரும்பவில்லை; அவனே என் முதுகில் பலமான பனிக்கட்டியை எறிந்தான். முன்பே என் முதுகு வலித்தது. இப்போது உயிர் துடிக்கிறது. அவன் மீதுதான் குற்றம். ஜாவர், என்னை விட்டு விடுங்கள்; எனக்கொரு பெண் குழந்தை யிருக்கிறது; அவளுக்கு 100 பிராங்க் அனுப்ப வேண்டும்; இல்லாவிட்டால், குழந்தை நோயால் இறந்து போவாள். ஐயா, வேறு வேலையில்லாது, வறுமையின் கொடுமையால் இந்த அவமானத் தொழிலிற் புகுந்தேன்; எனக்கு இதில் விருப்பமில்லை; நான் நேற்று வரையில் சுத்தமாகவே யிருந்தேன். ஐயா, நான் அபலை; தெரியாமல் குற்றம் செய்து விட்டேன்; மன்னித்து விட்டு விடுங்கள்........" என்று ஃபாந்தேன், கண்ணீர் ஆறாய்ப்பெருக, அடித்துக் கொண்டு, அலறி முறையிட்டாள். ஜாவரின் கல் நெஞ்சு கரையவில்லை. ஜாவர் அவளைச் சிறையிலடைக்க எழுந்தான்.

அப்போது பொலீஸ் சேவகர்கள் திடீரென்று நின்று வந்தனம் செய்து வழி விட்டனர். தந்தை மதேலன் வந்தான்.

மதேலன் :—ஒரு நிமிஷம் பொறுங்கள்.

ஜாவர் :—வந்தனம், நகரத் தலைவரே.

நகரத் தலைவர் என்றதைக் கேட்டதும் ஃபாந்தேன் புலிபோலப் பாய்ந்தாள். "நீ தானா ந-க-ர-த் தலைவன்-மதேலன்! உன்னாலே தான் நான் இக்

கதிக்கு உள்ளானேன்! தூ, நீ ஒரு மனிதனா?" என்று மேயர் முகத்தில் காறி உமிழ்ந்தாள்.

மதேலன் :—(எச்சிலை அமைதியாகத் துடைத்துக்கொண்டு) இந்தப் பெண்ணை விடுதலைசெய்யுங்கள்.

ஜாவர் :—ஐயா, இவள் மேயரான தங்கள் முகத்தில் காறியுமிழ்ந்தாள்; இன்று ஒரு செல்வரைத் தாக்கி அவர் தொப்பியைத் தட்டி விட்டு மிதித்தாள். இவளையா விடுதலை செய்வது? தங்கள் முகத்தில் துப்பிய இவளையா விடுதலை செய் என்கிறீர்?

மதேலன் :—அது என் பாடு; நீர் அவளை விடுதலை செய்யும்.

ஃபாங்தேன் :—ஆ! விட்டு விடப்போகிறீர்களா? என்னையா? ஜாவர், நீர் தாமே என்னை விடுதலை செய்யப் போகிறீர்? இந்த மேயரில்லையே? நீர் நல்லவர். இந்த மேயர் பொல்லாதவன் (முழு மயக்கத்தில் மேயரை வைதாள்).

ஜாவர் :—பாருங்கள், இவள் பேசுவதை.

மதேலன் :—தனது துயரம் பொறுக்காது ஏதோ உளறுகிறாள். அவளை உடனே விடுதலை செய்யுங்கள்.

ஜாவர் :—அவளுக்கு ஆறு மாதகால் காவல் விதித்திருக்கிறேன்.

மதேலன் :—அவள் இன்றே விடுதலையாக வேண்டும்.

ஜாவர் :—தங்களை எதிர்த்துப் பேச வேண்டியதற்கு வருந்துகிறேன். நான் கண்ணாரக் கண்டேன்;

இந்த வேசி அந்தக் கனவானை அடித்தாள். அவளைத் தண்டிக்க எனக்குப் போலீஸ் அதிகாரம் உண்டு.

மதேலன் :—இல்லை ; 1799-ஆம் ஆண்டு குற்றச் சட்டத்தின் 81-வது பிரிவின்படி, இக் குற்றம் எனது எல்லையில் நடந்ததால், நானே இதை விசாரிக்க உரிமையுண்டு. இந்த ஏழைப் பெண்ணை நான் விடுதலை செய்கிறேன்.

ஜாவர் :—நான் சொல்வதை மேயர் கேட்க வேண்டும்.

மதேலன் :—மேல் பேச்சு வேண்டாம்.

ஜாவர் :—நான் ஆட்சேபிக்கிறேன்.

மதேலன் :—நீர் வெளியேறும்.

ஜாவர் சினத்துடன் வெளியேறினான்.

'நாம் அவமதித்து வைத மதேலனன்றோ நம்மை விடுவித்தான்' என்று ஃபாந்தேன் வியந்து நின்று மன்னிப்புக் கேட்கப் போனாள்.

மதேலன் :—அம்மா, உனது நிலைமையை நான் அறிந்து கொண்டேன். வறுமையினால் நீ வீழ்ச்சியடைந்தாய் ; இனி இத்தொழிலை விட்டு ஒழுங்காயிரு. உன்னைத் தொழிற்சாலையினின்று நீக்கிய விபரம் எனக்குத் தெரியாமற் போனது. நீ ஒரு வார்த்தை சொல்லியிருக்கக்கூடாதா ? போனது போகட்டும். பண முடையினால் தானே நீ இந்தக் கேவலமான நிலையை அடைந்தாய். பணக்கவலையை விடு ; உனது மகளுக்கு அனுப்ப இதோ 100 பிரான்க் எடுத்துக்

கொள்; நீயும் உன் மகளும் சுகமாயிருங்கள்; உங்கள் செலவை நான் தருகிறேன்.

ஃபாந்தேன்:—ஆ! தருமராஜா, தங்களையோ நான் மகா பாவி, வைதேன், துப்பினேன்; ஆ! என் மனம் துடிக்கிறதே! ஏ தீனபந்து........

ஃபாந்தேன் மூர்ச்சித்து விழுந்தாள். அவளைத் தனது வைத்தியசாலைக்குக் கொண்டுசேர்த்துச் சிகிச்சை செய்தான் மதேலன். ஆனால் ஃபாந்தேனுக்கு முதுகில் வீக்கம் பலத்தது. அத்துடன் காய்ச்சல் கண்டது; வைத்தியசாலையில் இரண்டு பரிசுத்தக் கன்னிகைகள் அவளுக்கு வேண்டிய சிகிச்சை செய்தனர். இரவெல்லாம் தன்னினைவற்று ஜன்னி கண்டு புலம்பினாள் பேதை. மதேலன் அடிக்கடி அவளிடம் சென்று பார்த்து, "அம்மா, அதோ சிலுவையில் உள்ள பரநாதர் மேல் மனத்தைச் செலுத்து" என்றான். "ஆ! என் கோஸத், கோஸத்" என்றே புலம்பினாள் ஃபாந்தேன். மதேலன் கோஸத்திற்கு ஆள்விட்டான். "300 பிராங்க் தந்தால்தான் கோஸத்தை விடுவேன்" என்றான் தென்னடியன். 300 பிராங்க் அனுப்பினான் மதேலன். தனது கிளப்பில் நாலாள் வேலை செய்யும் கோஸத்தையா அவன் விடுவான்! 'அதெல்லாம் முடியாது. மழைக் காலம், குழந்தைக்குப் பிரயாணம் ஒத்துக்கொள்ளாது' என்றான் தென்னடியன்.

தாய் மகளைக் காண ஆவலாகப் புலம்பினாள். "நானே போய் அழைத்து வருகிறேன் குழந்தை-

யை" என்றான் மதேலன்; ஃபாந்தேன் கைப்பட அடியில் வரும் சீட்டை எழுதி வாங்கினான் :—

"தென்னடியருக்கு, தாங்கள் என் மகள் கோஸத்தை இச்சீட்டுக் கொண்டு வருவோரிடம் ஒப்புவிக்கவும். தங்களுக்குச் சேரவேண்டிய பாக்கியை அவர் தருவார்; வந்தனம் செய்து வேண்டிக் கொள்ளுகிறேன்." ஃபாந்தேன்

இந்தச் சீட்டை மதேலன் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டான்.

---

21. " நீர் ஜாம்வல்ஜான் "

மதேலன் தனக்கு அடுத்தாற்போல வரப்போகும் துன்பங்களைச் சிந்தித்து, ஒரு முடிவு பண்ணி வைத்துக்கொண்டான்; தனது அலுவற் கூடத்தில் தனியாக அமர்ந்து அவசரமாகச் சில காரியங்களைப் பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது ஜாவர் உள்ளே புகுந்து, சலாம் செய்து நின்றான். மதேலனுக்கு விஷயம் புரிந்துபோயிற்று.

மதேலன் :—என்ன ஜாவர்?

ஜாவர் :—ஐயா, என்னை உடனே வேலையை விட்டு நீக்குங்கள்.

மதேலன் :—ஏன் ?

ஜாவர் :—நான் ஒரு பெரிய மனிதர் மீது பாரிஸ் மன்றத்தில் குற்றஞ் சாட்டிவிட்டேன்.

மதேலன் :—யார் அந்தப் பெரிய மனிதர்?

ஜாவர் :—தாங்கள் தான்.

மதேலன் :—என்ன குற்றம்? நான் பொலீஸ் அதிகாரத்தில் தலையிட்டேனென்றா?

ஜாவர் :—இல்லை: தாங்கள் ஒரு பழைய கைதியென்று.

மதேலன் :—என்ன?

ஜாவர் :—ஐயா, நெடுநாளாக நான் அறிவேன்; நான் துலோன் சிறையில் வேலை பார்க்கும்போது பொவரோலினின்று ஒரு கைதி வந்தான். அவன் பக்காத் திருடன்: மஹா பலசாலி; தாங்கள் போஷல்வான் வண்டியைத் தூக்கிவிட்டது போலவே அவனும் அங்கே ஒரு வண்டியை முதுகில் தூக்கினான்; நடையெல்லாம் தங்களைப் போலவே இருக்கும்: அந்தக் கைதி பெயர் ஜாம்வல்ஜான்.

மதேலன் :—என்ன?

ஜாவர் :—ஜாம்வல்ஜான். அவன் துலோன் கடுங்காவலை விட்டு வந்ததும், இந்த ஊர்ச் சாமியார் வீட்டில் வெள்ளிச் சாமான் திருடினான்: பிறகு ஒரு சிறு பையனை வழி மறித்துத் தடியால் அதட்டி, அவன் பணத்தைப் பிடுங்கிக் கொண்டான். அத் திருடனைப் போலீஸார் நெடுநாளாகத் தேடினர்; முடிவில் அவனைப்போலவே ஒரு கிழவனைப் பிடித்து ஆராவில் (Arras) விசாரணை நடத்துகிறார்கள். அந்த ஆள் பெயர் ஷாம் முத்தையன் (Champ mathian). அவன் ஒரு வீட்டுச் சுவரேறித் தன் குழந்தைக்காக

ஒரு ஆப்பிள் பழம் திருடினனும். அவனே ஜாம் வல்ஜான் என்று போலீஸார் பிடித்து வைத்திருக்கிறார்கள் ; ஜாம்வல்ஜானே அப்படித் தன் பெயரை மாற்றி வைத்துக் கொண்டிருக்கிறான் என்று சாதிக்கின்றனர். ஆராச் சிறையில் மூன்று தலேலான் கைதிகள் உள்ளனர். அவர்களும் சர்க்கார் பக்கமே சாட்சி சொன்னார். அச்சமயமே நான் போய், “ உண்மையான ஜாம்வல்ஜான் அகப்பட்டுவிட்டான் ” என்று அதிகாரிகளிடம் தெரிவித்தேன்.

மதேலன் :—என்ன சொன்னார்கள் ?

ஜாவர் :—“ போடா பைத்தியக்காரா ” என்றார்கள் எல்லோரும். மேயரே, நான் தங்களைப் பழித்தேன் ; கெடுத்தேன் ; என்னை விரட்டியடியுங்கள் ; மண் வெட்டிப் பிழைத்துக் கொள்ளுகிறேன்.

மதேலன் :—அதிருக்கட்டும். கைதியான அந்த ஆள் என்ன சொன்னான் ?

ஜாவர் :—கைதி ஆச்சரியப்பட்டு, “நான் ஷாம் முத்தையன் அல்லவா ; கீழே கிடந்த ஒரு ஆப்பிள் கொப்பை எடுத்தேன் ; வேறு பிழை யறியேன் ” என்றெல்லாம் கெஞ்சினான். இது தவிர, ஒரு பையன் காசைப் பிடுங்கி வழிப்பறி செய்த குற்றமும் அவன் மேலுள்ளது. மேயரே, நானும் அந்த விவகாரத்தில் ஒரு சாட்சி. விவகாரம் நாளை முடியும். நான் உண்மையை மறைக்க முடியாது ; நீரே ஜாம்வல்ஜான் என்று விளக்குவேன். ஆதலால் இப்போதே என்னை விரட்டுங்கள்.

மதேலன்:—ஜாவர், நீர் ஒரு குற்றமும் செய்ய வில்லை. தங்கள் அலுவலைப் பாருங்கள். மற்றதை நான் கவனித்துக் கொள்ளுகிறேன்.

ஜாவர் சலாம் செய்து சென்றான். மதேலன் சிந்தனையில் ஆழ்ந்திருந்து, பிறகு பொந்தேனைப் பார்க்கச் சென்றான்.

---

22. மனச்சாட்சிப் போர்

கோஸெத்தை அழைத்து வருவதாகப் பொந்தேனுக்கு வாக்களித்து, மதேலன் ஒரு குதிரைவண்டிக்காரனிடம் சென்றான்; தானே ஓட்டிச் செல்ல ஒரு வில்வண்டியும் அமர்த்தினான்; இடையில் ஏதாவது நேர்ந்தாலும், தொழிலாளி நஷ்டமடையக் கூடாதல்லவா? ஆதலால், "வண்டியும் குதிரையும் என்ன விலை பெறும்?" என்றான். "500 பிராங்க்" என்றான் வண்டிக்காரன். "இந்தா பிடி" என்று பணத்தைக் கைமேல் கொடுத்து, காலை, சரியாக 4 மணிக்கு வண்டியைத் தனது வீட்டிற்குக் கொண்டு வரச் சொல்லிச் சென்றான் மதேலன். அந்த வண்டியும் குதிரையும் 100 பிராங்க் கூடப் பெறா. 'அடாடா 1000 பிராங்க் என்றது போதுமே' என்றான் பேராசை பிடித்த வண்டிக்காரன்.

° ° °

தனது தனியறையில் மதேலன் இரவைக் கழித்தான். ஒரு மூலையில் கணப்பு எரிந்தது. மதேலன் அங்குமிங்கும் சிந்தனையில் உலாவினான். அவன் மனத்தில் ஒரு பெரும் புயல் வீசியது. உள்ளிருந்து யாரோ அவனை, "ஜாம்வல்ஜான், ஜாம்வல் ஜான்" என்று உரக்கக் கூப்பிடுவது போலிருக்கிறது. அதுவே மனச்சாட்சியின் அழைப்பு.

° ° °

மதேலன் ஜாம்வல்ஜானே. சாது மிரியலின் அன்பே ஜாம்வல்ஜானைத் தந்தை மதேலனாக்கியது; முரட்டுக் கல்லை, வைர மணியாக்கியது. எவ்வளவு அற்புதமான மாற்றம்! திருடன் ராதுவானான். சின்ன சேர்வையைக் காணாது, சாது மிரியில் வீட்டு முன்பு தனது பிழைக்காகக் கண்ணீர் விட்டு வருந்தியதும் அவன் புதுப் பிறவி யெடுத்தான்; யார் கண்ணிலும் தட்டுப்படாத ஒரு ஊருக்குச்சென்றான்; சாது மிரியலின் வெள்ளிச் சாமான்களை விற்றான்; சாது கொடுத்த இரண்டு 'வெள்ளி விளக்குகளை மட்டும் பயபக்தியுடன் இறுதிவரையிற் காத்தான்; கிராமத்திற்குக் கிராமம் நடந்து, முடிவில் மாந்த்ரேலுக்கு வந்தான்; அங்கு அவன் மதேலனாகிச் செய்த தொழிலும், தொண்டும் நமக்குத் தெரியும். பழைய பெயர் வெளிவராது அவன் காத்தான்; தனது வாழ்வை ஒவ்வொரு நாளும் தூய்மை யாக்கினான்; ஏழைகளுக்கு அன்பும், தொண்டும், இறைவனுக்குப் பணிவும் பூண்டான்; தன் வாழ்வு பலருக்கு உதவியா

யிருப்பதைக் கண்டு ஜாம்வல்ஜான் பெருமகிழ் வெய்தினன்: அமைதியாகவே இருந்தான். அந்த அமைதியிற் கனலும் இன்ப விளக்கை அணைக்க ஜாவர் என்னும் விஷக்காற்று வந்தது. ஜாவர் துலோன் சிறையில் வேலை பார்த்தவன்; ஆதலால் ஜாம்வல்ஜானை நன்கு அறிவான்.

என்ன செய்வது? ஜாம்வல்ஜான் உறக்கமின்றிச் சிந்திக்கிறான்:—

1. "மனச்சாட்சியே, என்ன சொல்லுகிறாய்? நான் ஜாம்வல்ஜானே: ஒளிப்பதிற் பயனில்லை; நீ உண்மையை வெளியிடாவிட்டால், பாவம்! அந்தக் கிழவன் ஷாம் முத்தய்யா ஜன்மக் கைதியாகிச் சிறையில் நரக வேதனைப் படுவான். உனக்காக மற்றொருவன் வருந்துதல் நியாயமா?

2. உளவாளி ஜாவர் உன்னைக் கண்டுபிடித்து அதிகாரிகளுக்குந் தெரிவித்துவிட்டான்; இப்போது என்ன செய்யப்போகிறாய்? மனமே சொல். உண்மை சொல்லிக் கைதியாகப்போகிறாயா? பொய் சொல்லி மகேதலனாகப் போகிறாயா? அந்த மஹான், சாது மீரியல், 'யோக்கியமான மனிதனாயிரு' என்று உபதேசித்ததால், நீ இவ்வளவு தூரம் திருந்தினாய். 'நான் ஜாம்வல்ஜான் அல்ல' என்று ஒரு பொய் சொன்னால் போதும்: உன்னை யாரும் ருசுப்படுத்த முடியாது. இத்தனை ஏழைகளும், இத்தனை எளிய பெண்களும், தொழிலாளிகளும், ஆண்களும் உன்னை நம்பி வாழுகிறார்கள். பள்ளிக்கூடம், வைத்திய

சாலை, தொழிற்சாலை, வாணிபங்களெல்லாம் உன்னை நம்பிச் செழிக்கின்றன; நீ கைதியானால் இத்தனை உயிர்களும் வருந்தும். இந்த ஊரே வனாந்தரம் போலாகும். இத்தனைத் தான தருமங்களும் நின்று போகும். நீ ஒரு பொய் சொன்னால், எப்போதும் போல மதேலனாக வாழலாம். அந்த ஷாம் முத்தய் யாவை ஜாம்வல் ஜானென்று தீர்ப்புக் கூறி, நீ யிருக்க வேண்டிய கடுஞ் சிறையில் அவனைத் தள்ளி விடுவர் நீதியாளர். நீ இத்தனை ஏழைகளுக்கும் புண்ணியம் செய்துகொண்டு மதேலனாக வாழலாம். நீ கைதியானால், எல்லாரும் பரிகசிப்பார்கள். "இந்தக் கைதி தான் மதேலன்" எனக் காட்டுவர்.

3. ஆ! பொ-ய்! அந்தக் கருணை வள்ளலைக் கண்டு, அவரது அன்பால் நாயினும் கடையேன் திருந்திய பிறகுமா பொ--ய்! மனச் சாட்சியே, சுவர்க்க மிழந்து நரகமே சேரினும் பரவாயில்லை; வாயாற் பொய் சொல்லலாமா? சொன்னால் நீ சும்மா விடுவாயோ? "ஏன் பொய் சொன்னாய்?" என்று என்னைக் குடைவாயே. பொய் பேசிச் சுதந் திரமாக வாழ்வதினும், உண்மையைத் துணிந்து கூறிச் சிறை காக்கிறேன். அந்தக் கிழவனைக் காப் பாற்றுகிறேன். நாளை ஆராவுக்குச் சென்று, விசாரணையில் கலந்துகொள்ளுகிறேன்.

ஆம்............................

4. ஆமா? நீ சென்றால் இத்தனை ஏழைகளின் கண்ணீர் துடைப்பவர் யார்? பாவம்! அந்தப் பேதை

பாந்தேனுக்கு ஆறுதல் சொல்வோர் யார்? அவளது அருமை மகளை அழைத்துவர வேண்டாவா? ஆம், நான் உண்மையை வெளியிடக் கூடாது. எனது பழைய அடையாளங்களை எரித்துப் போடுகிறேன்.

° ° °

ஜாம்வல்ஜான் ஒரு இரகசிய அலமாரியைத் திறந்து, சில பழைய சட்டைகளையும் ஒரு தடிக் கம்பையும் எடுத்துத் தீயில் போட்டுச் சாம்பலாக்கிறான்; சாதுப்பிரியல் கொடுத்த வெள்ளி விளக்கையும் தீயிற் போடப் போனான். இதோ போடப் போகிறான்: அப்போது, "ஜாம்வல்ஜான், அடே ஜாம்வல்ஜான்" என்று அவன் மனச்சாட்சி கூவியது; கை நடுங்கியது. சாதுப்பிரியலின் அன்பு வடிவம் எதிரே நின்றது. "இந்தச் சாதுவைக் கண்ட பின்னும் பொய் சொல்லத் துணிவாயா? பொய் சொல்லிச் சுகப்படுவதினும், மெய் சொல்லித் துன்பப்படு........" என்று சிந்தித்து, முடிவில்........ ஆரா சென்று தன்னைத் தானே வெளியிட்டுக் கொள்ளத் தீர்மானித்தான் ஜாம்வல்ஜான்.

---

22. ஆராப் பயணம்

காலை நான்கு மணிக்கு வண்டி வந்தது. மதேலன் சற்றுத் திகைப்புடன் சிந்தித்தான்; சுற்றிப்பார்த்தான்; நாளையே மதேலனுயிருந்து தான்பெற்ற பெருமையெல்லாம் இழந்து ஆயுட்கைதியாகப் போவதை நினைத்தான்; "ஹூம், பரவாயில்லை; அவன் சித்தம் நடக்கட்டும்" என்று நேராக வண்டியில் ஏறிவிட்டான். மேயர் எங்கே போகிறான், எதற்காக, ஏன் தனியே போகிறான்? யாரும் அறிய முடியவில்லை. குதிரை கிட்டாய்ப் பறந்தது; ஜாம்வல்ஜான் சுற்றுலைக மறந்து மனவுலகிலே வசித்தான். இரண்டு மணி நேரத்தில் குதிரை 13 மைல் ஓடி, ஹெஸ்டனுக்கு வந்தது. அங்கே ஒரு உணவுச் சாலை யிருந்தது. அங்கே குதிரைக்குக் காணம் வைத்துத் தண்ணீர் கொடுத்து இளைப்பாறச் செய்தான் ஜாம்வல்ஜான்; ஆனல் வண்டியில் ஒரு சக்கரம் இனிப் பயணத்திற்குத் தாங்காது என்று கண்டான். வேறு சக்கரம் கிடைக்கவில்லை. 'மற்றொரு வண்டி யிருக்கிறதா?' என்று அவன் விசாரித்தான்; 'இல்லை' யென்றனர். அங்கிருந்தோர். "சக்கரம் நாளைத்தான் பழுது பார்த்துத் தர முடியும்" என்றான் தச்சன். "சரி, இதுவும் கடவுளிச்சை. நான் என்னை வெளிப்படுத்திக் கொள்ளாது, மதேலனுகவே யிருந்து ஏழைகளுக்குப் பணி செய்ய வேண்டுமென்று இறைவன் விரும்புகிறான் போலும்" என்று சிந்திக்கையில், ஒரு கிழவி

வந்து, "என்னிடம் ஒரு வில் வண்டியுள்ளது" என்றான். உடனே அதை விலைக்கு வாங்கிக்கொண்டு, அதில் குதிரையைப் பூட்டிக் கன வேகத்தில் புறப்பட்டான் ஜாம்வல்ஜான். நான்கு மணி நேரத்தில், 12 மைல் சென்றது குதிரை. மேலே செல்ல அதனால் இயலவில்லை. ஒரு புதிய வண்டியை அமர்த்திக்கொண்டு, ஆரா வந்து, உண்டிச்சாலையில் இறங்கினான் ஜாம்வல்ஜான். குதிரை மிகவும் களைத்துப் போயிருந்தது; அன்றிரவே ஜாம்வல்ஜான் புறப்பட விரும்பியதால், ஒரு போக்கு வண்டிக்கு அச்சாரம் கொடுத்து இடம் அமர்த்தி வைத்தான்; சாப்பாடு கொள்ளவில்லை; மனச்சாட்சி, "போ" என்று அவனை முன்னே உந்தியது. ஒரு ஏழையின் ஆத்மாவைக் கொண்டு, மதேலன், ஆரா நீதி மன்றத்தை அடைந்தான். நல்ல வேளையாக இன்னும் கச்சேரி நடந்தது. குழந்தையைக் கொன்ற ஒரு பெண்ணுக்கு ஜன்மத் தீர்ப்புக்கூறி, இப்போதுதான ஷாம்முத்தியனை விசாரிக்கத் தொடங்கினார் நீதியாளர். கச்சேரியில் 'ஜே, ஜே' என்று கூட்டம் இருந்தது. எள்ளுப் போட இடமில்லை. ஜாம்வல்ஜான் உள்ளே தலைகாட்ட முடியவில்லை; விசாரணை நடக்கிற கூடத்தின் கதவு மூடியிருந்தது.

மதேலன் :—கதவைத் திறக்க மாட்டார்களா?

காவற்காரன் :—ஊஹூம்.

மதேலன் :—ஏன்?

காவற்காரன் :—மன்றத்தில் கூட்டம் அதிகம்.

மதேலன் :—ஒருவருக்கு இடமில்லையா?

காவற்காரன்:—மூச்சுவிடக் கூடாது.

மதேலன் :—நீதிபதிக்குப் பின்னால் இடம் இருக்குமே?

காவற்காரன் :—அது தகுந்த உத்தியோகஸ்தருக்குத்தான் கிடைக்கும்.

மதேலன் :—அப்படியானல் சரி.

"திரு. மதேலன், மோந்த்ரேல் மேயர்" என்று ஒரு சீட்டெழுதி, "இதை நீதிபதியிடம் கொடுங்கள்" என்று தந்தான் மதேலன்.

..5. நானே ஜாம்வல்ஜான்

சீட்டைக் கண்டதும் நீதிபதி வியப்பும் களிப்புமுற்றார்: "மேயர் மதேலனுக்கு எனது பணிவுள்ள வந்தனம்" என்று எழுதிக் கொடுத்து, அவரை அழைத்துவரச் சொன்னார். முன்னே, "மூச்சுவிடக் கூடாது" என்று முரட்டுத்தனமாகச் சொன்ன சேவகன் மிகவும் பணிந்து, தணிந்து, மதேலனை நீதி மன்றத்துள் அழைத்துச் சென்று, "இதோ இந்தப் பொத்தானை அமுக்கி, இக் கதவைத் திறந்து, நீதிபதிக்குப் பின்னால் அமருங்கள்" என்று வணக்கமாகச் சென்றான், மதேலன் பொத்தானைத் தொடப்போனான். கை நடுங்கியது; உடல் வியர்த்தது; ஏதோ ஒன்று அவனைத் தடுத்தது; உள்ளே செல்ல

மனம் வரவில்லை; வெளியிலேயே சற்று உலாவிக் கொண்டே அவன் சிந்தித்தான்; பிறகு, "வந்தது வரட்டும், வாய்மையே பெரிது" என்று கதவைத் திறந்து உள்ளே சென்றான்; நீதிபதி வந்தனத்துடன் வரவேற்று அவனை அமர்த்தினார்: சபை முழுதும் அவனையே நோக்கியது. மதேலனுக்கு அறிமுகமான இரண்டொருவரும் அங்கேயிருந்தனர். ஆனால் மதேலன் விழிகள் கூட்டில் ஏறி நிற்கும் கைதியின் மேலே சென்றது. "ஆ! நானும் இந்த மாதிரிதான் ஆனேன்!" என்று திடுக்கிட்டான் மதேலன்.

மூன்று மணி நேரம் விசாரணை நாடகம் நடந்தது. வக்கீல்கள் பெரிய பெரிய சொல்லடுக்குகளுடன், அபூர்வமான அபிநயங்களுடன் ஆர்ப்பாட்டமாகப் பேசித் தள்ளுகின்றனர். ஷாம் முத்தையா இந்தவாய் வாளங்களைக் கண்டு திகைத்து நிற்கிறான். சர்க்கார் வக்கீல் வாய் பேரிகை யடிக்கிறார்:—

"நாம் ஒரு திருடனை மட்டும் பிடிக்கவில்லை; இந்தக் குற்றவாளி பழைய எத்தன்: பெரிய கைதி; அபாயமான திருடன்; இவனே தூலோன் சிறையில் 19 ஆண்டுகள் கடிய வேலை செய்யும் கைதியாயிருந்து விடுதலை பெற்றான்: உடனே வழிப்பறித் திருடனாகி, ஒரு ஏழைப் பையனைத் தடியால் மிரட்டிப் பணத்தைத் திருடினான். குற்றச் சட்டம் 385வது பிரிவின்படி இவனைத் தண்டிக்க வேண்டும்."

"பிறகு இந்தப் பக்காத் திருடன் மாயமாக மறைந்து விட்டான்; ஏழாண்டுகளாகப் போலீஸார்

தேடியும் அகப்படவில்லை. முடிவில் இப்போது கொத்துடன் ஆப்பிள் பழத்தைத் திருடி அகப்பட்டுக் கொண்டான். இவனே ஜாம்வல் ஜான்; உறுதி; சத்தியம்; கண்ணுக்கு மெய்யாகக் காண்கிறோம்.... ....குற்றச் சட்டம் 385-வது பிரிவின்படி."

எதிர்க்கட்சி வக்கீல் பேசினார்:—"கோர்ட்டார் இவனைக் கைது செய்தது எதற்காக? ஒரு ஆப்பிள் கொப்பு இவன் கையில் இருந்ததென்று தானே? சுவரேறிக் குதித்து அவன் அதைத் திருடினான் என்பது பிராதில் கண்டிருக்கிறது. அதைப் பிரதிவாதி மறுக்கிறான்; வழியில் கீழே விழுந்திருந்த கொப்பையே தான் எடுத்ததாகச் சொல்லுகிறான். மரத்திலிருந்து அதை அவன் பறித்ததற்குச் சாட்சியில்லை. இந்த வகையில் அவன்மேல் குற்றமில்லை. 'இவன் பழய கைதி. இவனே ஜாம்வல்ஜான்; ஷாம் முத்தய்யா என்று பெயரை மாற்றி வைத்துக் கொண்டிருக்கிறான்' என்கிறீர்கள். பிரதிவாதி அதை மறுக்கிறான். பிரதிவாதி அவ்வளவு பெரிய திருடனாகத் தோன்றவில்லை; அவன் படிப்பில்லாதவன், திரு திரு வென்று விழிக்கிறான்; இவனைக் கைது செய்த குற்றம் மிகவும் அற்பமானது; இவன்தான் ஜாம்வல்ஜான் என்று உண்மை விளங்கின பிறகே தான் இவன் மேல் நாம் நடவடிக்கை எடுக்கச் சட்டம் சம்மதிக்கும். இந்த நிலையில் பிரதிவாதி குற்ற மற்றவன் என்றே உறுதி கூறுகிறேன்."

சர்க்கார் வக்கீலுக்கு வந்துவிட்டது வீராவேசம்:

"இவனே ஜாம்வல்ஜான். இவன் திருடன்; சிறையிலிருந்து பலமுறை தப்பியோடிய கள்ளன். இவன் அபாயமானவன். 19 ஆண்டுகள் கடுஞ் சிறையில் வேலை கெட்டி வாங்கியும் இவன் கொழுப்புத் தணியவில்லை. இவன் ஒரு சிறு பையனை மிரட்டி வழிப்பறி செய்திருக்கிறான். இன்னும் திருட்டுத் தொழிலை விடாது ஆப்பிள் கொப்பை ஒரு வீட்டில் சுவரேறிக் குதித்துக் களவாடியிருக்கிறான்........"

இரண்டு வக்கீல்களும் வாய்ச் சிலம்பம் வீசினர். கூருள் கத்தி மாதிரி, சொற்கள், சொற்கள் மேற் பாய்ந்தன.

நியாயத் தலைவர் குற்றவாளியைக் குறித்து, "நீ என்ன சொல்லுகிறாய்? நீ ஜாம்வல் ஜான்: நீ ஆப்பிள் கொப்பைத் திருடினாய் என்கின்றனர். நீ ஜாம்வல்ஜானா இல்லையா? திருடினையா இல்லையா? சொல் உண்மையை" என்று அழுத்தமாகக் கேட்டார். ஷாம் முத்தய்யா சிறிது நேரம் ஒன்றுந் தெரியாது விழித்தான்: தலையை அசைத்தான்: பிறகு துப் துப் பென்று ஆவி வண்டி புகைப்பது போலப் பேசினான்:—

"கேளுங்கள், நான் பாரிஸில் வண்டி செய்து பிழைத்தவன்: பாஹாப் என்றவரிடம் நான் வேலை பார்த்தேன்: மழையும் பனியும் பாராமல் கடுமையாக உழைத்து, நாளைக்கு 30 காசு வாங்கிப் பிழைத்து வந்தேன். எனக்கொரு மகள் இருந்தாள். அவளை நான் அருமையாக வளர்த்தேன். அவள் மழையி

னும் வாடையிலும் பச்சைத் தண்ணீரில் இருந்து நாளெல்லாம் எசமான் வீடுகளுக்குத் துணி வெளுத்துப் பத்துக் காசு கொண்டு வருவாள்; அது தவிர வீடுகளையும் சுத்தம் செய்து வந்தாள்; காலை சென்றால் இரவு 7-மணிக்குத் தான் வீடு திரும்புவாள்.

நீதிபதி :—அதெல்லாம் உன்னை யார் கேட்டது? நீ ஜாம்வல்ஜானா இல்லையா? திருடனா இல்லையா?

ஷாம் முத்தையா :—வீட்டிற்கு வந்ததும் களைப்பினால் தூங்கிப்போவாள் என் மகள்........

நீதிபதி :—சய், கேட்ட கேள்விக்குப் பதில் சொல்.

ஷாம் முத்தையா :—அது தான் சொல்லுகிறேன். என் தங்கமகளை ஒரு பாவிப் பையனுக்குக் கட்டிக் கொடுத்தேன்.

நீதிபதி :—என்ன, மறுபடியும் உனது கதையா? என் கேள்விக்கு........பதில்? உம்....

ஷாம் முத்தையா :—அந்தப்பாவி என் மகளைப் போட்டு அடி அடி என்று அடித்தான். என் செல்வ மகள் செத்துப் போனாளய்யா! ஐயையோ! (அழுதான்).

சர்க்கார் வக்கீல் :—இதெல்லாம் குற்றத்தை மழுப்புவதற்கு இவன் கற்ற வித்தை.

பிரதிவாதி வக்கீல் :—சர்க்கார் வக்கீல் சொன்னதை நான் பலமாக மறுக்கிறேன். பிரதிவாதி படிப்பில்லாதவன்: குற்றமற்றவன். "ஷாம் முத்தையா, நீ ஜாம்வல்ஜானா? நீ திருடனா? இது

தான் அவர்கள் உன்னைக் கேட்பது. நேராகப் பதில் சொல்லு."

ஷோம் முத்தையா:—ஐயா, என் மகள் மிகவும் நல்லவள்; நடனமாடக் கூடப் போகமாட்டாள். செத்துப் போனாளையா............

வக்கீல்:—அட செய்! கேள்விக்குப் பதில் சொல். நீ ஜாம்வல்ஜானா?

ஷோம் முத்தையா:—அந்தப் பெயரைக் கேட்டது கூட இல்லையே!

வக்கீல்:—நீ ஆப்பிள் கொப்பைச் சுவரேறிப் பறித்தாயா?

ஷோம் முத்தையா:—இல்லவே இல்லை: அது கீழே கிடந்தது; எடுத்தேன்.

சர்க்கார் வக்கீல்:—முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைக்கிறாய்: உன் தாய் முத்தையா ஜான் என்பதை ஷோம் என்று மாற்றி, தாயின் பெயரும் சேர்த்து ஷோம் முத்தையா என்று பொய்ப் பெயர் வைத்துக்கொண்டு உன் திருட்டுத் தொழிலை நடத்தி வருகிறாய்.

நீ ஃபவரோலில் பிறந்தவன்; மரம் வெட்டிப் பிழைத்தவன்; பக்காத் திருடன்; மகா மாயாவி; தூலோன் சிறைக் கைதி. உண்மையா, இல்லையா?

ஷோம் முத்:—என்னையா அதிசயமாகப் பேசுகிறீர்கள்! நீர் சொல்வது சுத்தப் பொய். நான் ஒரு ஏழை; அனாதை; கதியற்றவன்; நான் தொழில் செய்து பிழைப்பவன்; திருடனல்லேன்; எனது

அருமை மகளை இழந்த பிறகு பாரிஸைவிட்டு ஊர் ஊராகத் திரிந்து அங்கங்குத் தொழில் செய்து பிழைத்து வந்தேன். நீங்கள் பெரிய பெரிய படிப்பாளிகள். உங்களுக்குப் பேசத் தெரியும்; நான் படிப்பில்லாதவன்; உங்களுக்குச் சரியாகப் பேசத் திறமையில்லாதவன். ஏதோ ஜாம்வல்ஜானும்! ஜான் முத்தையாவாம்! இந்தப் பெயர்களை நான் கனவிலும் கேட்டிலேன். என் பெயர் ஷாம் முத்தையா தான். என் மேல் ஏதேதோ பொய்க்கதை கட்டுகிறீர்கள். நீங்கள் புத்திசாலிகள்; நான் அறிவிலி. நான் பிறந்தவூர் இன்னதென்று எனக்கே தெரியாது; எனது தாய் தந்தையர் ஊருக்கு ஊர் பிரயாணம் செய்து வேலை செய்து பிழைத்தவர்கள் என்பதை மட்டும் அறிவேன். எனது தாய் என்னை, "சின்னப்பயலே" என்று அழைப்பாள். இப்போது நான் கிழவனாயிருக்கிறேன். நான் பாஷூப் என்பவரிடம் யோக்கியமாக வண்டித் தொழில் செய்து பிழைத்தேன். வேண்டுமானால் விசாரியுங்களையா. ஏதோ வழியில் ஒரு ஆப்பிள் கொப்பைக் கண்டெடுத்தேன்; திருடவில்லை........கண்ட கட்டுக் கதைகளையெல்லாம் புனைந்து ஏழையை இடும்பை செய்யவேண்டாம்.

சர்க்கார் வக்கீல்:—கனம் நீதிபதி அவர்களுக்கு முடிவான விண்ணப்பம். இவன் ஒன்று மறியாதவன் போலப் பாசாங்கு செய்கிறான்; இவன் ஜாம்வல்ஜானே. அதை நான் மெய்ப்பிக்கிறேன், பாருங்

கள். இதோ இன்ஸ்பெக்டர் திரு. ஜாவரின் அத்தாட்சி. ஜாவர் இன்று முதன்மையான ஒரு கடமையை நிறைவேற்ற வெளியூருக்குச் சென்றிருப்பதால் நேரே வரவில்லை. அவரது நேர்மையும், காரிய உறுதியும், திறமையும் நாம் அறிவோம். அவர் சொல்லுவதைப் பாருங்கள்: "நான் குற்றவாளியை நன்கு அறிவேன். அவன் பெயர் ஜாம் முக்தய்யா அல்ல: அவன் பழைய கைதி: மிகவும் பொல்லாதவன்: ஆளை ஏமாற்றி ஏய்வதில் கைகாரன்; மகா பலசாலி; முரடன்; பக்காத் திருடன்; அவனே ழாம் வல்ஜான். 19 ஆண்டுகள் கடிய வேலை வாங்கியபின், அரை மனத்துடனேயே அவனை அதிகாரிகள் விடுதலை செய்தார்கள். இத் திருடன் ஐந்தாறு ஆண்டுகள் மறைமுகமாகத் திரிந்தான். அவன் ஒரு வழிப்பறி செய்தது தவிர, திக்னே நகர் சாது மிரியல் வீட்டிலும் வெள்ளிச் சாமான்களைத் திருடியதை நான் நன்கறிவேன்: இப்போதும் அவனை நன்கறிவேன்." இவ்வாறு உறுதி கூறும் ஜாவர் மொழிகளை விட நமக்கு வேறு அத்தாட்சி வேண்டுவதில்லை. இன்னும் மூன்று சாட்சிகளைக் கொண்டு எனது கட்சியை ரூபிக்கிறேன். "வாருங்கள் பிரிவை (Brivet), ஷெனில்தியோ (Chenildiau), கோஷ்பை (Cochepaille)."

(மேற்சொன்ன மூன்று கைதிகளும் வருகிறார்கள்).

"கனம் நீதிபதியே, இவர்கள் துலோன் சிறை

யில் ஜாம்வல்ஜானுடன் இருந்த கைதிகள். இவர்களைச் சமூகமே விசாரிக்கட்டும்" என்றார் சர்க்கார் வக்கில்.

நீதிபதி:—அடே பிரிவை.

பிரிவை:—எஜமான், வணக்கம்.

நீதிபதி:—நீ ஜன்மக் கைதி; அதிகம் பேசக் கூடாது. கேட்ட கேள்விக்கு மட்டும் பதில் சொல்ல வேண்டும், தெரியுமா?

பிரிவை:—உத்தரவு, எஜமான்.

நீதிபதி:—இதோ கூட்டில் நிற்கும் மனிதனை நன்றாகப் பார்; இவன் துலோன் சிறையில் உன்னோடிருந்த கைதி ஜாம்வல்ஜான்தானா?

பிரிவை:—ஆமாம் எஜமான், இவனே என்னோடிருந்த ஜாம்வல்ஜான்; 1796 முதல் 1815 வரையில் துலோன் சிறையிலிருந்தான்; பலே தந்திரக்காரன். பல்வான்; இவன் ஜாம்வல்ஜானே.

நீதிபதி:—சரி; போய் உட்காரு. இரண்டாவது சாட்சி ஷெனில்டியோ, உண்மையாகச் சொல்லு. இந்த மனிதனை உனக்குத் தெரியுமா?

ஷெனில்:—நல்லாத் தெரியுமே எசமான், இவன்தான் ஜாம்வல்ஜான்; என்னோடே விலங்கு பூட்டப் பெற்றிருந்தான் துலோனில். இவனே ஜாம் வல்ஜான்.

நீதிபதி:—சரி, நீ போய் உட்கார். கோஷ்பை, குறிப்பாகப் பார்த்துச் சொல்; இந்த மனிதனை நீ அறிவாயா?

கோஷ்:—நல்லாத் தெரியுமே; இவனே ஜாம்

வல்ஜான். இவன் பெரிய முண்டன். இவன் எப்படிப்பட்ட பாரத்தையும் அலட்சியமாகத் தூக்குவான். இவனே ஜாம்வல்ஜான்.

நீதி:—சரி, நீ போய் உட்கார். இதைவிட வேறு அத்தாட்சி வேண்டுவதில்லை. குற்றவாளியே, இப்போது என்ன சொல்லுகிறாய்?

ஷாம் முத்தையா:—இது ஒன்றும் எனக்கு விளங்கவில்லை; எனக்கு நிற்க முடியவில்லை; மயக்கம் வருகிறது....

நீதி:—நமக்கு வேண்டிய அத்தாட்சிகள் கிடைத்துவிட்டன. சபையோர்களே, இனி நான் தீர்ப்புக் கூறுகிறேன். இந்த ஷாம் முத்தையாவே ஜாம்வல்ஜான் என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம்.

ஜூரர்கள்:—நாங்களும் அதையே ஆமோதிக்கிறோம்.

அடுத்தபடி நீதிபதி குற்றவாளிக்கு ஆயுட்சிறை விதிக்க வாயெடுத்தார். அப்போது மன்றம் நடுங்க ஒரு சிம்மம் கர்ச்சித்தது:—

“இங்கே பார், பிரிவை, ஷெனில்தியோ, கோச்பை, என்னைத் தெரியவில்லையா?”

சபை முழுதும் கல்லாய்ச் சமைந்து வியந்து நின்றது. குடல் நடுங்கும்படியான காட்சி! இடி விழுந்தாற்போன்ற செய்தி! சபையின் நடுவே ஒரு பெரிய மனிதன், எல்லாரும் புகழும் ஒரு அரிய மனிதன் வந்து நின்றான். அவனே அந்தச் சிம்ம

கர்ஜனை செய்தான். அவனை அங்குச் சுமார் 20 பேர்கள் நன்கறிந்து நன்கு மதிப்பவர்.

"ஆ! தந்தை மதேலரே!" என்று ஆரவாரித்தனர் சபையோர்.

மதேலனே அங்கிருந்து பேசுகிறான்; தைரியமாக உண்மை சொல்லுகிறான்; அமைதியாகப் பேசுகிறான்; மேற்சொன்ன மூன்று சாட்சிக் கைதிகள் முன் சென்றான் மதேலன்.

மதேலன்:—என்னை உங்களுக்குத் தெரியவில்லையா?

கைதிகள்:—ஆ! எஜமான், சலாம்.

மதேலன்:—கனம் நீதிபதியே, அந்த ஏழை ஷாம் முத்தையாவை உடனே விடுதலை செய்யுங்கள். நியாயச் சபையோரே, என்னைக் கைது செய்யுங்கள்; நீங்கள் தேடும் மனிதன் நா-னே-ஜா-ம்-வ-ல்-ஜான். சபை முழுவதும் வாயைப் பிளந்துகொண்டு ஆச்சரிப்படுகிறது! மதேலன் சொல்வதை யாரும் நம்பவில்லை: "ஐயையோ! மதேலனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது; வைத்தியரை அழையுங்கள்" என்கின்றனர் நியாய சபையார்.

சர்க்கார் வக்கீல்:—நியாய சபையோரே, இச்சம்பவம் நம்மைத் தூக்கிவாரிப் போடுகிறது; வருத்தமும் வியப்பும் நம் மனத்தைக் கவர்ந்தன; நமது காதுகளை நம்ப முடியவில்லை. நீங்களெல்லாம் மோந்த்ரேல் நகரத் தலைவரான புண்ணியவான், தருமவான், கனம் மதேலரின் புகழை நன்கு அறிவீர்கள்; அவரது

உத்தம ஒழுக்கம் உலகப் பிரசித்தி பெற்றது. அவர் மூளை பிசகித்தான் இப்படிப் பேசுகிறார். இங்கே யாராயினும் வைத்தியர்கள் இருந்தால் அவரைக் கவனியுங்கள்........உத்தமரே, கனம் மதேலரே, தாங்கள் தயவு செய்து நாற்காலியில் சென்று நிம்மதியாக அமருங்கள்.

மதேலர் :—சர்க்கார் வக்கீலுக்கு வந்தனம்; ஆனால் என் வைத்தியம் பிடித்து உளறவில்லை: அறிவுடனே பேசுகிறேன்: என் மனச்சாட்சி பேசுகிறது; அதை நான் ஒளித்துப் பொய் சொல்லத் துணியேன். நீங்கள் பெரிய பாவம் செய்யத் துணிந்தீர்கள். ஒரு குற்றமும் அறியாத இந்த வயது சென்ற ஏழையை அடிமைக் கைதியாக்க முனைந்தீர்கள். நான் உண்மை கூற முன் வந்தேன். நீதிமன்றத் தோழர்களே, இந்த ஏழையை விட்டு விடுங்கள்.

“அதோ சிலுவையில் இருக்கும் ஏசுநாதர் என்னைப் பார்க்கிறார். எங்குமுள்ள இறைவன் என்னைக் கண் கொட்டாது காண்கிறான். அவனுக்கு முன் நான் பொய் சொல்ல முடியுமா? நீதி சபையோரே, நானே ஜாம்-வல்-ஜான். என்னைக் கைது செய்து சிறைப்பிடியுங்கள். நானே என்னைப் புனைபெயரால் மறைத்து மேயர் மதேலனாக இருந்தேன்.”

“ சபையோர்களே, ‘ஜாம்வல்ஜான் பொல்லாதவன்; பக்காத் திருடன் ; கொடியன்; வலியன்’ என்றெல்லாம் பேசித் தீர்த்தார்கள் வக்கீல்கள் ; ஆம், நான் ஒரு காலம் திருடனாகவே இருந்தேன். நானே

சாது மிரியல் வீட்டில் வெள்ளிச் சாமானைத் திருடி-னேன்; நானே சின்ன சேர்வையின் பணத்தைப் பறித்துக் கொண்டேன். ஆனால், என்னைத் திருட-னாக்கியது எது? உங்கள் சட்டமே; என்னைக் கொடியனாக்கியது எது? சிறையில் நீங்கள் நடத்திய கொடுமையே! என்னைக் கல் நெஞ்சனாக்கியது எது? அரசியலின் கல் நெஞ்சே; சுள்ளி மாதிரி யிருந்த என்னைக் கொள்ளியாக்கியது எது? உங்கள் கொடு மைத் தீயே. ஆம், நான் முரடனே. கடுஞ்சிறையும், விலங்கும், தண்டனையும் நாயினும் கேடான கைதி வாழ்வும் என்னை முரடனாக்கின. சமூகக் கொடுமை என்னைத் தீயனாக்கியது. சிறை செல்லு முன்னே நான் ஏதுமறியாத ஏழையாய் மரம் வெட்டிப் பிழைத்துக் கொண்டிருந்தேன். சிறைவாசம் எனக்கு அரசையும் உலகையும் படம் பிடித்துக் காட்டியது. சட்டம் என்னைத் திருடனாக்கியது; சமூகம் என்னை முரடனாக்கியது. சபையோர்களே, என்னைத் திருத்திப் புனிதமாக்கி மதேலனாக்கியது எதுவென்று கேளுங்கள்; அதுவே எனது கண்கண்ட தெய்வம்; புண்ணிய மூர்த்தியான சாது மிரியலின் பேரன்பு; அன்பே என்னை அறவோனாக்கியது. ஊராரெல்லாம் புழுத்த நாயினும் கேடாக என்னைச் "சீ போ" என்று விரட்டி யடித்தனர். பணங் கொடுத்தும், உணவு தருவாரில்லை; இந்த அற்பப் பிராணிக்குத் தண்ணீர் கூடத் தர மறுத்தது சமூகம்! நானும் ஒரு சகோதரனே என்று யாரும் நினைக்கவில்லை. என்னை

வெறுத்துப் பகைத்துத் துரத்தி யடித்தது சமுதாயம். நான் பட்டினியால் இறந்து போயிருப்பேன். என்னைப் புன்னகையுடன் வரவேற்றவர் ஒருவரே. "ஐயா, நான் கைதி : திருடன் ; அபாயமானவன் ; என்னை எல்லாரும் வெருட்டி யடித்தனர். நீங்களும் அவ்வாறே, 'சீ, நாயே, போ' என்று துரத்துங்கள்" என்று நான் சொன்னேன் ; எனது சிறைச் சீட்டைக் காட்டினேன். அப்படி யிருந்தும், "எனக்கு உன் வரலாறு வேண்டாம் ; நீ என்னைப்போல ஒரு மனிதன் : பசி இருவருக்கும் ஒன்றுதான். எனக்குள்ள உணவை உனக்குத் தருகிறேன் ; எனக்கு ஆண்டவன் கொடுத்த வீடு உனக்கும் பாத்தியமே" என்று என்னை வரவேற்றுத் தனக்குச் சமானமாக வைத்து, விருந்தளித்துக் கட்டிலும் மெத்தையும் போட்டுப் படுக்கச் செய்த அந்தப் புண்ணிய மஹாத்மா, அவரே எனது குரு சாது மிரியல். இவ்வளவு அவர் உதவியும் எனது கல் நெஞ்சம் கரையா திருந்தது. சிறையில் சட்டம் என்னை நடத்திய கொடுமையால் நெஞ்சம் அவ்வாறு கருங் கல்லாகி விட்டது. அன்னமிட்ட மஹான் வீட்டிலும் வெள்ளிச் சாமானைத் திருடினேன். பொலீஸ்காரர்கள் என்னைப் பிடித்து அவரிடம் கொண்டு விட்டனர். அந்த உத்தமர் புன்னகை புரிந்து, இவையெல்லாம் தாமே ஏழைக்குத் தந்ததாகச் சொல்லி என்னை விடுவித்தார் ; வீட்டி லிருந்த இரண்டு வெள்ளி விளக்குகளையும் கொடுத்தார். அவ்விளக்குகள் எனது

அறிவைத் துலக்கின. "நண்பா, இவற்றை விற்று ஒரு தொழில் செய்து யோக்கியமாகப் பிழை. உன் பாவங்களெல்லாம் விலகின; இந்த வெள்ளிச் சாமான்களைத் தந்து உன்னைச் சாத்தானிடமிருந்து மீட்டிக் கடவுளிடம் தந்தேன்" என்றருளினார் எனது ரக்ஷகரான சாது மிரியல்.

மதேலன் :—நான் இனித் திருந்துவதாக வாக்களித்துச் சென்றேன்; இன்னும் என்னிடம் விலங்குத்தன்மை யிருந்ததால், சின்ன சேர்வையின் பணத்தைப் பறித்துக் கொண்டேன்; ஆனால், ஒரு நிமிஷத்தில் என்னை இரக்கம் கவர்ந்தது. அந்தப் பையனைத் தேடித் தேடிப் பார்த்தேன்; காணேன். மீண்டும் சாது மிரியலின் வாயிற் சென்று, மண்டி போட்டுக் கண்ணீர் விட்டழுது, மன்னிப்பிரந்து வருந்தினேன். அது முதல் நான் புதிய மனிதனானேன்; வெள்ளிச் சாமான்களை விற்று ஒரு தொழில் செய்ய ஆரம்பித்தேன். அதன் மூலமாக ஏராளமான செல்வமும் கிடைத்தது. அத்தனையும் ஏழைகளுக்குத் தருகிறேன். இப்போது நான் நடத்தும் வாழ்வை உலகம் அறியும். அரசாங்கம் இன்னும் என்னைக் கைதியாகவே மதிக்கிறதா? பழைய தீமையை விட்டுத் திருந்தி ஒழுங்காக வாழுகிறேன். இன்னும் என்னைத் திருடனாகவே மதிக்குமா அரசாங்கம்? திருந்திய பிறகும் ஒரு மனிதனுக்கு மன்னிப்பில்லையா? இல்லையானால், இதோ ஜாம்வல்ஜான் நானென்கிறேன். என்னைக் கைது செய்து சிறையிடுங்கள்.

நீதி சபையார் :—நம்பமாட்டோம், நம்பமாட்டோம். தந்தை மதேலன் பைத்தியம் பிடித்தே உளறுகிறான்.

மதேலன் :—ஜாவர் இருந்தால் சரியான சாட்சி சொல்வான். நம்புங்கள் சபையோர்களே, சமூகக் கொடுமையாலும் சட்டக் கொடுமையாலும் முரடனாகி, கல் நெஞ்சனாகிப் பிறகு ஒரு சாதுவின் அன்பால் அன்பனாகிச் சாதுவாக வாழும் நானே ஜாம்வல்ஜான். இதோ என்னை மெய்ப்பிக்கிறேன். பிரவை, இதோ பார், என்னை அறியாயா? நானும் நீயும் துலோன் சிறையில் கடுங்காவலிருக்கவில்லையா?

பிரவை :—இந்தச் சட்டையை மறந்து ஜெயில் உடையுடன் பார்த்தால் தங்களைப் பார்த்த நினைவு வருகிறது.

மதேலன் :—ஷெனில் திபோ, உன்னை நாஸ்திகன் என்று நாங்கள் அழைத்தோமா இல்லையா? உன் முதுகில் T. F. P. என்ற எழுத்துக்களைப் பொறித்துச் சூடு போடும்போது நானே அருகிலிருந்தேன்.

ஷெனில் :—ஆமாம், மெய்தான்.

மதேலன் :—கோஷ்பை, நெப்போலிய மன்னன் ஹெலனாவுக்குக் கப்பலேறிய நாளில் முடியாசு வந்ததற்கு அடையாளமாக உனது தோளில் 1815௵, மார்ச்சு முதல் தேதி யென்று சூடு போட்டார்களல்லவா? காட்டு அடையாளத்தை.

ஷெனில் :—ஆம், மெய்தான், இதோ அடையாளம்.

மதேலன் :—பார்த்தீர்களா, கனவான்களே, நானே ஜாம்வல்ஜான். என்னைக் கைது செய்யுங்கள்.

நீதித் தலைவர், சர்க்கார் வக்கீல், மற்ற வக்கீற் குமாங்கள், பொலீஸ் புலிகள் எல்லாரும் திகைத்து நிற்கின்றனர். யாரும் மதேலனருகே செல்லவில்லை.

மதேலன் :—முடிவாகக் கூறுகிறேன். இங்கே நீதிபதிகளுக்காகவும், பொலீஸாருக்காகவும் நான் எதுவும் கூறவில்லை; மனச்சாட்சியே நீதிபதி. இந்த ஏழையைக் காப்பாற்ற அந்த நீதிபதி தூண்டினான். அதற்காக உண்மை சொன்னேன். முன்னே நான் திருடன்; இப்போது சாதுவாயிருக்கிறேன்.

இந்த ஏழையை விடுங்கள்; என்னைச் சிறையிடுங்கள். ஒருவரும் என்னைக் கைதி செய்யவில்லை; எனது மனச்சாட்சி ஏவிய கடமையைச் செய்துவிட்டேன். நான் விடைபெற்றுக் கொள்ளுகிறேன்; எந்த நிமிஷத்திலும் நீங்கள் என்னைக் கைது செய்யலாம். என்மேல் உங்களுக்கு இரக்கம் வந்துவிட்டது போலும். அதுவும் கடவுளிச்சை.

மதேலன் வெளியே சென்றான்; சபையில் ஈ ஆடவில்லை. யாரும் அவனைத் தடுக்கவில்லை; எல்லாரும் மதேலனுக்கு விலகி வழிவிட்டனர். நீதிமன்றம் கற்சிலைபோல் அமர்ந்திருந்தது. ஒரு மணி நேரத்திற்குப் பிறகு ஷாம் முத்தையா விடுதலையடைந்தான். நீதிபதி ஜாவருக்கு ஒரு அவசர உத்தரவெழுதினார்.

25. பிள்ளைப் பாசம்

மகளைக் காணவே அவாவி, ஃபாந்தேன் உயிர் ஊசலாடியது. "மதேலன் இன்னும் வரவில்லையா? மதேலன் என் கோசத்தை அழைத்து வரவில்லையா?" என்று புலம்பினாள் ஃபாந்தேன்.

ஆராவிலிருந்து அன்றிரவே ஜாம்வல்ஜான் வீடு வந்து சேர்ந்தான்; முதலில் தான் பணம் போட்டிருந்த பாரிஸ் லஃபித் பாங்கிற்குக் கடிதம் எழுதிப் போட்டான்; இனித் தன் கதி என்னவாகும் என்பதை நன்கு அறிந்தான். அரசாங்கம் தன்னை ஆயுட் கைதியாக்கி நரகவேதனைப் படுத்தும் காட்சி அவனெதிரே நின்றது. இருந்துமென்ன? 'மனச் சாட்சியை ஒளிக்காது, உண்மை வழியில் நடப்போம்' எனத் துணிந்தான். மனிதச் சட்டம் தன்னை நரகத்தில் விழ்த்தியிருக்கிறது. மனச் சாட்சியான தெய்வம் தனது வாய்மையைக் கண்டு மகிழ்கிறது. அந்த மகிழ்ச்சியே அவனுக்குப் பேரின்பமளித்தது. இந்த ஏழாண்டுகளாகத் தான் ஏழைகளுக்கு உதவி செய்து வந்தது அவனுக்குப் பெருமகிழ்வீந்தது. சாது மிரியலின் ஆவி தன்னை வாழ்த்துமென அவன் உறுதிகொண்டான்; இப்போது தன் வீடு, தொழிற்சாலைச் சொத்துக்களையெல்லாம் என்ன செய்வதென தீர்மானித்து வைத்துக்கொண்டான். சிலுவை முன்னிருந்து அரைமணி நேரம் தொழுது ஃபாந்தேனைப் பார்த்தான்.

“ஆ! வந்துவிட்டார் மதேலன். என் கோஸத் எங்கே? என் குழந்தையைக் கட்டித் தழுவிக் கொள்ளுகிறேன். என் செல்வக் கண்மணியை முத்த மிடுகிறேன்! கொண்டுவாருங்கள், என் அருமைக் குழந்தையை!........”

குழந்தையை அணைத்துக் கொள்ளப் பேராவலுடன் கையை விரித்தெழுந்தாள் ஃபாந்தேன்.

மதேலன் :—அம்மா, கோஸத் நன்றாயிருக்கிறாள்; அழகாயிருக்கிறாள்; அமைதியாயிரு. மூன்று நாளில் குழந்தை வருவாள்.

பாந்தேன் :—என் கண்ணு, என் முத்து, என் தங்கம் நன்றாயிருக்கிறாளா? குழந்தை பாவம் என்னைக்கூட மறந்துபோயிருப்பாள்; இப்பொழுது ஏழு வயது சிறுமியாயிருப்பாள்; தட்டாரப் பூச்சி பிடித்து மகிழ்வுடன் விளையாடுவாள். ஒரு கவலையும் இல்லாது என் கோஸத், என் மகள், ஓடியாடி விளையாடுவதைக் காண எவ்வளவு இன்பமாயிருக்கும்! அந்தத் தென்னடியர்கள் அவ்வளவு பணம் வாங்கிக் கொண்டார்களே! குழந்தையை நன்றாக வைத்துக் கொண்டிருக்கிறார்களா? என் பொன்னுக்கு நல்ல உணவு தருகிறார்களா? என் அழகுக்கு நல்ல உடை உடுத்துகிறார்களா? நான் நல்ல அணிகளைக் கோஸத்திற்காகவே அனுப்பினேன். அவற்றைக் கோஸத் போட்டுக்கொண்டு சந்தோஷமா யிருக்கிறாளா? ஆ! நான் எவ்வளவு கஷ்டப்பட்டு என் குழந்தையை வளர்த்தேன்!

அவள் நன்றாயிருப்பதைக் கேட்டால், அத்தனைக் கஷ்டமும் மாறிப்போகும்.

மதேலன்:—அம்மா, அதிகம் பேசாதே; உடம்பிற்குக் கெடுதல் நேரிடும்; உடம்பு சரியானதும் குழந்தையைப் பார்க்கலாம்.

இச்சமயம், வெளி முற்றத்தில் ஒரு சிறு பெண் சிரித்துப் பாடி விளையாடிக் கொண்டிருந்தது. அதை ஃபாந்தேன் பார்த்தாள்.

ஃபாந்தேன்:—அதோ ! என் கோஸத். என் கோஸத் சிரித்து விளையாடுகிறாள். என் அமுதம் நன்றாகப் பாடுகிறாளே ! என் கிளி பாய்ந்து பாய்ந்து விளையாடுகிறாளே ! என் உடம்பு தேறியதும் ஒரு அழகான வீடு கட்டுவேன்; அதில் ஒரு தோட்டம் போடுவேன். அந்தத் தோட்டத்தில் என் கோஸத் ஓடியாடி விளையாடுவாள்; அவளுக்குப் படிப்புச் சொல்லித் தருவேன்; அவள் படிப்பதைக் கேட்டு மகிழ்வேன்.........

இவ்விதம் பேசி மகிழ்ந்து சிரிக்கையில், திடீரென்று திகைத்தாள் ஃபாந்தேன். "ஆ! தெய்வமே ! ஐயையோ ! மீண்டுமா ? ஆ ! அந்தோ !" என்று சோர்ந்தாள். திரும்பிப் பார்த்தால், ஜாவர் வந்து நமன் மாதிரி நிற்கிறான்; புலி மாதிரி மதேலனைப் பார்க்கிறான்.

---

26. புலி பாய்கிறது

ஜாவருக்கு மனத்தில் பால் வார்த்ததுபோலிருந்தது. மதேலன் தன்னையே ஜாம்வல்ஜான் என்று மெய்ப்பித்த செய்தியால், ஆரா நீதி மன்ற அதிகாரிகள் மதேலனைக் கைது செய்ய உத்திரவனுப்பியதும், ஜாவர் வெகு குதூகலமாக வந்து நின்றான். வாசலில் 5 பொலீஸ் வீரரை வைத்துவிட்டு, ஒரு தடியைக் கையில் தாங்கி, உள்ளே நுழைந்து, தனது புலிக் கண்களால் மதேலனையே குறித்து நின்றான். பிறகு தனது முழு அதிகாரத்துடன், "கனம் மதேலன் என் பின்னே வரட்டும்" என்றான். ஃபாந்தேன் தன்னைக் கைது செய்யத்தான் ஜாவர் வந்திருக்கிறான் என்று நடுங்கினாள்.

மதேலன்:—அம்மா, நீ அமைதியாயிரு; அவன் உனக்காக வரவில்லை. ஜாவர், உன் விருப்பத்தை அறிந்தேன்.

ஜாவர்:—சீக்கிரம், ஊம், சட்டென்றெழுந்து வரவேண்டும். ஊம்.

மதேலன்:—அம்மா, பயப்படாதே............நிம்மதியாயிரு.

ஜாவர்:—இன்னும் தாமதமா? ஹூம்.

புலிபோலப் பாய்ந்து, கழுத்துப் பட்டையைப் பிடித்தான் ஜாவர்.

ஃபாந்தேன்:—ஐயோ! மேயர் மதேலன்! தந்தை மதேலன்!

ஜாவர் :—மேயருமில்லை, தந்தையுமில்லை. கைதிகளுக்கெல்லாம் மேயர் பட்டமும், அதிகாரமும் வந்தால் ஊர் வாழ்ந்து போகும்.

மதேலன்:—ஜாவர்....

ஜாவர் :—என்னை மிஸ்டர் இன்ஸ்பெக்டர்வாள் என்றழைக்கவேண்டும்.

மதேலன் :—சரி, இன்ஸ்பெக்டர்வாள், இரகசியமாக ஒரு செய்தி.

ஜாவர் :—இரகசிய மெல்லாம் பலிக்கா; வா, எழுந்து.

மதேலன் :—இன்ஸ்பெக்டர்வாள், தங்களைப் பணிந்து வேண்டிக் கொள்ளுகிறேன்.

ஜாவர் :—பணிவெல்லாம் நடக்காது, மதேலன்.

மதேலன்:—இந்தப் பெண்ணின் காதில் விழாது ஒரு செய்தி.

ஜாவர் :—அந்த விலைப் பெண்ணைப்பற்றி எனக்கென்ன கவலை?

மதேலன் :—தயவு செய்து மூன்று நாள் சாவகாசம் கொடுங்கள். இவள் மகள் கோஸத்தை நான் அழைத்து வருகிறேன். மகளைக் காண இவள் தவிக்கிறாள். தாங்களும் வேண்டுமானால் என் கூட வாருங்கள்.

ஜாவர் :—இதென்ன கேலியா? அடா உன்னைத் தெரியாதா? டிமிக்கி யடிக்கவா வேலை செய்கிறாய்? மூன்று நாளாம்! நன்றாயிருக்கிறது. உன்னை விட்டு விடவா? முடியாது, வா.

உடனே ஃபாங்தேன் தொண்டைக்கும் நெஞ்சிற்கும் இழுத்துக் கொண்டே, 'ஐயோ! என் குழந்தை! என் குழந்தை! என் கோஸத்! என் கோஸத்தை அழைத்து வரச் செல்லவில்லையா? மேயர் மதேலரே, கோஸத் எங்கே? ஆ! கோஸத்! ஆ! மேயர் மதேலரே!

ஜாவர்:—மறுபடியுமா? மேயராவது, மதேலராவதடீ! சிரிப்புத்தான்! இவன் ஒரு திருடன்; பழைய கைதி. ஜாம்-வல்-ஜான்! அவனைத்தான் இப்போது கைது செய்கிறேன்.

ஃபாங்தேன்:—ஹா கோஸத்! என் குழந்தை! குழந்தை! ம-தே-ல-ன் கோ-ஸ-த்............

அவ்வளவுதான்; மார்படைத்தது; மூச்சு நின்றது; முகம் கறுத்தது; வாய் பிளந்தது; கண் விழித்தது; தலை கவிழ்ந்தது; கைமட்டும் குழந்தையை அள்ளியெடுப்பது போல அசைந்து தொப்பென்று வீழ்ந்தது; மூச்சு அடங்கிற்று; உடம்பு விறைத்தது. ஃபாங்தேன் உயிர் நீத்தாள்.

"ஐயோ! நீ அவளைக் கொன்று விட்டாய்!" என்று ஜாம்வல்ஜான் ஜாவர் பிடியினின்று சரேலென விலகினன்.

ஜாவர்:—அதெல்லாம் நடவாது. வா, உடனே. என் காலம் வீணுகிறது. உன் பேச்சு எனக்கு வேண்டாம். வாசலில் எனது சேவகர் நிற்கின்றனர். வா, உடனே, இல்லேல், கெல்தா கொடுப்பேன்.

ஜாம்வல்ஜானா பயப்படுகிறவன்! அந்த அறை மூலையில் ஒருபழைய இரும்புக்கட்டில் சிதைந்து கிடந்தது. அதை மடக்கி ஒடித்து, ஒரு பெரிய இரும்புக் கம்பியைக் கையில் பிடித்து, ஜாவரைப் பார்த்தான் மதேலன். ஜாவர் நடுங்கி விலகிப் போய் நின்றான். ஜாம்வல்ஜான் பலசாலி. மிஞ்சி வந்தால் தன் மண்டையை உடைத்து விடுவான் என்பது அவனுக்குத் தெரியும்.

"ஜாவர், இப்போது என்கிட்ட வராதே; எட்டி நில்" என்று கட்டளையிட்டான் ஜாம்வல்ஜான். ஜாவர் வெளியே சென்று தனது ஆட்களை அழைத்து வரலாம் என்று எண்ணினான்; ஆனால் அதற்குள் ஜாம்வல்ஜான் மாயமாக ஓடிப்போவான் என்றெண்ணிக் கண் கொட்டாமல் கதவில் சாய்ந்து கொண்டு அவனையே பார்த்து நின்றான்.

ஜாம்வல்ஜான் ஃபாந்தேனைத் துயருடன் பார்த்தான்; உலக வாழ்வு இவ்வளவுதான் என்று மனத்தில் நினைத்தான்: "உன் குழந்தையை எப்படியாவது நான் காப்பாற்றுகிறேன்" என்று வாக்களிப்பது போல ஏதோ முணுமுணுத்தான்; மண்டி போட்டுத் தொழுதான்: இறந்தவள் கையை முத்தமிட்டான்: ஜாவர் பக்கம் திரும்பி, "சரி, இப்போது தயார், செல்வோம்" என்றான்.

ஜாவர், பொலீஸ் சேகவர் சூழ, ஜாம்வல்ஜானை உள்ளூர் சிறைக் கோட்டத்தில் அடைத்துச் செருக்குடன் மகிழ்ந்தான்.

27. சிறை தப்பினான்

ஊரெல்லாம் இதே பேச்சு. நேற்று எங்கும் தொழில், எங்கும் சுறுசுறுப்பு, எங்கும் மதேலனுக்கு வாழ்த்து! இன்று தொழிற்சாலை அடங்கியது. ஊர்வம்புதான் கேட்டது: 'உனக்குத் தெரியாதா? ஐயே, மதேலன் சமாசாரம் கேட்டாயோ? அவன்பெயர் மதேலனில்லை—ஜாஞ்சாலன், கஞ்சாவால், ஜொஞ்சாஜரன், புஞ்சாஜான் என்றொரு விகாரமான பேராமே அவனுக்கு! அவன் ஒரு பக்காத் திருடனாமே! 19 வருஷம் துலோன் சிறையிலிருந்த கைதியாமே! அவன் மேலே எனக்கு எப்போதும் சந்தேகமே! தனது களவாணித்தனம் வெளிவரக் கூடாதென்று தான் தருமப் பிரபு மாதிரிப் பாசாங்கு செய்தான். சை! இவ்வளவு தான்! ஒரு திருடனா நமக்கு மேயர்! ஐயே! உலகப் புகழ் எல்லாம் இவ்வளவுதான்!'

மேயர் வீடு விரிச்சிட்டது; வீட்டைக் காக்கும் கிழவியும், வைத்தியசாலையில் தொண்டு செய்த "எளியை" (Simplise) என்ற கிழவியும் இன்னும் மதேலனைப் பக்தி விசுவாசத்துடன் நினைத்தனர்.

வீடு காக்கும் கிழவி இன்று வழக்கம்போல இரண்டு மெழுகுத் திரிகளை மதேலன் அறையிற் கொண்டு வைத்து, எஜமான் வருவார் என்ற நம்பிக்கையுடன் காத்திருந்தாள்.

இச்சமயம் யாரோ மதேலன் அறையில் மெல்ல நுழைந்து விளக்கேற்றக் கண்டாள் கிழவி.

கிழ :—யாரது?

ஜாம் :—ஆ !............ஜாம்வல்ஜானே.

கிழ :—மேயர் எஜமான் வந்தீர்களா ? உங்களை விடுதலை செய்தார்களா........?

ஜாம் :—சத்தம் போடாதே ; இந்தச் சிறைக்கு நான் பயந்தவனா? ஒரு ஜன்னல் கம்பியை நெம்பி ஒடித்து, உயரத்திலிருந்து குதித்துத் தப்பி வந்து விட்டேன். உடனே ஸாம்ப்ளிஸ் அம்மையைக் கூப்பிட்டு வா, இரகசியமாக.

ஜாவரின் புலிக் கண்களில் பொடி தூவி எப்படித் தப்பினான் ஜாம்வல்ஜான் ! ஆச்சரியம் ! ஒரு இரும்புக் கம்பியிருந்தாற் போதும் ; எத்தகைய பூட்டையும் அவன் திறந்து விடுவான். அவன் எப்படித் தப்பினான் என்று பொலீஸ் புலிகளுக்குத் தெரியவில்லை. ஊரெல்லாம் தேடுகின்றனர்.

ஜாம்வல்ஜான் விளக்கேற்றியதும் முதலில் சாதாமிரியல் தந்த வெள்ளி விளக்குகளைப் பூஜை சாமான் போலப் பய பக்தியுடன் ஒரு துணியில் சுற்றிக் கக்கத்தில் வைத்துக்கொண்டான். முன்னே அவன் வைத்திருந்த முண்டுத்தடியை எரித்ததில் இரண்டு பூண்கள் மீதி கிடந்தன ; அத்துடன் சின்ன சேர்வையிடம் பறித்த பணமும் இருந்தது ; மூன்றையும் அவன் ஒரு காயிதத்தில் முடிந்தான் : “இவை நான் ஜாம்வல் ஜான் என்று மெய்ப்பிக்க நீதி மன்றத்தில் கூறிய

சாமான்கள். இப் பணம் நான் சின்ன சேர்வை யிடம் பறித்தது" என்றெழுதி வைத்தான்; தான் சிறையிலிருந்து கொண்டுவந்த கறுப்பு ரொட்டியைக் கடித்துண்டான்; மதேலனுகத் தான் வாழ்ந்த கன வெல்லாம் அத்துடன் முடிந்த தென்ருன்; மேயரா யிருந்து தான் வாழ்ந்த வைபவங்களை ஒரு நொடி சுற்றிலும் பார்த்து அனைத்தையும் ஒரு நாடகம் போலக் கருதினுன்; சிறிது சிந்தனையில் இருந்தான். அப்போது சகோதரி ஸாம்ப்ளிஸ் வந்தாள். ஜாம் வல்ஜான் ஒரு காயிதத்தில் சில வரிகள் எழுதி அவ ளிடம் தந்தான்; "என் சகோதரீ, இந்தச் சீட்டை இவ்வூர் குருக்களிடம் தரவேண்டும்" என்ருன்.

சகோதரி அதை மெல்லப் படித்தாள்:—'குருக் களுக்கு மதேலன் வணக்கமுடன் எழுதிக் கொள்ளு வது:—நான் இங்கு விட்டுப் போகும் எல்லாப் பொருள்களையும் தாங்கள் பார்த்துக் கொள்ளவும்; அவற்றினின்று என் விசாரணைச் செலவும் இன்று உயிர் நீத்த ஃபாந்தேனின் ஈமச் செலவும் தாராள மாகச் செய்யவும். மீதி அத்தனைப் பொருளையும் ஏழைகளுக்குத் தாராளமாக வாரி விடவும்.'

"அடக்கம் செய்யுமுன் ஃபாந்தேனைத் தாங்கள் பார்க்க வேண்டாவா?" என்ருள் சகோதரி ஸாம்ப்ளிஸ்.

"நேரமில்லை. என்னைக் கண்டு பிடிக்கப் பொலீ ஸார் இதோ வருகின்றனர்" என்று ஜாம்வல்ஜான் சொல்லுமுன், வாசலில் சத்தம் கேட்டது. குப்

பென்று விளக்கணைத்துப் பதுங்கிக் கொண்டான் ஜாம்வல்ஜான்.

சகோதரி ஸாம்ப்ளிஸ் அந்த அறையைப் பூட்டி விட்டுக் கூடத்தில் வந்து தொழுது கொண்டிருந்தாள்.

ஜாவர், பொலீஸ்காரருடன் உள்ளே நுழைந்தான். அங்கு மிங்கும் ஆளைத் தேடினான்; கூடத்திற்கு வந்தான்; சகோதரி ஸாம்ப்ளிஸ் தொழுது கொண்டிருப்பதைக் கண்டான்; தொழுகையைக் கலைக்காமல் காட்டி நின்றான். தொழுகை முடிந்ததும், "சகோதரி, இந்த வீட்டில் தாங்கள் மட்டுந் தான் இருக்கிறீர்களா?" என்று வினவினான்.

சகோதரி :—ஆமாம்.

ஜாவர் :—மன்னியுங்கள்; என் கடமையைச் செலுத்தவே வந்தேன். இன்று சாயங்காலம் ஒரு கைதி தப்பியோடிவிட்டான். அவன் பெயர் ஜாம் வல்ஜான். அவனைத் தாங்கள் காணவில்லையா?

சகோதரி :—ஊஹூம், எனக் கொன்றும் தெரியாதே!

ஜாவர் :—தாங்கள் சொல்வது உண்மையாகவே யிருக்க வேண்டும். மன்னியுங்கள், வணக்கம், உத்திரவு பெற்றுக் கொள்ளுகிறேன்.

ஜாவர் சென்றுவிட்டான். சகோதரி தன் ஆயுளில் இந்தத் தடவை தான் பொய் சொன்னாள். அவள் பொய் அளவற்ற நன்மை செய்தது. குற்றமற்ற நன்மை செய்யும் பொய்யும் மெய்யாகவே மதிக்கத்தக்க தன்றோ?

ஜாவர் சென்று ஒரு மணி கழித்து, ஒரு மனி தன் தொழிலாளி உடையுடன் மரங்களிடையே மறைந்து ஊரைத் தாண்டிப் பாரிஸை நோக்கி ஓடினான். அவனே ஜாம்வல்ஜான்.

மதேலன் வீடு, நிலம், பொருள் எல்லாவற்றையும் குருக்கள் பார்த்துக் கொண்டான்; ஃபாந்தேனைச் சொற்பச் செலவில் அடக்கம் செய்தான்; ஜாம்வல் ஜான் விசாரணைக்குச் சிறிது எடுத்து வைத்தான்; தனக்கு வேண்டுமட்டும் எடுத்துக் கொண்டான்; மீதி யெல்லாம் ஏழைகளுக்கே செலவிட்டான்.

---

28. பத்திரிகைப் புளுகு

முன்னே 24,601-வது எண் கைதியாயிருந்த ஜாம்வல்ஜான் துலோன் கடுஞ் சிறையில் 9430-வது எண் கைதியாக மீண்டும் அடைபட்டான். பொலீஸ்காரர்களுக்கு உச்சி குளிர்ந்தது. நீதியை ஒழுங்காக நிலை நாட்டி விட்டதாகச் சர்க்கார் அதிகாரிகள் மகிழ்ந்தனர். மறு நாளே பத்திரிகைகளில் ஒரு நீண்ட அறிக்கை வெளிவந்தது:—

"கலே (Calais) துறைமுகத்தின் சுற்றுப் புறங்களில் ஒரு அதிசயச் சம்பவம் நடந்தது. மாந்த்ரேல்

என்னும் ஊரில், தார், கறுப்புச் சாயம், கண்ணடித் தொழில்கள் அபாரமாக முன்னேற, ஊர் முழுதும் செழிப்புற்றது. இவை அவ்வூரில் முன்பு இருந்த தொழில்களே. அவற்றை ஒரு புதிய மனிதன் அபாரமாக வளர்த்துப் பெரிய லாபம் சம்பாதித்துப் புகழ்பெற்றான். அதனால் அவனுக்கு மேயர் பதவி கிடைத்தது. மதேலன் என்ற புனை பெயர் கொண்டு மறைவாக வாழ்ந்த அவனே ஜாம்வல்ஜான். அவன் 1796-ல் திருட்டுக் குற்றம் சாட்டப் பெற்றுத் தூலோன் சிறையில் அடைபட்டான். அவன் பொல்லாத் திருடன்: சிறையினின்று நான்கு முறை தப்பியோடினான்: 19 ஆண்டுகள் சிறை காத்து வெளி வந்த பின்பும், இரண்டு பெரிய திருட்டுக் குற்றங்களைச் செய்தான். போலீஸார் கண்ணுக்குத் தட்டுப் படாமல் மதேலன் என்ற புனை பெயர் பூண்டு மறைந்திருந்த அவனை இப்போது சாமார்த்தியமாகக் கண்டுபிடித்தோம்: மீண்டும் சிறையிலடைத்தோம். மீண்டும் அவன் தப்பியோடி நான்கு நாட்களுக்குப் பிறகு பிடிபட்டான். அவன் லபீத் பாங்கில் ஏராளமான பணம் போட்டிருந்தான்: அதை வாங்கி எங்கேயோ புதைத்து வைத்திருக்கிறான்: அத்தொகை அவன் தொழிலிற் சம்பாதித்ததே."

இதற்குமேல் பாரிஸ் பத்திரிகை சாயம் பூசி ஒரு அறிக்கை கொட்டையெழுத்தில் வெளியிட்டது:—

மோசமான கைதி

"ஜாம்வல்ஜான் என்ற அபாயமான கைதி, மதேலன் என்ற புனைபெயருடன் மோந்த்ரே வில் தொழில் நடத்தி ஏராளமாகச் சம்பாதித்து ஆட்களை ஏமாற்றிவந்தான். இந்தத் திருட்டு அயோக் கியனை, இன்று பொலீஸார் கண்டுபிடித்து மீண்டும் சிறையிட்டனர். அந்தக் கள்ளன் மீண்டும் தப்பி யோடி, நான்கு நாளைக்குப் பிறகு பாரிஸிலிருந்து மாந்த்ரேலுக்குப் போகும் வழியில் பிடிபட்டான். இவன் பெரிய முண்டன். இவன் ஒரு விலை மகளை வைத்துக் கொண்டிருந்தான். அவளுக்கு ஒரு மகளும் உண்டு. அந்த விலைமகள் செய்த அக்கிரமத்திற்காகத் தண்டித்த பொலீஸ் அதிகாரியை இத் திருடன் எதிர்த்தான்.

மோந்த்ரேல் சிறையை உடைத்துக் கொண்டு தப்பிப் பாரிஸுக்கு ஓடித் தனது பாங்குப் பணத்தை வாங்கி, எங்கேயோ புதைத்து வைத்து விட்டு வருகிற போது தான் இவன் மீண்டும் பிடிக்கப்பட்டான். பொலீஸார் இவன் முன்னே செய்த வழிப்பறிக்காக விசாரித்தார்கள். பொலீஸ் அதிகாரிகள் இவனது கள்ளத்தனங்களை வெளிப்படுத்தினர்: 'இவன் பெரிய வழிப்பறித் திருடன்; ஒரு திருட்டுப் படையை இரகசியமாக வைத்துக் கொண்டு நாடு முழுதும் கொள்ளையடித்தான்' என்று சாதித்தனர். அதனால் முதலில் இவனுக்கு மரண தண்டனை விதித்தனர். பிறகு காருண்ய முள்ள மன்னர் அரசாங்கம் இந்தக்

கள்ளனுக்கும் இரக்கங் காட்டி, ஆயுள் முழுதும் சிறையில் கடுமையான வேலை செய்ய விதித்தது. கைதி தனக்குப் பரிந்து எதுவும் பேசாது மௌன மாயிருந்தான். அவன் இப்போது துலோன் சிறையில் அடைபட்டுள்ளான்.”

இதற்குமேல் கட்டுமானம் செய்த பத்திரிகை களும் உள்ளன. தமக்கு வேண்டிய பேரை வான ளாவ உயர்த்தி, வேண்டாத பேரைத் தூற்றும் பத்திரிகைப் புழுக்கள் ஒய்வதென்றோ!

---

29. மதேலனுக்குப் பிறகு

மதேலனுக்குப் பிறகு மோந்த்ரேல் பாழடைந்தது. அவன் பொருளை ஏழைகள் பங்கிட்டுக் கொண்டு சென்றனர். தொழிற் சாலை மூடுண்டது. “இந்தத் திருடனுக்கு நான் இளைத்தவனா? பார், நானும் தொழில் நடத்துகிறேன்” என்று சிலர் கிளம்பினர். ஒருவருக்கொருவர் போட்டி, பொறா மைகளால் சண்டைபோட்டு நஷ்ட மடைந்தனர். ஏழைகள், தந்தை யிழந்த பிள்ளைகள் போல வறுமை வாய்ப்பட்டு வருந்தினர்.

மற்றொரு அதிசயம்! மோம்பெர்மேலைச் சுற்றி யுள்ள காடுகளில் பேய்கள் உலாவுவதாக ஜனங்கள்

பெரிதும் நம்பினர். இரவில் யாரும் அங்குப் போவதில்லை. அந்தக் காடு காவலுக்காகப் புலாத்திரயன் (Boulatruelle) என்பவனைச் சர்க்கார் நியமித்தது. புலாத்திரயன் பழைய கைதி; வழிப்பறி பைல்வான்; கள்ளுக் குடத்தில் மூழ்கிக்கொண்டே யிருப்பான். கள்ளுக்குப் பணம், கொள்ளை யடிப்பதைத் தவிரக் கதி யில்லை. அவன் கொலைக்கு அஞ்சமாட்டான். தென்னடியனுக்கு அவன் ஆருயிர்த் தோழன் என்றால், வேறு வர்ணனை வேண்டாம். இருவரும் கூட்டுக் களவாணிகள். புலாத்திரயனை இருட்டில் காண்பவர், 'சாத்தான், பேய்' என்பர்.

மரியாதையாக ஒரு பெட்டிச் சாராயமும் கொஞ்சம் பணமும் தந்தால் புலாத்திரயன் ஆட்களை விட்டுவிடுவான். இல்லையேல், அவன் கையில் கொலைக் கோடறி எப்போதும் இருக்கும்.

ஓரிரவில் பலமாகக் குடித்து விட்டு, புலாத்திரயன் காட்டு வழியாக வந்தான். அப்போது ஒரு பெட்டியுடன் யாரோ ஒருவன் காட்டிற்குள் ஓடினன். அவனைத் தொடர அவனுக்கு முடியவில்லை. மூன்று மணி நேரத்திற்குப் பிறகு அதே மனிதன் திரும்பி வந்தான். அவன் கையில் அப்போது பெட்டியில்லை; ஒரு மண்வெட்டி மட்டுமே இருந்தது. ஆள் தொழிலாளிபோல உடை தரித்திருந்தான். ஆள் தன்னைவிடப் பத்து மடங்கு முண்டனு யிருந்ததால் புலாத்திரயன் அவனை அணுகாது அஞ்சி மறைந்தான்.

அன்று முதல் புலாத்திரயனும் தென்னடியனும் இரவில் காடெல்லாம் குழி தோண்டிப் பார்த்து வருகின்றனர்.

இந்த இரகசியம் பின்னால் தெரியும்.

---

30. கடலில் மூழ்கினன்

1823-ம் ஆண்டு, பிரான்ஸிற்கும் ஸ்பெய்னுக்கும் ஒரு போர் நடந்தது. அப்போது பிரான்ஸில் போர்போன் (முடியரசு) ஆட்சி நடந்து கொண்டிருந்தது. புரட்சியில் அவ்வளவு இரத்தஞ் சிந்தி உயர்த்திய சுதந்திரக் கொடி தாழ்ந்தது. மாட்ரிட் முடியரசு குடும்பத்தைக் காக்கவே இப் போரில் பிரான்ஸ் துணை புரிந்தது. ஸ்பெய்ன், முடியரசிற்கு எதிரிடையான கிளர்ச்சித் தலைவருக்கு ஏராளமான பணம் அள்ளிக்கொடுத்து, இச்சண்டையில் வெற்றி பெற்றது.

இச் சண்டையின் போது ஒரு கடற்படை நடுக்கடலுக்குச் சென்றது. அதன் கப்பல்களில் 'ஓரியன்' ஒன்று. அது ஒரு சம்பவத்தால் பழுது பட்டுத் துலோன் துறைமுகத்திற்கு வந்து சேர்ந்தது. ஓரியன் மிகப் பெரிய போர்க் கப்பல். அந்தக் கப்பலைப் பார்க்கத் துலோன் கடற்கரையில் ஏராளமான கும்பல் கூடியிருந்தது. கப்பல் பழுது பார்ப்பதை எல்

லோரும் அதிசயமாகப் பார்த்தார்கள். பாய் மரத்தைச் சரியாக அமைப்பதற்காக ஒரு மாலுமி மேலே ஏறினான். உச்சிக்குச் சென்று கயிறுகளை யிறுக்கி முடியும்போது, அந்த மாலுமி கால் தவறினான். அபாயம்! அவன் கயிற்றுடன் அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருந்தான்; இன்னும் ஒரு நிமிஷத்தில் கடலில் விழுந்து விடுவான். யார் அவனுக்கு உதவி செய்வர்? எல்லோருக்கும் உயிர் வெல்லம்; அஞ்சி வியந்து பார்க்கிறார்கள் கப்பல் வீரர்கள். ஆள், "ஐயோ! செத்தேன்" என்று அலறுகிறான். அந்தக் கப்பலில் துலோன் கைதிகளும் சுமை தூக்கிக் கடினமான வேலை செய்தனர். அக் கைதிகளில் ஒருவன், "என்னுயிரைக் கொடுத்து அந்த மனிதனைக் காக்கிறேன்" என்று முன்வந்தான். சரி என்று அனுமதித்து, அவன் கால் விலங்குகள் அறுக்கப்பட்டன. ஒரு நொடியில் அந்தக் கைதி பாய்மரத்தில் ஏறினான்; ஏறும்போதே மெல்லக் கை விலங்குகளையும் கழற்றி விட்டான்; உயரச் சென்று பாய்மரத்தில் பலமான கயிற்றைக் கட்டித் தொங்கிக் கொண்டே அபாயத்திலிருந்த மனிதனைக் கட்டிப் பிடித்தான்; பாய் மரத்திற்குக் கொணர்ந்தான்; மெல்லக் கீழே யிறங்கி விடுவித்தான். அந்த ஆள் பிழைத்தான். எல்லாரும் இதைக் கண்டு கைதியை வியந்து போற்றினர். ஆனால் கைதி, இறங்கும்போது கால் தடுமாறிக் கடலில் விழுந்து மறைந்தான். கப்பல் வீரரெல்லாம் தேடித் தேடிப் பார்த்தனர். ஆள்

அகப்படவில்லை. மறு நாள் துலோன் பத்திரிகையில் இச்செய்தி வெளிவந்தது:—

"17-11-1823, நேற்று ஒரு ஜன்மக்கைதி ஓரியன் கப்பலில் சுமை தூக்கி வேலை செய்தான்; அபாயத்தில் இருந்த ஒரு மாலுமியைக் காப்பாற்றப் பாய் மரத்தின் மேலே ஏறினான்; மாலுமியைத் தைரியமாகக் காப்பாற்றினான். ஆனால் இறங்கும்போது கைதி திடீரென்று கடலில் விழுந்து மூழ்கிப் போனான். அவன் உடல் கூட அகப்படவில்லை. இம்மனிதன் துலோன் சிறையில் 9430-வது எண் கைதி; பெயர் ஜாம்வல்ஜான்."

---

31. நரியும் புலியும் நடத்தும் கட்கடை

மோம்பெர்மேல் காடு சூழ்ந்த சிற்றூர்; வானம் காத்த நிலம். ஊருக்கப்புறம் உள்ள ஒரு காட்டருவியிலிருந்து தண்ணீர் சுமந்து வரவேண்டும். தண்ணீர் வண்டியடித்தே சிலர் அவ்வூரில் பிழைப்பு நடத்தினர். இப்போது கிறிஸ்தமஸ் கொண்டாட்டம். ஊர் அமளி படுகிறது. புதிய கடைகள் வந்துள்ளன. பாரிஸ் கோமாளிகள் வந்து கூத்தாடுகின்றனர். வித்தைக்காரர் வேடிக்கை செய்கின்றனர். இச்சமயம் தென்னடியர் கடைக்கும் நல்ல வருமம்படி வந்தது. தென்னடியர் வீட்டில் வண்டிக்

காரரும், வியாபாரிகளும் கூடிக் குடிக்கின்றனர்; குடி வெறியில் பாடுகின்றனர்; ஆடுகின்றனர்; கூச்சற் போடுகின்றனர். தென்னுடியன் சாப்பிடு கின்றவர் பக்கத்திலிருந்து தாஜாப் படுத்துகிறுன்; "நன்ருகச் சாப்பிடுங்கள்; பலமாகக் குடியுங்கள்; இன்றைக்கிருப்பார் நாளைக்கில்லை; இன்னும் இரண்டு திராம் விடுங்கள் உள்ளே; வயிற்றுக்கு வஞ்சனை பண்ணவேண்டாம்; எங்கள் சாராயம் போர்டோவி லிருக்கும் எமது திராட்சைத் தோட்டத்தில் சுத்த மாகச் செய்யப்பட்டு இங்கு வருகிறதாகும்; உடம் புக்கு நல்லது; பகலெல்லாம் அலைந்திருக்கிறீர்கள்; களைப்புத்தீர ஒரு போத்தல் விடுங்கள் உள்ளே" என்று பணம் பறிக்கிறுன்; குடிப்பவருக்குத் தக்க படித் தானும் தமாஷாகப் பேசுகிறுன்; தனது சரக்குகளை யெல்லாம் உதறுகிறுன்.

தென்னுடியன் வண்டிக்காரரிடம், "நெப்போலி யனுக்குப் பின்னே நான் ஐரோப்பா முழுதும் சுற்றி யிருக்கிறேன்; வண்டி வண்டியாகச் சரக்குகள் கொண்டு சேனைகளுக்குத் தந்திருக்கிறேன்" என் பான்; வியாபாரிகளிடம், "நான் பண்ணுத வியா பாரம் கிடையாது; நெப்போலியனுக்குப் பிறகு எனது கடை முழுகிப்போயிற்று. அதை யேன் சொல்லுகிறீர்கள்" என்று ஒரு கப்பி கட்டுவான்; கொஞ்சம் படித்தவர்களானுல், "ராஸீன், மாலியர் முழுதும் எனக்குப் பாடம். எத்தனையோ நாடகங்க ளில் ஆடியிருக்கிறேன். நானே சொந்தத்தில், 'காதல்

மணுட்டி' என்ற நாடகம் எழுதியிருக்கிறேன்" என்று உடானடிப்பான்; பேச்சு வாக்கில், "இவருக்குச் சாராயம் கொண்டு வா" என்பான். தென்னடியள் கணப்புக் காய்ந்து கொண்டே, "அடி மூதேவி, சோம்பேறிக் கழுதை, என்ன செய்கிருய்? கொண்டுபோ, சாராயம்" என்று அதட்டுவாள். யாரை? ஏழைக் கோஸத்தைத் தான். குழந்தை நடுங்கிக்கொண்டே ஒரு கிண்ணத்தில் சாராயம் ஊற்றிக்கொண்டு போவாள். "தரித்திரப் பிணமே, பெரியவருக்கு இந்தக் கிண்ணத்தில்தான் கொண்டு வருவதோ! ஒரு பெரிய கோப்பை நிரம்பக் கொண்டு வா, மூதேவி, முட்டாள், கழுதை" யென்று குழந்தையை வெருட்டுவான் அக்கொடியோன். ஒரு துளி சிந்தினல் பூசை கிடைக்கும். குழந்தை கவனமாகப் பெரிய கோப்பையில் ஊற்றிக் கொண்டு போவாள். "சரி, உடனே இருவருக்கும் ஒரு தட்டுச் சாப்பாடு கொண்டுவா. இவருக்கு ஒரு ரொட்டி கொண்டுவா. இவருக்கு மீன் குழம்பு கொண்டுவா. இவருக்குக் கோழிக்கறி கொண்டு வா" என்று தென்னடியன் அதிகாரஞ் செய்வான். 'கொண்டு போ, உம், சீக்கிரம்' என்று தென்னடியள் கெடுபிடி செய்வாள். அவளது செல்வ மக்கள் சிரிப்பர். ஐயோ! பாவம்! பரிதாபம் கோஸத் நிலை!

இப்படியும் ஒரு நெஞ்சம் உண்டா? இந்தத் தென்னடியர் புலியா, நரியா? தென்னடியள்

சிவத்துக் கொழுத்துப் பருத்துத், தடித்த காட்டானை; தொண்டை திறந்தால் இடியும் புயலுமாயிருக்கும்; தளுக்கு மினுக்குச் சவடால், அரட்டைகளைப் பார்த்தால் இவள் ஒரு வேசி மகள் என்று யாரும் சொல்வர். பொலீஸ் அதிகாரி மாதிரியே அதிகார தோரணையில் தென்னடியள் பேசுவாள். ஒரு மிடா சாராயமும் உள்ளே விட்டு, அவள் அதிகாரம் பண்ணத்தொடங்கினல், ஆண் பிள்ளைகள் நடு நடுங்குவர்.

தென்னடியனைத் தவிர அவளுக்கு யாரும் மதிப்பில்லை. தென்னடியன் குள்ளன்; ஒல்லி; எலும்பாயிருப்பான்; ஆளுக்குத் தக்கபடி நடந்து தனது காரியத்தைச் சாதிப்பான். ஆட்களுக்குக் குல்லா போட்டுத் தலையைத் தடவுதலும் அவனுக்குத் தெரியும். அரட்டி மிரட்டி இடுப்பிலிருப்பதைப் பறித்துக்கொள்ளவும் அவனல் முடியும்; அதற்கேற்ற சகாக்களையும் அவன் கைக்குள் வைத்திருக்கிருன்; தான் பெரிய புலவன் என்பான்; கடவுள் இல்லையென்பதே கல்வியின் பயன் என்பான்; நேருக்கு நேராகக் காணும் பொருளே தனக்கு உண்மையென்பான்; அங்குமிங்கும் பார்த்துப் பாடம் பண்ணிய சில மேற்கோள்களை அடுக்கித் தனது நாஸ்திகத்தையே பிடிவாதமாகச் சாதிப்பான்; தான் வாதர்லூவில் ஒரு தளகர்த்தனைக் காப்பாற்றிய வீரத்தை வர்ணிக்கத் தொடங்கினல், அளக்க முடியாத சரடுகளைத் திரித்து விடுவான்.

தெனாடியன், ஊர் சுற்றி வயிறு வளர்க்கும் இனத்தைச் சேர்ந்தவன்; உலாந்தாவில் சில காலம் திரிந்து கொண்டிருந்தான்: 1815-ல் நெப்போலியன் போர் புரிந்த இடங்களில் ஒளிந்து மறைந்து பிணங்களைப் புரட்டி, அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டு போய் வயிறு வளர்த்து வந்தான். நாம் முன்பு சொல்லியபடி வாதர்லூப் போரில் இறுதியாகத் திருடிய பணத்தைக்கொண்டு மோம்ஃபெர்மேயில் கள்ளுக்கடை வைத்தான். கடையில் லாபமில்லை; சாப்பாட்டிற்குக் கூடத் தன்னைக் கட்ட முடியவில்லை. ஃபாந்தேன் அனுப்பிய பணம் உதவியாயிருந்தது. அவள் இறந்தபின் கடன் வாங்க நேர்ந்தது. இந்த ஆண்டு (1825) கடன் தொல்லை அதிகரித்தது. தனது கிடங்கில் குடிக்க வருவோர் இடுப்பைத் தடவத் தொடங்கினான் தெனாடியன். இரண்டு பெண்களுடன் இந்தத் தெனாடியனுக்கு இப்போது மூன்று வயது ஆண் குழந்தை யொன்றிருந்தது. அதன் பெயர் குரோஷன். தெனாடியனுக்குப் பெண்கள் மேலேதான் பிரியம். இந்தப் பேய்கள் கையில் அகப்பட்டுக் கோஸத் என்ன பாடு பட்டாள்! ஆ! இரத்தக் கண்ணீர் வருகிறது! ஆலையில் அகப்பட்ட கரும்பு மாதிரிக் குழந்தை நொந்து நசுங்கி நறுங்கிப் போனாள்.

கிறிஸ்தமஸ் இரவில், அகாலத்தில் நாலு வழிப் போக்கர் வந்து சேர்ந்தனர். கோஸத்தின் குடல் நடுங்கியது. என்? அவள்தான் அவர்களுக்கு வேண்

டிய பணிவிடைகளைச் செய்ய வேண்டும். வந்தவர் களை உட்காரவைத்துத் தென்னடியள் தண்ணீர்ப் பானையைப் பார்த்தாள். சொட்டுத் தண்ணீர் கூட இல்லை. வந்த வழிப்போக்கர் குதிரைக்குத் தண் ணீர் காட்ட வேண்டும். குழந்தை கோஸத் குளி ரால் நடுநடுங்கிக் கொண்டு ஒரு மூலையில் ஒன்றி நின்றுள். "எங்கே அந்தக் கழுதை? போ, உடனே கொண்டுவா தண்ணீர். போ, நாயே, நிற்கிருயா? வைக்கட்டுமா முதுகு வீங்க?" என்று மிரட்டிப் பெரிய வாளியைக் குழந்தையிடம் கொடுத்தாள் இரக்கமில்லாத அரக்கி. அந்த வாளியில் கோஸத் உட்காரலாம். அது அவ்வளவு பெரியது. "சீக்கிரம் தண்ணீர் கொண்டுவா; இந்தா, வரும்போது இந்தப் பணத்திற்கு ரொட்டிக்கடையில் ஒரு பெரிய ரொட்டி வாங்கிவா, போ" என்று அவள் விரட்டினுள். பணத்தைப் பையில் போட்டுக்கொண்டு, பெரிய வாளியைத் தூக்கிக்கொண்டு வெளியே சென்றுள் குழந்தை கோஸத். அந்தத் தெருவில் பொம்மைக் கடைகள் அழகாக அலங்கரித்து வைக்கப்பட்டிருந் தன. குழந்தைகளுக்கு நவநிதியைவிட ஒரு அழகிய பொம்மையில் விருப்பம் அதிகமிருக்கும். ஒரு கடையில் ஒரு பெரிய பெண் பொம்மை அவள் கண் களைக் கவர்ந்தது. அந்தப் பொம்மை ஒரு அரசி மாதிரி அலங்கரித்து வைக்கப் பெற்றிருந்தது. அதை வாங்கும் பணக்காரர் இன்னும் வரவில்லை. கோஸத் அந்தப் பொம்மையைப் பார்த்துத் திகைத்து

வியந்து நின்றாள். “ஆ! இந்தப் பொம்மையை வைத்து விளையாடும் குழந்தை பாக்கியசாலி தான். எனக்கு யார் இதை வாங்கித் தருவர்! இதை விட்டுப் போக மனமில்லையே! எனக்கொரு தாயார் இருந்தால் இதை வாங்கித் தருவாள்!” என்றெல்லாம் கனவு கண்டு தான் புறப்பட்ட காரியத்தையும் மறந்து நின்றாள் கோஸத். அப்போது ஒரு இடி முழக்கம் கேட்டது. “கொடுக்கட்டுமா பூசை? போ, குட்டிக் கழுதை: உன் லட்சணத்திற்கு பொம்மை வேறு பார்க்க வேண்டுமோ? கொண்டு வா, தண்ணீர்” என்று பின்னே வந்து உறுமினாள் தென்னாடியள். குழந்தை நடுநடுங்கிக் கொண்டு பொம்மையை மனத்தில் வைத்துக் கொண்டே விரைந்தது.

---

32. காட்டில் குழந்தை

தென்னாடியள் என்பது குழந்தை சோஸத்திற்குச் சிம்ம சொற்பனம். தன் பின்னால் அவள் வருகிறாள் என்றே நினைத்து, வெருண்டு முன்னே நடந்தாள் கோஸத். கடைகளின் வெளிச்சம் மறைந்தது. கிராமத்தின் சிறு தெருக்களில் வெளிச்சமில்லை. இருட்டுக் கும்மென்றிருந்தது. பனி கொட்டியது. நாய் நரிகள் கூடப் பொந்துகளில் ஒளிந்துகொள்

ளும். இந்தப் பனியிருளில் எட்டு வயது குழந்தை தனியே சென்றாள். அவளைப் பார்த்த இரண்டொரு பெண்கள் பரிதாபப்பட்டனர்.

ஊர் முனையில், காட்டில் நரிகள் ஊளையிடுகின்றன. ஊரோசை அடங்கிய இரவில் இந்தக் காட்டிற்குள் எப்படிப்பட்ட தைரியவானும் செல்லத்தயங்குவான். கோஸத்தின் குடல் நடுங்கியது. "அம்மா, பயமாயிருக்கிறதே! இந்தக் காட்டில் பேய் பிசாசுகள் உலாவுகின்றன; நரிகள் ஊளையிடுகின்றன; விஷப் பாம்புகள் சீறுகின்றன; நான் எப்படிப் போவேன்! ஊற்றில் தண்ணீர் இல்லை யென்று சொல்லி விடுகிறேன்" என்று சிறிது பின்னே நடந்தாள் கோஸத். உடனே தெனாடியர் கிலி பிடித்தது. 'தெனாடியப் பேயை விடக் காட்டுப் பேய்க்குச் சிறிது இரக்கம் இருக்கும்' என நம்பி அவள் முன் சென்றாள். குடல் நடுங்கப் பேயச்சம் முன்னே பிடித்துத் தள்ள, பக்கம் பாராமல், கோஸத் ஓட்டமாக ஓடி, ஊற்றை யடைந்தாள்; இப்படிப் பல தடவைகள் இரவில் தண்ணீரெடுக்க வருவது வழக்கமாதலால் அவளுக்குப் பாதை நன்கு தெரிந்தது. சுற்றிலும் சேறு படிந்த நாணல்களைத் தாண்டிக் கொண்டு, கோஸத் ஊற்றின் கரையை அடைந்தாள்; அருகிலிருந்த ஒரு மரத்தைப் பற்றிக்கொண்டு ஊற்றில் தண்ணீரெடுத்தாள். குனியும்போது அவள் மடியிலிருந்த பணம் ஊற்றில் விழுந்து விட்டது; அதைக் குழந்தை கவனிக்கவில்லை; தண்ணீர் மொண்டதும் கோஸத்

திரும்பினாள். வாளி கனத்தது. காலடி வைக்குமுன் கை விண்ணிட்டுப் போனது. அவளது கந்தலும் நனைந்தது. குளிர் பல்லைக் கிட்டியது. மூச்சைப் பிடித்துக்கொண்டு இரண்டு கைகளாலும் வாளியைத் தூக்கிக்கொண்டு கொலைக் பத்தடி வைத்தாள். கை முறிந்து போகும் போலிருந்தது. அதற்கு மேலே செல்ல முடியவில்லை. குழந்தை, ஒன்றுந் தோன்றாமல், விம்மி விம்மி அழுது கொண்டு தலை சுழன்று புல்லில் விழுந்தாள்: பயத்தால் கண்ணை மூடிக் கொண்டாள்; கண்ணீர் பெருக்கினாள்: எல்லையற்ற இருள் விண் இக் குழந்தையின் துயரைப் பார்த்து மௌனமாயிருந்தது. காடு முழுதும் கரும் பேய் படைகளாகத் தோன்றியது குழந்தைக்கு. பேய்கள் தன்னைத் தின்னப் போவதாகவே நினைத்துக் குடல் கலங்கினாள் குழந்தை.

'எங்கேனும் ஓடிப்போவோம்' என்று நினைத்தாள் 'எங்கு ஓடுவது? தென்னையன் பிடித்துக் கொண்டால் உயிரெடுத்து விடுவானே!' என்று நினைத்தாள்; மீண்டும் எழுந்து வாளியை முக்கி முணங்கித் தூக்கிப் பத்தடி நடந்தாள்: களைத்துப் போய் உட்கார்ந்தாள்: தென்னையன் அடிப்பான் என்ற பயத்தால் மீண்டும் வாளியைத் தூக்கிக் கொண்டு இடுப்பு முறிய நடந்தாள். முடியவில்லை. "என்ன செய்வேன்! கடவுளே, இந்த வாளி கனக்கிறது; நான் சிறு பெண்; தூக்க முடியவில்லை; தனியே காட்டிருளில் குளிரும் பயமும் நடுக்குகின்

றன; தாமதமானல் தென்னடியர் என்னை வெதுப்புவர். தெய்வமே, நீயே துணை" என்று வாய்விட்டலறி அழுதுகொண்டே நாலடி வைத்தாள் கோஸத். ஆம், ஏழைக்கு இறைவனே துணை. அவன் எங்கு மிருக்கிறான். மனிதரெல்லாம் கைவிட்டோடுவர்; வஞ்சனை செய்வர். வஞ்சமற்ற நண்பன் ஒருவனே. அவனே இறைவன். அவனே கோஸத்தை இந்த இருட்காட்டில் காப்பாற்றினன். திடீரென்று வாளி இலேசானது. யாரோ ஒருவன் வாளியை வாங்கிக் கொண்டான்; பேசாமல் குழந்தையையும் கூட்டிக் கொண்டு, காட்டைத் தாண்டி ஊர் எல்லைக்கு வந்தான்.

---

33. இவன் யார்?

இரக்கமே வடிவான இவன் யார்? பாரிஸில் நடமாட்டமில்லாத ஒரு ஒதுக்கமான பகுதியில் ஒரு புதிய மனிதன் இன்று பிற்பகல் இரண்டு மணிக்கு உலாவிக் கொண்டிருந்தான். அவனுக்கு அறுபதாண்டுகள் மதிக்கலாம். தலை நரைத்தது. நெற்றி திரைத்து, உதடுகள் சுருங்கியிருந்தன. நடை தளரவில்லை. ஆள் திடசாலி; பலசாலி; முழங்கால் வரை நீண்ட ஒரு பழைய கிழிந்த சட்டையணிந்து, முகத்தை மறைக்கும் படியான பெரிய தொப்பி

போட்டுக் கொண்டிருந்தான்; பார்ப்பதற்குப் பஞ்சை போலிருந்தான்; இடக் கையில் துணியில் சுருட்டிய ஒரு சிறு பொட்டணமும், வலக் கையில் ஒரு உரத்த தடியும் வைத்துக் கொண்டிருந்தான். அவன் யாருடனும் பேசாமல், மனிதர் உறவையே விரும்பாமல் அங்குமிங்கும் வீடுகளைப் பார்த்துக் கொண்டே சென்றான். அதே நேரம் தனது பரிவாரங்களுடன் லூயி மன்னன் (லூயி XVIII) அவ்வழியாகச் சென்றான். இரண்டு மணிக்கு, அடிக்கடி லூயி XVIII ஒரு வனத்திற்கு வேட்டையாடச் செல்வதுண்டு. அரசர் பவனி வெகு ஆடம்பரமாக இத் தெரு வழியே செல்லும். அங்குள்ள எளியவர்களெல்லாம் மகாராஜாவைக் கண்டு கும்பிட்டு நிற்பர். "போ, போ" என்று வாட்படை வீரர் அவர்களை ஒதுக்க, கம்பீரமான அலட்சியத்துடன் தெருர்ந்து செல்வான் லூயி XVIII. இன்று அரச சேவகர் மேற்சொன்ன புதிய கிழவனைப் பார்த்து விட்டனர்; 'சதிகாரனோ!' என்று சந்தேகித்தனர். அக் காலம் மன்னன் கண்ட பேரையெல்லாம், 'சதிகாரன், புரட்சிக்காரன்' என்று பிடித்துச் சிறையிட்டு வந்தான். இப்புதிய மனிதனை ஒரு பொலீஸ் புலி தொடர்ந்தான். அப்புலியின் விழிகளையும் ஏமாற்றிப் புதிய மனிதன் ஒரு குட்டிச் சுவரின் மறைவில் பதுங்கியிருந்து விரைந்தான். அங்கு மோம்ட் பெர்மேலுக்குச் செல்லும் வண்டி வந்தது. அதில் வாடகை தந்து, அவன் ஏறியமர்ந்தான்;

வழியில் ஒரு சிற்றூரில் இறங்கினான்; ஒரு காட்டிற்குள் மறைந்து போனான்; இதற்குள் இடம் இருட்டிப் போயிற்று; காட்டில் யாரும் நடமாட்டமில்லை; காட்டிற்குள் வெகு தூரம் சென்று, இம் மனிதன் இங்குமங்கும் மரங்களைக் குறிப்பாகப் பார்த்தான்; ஒரு பெரிய கற்குவியலைக் கண்டான்; அதனின்று கணக்காகச் சில எட்டுகள் வைத்தான். அங்கே இரண்டு பெரிய மரங்கள் பிணைந்திருந்தன. அவை மிகப் பழையன. அவற்றில் ஒரு துத்தநாகத் தகடு இணைக்கப்பட்டிருந்தது. அந்தத் தகட்டை மெல்ல நீக்கினான் இம் மனிதன். மரப் பொந்து தெரிந்தது. அதை ஒட்டித் தரையில் பெரிய குழி யொன்றிருந்தது. அக் குழியிலிருந்து அவன் ஒரு சிறு மூட்டையை எடுத்துக் கொண்டான்; மீண்டும் குழியையும் பொந்தையும் கவனமாக மூடி, ஆள் வந்த அடையாளந் தெரியாமல் அந்த இடத்தில் மண்ணை மேவித் திரும்பினான். இந்த மனிதனே காட்டிலிருந்து திரும்பும்போது கோஸத்தைக் கண்டு உதவி செய்தவன். இவனே கோஸத்தின் இரட்சகன்.

34. அன்பு மொழிகள்

கோஸத் பயப்படவில்லை. புதிய மனிதன் அவளிடம் அன்பாகப் பேசினான்.

மனிதன்:—பெரிய வாளியைச் சிறிய குழந்தை எப்படித் தூக்க முடியும்?

கோஸத்:—ஆம், ஐயா.

மனிதன்:—நான் தூக்கிவருகிறேன். குழந்தை நீ பயப்படாமல் வா.

இப்போதுதான் உலகில் தன்மேலும் பரிவுள்ள ஒரு உள்ளம் உள்ளதென்றுணர்ந்தாள் கோஸத்.

மனிதன்:—குழந்தாய், உன் வயதென்னம்மா?

கோஸத்:—எட்டு வயது, ஐயா.

மனிதன்:—உன் வீடு எங்கே குழந்தாய்?

கோஸத்:—இங்கிருந்து இன்னும் கால் மணி நேரம் நடந்தால் வீட்டிற்குப் போகலாம்.

மனிதன்:—உனக்குத் தாய் இருக்கிறாளா?

கோஸத்:—எனக்குத் தாயாரே யில்லை; மற்றப் பெண்களுக்கெல்லாம் தாயார் இருக்கிறார்கள். எனக்கு அம்மா என்று கூப்பிட யாரும் இல்லை.

மனிதன்:— (குழந்தையைக் குறிப்பாகப் பார்த்து) உன் பெயர் என்ன?

கோஸத்:—என் பெயர் கோஸத்.

மனிதன்:— (வியப்புடன் குழந்தையைப் பார்த்து) எனதருமை கோஸத், நீ எங்கு வசிக்கிறாயம்மா?

கோஸத்:—இதோ இந்த மோம்ஃபெர்மேல் கிராமத்தில்; நாம் அங்கேதான் போகிறோம்.

மனிதன்:—இந்தப் பனி யிருளில், காட்டில் தண்ணீர் கொண்டு வர உன்னை யார் அனுப்பியது?

கோஸத்:—ஸ்ரீமதி தென்னடியள்.

மனிதன்:—ஆ! பரிதாபம்! யாரிந்தத் தென்னடியள்?

கோஸத்:—அவள் என் எஜமானி. அவள் ஒரு கள்ளுக்கடை வைத்திருக்கிறாள். அங்குச் சாப்பாடும் போடப்படும்.

மனிதன்:—நல்லது, இன்றிரவு நான் உன்னுடன் வந்து அங்கே தங்குகிறேன்.

கோஸத்:—ஆஹா, வாருங்கள்.

இந்த மனிதனிடம் கோஸத்திற்கு அளவற்ற நன்றியும், நம்பிக்கையும், மகிழ்வும் ஏற்பட்டன. இனித் தனது துயர் தீர்ந்ததென்றே அவள் கருதினாள்.

மனிதன்:—குழந்தாய், தென்னடியளுக்கு வேறு வேலைக்காரி யில்லையா?

கோஸத்:—இல்லை, ஐயா. நான் தான் வேலைக்காரி. அவளுக்கு இரண்டு பெண்கள் உண்டு.

மனிதன்:—பெயரென்ன?

கோஸத்:—எபோனி, அசலம். அவர்களுக்கு நல்ல சட்டை, பாவாடை யிருக்கின்றன. அவர்கள் நல்ல பொம்மைகள் வைத்து விளையாடுகிறார்கள்; நாளெல்லாம் விளையாடிக்கொண்டிருக்கிறார்கள்.

மனிதன்:—நீ ?

கோஸத்:—நான் நாளெல்லாம் வேலை செய்கிறேன். எனக்கு நல்ல ஆடையில்லை; விளையாட்டுப் பொம்மையில்லை. எஜமானி குழந்தைகளும் என்னை ஏளனம் செய்வர். காய், கறி நறுக்கும் சிறு கத்தியே என் விளையாட்டுச் சாமான்; இப்படித் தண்ணீர் சுமப்பதே நான் கண்ட விளையாட்டு.

கோஸத் கண்ணீர் விட்டு அழுதாள். மனிதன் மனமிளகிக் குழந்தையை ஆறுதல் செய்தான். இதற்குள் தென்னடியர் வீடு வந்துவிட்டது.

கோஸத்:—வாளியைத் தாருங்கள்.

மனிதன்:—ஏன்? நான் சுமந்து வருகிறேன்.

கோஸத்:—வேண்டாம்; எனக்காக இன்னொருவர் சுமந்தால் தென்னடியள் என்னை அடிப்பாள்.

கோஸத் வாளியைத் தூக்க மாட்டாமல் தூக்கிக்கொண்டு வீட்டிற்குட் சென்றாள்; போகும்போது பொம்மைக் கடையில் முன் சொன்ன பெரிய பொம்மையைக் குறிப்பாக நோக்கிச் சென்றாள்.

---

35. புதிய மனிதன் கருணை

"ஏருமை மாடே, ஏன் இவ்வளவு தாமதம்?" என்று தென்னடியள் குழந்தையை மிரட்டிக்கொண்டிருக்கும்போது புதிய மனிதன் வந்தான். "இவர் இங்கே சாப்பிட வந்திருக்கிறார்" என்றாள்

கோஸத். "அப்படியா!" என்று தனது புலிப் பார்வையை மாற்றிப் புன்னகையுடன் புதிய மனிதரை வரவேற்றாள் தென்னடியள். அவளுக்கு ஆளைப் பார்த்தால் கணிசமாகத் தோன்றவில்லை. சட்டையும் தொப்பியும் பகட்டாயிருந்து நல்ல பணம் தரக்கூடியவர்களையே அவள் மதிப்பாள். பஞ்சை போலிருக்கும் புதிய மனிதரை ஓரைக் கண்ணாற் பார்த்து முகஞ் சுளித்தாள்; வண்டிக்காரருடன் குடித்துக் கொண்டிருந்த தென்னடியனுக்குத் தனுக்காக ஜாடை காட்டினாள். தென்னடியன் புதிய ஆளைப் பார்த்தான்.

தேன்:—ஐயா, இது லட்சப் பிரபுக்களும், அதிகாரிகளும் வந்து நாசூக்காகச் சாப்பிடும் இடம்; உமக்கு இங்கு இடமில்லை.

பு. மனிதன்:—ஏதாயினும் ஒரு மூலையில் ஒண்டியிருந்தால் போதும்.

தேன்:—வேளைக்கு ஒரு ரூபாய் தருவீரா?

பு. மனிதன்:—சம்மதம்.

அருகே குடிக்கும் வண்டிக்காரன், "எல்லாருக்கும் அரை ரூபாய், அந்த ஏழைக்கு ஒரு ரூபாயா?" என்று கேட்டான்.

"மரியாதைக் குரிய பிரபுக்களுக்கு அரை ரூபாய்; இவனைப் போலப் பஞ்சைகளுக்கு ஒன்றும் வாங்குவேன், இரண்டும் வாங்குவேன். அப்போது தான் இந்தத் தரித்திரங்கள் பிரபுக்கள் உட்காரும் எனது மேஜையை அழுக்காக்காமல் இருப்பர்" என்றான் தென்னடியன். மனைவி பின்பாட்டுப் பாடி

ஞள். புதிய மனிதன் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தான். கோஸத் கொணர்ந்த தண்ணீரை வண்டிக்காரன் குதிரைக்கு வைத்தான். கோஸத் ஒரு மூலையில் மேஜையின் கீழ் ஒன்டிக்கொண்டிருந்தாள்.

புதிய மனிதன் கோஸத்தையே குறிப்பாகப் பார்த்தான். குழந்தை இளைத்துத் துரும்பா யிருந்தாள். எட்டு வயதான பெண்ணை ஐந்து வயது தான் மதிக்கலாம். அச்சம் என்னும் ஆலையில் போட்டுப் பிழிந்தெடுத்த சக்கை போலிருந்தது அவள் உடல்; எலும்புகள் எண்ணிப் பார்க்கும்படி தெரிந்தன: அழுது, அழுது, கண்கள் சிவந்து குழிந்து போயின; கன்னத்தில் கண்ணீர் வடிந்து கொண்டே யிருந்தது; மனத்துயர் விம்மி விம்மி உதடுகளில் துடித்தது; தென்றுயர் கிள்ளிக் கிள்ளி உடம்பு தழும்பேறி யிருந்தது; கடுமையான வேலைகள் செய்து, கை இரத்தங் கட்டிப் போனது; சட்டைப் பாவாடையோ பழைய கந்தல்; குளிரால் உடம்பு நடுங்கியது; அதைவிட அச்சத்தால் அவள் மனமும் உடம்பும் துடித்தன. பேய் கையில் அகப்பட்ட இந்தப் பிள்ளை அச்சமே வடிவாகக் காணப்பட்டாள். குளிர் காய அடுப்பண்டை போகக் கூட அவளுக்கு உத்திரவில்லை, பயம். தென்றுடியச் சிறையை விட்டு அவள் எங்கும் சென்றதில்லை; கோயில், பள்ளிக்கூடம் எதுவும் எட்டிப் பார்த்ததில்லை. புதிய மனிதன் இந்தப் பரிதாபக் குழந்தையைப் பார்த்துக் கண்ணீர் வடித்தான்.

அப்போது ஒரு இடி முழக்கம் கேட்டது: "அடி கழுதை, ரொட்டி வாங்கப் பணம் கொடுத்தேனே! மறந்து போனுயா? உன்னைக் கட்டையிலே வைக்க." கோஸத் இடி விழுந்த பாம்பு போல நடுங்கினுள்.

கோ:—ரொட்டிக் கடை மூடியிருந்த தம்மா!

தேன்:—தட்டுவதற்கென்ன கொள்ளை?

கோ:—தட்டினேன், திறக்கவில்லை.

தேன்:—நாளை ரொட்டிக்காரனைக் கேட்பேன். பொய்யா யிருந்தால் பலி வைப்பேன் உன்னை. சரி, ரொட்டிக்குத் தந்த பணம் எங்கே?

கோஸத் பையைத் தடவிப் பார்த்தாள். அந்தோ! பணத்தைக் காணும்! தண்ணீரெடுக்கும் போது அது ஊற்றில் விழுந்து விட்டது! குழந்தை அழுதாள்; அஞ்சி நடுங்கினுள்.

தேன்ளுடியள்:—அப்படியா? என் காசைப் போக்கினுயா? இல்லா விட்டால் ஏதாயினும் வாங்கிக் கொட்டிக் கொண்டாயா? திருட்டு நாயே, இதோ, சவுக்கெடுத்து விளாசுகிறேன் பார்; காசைக் கொடு.

கோஸத்:—ஐயோ! அம்மா, வேண்டாம், வேண்டாம், மன்னியுங்கள். இனிமேல் கவனமா யிருக்கிறேன்.

தென்ளுடியள் சவுக்கை ஓங்கினுள். "நில் லுங்கள், குழந்தை மடியிலிருந்து பணம் கீழே விழுந்திருக்கும். தேடிப் பார்க்கிறேன்" என்று புதிய மனிதன் மேஜைக் கடியில் தேடுவது போலப்

பாவனைசெய்து, “இதோ இருக்கிறது” என்று ஒரு வெள்ளிப் பணத்தை எடுத்துத் தென்னாடிய ளிடம் தந்தான்.

“ஆம், வெள்ளிப் பணந்தான் தந்தேன்” என்று மகிழ்வுடன் வாங்கிப் பைக்குள்ளே போட்டுக் கொண்டாள் தென்னாடியள். உண்மையாகக்கொடுத் தது பித்தளைக் காசு தான்; போகட்டும்; அன்று குழந்தை உயிர் தப்பியது.

“உங்கள் சாப்பாட்டிற்கு என்ன கொண்டு வரட்டும்?” என்றாள் தென்னாடியள். புது மனி தன் பதிற் சொல்லாமல் குழந்தையையே கவ னித்தான். “தரித்திரம், பணமில்லை போலிருக் கிறது; பேசாமலிருக்கிறது” என்று முணுமுணுத் தாள் தென்னாடியள்

அப்போது, “அம்மா” என்று கூவி வந்தனர் எபோனி, அசலம் ஆகிய தென்னாடியர் பெண்கள். “வாருங்கள், என் ராஜாத்திகளா” என்று தென்னாடி யள் அவர்களைக் கட்டித் தழுவி, முத்தமிட்டு, மடியி லமர்த்திக் கொஞ்சிக் குலாவினாள். பெண்கள் நாண் மலர்கள்போ லிருந்தனர். காலத்திற்கேற்ற கனமான சட்டை பாவாடை; அவற்றில் அழகான வேலைப் பாடுகள் காண்கின்றன; அவர்கள் அழகாகத் தலை வாரிப் பின்னிக் கொண்டிருந்தனர். நடை, உடை, பாவனை, பேச்சு, உணவு, செருக்கு, மினுக்கு எல்லா வற்றிலும் அவர்கள் செல்வக் குழந்தைகளாகவே யிருந்தனர். பாவம்! கோஸத் அவர்களைப் பார்த்துக்

கொண்டே, ஒரு மூலையில் குளிர் தாங்காமல் வெட வெடவென்று ஆடிக்கொண்டே ஒரு காலுறை பின்னிக்கொண்டிருந்தாள். ஒரு நிமிஷங்கூட அவள் ஓய்ந்திருக்கச் சகியாள் காலகண்டித் தென்னடியள். இச்சமயம் எபோனியும் அசலமும் ஒரு பொம்மை வைத்து விளையாடத் தொடங்கினர். சிறு பெண் குழந்தைகளுக்குப் பொம்மையிலும், பெரிய பெண் களுக்குக் குழந்தை மேலும் வாஞ்சை அதிகம். கோசத் தன் வயதுள்ள இரண்டு பெண்கள் பொம்மையுடன் கொஞ்சி விளையாடுவதை ஆசையூறிப் பார்த்தாள். "பார்க்கிருயா? எடு விளக்குமாறு! வேலையிலே கவனம் இருக்கட்டும்" என்று உருமினுள் காலகண்டி.

புதிய மனிதன் :—அம்மா, அந்தக் குழந்தையை மிரட்டாதீர்கள்; அதுவும் விளையாடட்டுமே!

தென்னடியள் :—அது ஒரு கலம் கொட்டிக் கொள்ளுகிறதே; வேலை செய்யவேண்டாமா? என் பெண்களுக்கு நாளைக் காலுறை (Stockings) வேண்டும்; பின்னச் சொல்லியிருக்கிறேன்.

புதிய மனிதன் :—அம்மா, காலுறை என்ன பெறும்?

தென்னடியள் :—பத்தணுவாகுமே.

புதிய மனிதன் :—இந்தாருங்கள் பத்தணு; குழந்தை விளையாடட்டும். கோஸத், குழந்தாய், நீயும் விளையாடு.

தென்னடியள் பணத்தை வாங்கிக் கொண்டு,

"இவன் யார்? இந்த நாய்க்குப் பரிந்து பேசுகிறான்" என்று முணுமுணுத்தாள்.

அப்போது ஒரு பூனைக்குட்டி வந்தது. எபோனியும் அசெல்மும், பொம்மைகளைப் போட்டு விட்டுப் பூனைக்குட்டியுடன் விளையாடினர். கோஸெத்திற்குப் பொம்மையில்லை; ஒரு கத்திதான் இருந்தது; அதைத் தன் குழந்தையாகப் பாவித்து, " என் செல்லக் குழந்தை, உனக்கு அழகாகப் பாவாடை கட்டி, சட்டைபோட்டு, தலைவாரிப் பின்னுகிறேன்; ஆயிற்று: இனி மடியில் வைத்துத் தாலாட்டித் தூங்க வைக்கிறேன்,—ராரிரரோ! ராராரோ!" என்று சந்தோஷமாக விளையாடிக் கொண்டிருந்தாள் கோஸெத்.

தேன்னாடியள்:—போதுமடி, 'ராரிரோ'. வேலை செய்.

புது மனிதன்:—அம்மா, குழந்தை விளையாடட்டும்.

தேன்னாடியள்:—நீர் சும்மா இரும். நாங்களல்லவா இவளைச் சாப்பாடு போட்டு வளர்க்கிறோம்?

புது மனிதன்:—இது உங்கள் குழந்தையல்லவா?

தேன்னாடியள்:—அதை யேன் கேட்கிறீர்கள்? இது ஒரு அனாதைக் குழந்தை: கருமத்திற்காகச் சோறு போடுகிறோம்: இதன் தாயார் ஏதோ கொஞ்சம் அனுப்பிக் கொண்டிருந்தாள். ஆறு மாதமாகத் தகவலில்லை. தாயார் செத்துப் போனாள் போலும்.

புது மனிதன் :—ஆ........!

கோஸத் காதில் தாயார் செய்தி பட்டது. "எங் கம்மா செத்துப் போனாள்! எங்கம்மா செத்துப் போனாள்!" என்று பாடிக் கொண்டே எபோனி கீழே போட்ட பொம்மையை எடுத்து வைத்துக் கொண்டு கொஞ்சிக் குலாவினாள்.

"இதோ பாரம்மா, இந்த நாய் என் பொம் மையை எடுத்து விளையாடுகிறாள்" என்று தாயா ரிடம் சென்று கோட்சொன்னாள் எபோனி.

தென்னாடியள்:—அடி திருடி, என் குழந்தை கள் பொம்மையை நீ தொடுவாயா, அழுக்கு நாயே, வைக்கிறேன் உதை.

புது மனிதன்:—அம்மா, குழந்தையை மிரட்டா தீர்கள்.

தென்னாடியள் :—வந்த காரியத்தை நீங்கள் பாருங்கள். எனது ராஜாத்தி விளையாடும் பொம் மைகளை இந்தத் தெரு நாய் எடுத்து விளையாடுவ தாவது! அவ்வளவு துணிச்சலா இவளுக்கு?

இதற்குள் கோஸத் பொம்மையைக் கீழே வைத்து விட்டு, நடுங்கி, "இனி மேல் இல்லை. இனி மேல் இல்லை" என்று அழத் தொடங்கினாள்.

புதிய மனிதன் பசக்கென்று வெளியே சென் றான். இது தான் சாக்கென்று தென்னாடியள் கோஸத்தைக் காலால் எற்றி மிதித்து, "உனக்குச் சொரிசு வேறோ?" என்று வைது கொண்டிருக்கும் போது புதிய மனிதன் ஒரு பெரிய பொம்மையை

வாங்கிக் கொண்டு வந்தான். எல்லோரும் திகைத்தனர். அது தான் கோஸத் முன்னே கடையில் பார்த்து வியந்த பொம்மை. அது சுமார் ஐந்து ரூபாய் பெறும். "குழந்தை, கோஸத், இந்தா உனக்குப் பொம்மை. வைத்து விருப்பம் போலே விளையாடு" என்று ஆறுதலாகத் தந்தான் புதிய மனிதன்.

"இந்த விளக்குமாறுக்கு இவ்வளவு நல்ல பொம்மைபா? இந்த மனிதன் போனவுடன் என் கண்மணிகளுக்கு அதைத் தருகிறேன்" என்று முணுமுணுத்தாள் தென்னடியள்; கோஸத்தின் மேல் பொறாமை கொண்டாள். தென்னடியனே, "ஆள் பெரிய பணக்காரன்! பை கனம். சரியானபடி கொள்ளையடிக்க வேண்டும்" என்று நினைத்தான். பொம்மையைத் தொட்டால் எங்கே தென்னடியர் அடிப்பாரோ என்று பயந்து விழித்தாள் கோஸத். "கோஸத், தாத்தா தந்த பொம்மையை வைத்து விளையாடு" என்றான் தென்னடியன்; தாத்தா தலையைத் தடவ இவ்வாறு அடிப்போட்டான். நாய், கழுதை என்னமல் கோஸத் என்று அன்பாக அவன் அழைத்தது இதுவே முதல் தடவை.

கோஸத் ஆனந்த பரவசத்துடன் பொம்மையை எடுத்து, "என் செல்வக் காதரைன், என் அருமைக் குழந்தை, உனக்குச் சிங்காரிக்கிறேன்; பாலூட்டுகிறேன்" என்று கொஞ்சி விளையாடினாள். சிறிது நேரத்தில் குழந்தைகளெல்லாம் உறங்கச் சென்றனர். கோஸத் காதரைனைக் கட்டி யணைத்துக்

கொண்டே உறங்கினாள். இரவு பன்னிரண்டு மணி யடித்தது; புத்தாண்டு பிறந்தது; அங்கிருந்த குடிய ரெல்லாம் புது வருஷம் வாழ்த்துப் பாடினர். புதிய மனிதன் ரொட்டியும் வெண்ணெயுமே சாப்பிட்டுத் தண்ணீர் குடித்தான்; சாராயத்தைத் தொடவில்லை. சாப்பிட்டதும், கன்னத்தில் கை வைத்து மேஜை மேல் முழங்கையை ஊன்றிக்கொண்டு சிந்தனையில் ஆழ்ந்தான் அப் புதியவன்.

இதற்குள் தென்னாடிய தம்பதிகள் தனியாகச் சென்று, ஏதோ காதுடன் காது வைத்துப் பேசி வந்து, "ஐயா, தங்களுக்குப் படுக்கை தயாரா யிருக்கிறது. எழுந்திருங்கள்" என்று உள்ளே ஒரு அறைக்கு அழைத்துச் சென்றனர். தேக்குக் கட்டில், பஞ்சுமெத்தை, தலையணை யெல்லாம் ஆடம்பர மாகப் போட்டு அவ்வறை அலங்காரமா யிருந்தது.

"ஐயா, இது நாங்கள் இருவரும் படுக்கும் சுகமான இடம். பிரபுக்கள் தாம் இங்குப் படுப்பார் கள். உங்கள் மேலுள்ள பிரியத்தினால் இந்த இடத் தைத் தருகிறோம்; இன்னும் தங்களுக்கு வேண்டிய சௌகரியங்களும் கிடைக்கும்" என்று ஆளைக் குல்லாப் போட்டனர் தென்னாடியர். "ஐயா, நான் ஏழை; உங்கள் குதிரை லாயத்தில் ஒண்டியிருந்தாற் போதும்" என்றான் புது மனிதன். அன்று அவன் அந்தச் சிங்கார அறையிற் படுத்திருந்தால் என்ன நடந்திருக்கும்! பணப்பேய் பிடித்த தென்னாடியர் ஆளை அம்மணமாக்கி யிருப்பர். தென்னாடியள்

மாயவலை போட்டு இடுப்பிலிருப்பதைத் தடவிக் கொண்டிருப்பள். புதிய மனிதன் ஏமாந்தபேர்வழி யல்ல; ஒரு மூலையில் தன் கம்பையும் மூட்டையை யும் வைத்தான்; ஒரு நாற்காலியில் அமர்ந்து சிந்தனையில் ஆழ்ந்தான்.

"இந்த நாயை (நாய்=கோஸத்) நாளை விரட்டி யடிக்கப் போகிறேன்" என்று சொல்லித் தென்ன டியள் கணவனுடன் பள்ளி கொண்டாள். மணி மூன்றிருக்கும். வீடெல்லாம் ஆழ்ந்து உறங்கின.

புதிய மனிதன் ஒரு மெழுகு திரியை யேற்றிக் கொண்டு, மிதியடியைக் கழற்றிவிட்டு, ஓசைப் படா மல் கோஸத்தைத் தேடினன். குழந்தை மச்சுப் படியின் வளைவில் பிறற் பாயில் படுத்து உறங்கினள்; காதரைன் பொம்மையைத் தழுவிக்கொண்டே உறங் கினள். அந்தச் சிறு வளைவில் பழைய கூடைகளும் உடைந்த சிசாக்களும் கிடந்தன. பாச்சைப் பூச்சியும், சிலந்தி வலைகளுமாயிருந்த அந்த வளைவில் குழந்தை உறங்கினள்: அடிக்கடி விம்மிப் பெருமூச்சு விட் டாள்: கனவில் தென்னடியளைக் கண்டு பயந்து அப்படிப் பெருமூச்சு விட்டாள்! இந்தக் கன்றுவி யைப் பார்த்துப் புதிய மனிதன் கண்ணீர் வடித்துக் கொண்டே இன்னொரு அறைக்குட் சென்றன். அங்கு ஒரு சப்ரமஞ்சத்தில் பஞ்சு மெத்தையில் எபோனியும், அசலமும் குளிருக்குப் பலமான போர் வை போர்த்துக்கொண்டு உறங்கினர். அருகே ஒரு தூளியில் சின்னக் குழந்தை குரோஷன் (gavroche)

குறட்டை விட்டான். புதிய மனிதன் பிறகு சமயலறைக்குச் சென்றான். அடுப்பில் நெருப்புமில்லை; சாம்பலுமில்லை. அங்கே இரண்டு சிறிய ஜோடுகள் இருந்தன. அவை எபோனி, அசலம் ஆகிய இருவரது ஜோடுகள். 'கிறிஸ்மஸ் இரவில் அடுப்பங்கரையில் ஜோட்டைக் கழற்றி வைத்தால், ஒரு தேவதை அதில் பணம் வைக்கும்; மறுநாட் காலை எடுத்துக் கொள்ளலாம்' என்பது சிறு குழந்தைகளின் நம்பிக்கை. அதற்காகவே ஜோடுகள் அங்கே வைக்கப்பட்டன. அந்தச் செல்வக் குழந்தைகளின் ஜோடு கால்களில் தென்னடியர் ஒரு சிறு வெள்ளிப்பணம் (ரூபாய்) வைத்திருந்தனர். சற்றுத் தள்ளி, ஒரு மூலையில் பழைய கட்டை மிதியடியிருந்தது. தனது தேவதையும் காசு போடும் என்று நினைத்துக் கோஸத் அதை வைத்திருந்தாள். அவளுக்கு இரங்கும் தேவதை யில்லை. மிதியடியில் காசில்லை. புதிய மனிதன் அதில் ஒரு பவுனை வைத்துவிட்டுத் தன்னிடம் சென்று சிந்தனையில் ஆழ்ந்தான்; இந்த எமன்களிடமிருந்து கோஸத்தை எப்படியாவது விடுவிக்க வேண்டுமென்று உறுதி பூண்டான்.

36. கோஸத்தின் விடுதலை

மறுநாட் காலை, தென்னாடியள் ஒரு நீண்ட பொய்க் கணக்கைப் புதிய மனிதன் கையில் நீட்டினாள். அட அநியாயமே!

	பிரான்க்
சாப்பாடு	5
படுக்கை	10
விளக்கு	5
கணப்பு	4
பணிவிடை	1
	25 = ரூ. 3.

10 அணா என்று முதலிற் சொல்லி, ரூ. 3-க்குத் தென்னாடியன் கணக்குத் தந்தான். புதிய மனிதன் மூன்று ரூபாய் தந்து விடைபெற்றுக் கொள்ளும் போது, 'தங்கள் வியாபாரம் எப்படி நடக்கிறது?' என்றொரு கேள்வி கேட்டான்.

தென்னாடியன் :—அந்த வயிற்றெரிச்சலை யேன் கேட்கிறீர்கள்? இங்கே பணக்காரரில்லை; வழிப் போக்கர் வந்தால்தான் வரும்படி. தங்களைப்போன்ற தயாளமுள்ள தனவான்கள் இங்கு வருவது அரிது கிராமவாசிகள் ஏறிப்போயின. பண முடை; குடும்பம் பெரிது: வருந்துகிறோம். போதாக் குறைக்கு இந்த அனாதைப் பெண்ணொன்று வாய்த்தது.

புதிய :—எந்த அனாதைப் பெண்........?

தென்னாடியன் :—அந்தக் கோஸத்துதான்.

அவளுக்காக கணக்கற்ற பணம் செலவாகிறது. எங்கள் பிள்ளைக் குட்டிகளைக் காப்பதே பெரும் பாடாயிருக்கிறது. இன்னொருவர் குழந்தையை நாங்கள் எப்படிச் சோறு போட்டுக் காப்பாற்ற முடியும்?

புதிய மனிதன் :—அப்படி நீங்கள் கசப்பு விழுங்க வேண்டாமே. கோஸத்தை நான் அழைத்துச் செல்லுகிறேன்.

தேன் :—மஹாராஜனாக அழைத்துச் செல்லுங்கள் ஐயா. இதோ இப்போதே அழைத்துச் சென்று ஊட்டுங்கள், சூட்டுங்கள், அன்பு காட்டுங்கள், செல்வமாக வளருங்கள்.

புதிய :—சம்மதம்........உடனே சம்மதம்.

கோஸத் அதிகாலை எழுந்து வாசற் பெருக்கிப் பற்று விளக்கிக் கொண்டிருந்தாள். அவளை அழைத்து வர மனைவிக்குக் கட்டளையிட்டுப் புதிய மனிதனுடன் ஒரு பேரம் பேசினான் தென்னாடியன். கப்பி கட்டுகிறான் கல்லுளி மங்கன்.

தேன்னாடி :—ஐயா, எனது அருமைக் கோஸத்தை விட்டுப் பிரிய மனமில்லை. எனது மக்களைவிடச் செல்வமாக அவளை நடத்துகிறேன். அவளை நீங்களே பார்க்கலாம். அவள் தாய் தகப்பனில்லாத அனாதை; நான் வளர்த்த பச்சைக் கிளி; பேர் ஊர் அறியாத உங்களிடம் அவளைத் தர மனமில்லை; அப்படித் தந்தாலும் நான் அடிக்கடி என் செல்வக் குழந்தையை வந்து பார்க்க வேண்டும்; "இவர்தாம்

என்னை அருமையாகச் சீராட்டி வளர்த்த அன்புத் தந்தையார்'' என்று அவள் வாயால் சொல்லிக்கேட்கவேண்டும்; அடிக்கடி என் வீட்டிற்கு அழைத்து வர வேண்டும். அவளை என் உயிர் போல நேசிக்கிறேன்.

புதிய மனிதன்:—அதெல்லாம் தெரிந்தது தான்; ஒரே பேச்சு; கோஸத்தை நான் கூட்டிச் செல்லுவேன். நீர் அவளைத் திரும்பப் பார்க்க முடியாது. இன்றுடன் உங்கள் சம்பந்தம் சரி; என் பெயர், ஊர், அனாவசியம். என்ன சொல்லுகிறீர்? அவளுக்கு நீங்கள் இதுகாறும் செலவிட்ட தொகையைக் கைமேல் வாங்கிக் கொள்ளுங்கள்.

தென்னடியன் சிந்தித்தான். இந்த மனிதன் கண்டிப்பானவன்; இவனிடம் நமது எத்தெல்லாம் பலியாதெனக் கண்டான். ஆனால், 'இக் குழந்தையிடம் இம் மனிதனுக்கு இவ்வளவு அன்பேன்? ஒரு வேளை இவன் குழந்தையின் பாட்டனோ? அப்படியானல் வெளிப்படையாக என் பேத்தியைக் கொடு என்று கேட்பதற்கென்ன? நமக்கே பிழைப்பு நடக்காதிருக்கும் போது, இந்தக் குழந்தையை வைத்துக் கொண்டு என்ன செய்வது?' என்று சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்தான். பணந்தான் அவனுக்குக் குறி.

புதிய மனிதன்:—முடிவைச் சொல்லுங்கள், நான் போகவேண்டும்.

தேன்னடியன்:—ஐயா, 1,500 பிரான்க் (சுமார் 180 ரு.) கொடுத்துக் குழந்தையை விடுவித்துக் கொண்டு செல்லுங்கள்.

புதிய மனிதன் :—சம்மதம். இதோ 1,500 பிரான்க் நோட்டுகள்.

பணத்தைக்கண்டதும் தென்னுடியன் வாயெல்லாம் பல்லாயின; அவன் கோஸத்தைக் கூட்டி வந்தான்.

கோஸத்திற்கு அன்றுடன் நல்ல காலம் பிறந்தது. காலையெழுந்ததும் தேவதை தனது மிதியடியில் ஒரு பவுன் வைத்திருக்கக்கண்டு கோஸத் மகிழ்ந்தாள். அதுவரையில் அவள் பவுன் பார்த்ததில்லை; அதை இடுப்பில் சொருகிக் கொண்டு, காதரைன் பொம்மையைச் சிறிது கொஞ்சிக் குலாவிய பின், வாசலைப் பெருக்கி, வீட்டுக்காரியங்களைப் பார்க்கும் போது அழைப்பு வந்தது. கோஸத் வந்தாள். புதிய மனிதன் ஒரு மூட்டையை அவிழ்த்தான். அதில் துக்கத்தைக் காட்டும் கருப்புப் பாவாடை, சட்டை, தொப்பிகள் இருந்தன. புதிய மனிதன், குழந்தையிடம் அவற்றைக் கொடுத்து உடுத்திவரச் சொன்னான். அன்றோடு கந்தல்கள் ஒழிந்தன. துயர்கள் ஒழிந்தன. கொடுமையொழிந்தது. கோஸத் புதிய மனிதனுடன் புறப்பட்டாள். "வானம்பாடியை" ஒரு கிழவன் கூட்டிக்கொண்டு செல்வதை ஊராரெல்லாம் பார்த்தனர்.

இன்னும் விட்டானு தென்னுடியன்; 1500 பிரான்க்கை மனைவியிடம் காட்டினான். "நல்ல வியாபாரம் பண்ணினீர்கள்! இது என்ன அசட்டுத்தனம்! அவள் நாலாள் காரியம் செய்தாள்; நமக்கு இனி ஆள்

வைக்கப் பணமிருக்கிறதா? 1500 பிராங்க் எந்த மட்டிற்கு? 15,000 பிராங்க் அல்லவோ கேட்டிருக்க வேண்டும்" என்று தூண்டிவிட்டாள் தென்னடியள்.

"ஆம், மோசம் போனேன்! ஆள் பெரிய செல்வன்; இதோ அவனைத் துரத்துகிறேன்" என்று புறப்பட்டான் தென்னடியன்; வழியில் விசாரித்துக் கொண்டே, ஆள் இடம் கண்டு பிடித்துச் சென்றான். குழந்தையைப் பூப்போல நடத்தி, ஒரு காட்டு வழியே புதிய மனிதன் சென்று கொண்டிருந்தான். கோஸத் காதரைன் பொம்மையை அணைத்துக் கொண்டு, புதிய மனிதனைத் தந்தைபோலக் கருதிப் பின் சென்றாள். திடீரென்று அவர்கள் முன் தென்னடியன் தோன்றி, "ஐயோ! கோஸத்தை நான் விடமாட்டேன்; இந்தாருங்கள் உங்கள் பணம்; குழந்தை, வா" என்றான். புலியைக்கண்ட மான் மாதிரி குழந்தை நடுங்கிப் போய் புதிய மனிதன் கையைப் பிடித்துக்கொண்டு அழுதாள்.

புதிய மனிதன்:—உனக்கு இக் குழந்தையை இனித் தருவதா? நடவாது.

தென்னடி:—தரத்தான் வேண்டும்; அவள் என் குழந்தையல்ல; அவள் தாயார் அவளை என்னிடம் ஒப்புவித்துச் சென்றாள்; தாயார் சம்மதமில்லாமல் இனந் தெரியாத பேர்வழியிடம் நான் குழந்தையைத் தரமாட்டேன்.

புதிய மனிதன்:—தாயார் சம்மதிச் சீட்டைக் காட்டினால்............?

தேன்ருடி :—காட்டுங்கள், பார்ப்போம்........

புதிய மனிதன் தனது சட்டைப் பையில் கவனமாகப் பாதுகாத்த ஒரு சீட்டை எடுத்துக் காட்டி, “இதைப் படியும்” என்ருன்.

தென்ருடியன் சீட்டைப் படித்தான்:—

மோந்த்ரேல், 25-3-1823

ஐயா தென்ருடியரே,

இச் சீட்டுக் கொண்டு வருகிறவரிடம் கோஸத்தைத் தயவு செய்து ஒப்புவியுங்கள். உங்களுக்குச் சேர வேண்டிய பாக்கி யெல்லாம் அவர் தருவார். வந்தனம்.

ஃபாந்தேன்

தென்ருடியன் பதில் பேச முடியவில்லை. ஆனல் முடிவாக ஒரு கை விரசு காட்டினன்.

“எல்லாம் சரி, எனக்குச் சேரவேண்டிய பாக்கி ஏராளமாயிருக்கிறதே! 15,000 பிரான்க்” என்ருன் தென்ருடியன்.

புதிய மனிதன்:—என்ன சொன்னீர்? உமக்கேது பாக்கி? ஜனவரி மாதம் அவள் தாயார் அரும்பாடு பட்டு 125 பிரான்க் அனுப்பினள்; பிப்ரவரி மாதம் 100 பிரான்க் அனுப்பினள்; அம்மாதக் கடைசியில் 100 பிரான்க் அனுப்பினள்; குழந்தையை அழைத்துவரக் கடிதம் எழுதி உங்கள் வேண்டுகோட்படி மார்ச்சு மாதம் 300 பிரான்க் அனுப்பினள். அது முதல் 9 மாதங்கள் ஆயின.

மாதம் 15 விதம் ஒன்பது மாதங்களுக்கு 135 பிரான்க் சேரவேண்டியது. அதற்காக 1500 பிரான்க் தந்துள்ளேன். என்ன சொல்லுகிறீர்?

"இந்த இழவு மனிதன் யார்? துப்பாக்கி கொண்டு வராமல் போனேனே!" என்று திகைத்து நின்றான் தெனார்டியன். மீண்டும், "ஐயா, 15,000 பிரான்க் கொடுங்கள்; இல்லையேல் குழந்தையைக் கொடுங்கள்" என்று ஆரம்பித்தான் தெனார்டியன்.

"உன்னிடம் குழந்தையைக் கொடுப்பதா! வா, கோஸத்" என்று சொல்லிக் குழந்தையைக் கூட்டிக்கொண்டு நடந்தான் புதிய மனிதன்.

தெனார்டியன் நரி போல ஒளிந்து ஒளிந்து பின்னாலேயே சென்றான்: ஆள் இருக்குமிடம் தெரிந்தால் தனது சகாக்களுடன் சென்று கொள்ளையடிக்கலாம் என்று கருதினான். "இன்னுமா வருகிறாய்?" என்று புதிய மனிதன் தெனார்டியனைப் பார்த்தான். புதிய மனிதன் தன்னைவிடப் பலசாலி என்பது தெனார்டியனுக்குத் தெரியும். இனித் தொடர்ந்து பயனில்லை யென்று திரும்பிச் சென்றான் தெனார்டியன்.

37. புதிய மனிதன் யார்?

இந்தப் புதிய மனிதன் யார்? புலி வாயினின்று குழந்தையைக் காத்த இந்தப் புண்ணியன் யார்? ஏழைக் கிரங்கும் இக் கருணை வள்ளல் யார்? இவனே ஜாம்வல் ஜான். ஜாம்வல்ஜான் கடலில் இறந்துபோனதாகச் சர்க்கார் அறிக்கை தெரிவித்த தல்லவா? அது பொய். இவன் துலோனில் மாலுமியைக் காப்பாற்றக் கடலிற் குதித்ததும், நெடுந் தூரம் உள்ளே முக்கி நீந்திச் சென்று, ஒரு கப்பல் இடுக்கில் ஒளிந்து கொண்டான்; இருண்டதும் கரை யேறி, கைதிக் குல்லாவைக் கடலில் எறிந்தான். பிரான்ஸில் ஒரு வகையான சட்டைக் கடை யுண்டு. சண்டையில் இறந்த வீரர் சட்டைகள் அங்கு விற்கப்படும். சிறையிலிருந்து ஓடிப்போன கைதிகள், மாறு வேடம் போடும் திருடர் எல்லாம் அந்தக்கடையில் சட்டை மாற்றிக்கொண்டு தமது தொழிலை நடத்துவர். ஜாம்வல்ஜான் இந்த இரகசிய மான சட்டைக் கடைக்குப் போய்ப் புதிய உடை களை வாங்கி யணிந்து, ஆள் அடையாளம் தெரியா மல் ஒளிந்து, மறைந்து, ஆல்ப்ஸ், பிரனீஸ் மலைச் சார்புகளில் சில காலம் திரிந்து, முடிவில் ஒரு ஏழை போல உடை தரித்துப் பாரிஸுக்கு வந்தான். இவன் அளவற்ற பலமும், நெஞ்சுரமும், அனுபவமும் கொண்டவனுதலால் இப்படித் தப்பியது அவனுக் குப் பெரிதன்று. பாரிஸில் ஒரு பத்திரிகையில்

துலோன் கைதி ஜாம்வல்ஜான் ஒரு மாலுமியைக் காப்பாற்றும்போது கடலில் விழுந்து மூழ்கிப் போன பரிதாபச் செய்தி கொட்டை யெழுத்தில் வந்திருப்பதைப் பார்த்து இவன் மகிழ்ந்தான்; பாரிஸில் நடமாட்ட மில்லாத ஓரிடத்தில், ஒரு பழைய வீட்டின் மாடியில் ஜாகை யமர்த்தினன்; உடனே கோஸத்திற்குத் தாயார் இறந்த விசனத்தைக் காட்டக் கறுப்புடைகள் வாங்கிக் கொண்டான்; அவளை மீட்கப் போதிய பணமும் எடுத்துக்கொண்டு, தென்னடியர் கிடங்கிற்குச்சென்று, கோஸத்தை விடுதலை செய்து அழைத்து வந்தான்; காட்டுப் பாதை தாண்டியதும் ஒரு வண்டியில் ஏறிப் பாரிசுக்கு வந்தான்: சந்து பொந்துகள் வழியே மறைவாக நடந்து கோஸத்தை அழைத்து வந்தான்; குழந்தை களைத்துப் போகவே, தனது தோளில் அவளைத் தூக்கிக் கொண்டான். காதரைன் பொம்மையை வைத்துக் கொண்டே கோஸக் ஜாம்வல்ஜான் தோளில் உறங்கிப் போனள்.

---

38. குழந்தை யன்பு

பாரிஸில் ஜன நடமாட்டம் இல்லாது வெறிச் சென்றிருக்கும் ஒரு கோடியில் கோர்போ மனே உள்ளது. அது இடிந்து நொடிந்துபோன பாழ் வீடு. காலப்போக்கில் செல்வமும் செல்வாக்கும்

எப்படிப் பாழாகின்றன என்பதற்கு அந்த வீடு ஒரு எடுத்துக் காட்டாக நிற்கிறது. 1770-ம் ஆண்டு இது அழகான அரண்மனையாயிருந்தது; அதில் இரண்டு வக்கீல்கள் செல்வச் சிறப்புடன் விளங்கினார்கள். இருவரும் 15-வது லூயி மன்னனது நியாய இலாகா ஊழியர். ஒருவர் பெயர் கார்போ. மற்றொருவர் பெயர் ரேனார். பிரெஞ்சில் கார்போ என்பது காக்காய். ரேனார் என்பது நரி. "காக்கையும் நரியும் ஒரு வீட்டில் வசிப்பதைப் பாருங்கள். நரி காக்கையை ஒரு நாள் ஏமாற்றப் போகிறது" என்று எல்லோரும் இவர்களைக் கேலி செய்தனர். இவர்களை லூயி மன்னன் கூடப் பரிகாசம் செய்வதுண்டு. இந்தப் பரிகாசம் பொறுக்க மாட்டாமல் கார்போ அரசாங்கத்திற்கு மனுச் செய்து, தன் பெயரைக் கோர்போ என்று மாற்றிக்கொண்டான். கார்போவின் சந்ததி வழங்காமல் வீடு பாழானது. இப்போது இதன் சுவர்கள் உடைந்திடிந்து போயின. கதவுகளும் ஜன்னல்களும் கறையானால் அரிக்கப் பெற்றன. இந்த வீடு சுடுகாடானதுடன் பாபக் காடானது. இதன் இருட்டறைகளில் எவ்வளவோ கொலைகள் நடந்திருக்கின்றன. இதற்குள் நுழைய எல்லோரும் அஞ்சுவர்.

இந்தப் பாழ் மனையின் மாடியில் ஒரு தனியிடத்தில் ஜாம்வல்ஜான் கோஸத்துடன் வாடகைக்கிருந்தான். அந்த அறையில் அவன் இரகசியமாகவே இருக்க முடிந்தது. அந்த மனையில் நீண்ட காலமாக

ஒரு செவிட்டுக் கிழவி வசித்தாள். அவள் மூலமாகத்தான் ஜாம்வல் ஜான், ஆறு மாத வாடகையைக் கைமேல் கொடுத்து இந்த அறையைப் பிடித்தான். இந்தக் கிழவிதான் ஜாம்வல்ஜான் அறையைச் சுத்தஞ் செய்வது; அடுப்பு மூட்டிக் கொடுப்பது; சமயல் செய்வது; சாப்பாட்டுச் சாமான்கள் வாங்கி வருவது எல்லாம். 'கை நொடித்துப் போன ஒரு ஸ்பெயின் கிழவன் தனது பேத்தியுடன் இங்கு இருக்கிறான்' என்றே கேட்டவருக்கு இவள் சொல்லுவாள்: ஆனால், ஜாம்வல்ஜானின் அறையை வலை போட்டுப் பார்த்து, அவனிடம் ஏதோ இரகசியம் இருக்கிறதென்றே கோட்டான் மாதிரி கவனித்து வந்தாள். இவளால் வந்த கேட்டைப் பிறகு சொல்வாம்.

ஜாம்வல்ஜான் தனது தோளின் மேல் உறங்கிய கோஸெத்துடன் இரவில் இந்த வீட்டிற்கு வந்தான்; தன்னிடமிருந்த சாவியால் கதவைத் திறந்து கவனமாகத் தன் அறைக்குச் சென்றதும் அறைக் கதவைத் தாழிட்டான்; உறங்கிய குழந்தையை ஒரு படுக்கையில் மெல்ல வைத்து, "உறங்கு நன்றாய், என் செல்வமே" என்று தட்டிக் கொடுத்தான்; சக்கி முக்கிக் கல்லைத் தட்டி மெழுகு திரியை ஏற்றினான்: கணப்புச் சட்டியைக் காய வைத்துக் குளிருக்கு வெது வெதுப்பா யிருக்கும்படி அருகே வைத்தான்; அளவற்ற செல்வத்திரள் போலக் குழந்தையைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்

தான்; மெதுவாக அவளது பிஞ்சுக் கையைக் கொஞ்சி முத்தமிட்டான்; 'ஒன்பது மாதங்களுக்கு முன் தாயார் ஃபாந்தேனுக்கு வாக்களித்ததை நிறைவேற்றி விட்டோம்' என்று மகிழ்ந்தான்; தாயின் ஆவி இனி அமைதி பெறுமென நினைந்தான்; பிறகு இறைவனைத் தொழுது பல சிந்தனைகளுடன் உறங்கினான்.

காலை, குழந்தை நெடு நேரம் உறங்கியது. ஜாம்வல்ஜான் குழந்தையை இமை கொட்டாது பார்த்துக் களித்தான். குழந்தை திடுக்கென்று விழித்தெழுந்து, "எழுந்து விட்டேன்! இதோ வாசல் கூட்டுகிறேன். மன்னிக்க வேண்டும், அம்மா" என்று கூவினாள்; "ஐயோ! என் துடைப்பமெங்கே?" என்று சுற்றிப் பார்த்தாள். தென்னாடியர் வீட்டிலேயே இன்னுமிருப்பதாகக் கனவுகள் கண்டே குழந்தை எழுந்தாள்.

கோஸத் தன் முன்னே ஜாம்வல்ஜானது சிரித்த முகத்தைக் கண்டாள். "ஆ! உண்மைதானா? வந்தனம் அப்பா? தங்களிடமா நான் இருக்கிறேன்?" என்றாள்; உடனே தனது பொம்மைக் காதரைனைக் கட்டி முத்தமிட்டாள்; "அப்பா, நான் இந்த அறையைப் பெருக்குகிறேனே?" என்றாள்.

"விளையாடு, பாப்பா, சந்தோஷமாயிரு" என்றான் ஜாம்வல்ஜான். இன்பக் கண்ணீருடன், "இது யார் வீடு? நான் பாரிஸிலா இருக்கிறேன்? தென்னாடியள் இனி வரமாட்டாளே?" என்றெல்

லாம் கேட்டாள் குழந்தை. ஜாம்வல்ஜான் தக்க பதிற் சொன்னான். "ஆ! இந்த வீடு எவ்வளவு இன்பமா யிருக்கிறது!" என்று வியந்தாள் கோஸத். அன்பு எங்கிருக்கிறதோ அதுதான் குழந்தைகளுக்கு வீடு. ஜாம்வல்ஜானது அன்பினால் இந்தச் சுடுகாடுகூட அவளுக்குக் கைலாசமாயிருந்தது.

ஜாம்வல்ஜான் தன் ஆயுளில் யாரையும் பாசத்துடன் நேசித்ததில்லை; தனது தமக்கையின் குழந்தைகளை ஏழை ஜாம்வல் கூலி வேலை செய்து காப்பாற்றினான். தான் சிறையிலிருந்து வந்தபின் தமக்கையின் விபரம் தெரியவில்லை: அவள் நினைப்பும் மெல்ல மறந்தது. 19 ஆண்டுகள் கடுஞ்சிறை காத்து, அவன் மனம் கல்லாய்ச் சமைந்தது. அன்பு, இரக்கம், ஆசை, பாசம் எல்லாம் மனத்தை விட்டகன்றன. ஆண், பெண் அடங்கலும் அவன் வெறுத்தான். ஜாம்வல்ஜான், மண வாழ்வு, மனையின்பம் எதையும் அறியான்: பாப புண்ணியங்களையும் அறியான். அவனது முரட்டுத் திருட்டுப் புத்தியை இளக்கி, "இரக்கம்" என்னும் புண்ணியத் தன்மையை உண்டு பண்ணினவர் சாது மிரியலே. சாது மிரியல் அவனுள்ளத்திற் கோயில் கொண்டார். அவரது பரோபகாரம் அவன் வாழ்விற் பிடிபட்டது. ஏழை மக்களுக்கு இரங்கித் தன்னாலான உதவி செய்தலே அவன் வாழ்வின் குறிப்பாகக் கொண்டான். இப்போது அவனுக்கு மற்றொரு உணர்ச்சி கிளர்ந்தது. அதுவே அன்பு.

அது கோஸத்திலுல் உண்டானது. 59 வயது கிழவனுன ஜாம்வல்ஜான் எட்டு வயது பெண்ணுன கோசத்தைப் பாசத்துடன் நேசித்தான்; அவ ளில்லா விட்டால் தன் வாழ்வு பாழென் றெண்ணி ஞன். கோஸத் தாயை மறந்து போனுள்; தென்னுடியரிடம் படாத பாடும் பட்டாள். அவளை யாரும் விரும்பவில்லை; யாரையும் அவள் விரும்பு தற்கில்லை. "அன்பு, அன்பு" என்று அவள் உள்ளம் அலறியது. முடிவில் அவள் அன்பு முழுதும் கருணையே வடிவான ஜாம்வல்ஜானிடமே சென்றது. அவள் அவனையே தன் தந்தையெனக் கொண்டாள். இருவரும் வயதை மறந்தனர். அன்பால் இருவ ருள்ளமும் ஒன்ருனது. நாள் முழுதும், கோஸத் சிரித்து விளையாடிஞள்; மழலை பேசிஞள்; பாடி ஞள்; ஆடிஞள். மற்ெருரு குழந்தைபோல ஜாம் வல்ஜான் அச்செயல்களைக்கண்டு களித்துவந்தான். சோலைக் கிளிபோலக் குழந்தை சந்தோஷமா யிருந் தாள். ஜாம்வல்ஜான் அவளுக்கு எழுதப் படிக்கச் சொல்லிக் கொடுத்தான். அவளால் அவனுக்கு உலகம் பிடித்திருந்தது. அவளுக்காகவே அவன் வாழ்வை விரும்பிஞன். "அப்பா" என்பதைத் தவிர ஜாம்வல்ஜானைப் பற்றிக் கோஸத் ஏதும் அறி யாள்; தனது கறுப்புடைகளைப் பற்றி மட்டும் சில வேளை சிந்திப்பாள்.

39. புலி முகம்

செவிட்டுக் கிழவி மட்டும் விடாது நாளும் மறைவாக ஜாம்வல்ஜானைப்பற்றிக் கவனிப்பாள்; சோதிப்பாள்: கோலத்தை ஆயிரம் கேள்விகள் கேட்பாள்: அறையைச் சுத்தம் செய்யும்போதும், சமைக்கும்போதும், அங்குள்ள சாமான்களைக் குறிப்பாகப் பார்ப்பாள். ஜாம்வல்ஜான் பிச்சைக்காரன் மாதிரியே உடை யணிவான்; ஒரு பழைய நீண்ட மஞ்சள் அங்கியை எப்போதும் அணிந்திருப்பான்; இருண்டதும் கோயிலுக்குப் போவான்; அங்கே பிச்சைக்காரர்களுக்கு ஒரு வேளைக்காகும்படி பணந் தருவான். அவனும் பிச்சைக்காரன் மாதிரி யிருப்பதால் யாரேனும் காசு தருவர். அதை இரகசியமாக இன்னொரு ஏழைக்குத் தந்து அவன் செல்வான்; பணம் தந்தபின் திரும்பிப் பார்க்காது சென்று விடுவான். "தருமந் தரும் பிச்சைக்காரன்" என்றால் அங்கு எல்லாருக்கும் தெரியும். அது தான் ஜாம்வல்ஜானுக்கு அந்த வட்டகையில் வழங்கிய பெயர்.

ஒரு நாள் செவிட்டுக் கிழவி கதவிடுக்கு வழியாக ஜாம்வல்ஜானைக் கவனித்தாள். அவன் தனது அங்கியைச் சிறிது கத்தரித்து 1000 பிரான்க் நோட்டை எடுத்து, மீண்டும் அங்கியைத் தைத்து விட்டான். கிழவி திடுக்கிட்டாள்; மறு நாள் மெல்ல அங்கியைத் தடவிப் பார்த்தாள். ஆ!

அதில் கட்டுக் கட்டாய் ஏதோ இருந்தது. ஊசி, நூல், கத்திரிக்கோல், கத்தி, இன்னும் ஏதேதோ அதில் இருந்தன. அதில் ஆயிரக் கணக்கில் மதிக்கும் படியான பணம் நோட்டாக இருந்ததென்று அவள் அறிந்தாள்; இந்த மனிதன் பிச்சைக்கார வேஷம் போடும் பெரிய பணக்காரன் என்று தெரிந்து கொண்டாள். ஓட்டைப் பானையில் தண்ணீரும் இந்தப் பெண்ணிடம் இரகசியமும் தங்கி யிருக்குமா?

ஃ ஃ

ஜாம்வல்ஜான் ஒரு நாள் கோயிலுக்குப் போய் ஏழைகளுக்குத் தருமம் செய்யும்போது, ஒரு கிழட்டுப் பிச்சைக்காரனைக் கண்டான். "ஐயா, தருமம்" என்றான் கிழவன். "சகோதரா, இந்தா" என்று ஒரு வெள்ளிப் பணம் கொடுத்தான் ஜாம்வல்ஜான். "நல்லாயிருக்க வேணும் தருமப் பிரபு; 'வலக் கை செய்வதை இடக் கை அறியாது தானஞ் செய்' என்கிறார் ஏசுநாதர். அதற்குத் தாங்களே அத்தாட்சி!" என்று வேதாந்தம் பேசினான் கிழவன். ஒவ்வொரு மாலையும் ஜாம்வல்ஜான் அவனுக்கு வெள்ளிப் பணம் தந்து, அவனிடம் இரண்டொரு வார்த்தைகள் பேசி வந்தான். அந்தக் கிழவனிடம் பொறாமை கொண்ட மற்றொரு பிச்சைக்காரன் மட்டும், "ஐயா, இவன் பொலீஸ், உஷார்" என்று எச்சரிக்கை செய்தான்.

ஒரு நாள் மாலை அந்தப் பிச்சைக்காரன் நின்ற இடத்தில் மற்றொரு பிச்சைக்காரன் இருந்தான்.

ஜாம்வல்ஜான் பழைய பிச்சைக்காரன் என்றெண்ணி ஒரு வெள்ளிப் பணத்தை வழக்கம் போலக் கொடுத்தான். புதிய பிச்சைக்காரன் சட்டென்று தலையைத் தூக்கி, ஆளைக் கூர்ந்து நோக்கினான். ஜாம்வல்ஜான் நாடி நடுங்கிற்று. ஆ! அது ஜாவரின் புலிப் பார்வை! அங்கு நின்றவன் ஜாவர். ஜாம்வல்ஜான் மனம் குழம்பியது ; மீண்டும் சனியன் பிடித்ததென் றெண்ணினான். கடுஞ்சிறை அவன்முன் நின்றது. இருப்பினும், சந்தேகந் தெளிய மறுநாள் மாலை ஜாம்வல்ஜான் அதே இடத்திற்குப் போனான். அங்கே பழைய பிச்சைக்காரனே நின்றுகொண்டிருந்தான். நேற்றுக் கண்டது ஒரு வேளை மனமயக்கமாயிருக்குமென்று நினைத்தான் ஜாம்வல்ஜான். சில நாட்கள் கழிந்தன.

ஒரு நாள் இரவு எட்டு மணிக்கு ஜாம்வல்ஜான் கோஸத்திற்குப் பாடம் சொல்லிக்கொண்டிருந்தான். திடீரென்று ஆள் சத்தம் கேட்டது. குப்பென்று விளக்கை யணைத்து கோஸத்தைப் படுக்க வைத்தான் ஜாம்வல்ஜான் : கையில் விளக்குடன் ஒரு ஆள் தனது கதவண்டை நிற்பதை யுணர்ந்தான் : மெல்ல இடுக்கு வழியாகப் பார்த்தான். ஜாவரின் நீண்ட வடிவம் தெரிந்தது. அது ஜாம்வல்ஜானைத் தூக்கி வாரிப் போட்டது. அவன் பேச்சு மூச்சில்லாமல் படுத்தான். வந்த ஆள் கீழே இறங்கிச் சென்றான். மறுநாட் காலை, செவிட்டுக் கிழவியைக் கூர்ந்து நோக்கினான் ஜாம்வல்ஜான். "நம் வீட்டுக்குப் புதுக்குடி வந்திருக்

கிறார்கள்'' என்றாள் கிழவி. "யார்? பெயர் என்ன?" என்று கேட்டான் ஜாம்வல்ஜான். ஏதோ "தூமோ, காமோ" என்று சொன்னாள் கிழவி. "அவருக்குத் தொழில் என்ன?" என்று கேட்டான் ஜாம் வல்ஜான். "தங்களைப்போல அவரும் குடியிருக்கிற வர்தான்" என்று நீட்டினாள் கிழவி. அவள் நரிக் கண்களில் விஷமம் இருந்தது. ஜாம்வல்ஜானுக்கு எல்லாம் புரிந்து போயின. அவன் தனது பணத்தை யெல்லாம் சட்டையின் உட்பைகளில் திணித்துக் கொண்டான்; அன்று இருட்டியதும் இங்கு மங்கும் பார்த்தான். ஆட்கள் தட்டுப்படவில்லை. "வா, கோஸத்" என்று குழந்தையைக் கூட்டிக்கொண்டு தெய்வம் விட்ட வழி சென்றான் ஜாம்வல்ஜான். பட்டு நிலா காய்கிறது. பாதை நன்கு தெரிகிறது. மூலை முடுக்குகளிலெல்லாம் நுழைந்து, நுழைந்து சென்று, பின்னால் திரும்பிப் பார்த்தான் ஜாம்வல் ஜான்; சற்றுத் தூரத்தில் நான்கு ஆட்கள் வேட்டை நாய்கள் மாதிரி தன்னைத் துரத்திவரக் கண்டான். அவர்களுள் நெட்டைப் பேர்வழி ஜாவரே. ஜாம்வல் ஜான் சட்டென்று வேறொரு வழியாகப் போனான். ஊர் அரவம் ஒடுங்கிப் போயிற்று. நிலாக் காலமான தால் வீதி விளக்குகள் எரியவில்லை. கோஸத்தைத் தோளிலே சுமந்துகொண்டு ஜாம்வல்ஜான் விரைவாக நடந்தான்; தான் மறைந்து செல்லக்கூடிய சந்து களிலெல்லாம் புகுந்து சென்றான்; விதி தன்னை எங் குச் சேர்க்குமென்று அறியான். பின்னால் பொலீஸ்

புலிகள் துரத்திவருவது மட்டும் தெரிந்தது. அதோ ஜாவர் வேட்டைப்புலிபோல் பதுங்கிப் பதுங்கி கிட்ட வந்து விட்டான். என் செய்வது? ஜாவர் கையில் அகப்பட்டால், மறுபடியும் கடுஞ் சிறையோ! தூக்கு மேடையோ! அறியோம். ஜாம்வல்ஜான் பணமெல் லாம் பறிமுதலாகிவிடும். கோஸத் அனாதையாவாள். இருப்பினும், மனத்துணிவு அவனை வேறொரு தெரு வழியாக ஊக்கியது. அவன் கோஸத்தைத் தூக்கிக் கொண்டு விரைந்தான்; ஆஸ்தர்லிட்ஜ் பாலத்திற்கு வந்தான். அதைத் தாண்டச் சுங்கம் தரவேண்டும். ஜாம்வல்ஜான் சுங்கம் தந்ததும், அதனைத் தாண்டிச் சென்றான்; பிக்புஸ் தெருவிற்கு வந்தான். அது நடமாட்டமில்லாத தெரு. அங்கிருந்து அவன் நாலு பக்கமும் பார்த்தான்; சற்றுத் தொலைவில் போலீஸ் புலிகள் இங்குமங்கும் தன்னைத் தேடிக்கொண்டிருப் பதை யுணர்ந்தான். இந்தத் தெருவினின்று அங்கும் இங்கும் திரும்பினால் ஆள் அகப்பட்டு விடுவான். தெருவின் இரு முனையிலும் காவல் இருப்பதை ஜாம் வல்ஜான் அறிந்தான். அங்கு நின்றாலும் ஆபத்து விளையும். இதோ பத்து நிமிஷத்தில் ஆட்கள் தன் னைப் பிடித்துவிடுவர். இப்போது எட்டுப்பேர் துப் பாக்கியுடன் வந்தனர். என் செய்வது? ஜாம்வல் ஜான் சுற்றிலும் பார்த்தான். ஒரு பெரிய மதில் தெரிந்தது. அது ஒரு தோட்ட மதில். விதி விட்ட படி விடட்டும் என்று ஜாம்வல்ஜான் மதிலேறிக் குதிக்கத் துணிந்தான். பல பீமனை ஜாம்வல்ஜான்

இமை கொட்டுமுன் மதிலேறித் தோட்டத்தில் ஒளிந்து தப்புவான். ஆனால் குழந்தையை என்ன செய்வது? ஒரு கயிறு கட்டித் தூக்கி மதிலேற்று விக்கலாமா? சரி; கயிறு? சுற்றிப் பார்த்தான். அந்தக் காலம் வீதி விளக்குகள் கயிறு கட்டித் தொங்க விட்டிருக்கும். பிக்புஸ் வீதியில் ஒரு நீண்ட கயிறு கட்டிய லாந்தர் இருந்தது. அவன் அக்கயிற்றைத் தன் கத்தியால் அறுத்தான். விளக்கு விழுந்தது. ஓசைப்படாமல் அதை அப்புறப்படுத்திக் கயிற்றை அவன் கொண்டுவந்தான்; தனது கழுத்துப் பட்டையை எடுத்துக் கோஸத்தின் இடுப்பில் கட்டி, அதில் கயிற்றை முடித்தான். "அப்பா, இதெல்லாம் என்ன? எனக்குப் பயமாயிருக்கிறதே!" என்று குழந்தை நடுங்கினாள். "பேசாதே; தென்னடியர் உன்னைப் பிடிக்க வருகிறார்கள். நாம் இங்கே ஒளிந்து கொள்வோம்" என்று சொன்னதும் குழந்தை வாயைத் திறக்கவில்லை. ஒரு நொடியில் தன் செருப்பைத் தோட்டத்திற்குள் எறிந்தான். கோசத்தின் இடுப்பில் கட்டிய கயிற்றுத் துணியைப் பல்லில் கௌவிக் கொண்டான்; சுவரின்மேல் பூனை போலத் தாவினான்; கோஸத்தைக் கயிற்றால் தூக்கி மேலே இழுத்தான்; முதுகில் அவளை ஏற்றிக் கொண்டு ஏணியில் இறங்குவது போல் தோட்டத்தில் இறங்கினான்; இறங்கியதும் தான் எறிந்த செருப்பை எடுத்து மாட்டிக்கொண்டு தோட்டத்திற்குட் சென்றான்.

"இந்தத் தெருவில் நன்றாய்ப் பாருங்கள்! அந்தச் சந்தில் பாருங்கள்! விடாதேயுங்கள்! டடடேய்!" என்று ஜாவர் பொலீஸாருடன் வெளியே இடி முழக்கம் செய்தான். ஆள் மாயமாய்ப் போனான்! ஜாவர் ஒவ்வொரு சந்து பொந்துகளிலும் கவனமாகப் பார்த்தான்; ஏமாந்து போனான்.

---

40. போஷல்வான் நன்றி

தோட்டத்தில் ஆளரவம் இல்லை; பழ மரங்கள் அடர்ந்திருந்தன. அது என்ன இடமென்பது விளங்கவில்லை. திடீரென்று சில பெண்கள் சுவிசேஷ கீதங்கள் பாடும் குரல் ஒலித்தது. ஜாம்வல்ஜானும் கோஸத்தும் மண்டிபோட்டுக் கடவுளை நினைத்தனர். கீதம் நின்றது. "அப்பா, தெனாடியன் இன்னும் இருக்கிறானா?" என்றாள் குழந்தை. "இல்லை; இனி பயப்பட வேண்டாம்" என்றான் ஜாம்வல்ஜான். குழந்தை, குளிர் பனியால் நடுங்கினாள். தனது பெரிய சட்டையை அவளுக்குப் போர்த்தித் தோட்ட மூலையிலுள்ள ஒரு கட்டடத்தில் அவளைப் படுக்க வைத்தான் ஜாம்வல்ஜான். அங்கு வாடை அதிகமாயிருந்தது. தரை ஈரம். அதை விட அடக்கமான இடம் இருக்கிறதா என்று அவன் அங்குமிங்கும் சுற்றிப் பார்த்தான்; ஒரு கண்ணாடி ஜன்னலுள்ளே மெல்ல

எட்டிப்பார்த்தான்; உள்ளே ஒரு பெரிய அறை கண்டான். ஒரு மெழுகு திரி எரிந்தது. ஒரு பெண் அங்கே மல்லாந்து படுத்திருந்தாள்; உயிரற்ற சவம் போலக் காணப்பட்டாள். அங்கிருந்து வேகமாகத் திரும்பி வந்தான் ஜாம்வல்ஜான். அது இன்ன இடமென்பது அவனுக்குத் தெரியவில்லை. கவலை பிடுங்கியெடுத்தது. என்ன செய்வது? விடிந்தால் எங்குப் போவது? ஒண்டியானால் அவன் இதற்குள் கண் காணாத ஊருக்குப் போயிருப்பான். குழந்தையை என்ன செய்வது? யாராயினும் அவனைக் கண்டால் திருடன் என்று காபுரா செய்வார்கள். "ஏழைப் பங்காளனே, இறைவனே, நீ தான் துணை!" என்று தொழுதான் ஜாம்வல்ஜான். அப்போது இந்தத் தனித் தோட்டத்தில், அந்த நிசியில் கிண் கிணிச் சதங்கையொலி ஒலித்தது. ஒரு ஆள் மெலன் செடிகளூடு குனிந்து நிமிர்ந்து சென்றான். ஜாம்வல்ஜான் குடல் நடுங்கியது; 'இங்கு யாருமில்லையென்றெண்ணினேம்; ஆள் இருக்கிறனே; திருடன் என்று சத்தம் போட்டால் என்ன செய்வது? ஜாவர் ஆட்கள் இன்னும் வெளியே வட்டமிடுகின்றனர். கடவுளே, உன்னை நம்பியிருக்கிறேன். இந்தக் குழந்தைக்கு இரங்கு; இருவரும் அனாதைகள்' என்று தொழுதான். மணிச் சத்தம் அருகே வந்தது. ஆள் தன்னை நோக்கி வருவது தோன்றியது. சட்டென்று கோஸத்தைத் தூக்கிக் கொண்டு ஒரு மூலையில் பதுங்கினான் ஜாம்வல்ஜான். கோஸத்தின் உடல் விறைத்துப் போனது.

'கோஸத்' என்றான் ஜாம்வல்ஜான். பேச்சு மூச்சில்லை. 'ஐயோ! இறந்து போனாளோ!' என்று நடுங்கிப் போனான் ஜாம்வல்ஜான். மூச்சுக் கொஞ்சம் ஆடிக் கொண்டிருந்தது. நிலை அபாயந்தான். உடனே அடக்கமான இடமும் கணப்பும் இல்லாவிட்டால் குழந்தை இறந்துபோகும். என்ன வந்தாலும் சரி என்று அங்கு நடமாடிய மனிதனிடம், "100 பிராங்க்! இரவிற்கு ஒரு இடமும் கணப்பும் உடனே தாருங்கள்" என்று கூவினான் ஜாம்வல்ஜான். ஆள் நிமிர்ந்து கூர்ந்து பார்த்தான்.

'ஆ! தாங்களா! தந்தை மதேலனா!' என்று வியந்து நின்றான் அக்கிழவன்.

'வந்தது மோசம்! நம் பெயரையும் தெரிந்த ஆள் இங்கு இருக்கிறானா? ஒரு வேளை ஜாவரின் ஆளோ!' என்று குடல் நடுங்கினான் ஜாம்வல்ஜான். வந்த ஆள் நொண்டிக் கிழவன்; ஒரு காலில் மணி கட்டியிருந்தான்; ஆனால் நல்லவனாயிருந்தான்; நெடுநாட் பழகினவன் போலப் பேசினான்.

"தந்தை மதேலரே, இங்கு எப்படி வந்தீர்? ஆகாசத்திலிருந்து குதித்தீரோ? ஆம், புண்ணியவானாகிய தாங்கள் அப்படியும் செய்வீர். சட்டை, தொப்பி, ஒன்றையும் காணோமே! ஏன் இந்த அலங்கோலம்? இங்கே யாரும் வர முடியாதே! என்ன ஆச்சரியம்!" என்று வியந்து வினவினான் கிழவன். "தாங்கள் யார், தெரியவில்லையே!" என்று கேட்டான் ஜாம்வல்ஜான். "என்னைத் தெரியவில்லையா?

தந்தையாரே, தாங்களன்றோ எனக்கு உயிர்ப் பிச்சை கொடுத்தீர்கள். வண்டியிலகப்பட்ட என்னைக் காத்துப் புண்ணாற்றிய கருணையாளர் தாங்களல்லவா? கால் வழங்காது போன இக் கிழவனை இந்தக் கன்னிகை மடத்தில் தோட்ட வேலை செய்யச் சிபாரிசு செய்தவர் தாங்களல்லவா? தங்கள் புண்ணியத்தால் இங்கு நன்றாயிருக்கிறேன்'' என்றான் அக்கிழவன்.

ஜாம் :—ஆ! போஷல்வானா! தெரிந்தது.

போஷல் :—ஆம், புண்ணிய வானே, இந்த மெலன் செடிகளைப் பனி விழாமல் பாய் போட்டு மூட வந்தேன்; தங்களைக் கண்டு திடுக்கிட்டு மகிழ்ந்தேன். தந்தையாரே, தாங்கள் வந்த செய்தியென்ன?

ஜாம் :—முதலில் இங்கே யாரிருப்பது? தங்கள் காலில் மணி கட்டி யிருப்பதென்ன? விவரமாகச் சொல்லுங்கள்.

போஷல் :—இத்தோட்டத்தில் நான் ஒண்டியாயிருக்கிறேன்; இது பிக் புஸ் தெருவிலுள்ள **கன்னியர் மடம்**. இங்கே பெண்களே இருப்பர். ஆண்வாடை கூடாது. நான் வரும்போதும் போம்போதும் இந்த மணி யடிப்பதால் அவர்கள் கண்ணிற் படாமல் ஓடி யொளிவர். அதற்காகவே மணி கட்டியுள்ளேன். இவையெல்லாம் தங்களுக்குத் தெரியும். தாங்கள் தாமே என்னை இங்குக் கொண்டு வந்து வைத்தீர்கள்.

ஜாம்வல் :—பெரியவரே, நான் தங்களைக் காப்பாற்றினே னல்லவா ?

போஷல் :—ஆமாம்; அந்த நன்றியை மறப்பேனு ?

ஜாம்வல் ;—இன்று தாங்கள் என்னைக் காப்பாற்ற வேண்டும்.

போஷல் :—தொண்டன் என்ன செய்ய வேண்டுமோ சொல்லுங்கள், செய்கிறேன்.

ஜாம்வல் :—பிறகு சொல்லுகிறேன்; தங்களுக்கு இங்குத் தனியறை உள்ளதல்லவா ?

போஷல் :—ஆம், மூன்று அறைகள் அதோ அந்த மூலையில் உள்ளன. யாவரும் அங்கு வரமாட்டார்கள்.

ஜாம் :—முதலில் நான் இங்கு இருப்பது யாருக்கும் தெரியக் கூடாது. அதன் காரணத்தையும் தாங்கள் கேட்கக்கூடாது.

போஷல் :—உத்திரவுப்படியே தொண்டன்.

ஜாம் :—சரி, குழந்தையை எடுத்துவருகிறேன். தங்கள் அறைக்குப் போவோம்.

போஷல்வான் தனது அறையில் கணப்புப் போட்டான். குழந்தையைக் குளிருக்கு அடக்கமாக, வெது வெதுப்பாகக் கணப்பருகே படுக்க வைத்தான் ஜாம்வல்ஜான். குழந்தை அயர்ந்து உறங்கிற்று. போஷல்வானும் ஜாம்வல்ஜானும் நெடு நேரம் பேசிக்கொண்டிருந்தனர்.

41. எப்படித் தெரிந்தது?

ஜாவருக்கு எப்படித் தெரிந்தது! மோந்த்ரேல் சிறையை உடைத்துத் தப்பிய ஜாம்வல்ஜானைப் பாரிஸில் கண்டுபிடித்து மீண்டும் சிறையிலிட்டான் ஜாவர். ஜாவரின் துப்பறியுந் திறமையை வியந்து, அரசாங்கத்தார் அவனுக்குப் பாரிஸில் பொலீஸ் உத்தியோகம் ஈந்தனர். துலோன் கைதி ஜாம்வல் ஜான் கடலில் விழுந்து இறந்ததை ஜாவர் பத்திரிகையில் படித்தான்; சர்க்கார் அறிக்கையை உண்மையென்றே நம்பினுன்; தான் வேட்டையாடிய நாய் ஒழிந்ததென்றே யிருந்தான்.

சில மாதங்களுக்குப் பிறகு ஒரு பத்திரிகைப் புளுகு கிளம்பியது: "மோம்ஃபெர்மேலில் பேர் ஊர் தெரியாத ஒருவன் புகுந்து, எட்டு வயதுள்ள ஒரு பெண் குழந்தையைத் திருடிச் சென்றுன். அக் குழந்தையின் தாய் பெயர் ஃபாந்தேன்" என்ற செய்தியைப் படித்தான் ஜாவர். ஃபாந்தேனை அவன் அறிவான். குழந்தை விஷயமும் அவனுக்குத் தெரியும். ஆதலால் அவன் மோந்த்ரேலுக்குப் போய்த் தெனுடியர் வீட்டில் விசாரித்தான். பொலீஸில் அகப்பட்டுக் கொண்டால் தனது திருட்டுத்தனம் வெளிப்படுமென்று அஞ்சினுன் தெனுடியன். சமயத்திற்கேற்றபடி அவன் ஒரு புளுகு புளுகினுன்; "வேறொன்றுமில்லை. குழந்தை

பின் பாட்டனார்தான் வந்து அழைத்துச் சென்றார்" என்றான்.

பாட்டனார் பெயர், நிறம், மாதிரி எல்லாம் வினவினான் ஜாவர். "பாட்டனார் பெயர் வில்லியம் லாம் பெர்ட்" என்று ஒரு கப்ஸா விட்டான் தென்னடியன். ஜாவர் அதை நம்பிச் சென்றான்.

சில நாட்கள் சென்றன. மற்றொரு பத்திரிகைச் செய்தி கண்டான் ஜாவர்: "பேர் ஊர் தெரியாத ஒரு கிழவன் கோர்போ வீட்டில் குடியிருக்கிறான். அவனுடன் எட்டு வயதுபெண் குழந்தையுள்ளது. அக் குழந்தை மோம்ஃபெர்மேலினின்று வந்தது. வேறு விவரமும் தெரியவில்லை. இந்தக் கிழவன் பழைய கிழிந்த சட்டை யணிகிறான்: பார்வைக்குப் பிச்சைக்காரன் போலிருக்கிறான்; ஆனால் நாள் தவறாமல் பிச்சைக்காரர்களுக்கு வெள்ளிப் பணம் தருகிறான். இவன் பகலில் வெளியேறுவ தில்லை; பொழுது பட்ட பிறகே கோயிலுக்கு வருகிறான். இவன் விநோதமான மனிதன்." இச் செய்தி கண்ட தும் உளவாளியை அனுப்பினான் ஜாவர். அந்த உள வாளி தான் வேதாந்தம் பேசிய பிச்சைக்காரன். அவன் மூலம் இன்னும் பல விவரங்களை ஜாவர் அறிந் தான். ஒரு நாள் தானே அந்த உளவாளியின் உடை களைப்போட்டு நின்று, ஜாம்வல் ஜான் பணம் தந்த தும் கூர்ந்து பார்த்தான்; உடனே மாறு வேடம் பூண்டு, கோர்போ வீட்டிற்குச் சென்றான். அங்குச் செவிட்டுக்கிழவியை விசாரித்தான். "ஆமாம், ஐயா,

பொழுது பட்ட பிறகே தான் அவர் வெளியே போகிறார்; பிச்சைக்காரர் மாதிரி வேடம் போடுகிறார். பெரிய சட்டைக்குள்ளே பாங்கு நோட்டுகள் கட்டுக் கட்டாக வைத்துள்ளார். என்னிடம் ஆயிரம் பிராண்க் நோட்டுக் கொடுத்து மாற்றிவரச் சொன்னார்" என்றெல்லாம் சொல்லித் தீர்த்தாள் கிழவி. ஜாவர் ஜாம்வல்ஜான் அறைவாசலில் நின்று பார்த்தான்; அந்த வீட்டில் ஒரு அறையை வாடகைக்குப் பிடித்தான்; குடியிருப்பது போலிருந்து ஆளைக் கைப்பிடியாகப் பிடிக்கச் சூட்சி செய்தான். இவற்றையெல்லாம் ஒரு நொடியில் அறிந்த ஜாம்வல்ஜான் வீட்டை விட்டுப் புறப்பட்டு டிமிக்கிக் கொடுத்த விவரம் நாம் அறிவோம்.

ஜாவர் ஏமாந்தான். அவன் கோர்போ வீட்டிலிருந்தபோதே ஜாம்வல்ஜானைக் கைப்பிடியாகப் பிடித்திருக்கலாகாதா? அல்லது அவன் தெருவில் தப்பிச் சென்றபோது பிடித்திருக்கக் கூடாதா? ஆள் விவரம் உறுதிப்படாத வரையில் ஒருவனை அவ்வாறு பிடித்தல் பிரஞ்சுச் சட்டத்திற்கு விரோதம். மேலும் ஜாவர் சந்தேகித்தான். துலோன் கைதி கடலில் இறந்து போனதாகக் கூறியது சர்க்கார் அறிக்கை யல்லவா? தான் சந்தேகித்தவன் அந்தக் கைதியாயில்லாது வேறு மனிதனாயிருந்தால் அவமானம் வரும். அதனால் ஆளை நன்கு உளவறிந்து கைது செய்யவே அவன் அவ்வளவு பாடுபட்டுப் பதுங்கிப் பதுங்கி வேட்டையாடினான். 'திருடனா யிருந்தால்

இவ்வளவு மெதுவாகக் குழந்தையுடன் செல்வானா! மேலும் பாட்டனாரே வந்து குழந்தையை அழைத்துச் சென்றதாகத் தென்னாடியன் சொன்னானே!' என்றெல்லாம் சந்தேகித்தான். எனினும், ஜாவர் மானைக் கண்ட புலிபோல ஜாம்வல்ஜானைத் துரத்தினான்; ஆளைப் பிடிப்பது உறுதியென்றே நம்பினான்; இன்னும் ஐந்து நிமிஷத்தில் பிடித்தே யிருப்பான்; ஏமாந்தான்; பிக்புஸ் தெருவில் லாந்தர் உடைந்திருப்பதையும் அதில் கட்டிய கயிறு காணாமலிருப்பதையும் குறித்தான்; அந்தத் தெருவிலுள்ள தோட்டத்தின் வழியேதான் தப்பியிருப்பான் கைதி என்று துணிவுடன் அங்குப் பலமாகக் காவல்வைத்தான்; மறுநாள் தோட்டங்களையும் அலசிப் பார்த்தான். ஆள் கிடைக்கவில்லை. அவமானப்பட்டுத் தன் முயற்சியைக் கைவிட்டான் ஜாவர்.

---

42. பரிசுத்தக் கன்னியர் மடம்

1425-ல் பெர்னாதியத் துறவியான (Monk of the order of St. Bernard) மார்தின் வேர்கா (Martin Verga) என்பவர் ஐரோப்பா வெங்கும் கடுமையான துறவறத்தைப் போற்றும் கத்தோலிய மடங்களை நிலை நாட்டினார். ஆயுள் முழுதும் கடுமையான காயக்கிலேசங்கள் செய்துகொண்டு, உலகின்

பாவங்களை மன்னித்து, மாந்தரைத் தூய்மையாக்க இறைவனைச் சிலுவை முன் வணங்கலே இம்மடத்தினர் வேலை. இம்மடத்தைச் சேர்ந்த ஆண், பெண் ஆகிய இருபாலரும் பிரமசரிய ஒழுக்கத்தில் அணுத் தவறக்கூடாது. இரு பாலருக்கும் வெவ்வேறு மடங்கள் தனித்தனியாகவே யிருக்கும். இவர்கள் மிதியடி போடாமல் வெறுங் காலால் நடப்பர்; கறுப்பான ஆடைகளே யணிவர். இடுப்பு நாடா மட்டும் வெளுப்பு. ஒரு ஜப மாலையை எப்போதும் வைத்துக் கொண்டு இவர்கள் ஜபம் செய்வார்கள்.

கன்னியருக்குக் கட்டுப்பாடுகள் அதிகம்; கன்னியர் மடத்தில் ஆண் வாடையே கூடாது: ஊரிலுள்ள தலைமைக் குருக்களே அங்கு அரிதாகப்போய்த் தொழுகை நடத்துவார். கன்னித் துறவிகள் மடத்திற்குள்ளேயே அடைபட்டிருப்பர். உலக சம்பந்தமே அவர்களுக்குக் கிடையாது. ஆண்களை அவர்கள் பார்க்கக் கூடாது; கறுப்பான முரட்டுச் சட்டைப் பாவாடை யணிந்து, அவர்கள் மூச்சுவிட இடம் விட்டு, முகத்தைப் பலமாக மூடிக் கொண்டிருப்பர். அவர்கள் மிகவும் எளிய வுணவே உட்கொள்வர். காய்கறி, மீன், ரொட்டி ஆகிய இவையே அவர்கள் உணவு. அவர்கள் அடிக்கடி பட்டினியிருப்பர்; உறக்கம் சுருக்குவர்; இரவு ஒரு மணி முதல் மூன்று மணி வரையில் விழித்திருந்து தொழுது ஜபம் செய்வர்; முரட்டுப் பாய்களிலே படுப்பர்; குளிர் காலத்தில் அவர்கள் கணப்புக் காயக்

கூடாது; குளிர் வெப்பத்தைத் தாங்க வேண்டும். மிகவும் அவசியமான வார்த்தைகளை இரண்டொன்று பேசவேண்டும்; மற்றப்படி மௌனமாயிருக்க வேண்டும்; இறைவனைத் துதிக்கவே பாட வேண்டும்; தலை குனிந்தே நடக்க வேண்டும். சிரிக்கக் கூடாது. தூய்மை, வறுமை, பணிவு, மன வுறுதி ஆகிய இவையே அவர்களுக்கு அணி. மடத்தின் விதி முறைகளில் அணுப் பிசகினாலும் கடுமையான தண்டனை விழும். இத் துறவிகள் மடத் தலைவியின் சம்மதமின்றி ஏதும் படிக்கக் கூடாது; எழுதக் கூடாது; வைகிதிருக்கக் கூடாது: தினந்தோறும் பாப மன்னிப்பிற்காகத் தொழுது, அழுது, கடவுளை வேண்டிக் கொள்வர்; அத்துடன் அன்றாடம் சொல்லாலும், செயலாலும், சிந்தனையாலும் தாம் செய்யும் தீவினைகளை மடத் தலைவியிடம் ஒப்புக்கொண்டு, அவள் சொல்லும் பரிகாரத்தைச் செய்வர். "நான் இன்று இன்ன ஆடவனைச் சந்தித்தேன். நான் அவன்மேல் காதல் கொண்டு வருந்தினேன். நான் கனவில் ஒரு ஆடவனைப் புணர்ந்தேன். நான் ஜன்னல் இடுக்கு வழியாகத் தெருவில் போகும் ஒரு ஆடவனைப் பார்த்து மையல் கொண்டேன். இன்று நான் ஒரு சிற்றின்ப நூலைப் படித்தேன். எனக்குக் கலியாணம் செய்து கொண்டு ஒரு கணவனுடன் பெற்றுப் பெருகி வாழ ஆவல் இருக்கிறது. தெருவில் ஒருவன் பாடிக் கொண்டு போனான். அவனிடம் என் சித்தம் சென்

றது. நேற்றிரவு இரகசியமாக நான் இன்ன பிழை செய்தேன். நானும் அந்தப் பெண்ணும் கெட்ட பேச்சுப் பேசினேம்'' என்ற இத்தகைய முறை யீடு களை திரித்தும் மறைத்தும் அங்கு அதிகமா யிருக்கும். வயதையும் பெண்ணியல்பையும் மடச் சிறையில் அடைத்து அடக்க முடியுமா? உள்ளே போராட்டந்தான்! "போடு, பட்டினி. ஒரு வேளை தான் சாப்பாடு. உப்புச் சேர்க்காதே. படு தரையில். சிலுவை முன் 12 மணி நேரம் ஜபம் செய்து பிழை வருந்து.'' இப்படி யெல்லாம் தண்டனை விழும்; மடக் கன்னிமார்கள் கூட்டத்தில் பிழையை ஒப்புக்கொள்ளும் அவமானம் வேறு. குனிந்த தலை நிமிர்ந்தாலும், கண் மீன் இப்படி அப்படிப் புரண்டு பாய்ந்தாலும் குற்றந்தான்.

இக் கன்னித் துறவிகளுக்கு அன்னை மேரி, ஏசு நாதரைத் தவிர வேறு எதிலும் பற்றிருக்கக் கூடாது. பைபிளைக் கூடத் தமதென்று அவர்கள் வைத்துக் கொள்ளக் கூடாது. நான், எனது என்ற பேச்சு அவர்கள் வாயினின்றும் வராது. ஒவ்வொரு பொருளும் எல்லாருக்கும் சொந்தம் என்பது குறிக்க, 'நமது ஆடை, நமது புத்தகம், நமது அறை' என்றே அவர்கள் சொல்லுவார்கள். அவர்கள் அறைகள் எப்போதும் திறந்தேயிருக் கும்; எந்த நேரமும் உள்ளே சென்று பரிசோ திக்கும்படியாகவே யிருக்கும். ஒவ்வொரு வாரமும் சிலுவையின் முன் ஒரு பொதுக் கூட்டம் கூடும்.

அப்போது ஒவ்வொருவரும் தங்கள் குற்றத்தை வெளிப்படையாக ஒப்புக் கொள்வர். ஒரு கண்ணாடியை உடைத்தால், ஆடையைக் கிழித்தால், பருக்கை சிந்தினால், சிரித்து விளையாடினால், பக்கம் பார்த்தால், வகுப்பிற்குத் தாமதமாக வந்தால், நேரங் கடந்து உறங்கினால், எல்லாம் குற்றமாகும்; தண்டனையுண்டு. உற்றார், உறவினர் கன்னியர்களைப் பார்க்க மிகவும் முயன்றால் தான் உத்திரவு கிடைக்கும். வருபவர் பெண்களாயிருத்தல் வேண்டும். ஆணுக்கு உத்திரவு கிடையாது. இம்மடத்திற் சேருவது எளிதன்று. சிற்றின்பம் நுகர்ந்த யாரும் இதனுள் வர முடியாது: விதவைகள் இங்கே சேர முடியாது. சுமார் எட்டு வயது சிறுமிகளை இம்மடத்தார் விரும்பிச் சேர்ப்பர்: இரண்டு அல்லது நான்கு ஆண்டுகள் அவர்களைப் பழக்கிப் பிறகு பரிசுத்தச் சிறுமியர் கூட்டத்திற் சேர்த்து மதக் கல்வி புகட்டுவர்; நான்கு ஆண்டுகள் பயிற்சியளித்த பிறகு சுமார் பதினேழு அல்லது 20-ஆண்டில் புனிதக் கன்னியர் கூட்டத்திற் சேர்ப்பர். அதற்கொரு சடங்கு உண்டு. முதலில் கன்னியை இம்மடத்தார் நல்ல உடைகளால் அலங்கரிப்பர். அவ்வுடையுடன் கன்னிகை சிலுவைமுன் பணிவாள். உடனே அவள் மீது கறுப்புடை போட்டுச் சாவுக் கீதம் பாடப்படும். "நமது சகோதரி இறந்தாள்" என்பர் ஒரு சாரார்: "நமது சகோதரி ஏசுநாதர் ஆவியைப் பெற்ற பரிசுத்த வாழ்வடைந்தாள்"

என்பர் மற்றொரு சாரார். "உலகின் ஆசாபாசங்களை நான் இத்துடன் துறந்தேன்; இனி ஏசுநாதர் காதலே என் உள்ளத்திற் கொழுந்துவிட் டெரியும்" என்று சபதஞ் செய்வாள் கன்னிகை. மடத்தின் வழிபாட்டறையில், பெரிய சிலுவையின் முன், முழந்தாள் பணிந்தோ, நிலந்தோய்ந்தோ, இக் கன்னித் துறவிகள் நாள் முழுதும் ஆண்டவனை வணங்குவர்; தியானிப்பர்; ஜபிப்பர்; உலகின் பாபங்களை நீக்கிப் பாவிகளையும் அஞ்ஞானிகளையும் கிறிஸ்து தருமத்தில் சேர்த்து ஈடேற்றும்படி ஆண்டவனைத் தொழுவர். துறவிகள் பெரும்பாலும் மௌனமாகவே யிருப்பர்; அடிக்கடி பட்டினி கிடப்பர். இந்தக் கன்னி மடங்களுக்குச் சர்க்கார் உதவி சிறிது மதப் பற்றுள்ளவர் உதவி பெரிது.

பிரெஞ்சுப் புரட்சியின் போது பிக்புஸ் தெருவிலுள்ள கன்னி மடத்தின் ஒரு பாகம் இடிந்து சிதைவுற்றது. மீதி மூன்று பெரிய கட்டடங்களே இருந்தன. அவற்றின் பின்னே ஒரு பெரிய தோட்டம் இருந்தது. அந்தத் தோட்டத்தையே **போஷல்வான்** வளர்த்து வந்தான். இக் கிழவன் ஒருவனே அந்த மடத்தைச் சேர்ந்த ஆண். அவனுக்கும் காலில் மணி கட்டியிருந்தது. மணியோசை கேட்டால், உடனே கன்னியர் இக் கிழவன் கண்ணிற்கூடத் தட்டுப்படாமல் ஓடி யொளிவர். ஒவ்வொரு காரியத்திற்கும், அடையாளமாக இத்தனைத் தடவை மணியடிப்பது என்ற கட்டுப்பாடுண்டு. வாய் பேசாமல் மணியைக்

கேட்டே காரியம் நடக்கும். "டாண்" என்று ஒரு மணியடித்ததும் எல்லாரும் வரிசைப்படி தோத்திரம் செய்ய வந்து நிற்பர். 'டாண், டாண்' என்று இரண்டு மணியடித்தால், துறவிகள் மட்டும் உள் வழிபாட்டிற்கு வந்து சிலுவை முன் முழந்தாள் பணிவர். 5 தடவை மணியடித்தால், சிறுமிகள் பாடம் படிக்க ஒழுங்காக வகுப்புகளுக்குச் செல்வர்; பத்துத் தடவை மணியடித்தால், மடத்தில் ஏதோ பெரிய விசேஷம் என்றறிவர். இந்தக் கன்னி மடம் மிகப் பெரிது. இதன் நடுவே கோயிலுள்ளது. அதற்கு இப்புறம் துறவிகளின் இருக்கை. தோட்டம் அந்தக் கட்டடத்திற்குப் பின்னே யிருந்தது; கோயிலுக்கு அப்புறம் சிறுமிகளுக்குப் பள்ளிக்கூடம் உண்டு. துறவிகள், படிக்கும் சிறுமிகளைப் பிரியமுடன் நடத்துவர்: ஆனால் பேசமாட்டார்கள். இங்கு எல்லாரும் ஒரு நிகர்தான். இங்குச் சேர்ந்தவர், தங்கள் உடைமையெல்லாம் மடத்திற்குத் தந்துவிட வேண்டும்: வறுமை பூண வேண்டும். இவ்வாறு சேர்ந்த பொருட்குவை ஏராளம்.

இக் கன்னி மடத்திற்குட் செல்வதென்றால் மிகவும் கடினம். ஒரே வழிதான் உண்டு; அங்கும் பலமான காவல் உண்டு. இரண்டு மூன்று ரேழிகளைத் தாண்டி, அங்கங்குள்ள காவலர்களுக்குப் பதில் சொல்லிவிட்டு, ஒரு குறுகலான மச்சுப்படி யேறி மேலே சென்றால், அங்கொரு சுவரில் தபால் பெட்டியின் வாய் மாதிரி ஒரு தொளை யிருக்கும்.

அதில் ஒரு நாடா தொங்கும். அந்த நாடாவை இழுத்தால், 'டங், டங்' என்று மணி யடிக்கும். உடனே, "யாரங்கே?" என்றொரு கேள்வி உள்ளிருந்து வரும். மடத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு குழூக் குறி யுண்டு. அதைச் சொல்லி, இன்னார் என்றால், 'வலப் பக்கம் வாருங்கள்' என்று பதில் வரும்; சங்கேத மொழி தெரியா விட்டால், பேச்சு மூச்சிராது. வந்தவர் திரும்பிச் செல்ல வேண்டியதுதான்.

இவ்வாறு இளங் கன்னிகளை வறட்டுத் துறவறத்திற் போட்டு வதைப்பதை விக்தர் ஹ்யூகோ போன்ற அறிவாளிகள் பலமாகக் கண்டிக்கின்றனர். வாழும் வயதில் பெண்கள் ஆண் ஏக்கத்தை உள்ளடக்கிக் கொண்டு இவ்வாறு வறட்டுத் துறவறத்தில் வதங்கிச் சாவதைத் தற்கொலை யென்றே பலர் கருதுகின்றனர். வணக்கம், தோத்திரம், விரதம் எல்லாம் மனித சமுதாயத்திற்கு வேண்டியவைதாம். ஆனால், கடவுளை இதயத்தில் வணங்கி, அவன் மயமான ஆருயிர்களுக்கு அருட்பணி புரிவதே சரியான சமய நெறி. இத்தாலி, ஸ்பெயின் ஆகிய இரண்டு நாடுகளிலும் கடுமையான துறவு மடங்கள், நாட்டிற்குப் பல நல்ல தொண்டு செய்து, நல்ல சந்ததிகளைத் தரக்கூடிய வாலிபரையும், கன்னிகளையும் பாழ்படுத்தின. அவ்வாறே பிரான்ஸிலுள்ள கன்னி மடங்களும் கடுமையான விதிகளால் இளமையின் மூச்சைப் பிடித்தன.

43. வெளியேற வேண்டுமே!

இந்தக் கன்னி மடத் தோட்டத்திலே தான் ஜாம் வல்ஜான் குழந்தை கோஸத்துடன் போஷல்வான் ஆதரவில் இருந்தான். அவன் சுவரேறிக் குதித்து மறைந்திருந்தபோது கேட்ட கீதமே கன்னியர் இரண்டு மணிக்குப் பாடிய காலைப்பாட்டு. ஜன்னல் வழியாகப் பார்த்துப் பிணம் என்று அவன் அஞ்சியது பிணமன்று. அதுதான் ஒரு கன்னி சாஷ்டாங்கமாக அசையாது தரையில் விழுந்து பாப மன்னிப்பிற்காக வருந்தி வேசற்றிருந்த காட்சி.

கோஸத் உறங்கினாள். மற்றிருவருக்கும் உறக்கம் பிடிக்கவில்லை. இந்தத் தோட்டத்தை விட்டுத் தலையை நீட்டினால் ஜாவர் பிடித்துக் கொள்வான்—ஜாம் வல்ஜானுக்குப் பயம். ஆதலால், எப்படியாவது இந்த மடத்திலேயே மறைந்திருக்க ஜாம் வல்ஜான் தீர்மானித்தான். ஆனால், எப்படியிருக்க முடியும்? இங்குத்தான் ஆண் வாடையே கூடாதே! இக்கட்டடத்திற்குள் நுழைய ஒரு வழி தானேயுண்டு. "புதிய ஆள் எப்படி வந்தான்?" என்று கேட்டால் என்ன செய்வது? என்று போஷல்வான் சிந்தித்தான். 'யாரும் தாண்ட முடியாத தோட்டச் சுவரை. தந்தையார் மதலேர் எப்படி இங்கு வந்தார்? ஆகாசத்திலிருந்தே குதித்தார்; உண்மை; ஆனால் ஏன் இங்கு ஒளிந்தார்? கடன்காரர் தொல்லையோ! அரசாங்கக் குற்றமோ? ஏதோ தெரியவில்லை. ஏதா

யினும் சரி! மதேலர் புண்ணியர். அவர் திருட்டு, கொலை, அரசியற் குற்றத்திற்கே யிங்கு மறைந்திருந்தாலும் சரி. அவர் என்னைக் காத்தார். நான் தலையைக் கொடுத்தாயினும் அவரைக் காப்பேன்' என்று உறுதி பூண்டான் போஷல்வான். ஆனால் இந்தக் கடுமையான கன்னி மடத்தில் மதேலனை எப்படி வைத்துக் கொள்வது? அதற்கும் ஒரு வழி கண்டு பிடிக்க வேண்டும். காலை புலர்ந்தது. மதேலனும், போஷல்வானும் சிந்தித்தனர்:—

போஷல்:—தந்தை மதேலரே, தாங்களும் குழந்தையும் வெளியே தலை நீட்டினால் ஆபத்து! சுட்டு விடுவார்கள்?

ஜாம்வல்:—இந்த அறைக்குள்ளே யிருப்பதே நல்லது.

போஷல்:—இன்று யாரும் இங்கு வரமாட்டார்கள். மடத்தில் ஒரு பெரிய பெண் துறவி சாகக்கிடக்கிறாள்; அவளுக்காகக் கடைசிப் பிரார்த்தனையும் நடந்து விட்டது. எல்லாரும் பிணத்தருகே யிருப்பர். ஆனால், நாளை என்ன செய்வது? இப்போது ஒரு மணி யடித்தது. ஆ! பெண் துறவி காலமானாள்! பிணம் வெளியேறு மட்டும் ஒவ்வொரு நிமிஷமும் சாவு மணி யடிக்கும். பெரிய கன்னிகைகள் இங்கு வரமாட்டார்கள். ஆனால், பள்ளிக்கூடச் சிறுமிகள் தோட்டத்திற்கு வந்து விளையாடுவார்களே! ஒரு சிறுமி தங்களைக் கண்டால் எல்லாரிடமும் சொல்லிவிடுவாள். பின்பு ஆபத்து விளையும்.

ஜாம்வல்:—ஆம், இங்கிருப்பது கடினமே!

போஷல் :— இருப்பதை விட இங்கிருந்து போவதே கடினம்!

ஜாம்வல் :— போவதா........?

போஷல் :— ஆமாம், மதேலரே, இங்கிருந்து தாங்கள் வெளியேறித்தான் பிறகு உள்ளே வர வேண்டும். நீர் ஆகாயத்திலிருந்து குதித்ததாக நான் நம்புகிறேன். ஆனால், இச் கன்னிகைகளுக்கு என்ன பதில் சொல்லுவது? இந்தக் குழந்தையை ஒரு கூடையில் மறைத்து வெளியே கொண்டுபோய் எனக்குத் தெரிந்த ஒரு பழக்காரியிடம் உட்கார வைத்து விடலாம். தாங்கள்........ வந்த வழியே செல்ல முடியாதா?

ஜாம் வல்ஜானுக்குப் பகீர் என்றது. மீண்டும் சுவரேறிக் குதித்துத் தெருப்பக்கம் போனால் ஜாவர் ஆட்களிடம் சிக்கிக் கொள்ளவேண்டியது தான். பிக்புஸ் தெருவில் இன்னும் பொலீஸார் கண்காணிக்கின்றனர். என்ன செய்வது? மடத்தில் தொடர்ந்து மணி யடிக்கிறது; இன்ன மணி இன்னதைக் குறிக்கிறது; உள்ளே இன்னது நடக்கிறதென்று போஷல்வான் விவரமாகச் சொல்லுகிறான் :—

“ இதோ மருத்துவர் வந்து பிணத்தைப் பார்க்கிறார். இந்த மருத்துவர்களுக்கு மட்டும் பய பக்தி கிடையாது; முக மூடியைத் திறந்து பார்ப்பார்; இன்னொன்றையும் திறந்து பார்ப்பார். மருத்துவர் ஆள் பைசல் என்ற பிறகுதான் ஆவி பரலோகத்

திற்கு ஏற வேண்டும். சரி, மருத்துவர் சென்றனர். இப்போது ஈமக்கடனைத் தொடங்குகின்றனர் கன்னியர். பிணத்தைப் பாடையிலேற்றியதும் நான்தான் போய்ப் பாடையை மூடி, ஆணியறைந்து, கொண்டு போய் அடக்கம் செய்ய வேண்டும். என்னுடன் துணையாக வந்து அடக்கம் செய்ய மேஸ்தியன் என்ற ஒரு நண்பன் இருக்கிறான் ஆ! நாலாவது மணி! என்னைக் கூப்பிடுகிறார்கள்; மதேலரே, மூச்சுவிடாமல் இங்கே கதவடைத்துக் கொண்டிரும்; குழந்தையும் இதை விட்டு அசையக் கூடாது. பசித்தால் இதோ ரொட்டி, வெண்ணெய் எல்லாம் உள்ளன. நான் போய் எனது வேலையை கவனித்து வருகிறேன். இதோ, இதோ வந்தேன்" என்று போஷல்வான் நொண்டி நொண்டி விரைந்தான்.

---

44. எனது தம்பி

போஷல்வானுக்குக் கன்னி மடத்தின் உளவெல்லாம் தெரியும். ஆனால் அவன் ஏதும் தெரியாதவன்போல் இருப்பான்; எல்லாம் பார்ப்பான்; பார்க்காதவன் போலிருப்பான்; எல்லாம் கேட்பான்; கேட்காதவன் போலிருப்பான்; யாருடனும் பேச மாட்டான்; கேட்பதற்கு மட்டும் பதில் சொல்லி விட்டு அடக்கமாயிருப்பான்; மணியடித்தால்தான்

வருவான்; தன் வேலையுண்டு தானுண்டு. துறவி களுக்கு அவன்மேல் நம்பிக்கை யுண்டு.

போஷல்வான் பயபக்தியுடன் மடத்தலைவியான அன்னை இன்னொஸாந்து (Mere Innocent) முன் வந்து வணங்கினான். இந்த அன்னை பேச்சில் அடமழை, போஷல்வானிடம் தன் மனத்தை ஒளிக் காது வெளியிடுவாள்.

அன்னை :—ஃபோவான் (இது போஷல்வா னுக்கு அங்கே வழங்கிய சுருக்கப் பெயர்) உன்னைத் தான் கூப்பிட்டேன்.

போஷல் :—சந்நிதானத்தில் கைகட்டிக் காத் திருக்கிறேன்.

அன்னை :— உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் சொல்ல வேண்டும்.

போஷல் :— விஷயம் தெரிந்தது. அம்மாள் சந்நிதானத்தில் எளியேனும் ஒரு முக்கியமான விஷயம் தெரிவித்துக் கொள்ளவேண்டும்.

அன்னை :—என்ன வேண்டுகோள்? சொல்....

போஷல் :—பல நாளாய்ச் சொல்ல வேண்டு மென்றிருந்தேன்.

அன்னை :— சொல், நிறைவேற்றுவோம்.

போஷல் :—அம்மாளுக்குத் தெரியாததில்லை. நான் கிழவனாய்ப் போனேன்; கை கால் தளர்ந்து போனேன். தோட்டமோ பெரிது. எனக்கொரு துணை வேண்டும். தாயே, என் தம்பி ஒருவன் இருக் கிறான்; கிழவன்; மகா நல்லவன்; யோக்கியன்;

தோட்ட வேலையில் என்னைவிடக் கெட்டிக்காரன். அவனைத் துணைக்கு வைத்தால்தான் நான் இனி வேலை செய்ய முடியும். அவனுக்கு ஒரு பேர்த்தி யிருக்கிறாள். அவளை நமது மடத்தில் சேர்த்துக் கொள்ளலாம். அவள் எட்டு வயது பெண்; புத்திசாலி.

அன்னை ஜபமாலையை உருட்டிக்கொண்டே உள்ளே சென்று, தன் சகோதரக் கன்னிகளுடன் கலந்துகொண்டு, கால் மணி நேரத்திற்குப்பின் திரும்பி வந்தாள்.

அன்னை :—ீபோவான், மூலஸ்தானத்தில் ஒரு பெரிய கல்லைப் புரட்டி, அங்கிருக்கும் குகையைத் திறந்து சமாதி வைத்து மீண்டும் அடைக்கவேண்டும். உனக்குத் துணையாக நான்கு அன்னைமார் வருவர்.

போஷல் :— நான் எல்லாம் செய்கிறேனம்மா. என்ன விசேஷம்?

அன்னை :—இன்று காலை ஒரு அன்னை இறந்து போனாள். தெரியாதா?

போஷல் :— அப்படியா! தெரியாதே........

அன்னை :— சிலுவை யன்னை (Mere Crucifixion) காலமானாள். சாவு மணி கேட்கவில்லையா?

போஷல் :—தோட்டத்திலே ஒரு மூலையிலே ஒண்டியாயிருக்கிற கிழவனுக்கு என்ன கேட்கப் போகிறது?

அன்னை :—மெய்தானா?

போஷல் :—என்னை அழைக்கும் மணிகூட மந்தமாகவே கேட்கிறது. கிழவன் காதடைத்துப்

போனது: அதற்காகத்தான் தம்பியைத் துணைக்கு வைத்துக்கொள்ள அம்மாள் உத்திரவு கேட்டேன்.

அன்னை:—இன்று இறந்த அன்னை மகா புண்ணியவதி: பெருந் துறவி: அவளது ஆவி அற்புதம் செய்யப் போகிறது பார். இறுதிமட்டும் அவள் தன்னுணர்வுடன் இருந்தாள். தேவ தூதர்கள் அவள் ஆவியைப் பரம பிதாவிடம் கொண்டு சென்று, மீண்டும் இங்கே கொண்டு வந்து வைப்பர். தெரிகிறதா? சென்ற இருபது ஆண்டுகளாக அந்த அன்னை உடலை வெறுத்துப் பாடையிலே உறங்கி வந்தாள்.

போஷல்:—அதே பாடையிலா வைத்து அந்த அம்மாளை அடக்கம் செய்ய வேண்டும்?

அன்னை:—அது தான் சொல்லுகிறேன். "என்னை இந்த மடத்தின் சுடலஸ்தானத்திலே தான் சமாதி வைக்க வேண்டும்" என்று அவள் உயிர் இருக்கும்போது கேட்டுக்கொண்டாள். சிறுமையன்னை வேண்டுகோளை நிறைவேற்றுமல் தீராது.

போஷல்:—அது சட்டத்திற்கு விரோதமல்லவா? மயானம் இருக்கையில் மடத்தில் அடக்கம் செய்வது சரியாகாது; மேலும் சர்க்கார் வைத்தியர்கள் வந்து பார்த்திருக்கிருர்கள்: புனிதக் கன்னியர் இறந்தால், சர்க்கார், பாடை, பறை, சேவகர் எல்லாம் அனுப்புவார்களே! இங்கே நாம் அடக்கம் செய்தால், சர்க்கார் பாடையை என்ன செய்வது?

அன்னை :—ஃபோவான், நாம் இரகசியமாக அன்னையை இங்கு அடக்கம் செய்ய வேண்டும். நீ இரவு 11 மணிக்கே இங்கு வரவேண்டும். கல்லைப் பெயர்த்துக் காரியம் எல்லாம் முடிந்த பிறகு சர்க்கார்ப் பாடைக்குள் நீ இரகசியமாக ஒரு ஆள் கனத்திற்கு ஏதாயினும் வைத்துக் குட்டுத் தெரியாமல் பலமாக ஆணி போட்டு இறுக்கி மூடி மேலே பட்டைப்போர்த்து வண்டியில் வைத்து, மேள தாளங்களுடன் கொண்டுபோய் மயானத்தில் புதைத்துவிடு. அதற்கு இரண்டு குருக்கள் வருவர். இந்த மாதிரி எத்தனையோ தடவை எத்தனையோ மடங்களில் நடந்திருக்கிறது. (இங்குப் பெரிய பிரசங்கம் நடக்கிறது).

போஷல்:—அம்மாள் உத்திரவுப்படியே செய்து முடிக்கிறேன். ஆனால் நான் பாடையை மூடும் இடத்தில் யாரும் வரக்கூடாது.

அன்னை :—சரி. இதை முடித்ததும் நீ உன் தம்பியைக் கூட்டி வா. சிறு பெண்ணையும் இங்குச் சேர்ப்போம்.

போஷல் :—அதுதான் வேண்டினேன் தாயே....

....

அன்னை :—நீ நல்லவன். உன்மேல் நம்பிக்கையிருக்கிறது. நீ சென்று இரவு 11-மணிக்கு வந்து சேர்.

போஷல்வான் அம்மாளை வணங்கிச் செல்லுகிறான்.

45. உயிரோடு பாடையில்

போஷல்வான் ஜாம்வல்ஜானிடம் மேல் நிகழ்ந் தவற்றையெல்லாம் சொன்னான்; கோஸத் தைக் கூடையில் மறைத்துத் தனக்குத் தெரிந்த ஒரு பழக்காரியிடம் கொண்டு வைக்கத் தயாரானன். கோஸத்தும் பேசாமல் இருக்கச் சம்மதித்தாள்.

போஷல்:—ஆனல், மதேலரே, தாங்கள் வெளி யேற வழி?

ஜாம்வல்:—சர்க்கார் பாடை காலியாகவா போகிறது?

போஷல்:—இல்லை; உள்ளே ஏதாயினும் ஒரு ஆள் கனத்திற்கு வைத்துத்தான் வண்டியில் ஏற்ற வேண்டும். இல்லாவிடில் சந்தேகிப்பார்கள்.

ஜாம்வல்:—மெத்தச் சரி; ஒரு ஆளையே வைத்து விட்டால் நல்லது தானே: இதோ இருக் கிறேன்.

போஷல்:—அப்படிச் சொல்லலாமா? தந் தையரே, தங்களை உயிரோடு பாடையில் வைக்கத் துணிவேனா? மூச்சடைத்துப் போனல் என்ன செய்வது? சர்க்கார் பாதிரிகள் கூட வருவார் களே! சோதித்தால் என்ன செய்வது?

ஜாம்வல்:—பயம் வேண்டாம்: போஷல்வான், நாம் தனியறையில் தானே வேலை செய்வீர்? நான் ஜன்னலேறிக் குதித்துத் தாங்கள் ஆயுதம் வைக்கும் மறைவான மூலையில் ஒளிந்திருப்பேன்; பாடை

யைத் திறந்ததும் பூனை போல உள்ளே புகுவேன்; பலமாக ஆணி வைத்து இறுக்குங்கள். மூச்சுவிட மட்டும் மூக்கிற்கு நேரே நாலைந்து சிறு துளைகளைப் போட்டு வைத்தாற் போதும்...........

போஷல் :—தும்மினால், இருமினால்........கண்டு பிடித்து விடுவார்களே........

ஜாம்வல் :—மூச்சு விடாமல் இருப்பேன். தைரியம் உள்ளது. காரியத்தை நடத்தும். ஆனால், புதை குழியில் இறக்கியதும், பிணத் தோட்டி மண் போட்டு மூடாது பார்த்துக் கொள்ள வேண்டும்.

போஷல் :—அதை நான் பார்த்துக் கொள்ளு கிறேன். அவனைக் கள்ளுக் கடைக்கு அனுப்பி விட்டுத் தங்களைத் திறந்துவிடுகிறேன்.

தீர்மானமாயிற்று.

46. சவப்பெட்டியில் யார்?

சிலுவை யன்னை இறந்துபோனாள்; நல்ல புண்ணிய வதி; கடுமையான துறவறத்தில் இறுதிமட்டும் இருந்தாள். இதோ! அவள் சவப்பெட்டி மயானத் திற்குப் போகிறது. பிண வண்டி அழகாக அலங் கரிக்கப்பட்டுள்ளது. முன்னால் கொட்டு முழக்கு "டும் டும்" என்று ஜமாய்க்கிறது. பின்னால் குருக்கள் மார் கீதம் பாடிவருகின்றனர். சிலுவை யன்னையின்

புனித ஆவி பரமபிதாவின் மலரடி சேர்ந்த அதிசயத்தை எல்லாரும் கொண்டாடுகிறார்கள். போஷல்வான் பின்னால் நொண்டி நொண்டி வருகிறான். அவனிடம் பற்றுக்குறடு, கொட்டாப்புளி, கத்தரிக்கோல், சிற்றுளி, மண்வெட்டி எல்லாம் உள்ளன.

பாரிசில் ஒரு தனி மயானம் உண்டு. அதன் பெயர் வொஜிராது மயானம். அதன் ஒரு மூலையைக் கன்னிமடத்தார் குத்தகை யெடுத்திருந்தனர். அங்கே மாலை 6 மணிக்கே எப்போதும் கன்னிமடப் பிணங்கள் புதைக்கப்படும். அந்த மயானத்திற்குச் செல்லப் பணம் கொடுத்துச் சீட்டுப் பெறவேண்டும். பிணக்கோட்டி, மாதம் இவ்வளவு என்று கட்டிச்சீட்டுப் பெறுவான். அந்தச் சீட்டைக் காட்டித்தான் உள்ளே, வெளியே செல்ல முடியும். சீட்டில்லாமல் உள்ளே போனால், 15 பிராங்க் அபராதம் விழும். மாலை ஆறு மணிக்கெல்லாம் மயானக் கதவு அடைக்கப்படும். பிறகு யாரும் உள்ளே வரமுடியாது. பிணக்கோட்டிகள் மட்டும் புதை குழியை மூடிய பிறகு தங்கள் சீட்டைக் காட்டி வெளியே செல்வர்.

இன்று மயானப் பிணக்கோட்டி புதிய ஆள். போஷல்வானுக்குத் தெரிந்த பிணக்கோட்டி இறந்து போனான். புதிய ஆள் முரடன். போஷல்வான் திகைத்தான்.

சவப்பெட்டி மயானத்திற்கு வந்தது. அது குழியருகே இறக்கி வைக்கப்பட்டது. குருக்கள்மார்

"பரிசுத்த கன்னி, சிலுவையம்மையே, தங்கள் ஆவி பரலோகத்திற்குச் சென்று அமைதிபெறுக" என்று லத்தீனில் மந்திரங்கள் சொல்லி ஈமக்கடன்களை முடித்துச் சென்றனர். சவப்பெட்டி புதை குழிக்குள் இறங்கியது. உடனே எல்லாரும் சென்றனர். இனிப் பிணத்தோட்டியின் வேலை தான். பிணத்தோட்டி குழியில் ஒரு கொத்து மண்ணைத் தள்ளினான். ஆ! ஆபத்து!

போஷல்வான் :—தம்பீ, நில்லு. நாம் கள்ளுக் கடைக்குப் போய் முதல்தரமான சாராயம் சாப்பிட்டு வருவோம். பிறகு இந்தக் காரியம் பார்ப்போம்.

பிணத்தோட்டி :—அடா போங்கிறேன். கை வேலையை முடித்த பிறகு வயிற்று வேலை! (மற்றொரு கொத்து மண் தள்ளுகிறான்).

போஷல் :—கேளு தம்பீ, ஆறு மணிக்கெல்லாம் கடை யடைத்து விடுவார்கள். அருமையான சாராயம் ஆளுக்கொரு போத்தல் போட்டு வருவோம்.

பிணத்தோட்டி :—நான் ஏழு பிள்ளைகளைக் கட்டிச் சோறு போடவேண்டும். குடிக்க எங்குப் போவேன்?

போஷல் :—நான் பணம் தருகிறேன். வா தம்பீ.

பிணத்தோட்டி :—வேலையைப் பாரையா (இன்னும் இரண்டு கொத்து மண்ணைத் தள்ளுகிறான். ஆறு மணி யடிக்கிறது).

போஷல் :—கேட்க மாட்டாயாக்கும். சரி,

தம்பி, உனக்குச் சீட்டு இருக்கிறதா? ஆறு மணி அடிக்கிறது.

(பிணத்தோட்டி தான் கழற்றிவைத்த சட்டையில் தேடினன். அதில் சீட்டு இல்லை.)

பிணத்தோட்டி:—ஆத்தாடீ, சீட்டைக் காணேமே!

போஷல்:—ஓடு; வீட்டில் போய்ப் பாரு; இல்லாவிட்டால் 15 பிராங்க் நஷ்டம் தரவேணும்; கதவு மூடு முன்னே ஓடு. தோட்டி, ஓட்ட வோட்டமாகச் சென்றொழிந்தான். மயானக் கதவும் அடைபட்டது. அங்கு யாரும் இல்லை. உடனே போஷல்வான் குழியில் குதித்து, "தந்தை மதெலெனே, மதெலெனே" என்று கூப்பிட்டான். பேச்சில்லை. 'ஐயையோ! மதெலெர் மூச்சடைத்துச் செத்துப் போனர்' என்று அழுதுகொண்டே சட்டென்று பற்றுக் குறட்டால் ஆணிகளைப் பிடுங்கினன்; மூடியை உடைத்துப் பெட்டியைத் திறந்தான். சவப் பெட்டியில் யார்?

சிறுவை பன்னையா? இல்லை. இத்தனைத் தடபுடல், ஊர்வலம், மந்திரம், தந்திரமெல்லாம் யாருக்கு? சிறுவை பன்னைக்கா? இல்லை? சவப் பெட்டிக்குள் இருப்பவன் ஜாம்வல்ஜான். போஷல்வான் தன்னை வைத்து மூடி, ஆணி யறைந்து, பெட்டியின் மேலே மூச்சிற்கு இடம் விட்டுக் கரித்துணி போட்டு மூடியது அவனுக்குத் தெரியும். பிறகு எல்லாரும் சுற்றிக் கும்பாளமடித்துப் பாடி, பெட்டியை வண்டியிலேற்றி ஊர்வலம் வந்ததும் அவனுக்குத்

தெரியும். மயானத்தில் பெட்டியை இறக்கி மந்திரம் சொல்லிப் புதை குழியில் வைத்ததும் அவன் அறிந்தான்; புதைகுழியில் மண் விழும்போது அவன் உணர்வற்றான். இப்போது ஜாம்வல்ஜான் பேச்சு மூச்சற்றுக் கிடக்கிறான். அசைத்துப் பார்த்தான் போஷல்வான். ஆள் எழுந்திருக்க வில்லை. "ஐயோ! பாவி, உன்னை உயிரோடு பாடையில் வைத்துக் கொன்றேனே! என்னைக் காத்த புண்ணிய மூர்த்தியே, நீ இன்று எழுந்திருக்காவிட்டால், இதோ நானும் இப் புதை குழியில் உன்னோடு சாகிறேன்" என்று அழுதான் நன்றியுள்ள போஷல்வான். அப்போது மதேலன் கண் விழித்தான். "மதேலரே, உயிரோடிருக்கிறீரா!" என்று மகிழ்ந்தான் போஷல்வான். "ஒன்றுமில்லை, உறங்கினேன்" என்றெழுந்தான் ஜாம்வல்ஜான். நல்ல காற்றுப் பட்டதும், அவனுக்கு மயக்கந் தெளிந்தது. அவன் புதை குழியை விட்டு எழுந்தான். இருவரும் குழியை மண் போட்டு கெட்டியாக மூடி, மேலே சிலுவையை நாட்டிப் புறப்பட்டனர். சீட்டைக் காட்டியதும் மயானக் கதவு திறந்தது. போஷல்வான் பிணத்தோட்டியின் வீட்டிற்கு நேராக வந்தான். அது ஒரு குச்சு. அங்குக் குழந்தைகள், 'பசி, பசி' என்று அழுகின்றன. வறுமையால் மெலிந்த மனைவி தன் விதியை நொந்துகொண்டிருக்கிறாள். 'டப் டொப்' என்று சாமான்களைக் கீழே போட்டுச் சினந்து கொண்டிருக்கிறான் பிணத்தோட்டி; "சீட்டு எங்கே?" என்று வீட்டிலுள்ளவர்

களை அதட்டுகிறான். போஷல்வான் உள்ளே புகுந்தான்; "தம்பி, உன் சீட்டு இதோ இருக்கிறது. நீ வரும் வழியில் கீழே விழுந்திருந்தது; என் கையில் இப்போது அகப்பட்டது; எடுத்து வந்தேன். நான் குழியை மூடிச் சிலுவை நட்டு விட்டேன். இனி நீ நிம்மதியாயிரு" என்றான். பிணத்தோட்டி போஷல்வானுக்கு நன்றி கூறி வந்தனம் செய்தான்.

போஷல்வான் பழக்காரியிடம் விட்ட கோஸத்தைக் கூட்டிக் கொண்டு மதேலனுடன் கன்னியர் மடத்திற்கு வந்தான். எண்ணிய காரியம் எண்ணியவாறே நடந்தது.

---

47. இன்னொரு போஷல்வான்

போஷல்வான் சூட்சி பலித்தது. அவன் கோஸத், மதேலன் ஆகிய இருவரையும் அழைத்துக் கொண்டு, அன்னை இன்னஸாந்து முன் வந்து வணங்கினான். மதேலன் ஒரு கும்பிடு போட்டுச் சும்மா இருந்தான். அன்னை குனிந்த தலை நிமிரவில்லை.

அன்னை :—போவான், காரியம் வெற்றியுடன் முடிந்ததுபற்றிச் சந்தோஷம். இவன் உன் தம்பியா?

போஷல் :—ஆம், அம்மா. தம்பியைக் கூட்டி வந்திருக்கிறேன். அருள் புரிய வேண்டும்.

அன்னை :—தம்பியின் பெயர் என்ன?

போஷல் :—புல் திம் போஷல்வான்.

அன்னே :—உமது ஊர்?

போஷல் :—அமியன்ஸ் அருகே பிஞ்ஜி என்ற கிராமம்.

அன்னே :—உம் வயது ?

போஷல் :—ஐம்பது.

அன்னே :—உமது வேலே?

போஷல் :—தோட்ட வேலே.

அன்னே :—நீர் நல்ல கிறிஸ்தவரா?

போஷல் :—எமது குடும்பம் முழுதும் தூய கிறிஸ்தவரே.

அன்னே :—இக்குழந்தை உம் மகளா ?

போஷல் :—அன்னே, பேத்தி.

அன்னே :—நன்ருய்ப் பதில் சொல்லுகிறீர்.

(மதேலன் வாயைத் திறக்கவில்லே)

அன்னே :—ஃபோவான், தம்பி காலுக்கு ஒரு மணி வாங்கிக் கட்டி, இருவரும் தோட்டத்தில் இருங்கள். குழந்தை பள்ளிக்கூடத்தில் சேரட்டும்.

கவலேவிட்டது. போஷல்வானும் ஜாம்வல் ஜானும் தோட்டத்தில் ஒட்டுறவாக வசித்தனர். ஜாம்வல்ஜானே "இன்ஞெரு போவான்" என்றே மடத்தில் அழைத்தனர். போவான் மீது எல்லாருக்கும் நல்ல எண்ணம் உண்டாயிற்று. ஜாம்வல்ஜான் நாளெல்லாம் தோட்டவேலே செய்வான்; கன்னியர் தொழும்போது தானும் தனியே கடவுளே நினேப்பான். சாது மிரியலால் ஏழைகளிடம் அவனுக்கு அன்பு ஏற்பட்டது. கோஸத்திஞல் உயிரன்பு

துளிர்த்தது. இந்த மடத்தின் வாழ்க்கையால் கடவுளன்பு கொழுந்து விட்டது. ஜாம்வல்ஜான் பரம பக்தனுனன்; பணம் கையி லிருப்பதால் போஷல்வானுக்கு வேண்டுமட்டும் உதவினன்.

கோஸத் பள்ளிக்கூடத்திற் சேர்ந்து படித்தாள். நாளைக்கு ஒரு மணி நேரமே அவள் ஜாம்வல்ஜானிடம் வந்து பேச உத்தரவு தரப்பட்டது. கோஸத் தனது தந்தை ஜாம்வல்ஜானிடம் அதிகப் பிரியமாயிருந்தாள். மடத்தின் கடிய துறவு வாழ்வும் அவளுக்கு இனிமையாகவே யிருந்தது. மற்றக் குழந்தைகளுடன் அவள் சந்தோஷமாக விளையாடுவதைக் கண்டு, ஜாம்வல்ஜான் உளம் பூரித்தான். இவ்வாறு சில ஆண்டுகள் சென்றன. கோஸத் வயதிற்கேற்ற வளர்ச்சி பெற்று வந்தாள்; கல்வி கற்று, அறிவிலும் மேலோங்கினள்.

கோஸத்தையும் ஜாவல்ஜானையும் இங்கே விடுத்து, மற்றொரு ஏழையின் வாழ்வைப் பின் பற்றிச் செல்வோம்.

---

48. பாரிஸ் காலிகள்

பாரிஸ் போன்ற நகரங்களில் சில சோதாப் பேர் வழிகள் உண்டு. அவர்கள் காற்றைப் போலக் குசாலாகத் திரிவர். வயிறு காயும்; வாய் சீழ்க்கை யடித்துப் பாடும்; தின்னச் சோறிருக்காது. இப் பேர்ப்பட்ட பேர் வழிகள் குஷியாக நாடகம்

பார்ப்பர். தெருவே அவர்கள் வீடு. கண்ட மறைவுகள், திண்ணைகள், பாழ் மனைகளெல்லாம் அவர்கள் படுக்கையறை. ஊரில் அகப்படும் கந்தல், கிழிச்சல், பழைய சட்டை, தொப்பி, குப்பை கிண்டியதால் கிடைக்கும் பழைய செருப்புகள் எல்லாம் அவர் அணிகள். உடுப்பது கந்தையானாலும் நடப்பது கனவான் போலத்தான். அவர்கள் ஜோராக நடப்பர்; சுதந்தரமாகத் தமாஷாகப் பேசுவர்; தெரு இரண்டாகும்படி கொச்சைப் பாட்டுக்கள் பாடுவர்; சிரிப்பர்; கூத்தாடுவர்; எவ்வளவு பெரிய மனிதராயினும் சரி, அவருக்கு ஒரு பட்டப்பெயர் வைத்துக் கேலி செய்வர். பணக்காரர்களையும் முதலாளிகளையும் கண்டால் அவர்களுக்குப் பிடிக்காது. இவர்களைக் கண்டால், கடைக்காரர், செல்வர்கள் ஏதாயினும் கேட்டதைத் தந்து அனுப்பிவிடுவர். இன்றேல், இவர்கள் செய்யும் கேலி, நையாண்டிக் கூத்துகள் பொறுக்க முடியா. "அதோ ஒரு நெட்டைச் சீமாட்டி போகிறாளா? அவள் பெயர் ஒட்டகச் சிவிங்கி" என்பர்; அதற்கொரு தத்தாறிப் பாட்டுக் கட்டி ஊரெல்லாம் பாடுவர்; சுவரில் கரியால் எழுதுவர். அங்கொரு உடல் கொழுத்த பணக்காரன் போகிறானா? அவன் பெயர் எருமைக்கடா: "அடா, எருமைக்கடா, இத்தனைச் செருக்கேதுக் கடா" என்று உடனே கவனம் செய்து அவர் முன்னாலேயே பாடிக் காசு கொடுத்தால் தான் போவார். மற்றொரு வீட்டில் கருமித்தனம் செய்கிறார்களா?

"ஐயா மூஞ்சி விளக்கெண்ணெய்
அம்மா வாயோ மண் எண்ணெய்"

என்றெல்லாம் பாடிக் கேலி செய்வர். இவர்கள் ஒரு பெரிய காலிப் பட்டாளம்: இரகசியச் சங்கம்; ஒற்றுமையும் கட்டுப்பாடும் இவர்களிடம் அதிகம். கொலை, களவு, சூது, வஞ்சகம், கள், விபசாரம் எல்லாம் சூழ் கொண்ட நரகமே இவர் வாழ்வு. இவர்கள் இரவானால் கையும் கத்தியுமாகத் திருடுவர்: வழிபறிப்பர்; சிறையிலிருந்து தமது சகோதரரைத் தப்புவிப்பர்: ஆகாத பேரைக் கொல்லுவர்: அட்டூழியஞ் செய்வர். ஆளை யறுப்பதும் ஆட்டை யறுப்பதும் இவர்களுக்கு ஒன்று தான். இரக்கம், பாப புண்ணியம் என்ற உணர்வே இவர் நெஞ்சிலிராது. பகலில் இவர்கள் பிச்சைக்காரர் போலத் தெருவில் திரிவர்; வேஷம் போட்டு ஆடுவர்: பாடுவர்: ஏலங் கூறுவர்: இவர்களில் குற்றவாளிகள் சில இரகசியமான இடங்களில் ஒளிந்திருப்பர். பாரிஸ் சாக்கடை, பாழ் மனைகள், காடுகள், புதர்கள் ஆகிய இவையே இக்குற்றவாளிகள் வசிக்குமிடம். அவற்றிற்குப் புலிக்கூடு, நரிப் பொந்து, ஆந்தை மடம் என்று குறிப்பான பெயர்களுண்டு. இந்தப் பரிதாப மான பாப ஜன்மங்களுக்குக் குழந்தைச் செல்வத்திற்குக் குறைவிராது. குழந்தைகள் தம்முடைய தாய்மாரைத் தான் அறியும்: தகப்பனார் இன்னாரென்று அறியா. நடக்கத் தெரிந்ததும் குழந்தைகளைத் தெருவோடு

விட்டு விடுவர். அவை விதிப்படி வளர்ந்து காலிக் கூட்டத்திற் சேரும். இவர்களுக்கு ஒரு தனிப் பேச்சுண்டு; அது பழமொழிக் கதம்பம். பிரான்ஸு, கால் (Gaul), லத்தீன், இத்தாலி, ஜர்மனி, ஸ்பெயின் மொழிகள் கொச்சையும் பச்சையுமாகத் திரிந்து உருக் குலைந்து இவர் பேச்சிற் கலந்திருக்கும். அப் பேச்சிற்கு ஆர்கோ (Argot) என்று பெயர். அது பிற ருக்குப் புரியாது. பொலீஸாரும் உளவாளிகளும் நீண்ட காலம் இக்கூட்டத்தாரிடையே பழகித் தான் அதைக் கற்று வைப்பர். இப்போது ஆர்கோ அக ராதியும் நூல்களும் உள்ளன. பாரிஸில் ஸேன் நதிக்கரையில் ஒரு பெரிய கோட்டை யிருந்தது. அதில் ஒரு பெரிய இருட் குகை உண்டு. அதில் கொடிய குற்றவாளிகளைக் கை கால் விலங்கு பூட்டி அடைத்து வைப்பர். இவர்களிடையே தான் ஆர் கோப் பாட்டுக்கள் பிறந்தன. அத்தனையும் இந்தக் கைதிகளின் பரிதாபக் கண்ணீரின் சலசலப்பே. அந்த இருட் குகையில் பல கைதிகளின் கொச்சைப் பேச்சுக்கள் சேர்ந்து ஆர்கோ பெருக்கமடைந்தது. ஆர்கோ, பயங்கரமான கள்ளர், கொலைஞருக்கு அக் காலம் மிகவும் பயனுனது. ஒரு உதாரணம் காட்டு வோம். இரண்டு திருடர் பேசிக்கொள்ளுகிறார்கள் :

என்ன அண்ணே, மூர்த்தம் யார் வீட்டிலே?

(யார் வீட்டிலே திருட ஏற்பாடு?)

அந்த ஒட்டைச் சிவிங்கி வீட்டிலே தான்.

தாலி கட்டத்தானே?

(கழுத்தில் சுருக்குப் போட்டுக் கொல்ல)

இல்லே, கரும்பு வெட்டத்தாங்கிறேன்.

(கழுத்தை வெட்ட)

கொட்டு மேளமில்லாமல் காரியம் நடக்காதோ?

(ஆளை உதைக்காமல் கொள்ளை அடிக்க முடியாதோ?)

மாப்பிள்ளைக்குக் கொட்டு மேளம் வேண்டியது தான்.

(அந்த வீட்டுக்காரனுக்கு உதையில்லாமல் சரியாக வராது)

கலியாணத்திற்கு யார் யார் போவது?

(கொள்ளை யடிக்க யார் யார் போவது?)

நம்ப நரிப்பொந்துத் தோழர்தான்.

(நரிப் பொந்து என்னும் இரகசியமான இடத்தில் ஒளிந்த கள்ளர்)

கள்ளுப்பானை கூடவா?

(ஒரு குடிகாரத் திருடன் பெயர்)

அட தெரியாதா? அந்தப் பயல் பள்ளிக்கூடம் போயிட்டானே.

(பள்ளிக்கூடம் என்பது சிறை)

அப்படியா! எந்த நாய் கொண்டு போனது?

(நாய் என்பது பொலீஸ்)

நடுத்தெரு வேட்டை நாய்தான் காரணம்.

பேயன் வீட்டு மூர்த்தந்தான்.

(பேய், ரொட்டி விற்பவன். ரொட்டிகளவாடியதால் சிறையுண்டான்.)

கொட்டை பிதுக்க முடியாதா என்ன?

(சிறையினின்று வெளியேற்ற முடியாதா?)

ஓடு பலம்; நார் திரிக்க வேணும்.

(காவல் பலம்; கயிறுகள் தயார் செய்து தப்பு விக்க வேணும்.)

சரி, ஒட்டைச்சிவிங்கி மூர்த்தம் நடத்து. தாலி கட்டின பிறகு நார் திரிப்போம்.

இந்த மாதிரி நமது தமிழ் நாட்டிலும் கள்ளருள்ளே இரகசியப் பேச்சு உண்டு; சந்தனத் தேவன் காலத்திலும், ஊமையன், பெரிய மருது, சின்ன மருது முதலிய புரட்சிக்காரர் காலத்தும் இந்த மாதிரி இரகசியப் பேச்சுக்கள் வழங்கின.

இந்தப் பாரிஸ் காலிகள் கவலையற்றுத் திரிவர். பிரெஞ்சுப் புரட்சியில் தொடங்கிய தூக்குமேடைக் கொலைகள் வர வர வலுத்து வந்தன. பணக்காரர் தூக்கு மேடை யேறுவதை இந்தக் காலிகள் திரு விழாப் போலக் காண்பர்; தூக்குப் போட உதவி செய்வர்; கூடைகளில் வெட்டுண்டு விழும் தலைகளை பப்பளிமாஸ் பழம் போலக் கையிலெடுத்து உருட்டுவர்; தூக்கு மேடைகளில் விளையாடுவர்; ஊரில் திருவிழாக்கள் நடக்கும்போது பல வேடங்கள் போடுவர்; கையில் கத்திரிக்கோல் பிடித்துப் பைய நகை, நாணயங்களைத் திருடுவர்; நாடகங்களுக்குச் செல்வர்; நாடகப் பாட்டுக்களை எளிதாகப் பாடம் செய்து ஊரில் பாடிப் பிச்சை வாங்கிப் பிழைப்பர். இவர்களுக்குப் பொலீஸ் கண்

காணிப்பு எப்போதும் உண்டு. இவர்களும் பொலீஸ்காரரை மிக நன்றாய் அறிவர். "அந்த வேட்டை நாய் பொல்லாது. இந்தச் சிவிங்கி அதோ பாய வருகிறது! அந்த வேங்கை நம்மையே குறி வைக்கிறது!" என்றெல்லாம் ஜாடையாகப் பேசிப் பொலீஸாரிடமிருந்து தாமும் தப்பி யொளிவர்; தமது இனத்தாரையும் அவர் கையிற் படாமல் ஒளியச் செய்வர். இந்தக் காலிகள் அச்சமென் பதறியார்: பொறுமையாளர்: தாம் நினைத்ததை நிறைவேற்றுவர்: லூயி XIV, XV காலத்தில் இவர்கள் போர்ப்படையிற் சேர்க்கப்பட்டனர். பிரெஞ்சுப் புரட்சியின்போது இந்தக் காலிகளுக்கு உற்சாகம் மிக்கது. புரட்சி பரவியதும், உருவானதும் வென்றதும் இவர்களாலேதான். "அடி, நொறுக்கு, வெட்டு, குத்து, சூறையிடு, ஜெயிலே இடு" என்றால் வெகு குதூகலமாகச் செய்து முடிப்பர் இக்காலிகள். நெப்போலியனுக்குப் பிறகு முடியரசு ஏற்பட்டது. அந்த முடியரசைத் தகர்க்க புரட்சித் தலைவர்களுக்குக் கைபோன்றுதவினோர் பாரிஸ் காலிகளே. அதன் விபரம் பின்னால் சொல்லுவோம்.

49. குரோஷன்

இப்போது நம் முன் சோதாப் பையன் வருகிருன்; ஆடிப்பாடிச் சீழ்க்கை யடித்து வெகு குஷியாக வருகிருன். அவனுக்குச் சுமார் பன்னிரண்டு வயதிருக்கும். அவன் பெரிய ஆளுக்குப் போடும் கால் சராய் போட்டிருக்கிருன்; ஒரு பெண்ணின் குடுத்துணியை அணிந்திருக்கிருன். மேலே ஆயிரம் ஒட்டுப்போட்ட ஒரு சட்டை மாட்டிக் கொண்டிருக்கிருன்; தலையிலே பெரிய தொப்பி போட்டுக் கொண்டிருக்கிருன்; காலில் தேய்ந்த செருப்பு மாட்டிக்கொண்டு உல்லாசமாக நடந்து வருகிருன். இந்தச் சட்டை, துணிகளையெல்லாம் யாரோ இரக்கப்பட்டுக் கொடுத்திருக்கிருர்கள். இந்தப் பையனுக்குத் தாய் இருக்கிருள். தந்தை இருக்கிருன். எனினும் இவன் அனுதை. பெற்ருேர் இவனை விரட்டியடித்து விட்டனர். இருக்க இடமில்லை. உணவில்லை. குளிருக்கு நெருப்பில்லை. யாருக்கும் இவன்மேல் அன்பில்லை. எனினும், இவன் சுதந்தரமாக உலாவுகிருன்; வேடிக்கையாகப் பேசுகிருன்; எப்படியோ இரண்டொரு ரொட்டித் துண்டுகள் இவனுக்குக் கிடைக்கும். இவன் காலந் தள்ளுகிருன். "அடே விசுக்கான் குரோஷன் (Gava-roche), இங்கே வா. ஒரு பாட்டுப்பாடிக் கூத்தாடு" என்று, போது போகாத சில பெண்கள் இவனை அழைப்பர். குரோஷன் (இதுவே அவன் பெயர்) எங்கெங்கோ

கேட்ட பாட்டெல்லாம் பாடிக் கூத்தாடுவான். அன்று வயிற்றுக் கணக்குத் தீர்ந்துவிடும். இரண்டு மூன்று மாதங்களுக்கொரு தரம் தாயார் நினைப்பு வரும். இப்போது இந்தப் பையன் தாயாரைப் பார்க்க வருகிறான் :

ஜாம்வல்ஜான் குடியிருந்த கோர்போ வீடு வாசகர்களுக்கு நினைப்பிருக்கும். அந்த வீட்டிற்கே இந்தப் பையன் வருகிறான். அங்கே யார் இருப்பது? அபாயமான பேர்வழிகளுக்கும், ஏழைகளுக்கும் அந்தப் பாழ் வீடுதான் புகல். அந்த வீட்டில் முன்னிருந்த கிழவி இறந்துபோனாள். இப்போது வேறு கிழவி யிருக்கிறாள். அவள் பெயர் புர்கோன்.

குரோஷன் உள்ளே வருகிறான்; ஒரு பாழடைந்த பழைய இருளறையில் நுழைகிறான்; "அம்மா" என்கிறான். ஒரு இடிக் குரல் கேட்கிறது.

தாய் :—யாரடா பயல்?

குரோஷன் :-நான் வந்திருக்கிறேன், குரோஷன்.

தாய் :—எங்கிருந்து ?

குரோஷன் :—'தெருவிலிருந்து.

தாய் :—தெருவிலேயே போ. இங்கெதற்காக வந்தாய் ?

குரோஷன் வெட்கிச் செல்லுகிறான். தாய் மனம் அவ்வளவு கல்லாயிருக்கிறது.

குரோஷன் சென்றான். இரண்டு பெண் குழந்தைகள் வருகின்றனர். "வாருங்கள் என் தங்க மணிகளே" என்று அவர்களை அன்புடன் கட்டி யணைத்து

முத்தமிடுகிறாள் தாய். பிறகு தகப்பன் வந்து காதோடு ஏதோ செய்தி பேசுகிறான். இவன் பெயர் கேட்டால் ஜாந்தரதன் (Jondrette) என்கிறான். யார் இந்த ஜாந்தரதன்? பின்னால் தெரியும்.

இவர்கள் இருந்த அறைக்கு அடுத்து ஒரு எளிய வாலிபன் குடியிருக்கிறான். அவன் பெயர் மாரியன் (Marieis). இந்த மாரியன் வரலாற்றை அறிவோம்.

---

50. ஜில் நார்மன்

பாரிஸ் நார்மண்டித் தெருவில் ஜில் நார்மன் என்றொரு கனவான் இருந்தான்; தொண்ணூறு வயது கிழவன். எனினும், முதுகு கூனவில்லை, குரல் வெண்கலத்தில் அடித்தாற் போலிருந்தது; பேச்சிற்குப் பிடித்தால் அடமழைக்கு அண்ணு தான். கண் மங்கவில்லை. பார்வை கழுகுப் பார்வை. அவன் படிக்கும்போதே கண்ணுடி போடுவான். ஒரு பல்லுக்கூட விழவில்லை. அவன் சம்பிரமமாகச் சாப்பிடுவான்; சுகபோகங்களைத் தாராளமாக அனுபவிப்பான். மீசை நரைத்தாலும் கிழவனுக்கு ஆசை நரைக்கவில்லை. அவன் சிற்றின்பத்தில் பேரின்பங் கொண்டவன். "சென்ற பத்தாண்டுகளாகத் தான் நான் பெண்களிடம் செல்லுவதில்லை. காரணம் நானல்ல. நான் அவர்களை விரும்புகிறேன். அவர்

கள்தான், "தாத்தா, இன்னுமா இந்தப் பைத்தியம்" என்கின்றனர். மேலும் எனது செல்வமும் சுருங்கிப் போயிற்று. இந்தப் பெண் மாயம் பொல்லாது; ஆளைச் சக்கை பிழிகிறது. அது சதையை உறிஞ்சுகிறது; புலிபோலப் பிடித்து இரத்தத்தைக் குடிக்கிறது. இருந்தாலும் எனக்கு அந்த மாயம் இன்னும் விடவில்லை; இன்னும் இரண்டிருந்தாலும் தயார்தான்" என்று அக்கிழவன் விருப்புக் கூறுவான். கை வெகு தாராளம். அவன் அலங்காரப் பிரியன்: வெகு தமாஷாகப் பேசுவான்: அகங்காரி; ஜம்பன்; யாராயினும் எதிர் பேசினால் அவனுக்குப் பிடித்தது சனி. இடியும், புயலும், பூகம்பமும், சூறாவளியுமாகக் கிளம்பும் வசவும், மிரட்டும். வீட்டில் வேலைக்காரன் வேலைக்காரிகளுக்கு வித விதமாகப் பேர்வைத்துக் கூப்பிடுவான்.

வேலைக்காரி :—எஜமானிடம் சேவகத்திற்கு வந்தேன்.

ஜில் நா :—உன் பெயரென்ன?

வேலைக்காரி :—ஒலிம்பாள்.

ஜில் நா :—என்ன சம்பளம் கேட்கிறாய்?

வேலைக்காரி :—நான்கு ரூபாய்.

ஜில் நா :— உன் பெயரை நிகோலத் என்று மாற்றிக்கொள். சரி, 5 ரூ. சம்பளம்: வேலை செய் போ.

இக்கிழவனது தாராளத்தைக் கண்ட சேவகர் அவன் வைதாலும் திட்டினாலும் சிரித்து மறந்து

விடுவர். இந்தக் கிழ வயதிற் கூட ஒரு வேலைக்காரி மூலம் இவனுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தன. ஊரெல்லாம் இச்செய்தி கேட்டு, "கிழவனாரே, உமக்கு இரண்டு பிள்ளையாமே!" என்று கேலி செய்தனர். "அதனால் நான் இன்னும் கிழவனாக வில்லை; வாலிபனாகவே யிருக்கிறேன் என்று தெரிய வில்லையா? அந்தக் குழந்தைகளுக்கு மாதம் ரூ. 5 தருகிறேன். இனிமேல் என் கிட்ட வராதபடி அவளை உஷார்ப்படுத்தி யிருக்கிறேன்" என்று பெருமை யாகக் கூறினான் ஜில் நார்மன்.

ஜில் நார்மன் தனது 16-வது வயதில் ஒரு பாட்டுக் கச்சேரிக்குப் போனபோது 16 வயதுள்ள ஒரு சிறுக்கி மாயத்தில் விழ்ந்தான். அதை இன்னும் தமாஷாக வர்ணிப்பான். அவளுடைய மினுக்கு, குலுக்கு, நகை, நடை, கண்வீச்சு, காதலின்பம், கட்டழகு, ஜிலுஜிலுப்புகளை எடுத்துச் சொல்ல ஆரம்பித்துவிட்டால், போது போவதே தெரியாது கிழவனுக்கு. அது முதல் எத்தனையோ அழகிகளை அவன் பார்த்திருக்கிறான்; பணத்தைத் தாராளமாக அள்ளி இறைத்திருக்கிறான். இத்துடன் ஜில் நார்மனுக்கு இரண்டு மனைவியர். மூத்தாளுக்கு ஒரு பெண் இருந்தாள். இப்பெண் கன்னிகையாகவே முதிர்ந்து கிழவியானாள். இப்பெண்தான் இப்போது தகப்பனாருக்கு அருகே யிருந்து அன்பு ஆதரவாகப் பணிவிடை செய்கிறாள். இப்பெண் அடக்கமானவள்; அன்பு மிக்கவள்; தெய்வ பக்தியுள்ளவள்; வாரந் தப்பாமல் கோவி

லுக்குப் போய்த்தொழுவாள் ; அந்தக்கோவிலுக்கு வரும் ஒபாய் என்னும் ஒரு முதிய கன்னிகை யுடனேதான் பேசுவாள் ; சிநேகிப்பாள் ; தான் கை படாத அல்லிபோலப் பரிசுத்தக் கன்னிகையென்று பெருமையாகச் சொல்லிக் கொள்வாள். அவள் இளமையில் ஒருவனைக் காதலித்தாள். எண்ணம் நிறைவேறவில்லை. ஒரே ஒரு ராணுவ அதிகாரியைத் தான் அவள் அவ்வப்போது தழுவிக்கொள்ளச் சம்ம தித்தாள். மற்றப்படி கன்னிகைதான். அவளை எல்லாரும் ஜில் நார்மனின் மூத்த மகள் என்றே அழைப்பர்.

ஜில்நார்மன் இளையாளுக்குக் கிளிபோல ஒரு பெண் இருந்தாள் : நன்றாய்ப் படித்தவள் ; பூச்செடி கள் வளர்ப்பதில் பிரியமுள்ளவள் ; இனிய பாடகி. அவள் ஒரு பெரிய ராணுவத் தலைவனைக் காதலித்து மணந்தாள். இத்தலைவனை நாம் முன்னே வாதர் லூவில் சந்தித்த போமேர்ஸி. இவன் மூலம் ஒரு ஆண் குழந்தையைப் பெற்று, முப்பது ஆண்டில் ஜில் நார்மனின் இளைய பெண் இறந்து போனாள்.

அதோ பயந்து நடுங்கிப் பெரியன்னையிடம் உட்கார்ந்திருக்கும் பையனே அந்தக் குழந்தை. அவன் பெயரே மாரியன். தாத்தாவைக் கண்டால் பயனுக்குச் சிம்ம சொற்பனமாம். "அட படவா, இங்கே வா. போக்கிரிப் பயலே, படுகாலிப்பயல் மகனே, அட, உதவாக்கரை, இங்கே வா. இந்தா, நாலு பூசை வாங்கிக் கொள்" என்று பாட்டனார்

மிரட்டுவார். "நான் ஒண்ணும் பண்ணல்லே" என்று சிறு பயல் குடல் நடுங்கி யழுவான். "அழாதே, போ, களவாணிப் பயல் மகனே" என்பார் பாட்டனார். பாட்டனார் பேரனை ஏன் இப்படி மிரட்டுகிறார்?

---

51. போமேர்ஸி

ஜில் நார்மன் கொழுத்த ராஜ விசுவாசி; லூயி 14 15, 16 ஆகிய மூன்று மன்னரையும் பார்த்தவன்; அவர்களால் செல்வச் செழிப்படைந்தவன்; துயிலெரி அரண்மனையில் செல்வாக்குப் பெற்றவன்; பிரெஞ்சுப் புரட்சியை அடியோடு வெறுப்பவன்; "காலிப் பயல்கள், கூலிப் பயல்கள், தீவட்டிக் கொள்ளைக்காரப் பயல்கள், கள் வெறி பிடித்த கயவர்கள், துஷ்டர்கள், போக்கிரிகள், கொலைபாதகர்கள், இவர்கள் நாசமாய்ப்போக! நாட்டுக்கு ராஜாவைக் கழுவிலேற்றிக் குடியரசாம்! குடிகார அரசை ஏற்படுத்திவிட்டார்கள்! அவர்கள் குடியரசு குட்டிச்சுவராய்ப் போக!" என்றெல்லாம் பிரெஞ்சுப் புரட்சிக்கு நீண்ட வசைமாலை பாடுவான்; பூர்போன் கனவான்கள் வீட்டிற்குச் சென்று தனது சண்ட மாருதங்களைப் பொழிந்து தீர்ப்பான்; பிரெஞ்சுப் புரட்சியின்போது, தான் உயிர் தப்பிய

அதிசயத்தை வர்ணிப்பான். அவன் வயிற்றெரிச்சலில் மண்ணெண்ணெய் வார்க்க வந்தான் மாப்பிள்ளை போமெர்ஸி.

போமெர்ஸி முடியரசு சேனையில் ஒரு போர் வீரனாக இருந்தான்; புரட்சி வந்ததும் குடியரசுப் படையிற் சேர்ந்து சுதந்திரப் போர் புரிந்தான்; கிளேபர் என்னும் தளகர்த்தனுக்கு அரிய துணை செய்தான்: உயிருக்கு அஞ்சாது, பீரங்கி வாயிற் பாய்ந்தும் எதிரிகளை முறியடித்தான். பல ஆங்கிலத் துருப்புகளை எதிர்த்துவென்றான்: ஆஸ்தர்லிட்சுப் போரில் அவன் காட்டிய வீரத்தை நெப்போலியனே மெச்சி வீரப் பதக்க மளித்தான். அன்று முதல் அவன் பதவி உயர்ந்தது. நெப்போலியப் போர்களி லெல்லாம் போமெர்ஸியின் திறமை விளங்கிற்று. வாதர்லூப் போரில் அபாயமான சந்தர்ப்பங்களில் அவன் செய்த உதவியும் காட்டிய வீரமும் நெப்போலியன் மனத்தைக் கவர்ந்தன. "போமெர்ஸி, இன்று முதல் நீ பட்டாளத் தலைவன் (Colonel): மகிமைபெற்ற படையதிகாரி (Officer of the league of honour); இன்று முதல் உனக்குப் பிரபுப் பட்டம் (Baron) வழங்குக!" என்று தட்டிக் கொடுத்தான் நெப்போலியன். முதுகிலும், முகத்திலும் காயங்கள் பட்டு வாதர்லூப் போரில் போமெர்ஸி பிணக் குவியல்களிடையே மயங்கி வீழ்ந்தான். பிறகு தெனார்டியன் அவனைக் கொள்ளை யடித்ததும், வெளியி லிழுத்துவிட்டதும் நாமறிவோம்.

வாதர்லூவினின்று பகைவர் கையிற் படாமல் தந்திரமாகத் தப்பி லூவார் நதிக்கரைக்கு வந்து சேர்ந்தான் போமெர்ஸி. நெப்போலியனுக்குப் பிறகு வந்த லூயி XVIII-ன் முடியாட்சி வேர்ஞன் என்ற இடத்தில் அவனைக் கண்காணிப்பில் வைத்தது. நெப்போலியன் அவனுக்கீந்த பிரபு பட்டம், தலைவன் பட்டத்தை மறுத்தது. அவன் மட்டும் கர்னல் பாரன் போமெர்ஸி(தலைவன்—பிரபு—போமெர்ஸி) என்றே கையெழுத்திட்டு வந்தான். இதற்காக அரசாங்கம் அவனைக் கண்டித்தது; மிஸ்டர் கம்மாண்டர் போமெர்ஸி என்று அவனுக்கு விலாசமிட்டது. "பாரன் கர்னெல் போமெர்ஸி இந்த விலாசத்தை மறுக்கிறார்" என்று அவன் கடிதங்களைத் திருப்பி யனுப்புவான். இதே மாதிரிதான் 'ஜெனரல் போனபார்து' என்று ஆங்கிலேயர் விலாசமிட்டனுப்பும் கடிதங்களையும் மன்னன் நெப்போலியன் அப்படியே திருப்பி யனுப்பி வந்தான்.

இந்த வீரனுக்கு லூயி XVIII-ன் ஆட்சியில் பல தொல்லைகள் நேர்ந்தன. வறுமை சுற்றிக் கொண்டது. வெர்ஞனில் (Vernan) அவன் ஒரு சிறு வீடு கட்டித் தனியே வாழ்ந்தான். அங்கு அவன் யாருடனும் சேருவதில்லை. 1815-ல் அவனது அருமை மனைவி ஒரு ஆண் குழந்தையை விட்டு இறந்தாள், அந்தக் குழந்தையே அவனுக்கு ஆறுதலீந்தது. அக்குழந்தையே மாரியன்.

ஜில் நார்மனுக்கும் மாப்பிள்ளைக்கும் ஏழாம்

பொருத்தம். மாப்பிள்ளை குடியரசுப் படையில் சேர்ந்ததைக் கேட்டதும், "திருட்டுப் பயல்கள், வெறியர், களியர் படையில் சேர்ந்து விட்டான்; இந்தக் களவாணிப் பயல் முகத்தில் இனி விழிக்க மாட்டேன்" என்று சபதம்செய்தான் ஜில் நார்மன். இதைக் கேட்ட மாப்பிள்ளையும், 'அந்தக் கிழட்டுப் பைத்திய முட்டாள் முகத்தில் விழிப்பதில்லை' என்று சபதம் செய்தான். மாப்பிள்ளையைத் தினம் நூறு தரமாவது, 'களவாணி, தீவட்டிக் கொள்ளைத் தடிப்பயல்' என்று வையாவிட்டால் ஜில் நார்மனுக்குச் சோறு செரிக்காது. முடிவில், 'என்பேரன் மாரியனை உடனே என்னிடம் தரவேண்டும். இல்லாவிடில், சொத்துப் பாத்தியம் அவனுக்கு இல்லாமற் செய்வேன்' என்று ஒரு அறிக்கைவிட்டான் கிழவன். 'குழந்தை சொத்திழந்து வருந்துமே' என்றிரங்கி, போமெர்ஸி மாரியனை ஜில் நார்மனிடம் அனுப்பி விட்டான். ஜில் நார்மன் சொத்தும், மூத்த மகளின் ஏராளமான செல்வத் திரளும் மாரியனையே சேரும். மாரியன் பாட்டனிடம் வசவுகளைக் கேட்டு வளர்ந்து வந்தான். வாயில் வைதாலும், உள்ளத்தில் பேரன் மேல் பாட்டனுக்குப் பாசம் அதிகம். போமெர்ஸியின் வீரச் செயல்களைப் பத்திரிகைகள் புகழும் போதெல்லாம் ஜில் நார்மன் வசை மாரி பெய்வான். இன்னும் அந்தப் பத்திரிகைகளைத் திருப்பிப் பார்த்து, "இந்தக் களவாணிப் பயல் பிரபுவாம்! தலைவனும்! அதிகாரியாம்! மாண்மை தங்கிய

வனும்! அடி செருப்பாலே" என்று திட்டுவான். ஏனிப்படித் தனது தந்தையைப் பாட்டனார் வைகிறார் என்று சிறுவன் மாரியன் சிந்தித்துக் காரணத்தையும் அறிந்தான். வருஷப் பிறப்பன்று மாரியன் தந்தைக்கு ஒரு கடிதம் போடுவான். தந்தையார் அன்புடன் பதில் போடுவார். மற்றப்படி எவ்வித மான சம்பந்தமும் இல்லை.

போமெர்ஸி மனைவியை யிழந்து,குழந்தையைப் பிரிந்த பின்பு தனிமை பூண்டான்; பூஞ்செடிகளை அன்புடன் வளர்த்தான். பெரியன்னை மாரியனைக் கோயிலுக்கு அழைத்துச் செல்லும்போது, போமெர்ஸி தானும் இரகசியமாகக் கோவிலுக்கு வந்து, ஒரு மூலையில் ஒளிந்து, கண்ணும் கண்ணீருமாகக் குழந்தையைப் பார்த்துச்செல்வான். இதைக்கண்ட கோவில் மணி யடிப்பவன் மனம் இளகியது. இவன் பெயர் மாபோ., இவன் அண்ணனே வெர்னுன் குருக்கள். அவனே போமெர்ஸியின் ஒரே நண்பனுனன். இவனிடம் போமெர்ஸி தனது வரலாற்றையெல்லாம் சொல்லிவந்தான். அண்ணன் மூலம் தம்பி மாபோ போமெர்ஸியைப் பற்றி அறிந் தான்.

மாரியன் பெரியம்மாளுடன் இந்தக் கோயி லுக்கு வருவான்; தாத்தாவுடன் மாதாம் தே என்பவள் மாளிகைக்குச் செல்வான். இங்குப் பல கனவான்கள் கூடுவர். அத்தனைப் பேரும் கொழுத்த பணக்காரர்கள்; மிதவாதிகள்; முடியரசு வாதிகள்

குடியரசிற்குப் பகைவர். இவர்கள், தாங்கள் புரட்சிக் காலத்திற் பட்ட கஷ்ட நஷ்டங்களைப் பேசுவர். இவர்களிற் சிலர் புரட்சிக்காரர்களால் கடுஞ்சிறையில் வைக்கப்பெற்றனர். குடியரசு விரோதிகளின் மண்டைகள் தூக்கு மேடையினின்று சட சட வென்று உதிரும். அவை கூடையில் சேர்த்து வைக்கப்படும். அந்தக் கூடைகளையும், பிண உடல் களையும் இங்கு வரும் சில கனவான்கள் சுமந்திருந் தனர். இவர் பிணஞ் சுமந்த பிரபுக்களின் கொடுங் காட்சியை வர்ணிப்பர். லூயி 16-ஐத் தூக்கிலிட்ட புரட்சிக்காரரைக் கண்ட மட்டும் நிட்டி நொருக்கிச் சாபம் கொடுப்பர்; நெப்போலியனைக் கோர்ஸிகாத் திருடன், அயோக்கியன், போராசைப் பித்தன் என்றெல்லாம் வைவர்; ராஜ வாழ்த்துப் பாடுவர்; நன்றாகச் சாப்பிட்டுக் கூத்தாடிச் செல்வர். இவர் களிடையே ஜில் நார்மனுக்கு அதிகமான செல்வாக் கிருந்தது. ஒவ்வொரு கூட்டத்திலும் ஜில் நார்மன் பேச்சை மக்கள் உற்சாகமாகக் கேட்பர். இப்பேச் சும் காட்சியும் மாரியஸை ராஜ பக்தனாகச் செய்தன. தாத்தாவைப் போலவே மாரியஸும், 'குடியரசு குடி வெறியர் அரசு; நெப்போலியன் அயோக்கியன்' என்று நினைத்தான்; அவன் படையில் தளகர்த்தனு யிருந்த தனது தந்தையை வெறுத்தான். பின்னே தாத்தா மயமாகித் தந்தையை மறந்தான்.

52. போமேர்ஸி இறந்தான்

மாரியன் கல்வியில் முன்னேறி வந்தான்; இப்போது அவனுக்கு வயது பதினேழு. அவன் சட்டத்திற்குப் படித்தான்; வக்கீலாக அரசாங்கத்தில் தகுந்த பதவி பெறவேண்டுமென்றே கருதிப் படித்தான். தாத்தா இன்னும் வைதாலும், பேரனிடம் பாசம் அதிகமாக வைத்தார். ஒரு நாள் தாத்தாவிற்கு ஒரு கடிதம் வந்தது. "நான் இறக்குந் தருவாயிலிருக்கிறேன். என் மகன் மாரியனைக் காணவேண்டும். தயவுசெய்து உடனே அனுப்பவும்" என்று போமெர்ஸி கைப்பட எழுதிய அக் கடிதத்தைப் பார்த்துக் கசக்கிப் பைக்குள் போட்டுக்கொண்டு, "அட பயலே, மாரியன்" என்றான் கிழவன். "தாத்தா" என்று மாரியன் பயபக்தியோடு வந்தான்.

தாத்தா :—நாளை நீ வெர்னானுக்குப் புறப்படு.

மாரியன் :—ஏன் ?

தாத்தா :—உன் அப்பனைப் பார்க்க.

மாரியன் :—என்ன விசேஷம் ?

தாத்தா :—அவனுக்கு மரணாவஸ்தையாம்; உன்னைப் பார்க்க வேண்டுமாம்; போய் வா.

மாரியன் தந்தையை மறந்தே போனான்; தாத்தா சொற்படி புறப்பட்டு, இரவில் வெர்னானுக்கு வந்து, வீடு விசாரித்துக் கதவைத் தட்டினான். வேலைக்காரி விளக்குடன் வந்து கதவைத் திறந்தாள்.

மாரி :—திரு. போமெர்வி விடு இதுதானா?

வேலை :—ஆம்.

மாரி :—அவரைப் பார்த்துப் பேச வேண்டும்.

வேலை :—ஐயோ! இனி முடியாதே!

மாரி :—நான் அவர் மகன். என்னை அவர் எதிர்பார்க்கிறார்.

வேலை:—உம்மை அவர் எதிர் பார்க்கவில்லை.

வேலைக்காரி அழுதுகொண்டே மாரியனை உள்ளே யழைத்துச் சென்றாள்.

உள்ளே தந்தை தரையில் இறந்து கிடந்தான். பக்கத்தில் வைத்தியரும், குருக்களும் இருந்தார்கள்.

போமெர்வி மூளை கொதித்துக் காய்ச்சலாகித் தன் மகனைக் காண ஆவலாகப் புலம்பினான். "இன்னும் என் மகன் வரவில்லையா? இதோ நான் மகனைப் பார்க்கப் போகிறேன்" என்றெழுந்து பத்தடி சென்று, கீழே விழுந்து மூச்சடைத்து மாண்டான். வைத்தியன், குருக்கள், மகன் மூவரும் அவன் இறந்த பிறகே வந்தனர்.

இதுதான் முதல் தடவை மாரியன் விவரமறிந்து தந்தையைக் காண்பது. இதுதான் கடைசித் தடவை. குருக்கள் சாவுக் கீதம் பாடுகிறார். வேலைக்காரி தான் அழுகிறாள். மாரியன் திகைத்துத் தந்தை யுடலை நோக்குகிறான். தந்தையின் கையில் ஒரு காகிதம் இருந்தது. அதில் அவன் கைப்பட அடியில் வருமாறு எழுதியிருந்தது :—

"என் மகனுக்கு :—வாதர்லூப் போர்க் களத்தில் நெப்போலிய மன்னன் எனக்குப் பிரபு பட்டம் (Baron) கொடுத்தான். இப்போதுள்ள பூர்போன் அரசாங்கம் அப் பட்டத்தை மறுக்கிறது. நான் இரத்தஞ் சிந்தித் தேசசேவை செய்து பெற்ற அந்தப் பட்டத்தை என் மகன் வைத்துக் காப்பாற்ற வேண்டியது. அப் பட்டத்திற்கு என் மகன் தகுதியாக வேண்டியது.

மற்ருெரு வேண்டுகோள் :—தேன்ருடியன் என்ற ஒரு போர்வீரன் வாதர்லூவில் என்னுயிரைக் காப்பாற்றினுன். அவன் மோம்பர்மேலிலோ எங்கோ சாராயக்கடை வைத்திருக்கிருனும். அவனைக் கண்டு பிடித்து உதவி செய்ய வேண்டியது."

இக்கடிதத்தை மாரியன் கவனமாக மடித்துப் பைக்குள் வைத்துக் கொண்டான்; வீட்டிலிருந்த சாமான்களை விற்று ஈமக் கடன்களை நிறைவேற்றினுன். புதை குழியில் கல் நட்டு, "போமேர்ஸி பிரபு இங்கே உறங்குகிருர்" என்றெழுதி முடித்து, மாரியன் தாத்தா வீட்டிற்கு வந்து சேர்ந்தான். பாட்டனுர் போமேர்ஸியின் ஆடைகளையும், வீர வாளையும் பழைய விலக்கு விற்றுவிட்டார்.

53. தந்தையின் அருமை பெருமை

வழக்கம்போல மாரியன் கோயிலுக்குப் போய்த் தூண் மறைவான ஒரு நாற்காலியில் அமர்ந்து தியானித்தான். மணியடிக்கும்போது மோபோ வந்து, "ஐயா, இது என் இடம். என் பெயர் எழுதியிருக்கிறது. பாருங்கள்" என்றான். மாரியன் தள்ளியுட்கார்ந்தான். தொழுகை யானது.

மோபோ :—ஐயா, மன்னிக்க வேண்டும். நான் ஏன் தங்களைத் தள்ளியுட்காரச்செய்தேன் தெரியுமா?

மாரியன் :—தங்களிடம் இது; அதனால்.

மோபோ :—இல்லை: கேளுங்கள். இந்தத் தூண் மறைவில் ஒரு அரிய நண்பர் வந்து நிற்பது வழக்கம். இங்கு நின்று அவர் தமது குழந்தையைப் பார்த்துக் கண்ணீர் வடிப்பார்; குழந்தைக்குத் தகப்பனைத் தெரியாது: ரொம்ப மனஸ்தாபத்தால் அப்படிப் பிரித்து வைத்தாராம். அவருக்கு இக் குழந்தைதான் உயிர். நான் அவரை நன்கு அறிவேன்: என் அண்ணன் வெர்னன் குருக்கள். அவரது கதையெல்லாம் என்னிடம் சொல்லுவார். குழந்தையை அனுப்பாவிட்டால் சொத்துப் பாத்தியத்தை ரத்துசெய்து விடுவதாக மாமனார் மிரட்டினாராம். குழந்தை சொத்தை யடைந்து சௌக்கியமா யிருக்கவேண்டுமென்று கருதியே அவனைத் தாத்தாவிடம் ஒப்புவித்துத் தனியே வாழ்ந்தார் எனது நண்பர். அவர் நெப்போலியனுக்குக்

கண்ணு யிருந்தவர். வாதர்லூப்போரில் நெப் போலியன் அவருக்குப் படையதிகாரி, பிரபு என்ற பட்டம் கொடுத்தான். இந்த நண்பர் தனியே வெர்னனில் வசித்து, மகன் மேல் பாசம்வைத்து இறந்தார். என் அண்ணன் (வெர்னன் குருக்கள்) அவரது ஈமக் கடன்களைச் செய்தான். அவர் வைத் திருந்த அழகான வாளையும், போர் அங்கிகளையும் மாமனர் பழைய விலைக்கு விற்றாராம். அந்த நண்பர் பெயர்....மறந்துபோனதே....

மாரியன் :—போமெர்஖ி.

மோபோ :—ஆ! ஆமாம்! தங்களுக்கு அவரைத் தெரியுமோ?

மாரியன் :—அவரே எனது தந்தை.

மோபோ :—அப்படியா! முன்னே சிறு பையனு யிருந்தீர். தங்கள் தந்தை உமது பேரி லேயே உயிர் வைத்திருந்தார்.

மோபோ பின்னும் போமெர்ஸியின் அருமை களை எடுத்துச் சொல்லவே, மாரியனுக்குத் தந்தை யிடம் பேரன்பும் வணக்கமும் பிறந்தன.

“மூன்று நாள் நான் நண்பருடன் வெளியே சென்று வரவேண்டும், உத்திரவு தாருங்கள்” என்று மாரியன் பாட்டனரைக் கேட்டான்.

“சரி, நான்கு நாள் குஷியாகச் சுற்றி வா” என்று தாத்தா அனுமதித்து, “அட பயலே, எந்தக் குட்டியைத் தேடிச் செல்லுகிறய்? எனக்குச் சொல்லடா” என்று கேலி செய்தார்.

மாரியன் அடிக்கடி வீட்டிற்கு வராது திரிந்தான். எதற்காக? தந்தையைப் பற்றிய எல்லா விவரங்களையும் அறியவே. மோனிதர் என்ற பத்திரிகையிலும், நெப்போலியன் எலனாத் தீவினின்று எழுதிய நினைப்புக் குறிப்புகளிலும் தந்தையின் வீரப் பிரதாபங்களைத் தெளிவாக, ஏராளமாகக் கண்டான். தாத்தாவின் கொள்கையை முற்றும் வெறுத்தான்: பிரெஞ்சுப் புரட்சியை ஆதரித்தான்; நெப்போலியனை அற்புதமான வீரன் என்று போற்றினான்; முடியரசை அடியோடு வெறுத்தான்; தந்தையை ஒப்பற்ற சுதேச வீரன் என்று வணங்கினான். தந்தை, சுதேசம் இரண்டும் அவன் உள்ளத்தைக் கவர்ந்தன. தந்தை அனாதையாக இறந்ததை எண்ணி எண்ணிக் கண்ணீர் விட்டான். அத்தனைப் பேர் இரத்தஞ் சிந்திக் காத்த சுதந்திரக்கொடி மீண்டும் முடியரசால் மண்ணில் வீழ்த்தப்பட்டிருப்பதைக் கண்டு பொறிந்தான். தந்தையைப் போலவே சுதேசத்திற்கும் சுதந்திரத்திற்கும் போர் புரியத் தீர்மானித்தான்: தேச சரித்திரத்தைக் கூர்ந்து படித்தான். திருடர், கொள்ளைக்காரர், கயவர் என்று சுதந்திர வீரரையும் நெப்போலிய வீரரையும் நாள் தவறாது திட்டி நொறுக்கும் பாட்டனாரை வெறுத்தான்: தந்தையைத் தெய்வமென மதித்தான்: தன் தந்தை தனக்கு உரிமையாக்கின பிரபு பட்டத்தைப் பெருமையாக ஏற்றுக் கொண்டான். மாரியன் போமேர்ஸி பிரபு என்று தன்

பெயரை அச்சிட்டு, 100 சீட்டுக்கள் தயாரித்து வைத்துக் கொண்டான். தந்தை கைப்பட எழுதிய காயிதத்தை ஒரு சிறு தாயத்தில் அடக்கஞ் செய்து, கறுப்பு நூல் கோத்துச் சிலுவையுடன் கழுத்தில் கட்டிக் கொண்டான்; "25 ஆண்டுகள் இரத்தஞ் சிந்திச் சுதேசத்திற்காகப் போர் புரிந்து, நெப்போலியனால் படையதிகாரி, பிரபு என்று நன்கு மதிக்கப் பெற்ற மகா வீரன் எனது தந்தை" என்று நண்பருக்குச் சொல்லிவந்தான்; தன்னைத் தந்தையிடமிருந்து பிரித்த தாத்தாவை நினைத்துப் பல்லைக் கடித்தான்; அடிக்கடி வீட்டிற்கு வராதிருந்தான்.

---

54. காதலி யார்?

மாரியன்:—இன்று மாலை நான் வெளியூருக்குப் போய்வர வேண்டும். உத்திரவு வேண்டும்.

தாத்தா:—சரி, போ.

மாரியன் புறப்பட்டான். கிழவனர் மூத்த மகளை நோக்கினர்.

தாத்தா:—பயலுக்கு மன்மத பாணம் பலமாகத் தைத்துவிட்டது. குமரிகளை வேட்டையாடுகிறான்.

மூத்த மகள்:—அதுதான் அடிக்கடி வீட்டில் தங்காது போகிறான். இவன் எந்தச் சிறுக்கி வலையில் விழுந்தானே தெரியவில்லையே!

தாத்தா :—வரட்டும் பயல்; அந்தக் குட்டியின் ஊர், பெயர் விவரங்களைச் சொல்லா விட்டால் லேசில் விடமாட்டேன்.

கிழவனார் அப்புறம் சென்றார். இப்புறம் வந்தான் தியோதூலன். தியோதூலன் ராணுவ உத்தியோகஸ்தன்; அரசாங்க காரியமாகப் போகும் வழியில் தனது அத்தையைப் பார்க்க வந்தான். அத்தை (ஜில் நார்மானின் மூத்த மகள்) அவனை இறுகத் தழுவிக் கொண்டாள்.

அத்தை :—நீ வருவதே அபூர்வமாயிருக்கிறது. என்னை மறந்து போனையா?

தியோ :—இல்லை. காரியமாகப் போகும் வழியில் உன்னைப் பார்க்கவே வந்தேன்.

அத்தை :—சரி. இந்தப் பணத்தை வைத்துக் கொள். எனக்கு அவசியம் ஒரு காரியஞ் செய்.

தியோ :—என்ன?

அத்தை :—மாரியஸை உனக்குத் தெரியுமோ?

தியோ :—அவனை நான் அறிவேன். அவன் என்னை அறியான்.

அத்தை :—அதுதான் சரி. இந்தப் பயல் வீட்டில் தங்காது அடிக்கடி வெளியே போகிறான்.

தியோ :—வயதானது; குட்டிகளைத் தேடிச் செல்லுகிறான்.

அத்தை :—அப்படித்தான். அவன் எங்கே போகிறான்: காதலி யார் என்று அறிந்து எனக்கு எழுத வேண்டும். இப்போது தான் புறப்பட்டான்.

தியோ:—நானும் அதே வண்டியில்தான் போகிறேன். பயல் குட்டை அறிந்து எழுதுகிறேன்.

இருவரும் மறுபடியும் தழுவிப் பிரிந்தனர்.

மாரியனும், தியோதூலனும் ஒரே போக்கு வண்டியிற் சென்றனர். இருவரும் வெர்னனில் இறங்கினர். தியோதூலன் மறைந்து மறைந்து மாரியன் பின்னே போய் உளவறிந்தான். மாரியன் மலர் மாலைகள் வாங்கினன். 'அடே, கூத்திக்குப் பூ வாங்குகிறான்' என்றெண்ணினன் தியோதூலன். மாரியன் கோயிலை நோக்கிப் போனன். 'ஆம், காதலர் கண்கள் சந்திப்பது கோயிலில் தான். அங்கே தான் அவன் காதலி வந்திருக்கிறாள்' என்று தொடர்ந்தான் தியோதூலன். மாரியன் கோயிலுக்குப் பின்புறம் சென்று மறைந்தான். 'காதலியைக் கூடி மறைகிறான்' என்று நினைத்துச் சென்றான் தியோதூலன். ஏதோ பேச்சரவம் கேட்டது. 'குட்டியுடன் பேசுகிறான். இரண்டு பேரையும் கையோடே பிடித்துத் தாத்தா முன்னே கொண்டு நிறுத்துகிறேன்' என்று பாய்ந்தான் தியோதூலன். தியோதூலன் மூக்கில் கை வைத்து, முகம் வெளுத்து ஏமாந்தான்! மாரியன், தந்தை சமாதியின் முன்னே தாள் பணிந்து, "தந்தையே, எனது குற்றங்களை மன்னிக்கவும். தங்களைப் போல நான் சுதேச வீரனாக வாழ இறைவன் அருள் புரிக. தாங்கள் எனக்கு உரிமையாக்கிய பிரபுப் பட்டத்தை ஆயுள் மட்டும் காப்பேன்; தங்கள் அடிச்சுவடு பற்றி

வாழ்வேன்; தங்கள் கட்டளையை நிறைவேற்று வேன்" என்று கண்ணீர் விட்டு வணங்கினன்; தான் கொண்டுவந்த மலர்களால், "படைத் தலைவன், பிரபு போமர்ஸி" என்று எழுதிய சிலுவையை அலங்கரித்து, ஆங்கே சிந்தனையில் ஆழ்ந்தான்.

தியோதூலன் வெட்கிச் சென்றான்; அத்தைக்கு எதுவும் எழுதவில்லை.

---

55. போ வெளியே!

மாரியன் வீட்டிற்கு வந்து இரவில் நன்றாக உறங்கினன்; காலையில் தனது சட்டையைக் கழற்றிப் படுக்கை மீது போட்டுக் குளிக்கச் சென்றான். அச்சமயமே பாட்டனரும் பேரனைப் பார்க்க வந்தார். மூத்த மகளும் வந்தாள். "இந்தப் பயல் இப்படித் திரிகிறானே!" என்று அவள் வருந்தினள். "இதோ இன்று இவன் குட்டை உடைக்கிறேன் பார்" என்றார் பாட்டனர்.

மாரியன் சட்டையைப் பாட்டனர் சோதித்தார். அதில் ஒரு தாயத்திருந்தது. "பார்த்தாயா! தனது காதலியின் படத்தை இதில் அடக்கம்செய்து கழுத்தில் மாட்டிக் கொள்ளுகிறான். கண்டு பிடிக்கிறேன் இவன் வைப்பாட்டியை" என்று அவர் தாயத்தை மெல்லத் திறந்தார். அதில் காதலி படமில்லை.

ஒரு காயிதம் இருந்தது. அதுவே போமெர்ஸி தன் மகனுக்கு இறுதியில் எழுதிய காயிதம். முன்பே அதை அறிந்தோம். "அந்தக் களவாணிப் பயல் பட்டம் இந்த நண்டுப் பயலுக்காக்கும்!" என்று கடுகடுத்தார் பாட்டனார். சட்டைப் பையில் இன்னொரு பொட்டணம் இருந்தது. பாட்டனார் அதனையும் அவிழ்த்துப் பார்த்தார். அதுவே "கனம் மாரியன் போமெர்ஸிப் பிரபு" என்று அச்சிட்ட 100 சீட்டுக்கள். "நீ பிரபுவாகி விட்டாயா! படுக்காளிப் பயலே" என்று மண்டையை ஆட்டினார் பாட்டனார்; சேவகனைக் கூப்பிட்டு, அந்தச் சட்டை, தாயத்து, சீட்டுகள் எல்லாம் அப்புறப்படுத்திக் கொண்டுபோகச் சொன்னார்.

மாரியன் உடம்பு குளித்து வந்தான்.

தாத்தா:—சரி, சரி, சரி, சரி, சரி, நீர் பிரபுவாய் விட்டீரோ! பிரபுவே, சலாம் போடுகிறேன். படுக்காளிப் பயலே, இதென்ன?

மாரியன்:—(கண் சிவந்து) அதுவா? நான் என் தகப்பனாரின் பிள்ளை என்பது.

தாத்தா:—(கோபக் கனலுடன்) உன் அப்பனா? நானல்லவா உன்னை வளர்த்த தந்தை! உன் அப்பன் வாழ்ந்தது தெரியாதா....அட பயலே........

மாரியன்:—நிறுத்தம்; என் தந்தை சுதந்திர வீரன்; குடியரசிற்குத் தனது இரத்தஞ் சிந்தியுழைத்த தீரன்; நாட்டுச் சரித்திரத்தில் பொன்னெழுத்தால் எழுதி விளங்கும் உத்தமன்; கால்

நூற்றாண்டு தேசமே மூச்சாக வாழ்ந்த நாட்டன்பன்; கணக்கற்ற போர்களை வென்ற சூரன்; வெயில், மழை, சகதி, பனி, காடு, மலையெல்லாம் வருந்திக் குடியரசின் கொடியைக் காத்த சௌரியவான்; தனது தாய் நாட்டின் பணிக்காக 20 காயங்களைத் தாங்கிய தியாகி. எனது தந்தை நெப்போலிய சக்கிரவர்த்தியின் கண்ணாயிருந்து, அவனால் பட்டம், பதவிகளைப் பெற்ற படைத் தலைவன் போமோர்ஸிப் பிரபு. எனது தந்தை குடியரசு வீரன்.

தாத்தா:—மாரியன், வர வரக் கெட்டுப் போனாய். கட்டுக் கடங்காத துஷ்டப்பயலே, நான் உன்னை வளர்த்தேன், உனது தந்தையைக் கண்டதார்? அந்தக் களவாணிப் பயல் முகத்தில் விழித்ததார்? அனாதிப் பயல், அதிகப் பிரசங்கி! தண்டத் தடிராயன்களும், கொலைகாரப் பயல்களும், தத்தாரிப் பயல்களும், ஊர்க்காலிகளும் சேர்ந்து குடியரசாம்! அந்தத் திருட்டுக் கொள்ளைக் கூட்டத்தில் சேர்ந்த ஒரு களவாணிப் பயல் பேச்சை என்னெதிரே பேசாதே. இந்தத் திவட்டிக் கொள்ளைக்காரப் பயல்கள் சேர்ந்து பு-வோ-ன-பார்-த்-தாம்; கோர்ஸிகாவிலிருந்து வந்த அந்தப் போக்கிரி பக்கம் சேர்ந்து ஐரோப்பாவைப் பிணக் காடாக்கினர். நாட்டிற்குரிய அரசனைத் தூக்குப் போட்ட இந்தப் புரட்சித் திருடர்கள் வீரர்களாம்! கொலைகாரப் படவாக்கள்! வாதர்லூப்போரில் ஆங்கிலேயரும், பிரஷ்யரும் கூடி இவர்களைப் பலிவைத்துக்

குழி தோண்டிப் புதைத்தனர். அந்தப் பிணக் கும்பலில் தப்பி வந்த அயோக்கியன் பேச்சையா என் முன் பேசுகிறாய்? அவன் முகத்தைப் பார்த்த தார்? பிரபுவாம்! அடா என் செருப்பே!

மாரியன் கோபம் கொழுந்து விட்டது. 'என் தந்தையை இந்தக் கிழவன் இப்படி இழிவாகப் பேசுவதா! தந்தையே, உன் இரத்தம் எனது நாடிகளில் துடிக்கிறதே!' என்று பாட்டனரை இரத்த விழியால் பார்த்தான்.

"உன் பூர்போன் ஆட்சி வீழ்க! லூயி XVIII என்னும் தடிப்பன்றி ஒழிக! குடியரசு வாழ்க! சுதந்திரக் கொடி பிடித்த வீரர் வாழ்க! எனது தந்தை போமெர்ஸி பிரபு நீடு புகழோங்குக!" என்று பெருங் குரலெடுத்துக் கூவினன் மாரியன். கிழவனது ராஜபக்தி இதைத் தாங்க வில்லை. வந்த கோபத்தில் வார்த்தையும் அடைத்தது. அவர் அங்கு மிங்கும் தாண்டுகால் போட்டு நடந்தார்; "இதோ நிற்கிறாரே இவரைப் போன்ற பிரபுவும் என்னைப்போன்ற கனவானும் ஒரே வீட்டில் வாழ முடியாதுதான்" என்று மீண்டும் உலாவினர். மாரியன் என்ன வந்தாலும் வரட்டும் என்று தைரியமாக நின்றான். அவன் கண்ணில் கனல் பறந்தது.

"போ-டா-வெளியே" என்றார் பாட்டனர். மாரியன் உடனே வெளியே சென்றான். தனது தாயத்தும், சீட்டுக்களும் காணவில்லை. பாட்டனர்

அவற்றை எரித்து விட்டாரென்றே நம்பினான் மாரியன். "மகளே, இந்தப் பாவிப் பயலுக்கு, இந்தப் படுக்காளிப் பயலுக்கு ஆறுமாதத்திற் கொருதரம் ரூ. 240 அனுப்பித் தொலை. அவன் பேச்சை இனி என் காதிற் போடாதே" என்று கட்டளையிட்டு, கிழவனார் தம் அறைக்குச் சென்றார்.

இனி மாரியனைத் தொடர்வோம்.

---

56. A. B. C. நண்பர்

பிரான்ஸில் மீண்டும் முடியரசு தலை தூக்கியது. இரத்த வெள்ளம் சிந்திச் சுதந்திர வீரர் செய்த புரட்சியும், நெப்போலியன் ஆட்சியும் கனவுபோல மறைந்தன. அரசாங்கத்திற்கு எதிராக மூச்சு விட்டால் தூக்கு மேடை! நெப்போலியனைப் புகழ்ந்தால் தண்டனை! புரட்சிப் பேச்சிற்குப் பூட்டு! எங்கும் ஒற்றர்! மன்னர் படைகள்! தூக்கு மேடைகள்! ஜில் நார்மன் போன்ற மிதவாதிகளும் ராஜ விசுவாசிகளும் மீண்டும் செருக்குடன் தலை தூக்கினர். "சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம்" என்று கர்ஜித்தெழுந்த புரட்சியலைகள் அடங்கிப்போயின. முன்னே நாட்டு விடுதலைக்குப் பாடுபட்ட வீரர்கள் பலர் போரில் இறந்தனர். மீதியிருந்த சிலர் அடக்கு முறைகளால் வருந்தினர். ஏழைகளின்

துயரம் சொல்லமுடியாது. நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது. குழந்தைகளைக் காப்பாற்ற முடியாது தெருவில் காலிக் கூட்டத்தோடு வளர விட்டு விட்டனர் ஏழைகள்.

இந்நிலைமை கண்டு சில வாலிபர் இரத்தம் கொதித்தது. பெரியவர்களெல்லாம் வாயை மூடிக் கொண்டிருக்க, இந்த வாலிபர்கள் மட்டும் அஞ்சா நெஞ்சத்துடன் எழுந்தனர். எந்த நாட்டு விடுதலையும் வாலிபரால் தான் வெற்றி பெறுகிறது. முடியரசைத் தகர்த்து, மீண்டும் எளியவருக்குச் சாதகமான குடியரசை ஏற்படுத்தத் துணிந்தனர் பள்ளிக்கூட வாலிபர்; அதற்காக ஒரு இரகசியச் சங்கம் ஏற்படுத்தினர்; அதற்கு A. B. C. நண்பர் என்று பெயர். A. B. C. என்பது (Abase) தாழ்த்தப்பட்டவர் சங்கம். அதாவது முடியரசின் கொடிய அடக்கு முறைகளால் வருந்தும் ஜனநாயக கூட்டம் என்பது உட்பொருள். இப்பொருள் இதைச் சேர்ந்த நண்பருக்கே தெரியும்.

இது மிகவும் இரகசியச் சங்கம். கோரிந்து (Gorinthe) என்னும் சாராயக்கடை, 'மூசேன்' (Musain) என்னும் காப்பிக்கடை, இந்த இரண்டு இடங்களில் உள்ள தனியறைகளே இந்தப் புரட்சி நண்பர் கூடுமிடம். இந்த இடங்களிற் கூடினால் யாரும் சந்தேகிக்க மாட்டார்கள். கொரிந்தில் ஏராளமான தொழிலாளிகள் கூடுவர். மூசேனில் கல்லூரி வாலிபர் கூடுவர். மூசேனில் பின்புறம்

உள்ள தனியறையில் தான் சூட்சிகள் நடக்கும். அங்குப் பிரெஞ்சு தேசப் படம் ஒன்று தவிர வேறிராது. சூட்சியெல்லாம் இரகசியமாகப் பேசி முடித்து, அவரவர் மனத்திலிருக்கும்—எழுத்தில் எதுவும் இராது. அவரவர் தமக்கு இட்ட வேலையை வெளியிற்சொல்லாது இரகசியமாக நிறைவேற்றுவர்; பேசி முடிந்ததும், சாதாரண வாலிபர் போலக் குடிப்பர்: சிரிப்பர்; களிப்பர்: சந்தேகத்திற் கிடங்கொடாது நடப்பர். இவர்கள் நடத்தை மோசந்தான். ஆனால் இவர்கள் உள்ளமெல்லாம் தேசாவேசம். இச்சங்கத்தின் கைகள் தொழிலாளரே. தலைவர், கல்லூரியிற் படிக்கும் வீர வாலிபர்கள். அவர்களில் முதன்மையானவர் :—அஞ்சாலரன் (Enjolras), கம்பீரன் (Combeferre), புரூவரன் (Prouvaire), ஃ பையன் (Feuiley), கூர்பேரன் (Courferac), பகோரல் (Bahorel), போஸ்வே, கிராங்தேரன் (Grantaire) முதலியோர். அனைவரும் உயர்ந்த அறிவாளிகள்: அஞ்சா நெஞ்சுரமுள்ள இளங் காளைகள். அனைவரும் ஒரே குடும்பம் போல வாழ்ந்தனர். இவர் தன்மைகளைச் சிறிதறிவாம்.

அஞ்சாலரன் எதற்கும் அஞ்சாதவன்; 22 வயது வாலிபன்: அழகன்; அறிவாளி: சாத்திர நிபுணன்: அரசியல் தந்திரன்; போர்வீரன்; புரட்சிப் புயல்; தீவிரக் கனல்; முடியாட்சியின் முடியாப் பகைவன்; ஜனநாயக நண்பன்; பணக்காரன்; ஏழை

களின் தொண்டன்; தேசாபிமானச் சிங்கம்; 'தேச சுதந்திரமே என் மனைவி,' யென்பவன். அவன் பேச் செல்லாம் வீராவேசம். மக்களை அடிமையாக்கும் அரசாங்கத்தைச் சுட்டெரிக்க எரி மலை போலக் குமுறி யெழுந்தான் இந்த வாலிபன். இவனே A. B. C. சங்கத் தலைவன்.

கம்பீரன், சொல், செயல் அனைத்திலும் கம்பீர மாகவே யிருப்பான்; நல்ல மூளையை யுடையவன்; கல்விக் கடல், படபடப்பில்லாமல் நிதானமாக ஆலோசித்து, இடம்பொரு ளேவலறிந்து காரியம் செய்ய வல்லவன். காட்டு மிராண்டித்தனமான புரட்சி இவனுக்குப் பிடிக்காது; ஆழ்ந்த உண்மை யும், அசைக்க முடியாத உரிமையும், ஆற்றலும் கொண்டு, ஒழுங்கு முறையாக, நியாயமாகப் போர் புரிந்து, நாட்டில் சுதந்திரத்தை நிலைநாட்ட வேண்டு மென்னும் கொள்கை யுடையவன்; ஊர்க் காலி களுடன் பேசி, அவர்களை வசப்படுத்த ஆர்கோ மொழியை நன்கு கற்றான்; பெரிய அறிவாளி களுடன் அவரவருக்கு ஏற்றபடி பேசப் பல சாஸ் திரங்களைக் கற்றான்; பௌதிகம், ரசாயனம், தாவரம் முதலிய சாத்திர நிபுணன்; லூயி XIV-ன் காலந் தொட்டு வெளிவந்த பத்திரிகைகளை விடாது படித்து, நாட்டு வரலாற்றை நன்கு அறிந்தான்; கல்வியும், ஒழுக்கமும், தொழிலும் உடலுறுதியும் வளர்த்துப் பொது ஜனங்களை முன்னேற்ற வேண்டு மென்ற கருத்துடையவன் கம்பீரன். மூடக்

கொள்கைகளை வெறுத்தொதுக்கி, அறிவைக் கொண்டு மனிதர் முன்னேற வேண்டுமென்பான்; அமைதியாகச் செய்யக்கூடியதை பலாத்காரம் கொண்டு செய்யான்; தீமைகளைத் தீவிரமாக வேரோடொழிப்பான்; செய்வதை அப்பழுக்கில்லாமல், குறை வைக்காமல், நிறைவாகச் செய்வான். இவனே A. B. C. சங்கத்தின் மூளை.

புரூவரான் நல்ல படிப்பாளி; ஆசியாவின் தத்துவ ஞானங் கற்றவன்; தாய் மொழியிற் பெரும் புலவன்; லதீன், கிரீக், இத்தாலி, ஹீப்ரூ கற்றவன்; இனிய பேச்சாளன்; சமுதாய சாத்திரம் (Social Science) நன்ருகக் கற்றவன்; பணக்காரப் பிள்ளை' படிப்பதும் சிந்திப்பதுமே அவன் வேலை. நாட்டில் உழைப்பும் பிழைப்பும் உண்டு பண்ணல், முதலாளிக் கொடுமை யொழித்துத் தொழிலாளர் நன்மை நாடல், தொழிலாளருக்கு வேலைக் கேற்ற கூலி தரல், விவாகச் சீர்திருத்தம், தூய காதல் மணம், சமரஸ மதம், சுதந்திர வாழ்வு, காதல் சுதந்திரம், இலவசக் கல்வி, அறிவொளி பரப்பி இருளை நீக்கல், வறுமை யொழித்தல், பொதுவுடைமை, ஒற்றுமை ஆகிய இவற்றைக் குறித்தே சிந்திப்பான், பேசுவான்.

ஃபையன் ஒரு ஏழைத் தொழிலாளி; நாளெல்லாம் வேலை செய்து மூன்று பணம் சம்பாதித்து வயிறு வளர்க்கும் குடும்பத்தைச் சேர்ந்தவன்; தன் முயற்சியால் சிறிது எழுதப் படிக்கக் கற்றவன். ஆனால், தாராள மனமும், தீவிரமான

நாட்டன்பும் சிறந்த பொதுநல ஊழியன்; பாமர ஜனங்களுக்குப் படும்படி தன் கருத்தை எளிய நடையில் உருக்கமாகச் சொல்ல வல்லவன்.

கூர்பேரன் வசீகரமானவன்; இளமையின் இன்பங்களை அனுபவிப்பதில் விருப்ப முடையவன். அவனது அன்பும், இனிய நட்பும் எல்லாரையும் வசப்படுத்தும்.

பகோரல் சட்ட மாணவன்; பெரிய புரட்சிக் காரன்; தைரியவான்; கொண்ட கொள்கைக்கு விடாமல் போராடுவான். இவன் குடியானவன் மகனாதலால் ஏழைக் குடியானவர்க்கும் தொழிலாளிகளுக்கும் நன்மை செய்யக் கருதினான். தொழிலாளிகளும் விவசாயிகளும் A. B. C. சங்கத்திற் சேர இவனே காரணன்.

போஸ்வே லேகளன் சட்டக் கல்லூரி மாணவன்; தைரியசாலி; 1814-ல் லூயி XVIII அரசாட்சி யேற்க பிரான்ஸிற்கு வரும்போது நேரே இவன் ஒரு விண்ணப்பத்தை நீட்டித் தபால் இலாகாவில் உத்தியோகம் பெற்றான். A. B. C. அறிக்கைகளை இரகசியமாக எங்கும் பரப்ப இவன் உதவினான். இவன் தன்னை லேகளன் (ஜடாயு) என்று அழைத்துக் கொண்டான். போஸ்வே தகப்பனார் வைத்த வீடு, நிலமெல்லாம் விற்றுச் செலவழித்து ஏழையானான்; கையில் காசில்லாவிட்டாலும் கவலைப்பட மாட்டான். அவனுக்குப் பல தொல்லைகள் உண்டு. அவன் ஒன்றையும் பொருட்படுத்த

மாட்டான்: எப்போதும் தமாஷாகவே பேசுவான்; விதியின் பயனைப் புன்னகையுடன் வரவேற்பான்; கையில் பணம் வந்தால் உடனே அத்தனையும் செலவிடுவான்; நன்றாகச் சாப்பிடுவான்; நண்பர் வீட்டிலேயே எப்போதும் இருப்பான். இவனது அருமைத் தோழன் "ஜோலி" (Joly) என்பவன். ஜோலி வைத்திய மாணவன்; உற்சாகி.

கிராந்தேரன் தாவா நிபுணன்; குடிகாரன்; பெண்பித்தன்; நாஸ்திகன்; ஆனால் நல்ல மனமுடையவன்; நட்பிற்கு இனியவன்; அஞ்சாலரை விட்டுப் பிரியாதவன்.

இந்த நண்பர்கள் அனைவரும் பிரெஞ்சுப் புரட்சியை ஆதரிக்கும் சுதந்திர வீரரே. எப்படியாயினும் முடியரசை வீழ்த்திக் குடியரசை நிலைநாட்டவே இவர்கள் A. B. C. சங்கம் தொடங்கினர்.

---

57. நண்பர் அழைப்பு

மோசேன் காப்பிக்கடை வாசலில் போஸ்லே ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தான்; அன்று சட்டக் கல்லூரியில் தனக்கு நேர்ந்ததைப்பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்தான். அப்போது தெருவில் ஒரு கோச்சு வண்டி சென்றது. அதில் ஒரு வாலிபன் உட்கார்ந்திருந்தான். அவன் பக்கத்தில்

ஒரு துணி மூட்டை இருந்தது. அதன் மேல் "மாரியன்-போமேர்ஸி" என்று எழுதியிருந்ததை போஸ்வே லேகளன் கண்டான்; உடனே, "ஐயா, போமெர்ஸி" என்று கூப்பிட்டான். மாரியன் வண்டி நின்றது.

லேகளன் :—தாங்கள்தானு மாரியன் போமெர்ஸி ?

மாரியன் :—ஆட்சேபணையில்லாமல்.

லேகளன் :—நான் தங்களையே தேடுகிறேன்.

மாரியன் :—தங்களைத் தெரியவில்லையே ? என்ன விசேஷம் ?

லேகளன் :—ஒரு விசேஷம் நடந்துவிட்டது. மூந்தாநாள் நீங்கள் சட்டக் கல்லூரிக்கு வரவில்லையல்லவா ?

மாரியன் :—உண்மை. தாங்கள் சட்ட மாணவரா?

லேகளன் :—ஆமாம், ஐயா. தங்களால் நான் நேற்றுமுதல் சட்டப் படிப்பை விட்டேன்.

மாரியன் :—என்னுலா ? அதெப்படி ?

லேகளன் :—நானும் தாங்களும் ஒரே வகுப்பில்தான் படிக்கிறோம். மூந்தாநாள் நமது வகுப்புச் சட்டாம்பிள்ளை (அந்த முரட்டுப் பிடிவாத எருமைக்கடா) பிளாந்தன், ஆஜர் பதியும்பொழுது, "மாரியன் போமெர்ஸி" என்று கூப்பிட்டான். யாரும் பதில்சொல்லவில்லை. மீண்டும் அவன் இரண்டு தடவை கூப்பிட்டான். நான், "ஆஜர்" என்று குரல்

மாறிச் சொன்னேன். அந்த ஏமாளி தாங்கள் வந்ததாகக் குறித்துக் கொண்டான்; பிறகு, "லேகளன்" என்று கூப்பிட்டான். அதற்கும், "ஆஜர்" என்றேன். "நீ மாரியனாயிருந்தால், லேகளனல்ல" என்று புலி போலப் பார்த்து என் பெயரை 'வரவில்லை' என்று குறித்துக்கொண்டு, தலைமை உபாத்தியாயரிடம் அவன் கோட் சொல்லிவிட்டான். இந்தப் படிப்பும், கட்டுப்பாடும், புலிப்பார்வையும் எனக்குப் பிடிக்கவில்லை. நான் படிப்பை விட்டுவிட்டேன்.

மாரியன்:—ஐயோ! தாங்கள் வக்கிலாய் வந்தால் நல்ல பேர் வாங்குவீரே!

லேகளன்:—உடப்பிலே போடும் இந்த வக்கில் தொழில்! பொய்த் தொழில்! பரிட்சைத் தொல்லையில்லை. ஹாயாக என் வேலையைப் பார்க்கிறேன். தங்களுடன் பேசவேண்டும். தங்கள் ஜாகை யெது?

மாரியன்:—இரண்டு மணி நேரமாக இந்த வண்டிதான் என் ஜாகை. இனி யெந்த இடமோ அறியேன்.

இவ்வாறு சொல்லி, மாரியன் விசனச் சிரிப்புடன் லேகளனை நோக்கினான். அப்போது கூர்பெரன் வந்து, "ஐயா, என்னுடன் வந்திருங்கள்" என்றான். மாரியன் கூர்பெரனுடன் சென்று செயின்ட ஜாக் ஓட்டலில் அவனுடன் வசித்தான்.

58. மூஸேன் ஓட்டல்

கூர்பெரன் மாரியனிடம் அன்பாகவே யிருந்தான். ஆனால் சொந்த வரலாறுகள் எதுவும் விசாரிக்கவில்லை. A. B. C. நண்பர் மட்டும் ஏதோ தமக்குள் பேசினர்.

ஒரு நாள் கூர்பெரன் திடீரென்று, "மாரியன், தங்கள் அரசியற் கொள்கை யென்ன?" என்று கேட்டான். "நான் ஜனநாயக ஆட்சியை விரும்புகிறவன்; போனபார்த்து (Bonopartiste) கொள்கையுடையவன்" என்றான். மறு நாள் கூர்பெரன் மாரியனை மூஸேன் காப்பிக் கடைக்கு அழைத்துச் சென்று, தனது A. B. C. நண்பருக்கு "நமது மாணவன்" என்று இரகசியமாகச் சொன்னான். மாரியன் A. B. C. நண்ருபடன் அமர்ந்து, அவரது நடை, யுடை, பேச்சு, நினைப்பு, செயல்களைக் கூர்ந்து நோக்கினான். நண்பர்களெல்லாம் மாரியனை வரவேற்றனர்; கை குலுக்கினர். முதலில் பெரிய பெரிய வேதாந்தப் பேச்சுக்கள் நிகழ்ந்தன. பிறகு சரித்திரப் பேச்சுக்கள் நிகழ்ந்தன. அவர்கள் கூடும் அறையில் பெண்களை விடுவதில்லை. உணவு கொண்டுவர, பாத்திரம் கழுவ ஏற்பட்ட லூயிஸன் என்ற பணிப் பெண் மட்டுமே அங்கு வருவாள். நண்பர்களெல்லாம் நன்றாகக் குடித்தார்கள்; தமாஷாகப் பேசினார்கள். அங்கு யாரும் நெப்போலியனைப் புகழவில்லை. அரசன் என்ற வார்த்தையே அவர்களுக்குப்

பிடிக்காது. குடி வெறியில் அவர்கள் பேசும் ஆபாசங்களும், பண்ணும் அட்டஹாஸங்களும் மாரியனுக்குப் பிடிக்கவில்லை.

கிராங்தேர் என்பவன் இரண்டு புட்டிச்சாராயத்தை உள்ளேவிட்டு, ஒரு கனைப்புக் கனைத்துக் கர்ஜிக்கத் தொடங்கினன் :—"மாந்தர்காள், நான் கனவு காண்பவன். வாழ்வின் துன்பங்களை மறப்பதற்குவழி கேளுங்கள்: நன்ருய்க் குடிக்க வேண்டும். அழகான பெல்லியரைக் கூட வேண்டும்; காதலிக்க வேண்டும். காதல், கள் ஆகிய இரண்டுதான் இன்பவழி. கேளுங்கள், மானிடர்களே, 'எல்லாம் மாயம், எல்லாம் கனவு' என்று பெரியார் சொல்லுகின்றனர். நானே எப்படியோ? இன்றே குடித்துக் களித்துக் காதலித்துப் பெண்டிருடன் மகிழுங்கள். வேதாந்தம் பேசும் தியாஜன் (Diogenes) சட்டையில் எத்தனையோ பொத்தல்கள் உள்ளன. பெரியவர் என்று பேர்வாங்கினேரிடை எத்தனையோ பிழைகள் உள்ளன. பெரியவர் கொலைக்காரராயிருக்கின்றனர். அதெல்லாம் நமக்கு வேண்டாம். நன்ருய்ச் சாப்பிடுங்கள். அழகான பெண்களைக் கூடுங்கள். ஆ! எனக்குக் கிளிபாத்திரை (Cleopdtre) போன்ற ஒரு அழகி வேண்டும்................"

கிராங்தேர் இவ்வாறு உளறிக்கொட்டி, அங்குப் பாத்திரம் கழுவவந்த ஜூவலியனை, "அடி என் கட்டழகி, கிளிபாத்திரை" என்று கட்டிக்கொண்டான். வேலைக்காரி திமிறிக் கொண்டு ஓடிப்போனுள். அதன்

பிறகு கிராங்கேர், பகோரெல், ஜோலி ஆகிய மூவரும் உழக்குருட்டிக்கொண்டே தமது வைப்பாட்டிகளைப் பற்றி வர்ணிக்கத் தொடங்கினர்.

ஜோலி :—உன் வைப்பாட்டி நன்றாகச் சிரிக்கிறாளா?

பகோரெல் :—அடசீ! சிரிக்கிறவளைக் கண்டால் எனக்குப் பிடிக்காது. என்னைச் சிரித்து மயக்குகிறவள் இன்னும் எத்தனையோ பேரிடம் போய்ச் சிரித்து நிற்பாள். சிறிப்பவள் ஏமாற்றுவாள்.

ஜோலி :—சீ போடா, சிரிக்கிறவள் தானடா எனக்கு வேண்டும். என் காதலி சிரிப்பாள்; என்னிடம் சண்டை போடாது சாந்தமாக இருப்பாள்.

பகோரெல் :—அட, கலகலப்பாகச் சண்டை போட்டு வாதாடினால் தானடா காதலில் ஜோர் பிறக்கும். விளையாடாத செலம்பத்தடி என்ன பயன்?

ஜோலி :—என்னைக் கண்டால் என் வைப்பாட்டிக்குப் பிடிக்கவில்லை; முகத்தைத் திருப்பிக் கொள்ளுகிறாள்.

பகோரெல் :—பெண்களைக் குலாம்போட உனக்குத் தெரியவில்லை. காக்காயாயிருந்தாலும், "அடி அன்னமே" என்ன வேண்டும். தெத்து வாயாயிருந்தாலும், "அடியென் பஞ்சவர்ணக் கிளியே" என்று புகழவேண்டும். குரல் எருமைக்கடாவாக இருந்தாலும், "அடி என் கோகிலமே" என்று கொஞ்ச வேண்டும். இவையெல்லாம் பழக்கத்திலே தெரிய

வேண்டுமப்பா. உனக்கு அனுபவம் போதாது. என்னைக்கேள்.

ஜோலி:—அடா பகோரெல், அந்த மைனாவுக்குச் சம்மதந்தானே?

பகோரேல்:—அடா அதன் அழகும், மினுக்கும், நளுக்கும், ஆ ஹா ஹா ஹா! (கிராந்தேர் பெண்போல நடந்து சதுராடத் தொடங்கினான்.)

ஜோலி:—ஹல்லோ, க்ரேபியான், ஹல், அப்படி!

இவ்வாறு சிரித்துக் களித்தனர் இங்கு மூன்று பெருங் குடியர்.

மற்றொரு மூலையில் இலக்கிய வாதம் பலமாக நடந்தது. நாஸ்திக வாதமும் பலமாக நடந்தது. மற்றொரு மூலையில் தான் அரசியற் பேச்சுக்கள் நடந்தன. "சத்து!" என்று தொடங்கினான் கூர்பேரன். எல்லாரும் அமைதியாகக் கேட்டனர்.

"முதலில் அரசன் என்னும் பெயரே எனக்குப் பிடிக்கவில்லை. குடிகளின் பணத்தைப் பிடுங்கி, இடம்பக் கூத்தாடிக் குடிகளையே நசுக்கும் அரசன் நமக்கு வேண்டாம். அரசன் புல்லுருவி: பணந்தின்னி; அகங்காரி: கண்டபடி செலவுசெய்து ஏராளமான கடன் சுமையைக் குடிகள் தலையில் வைக்கிறான். நாம் ஜனங்களுக்குத் தெளிவாகச் சொல்ல வேண்டும். மனப்போடுவது, ராஜி பேசுவது, மத்தியஸ்தம் வைப்பது, கெஞ்சுவது, சலுகை கேட்பது, காருண்ய மன்னனது முகம் பார்ப்பது—இவையெல்லாம் உத

வாக்கரை வேலை. அரசன் என்றாலே அடக்கு முறை தான், சுயேச்சாதிகாரந்தான். இதோ பாருங்கள் முடியரசின் சட்டங்களைத் தீயில் போடுகிறேன்.

அழிக முடியரசு! வாழ்க குடியரசு! முடியரசு சட்டமெல்லாம் தீக் கொழுந்தாகி விட்டன பாருங்கள்" என்றான் கூர்பெரன்.

எல்லாரும் கைக் கொட்டிச் சிரித்தனர்: அரசனைப் பரிகாசம் செய்தனர்; வீரம் பேசினர். இடையில் ஒருவர், "1815, ஜூன் 18, வாதர்லூ" என்றார்.

கூர்பெரன் :—ஆ! 18! இந்த எண் என்னைக் கலக்குகிறது. இந்தச் சனியன் பிடித்த 18 வாதர்லூவில் நமது வீரரைக் கோடிக் கோடியாகப் பலி வைத்தது. அந்தப் பு-வோ-ன-பார்-தின் வேலை! அவனுக்கு 18 சனியனாய் வந்தது. இந்த 18, நமது புரட்சியை வீணாக்கி மீண்டும் பூர்போன் கொடுங்கோலை நிலை நாட்டியது.

ஃ ஃ ஃ

நெப்போலியனைக் குறைவாகப் பேசியது மாரியனுக்குப் பொறுக்கவில்லை. சுவரில் ஐரோப்பாப் படம் மாட்டியிருந்தது. அதில் அவன் கோர்லிகா தீவைக் காட்டி, "இந்தச் சிறு தீவில் பிறந்த ஒரு வீரனால் பிரான்ஸு புகழ் பெற்றது என்பதை அறிவீரா?" என்று செருக்குடன் கூவினான்.

பகோரேல் :— எந்தக் கோர்லிகன் உதவியுமில்லாமல் எமது பிரான்ஸு புகழ் பெற்றுத் தலை நிமிர்ந்து நிற்கும் என்பதை அறிவீரா? பிரான்ஸு

உலகத்தில் சிறந்த நாடு. ஏனென்றால் அது எமது பிரான்ஸே.

மாரியன் :— நான் எனது சுதேசமான பிரான்ஸைத் தாழ்த்திச் சொல்லவில்லை. அதன் பெருமையை ஓங்கச் செய்த நெப்போலிய சக்கிரவர்த்தியை நன்கு மதிக்கிறேன். நண்பர்களே, உங்கள் கொள்கை எனக்குத் தெரியாது. நான் புதியவன். நீங்களும் என்னை அறியீர்கள்.

இதுகாறும் நீங்கள் மன்னன் நெப்போலியன் பெயர் கூடப் பிடிக்காமல், பு-வோ-ன-பா-ர்து என்று கேலி செய்ததை நான் ஒப்பமாட்டேன். உங்கள் கொள்கையைப் பேச உங்களுக்கு எவ்வளவு உரிமையுண்டோ அவ்வளவு எனக்கும் என் கொள்கையைப் பேச உரிமையுண்டு. நெப்போலிய மன்னனைக் கொண்டாடாவிட்டால் நீங்கள் வேறு யாரைக் கொண்டாடப் போகிறீர்கள்? அவனைவிடப் பெரிய வீரன் உண்டா? எத்தனைப் போர்களை வென்றான்! நாட்டிற்கு எவ்வளவு நல்ல சட்டதிட்டங்களைச் செய்தான்! எவ்வளவு மகத்தான வீரன்! அறிவாளி: வசீகர புருஷன். கிழக்கும் மேற்கும் அவனை வணங்குகின்றன. பூர்போன் ஆட்சி அவனால் தான் அடங்கி ஒடுங்கியது! புரட்சியால் நாடு பட்ட துயரத்தை அவனன்றோ தீர்த்தான்! அவனாலன்றோ பிரெஞ்சு சுதந்திரக்கொடி சுதேசத்தில் பலமாக ஊன்றிக்கொண்டு, ஐரோப்பாவையும் வெல்லத் தொடங்கியது? அலெக்சாந்தர், ஸீஸர், அனிபால்,

மஹாசார்லன் போன்ற ஜய வீரனான நெப்போலிய மன்னனைவிட நமக்கு அரிய பொருள் எது?

'சுதந்திரம், விடுதலை! குடியரசிற்கு ஜே!' என்று நண்பர் எழுந்து போயினர். மாரியன் பேச்சு அவர்களுக்குப் பிடிக்கவில்லை. போகும் போதே தேசாவேசப் பாடலொன்று பாடினர்:—

" தனக்குவை மிக்க தருவேன்—பெற்ற
தாயை மறந்திடுவேன்றால்,
சினக்கன லேறியுடனே—பாபச்
செல்வத்தை யெற்றி யெறிந்தே,
எனக்கினி தாவதேந்தாயே!—செல்வம்
எங்களுக் கன்னையின் அன்பே
மனக்கினி தாவது தாயே—நீடு
வாழ்கஎந் தாயெனச் சொல்வோம்.

எந்தாய் வாழ்க!" என்று நண்பர் பாடிச் செல்லும் போது அஞ்சாலரன் மாரியனைத் தட்டிக்கொடுத்துக் கூர்ந்து நோக்கி, "தோழா, கேட்டாயா பாட்டை? தாய் யார்? அது தான் சுதந்திரக் குடியரசு!" என்று சென்றான்.

மாரியன் வெட்கிப்போனான். மனம் உட்கிப் போனான். இவர்களிடையே இருக்க வேண்டுமானால் பயங்கரப் புரட்சிக்காரனாகவே மாற வேண்டும். மேலும் இந்தப் புரட்சிக்காரரின் அட்டஹாஸங்கள் அவனுக்குப் பிடிக்க வில்லை. அன்றுமுதல் அவன் மூஸேன் காப்பிக்கடைக்குப் போவதில்லை; கூர்

பெரன் அறையிலேயே படுத்துக்கொண்டிருந்தான். ஓட்டல்காரன் பணம் கேட்டான். மாரியனிடம் இருப்பது இரண்டு ரூபாய்தான். அவன் கூர்பெரனிடம் தனது எளிய நிலைமையை எடுத்துச் சொன்னான். பூர்வோத்திரங்களைச் சொல்லவில்லை. "கடன் தருகிறேன்" என்றான் கூர்பெரன். கடன் வாங்க மறுத்தான் மாரியன்; தன்னிடமுள்ள தங்கக்கடியாரத்தையும் பேல் சட்டை, நிஜார் முதலியவற்றையும் கூர்பெரன் உதவியால் விற்றுப் பணமாக்கினான்; சாப்பாட்டுக் கடனைத் தீர்த்தான்.

---

59. ஏழை மாரியன்

பணக்கார மாரியன் பஞ்சையானான். ரோஷம் ஒரு புறம்! 'நமது வீரத்தங்கையை இகழ்ந்த பாட்டன் முகத்தில் விழிப்பதில்லை,' என்பது அவன் பிடிவாதம். தாத்தா சொன்னபடி பெரியம்மாள் ரூ. 240 அனுப்பினாள். மாரியன் அதை; வேண்டாமென்று மறுத்துவிட்டான்; மானமுள்ள வறுமையே பெரிதெனப் பூண்டான்; சட்டையையும் கடியாரத்தையும் விற்ற பணத்தைக்கொண்டு சிக்கனமாக வாழ்ந்தான். பாலும் வெண்ணெயும் உண்ட பிள்ளை ரொட்டியும் தண்ணீருமாக ஒரு வேளை உண்டு காலங்கழித்தான்; சில வேளை உணவுப் பொருள்களை வாங்கிச் சமைப்பான்; தன் அறையைத் தானே சுத்தம் செய்வான்;

தானே கடைக்குச் சென்று ரொட்டி வாங்கிவருவான்; இரண்டொரு காசு கிடைத்தால், வெண்ணெயும் வெஞ்சனமும் வாங்குவான்; தந்தை இறந்த துக்கத்திற்காக இன்னும் கறுப்புடை யணிந்தான்; அதுவும் கிழிந்து போயிற்று: கூர்பெரனிடம் ஒரு பழைய சட்டை வாங்கித் தைத்துப் போட்டுக் கொண்டான். தேய்ந்த ஜோடும், கிழிந்த கால் சராயும், ஒட்டுப் போட்ட சட்டையும், அழுக்குத் தொப்பியும் அணிந்து செல்லும் இந்த வாலிபனை நாகரிகம் பெருத்த பாரிஸ் தெருவார் பரிகாசம் செய்தனர்.

உலகில் படை கொண்டு போர் வெல்லுவோனை வீர னென்கிறோம். பொறுமை கொண்டு வறுமையைச் சகித்து மானத்தைக் காப்பவனே பெரிய வீரன். இந்த வறுமை வீரர் போர்வீரரைவிட எவ்வளவோ பெரியவர். எத்தனையோ அரிய கவிகள் வறுமை வீரராயினர். மாரியன் அத்தகைய வறுமை வீரனானன்.

இவ்வளவு வறுமையிலும், இடரிலும் அவன் படிப்பை விடவில்லை; சில நண்பரிடம் புத்தகங்களை வாங்கிப் படித்து, எப்படியோ சட்டப் பரீட்சை தேறி வக்கிலானான்; அத்துடன் ஆங்கிலமும் ஜர்மனும் கற்றுத் தேர்ந்தான், "தாத்தா, நான் இப்போது வக்கிலாயிருக்கிறேன், தங்கள் ஆசீர்வாதத்தால்.... **மரியன் போமர்ஸி பிரபு**" என்று ஒரு கடிதம் அனுப்பினான். பெரியம்மாள் சந்தோஷப்பட்டாள். பிடிவாதக் கிழவன், "இவன் பிரபு

வாயிருக்கிற வரையில் வக்கீலாயிருக்கவே முடியாது" என்று கடிதத்தைக் கிழித்தெறிந்தான்.

சாப்பாட்டுக் கடையிலிருக்கப் பணமில்லை. ஆதலால், மாரியன் சொற்ப வாடகையில் வீடு தேடி, முடிவில் நாம் முன்பு சொன்னபடி கோர்போ வீட்டில் ஒரு சிறிய அறையைப் பிடித்தான். வக்கீல் தொழிலில் எடுத்ததும் வரும்படியேது? பேரகராதி தயாரிக்கும் ஒருவரிடம் கூர்பெரன் சிபார்சால் அமர்ந்து, ஆங்கிலம், ஜர்மன் மொழிகளிலிருந்து, வேண்டிய விஷயங்களைப் பிரெஞ்சில் மொழிபெயர்த்துத் தந்தான். இடையிடையே ஏதாவது பெரிய வக்கீல்கள் வேலை தருவர். எல்லாம் சேர்ந்து மாதம் பத்துப் பதினைந்து ரூபாய்தான் கிடைக்கும். அதைக் கொண்டு தான் கோர்போ வீட்டில் சிக்கனமாக வாழ்ந்தான் மாரியன். காலையில் ஒரு ரொட்டியும் முட்டையும் சாப்பிட்டு, வெந்நீர் குடித்து வேலைக்குச் செல்லுவான். மதியம் மூன்றணாவில் கறியும் ரொட்டியும் கனியும் சாப்பிடுவான். இரவில் பட்டினிதான். மாதம் சுமார் ஐந்து ரூபாய்க்குள் சாப்பாட்டுக் கடனைத் தீர்த்துக்கொள்வான். வீட்டு வாடகை, அறை பெருக்க வைக்கக் கூலி, எல்லாம் மாதம் ஒரு ரூபாயாகும். சட்டை, குடித்துணிச் செலவு வருஷம் ரூ. 12 ஆகும். வருஷம் 8 ரூ. மிச்சம் பிடிப்பான்: நண்பருக்கு வேண்டுமானால் இந்த எட்டு ரூபாயிலிருந்தே தருவான். அவன் யாரிடமும் கடன் வாங்க மாட்டான்.

'கடன் படுவது அடிமைப்படுவதாகும்' என்பான் மாரியன்; பணமில்லாவிட்டால் பட்டினி கிடப்பானே யொழியப் பிறரைக் கேட்கமாட்டான்; ஆனால், ஒரு கடன் மட்டும் தனக்கு இருப்பதாக உணர்ந்தான். அதுவே போர்க்களத்தில் (குண்டுகளுக் கிடையே சென்று) தனது தந்தையின் உயிரைக்காத்த தென்னுடியனுக்கு உதவி செய்தல். தென்னுடியனைத்தேடித் தேடி யலுத்தான்; மோம்பெர்மேலில் விசாரித்தான். அங்கு அவனைப்பற்றி ஏகப்புகார் :-" அந்தக் களவாணிப் பயல் எங்களிடம் ஏகப்பணம் கடன் வாங்கிச் சாப்பிட்டுவிட்டு டிமிக்கி யடித்து விட்டானையா! கடன்காரர் வாயிலே மண்ணைப் போட்டு எங்கேயோ ஒளிந்திருக்கிறான். கண்டு பிடிக்க முடியவில்லை" என்று எல்லாரும் வயிற்றிலடித்துக் கொண்டனர். தென்னுடியன் கள்ளுக்கடை அடைத்திருந்தது. சுற்றிலுமுள்ள கிராமங்களில் தேடியும் ஆள் குறிப்புத் தெரியவில்லை. எப்படியாவது தந்தை சொன்னபடி தென்னுடியனுக்கு உதவி செய்யும் நாளை மாரியன் எதிர்பார்த்திருந்தான். இப்போது மாரியனுக்கு இருபது வயது. அவன் பெரிய ஆளாகிவிட்டான்.

வீட்டை விட்டுச் சென்று மூன்றாண்டுகள் ஆயின. பேரன் திரும்பிவரக் காணோம். "எங்கே போவான் கழுதை; அங்கு மிங்கும் நாலு நாள் திரிந்து வந்து சேருவான்" என்று சொல்லிக் கொண்டிருந்தான் ஜில் நார்மன். நாட்கள், வாரங்

கள், மாதங்கள், ஆண்டுகள் ஆயின. அருமைப் பேரன் திரும்பிவரக் காணோம். வெளியிலே ராங்கியாகப் பேசினாலும் தாத்தா மனம் இளகியது. உள்ளே பேரன் மீது பிரியம் அதிகம். "ஐயோ! இப்படி என்னை விட்டுப் போனானே!" என்று வருந்தினான் கிழவன். "நன்றாக வருந்தட்டும்" என்று மாரியன் இன்னும் விறைப்பாகவே யிருந்தான். எளிய வாழ்வு அவனுக்குப் பழகிப் போயிற்று; "ஒருவர் தாட்சண்யமில்லாமல் உழைத்துச் சிக்கனமாக வாழ்கிறோம்" என்று பெருமை கொண்டான்; தனிமை விரும்பினான்; தன் வேலை பார்க்கும் புஸ்தகசாலையில் ஏராளமான நூல்களை வாங்கிப் படித்து, அறிவை மேன்மேலும் வளர்த்தான். அவன் இரண்டு பேர் நட்பையே விரும்பினான். தகப்பனாரின் வீரப் புகழைத் தனக்குரைத்த கோயில் மணி யடிப்பவனான மாபோவையே அவன் முதன்மையாக விரும்பினான். இரண்டாவது தனக்கு இடந்தந்து ஆதரித்த கூர்பேரனை விரும்பினான்.

---

60. மாபோ

மாபோ வயது முதிர்ந்தவன்; நல்லவன்; தேசாபிமானி; நூலாராய்ச்சியிற் சிறந்தவன்; புதிய புதிய நூல்களை வாங்கிப் படிப்பதே அவனுக்கு மகிழ்வு. மாபோ செடி நூற் புலவன்; ஒரு

தோட்டம் போட்டு, அதில் பலவகைக் கனிகளை விளை வித்தான். ஒரு அழகான பெண்ணைவிடத் தனது வெங்காயப் பாத்தியை அவன் அதிகமாக நேசித் தான்; ஒரு அரிய நண்பனைவிடக் கனி மரங்களை விரும்பினான்; ஏதாயினும் ஒரு உத்தியோகம் வேண்டு மென்று தான் கோயில் மணியடிக்கும் வேலை செய் தான். அவனுக்கு அறுபது வயதானது. "ஏங் காணும், நீர் எப்போதாவது கலியாணம் பண்ணிக் கொண்டதுண்டா?" என்று கேட்டால், "அதை மறந்தே போனேன்" என்பான்; அவன் ஆயுள் முழு வதும் கலியாண நினைப்பில்லாமலே தனியாக வாழ்ந் தான் அவனுக்குத் துணையாக வீட்டைக் கவனிக்க ஒரு தொண்டு கிழவி யிருந்தாள். அவளும் கன்னிக் கிழவியே. மாதம் சுமார் ரூ. 20 வரும்படி வரும். அவன் அதைக்கொண்டு சிக்கனமாக வாழ்ந்து வந் தான்; எப்போதும் புத்தகமுங் கையுமாகவே யிருப் பான்; பணங் கிடைத்தால் புத்தகங்களை வாங்கு வான். தமயனார் (வெர்னன் குருக்கள்) இறந்தபின், மாபோவின் நிலைமை மிகவும் கடினமாயிற்று. தோட்டம், வீடெல்லாம் கடனுக்குப் போயின. வயதால் உடல் தளர்ந்து போனது. மாபோ மணிய டிக்கிற வேலையும் விட்டுவிட்டான்; இருந்த சாமான் களை விற்று, ஒரு சிறிய நிலம் வாங்கி, அதில் தோட் டம் வைத்துப் பிழைத்தான். அங்கே மாரியன் மாதம் இரண்டொரு தடவை சென்று மாபோவுடன் பேசுவான். மாபோவும் அவனை மெத்தவும் விரும்

பினான். டாபோ கை நொடித்துப் போனான். தோட்ட வரும்படி கால் கஞ்சிக்குக் கூடக் கட்டவில்லை; பல நாட்கள் பட்டினி கிடக்கவும் நேர்ந்தது: எனினும், பிறரிடம் அவன் கை நீட்டுவதில்லை: உடலை வெறுத்தான்; சாவையே எதிர்பார்த்தான். ஆனால், வீரமாக, நாட்டுப் பணியில், சுதந்திரமாக உயிர் விடவே துணிந்தான். அதற்கொரு சந்தர்ப்பம் கிடைத்தது. அதைப் பிறகு சொல்லுவோம். இவ்வாறு தன்னைச் சுற்றிலும் வருந்தும் ஏழைகளைக் கண்டு ஏழை மாரியன் மனம் இளகியது. இப்போது தனக்கு அரை, கால் மிஞ்சினால் அவன் தன்னைப்போன்று வருந்தும் ஏழைகளுக்கே அளித்து வந்தான். இதைக்கண்ட மற்றொரு ஏழை அவனை அடிக்கடி நச்சிவந்தான்.

---

61. ஜாந்தரதன்

அந்த ஏழைதான் ஜாந்தரதன். முன்னமே கோர்போ வீட்டில் அவன் மனைவியுடனும் இரண்டு பெண் மக்களுடனும் குடியிருப்பதாகச் சொன்னோம். ஒரு நாள் மாரியன் அறையைப் பெருக்கும் கோர்போ வீட்டுக் கிழவி, "இதென்னய்யா இழவு, இப்படியா மனிதன்!" என்று வந்தாள்.

மாரியன் :—செய்தி யென்ன?

கிழவி :—அதோ அந்த அறையிலே குடியிருக்கிருனே பெண்டு பிள்ளைகளுடன், அந்தக் கடன்காரப் பாவி என் வயிற்றிலே மண்ணைப்போடப்பார்க்கிருன்.

மாரியன் :—யாரது எனக்குத் தெரியவில்லையே.

கிழவி :—பெயர் ஏதோ ஜாந்துரதாம் ஜிந்துரதாம். நானும் ஆறு மாதம் கேட்டுக் கேட்டு அலுத்துப் போனேன். பெண்சாதியைக் கேட்டால் 'புருஷன் வரட்டும்' என்கிருள். புருஷன், இரவில் கேட்டால் பகலில் தருகிறேன் என்கிருன். பகலிலே ஆள் தட்டுப்படுவதில்லை. இந்தத் தரித்திரப் பிணங்களை இன்று வீட்டைவிட்டு விரட்டப் போகிறேன்.

மாரியன் :—அப்படிச் செய்யாதே அம்மா. ஏழை அனுதிகள் எங்கே போவார்கள்? நம்மைப் போலேதானே அவர்களும். அவர்கள் எவ்வளவு வாடகை தரவேண்டும்?

கிழவி :—இருபது பிரான்க் (ரூ. 2½) தர வேண்டும்.

மாரியன் :—அவ்வளவு தானே! இந்தா வாடகைக்கு 20 பிரான்க். ஏழைகளை ஒன்றும் சொல்லாதே அவர்கள் கஷ்டப்படுகிருர்கள். இந்தா மேற்கொண்டு 5 பிரான்க்; என்னிடமுள்ளது இவ்வளவுதான். அதை அந்த ஏழைகளிடம் கொடு. நான் கொடுத்ததாக மட்டும் மூச்சுவிடாதே.

கிழவி ஆச்சரியத்துடன் பணத்தை வாங்கிக் கொண்டாள். நாம் ஜாந்தரதன் பாதகங்களைக் கண்டு திடுக்கிடுமுன் ஒரு காதல் காட்சி நம் முன் நிற்கிறது.

61. காதலர் கண்கள்

மாரியன் கட்டழகன்; நிதான வுயரத்தினன்; இருண்டு சுருண்ட தலைமயிரினன்; விசால நெற்றியன்; கூர்ந்த பார்வையன்; பவழவாயன்; வசிகரமான புன்னகையன்; வறுமை யணிந்தாலும் முகத்தில் இலட்சுமி களை விளங்கியது. அவன் வயது நண்பர்கள் நடன சாலைக்குச் சென்றனர்; இளம் பெண்களுடன் காதலுறவாடிக் களித்தனர். மாரியன் புத்தகமுங் கையுமா யிருந்தான்; தனிமை விரும்பினான்; பெண்களைக் கண்டாலும், தலை குனிந்து செல்வான். இதற்காகக் கூர்பெரன், கிராங்கேர் முதலிய நண்பர் அவனைப் பரிகாசஞ் செய்வர். "அது வேறுமப்பா! மனத்திலேயே ஒளிய வைத்து ஏங்கிச் சாகாதே. வா, குசாலாகப் போவோம்! ஆணுக்கழகு பெண்ணை யணைதல்" என்றெல்லாம் நண்பர் தமாஷ் பண்ணுவர். மாரியன் இப்பேச்சைக் கவனிக்காது தன் காரியத்தை நோக்கிச் செல்வான். தன்னை யாராவது பெண்கள் பார்த்தால், தான் பாராது செல்வான். ஆனால், வாலிபமும் மன்மதபாணமும் சும்மா விருக்குமா? கேளுங்கள் கதையை:—

லுக்ஸம்பூர் பூஞ்சோலை (Lusumburg) ஜன நடமாட்டம் இல்லாத தனி யிடம். அங்கே மாரியன் அடிக்கடி உலாவப் போவான்; அப்போது ஒரு கிழவனாரும் அவருடன் ஒரு பெண்ணும் ஆங்கொரு

மூலையில் அமர்ந்திருக்கக் காண்பான். கிழவனுக்கு அறுபது வயதிருக்கலாம். அவன் முகத்தில் விசனக் குறிப்பிருந்தது. அவன் ராணுவ சேவகத்தினின்று உதவிச்சம்பளம் பெற்று விலகினவன் போலத் தோன்றினன். நீலமான காற் சட்டை, மேற் சட்டை, வெண்மையான உட் சட்டை, கறுத்த கழுத்துப் பட்டை, பெரிய தொப்பி யணிந்திருந்தான். அவனருகே வீட்டுக் கிளி போலப் பேசும் பெண்ணிற்குப் பதினன்கு வயதிருக்கலாம். அவள் ஒரு கன்னி மடத்து மாணவி போலத் தோன்றினள். கறுப்புடை யணிந்திருந்தாள். மாரியன் ஒவ்வொரு நாளும் அங்கு வருவான்; ஒரு புத்தகம் வைத்துக் கொண்டே உலாவிச் செல்வான்; இவர்களைப் பார்ப்பான். எனினும் அந்தப் பெண் அவன் மனத்தைக் கவரவில்லை. பெண்ணும் அவ்வளவு அழகா யில்லை. இவர்கள் உட்காரும் மேடைக் கருகேதான் மாரியன் உலாவிச் செல்வான். எனினும், அவன் இப் பெண்ணை விரும்பிப் பார்ப்பதில்லை. அவனுடைய நண்பர் மட்டும் விகற்பகமாக நினைத்தனர். கூர்பெரன் மறைந்து வந்து, திடீரென்று, "மாரியன், குட்டி எப்படி?" என்று கண் சிமிட்டுவான். கிழவர் தலை கொக்குப் போல நரைத்திருந்ததால் அவருக்கு லெப்ளான் (Le Blanc—நரையான்) என்று பெயரிட்டனர் வாலிபர். மாரியனும் லெப்ளான் என்றே அவனை அழைத்தான். வழக்கம்போலவே நண்பர் அவனைக் கேலி செய்து வந்தனர். மாரியன்

உலாவப் போவதை நிறுத்தி விட்டான். ஆறு மாதங்கள் சென்றன.

ஃ ஃ ஃ

கோடைக் காலம்; காலைக்காட்சி நெஞ்சைக் கவர்ந்தது; இயற்கை பூ நகை புரிந்தது. புட்கள் சிறகடித்துத் துள்ளிப் பறந்து பரவசமாகப் பாடின. இன்பமே நிலமாகப் பரந்து விரிந்ததுபோலத் தோன்றியது ஆகாயம். மந்த மாருதம், "வா, வா" என்று கூவி யழைத்தது. மாரியன் உள்ளத்தில் அன்றொரு புதிய மகிழ்ச்சி பெய்ந்தது. அவன் நேராக துக்ளம்பூர் சோலைக்குப் புறப்பட்டான். அங்கு வழக்கம்போல வெள்ளான் உட்கார்ந்திருந்தான். ஆனால் அவனருகே இலங்கிய குமரி யார்? அவளிடம் அவன் மனம் பாய்ந்து சென்றது. அச்சோலையும் காலையும் அவளாலேதான் அழகு பெற்றது என்று அவன் நினைத்தான்: 'இவள் வனதேவதையோ!' என்று மயங்கினன். புயற்கூட்டம் போன்ற கூந்தலையும், பிறை போன்ற நெற்றியையும், பவளக்கொடியில் முத்துப் பதித்தாற் போன்ற புன்னகையையும், ரோஜாக் கன்னத்தையும், கயல் விழியையும், கிளி மொழியையும், பெண்மையைப் பெருமைப்படுத்த முன்னிற்கும் மார்பையும், மயில் போன்ற சாயலையும் கண்டான் மாரியன்: கண் கொட்டவில்லை; அவளழகைத் தொழுதான்: வாலிபத்திற்குரிய ஆசை யுணர்ச்சி அவன் மனத்திற் புயல்போ லெழுந்தது. 'யாரிக் கன்னிகை?' என்று ஆராய்ந்தான் மாரியன்.

சென்ற ஆண்டு தான் பார்த்தவளே இவள்; இப்போது பருவமடைந்திருக்கிறாள்; முன்னே கன்னியர் மட மாணவிபோல உடையணிந்திருந்தாள்; இப்போதோ கண்ணைக் கவரும் அழகிய ஆடையணிந்திருக்கிறாள்.

ஆ! பெண்களின் பருவ வளர்ச்சி எவ்வளவு மாறுதலை உண்டு பண்ணுகிறது! சென்ற மாதம் பாவாடை கட்டிச் சொப்பு வைத்து விளையாடி எல்லாருடனும் சகஜமாகப் பேசிய வஞ்சமற்ற சிறுமி, இந்த மாதம் பார்த்தால், முற்றும் புதுமை பெற்று விளங்குகிறாள். அவள் அழகும் வனப்பும் புதிய மலர்ச்சி பெறுகின்றன. அவளது புன்னகையில் ஒரு நாணம் பூக்கிறது. நடை யுடை பாவனை, பார்வை, பேச்சு, நினைப்பு, கனவுகளெல்லாம் முற்றிலும் புதுமை பெறுகின்றன. வயதின் மாயம் என்னே! நேற்றொரு சிறு செடியாயிருந்தது, இன்று மலர் குலுங்கிப் புது மணம் வீசுகிறது. வண்டுகள் அதைத் தேடி வருகின்றன. நேற்று வறியன், இன்று திடீரெனப் பெரிய செல்வனாகி, மாட மாளிகை கட்டி விளங்குவது போன்றது பெண்ணின் பருவ வளர்ச்சி.

தேன்மலர் கண்ட வண்டு போல மாரியன் மனம் அவளழகைச் சுற்றியது. அவன் அங்குமிங்கும் உலாவுவது போலப் பாவித்துப் பிறகு அவளருகே நடந்து சென்றான். அப்போது பளிச்சென்று ஒரு மின்னல் அவன் கண்களையுருவி நெஞ்சிற் பாய்ந்தது.

அதுவே அக் கன்னியின் கண் மின்னல். அது தானே மன்மதன் பூங்கணை ! ஆம். மாரியனுக்குப் பிடித்தது பைத்தியம். ஒரு கண் வெட்டில் ஆண்களின் கருத்தைக் கவர்ந்து வெற்றி கொள்ளும் பெண்ணின் சக்தி யென்னே ! இப்படியே தினந்தோறும் இருவர் கண்களும் கலந்து வந்தன.

ஒரு அழகிய வசந்தக்காலை; குயில்கள் கூவும் அச்சோலையில் மாரியன் உலாவினான். லெப்ளாவும் கன்னிகையும் வழக்கம்போல மேடையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர். கன்னிகை பேச்சுப் பராக்கில் மாரியன் பக்கமே நோக்கினாள். மாரியன் காந்தமிழுக்கும் ஊசிபோல அவளருகே மெல்ல நடந்தான். பளிச்சென்று விழிவலை வீசினாள் மின்கொடி. "நான் உன்னைக் காதலிக்கிறேன்" என்று அவ்விழிகள் பேசின. மாரியன் ஒரு மரத்தின் மறைவிலிருந்து அவளையே பார்த்துச் சொக்கிப் போனான்: மறுநாள் தனது புதிய உடைகளை அணிந்து, ரோமைப் பிடிக்கச் செல்லும் ஹனிபாலன் போல அவள் முன் நடந்து, விழிப்பிரசாதம் பெற்று, அதே மரத்தின் மறைவிலிருந்து படிப்பவன் போலப் புத்தகத்தை வைத்து, அவள் அழகையே பார்த்து நின்றான். கன்னிகையும் அவனிருக்கும் திசையில் அடிக்கடி விழியைத் திருப்பினாள். இவ்வாறு மாரியன் தினந்தோறும் புதிய உடுப்பணிந்து வந்து, மரத்தின் மறைவிலிருந்து புத்தகம் படிப்பது போலவே அவளைப் பார்த்துப் பார்த்துக் காதலால்

மனமுருகினன். லெப்ளான் இவ்வாலிபனை ஒரு நாள் கவனித்தான்; சந்தேகந் தோன்றியது; ஆனை நன்முகப் பார்க்கத் தன் பெண்ணையும் கூட்டிக் கொண்டு அவன் மறைந்த மரத்தருகே வந்தான். அருகே வரவும், கன்னிகை அவனைக் கண்வேலால் எய்தாள். ஆனைப் பார்த்துக் கொண்டே லெப்ளான் வீட்டிற்குச் சென்முன்.

மாரியன் மோக வலையில் முற்றும் கட்டுண்டான்; அந்தப் பெண்ணிடம் உயிரை வைத்தான்; உள்ளத்தைப் பறிகொடுத்தான்; அவள் பெயர், இடம் அறிய விரும்பினன்; ஒரு நாள் அவர்கள் சென்ற பின், அவள் அமரும் மேடையில் அமர்ந்தான். ஆங்கே ஒரு கைக்குட்டை யிருந்தது. அவன் அதைக் கண்ணில் ஒற்றிக்கொண்டான். அதில் U. F. என்று எழுதியிருந்தது. தனது காதலிப் பெயர் உருசூலா என அவன் ஊகித்தான்; மறு நாள் காதலி செல்லு மட்டும் காத்திருந்து பின்னே சென்று அவள் புகுந்த வீட்டை யறிந்தான். அது ஒரு மூன்று மாடியுள்ள தனி வீடு. வாசலில் ஒரு சேவகன் இருந்தான். அவனை, "இந்த வீட்டில் யார் இருப்பது? இப்போது சென்றவர் பெயரென்ன? வேலை யென்ன?" என்று மாரியன் விசாரித்தான்.

"அவர் ஒரு புண்ணிய புருடர்; ஏழைக்கிரங்கும் தரும சிந்தையாளர்; மூன்ருவது மாடியில் வசிக்கிருர்" என்ருன் சேவகன்.

லெப்ளானுக்கு இவ்வாலிபன்மேல் சந்தேகம்

பிறந்தது; "சரி, இவன் பொலீஸ் உளவாளி" என்றே அவன் நினைத்தான். மறுநாள் முதல் வெளியே உலாவப் போவதில்லை. கன்னி வரக்காணாத மாரியன் மனம் பதைபதைத்தது; வீடு தேடிச் சென்றான். மூன்றும் மாடியில் விளக்கெரிந்தது. மாரியன் வாசலினின்று பார்த்தான். விளக்கணைந்தது. மறுநாளும் அவ்வாறே; மூன்று நாள் மச்சுச் சாளரங்கள் மூடியிருந்தன. மாரியன் சேவகனை விசாரித்தான்.

"நீங்கள் ஒற்றரா?" என்று கேட்டான் சேவகன். மறுநாளும் வந்து, "மூன்றும் மாடியிலிருக்கும் கனவான், இருக்கிறாரா?" என்று மாரியன் ஆவலாகக் கேட்டான்.

சேகவன்:—இல்லை; அவர் வேறு குடிபோய் விட்டார்.

மாரியன் :—என்று?

சேகவன் :—நேற்று.

மாரியன் :—எங்கே?

சேகவன் :—தகவலில்லை.

"ஐயோ! ஏன் அவர்களைத் தொடர்ந்து வந்தோம்? அவளைக் காணாது மனம் துடிக்கிறதே!" என்று பரிதபித்தான் மாரியன்; எங்கெங்கோ தேடியலைந்தான். ஆளைக் காணவில்லை. அக்கன்னி மாதிரியிருக்கும் பெண்களை உற்று உற்றுப் பார்த்து ஏமாந்தான்; மனமுடைந்தான்; உடலிளைத்தான்; கூர்பெரன் முதலிய நண்பர் இவனது காதல் நோயை அறிந்தனர்; "அம்பு பாய்ந்து அவஸ்தைப்

படுகிறாய்! நண்பனே, வா எங்களுடன். மனத்தில் புயலை எத்தனை நாள் அடக்கிவைப்பாய்? வா இன்று நடனசாலைக்கு (Ball)'' என்று அழைத்துச் சென்றனர். வாலிபக்காளைகள் அழகான வேசையருடன் அங்கே நடனமாடினர். மாரியன் தன் மனத்தில் வைத்து வணங்கும் அழகியின்முன் இந்த அழகிளம் வேசைகளெல்லாம் எட்டேகால் லட்சணங்களாகத் தோன்றினர். மாரியன் சரேலென்று நடனசாலையை விட்டுச் சென்றான். அவன் மோக நோய் பொறுக்க முடியாது தவித்தான். ''இனி அந்தக் கன்னியின் முகத்தைக் காண்பேனோ!'' என்று ஏங்கி யிருந்தான். அப்போது ஒரு சம்பவம் நடந்தது.

---

62. ஜாந்தரதன் கடிதங்கள்

முன்னே பாரிஸ் காலிகளைப்பற்றியும் அவர்கள் பேசும் ஆர்கோவைப் பற்றியும் சொன்னோம். மாரியன் ஒரு மாலை தன் அறை விட்டுக் கிளம்பித் தெருவிற் போய்க் கொண்டிருக்கையில், இரண்டு இளம் பெண்கள், பஞ்சையாகக் கந்தலணிந்து, அவனை இடித்துக்கொண்டு ஓடினர். ''அடியே, நாய், நாய் கடிக்க வருகிறது'' என்றாள் ஒருத்தி. ''ஒஷ், ஒஷ்!'' என்று அவளுடன் ஓடிப்

போனாள் மற்றொருத்தி. 'பொலீஸ்காரன் வருகிறான்' என்று ஆர்கோவில் ஒருத்தி சொன்னாள். 'இதோ, ஓடி ஒளிவோம்' என்று மற்றவள் பின் சென்று மறைந்தாள். அப்போது மாரியனுக்கு ஒரு காயித தப்பை கிடைத்தது. இது அந்தப் பெண்களுடைய தென்றெண்ணி, அவன் அவர்களைத் தேடினான்; காணோம்; அதைத் தன் சட்டைப்பைக்குள் போட்டுக்கொண்டு வெளியே சென்று வந்ததும், தனது அறையில் தனித்திருந்து பிரித்துப் பார்த்தான். அப்பையில் நான்கு கடிதங்கள் இருந்தன. நான்கு பேருக்கு அக் கடிதங்கள் எழுதப் பெற்றிருந்தன. எழுதினவன் பெயர் வெவ்வேறா யிருந்தது. அவன் விலாசம் இல்லை. எல்லாம் ஒரே கை யெழுத்து; ஒரே புகையிலை நாற்றம்; இலக்கணப் பிழைகள் நிரம்பியிருந்த அக்கடிதங்களை மாரியன் படித்தான். எல்லாம் பெரிய பணக்காரருக்கு விலாசமிட்ட கடிதங்கள்.

I

ஸ்ரீமதி குருஷெரி சீமாட்டிக்கு.

தெரு........எண்........மாளிகை....

மாண்புள்ள சீமாட்டியே,

நல்லொழுக்கம், இரக்கம், ஈகை ஆகிய இம்மூன்றின் அவதாரமே தாங்கள் என்று தெரிந்தே இந்த ஏழை ஆயிரம் வணக்கங்களுடன் ஒரு விண்ணப்பம் செய்துகொள்ளுகிறான். இவன் சமீபத்தில் நடந்த

ஸ்பெயின் யுத்தத்தில் அரசனுக்காக இரத்தம் சிந்திய ஒரு வீரன். இவனது செல்வங்களையெல்லாம் பகைவர் பரித்துக் கொண்டனர். உடம்பு முழுதும் காயங்கல். 20 குண்டுகளைத் தாங்கிப் போராடித் தலர்ந்த இந்த ஏழைப் போர் வீரன் நிர்கதியாகி இந்தப் பாரிஸ் நகரத்தில் பெண்டு பிள்ளைகளுடன் பசியால் வாடித் தவிக்கிறான். தங்கள் இரக்கத்தையும் தருமத்தையும் எதிர்பார்க்கிறான். தயவுசெய்ய வேண்டும். அம்மணீ, இக் கடிதம் கொண்டு வரும் என் மகளிடம் தங்கல் செல்வக்கரத்தால் தருமம் அனுப்பி அருல் புரிய வேண்டும்.

தங்கள் நன்றியுல்ல ஊலியன் ஸ்பெயின் அரசாங்க ராணுவப் படையில் ஒரு அதிகாரியாயிருந்து இப்போது பிரான்ஸில் தங்கியிருக்கும்

தோன் அல்வாரே
(Don Alvarey)

II

ஸ்ரீமதி மோந்து வெர்னே சீமாட்டிக்கு.

........தெரு........எண்........

பெருமை தங்கிய சீமாட்டியே,

நான் ஆறு குலந்தைகளை வைத்துத் தவிக்கும் பரம ஏழை. நான் கடைசிப் பிள்ளை பெற்றது முதல் படுக்கையா யிருக்கிறேன். என் கனவன் என்னை விட்டு ஓடிப்போனான். தங்கள் கருணையால் நான் ஜீவிக்க வேண்டும். எனது பரிதாபத்தை அறிந்து

இச்சீட்டுக் கொண்டுவரும் என் மகளிடம் தாராலமான தருமம் அனுப்பி என் உயிரைக் காக்கவேணும் சீமாட்டியே.

தங்கல் விசுவாசமுல்ல
ஏஷைப் பெண்
பாலிஜாரை

III

கனம் பாபூர்ழன் அவர்களுக்கு, நியமன அதிகாரி.

........ஸான்தேனிஸ் தெரு........

காருண்ய பிரபுவே,

நான் ஒரு புளவன்; நாடகக்களை தேர்ந்தவன்; சரித்திர நாடகங்களை ஜோடித்துல்லேன். நாலை ஒரு அலகான ஹாஷிய நாடகம் நடத்த ஏற்பாடு செய்திருக்கிறேன். பொருமைக்காரர்கல் எனக்கு எதிர் செய்கிறார்கல். பிரபுவே, இந்த அருங்களை யாழிக்குத் தங்கல் ஆதரவு வேண்டும். தங்கல் மேல் ஒரு அழகான கவி புணைந்து நாடகத்தின் முன் பாட விரும்புகிறேன்: தங்கல் கையால் ரூ. 50 அனுப்பினால் மிகவும் நன்றியுடைவனாயிருப்பேன். வனக்கம்.

ஏஷைப் புளவன்
ஜாம்ப்லோ.

IV

ஜாக் முனிவர் கோயிலில் தருமம் வலங்கும் புண்ணிய கனவானுக்கு:—தர்மவானே, நான் ஒரு

நாடகன் ; பிலேப்பில்லே ; எனது மகனுடன் வந்தால், நாங்கள் படும் கஸ்டத்தைக் கண்டு இரக்கமுல்ல தாங்கல் கன்னீர் வடிப்பீர்கள். உன்னச் சோரில்லே ; உடுத்தத் துணியில்லே. பென்சாதி படுக்கையோடே; குளிர்காளம் கஸ்டப்படுகிறோம். எங்கலுக்கிரங்கி வந்து காப்பாற்ற வேணும். தர்மவானே.

ஃபாமாங்தோ

நாடகப் புளவன்

இக்கடிதங்கள் ஒருவனாலேயே எழுதப்பெற்றன. அவன், இப்படிக் கடிதங்கள் எழுதி, மகள் மூலம் அனுப்பி, வந்ததைக் கொண்டு பிழைக்கும் ஆள் என்று அறிந்தான் மாரியன்; அவற்றை மடித்து ஒரு மூலையில் போட்டுத் தன் காரியத்தைப் பார்த்தான்; இரவெல்லாம் கன்னியின் கனவிற் கழித்தான்; காலையில் எழுந்தான் ; முகங் கழுவிக்கொண்டு ரொட்டி சாப்பிட்டு எழுதிக்கொண்டிருந்தான். அப்போது கதவு சத்தம் கேட்டது. "வாருங்கள்" என்றான் மாரியன். ஒரு பெண் உள்ளே வந்தாள். அவன் தெருவில் பார்த்த பெண்ணே அவள். "என்ன வேண்டும்?" என்றான் மாரியன். "ஐயா, மாரியன், தங்களுக்குக் கடிதம்" என்று அவள் தந்தாள். 'என் பெயரை இவள் எப்படி யறிந்தாள்!' என்று வியந்து கடிதத்தைப் படித்தான் மாரியன்.

கடிதம் V

என் பக்கத்தில் குடியிருக்கும் அன்பு மிக்க வாளிபரே, தாங்கல் வீட்டு வாடகை தந்துதவிய தற்காக நன்றி. எனது ஆசிர்வாதத்தால் தங்கலுக்கு எல்லாம் நல்லதாகுக! எனது மூத்த பெண் எங்கல் கஸ்டங்களைப்பற்றி உங்கலுக்குச் சொல்லுவால். நான்கு பேர் இரண்டு நாலாகப் பட்டினி கிடக்கிரோம். என் பெண்சாதிக்கு நோய். தங்கல் தரு மத்தை எதிர்ப்பார்க்கும்.

ஜாந்தரதன்.

குட்டு வெளியானது. முன் நான்கு கடிதங் களும் ஜாந்தரதனே வெவ்வேறு பெயர்களால் எழுதி யுள்ளான். அதே எழுத்து; அதே பிழைகள்; அதே புகையிலை நாற்றம். இப்படிக் கடிதங்கள் அனுப்பியே தனது பக்கத்தறையிற் குடியிருக்கும் ஜாந்தரதன் பிழைக்கிறான் என்று அறிந்தான் மாரியன். கடிதங் கொண்டு வந்தவள் வயது வந்த பெண். எனினும், பெண்ணிற்குரிய நாணம் மருந்துக்குக்கூட அவளிடம் இல்லை. தொடை தெரியும்படி கிழிந்த பாவாடையை அவள் அணிந்திருந்தாள்; அசட்டுச் சிரிப்புடன் மாரி யனைப் பார்த்தாள்; அங்குள்ள சாமான்களை யெல் லாம் புரட்டிப்பார்த்துச் சோதித்தாள்; கண்ணாடி யில் தனது வடிவழகைப் பார்த்துச் சிரித்தாள்; ஒரு புத்தகத்தைப் புரட்டினாள்; "எனக்குப் படிக்கத் தெரியுமே" என்று படித்தாள்; பிறகு, "எனக்கு

எழுதத் தெரியுமே'' என்றாள்; 'போலீஸ்காரர் வந்திருக்கிறார்கள்' என்று எழுதிக் காட்டினாள்; "எனக்குப் பாடத் தெரியுமே'' என்று பாடினாள்:

பசி பொறுக்கவில்லை!—ஒரு
பருக்கை வீட்டிலில்லை!!....

பிறகு குப்பென்று சிரித்தாள்; "நான் நாடகம் பார்க்கப் போவேன். என் தம்பி என்னைக் கூட்டிச் செல்வான் (தம்பி குரோஷன்). அவனுக்கு நாடகக்காரர் சிநேகம்'' என்றாள்; பிறகு மாரியன் முகத்தைப் பார்த்து நகைத்தாள்.

"ஹி ஹி, மாரியன், தாங்கள் அழகாயிருக்கிறீர்கள்'' என்று தோளில் கையைப் போட்டாள் அப்பெண். "உங்களை எனக்குத் தெரியும். தினம் உங்களை நான் பார்க்கிறேன்; என்னைத்தான் நீங்கள் கவனிப்பதில்லை. நீங்கள் மோபோ வீட்டிற்குப் போகும்போது நான் பார்த்திருக்கிறேன்'' என்றாள் அவ்வெட்கங் கெட்ட மாது.

இன்னும் இடங் கொடுத்தால், அந்த நாண மற்ற பெண் ஆளைக் கட்டித் தழுவி முத்தமிட்டு விடுவாள். மாரியன் சட்டென்று விலகினான்; "இதோ, இந்தக் கடிதங்கள் உன்னுடையவை யென்று நினைக்கிறேன்'' என்று தெருவில் அகப்பட்ட நான்கு கடிதங்களையும் தந்தான்.

"ஆ! இதைத்தான் நேற்றெல்லாம் தேடினோம்! தாங்கள் தெருவில் கண்டெடுத்தீர்களாக்கும்.

நல்லது. 'இக்கடித விலாசங்களைப் பார்த்தும் ஏதுந் தரவில்லை' என்று பொய் சொல்லி அப்பாவிடம் உதை வாங்காது தப்பினேம். இந்த நாலாவது கடிதத்தையாவது இதோ கொண்டு போகிறேன். அந்தக் கிழவர் நல்லவர்; காலை யுணவிற்கு ஏதாயினும் தருவார். நாங்கள் எத்தனை நாள் பட்டினி கிடந்திருக்கிறோம்; குளிரில் நடுங்கி யிருக்கிறோம்—தெரியுமா....?'' என்று பரிதாபங்களைச் சொன்னாள் பஞ்சையான அம்மாது. மாரியன் அன்று சாப்பாட்டிற்கு நாலணா வைத்துக்கொண்டு, மீதியிருந்த பத்தணாவை அந்தப் பெண்ணிடந் தந்தான். அவ்வளவுதான் அவனிடம் இருந்தது. "தாங்கள் நல்ல மாரியன், வந்தனம். இனி அந்தக் கிழவனைப் பார்க்கிறேன்'' என்று போகும்போதே கீழே ஒரு உலர்ந்த ரொட்டி கிடைத்தது. அதை அவள் மென்று தின்றுகொண்டே,

"பசிபொறுக்க வில்லை—ஒரு
பருக்கை வீட்டிலில்லை !''

என்று பாடிச் சென்றாள். ஆ! வறுமையின் கொடுமை யென்னே!

63. ஜாந்தரதன் பாசாங்கு

மாரியன் அறைச் சுவரில் ஒரு சிறு இடுக்கு இருந்தது. மேஜைமேல் ஏறி அந்த இடுக்கு வழியாக ஜாந்தரதன் அறையை நன்றாகப் பார்க்கலாம். மாரியன் அவ்வாறே பார்த்தான்; 'ஐயோ! என்ன பரிதாபம்! என்ன அசுத்தப் பன்றி வாழ்வு! இப்படியும் மனித ஜன்மம் இருக்குமா!' என்று வியந்தான். ஈரத்தரை, உப்பரிந்து, உதிர்ந்து, அழுக்கேறிக் கருங்குட்டம் போன்ற சுவர்கள்! பூஞ்ஜக்காளம் பூத்த மூலைகள்! ஒரே ஜன்னல்; வெளிச்சம் கிடையாது; அழுக்கு நாற்றம்; மொழுக்குத் துணிகள்; ஒரு பிரம்பு நாற்காலி; பழைய மேஜை; பழைய கட்டில்; ஒரு நெப்போலியன் சம்பந்தமான படம். அடுப்பில் சாம்பல் பூத்திருக்கிறது. மேஜை மேல் ஒரு புத்தகம், காயிதங்கள், பேனு, மைக்கூடுகள் இருந்தன. ஜாந்தரதன் தாடி மீசையுடன், குள்ளநரி போல அங்குமிங்கும் நடந்து கொண்டே பயங்கரமான ஆங்கார வார்த்தைகள் பேசினான்: "எல்லாரும் தப்பிலிப் பயல்கள்! வெட்கங்கெட்ட பயல்கள்! அந்தப் பணக்கார நாய் கால் ரூபாய் தந்திருக்கிறான். பத்து ரூபாய் தருவதற்கென்ன? இந்தக் கொழுப்பெடுத்த பயல்களைக் கொல்லவேண்டும். அப்போதுதான் பணம் வெளி வரும்! இருக்கட்டும் சொல்லுகிறேன்............"

பூதாகாரமான அவனது மனைவி நூறு ஒட்டுப் போட்ட பாவாடையும், பழைய குடுத்துணியும் அணிந்திருந்தாள்; அவனுக்கு ‘ஆமாச்சாமி’ போட்டாள். ஜாந்தரதன் இன்னும் சில விலாசங்களுக்குக் கடிதம் எழுதினான். அப்போது மூத்த மகள் ஓடிவந்தாள்.

ஜாந்தரதன் :—என்ன செய்தி?

மகள் :—அவர் வருகிறார்.

ஜாந்தரதன் :—யார்?

மகள் :—ஜாக் முனிவர் கோயிலில் தருமந் தரும் புண்ணியவான்.

ஜாந்தரதன் :—ஆ! அந்தக் கிழவனா? மெய்தானா?

மகள் :— ஆம், வண்டியில் வருகிறார்.

ஜாந்தரதன் :—கடிதம் கொடுத்தாயா? என்ன சொன்னான் கிழவன்?

மகள் :—கடிதம் தந்தேன் : விலாசம் விசாரித்தார் : சொன்னேன். தம் மகளுடன் வண்டியில் வருகிறார். நான் முன்னால் வந்தேன்.

* * *

“சரி, அடியே, நீ படுக்கையில் படுத்து முனங்கு; தலை தூக்கக்கூடாது : அடுப்பை அணை; சட், இந்தப் பிரம்பு நாற்காலியைப் பொத்தல் பண்ணி வைக்கிறேன். அடி சின்ன பெண்ணே, இந்தக் கண்ணாடி ஜன்னலை ஒரு குத்துக் குத்து; குத்து, சும்மா இருந்தால் உன்னைக் குத்துவேன்” என்றான் ஜாந்தரதன்.

சிறுபெண் கண்ணாடியைக் குத்தி உடைத்தாள். கை இரத்தமானது; அழுதாள். ஜாந்தரதன் பலமாக அழச்சொன்னான்; பெண்ஜாதியின் சட்டையிற் சிறிது கிழித்து இரத்தக் காயத்தைக் கட்டினான்.

"அட பாவி, இப்படித்தானா குழந்தை கையைப் புண் படுத்துவது! மிருகத்தனம்..........." என்று மனைவி கிளம்பினாள்.

"அடி, காரியமாகத்தான் கண்ணாடியை உடைக்கச் சொன்னேன்; மூடு வாயை" என்று அடக்கினான் ஜாந்தரதன்.

காட்சியெல்லாம் ஜோடித்தாயின.

"வரட்டும் அந்தக் கிழவன், சரியானபடி கறந்துவிடுகிறேன். இந்தப் பயல்கள் ஏன் பணக்காரரா யிருக்கின்றனர்? நாம் ஏன் இப்படிப் பசியும் குளிரும் வரட்ட வருந்தவேண்டும்?" என்று ஜாந்தரதன் பேசியபோது வாசலில் வண்டி வந்தது. ஜாந்தரதன் ஒரே பாய்ச்சலாக ஓடினான்.

வண்டியிலிருந்து தருமவானும், மகளும் இறங்கினர்.

"வாருங்கள், தயாளகுணத்தரே, தருமப்பிரபுவே,.................வந்தனம், கோடி வந்தனம். என் பரிதாபத்தை வந்து பாருங்கள், புண்ணியரே" என்று உபசரித்து, அவர்களை உள்ளே அழைத்து வந்தான் ஜாந்தரதன்.

தன் அறையிலிருந்து பார்க்கும் மாரியன் வியந்து மகிழ்ந்தான்; ஆ! தான் இடந் தெரியாது தேடித்

திரிந்த அக்காதலியைக் கண்டான். தந்தை லெப்ளானே அந்த அறக் கிழவன். மாரியன் தன் காதலியை மறைவிடத்தினின்று கண்டுருகினான். ஜாந்தரதன் பாசாங்கு செய்து, அந்தப் புண்ணியவான் மனத்தை இளக வைத்தான் :— "பாருங்கள், புண்ணியமூர்த்தியே, எனது பரிதாபத்தை: அடுப்பிற்கு விறகில்லை; இரண்டு நாளாகப் பட்டினி; சல்லிக் காசில்லை; உடுக்கத் துணியில்லை. குளிரில் வாடுகிறோம். உட்கார இந்த ஓட்டை நாற்காலிதான் உள்ளது. ஜன்னல் கண்ணாடி உடைந்து போனது வாடை புலி மாதிரி பிடுங்குகிறது. மனைவிக்கு ஜன்னி; படுத்துப் புலம்புகிறாள்; பிரக்ஞை யில்லை; இதோ பாருங்கள் இரக்கமுள்ள மகாராஜா, இந்தப் பெண்ணை ஒரு தொழிற்சாலைக்கு அனுப்பினேன். அங்கு இரண்டு அறை கூலிக்காக முரட்டு வேலை யேவினான் தொழிற்சாலை யெஜமான். யந்திரத்தில் கை பட்டு இரத்தம் பீச்சியடிக்கிறது. குழந்தை அழுகிறாள். வைத்தியனுக்கு நான் எங்கே போவேன். நான் நாடகப்புலவன் பபாந்து (Fabantou); உயர்ந்த நடிகன்; நல்ல நிலையிலிருந்தேன்; இப்போது ஆதரிப்பாரில்லை; சாமான்களை யெல்லாம் விற்றுத் தீர்த்தேன். ஒரு வருஷமாக வீட்டு வாடகை தரவில்லை; வீட்டுக்காரி இன்று எட்டு மணிக்கு என்னை வெளி முடுக்கி விடுவாள். இந்தப் பெண்டு பிள்ளைகளைச் சந்தியில் வைத்துக் கொண்டு நான் திண்டாடுவேன். இரக்க முள்ள புண்ணியரே."

தருமக் கிழவன் லெப்ளான் கண்ணீர் வடித்தான்; தன் பக்கத்திலிருந்த மூட்டையை அவிழ்த்தான்; “இந்தாருங்கள், குளிருக்கு அடக்கமாக இந்தக் கம்பளிகள், இந்தச் சட்டைத் துணிகளைப் போட்டுக் கொள்ளுங்கள்” என்று கொடுத்தான். “வந்தனம், வந்தனம், தருமப் பிரபுவே” என்று இப்புறம் சொல்லி, அப்புறம், “அடப்பாவி, பணம் தரவில்லையே! அடியே, இந்த மனிதனை உற்றுப் பார்: அந்தக் குட்டியைப் பார்” என்றான் இரகசியமாக.

லெப்ளான்: ஐயா, பாபாந்து, வீட்டு வாடகை எவ்வளவு?

ஜாந்த: அப்படிக் கேளுங்கள், புண்ணிய வானே............அது 60 பணம்.

லெப்ளான்: இதோ 5 பிரான்க் தான் கையில் உள்ளது; வைத்துக் கொள்ளும். நான் இன்று ஆறு மணிக்கு மீதிப் பணம் கொண்டு வருவேன்.

ஜாந்த: வரவேணும், வரவேணும் துரையே. இல்லாவிட்டால், நான் பிள்ளை குட்டியுடன் முச்சந்தியில் நின்று தவிப்பேன். குளிர் நடுக்குகிறது.

லெப்ளான் தனது பெரிய சட்டையைக் கழற்றி நாற்காலிமேற் போட்டான். உருசூலா காயத்துடன் அழும் பெண்ணைச் சமாதானப் படுத்தினாள்.

“சரி, நாங்கள் வருகிறோம்” என்று இருவரும் புறப்பட்டனர்.

ஜாந்த: தங்க ராஜா, இந்தச் சட்டையை மறந்து போகிறீர்களே.

லெப்ளான்: அதைத் தங்களுக்கே அங்குப் போட்டேன்.

ஜாந்த: மகாராஜா, புண்ணியவான், பாக்கியவான். ஆறு மணிக்கு அவசியம் வரவேணும்....... வாருங்கள், வழி யனுப்புகிறேன்.

லெப்ளான்: குளிருக்கு அந்தச் சட்டையை முதலில் போட்டுக் கொள்ளுங்கள்.

ஜாந்தரதன் லெப்ளானின் பெரிய சட்டையைப் போட்டுக்கொண்டு வழியனுப்பினான்.

மாரியன் உருளையைப் பார்த்த வண்ணமிருந்தான்: அவனிருக்குமிடந் தெரியப் பின்தொடர்ந்தான். வண்டி காற்றாய்ப் பறந்து மறைந்தது. மற்றொரு வண்டியைப் பிடித்துச் செல்ல மாரியனிடம் பணமில்லை. ஆதலால் அவன் மறுபடியும் தன் அறைக்கு வந்தான்.

வண்டி சென்றதும், ஜாந்தரதன் ஒரு புதரிடையே இரண்டு மனிதருடன் இரகசியம் பேசி வந்தான். அவர்களையும் மாரியன் கவனித்தான். மாரியனுக்கு அவர்கள் திருட்டுப் பாவிகள் என்பது தெரியும்.

மாரியன் தன் அறைக்குள் நுழையும்போது ஜாந்தரதன் மூத்த மகள் வந்தாள்.

பெண்:—மாரியன், தங்கள் முகம் வாடியிருக்கிறதே, மனத்தில் என்ன வருத்தம்?

மாரியன்:—ஒன்றுமில்லை; நீ வந்த காரியம்?

பெண்:—தாங்கள் இன்று பணம் கொடுத்தீர்கள். தங்களுக்கு என்ன வேண்டும்? தருகிறேன். தங்கள் இரகசியத்தைக் கேட்கவில்லை. தங்களுக்கு விருப்பமானதைச் செய்கிறேன். நான் என் தகப்பனுக்கு எவ்வளவோ உதவி செய்கிறேன். எனக்கு எல்லா வீடும் தெரியும்; பெரிய மனிதரையெல்லாம் பார்த்திருக்கிறேன்; அவர்களுக்கெல்லாம் கடிதம் கொண்டு போவேன்; விசேஷங்களை விசாரித்து வருவேன்.

மாரியன்:—சரிதான், நீ தானே இந்தக் கிழவரையும் மகளையும் அழைத்து வந்தாய்?

பெண்:—ஆமாம்.

மாரியன்:—அவர்கள் இருக்குமிடம் தெரியுமா?

பெண்:—தெரியாது.

மாரியன்:—தெரிந்து சொல்லுவாயா?

பெண்:—சொல்லுவேன், என்ன தருகிறீர்?

மாரியன்:—வேண்டியதைத் தருகிறேன்.

பெண்:—நான் வேண்டியதைத் தர வேண்டும்.

மாரியன்:—சம்மதம்.

பெண்:—தங்களுக்கு அவசியம் அவர்கள் இருக்கும் இடத்தைத் தெரிவிக்கின்றேன்.

மாரியன்:—சரி, நீ போய் வா.

பெண் சென்றதும், மாரியன் சுவர் இடுக்கு வழியாக ஜாந்தரதன் அறைக்குள் பார்த்தான்; அங்கு அபாயமான பேச்சும் ஜாடையும் கண்டான்.

ஜாந்தரதன் :—அடியே, அவன் தான் இந்தக் கிழவன். பேச்சு, நடை, ஆள் எல்லாம் அவனே தான்; ஏழு வருஷத்திற்கு முன் கண்டவனே.

மனைவி:—ஆம், அந்தக் குட்டியும் அவள்தான். அடையாளம் தெரியாமல் வளர்ந்து போனாள். எனக்கு வரும் பொறுமையில் அவள் குடலைக் கிழிக்க வேண்டுமென்று தோன்றுகிறது.

ஜாந்தரதன்:—நான் என்ன செய்யப்போகிறேன் தெரியுமா? நாளை நாம் பணக்காரர்! எண்ணிக் கொள். இக்கிழவனிடம் பெருந்தொகை உறிஞ்சி விடுகிறேன்.

மனைவி :—எப்படி ?

ஜாந்தரதன் :—எல்லாம் ஏற்பாடு செய்துவிட்டேன். நமது சகாக்கள் சரியாக 6 மணிக்குத் தயாராயிருப்பார். அவன் வருவான். போடு கையெழுத்து, வை 2,00,000 என்கிறேன். இன்னும் சில வேடிக்கை காண்பாய். அவன் மறுத்தால், நமது சகாக்கள் தயார். சூட்டுக்கோல் உள்ளது. பளபளவென்று வாள் உள்ளது. நமது பெத்ரோ மின்னத் நண்பர் சும்மா விடமாட்டார்கள். ஆளை இங்கேயே சரி பண்ணிப் புதைத்து விட்டு, அவன் வீட்டை உடனே சென்று கொள்ளை யடிப்போம். அவன் மகளைக் கொல்லுவேன் என்றால் பணம் கக்கி விடுவான். ஹ-ஹ-ஹ தெரிந்ததா? நீ நல்ல உடையணிந்து தயாராயிரு.

மனைவி :—சரி, இன்றைக் காலட்சேபத்திற்குக் கடைச் சாமான்கள் வாங்கி வாருங்கள் முதலில்.

ஜாந்தரதன்:—ஆம், வெளியே போய் வருகிறேன். நாளை நாம் பணக்காரர்.

ஜாந்தரதன் பெரிய அங்கியுடன் வெளிக் கிளம்பினன். மாரியன் மனம் பதைத்தான்; 'அட கொலைகாரப்பாவி!' என்று பெருமூச்சு விட்டான்; தனது காதலியின் தந்தையைக் காப்பாற்ற உடனே ஒரு ஏற்பாடு செய்யப் பொலீஸ் நிலயத்திற்குச் சென்ருன்; அங்கு ஜாவர் இருந்தான்; அவனிடம் திருடர் வந்து ஒரு புண்ணிய கனவானை வஞ்சித்துக் கொள்ளையடித்துக் கொல்ல ஏற்பாடு செய்திருப்பதைச் சொன்ஞன். ஜாவர் ஒரு துப்பாக்கி தந்து, "நாங்கள் வெளியே ஒளிந்திருப்போம். வீட்டுச் சாவியை என்னிடம் தாரும். அபாயமான சமயத்தில் ஒரு துப்பாக்கி குண்டு போடும். நாங்கள் கதவு திறந்து வந்து திருடரைப் பிடித்து விடுகிறோம்" என்ருன்; பத்ரோ மின்னத் திருடரே அந்த வேலை செய்பவர் என்று அறிந்தான். மாரியன் போகும் போதும் வரும்போதும் ஒரு சாக்கடைப் பாலத்தில் திருடர் பேசுவதைக் கேட்டான்:—" அடட, இந்தக் கலியாணம் நிச்சயம்! தாலி கட்டி விடுவோம். 10000 ஆதாயம்" என்றெல்லாம் பேச்சுக் காதில் விழுந்தது. தென்ஞடியனும் வீட்டுச் சாமான்களுடன் ஒரு பெரிய கத்தரிக்கோல் கொண்டு வந்தான்.

மாரியன் ஓசைப்படாமல் தன் அறையில் பதுங்கிக் கொண்டு, ஜாந்தரதன் அறையில் நடக்கும் பயங்கரமான காட்சியைக் கவனித்தான்.

64. பக்காத் திருடர்

கேட்டாலும் குடல் நடுங்கும்! "ஒரு பணக்காரன் வீட்டு மாடிமேல் ஏறிக் குதித்து, உள்ளே இறங்கி, வீட்டிலுள்ள பத்துப்பேரையும் தூணில் கட்டிப்போட்டு, வயிற்றில் வாளால் குத்திக்கொன்று, வீட்டிலுள்ள பொருள்களை யெல்லாம் கொள்ளையடித்துத் தீயிட்டுச் சென்றனர் திருடர். இரண்டு செல்வக் காதலர் திருமணக் கோலத்துடன் கூடி இருந்தபோது, பெண்ணைச் சுட்டு அணிமணிகளைக் கொண்டோடினர். நோயாய்ப் படுத்திருந்த ஒரு சீமாட்டிக்கு வைத்தியம் பார்ப்பவன் போல வந்து, அவளைக் கொன்று, சொத்தைக் களவாடிச் சென்றான் ஒருவன்; ஒரு வாலிபப் பெண்ணை மயக்கி, எங்கேயோ இழுத்து மாயமாய்ச் சென்றான்; ஒரு குடும்பப் பெண்ணைத் தூக்கி, யாரோ ஒரு எதிரி வீட்டிற் கொண்டு ஒளித்தான்; ஒரு பணக்கார விதவையின் ஒரே குழந்தையைக் கொன்று, அவளைக் கொள்ளையடித்தான். அடுத்த கிராமத்தில் ஒரு திருட்டுப் படை புகுந்து வீடுகளைச் சூறையாடியது. ஒரு செல்வச் சீமாட்டியைக் கணவன் அழைக்கிறானென்று பொய்க் கடிதம் காட்டி, ஒருவன் மறைவான இடத்திற்கு அழைத்துச் சென்று மானபங்கம் பண்ணினான்" என்று இப்படியெல்லாம் திருட்டு, விபசாரம், கொலைச் செய்திகள் அக்காலம் பத்திரிகையில் வந்தன. (இக்காலமும் இத்தகைய

பயங்கரச் செயல்களுக்குக் குறைவில்லை.) இந்தப் பயங்கரமான பாபங்களைச் செய்பவர் யார்?

இந்தப் பாவிகள் மனித சமுதாயத்தின் நரக வேதனையாக எப்போதும் இருக்கின்றனர். மடமை தான் இவர் கொடுமைக்குக் காரணம். கல்வியும், ஒழுக்கமும், கடவுளறிவும் பரவினால்தான் இக் கொடுமை ஒழியும். இரும்புப் பெட்டிகளில் பொருளைப் பூட்டாமல் பல ஏழைகள் பிழைக்கும்படி தொழில்களை வளர்த்தால்தான் இக் கொடுமை ஒழியும். வறுமை, மடமை ஆகிய இரண்டும் இக் கொடுமைக் கபந்தனின் இரு கரங்கள். அவை ஒழி யக் கல்வியும், தொழிலும் பரவவேண்டும். கொலை, களவு, வஞ்சம், பொய், சூது, விபசாரமாகிய எல்லா வற்றிற்கும் காரணம் வறுமை, மடமை. மனித ரெல்லாம் ஒரு நிகரே. கொள்ளை யடிக்காமல் ஒழுங்காக எல்லாரும் உழைத்துப் பிழைத்துச் சேர்ந்து வாழ்ந்தால், உலகில் வறுமை யிராது. மனிதர் மனிதருக்குச் செய்யும் தீமையின் வடிவே திருடரும் கொலையாளிகளும் ஆவர்.

புரட்சிக்குப்பின் பாரிஸில் திருடர் வலுத் தனர். வாதர்லூப் போருக்குப் பிறகோ சொல்ல வேண்டியதில்லை. நாட்டில் தரித்திர தேவி தாண்டவ மாடினாள். பசி வயிற்றைக் கிண்டும்போது பஞ்சமா பாதகம் எந்தமட்டும்! பாரிஸ் காலிகளைப்பற்றி முன்பே சொன்னோம். அவர்களிடையே ஒரு பெரிய திருட்டுக் கூட்டம் எழுந்தது. இத் திருட்டுப்படை,

காடு, வனம், பாழ் வீடு, சாக்கடைப் பொந்துகளில் பகலெல்லாம் ஒளிந்து, சூட்சி செய்து, இரவில் வெளிக்கிளம்பி அட்டூழியம் செய்யும். இத்திருட்டுப் படைக்கு நாலு தலைவர். பத்ரோமின்னெத் அல்லது பக்காத் திருடர் என்று அவர்கள் எங்கும் புகழ் பெற்றனர். "பத்ரோ மின்னெத்" என்றால் அழுத பிள்ளையும் வாய் மூடும். இவர்கள் புகுந்தால் வீடு நாசம், ஆள் மோசம். பொலீஸார் எவ்வளவு வலைபோட்டுத் தேடியும் இவர்களில் ஒருவனைவது அகப்படவில்லை.

1830-முதல் 1835 வரையில் பாரிஸில் இவர்கள் தர்பார்தான் நடந்தது. இவர்களில் முதல்வன் குல்மேர். இவன் மற்றொரு ஹெறக்கூல்; பலவான்; வரத்தடியன்; ஜாதியடிக்கு ஆறடி உயரம்; இரும்புத் தசைபன். வேலை செய்து பிழைக்கலாம்; மடச் சோம்பேறியாகிக் காலிக் கூட்டத்துடன் சேர்ந்து திருட்டிற் புகுந்தான்; பெரிய கொலைக்காரன்; கரு வைத்தால், ஆளைத் தீர்த்துவிட்டே மறுகாரியம் பார்ப்பான். பாரிஸ் சாக்கடையே இவன் மாளிகை.

இரண்டாவது, பாபே (Babet); படித்தவன்; பத்திரிகை தவறாது படித்து, நகரச் செய்திகளுக்குத் தக்கபடி தனது திருட்டுத் தொழிலை நடத்துவான். இவனுக்குச் சிறிது பல் வயித்தியமும், சிற்பமும் வரும். "எல்லா நோயும் என்னிடம் வந்தால் தீரும; வலிக்காமல் பல்லைப் பிடுங்குவேன். வாருங்கள். நான் நிகரற்ற சிற்பி; வைத்தியன்; புலவன்" என்றெல்

லாம் விளம்பரம் செய்து, வந்த ஆட்களை மடக்கிப் பணம் பறித்துவந்தான் சில காலம். இவன் பெண் சாதி பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு எங்கோ ஓடிப் போனான். பிறகு இவன் திருட்டுக்கூட்டத்திற் சேர்ந்து பக்காத் திருடனானான். திருட்டுக் கூட்டத் தின் கடிதப் போக்குவரவெல்லாம் இவன் கையில் நிகழ்ந்தன.

மூன்றாவது, **கிளாக்ஸூ**; கொலைகாரப்பாவி; பகலில் யாரும் அறியாத ஒரு இருட் பொந்தில் ஒளிந்து, இரவில் வெளி வருவான்; இரவில் பேய் மாதிரி திரிந்து ஊரை யழிப்பான். இவன் எப்போதும் முக மூடி யணிந்திருப்பான். யாரும் இவன் முகத்தைப் பார்த்ததில்லை. பேச்சுப் பன்றி போல அடிவயிற்றினின்று கீச்சிடும். இக்கொடி யோன் புயல்போல வருவான்; புகை போல மறை வான்.

நாலாவது, **மோம்பர்நாஸ்**; இருபது வயது காளை; அழகான நரகம்; பெரிய கனவான் மாதிரி உடையணிந்து வருவான்; குளிரப்பேசுவான்; பசக் கென்று கழுத்தைப் பிசைந்து தள்ளிப் பையைத் தடவிச் செல்வான். இவன் பிறவியிலேயே படுகாலிப் பயல். இவன் செய்த கொலைகள் கணக்கு வழக் கில்லை.

ஊரில் பெரிய திருட்டு, கொள்ளை, கொலை நடந்தால் இந்தப் பக்காத் திருடரையே சாபம் வைப்பர்.

பிரஞ்சு அரசாங்கம் இவர்களைப் பிடிக்க எவ்வளவோ முயன்றும் பயனற்றது. இப்பக்காத் திருடர் கையாட்கள் மிகப் பலர். அவர்களும் பக்காத் திருடர்களே. இந்தத் திருட்டுப் படையில் ஜாந்தரதனும் ஒன்றரைத் திருடன்; ஏழைப் பாசாங்கு செய்து கடிதம் எழுதிச் செல்வரை மெல்லத் தன் நரிப் பொந்திற்கு இழுத்துச் சித்திர வதை செய்து பணம் பறிப்பான். அச்சமயம் பக்காத் திருடர் கூட்டம் இவனுக்குத் துணை செய்து கொள்ளையில் பங்கு பெறும்.

இவ்வாறு சித்திரவதை செய்யவே இவன் ஆறுமணிக்கு எல்லா ஏற்பாடுகளும் செய்தான். 5 மணிக்கே திருடர் அந்த வீட்டுக் கொல்லையில் வந்து மறைந்திருந்தனர். மாரியன் தெரிவித்ததும் ஜாவர் சட்டென்று, "இது பக்காத்திருடர் வேலை. இன்று அவர்களைக் கையும் களவுமாகப் பிடிக்கவேண்டும்" என்று உறுதி பூண்டான்.

65. நாற்காலி திருடல்

மாரியன் ஓசைப்படாமல் தன் அறையினின்று ஜாந்தரதன் அறையைப் பார்த்துக் கொண்டிருந்தான். அங்கே உலை மூட்டி யெரிகிறது. அதில் சூட்டுக் கோல் காய்கின்றது. ஆளைக் கொல்லுவதற்

குக் சக்தி, கத்தரிக் கோல்களெல்லாம் தயாராகத் தீட்டிவைத்தனர். இரண்டு பெண்களையும் வெளியே தெருவிலிருந்து பொலீஸார் வந்தால் உடனே அறிவிக்கும்படி ஏவினன் ஜாந்தரதன்.

ஜாந்தரதன் :—வீட்டுக்கிழவி வெளியே போய் விட்டாளா?

எபோனி :—ஆம், வீடுகளில் பாத்திரம் கழுவச் சென்று விட்டாள்.

ஜாந்தரதன் :—அடுத்த அறையில் ஆள்........?

எபோனி :—அந்தப் பையன் இன்னும் வரவேயில்லை. இது அவன் சாப்பாட்டு நேரம்.

ஜாந்தரதன் :—மெய்தானு? அடுத்த அறையில் யாருமில்லையா?

எபோனி :—இல்லை.

ஜாந்தரதன் :—இருந்தாலும், உடனே உள்ளே சென்று பார். பார்த்து வந்ததும் தெருவிலிருந்து நாய்களைக் கவனி.

மூத்த மகள் ஒரு விளக்குடன் புறப்பட்டாள். மாரியன் உடனே படுக்கைக்குள் நுழைந்துகொண்டு கப்சுப்பென்றிருந்தான். பெண் கதவைத் திறந்து உள்ளே நுழைந்தாள்; நாலு மூலையும் பார்த்தாள். ஆளைக் காணும். பிறகு கண்ணுடியில் முகம்பார்த்து, "என் ஆசைக் காதலனே, உன்னேடே நான் வருவேன்" என்று பாடினுள்; வெளியே சென்றுள். மாரியன் மீண்டும் சுவரின் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது ஜாந்தரதன் அறை

யில் பெரிய உலையில் ஒரு அகன்ற இரும்புத் தகடு தணலாற் காய்ந்தது. நெருப்பில் கழுத்தை வெட்டும் பெரிய கத்தரிக்கோலும் காய்ந்து பளபளத்தது. அறைமுழுதும் தீக்கொண்ட நரகமாயிருந்தது. ஆங்கே பெரிய சுருட்டைப் புகைத்து, நமன் போல நின்றான் ஜாந்தரதன். அவன் மனைவி, வீட்டில் இருந்த நல்ல உடைகளை யணிந்து, மதிப்பாக உட்கார்ந்திருந்தாள். "ஆம், நாளை நான் சீமான்; நீ சீமாட்டி; கால் மேல் கால் போட்டுக் கொண்டு ஜோரா யிருப்போம்" என்று நீளமாக ஒரு புகை யுறிஞ்சிவிட்டான் ஜாந்தரதன்.

ஜாந்தரதன்:—ஆ! இரண்டு நாற்காலிகள் வேண்டுமே அவர் உட்கார.

மனைவி:—இதோ அடுத்த அறையிலிருந்து எடுத்து வருகிறேன்.

ஜாந்தரதன் மனைவிப்பூதம் மாரியன் அறையிற் புகுந்தது. மாரியன் குடல் நடுங்கப் பதுங்கியிருந்தான். நல்ல வேளையாய் விளக்குக் கொண்டுவரவில்லை; இருட்டா யிருந்தது. அங்கிருந்த இரண்டு நாற்காலிகளைக் கிளப்பிச் சென்றாள் பெண் பூதம்.

சரி, நாற்காலிகளை இப்படிப் போடு. இந்தா ஐந்து பணம். அவன் வண்டியை விட்டு இறங்கி வந்ததும், நீ உடனே சென்று, பணந் தந்து வண்டிக்காரனை அனுப்பிவிடு. பிறகு நமது காரியம் பார்ப்போம்.

எல்லாந் தெரியும்.

66. பாபங்துவின் சகாக்கள்

ஆறு மணி யடித்தது. கதவு திறந்தது. லெப்ளான் வந்தான். ஜாந்தரதன் பாய்ந்து வரவேற்றான்.

ஜாந்த :—வரவேண்டும் துரையே, தருமவானே, மகாப் பிரபோ, இப்படி எழுந்தருள வேண்டும்.

லெப்ளான் :—ஐயா, பாபங்து, இதோ நான்கு பவுன்கள் உள்ளன. வீட்டு வாடகை போக, மீதியைச் செலவிற்கு வைத்துக் கொள்ளும்.

ஜாந்த :—வந்தனம், வந்தனம், தருமவானே, புண்ணியவானே, உட்காருங்கள்.

"அடியே, வண்டி போய்விட்டதா?" என்று மனைவியைக் காதோடு கேட்டான் ஜாந்தரதன். "அதெல்லாம் உடனே வேலை செய்து விட்டேன்" என்றாள் மனைவி.

மாரியன் அறையிலிருந்து திருடிய இரண்டு நாற்காலிகளில் ஒன்றில் லெப்ளானை அமர்த்தினான் ஜாந்தரதன்; மற்றொன்றில் தான் அமர்ந்தான்.

பனி யிருள்; சுற்றும் ஒரு மைலுக்கு ஆள் நடமாட்டமில்லாத பொட்டலில் ஒரு பாழ் மனை; அதில் ஒரு ஒதுக்கமான பாழ் வீடு; வீட்டில் யாருமில்லாத் தனிமை. அதில் புண்ணியத்தின் முன், கொலை பாதகம்போல லெப்ளான் முன்னே ஜாந்தரதன் அமர்ந்திருந்தான்.

லெப்ளான் :—பெண்ணுக்குக் கை யெப்படி யிருக்கிறது?

ஜாந்த :—குழந்தை வலியால் துடித்தாள். வைத்தியரிடம் அனுப்பியுள்ளேன்.

லெப்ளான் :—திருமதி பாபாந்து இன்று கொஞ்சம் திடமாகத் தோன்றுகிறாள்.

ஜாந்த :—ஐயா, புண்ணியவானே, நாங்கள் இருவரும் இந்தக் குடும்பத்தைக் காப்பாற்ற நாய்ப் பாடு படுகிறோம். அவள் பரமசாது. இருவரும் நாளெல்லாம் சித்திரம் எழுதுகிறோம்: உழைக்கிறோம்: பலனில்லை; உழைப்போம், வேலையில்லை. ஐயோ! எங்கள் துன்பத்தை என்னென்று சொல்லுவது! இதோ பாருங்கள் இந்த வாதர்-லூப் படத்தைச் சென்ற மாதம் எழுதினேன். இன்னும் விற்கவில்லை. தருமவானே, நாங்கள்தான் இதை வைத்துக் கொள்ள வேண்டும். என் பெண்ணிற்குச் சித்திரம் கற்பிக்கப் போகிறேன். அதற்கு ஒரு பெரிய வர்ணப்பெட்டிகள் எல்லாம் வேண்டும்.

ஃ ஃ ஃ

இச்சமயம் ஒரு கரிசுரங்கக் கள்ளன் மெல்ல நுழைந்து ஜாந்தரதன் மனைவிக் கருகேயுள்ள கட்டிலில் உட்கார்ந்தான்.

லெப்ளான் அவனை உற்றுப் பார்த்து, 'இவர் யார்?' என்றான்.

"இவர் பக்கத்து நண்பர். நிலக்கரிச் சுரங்கத்தில் வேலை செய்து உடம்பு சரியேறி யிருக்கிறது"

என்றான் ஜாந்தரதன். மற்றொரு கரிமூஞ்சி வந்து ஒரு மூலையில் நின்றது—இன்னொரு கரிமூஞ்சி! இன்னொன்று........

"அவர்கள் எனது அரிய நண்பர்; என்னைப் போலத் தொழிலாளிகள்; தொழிற்சாலையிலிருந்து வருகிறார்கள். நீங்கள் என்னைப் பாருங்கள். என் படத்தை முப்பது ரூபாய்க்கு வாங்குவீரா மாட்டீரா? நீர் வாங்கத்தான் வேண்டும்" என்றெழுந்து உலாவினான் ஜாந்தரதன். படம் அரை ரூபாய் கூடப் பெறாது. லெப்ளான் சுற்றியுள்ள கரிமூஞ்சிகளையும், உலையில் கனலும் சூட்டுக்கோல், கத்தரிக்கோல், இரும்புத் தகடுகளையும் பார்த்தான்; சரி, 'புலிக் குகையில் அகப்பட்டுக்கொண்டோம்' என்று அறிந்தான்; அஞ்சாது தனது முழுப் பலத்தையும் தயாரித்துக்கொண்டான். மற்றும் மூன்று கரி மூஞ்சிகள் வந்தன.

ஒருவன் பெரிய சம்மட்டி கொண்டுவந்தான். இன்னொரு தடியன் குடிவெறியுடன், "போட்ரேன் பார் மண்டையிலே" என்று வந்தான்.

---

67. கோடு 2,00,000

உலக்கைத் தடி பிடித்த ஒரு திருடனை நோக்கி, ஜாந்தரதன், "தயார்?" என்றான்.

திருடன்:—எல்லாந் தயார்.

ஜாந்தரதன்:—வண்டி தயாரா யிருக்கிறதா?

திருடன்:—தயார்.

ஜாந்தரதன் :—சரி, உஷார்.

ஜாந்தரதன் உடனே புலியானான்; லெப்ளானை நமன்போலப் பார்த்தான்.

ஜாந்தர :—என்னைத் தெரியவில்லையா?

லெப்ளான்:—இல்லை.

ஜாந்த:—நான் யார் தெரியவில்லையா?

லெப்ளான்:—ஊஹூங்.

ஜாந்தரதன்:—பார், நான் யாரென்று நன்றாய். நான் பாபந்து அல்ல; நான் ஜாந்தரதன் அல்ல; நானே தென்னடியன். நானே மோம்பெர்மேலில் சாராயக்கடை வைத்திருந்த தென்னடியன். இப்போது தெரிகிறதா?

லெப்ளான்:—இல்லை.

இங்கு நடப்பதெல்லாம் சுவரின் இடுக்கினின்று பார்க்கும் மாரியன் அறிந்தான். ஆ! தெ-ன்-ன-டி-ய-ன்! இவனைத்தான் மாரியன் நான்கு ஆண்டுகளாகத் தேடிக் கொண்டிருந்தான். 'தென்னடியன்! இவனே வாதர்லூப்போரில் குண்டுகளுக்கிடையே தனது உயிரைக் காத்ததாகத் தந்தை எழுதி வைத்தான்; இவனுக்கோ உதவி செய்யக் கட்டளையிட்டான் தந்தை! இந்தத் திருடனே தென்னடியன்! இந்தக் கொலைகாரப் பாவிக்கோ உதவி செய்வது! எனது அருமைக் காதலியின் தந்தையை வஞ்சித்துக் கொல்ல நிற்கும் இந்தப் பாதகனுக்கோ கை கொடுப்பது! அந்தத் தருமவானாகிய லெப்ளானைத் தின்னப் புலிபோன்ற திரு

டருடன் சூழ்ந்து நிற்கும் இந்த நன்றிகெட்ட பகருக்கோ நாம் இரங்குவது ! என்ன செய்வேன் ! தந்தையார் இவனுக்கு உதவி செய்யச்சொன்னார். இவனோ திருட்டுப்பாவி. இப்பாவிக்கு உதவி செய்வதா ! என் காதலியின் தந்தையை இவன் கொல்லப் பார்ப்பேனோ ? ஜாவர் பொலீஸ்காரருடன் அதோ ஒளிந்திருக்கிறான்; நான் ஓர் வேட்டுப் போட்டதும் வந்து இத் தெனாடியக் கூட்டத்தைக் கைது செய்வான். அப்போது எனது தந்தையின் கட்டளையை மீறித் தெனாடியனுக்கு அபகாரம் செய்தவனவேனன்றோ ? சற்றுப் பொறுக்கிறேன் ; மிகவும் நெருக்கடியானால் சுடுகிறேன்' என்று பொறுத்தான் மாரியன்.

தெனாடியன் பொறிகிறான் :—

"வாரும், கண்டு பிடித்தேன். ஏழை போல நடிக்கும் பணக்காரரே, 1823-ம் ஆண்டு கிறிஸ்தமஸ் அன்று என் கள்ளுக்கடைக்கு வந்தது மறந்து போயிற்றோ? அந்தக் குட்டிக்குப் பொம்மைவாங்கித் தந்தது மறந்து போயிற்றோ? ஃபாந்தேன் பெண் வானம்பாடிக்கு நீர் பரிந்து பேசினது மறந்து போயிற்றோ? அவளுக்குக் கறுப்புடை உடுத்திக் கூட்டிச் சென்றீரே; அதுவும் மறந்தீரோ? கோடி கோடியாக ஒளித்து வைத்து, ஏழை போல நடிக்கிறவரே, உம்மைக் கண்டுபிடித்தேன். ஏதோ ஐந்து, பத்துத் தந்து தருமப் பிரபு என்று பேர் வாங்கவா பார்க்கிறீர் ? குழந்தையைத் திருடிய கிழவரே, என்னைக்

காட்டிலே தடியால் மிரட்டியல்லவா அக் குட்டியை அழைத்துச் சென்றீர்? இப்போது அகப்பட்டுக் கொண்டீர். உம்மாலே நான் பஞ்சையானேன். 1,500 பிராங்க் தந்து ஏமாற்றி என்னிடம் வளர்ந்த குழந்தையை அழைத்துச் சென்றீர். அவளால் தான் எனக்குக் காலட்சேபம் ஆனது. அவள் மூலம் மாதா மாதம் கொள்ளைப்பணம் வந்தது. கள்ளுக் கடையில் வந்த நஷ்டமெல்லாம் அவளாலே ஈடானது. இப்போது நாலு பவுன் தந்து ஏமாற்றப் பார்க்கிறீரோ? இன்று காலை உமக்குச் சலாம் போட்டேன். இப்போது பாரும் சுற்றி. தடியடி கிடைக்கும். நான் கேட்கும் தொகையைக் கை மேலே தரவேண்டும்.''

லெப்ளான் :— நாங்கள் பேசுவதொன்றும் புரியவில்லை; யாரையோ நினைத்துக்கொண்டு பேசுகிறீர். நான் ஒரு ஏழை; தங்களை யறியேன்.

தேனார்டி :— ஆ! எல்ல எல்லா! நானார் தெரியவில்லையோ?

லெப்ளான் :— நீ ஒரு திருடன்; அந்த மட்டில் தெரிகிறது.

தேனார்டியள் :— அப்படிச் சொல்லும் நாக்கை அறுக்கிறேன்.

தேனார்டியன் :— அடியே, நீ சும்மா இரு. ஆம். நான் திருடனே. உம்மைப்போன்ற செல்வரால் நான் திருடனானேன். நீங்கள் மாளிகையில் சுகபோகங்கள் அநுபவிக்கிறீர்கள்; விருந்து சாப்பிட்டுக்

கொழுக்கிறீர்கள்; இருபதுபேர் உண்பதை ஒருவரே உண்டு தீர்க்கிறீர்கள்; இடம்பமான சட்டைகளைப் போட்டு மினுக்குறீர்கள். நாங்கள் குளிர் வாடையில் ஆடையில்லாது இப்படிப்பட்ட பாழ் மனையில் பட்டினி கிடந்து சாகிறோம். பசியும் வறுமையும் எம்மைத் திருடராக்கின. செல்வரின் பணக் கொழுப்பும், கருமித்தனமும் எம்மைத் திருடராக்கின. தருமப் பிரபு போல வேஷம் போடும் லட்சப் பிரபுவே, கேளும். உம்மைப்போல நான் வீடுகளில் புகுந்து குழந்தை திருடுவோனல்லன். நான் பிரெஞ்சு வீரன்; வாதர்லூ வீரன்; ஒரு தளகர்த்தனைக் காப் பாற்றினேன். எனக்கு வீரப்பட்டம் கிடைக்க வேண்டியது. இதோ பாரும், எனது வீரத்தை மெச்சி தாவீது என்னும் ஓவியர் என் படத்தை எழுதியிருக்கிறார். குண்டுகளுக்கு நடுவே ஒரு தளகர்த் தனை முதுகில் சுமந்து சென்று காப்பாற்றின சிங் கத்தைப் பாரும், படத்தில் பாருமையா. எனக்கு எத்தனைப் பெரிய மனிதர்களோ நற்சாட்சிப் பத் திரம் தந்திருக்கிறார்கள். என்னைச் சாமானியமானவ னென்று நினைக்கவேண்டா. எனக்கு ஏராளமான பணம் வேண்டும். தந்தால் விடுவேன்; இல்லையேல் சுடுவேன்; உம்மை இங்கேயே பலி வைப்பேன்; ஊம், என்ன சொல்லுகிறீர்?

லெப்ளான் அமைதியாயிருந்தான். 'இந்தக் கோடாலியாலே இவன் மண்டையைப் பிளக் கிறேன், இதோ பார்' என்று ஒரு தடித்திருடன்

கிளம்பினான். தென்னடியன் அவனைத் தடுத்து அவனுடன் சிறிது பேசினான். இது தான் சமயமென்று லெப்ளான் ஒரு தாவுத்தாவி ஜன்னலில் ஏறி, வெளியே குதிக்கத் தொடங்கினான். உடனே திருடர்கள் அவன் காலைப்பற்றி இழுத்தனர். தென்னடியன் அவன் தலைமயிரைப்பற்றி யிழுத்தான். அத்தனைப் பேருடனும் ஒரு கை பார்த்து நின்றான் கிழவன்: ஒரு தடியனை ஒரு முழங்கை பிடியால் குப்புறத்தள்ளினான்; இரண்டு திருடரை மல்லாடிக் கீழே வீழ்த்தினான். ஆனால் மீதித் திருடர் அவன் கையைப் பிடித்துத் தள்ளி, நெஞ்சில் ஏறி அழுத்தினர்: கையும் காலும் கயிற்றால் இறுக்கிக் கட்டினர்: சட்டையைச் சோதித்தனர். அதில் வண்டி வாடகைக்குத்தான் பணம் இருந்தது. பாங்கு நோட்டு இருக்குமென்று எதிர்பார்த்து ஏமாந்தனர் திருடர். ஒரு கைக் குட்டை யிருந்தது. அதைத் தென்னடியன் எடுத்துக்கொண்டான். கட்டுண்டிருக்கும் லெப்ளானுக்குப் பக்கத்தில் தென்னடியன் அமர்ந்து மெதுவாகப் பேசினான்:—

“தருமப் பிரபுவே, அகப்பட்டுக் கொண்டீர். எம்மை ஏமாற்றித் தப்பும் எண்ணத்தை விட்டுவிடும். நீர் சத்தம் போடாது அமைதியா யிருக்கிறீர். எம்மைப் போலவே உமக்கும் போலீஸ் பயம்போலிருக்கிறது. இங்கே சத்தம் போட்டாலும் கேட்காது. உம்மை இதமாகக் கேட்கிறேன். நீர் கோடீசுவரர்: எனக்குத் தெரியும். பேசாமல் 2,00,000

பணம் (ரூ 25,000) தந்துவிடும். விட்டு விடுகிறேன். இது உமக்குப் பெரிதல்ல.

லெப்ளான் பேசாமல், கலங்காமல், பதறாமல் இருந்தான்.

தென்னடியன்:—சரி, எழுதும், நான் சொல்வதை.

லெப்:—கையைக் கட்டியிருக்கிறீரே! எப்படியெழுதுவது?

தென்னடியன்:—நியாயம், இதோ வலக்கையை அவிழ்த்து விடுகிறேன். எழுதும்.

ஒரு திருடன் வலக் கைக் கட்டை யவிழ்த்தான். தென்னடியன் காயிதந் தந்து, பேனவில் மை தோய்த்துக் கொடுத்து, அடியில் வருமாறு எழுதச் சொன்னன்:—

"என் அருமை மகளே, இந்தச் சீட்டைக் கொண்டுவரும் பெண்மணியுடன் உடனே புறப்பட்டு வா, அவசரம்."

தென்னடியன்:— கையெழுத்துப் போடும்; உமது பெயரென்ன?

லெப்ளான்:— உர்பேன் ஃபாப்ரு (Urbain Fabre).

தேன்:—கைக்குட்டையிலும் U. F. (யு. ஃப) உள்ளது. சரி, உமது விலாசம் எழுதும்.

எழுதும் திருமதி ஃபப்ரு........

லெப்ளான்:— உர்பேன் ஃபாப்ரு வீடு, 17, சாந்தோமினிக் தெரு....

தென்னாடியன் கடிதத்தை மடித்தான்; தன் மனைவியிடம் கொடுத்து, "நீ அங்கிருக்கும் குதிரை வண்டியிற் சென்று **வானம்பாடியை** அழைத்துவா" என்றான்.

தென்னாடியள் சென்றனள். தனது உர்ஸுலேக் தென்னாடியள் அழைத்து வரச் செல்வதைக் கண்டு மாரியன் திடுக்கிட்டான். லெப்ளான் அமைதியாகவே யிருந்தான்.

தென்னாடியன்:—ஐயா, உர்பேன் ஃபாப்ரு, உமது செல்வ மகள் இதோ வரப்போகிறாள். அவளை வண்டியில் வைத்து, ஒரு மறைவான இடத்தில் ஒளிப்போம். நீர் ரூ. 25,000 கொண்டுவந்து கொடுத்தால் போச்சுது; இல்லையேல் பெண்ணைக் கொல்வோம். நீர் பொலீஸில் சொன்னால் உயிரிழப்பீர். உமது பெண்ணும் உயிரிழப்பாள்.

மாரியன் திடுக்கிட்டான்; தன் உயிரைக் கொடுத்தாவது காதலியைக் காப்பாற்றக் கச்சை கட்டினான்.

இச்சமயம் தென்னாடியள் வண்டியிலிருந்து இறங்கி வந்தாள். "சை! பொய் விலாசம் தந்துள்ளான். அந்த வீட்டில் உர்பேன் ஃபாப்ரு என்று யாரும் இல்லை" என்று இடி முழங்கினாள். "அடே, எங்களை எமாற்றினையா? ஹும்! இதோ, உன்னைக் கொல்லுகிறோம்!" என்று உறுமினர் கள்ளர்.

இதற்குள் லெப்ளான் தான் ஒளித்து வைத்திருந்த ஒரு கூரான நாராயத்தால் கட்டுகளை

அவிழ்த்துக்கொண்டு எழுந்து, விருட்டென்று நெருப் பண்டை சென்று, அதிற் பள பளவென்று காயும் கத்தரிக்கோலை எடுத்துப் பயங்கரமாகப் பார்த் தான். திருடர் ஒடுங்கினர். லெப்ளான் பேசினன் :—

"வறுமையினால் திருடரானீர், பரிதாபப்படத் தக்க ஏழைகாள், நான் இந்த உயிருக்கு அஞ்சவில்லை. இந்த உடல் எனக்குப் பெரிதன்று. என் மனச் சாட்சிக்கு விரோதமானவற்றைச் சொல்வேன், செய்வேன், எழுதுவேன் என்று நினைத்தீர்? நான் பயங்காளி என்று நினைத்தீர்? நீங்கள் என்னை என்ன செய்ய முடியும்? இந்தச் சூட்டுக்கோலால் சித்திரவதை செய்வீரா? இந்த உயிருக்கு நான் பயப்பட்டவனா? இந்த உடற்சுமையை நான் பெரி தாக எண்ணவில்லை. இதோ பாருங்கள் நீங்கள் கருதிய சித்திரவதையை நானே செய்துகொள்ளு கிறேன்" என்று கர்ஜித்தான்; உடனே தீப்பொறி யும் அந்தக் கத்தரிக்கோலைத் தனது கைச் சதையில் வைத்துப் பொசுக்கிக் கொண்டான். அறையெல் லாம் நிண நாற்றம் வீசியது. திருடரெல்லாம் நடுங் கினர். "பரிதாப ஜனங்களே, என்னைக்கண்டு பயப் பட வேண்டாம். நானும் உங்களைக்கண்டு பயப்பட வில்லை. உங்கள் பாபச் செயலுக்குக் காரணமான இந்தக் கத்தரிக்கோலை மட்டும் வீசி யெறிகிறேன்" என்றான் லெப்ளான்.

கத்தரிக்கோல் ஜன்னல் வழியாகக் கிர்ரென்று பறந்து போனது.

"சரி, இப்போது என்னை என்ன வேண்டுமானா லும் செய்து கொள்ளுங்கள். கடவுள் இருக்கிறார்" என்று தரும தேவதைபோல அஞ்சாது நின்றான் வெப்ளான். "அறுங்கள் கழுத்தை. வெட்டு, சொல்லு" என்று கூச்சலிட்டுத் திருடர் இந்த அஞ்சாக் கிழவனைப் பிடித்து அழுத்தினர். தென்னடியன் மேஜையினின்று ஒரு வாளை எடுத்தான்; "அறு கழுத்தை" என்றான். கழுத்தில் கத்தி வைக்கும் சமயம் ஏதோ ஒன்று தொப்பென்று அவர்கள் மேல் விழுந்தது. "என்ன? யார் எறிந்தனர்?" என்று அதை எடுத்துப் பார்த்தான் தென்னடியன். "போலீஸ்காரர் வந்திருக்கிறார்கள்" என்பது அதில் எழுதியிருந்தது. அது மகள் கையெழுத்து. பிடித்தது கிலி. "அட, நான் போகிறேன்! நான் முந்தி!" என்று திருடர் ஒரு நூலேணி வழியாகத் தப்பியோடப் பார்த்தனர். "அடா, இவன் கழுத்தைப் பசக்கென்று வெட்டாமலா போகிறீர்கள்?" என்று அலறினான் தென்னடியன். "அட போடா, அகப்பட்டுக்கொண்டால் நம் கழுத்துப் போய் விடும். ஆளிடம் பகையில்லை" என்று திருடர் சென்றனர். "நான் முந்தி, நீ முந்தி" என்று அவர்கள் சண்டை போட்டனர். "யார் முன்னே குதிப்பதென்று சீட்டுக் குலுக்கலாம்" என்று சச்சரவிடும்போது கதவு திறந்தது. "நல்லது, துரைமார்களே, காப்புப் போட்டுக்கொண்டு செல்லுங்கள்" என்று நுழைந்

தான் ஜாவர்: சுற்றிப் பார்த்துப் புன்னகைத்தான்; நெடு நாள் தேடிய பத்ரோ மின்னத் திருடர் அன்று அகப்பட்டதைக்கண்டு மகிழ்ந்தான். ஆ! ஜாவர் எப்படி வந்தான்? அந்தச் சீட்டைப் போட்டவர் யார்? காலையில் மாரியன் அறையில், "எனக்கு எழுதத் தெரியுமே" என்று தென்னடியன் மகள் எபோனி ஏதோ எழுதினளல்லவா? "போலீஸ் காரர் வந்திருக்கின்றனர்" என்றே அவள் எழுதினள். மாரியனுக்குச் சமயத்தில் அந்தக் காயிதம் கிடைத்தது. அவன் அதையே ஒரு சிறு ஓட்டாஞ்சில்லியிற் சுருட்டித் தென்னடியர் அறையில் எறிந்தான். வக்கீலல்லவா? சமயத்தில் நல்ல யுக்தி தோன்றியது. ஏன் சுடவில்லை? சுட்டால் பொலீஸார் வந்து தென்னடியனைப் பிடித்துக்கொள்வர். மாரியன் தந்தை அவனுக்கு உதவி செய்யச் சொன்னர். அதற்குப் பதிலாக அவனைப் பொலீஸாரிடம் காட்டிக் கொடுத்து அபகாரம் செய்ததாகும் என்று அவன் நினைத்தான்; ஆனல் தன் காதலியின் தகப்பனையும் விடுவிக்க வேண்டுமல்லவா? "பொலீஸ் வரவை அறிந்தால், திருடர் ஓடுவர்; லெப்ளான் தப்பிப் பிழைப்பான்" என்றே கருதினன். ஜாவர் மாரியன் துப்பாக்கியை எதிர்பார்த்தான்; நெடு நேரமாயிற்று; கேட்கவில்லை. வெளியே தென்னடியன் வண்டியேறிச் சென்று வந்ததும், ஒரு திருடன் அதில் கூடச் சென்றதும் கண்டான்; சந்தேகம் பிறந்தது; வாசற்சாவியை ஏற்கெனவே மாரியனிட

யிருந்து வாங்கி வைத்துக் கொண்டிருந்தானல்லவா? கதவைத் திறந்து உள்ளே நுழைந்தான். திருடர் தப்பியோடப் போட்டி போடும் சத்தம் கேட்டது. ஜாவர் பொலீஸ் வீரரை உஷார்ப்படுத்திப் பின்னே வரச் சொல்லித் துப்பாக்கியுடன் முன்னே தோன்றினான்.

ஜாவர்:—நில்லுங்கள். எழிக் குதிக்க வேண்டாம். தாராளமாக வாசல் வழியாகவே போகலாம். நீங்கள் ஏழு பேர். நாங்கள் ஐவர். பயப்படாதீர்கள்.

பிக்கிரனே என்ற திருடன் தென்னடியனிடம் ஒரு துப்பாக்கி தந்தான். தென்னடியன் சுட்டான். வேட்டுப் பறியவில்லை.

திருடரைக் கட்டிப் பிடித்தான் ஜாவர். பொலீஸாருடன், "ஐயா, சிறையில் எனக்குப் புகையிலை தரவேண்டும்" என்றான் ஒரு திருடன். "சம்மதம்" என்றான் ஜாவர்.

தென்னடியன் பூதாகாரமான மனைவியின் பின்னே ஒளிந்தான். தென்னடியளோ ஒரு பெரிய கல்லைத் தூக்கிக் கொண்டு, "உன் மண்டையை உடைப்பேன், பொலீஸ் பேயே, போ, எம்மைத் தொடாதே" என உருமினாள்.

ஜாவர், "மீசை முளைத்த பெண்ணே, நானும் மீசை முளைத்த ஆண்" என்று கிட்ட வந்தான். தொப்பென்று அவன் மண்டையைக் குறி வைத்துப் பெரிய கல்லைத்தூக்கிப் போட்டாள் தென்ன

டியன். ஜாவர் குனிந்தோடித் தப்பினான்; "விலங்கு போட்டு, செல்தாக் கொடுத்துக் கொண்டு போ இவர்களை" என்றான். பொலீஸ்காரன் அவ்வாறே செய்தனன்; திருடர்கள் முக மூடியை எடுத்துப் பார்த்தான்.

" ஆ! வந்தனம், உலக்கைத்தடி குல்மேர்; வந்தனம், பன்றிக்குரல் பாபே; வந்தனம், அபாயமான க்ளாக்ஸூ........" என்று எல்லாத் திருடரையும் குறித்தறிந்தான் ஜாவர்; உடனே வாக்கு மூலம் எழுதத் தொடங்கும்போது, "இவர்கள் கொல்ல நினைத்த வாதி எங்கே? வாரும்" என்றான்.

வாதியைக் காணோம். எங்கே? லெப்ளான் மாயமாய் மறைந்தான். திருடர் குதித்தோடப் போட்டி போடும்போது பசக்கென்று ஜன்னலேறிக் குதித்தோடினான் லெப்ளான். "வாதி, வானம் பாடியின் தந்தை, உர்பேன் ஃபாரு" என்று மட்டும் ஜாவர் குறித்துக் கொண்டான்.

ஜாவர் கையிற் படாமல் லெப்ளான் தப்பியதும் தெய்வாதீனமே! ஏன்? பிறகு சொல்வோம்.

ஃ ஃ ஃ

மறுநாட் காலை ஒரு சிறு தெருக்காலி வந்து கோர்போ வீட்டுக் கதவைத் தட்டினான்.

"ஆ! இதென்ன ரகளை! இன்னுமா பொலீஸா! நல்ல குடிவைத்தேன்! திருட்டுப் பயல்கள்!" என்று வைது கொண்டே கதவைத் திறந்தாள் வீட்டுக் கிழவி. ஒரு தெருக்காலிப் பையன் நின்றான்.

கிழவி:—எங்கு வந்தாய்?

பையன்:—என் அப்பாவைப் பார்க்க வந்தேன்.

கிழவி:—உன் அப்பன் சிறையிலிருக்கிறான்.

பையன்:—என் அம்மா?

கிழவி:—அந்த நீலியும் ஜெயிலில் இருக்கிறாள்.

பையன்:—என் அக்காள்.

கிழவி:—உன் அக்காளும் அப்படித்தான். போ.

பையன் கவலைப்படவில்லை; இவையெல்லாம் காலிக் கூட்டத்திற்குச் சகஜந்தான். காலிப்பையன் ஜோராகப் பாடிக் கொண்டே சென்றுவிட்டான்:—

கட்டையிலேறி—ராஜா
காக்கா வேட்டை யாடினன்!........

68. காதல் நோய்

பிடிக்கதுகிசில். இனி இந்த வீட்டில் அடி வைக்கக் கூடாதென்று தீர்மானித்தான் மாரியன். ஜாவர் கைதிகளைக் கொண்டு சென்றதும், இரவு 9-மணிக்கு மாரியன் கூர்பேரன் அறைக்கு ஓடினான். கூர்பேரன் நண்பனுக்கு அன்புடன் பாய், தலையணைகள் தந்து, படுக்கச் சொல்லி உபசரித்தான். மறுநாட் காலை, வாடகை பாக்கியைத் தந்து தீர்த்து, தனது புத்தகம், பெட்டி, கட்டில், மேஜை, நாற்காலிச் சாமான்களை ஒரு கை வண்டியில் போட்டுக் கொண்டு வந்து, கூர்பேரன் அறையிலேயே குடியேறினான் மாரியன். கூர்பேரன் அரசியல் காரண

மாக இப்போது வேறு இடத்தில் வசித்தான். அவனுடன் மாரியன் இருந்தான்.

காலையில் வாக்குமூலம் வாங்க வந்தான் ஜாவர்; தன்னிடம் நேற்று வந்து தகவல் சொன்ன வாலிப வக்கிலைக் காணும்; விசாரித்தான்; இருக்குமிடம் தெரியவில்லை; “வக்கீல் பிள்ளையாண்டான் கோழை; திருடருக்குப் பயந்து எங்கேயோ ஓடிப் போனான். அதனால் தான் தந்த துப்பாக்கிச் சத்தங் கூடக் காணும்” என்று நினைத்தான். ஆளைத் தேடினான்; காணும். ஜாவர் நினைத்தபடி முழுதும் வெற்றிபெறவில்லை. பெத்ரோ மின்னத் திருடரில் பக்காத் திருடனை மோம்பர் நாஸ் என்பவன் அகப்படவில்லை; தென்னடியன் மகள் எபோனியைக் காதலித்துத் தனியே அழைத்துச் சென்று விட்டான். பொலீஸ் வருவது அவனுக்குத் தெரிந்ததால் ஆள் தப்பினான். ஜாவர் வண்டியில் கைதியைக் கொண்டு போனான். பலே எத்தனை க்ளாக்ஸ-ு பொலீஸ் புலிகள் கண்ணில் மண்ணை யடித்து மாயமாகப் போனான்; மீண்டும் அகப்படவில்லை. பாபே புருஜன் ஆகிய இரண்டு பேரும் சிறையிலடைபட்டனர். தென்னடியனுக்குக் கடுங்காவல் கிடைத்தது. சிறையில் கண் கொட்டாக் காவல் உண்டு. அப்படியிருந்தும் பாபேயும் புருஜனும் தங்கள் சூட்சிகளைச் செய்து கொண்டேயிருந்தனர். ஒரு இரவு, ஜெயில் காவற்காரன் சுற்றி வந்து பார்க்கும் போது, புருஜன் ஏதோ எழுதிக் கொண்டிருந்தான். சட்டென்று

காவற்காரன் வந்தான். ஏதும் காணேம். காவற்காரன் சென்றதும், சிறை ஜன்னல் வழியாக ஒரு சிறு கோதுமை மா உருண்டை முகட்டு மேலே பறந்து அடுத்த அறையில் விழுந்தது. பாபே அதை யெடுத்துப் பார்த்தான். உள்ளே ஒரு கடிதம் இருந்தது. அதில் "பாபே, புளூமது (Plummet) தெருவில் ஒரு கிராதி போட்ட தோட்ட வீட்டில் கலியாணம்" என்று எழுதியிருந்தது. பாபே அதை வெளுப்புச் செய்யும் ஒரு பெண்மூலம் வெளியே எறிந்தான். இப்பெண் பெயர் மக்னை. இவள் களவாணிகளின் கையாள். அவள் அந்தச் சீட்டை எபோனியிடம் கொடுத்தாள். எபோனியும் அசலமும் தெனார்டியர் மக்கள்: சீர்திருத்தச் சாலைக்குச் சென்று, குற்றம் இல்லை யாதலால் விடுதலை பெற்றனர். எபோனி சிறையினின்று வந்ததும், மக்னை, புருஜனின் சீட்டை அவளிடம் கொடுத்து, "இந்த இடத்தை உளவு பார்த்து வா" என்றனுப்பினாள். எபோனி புளூமது தெருவிற்குச் சென்றாள். கிராதி யடித்த தோட்ட வீட்டை மெல்ல உளவு பார்த்தாள். அங்கிருப்பவர் இன்னரென்பதை அடுத்த அத்தியாயம் கூறும். ஒரு பிஸ்கோத்தைக் கொண்டு வந்து மக்னையிடம் தந்தாள். "பிஸ்கோத்துக் கருவது" என்றால், "இங்கே திருடுவதில் பயனில்லை" என்பது பொருள். அது அவர்களுக்குள் ஒரு குழூக்குறி. புருஜன் ஒரு நாள் சிறைவாசலில் பாபேயைப் பார்க்க நேர்ந்தது.

"டு-?" என்று ஜாடை காட்டினான் பாபே. "பிஸ் கோத்து" என்றான் புருஜன். தலையாட்டிச் சென்றான் பாபே. இவ்வாறு சிறையிலிருந்து கூட இவர்களது திருட்டு ராஜ்யம் நடந்தே வந்தது.

தென்னாடியன் சிறையிலடைபட்ட செய்தியைக் கேட்டான் மாரியன். அவன் தந்தை தென்னாடியனுக்கு முடிந்த உதவி செய்யச் சொல்லியிருக்கிறானல்லவா? சிறையாளருக்கு உதவி செய்வோர் ஒரு பொது உண்டியலில் பணம் போடுவதுண்டு. தென்னாடியனுக்கு என்று திங்கட்கிழமை தோறும் 5 பிரான்க் ஜெயில் உண்டியலில் இரகசியமாகப் போட்டு வந்தான் மாரியன்; அந்தப் பணங்கூட கூர்பெரனிடம் கடன் வாங்கி வந்தான். கடனை வாங்காதவன் இன்று வாங்குவானேன்?

ஃ ஃ ஃ

மாரியன் அவ்வாறு கையிளைத்தான்; மனமிளைத்தான்; உடலிளைத்தான். மனத்தைத் தன் காதலியிடம் பறி கொடுத்தான்; பெண் பித்தனானான்; ஆசைப் பொறியில் அகப்பட்டான். "காதலி, நீ எங்கிருக்கிறாய்? உன்னைக் காணாவிட்டால் உயிர் விடுவேன்!" என்றே அவன் மனம் முறையிட்டது. ஊரெல்லாம் அவன் பர பரப்பாகத் தேடினான்; அந்தக் கிழவனும், அந்தப் பெண்ணும் இருக்குமிடம் தெரியவில்லை; அவள் பெயர் உருசுல் இல்லை, "வானம்பாடி" என்பது தெரிந்தது. தென்னாடியன் சொன்னான் அல்லவா? வானம்பாடி எங்கே?

எங்கே? ஆகாயத்தில் பறக்கும் வானம்பாடிகளைக் கேட்பான் மாரியன்; "காதலீ, நான் இறக்குமுன் உன்னைக் காண்பேனா!" என்று விம்முவான். அவனுக்கு வேறு வேலை ஓடவில்லை.

வக்கில் தொழில் நடக்கவில்லை. அகராதிக்கு மொழி பெயர்ப்பதும் நின்றுபோனது. வறுமைப் புலி மாரியனைக் கௌவியது. அப்போதும் அவன் "காதலி" என்றே கதறினான்.

மாரியன் வானம்பாடியை ஒரு முறை பார்ப்பதே இந்திரபோகமெனக் கருதினான். காதல், மனிதனைக் கள்ளெனக் கலக்குகிறது! காதல் கூடினால் களிப்பு; காதல் கைகூடாவிட்டால் கசப்பு, வெறுப்பு, வேதனை! காதலின் பாதை மேடு பள்ளமல்லவா? ஒரே ஒரு காதல்தான் நிலையான இன்பமாகும்—அதுவே கடவுட் காதல். ஐம்பதாண்டு பக்கத்திலும் மாரியன் தனிமையே விரும்பினான்; தனது காதல் நினைப்புகளையெல்லாம் தினக்குறிப்பில் எழுதினான். காதலி ஜபந்தான் அவன் வேலை.

பாரிஸ் கொத்தளத்தருகே "வானம்பாடி மைதானம்" என்பது ஒரு இடம். அது தனியிடம். அந்த ஆள் நடமாட்டம் மிகவும் அரிது. தனது காதலியின் பெயரைக்கொண்ட அந்த மைதானத்திற்குத் தினம் வந்து தனித்திருப்பான் மாரியன்; அங்குச் சில நாட்கள் மாபோவைச் சந்திப்பான். 'வந்தனம்,' என்று தலையாட்டிச் செல்வது தவிர வேறு பேச்சிராது.

69. எபோனியின் உதவி

மாபோவிற்கு 80 வயது; குடு குடு கிழவனுனான்; புத்தகம், பூந்தோட்டம் ஆகிய இரண்டே அவன் நண்பர். இக்காலம் அவனது பூக்கள் விலை போக வில்லை. கொடிய வறுமை அவனைச் சூழ்ந்துகொண்டது. ஒரு வேளைக் கஞ்சிதான்; அது கூட அரிதானது. வயதால் கூனிக் குறுகிப்போன உடல் வயிற்றுக்கில்லாது தள்ளாடிப் போயிற்று. அப்படியிருந்தும், செடி கொடிகளை அருமையாகக் காத்து வந்தான் மாபோ; புதிதாக அவரித் தோட்டம் போட்டான்: புதிய புதிய செடி நூல்களைப் படித்தான்; புதிய பூஞ் செடிகள் போட்டான்.

ஒரு நாள் அவனுக்குத் துணையாயிருந்த கிழவி புளுதார்கு நோயாளுள். அவளுக்குச் சிகிச்சை செய்யவே நேரம் சரியானது. அத்துடன் உணவும் இல்லை. இருந்தாலும் அவன் மனந்தளராமல் மாலை 6-மணிக்குப் பூஞ்செடிகளிடையே உலாவிக் கொண்டிருந்தான். செடிகள் வாடியிருந்தன. மாபோ, தன்னுயிர் வாடப் பொறுப்பான்; செடி முகம் வாடச் சகியான்; "ஆகாயமே, மழை பெய்; ஒரு துளி மழை பெய்; என் குழந்தைகள் தாகத்தால் தவிக்கின்றன; முகம் வாடுகின்றன" என்று விண்ணை நோக்கி முறையிட்டான்; விண் இரங்கவில்லை; கிணற்றில் வாளியை விட்டுத் தண்ணீர் இறைக்கப்போனுன்; தண்ணீர் இழுக்கச் சக்தியில்லை; முக்கிப் பார்த்தான்;

முடியவில்லை, பலமில்லை: "ஐயோ! என் குழந்தைகளை எப்படிக் காப்பாற்றுவேன்" என்று உட்கார்ந்து வருந்தினான். அச்சமயம் அருகிலிருந்த ஒரு புதரினின்று, "தந்தை, மாபோ, நான் தங்கள் தோட்டத்திற்குத் தண்ணீர் வார்க்கட்டுமா?" என்றொரு குரல் கேட்டது. மாபோ திரும்பிப் பார்த்தான். ஒரு வாலிபப் பெண் எபோனி எதிரே நின்றாள்; கிழிச்சல் அணிந்து பஞ்சையாயிருந்தாள். அப் பெண் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்துச் செடிகளெல்லாம் செழிய வார்த்தாள். மாபோ மனங் குளிர்ந்தது. "நீ மகா ராசியாயிரு. கடவுள் உன்னைக் காப்பாற்றுவார்! என் குழந்தைகளைக் காத்த உனக்கு என்ன தருவேன்! இந்த ஏழையிடம் ஏதுமில்லையே! அம்மா, எனது செடிகளைக் காத்தாய். நீ தெய்வந்தான்" என்றான் மாபோ.

எபோனி.—இல்லை, நான் பேய். அதனால் பரவாயில்லை. எனக்கு இந்தச் சுதந்திர வாழ்வு பழக்கமானது. தந்தை, மாபோ, தங்களை ஒன்று கேட்கிறேன்.

மாபோ:—என்னம்மா?

எபோனி:—மாரியன் இருக்குமிடம் சொல்ல வேண்டும்.

மாபோ:—மாரியனா? மாரியன் பிரபு! மாரி-யன்! ஆ! அந்தப் பிரபுவா....? வானம்பாடி மைதானத்தில் அவனைத் தினந் தினம் காணலாம்.

கேட்டதுதான் தாமதம். ஆள் மாயமாய்ப்

போனுள். அவள் ஒரு வனதேவதை யென்றே மாபோ நம்பினன்.

ஃ ஃ ஃ

மாரியன், வானம்பாடி மைதானத்தில், "காதலி, என் உயிர் விடுமுன், உன்னைக் காண் பேனே!" என்று ஏங்கி நின்றான்; ஜர்மானியத்தி னின்று ஏதோ மொழி பெயர்க்கக் கருதிப் பேனு பிடித்தான். பேனுவுக்கும் அவன் கருத்திற்கும் இடையே ஒரு மதி முகம் தோன்றியது—காதலியின் பொன் முகம். பிறகு எழுத்து ஓடவில்லை. காதலி ஜபம் பண்ணிக்கொண்டிருந்தான். அருகே ஓடும் நதியில், வண்ணுத்திகள் ஆடை துவைத்தனர். மேலே பட்சி கள் கிசி கிசி என்று பாடிச் சென்றன. இந்தச் சத்தத் திற்கிடையே, "ஆ! கண்டு பிடித்தேன்" என்ருெரு காட்டுத்தொண்டை கேட்டது. திரும்பிப் பார்த் தான் மாரியன். எபோனி எதிரே நின்ருள்.

பஞ்சையாகிப் பாழடைந்த எபோனியைப் பார்த்தான் மாரியன்; "பரிதாபம்!" என்ருன். அவனைப் பார்த்ததில் அவளுக்குக் கரைகாணு மகிழ்ச்சி யுண்டாயிற்று. அமலாதனைப் (Hamlet) பார்த்த ஒபேலை (Ophelia) போல் நின்ருள் எபோனி.

"வந்தனம், தந்தை மாபோ சரியாகச் சொன் ஞர். அவர் சொன்னபடியே தங்களைக்கண்டு பிடித் தேன் இங்கு. ஆ! தங்களை எத்தனை நாளாகத் தேடினேன்! ஆறு வாரங்களாகத் தேடினேன்;

வாடினேன்; நான் சிறைக்குச் சென்றேன்; 15 நாள் அங்கிருந்தேன். என்மேல் குற்றமில்லாததால் விடுதலை பெற்றேன். தாங்கள் இப்போது அந்த வீட்டில் இல்லையோ?" என்றாள் எபோனி.

மாரியன்:—இல்லை.

எபோனி:—தெரிந்தது. ஆம், அந்த மாதிரிக் காரியம் அபாயந்தான். ஐயா, மாரியன், தாங்கள் ஏன் ஏழை மாதிரிப் பழைய சட்டை யணிந்திருக்கிறீர்கள்? தங்களைப்போன்ற வாலிபக் காளைகள் ஜோராயிருக்க வேண்டாமோ? தந்தை மாபோ தங்களைப் "பிரபு" என்றழைத்தாரே! தாங்கள் பிரபு தானே? நான் ஒரு கிழட்டுப் பிரபுவைப் பார்த்துக் கடிதம் கொடுத்திருக்கிறேன். பிரபுக்கள் பழைய கால மனிதர். சரி, இப்போது எங்கிருக்கிறீர்கள்?

மாரியன்:—பதிலில்லை.

எபோனி:—ஆ! தங்கள் சட்டையில் ஒரு கிழிசல் இருக்கிறது! நான் தைத்துத் தருகிறேன். தங்கள் முகம் சுளிந்திருக்கிறதே! என்னைப் பார்த்தால் பிடிக்கவில்லையாக்கும். நான் தங்கள் முகத்தை மலரச் செய்யவா?

மாரியன்:—எபோனி, என்ன வேண்டும்? எதற்காக இங்கு வந்தாய்? சொல்.

எபோனி:—நல்ல செய்தி கொண்டு வந்தேன். சிரியுங்கள்.

மாரியன்:—என்ன செய்தி?

எபோனி:—விலாசம் கண்டுபிடித்தேன்.

மாரியன் :—எந்த விலாசம்?

எபோனி :—தாங்கள் கேட்ட அந்தக் கிழவர் வீடு எனக்குத் தெரியும்.

மாரியன் :—அந்தக் கன்னியின் வீடா ?

எபோனி:—அந்தக் கன்னியிடமே உங்கள் மனம் போகிறது! என்னைப் பார்த்தால் பிடிக்கவில்லை போலிருக்கிறது. சரி, ஆமாம், உங்கள் கன்னி வீடு தான்.

மாரியன் :—ஆ! உடனே வா; அதை நான் காண்கிறேன்.

எபோனி :—பின்னே வாருங்கள்; தள்ளி வாருங்கள். சேர்ந்து வந்தால் விகற்பமாக நினைப்பர். என்னைப்போன்ற குமரியும் தங்களைப்போன்ற வாலிபரும் சேர்ந்து வரக்கூடாதல்லவா ?

மாரியன் :—சரி, செல் முன்னே.

எபோனி :—ஆ! இப்போது தான் தங்கள் முகம் மலர்ந்தது! எனக்கு என்ன தருகிறீர்கள்? நான் கேட்டதைத் தருகிறேன் என்றீரல்லவா?

மாரியன் :—எபோனி, நீ எனக்கு ஒரு வாக்களிக்க வேண்டும்.

எபோனி :—என்ன? தாங்கள் சொன்னபடி செய்கிறேன்.

மாரியன் :—அந்த வீட்டு விலாசத்தை உன் அப்பனிடம் சொல்லக்கூடாது.

எபோனி :—என் அப்பன் அங்கே பாராவில் இருக்கிறான். சத்தியமாக அவனிடம் சொல்லவில்லை.

மாரியன் :—வேறு யாரிடமும் சொல்லக் கூடாது.

எபோனி :—சம்மதம்.

மாரியன் :—சரி, இந்தா 5 பிரான்க்.

எபோனி :—பணமா கேட்டேன்? உங்கள் பணம் யாருக்கு வேண்டும்? இதோ எடுத்துக் கொள்ளுங்கள்.

இவ்வாறு இருவரும் பேசிக்கொண்டு புளூமது தெருவில் உள்ள ஒரு தனித்தோட்ட வீட்டை யடைந்தனர்.

70. தனி வீடு

சுமார் 80 ஆண்டுகளுக்கு முன், காரை—சுண்ணும்புக்காரர் தலைவன் ஒருவன், பாரிஸ் அரசியல் மன்றத்தில் அங்கம் வகித்தான். அவன் ஒரு அழகியை வைத்திருந்தான்; அவளுக்காகப் புளூமது தெருவில் ஒதுக்கமான, இரகசியமான ஒரு தனி வீடு கட்டினான். அந்த வீட்டில் இனி நமது கதை தொடரும். அதன் முன்னே ஒரு சதுக்கம்; பின்னே ஒரு மாடி; கீழே இரண்டு அறைகள்; மேலே படுத்துக்கொள்ள விசாலமான அலங்கார அறை; வீட்டின் முன்னால் ஒரு தோட்டம்; அதைச் சுற்றிக் கிராதி வேலி; தெருவிலிருந்து பார்த்தால் வீடு தெரியாது. இந்த

வீட்டின் பின்னே போக வர இரகசியக் கதவுண்டு. வீட்டின் அறைகள் நன்ருக அலங்கரிக்கப்பெற்றவை. சொந்தக்காரனும் அவனது வைப்பும் இறந்தபின் இத் தனி வீடு தேடுவாரின்றிப் பாழாயிருந்தது. 1829-ஆ, அக்டோபர் மாதம், போஷல்வான் என்ற ஒரு கிழவன் இந்த வீட்டை வாங்கிப் பழுது பார்த்துத் தன் மகளுடன் குடியேறினன். இந்தக் கிழவனே லெப்ளான். லெப்ளான் யார் என்பதை வாசகர் யூகிக்கலாம். அவனே நமது ஜாம்வல்ஜான். அவனுடன் இருக்கும் கன்னிகையே கோஸத். அவளே மாரியன் மனத்தைக் கவர்ந்தவள்.

ஜாம்வல்ஜான் கன்னியர் மடத்தில் இன்னொரு போஷல்வானுக இருந்ததை நாம் அறிவோம். கோஸத்தும் அங்கே படித்துக்கொண்டு கவலையற்றிருந்தாள். இருவருக்கும் அன்பு மிகவும் பெருகியது. கன்னியர் மடத்தில் நல்ல பாதுகாப்புடனும், பக்தி, பரவசத்துடனும் வாழ்ந்தான் ஜாம்வல்ஜான். பின்னேன் அதைவிட்டு வந்தான்? அது தனக்காகவல்ல; கோஸத்திற்காகவே. கோஸத் சிறுமி. அவள் பொறுப்பு அவனைச் சேர்ந்தது. கோஸத் உலகை அறியுமுன் உலகைத் துறந்த துறவியாவது ஜாம்வல்ஜானுக்குப் பிரியமில்லை. கன்னி மடத்தில் 5 ஆண்டுகள் இருந்து நல்ல பயிற்சி பெற்ருள் கோஸத். இனி இளமைக்குரிய வாழ்வை அவள் நுகர வேண்டுமென்றெண்ணினன் ஜாம்வல்ஜான். அவனுக்காக எந்த இடரையும் எதிர்த்து வெல்லத் துணிந்த

போஷல்வான் வயதால்தளர்ந்து காலஞ் சென்றான். "என் அண்ணன் ஒரு தொகை வைத்துச் சென்றான். அதைக்கொண்டு நான் இனிப் பிழைத்துக் கொள்ளு கிறேன். அன்னைமார்களுக்குப் பணிவு; வந்தனம். என் மகளை இந்த ஐந்தாண்டுகள் வைத்துக் காப் பாற்றியதற்காக ஏழையால் ஆன காணிக்கை இது" என்று 5,000 பிராங்க் செலுத்திக் கன்னி மடத்தி னின்று விடைபெற்றுக் கொண்டான் ஜாம்வல்ஜான்.

ஜாம்வல்ஜான் பொலீஸார் கண் படாமல் தக்க பாதுகாப்புகளுடன் வாழ மூன்று வீடுகள் வாங்கி னான்: புளூமதா வீட்டில் ஊன்றிக் கொண்டான்; முன்போல ஒருகால் ஜாவர் தன்னைக் கண்டுபிடித் துத் துரத்தினால், தப்பி ஒளிந்துகொள்ள மேற்குத் தெருவிலும், ஆயுதக்காரன் தெருவிலும் தனித்தனியே இடம் அமைத்துக் கொண்டான்.

புளூமதா தெருவிலுள்ள தனி வீட்டு மாடியில் கோஸத் இருந்தாள். துஸேன் என்னும் வேலைக் காரி அவளுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய் தாள். கோஸத்தின் அறையில் படுக்கப் பெரிய கட்டில் மெத்தை, அழகான திரைகளுடன் அமைந் திருந்தது. அவள் உட்காரப் பட்டு மெத்தை தைத்த அகலமான நாற்காலிகள் இருந்தன. அவள் எழுத, படிக்க, விலையுயர்ந்த வேலைப்பாடுள்ள மேஜை யிருந் தது. தரையில் அழகான இரத்தினக் கம்பளங்கள் விரிக்கப் பெற்றிருந்தன. குளிக்க, முகங் கழுவ, அழகு செய்து கொள்ள வேண்டிய ஏற்பாடுகள் இருந்

ந்தன. கண்ணுக்கு அழகான பல நிறப் பொம்மை களும் படங்களும் அந்த அறையில் விளங்கின. கோஸத்திற்காக ஒரு பீரோ நிறைய அரிய நூல்கள் இருந்தன. அவள் எழுதப் படிக்க வேண்டியவை யெல்லாம் ஆங்கிருந்தன. குளிர்காலம் முழுதும் கத கதவென்று அங்கே கணப்பு காந்தும்.

கோஸத்திற்கு இவ்வளவு சிறப்பான ஏற்பாடு களைச் செய்து, ஜாம்வல்ஜான் கீழே ஒரு எளிய அறை யில் எளிமையாக வாழ்ந்தான். படுக்க ஒரு கயிற்றுக் கட்டிலும் பாயும், இருக்க இரண்டு பிரம்பு நாற்காலி கள்; ஒரு சாதாரண மேஜை, தண்ணீர்ப் பானை, பைபிள், சில நன்னூல்கள்—இவையே அவன் அறை யில் இருந்தன. அங்கே கணப்புக் கிடையாது. சாதாரண ரொட்டியும் தண்ணீருமே அவனுணவு. வீட்டுச் செலவுகளெல்லாம் கோஸத்தின் மனப் படியே நடந்தன. கோஸத் வீட்டு எஜமானி. தான் அவள் தந்தையென்று ஜாம்வல்ஜான் துஸேனிடம் சொன்னான். வீட்டுச் சாமான் வாங்கி வருவது, சமைப்பது எல்லாம் துஸேன் வேலை. ஜாம்வல்ஜான் சமைக்க, குடிக்க வேண்டிய தண்ணீர் சுமந்து வந்தான். அவன் காவற்படை வீரன் போல உடை யணிந்து கொண்டான். அக்காலத்தில் இப்படித் தாமாகப் பலர் காவற் படையிற் சேர்ந்திருந்தனர். ஜாம்வல்ஜானுக்கு 60 வயதாயிற்று; தனது ராணுவ உடையுடன் கிளம்பும்போது 50 வயதுள்ள கம்பீர மான போர் வீரன் போல அவன் தோன்றினான்.

ஆனால், கோஸத்துடன் தனியே வெளிக் கிளம்பும் போது ஏழைத் தொழிலாளி போலவே சட்டை யணிந்து, ஒரு பெரிய தொப்பியால் முகம் மறையும் படி செல்வான்: முதலில் லுக்ஸம்பூர் தோட்டத் திற்கே சென்று வந்தான். அங்கேதான் மாரியனுக் கும் கோஸத்திற்கும் கண்ணுறவுண்டானது. ஜாம் வல்ஜான் மாலையில் கோஸத்துடன் ஜாக் முனிவர் கோவிலுக்குச் சென்று தொழுவான்; அங்குள்ள ஏழைகளுக்குத் தருமம் செய்வான். இந்தத் தருமத் தால் தென்னுடியத் திருடரிடம் அகப்பட்டு, ஜாவ ரிடம் சிக்காமல், கடவுள் துணையால் அவன் தப்பி யதை நாமறிவோம். ஜாம்வல்ஜான் தன் தனி வீட் டின் கொல்லைக் கதவு வழியாகவே போவான்; வரு வான். வாசற் கதவு மூடியே யிருக்கும். முன்புறம் கிராதி வேலி போட்ட தோட்டத்தை அவன் பண் படுத்தாது இயல்பாக விட்டு வைத்தான்; அதைக் கவனித்து அழகு படுத்தினால், அது பிறர் கவனத் தைக் கவரும் என்றே அப்படிச் செய்தான். தோட்ட வேலி நாளாகி, இணைப்புவிட்டு, அங்குமிங்கும் ஆடிப் போனது. முன்னே இரண்டு காதலரின் உல்லாச வனமாயிருந்தது இப்போது கண்ட புதர்களும், பூச்சிகளும் அடர்ந்த காடாயிருந்தது.

மாந்தர் கை வளர்த்த தோட்டம் இப்போது இயற்கையால் வளர்ந்து, முத்தும், மணியும், நட்சத் திரக் கூட்டங்களும் போல மலர் குலுங்கியது. ஆயிரக் கணக்கான வண்ணரப் பூச்சிகள் இறக்கை

முளைத்த மலர்க்கூட்டம் போல அங்குப் பறக்கும். தேனுண்டு வண்டுகள் ரீங்கரிக்கும். பலவகைப் புட்கள் சுயேச்சையாகப் பாடும். புட்கள் அங்குக் கூடு கட்டித் தமது குஞ்சுகளை இனிமையாகக் கொஞ்சும்.

வசந்த காலத்தில் இத்தோட்டம் பொன்மணித் திரள் பூத்த மரகதக் காடுபோ லிருக்கும். அதன் பின்னே விடு மறைந்திருக்கும். இவ்வாறு முன்னே இரகசியக் காதலர் வசித்த தனி வீட்டில் இப்போது இரண்டு இரகசியத் தூயர் வசிக்கின்றனர். மன்மத பவனம் மாசற்றவர் வீடானது.

---

71. கோஸத்தின் அன்பு

பூவும், புட்களும் புடை சூழ்ந்த இவ்வீட்டில் வாய்மையும் அன்பும் போல ஜாம்வல்ஜானும் கோஸத்தும் வசித்தனர். கன்னி மடத்தினின்று வரும்போது, கோஸத் சுமார் 14 வயது சிறுமி. பருவத்தின் அழகு இன்னும் துளிர்க்கவில்லை. அவள் படிப்பு முடிந்தது. சமய நூல், கடவுளன்பு ஆகிய இரண்டிலும் அவள் தேறினாள்; பூகோளம், இலக்கணம், பிரெஞ்சு நாட்டு வரலாறு, பாட்டு முதலிய பாடங்களை நன்கு கற்றாள்; மற்றப்படி உலகம் அறியாள். மங்கைப் பருவத்தைக் கன்னிமடத்தில் துறவற வாழ்வில் நீத்து, மடந்தையாய் வெளிவந்த கோஸத்

திற்கு இப்போது ஒரு தாய் இருந்தால், அவள் எண்ணம் நிறைவேறும். கன்னிப்பட்டத் தாய்மார்கள் வாழ்வை வாட்டினர். மடந்தை வேண்டுவது வாழ்வுத் தாய். வேனிற்குரிய மலர் வனப்பு இயல்பாக உண்டாவதுபோல, இளமைக்குரிய காதலும், உலகாசைகளும் இயல்பாகவே மடந்தையின் மனத்தில் அரும்பின. அந்த அரும்புகளை மாரியன் பார்வை மலர்த்தியது.

ஜாம்வல்ஜான் கிழவன் ; பிரமசாரிக் கட்டை; கோஸத்திடம் அளவற்ற அன்பு மிக்கவன். ஆனால், ஒரு மடந்தையை வாழ்விற்குப் பயிற்றுவிக்கும் கலை அவனுக்குத் தெரியாது. அக்கலை ஒரு தாய்க்கே தெரியும்.

கோஸத் இத் தனிவீட்டிலிருந்தே உலகைக் கவனித்தாள்: காடு மேவிய தோட்டத்தில் விளையாடினாள்: யாருடன்? புட்கள், மலர்கள், பூச்சிகளுடன்; எல்லையற்ற ஆகாயத்தையும், விண்மீன்களையும் கண்டு வியந்தாள்: தோட்டத்தைக் கொத்தி, வெட்டிப் பண்படுத்தினாள்: ஆங்கிருந்த ஒரு கல் மேடையில் அமர்ந்து, அடிக்கடி ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தாள்; தன்னைச் சுற்றிப் புட்களும் வண்ணாத்திப் பூச்சிகளும் கூடி விளையாடி, மரபைப் பெருக்கிக் காதலின்பம் நுகர்வதைக் கண்டாள்: தெருவிற் செல்லும் மாந்தர் நடை உடை வாழ்வைக் கூர்ந்து கவனித்தாள்.

அவள் ஜாம்வல்ஜானைத் தந்தையாக நேசித்து அன்பு செய்தாள்: தனது அலங்கார அறையில்

பட்டு மெத்தையில் இருப்பதிலும் ஜாம்வல்ஜான் அருகிலமர்ந்து பேசிக்கொண்டிருப்பதை விரும்பினுள்: தந்தையிடம் கேள்வி கேட்பாள்:—

கோஸத் :—அப்பா, குளிர் நடுக்குகிறதே! என் அறையில் மட்டும் கணப்பிருக்கிறது. நீ யேன் கணப்புக் காயாமல் இப்படிக் குளிரைத் தாங்கிக் கொண்டிருக்கிருய்?

ஜாம்வல் :—என் அருமைக் குழந்தாய், என்னை விட எவ்வளவோ நல்லோர், பெரியோர், இருக்க மனையில்லாமல் வருந்துகிருர்கள். உலகில் எத்தனையோ ஏழைகள் உடுக்கக் கந்தையில்லாது குளிரில் வருந்துகின்றனர். கடவுள் எனக்கொரு இடமும், எனது தனிமை தீர உன்னையும் தந்திருக்கிருரே! அது போதும்.

கோஸத் :—அப்பா, நான் இங்கே கணப்பு மூட்டுகிறேன்.

ஜாம்வல் :—வேண்டாம் குழந்தாய், வாழ்வில் எத்தனையோ துயர்களைப் பொறுத்தேன். இக்குளிர் எனக்குப் பொருட்டன்று.

கோஸத் :—என் அறையில் மட்டும் வெதுவெதுப்பாகக் கணப்புப்போடச் செய்திருக்கிருயே?

ஜாம்வல் :—நீ பெண் குழந்தை.

கோஸத் :—பெண்கள்தான் குளிருக்குத் தீக் காய வேண்டுமாக்கும்! ஆண்கள் இப்படிக் குளிரில் நடுங்கவேண்டுமாக்கும்?

ஜாம்வல் :—சில மனிதர்கள் இப்படித்தான்

எளிமையில் வாழ வேண்டும். அவர்களில் நான் ஒரு ஏழை.

கோஸத் :—நீ ஏழையா ?

ஜாம்வல் :—ஆம், நான் ஏழை, எளியன், தாழ்ந்தவன். அதோ சிலுவையிலிருந்து என்னைப் பார்க்கிருனே, அவன் காலடித் தூசி நான்.

கோஸத் :—நான் உன் பக்கத்திலேயே இருப்பேன். அப்போது எனக்காகவாவது இங்கே கணப் பெரியச் செய்வாயல்லவா ?

ஜாம்வல் :—அன்பே, நீ உன் அறையில் போய்ச் சௌகரியமாயிரு. நான் சற்றுத் தனியேயிருக்கிறேன்.

கோஸத் :—அதிருக்கட்டும், அப்பா, நீ யேன் அந்த மாதிரி வரட்டு ரொட்டியே சாப்பிடுகிறய்?

ஜாம்வல் :—குழந்தாய், இந்த ரொட்டி கூட அகப்படாமல் பட்டினி கிடந்து உயிர் துடிக்கும் கோடானு கோடி ஏழைகள் உலகில் இருக்கிருர்கள். அவர்களை நினைக்கும்போது, கண்ணீர் வருகிறது.

கோஸத் :—அப்பா, எனக்கு மட்டும் அறு சுவைப் பண்டங்கள் சமைக்கச் சொல்லுகிருயே!

ஜாம்வல் :—நீ குழந்தை, என் அருமைக் குழந்தை.

கோஸத் :—நீ என் அருமை அப்பா அல்லவா? உஹூம் நான் மாட்டேன். நீயும் என்னேடுதான் உண்ணவேண்டும். வரட்டு ரொட்டி சாப்பிட்டால் நானும் அதையே சாப்பிடுவேன், பார்த்துக்கொள்....

ஜாம்வல்:—வருந்தாதே குழந்தை. இந்த ரொட்டியுடன் எனக்கு மிகவும் இனிதான ஒரு அமுதை நான் உண்கிறேன். அதோ பார் சிலுவையில்; அவன் அன்பே என் ரொட்டி. அவனருளே என் பானம். அவன் ஏழை பங்காளன்; ஏழைகளுக்காக ஏழை போல வாழ்ந்தான். அவன் இரக்கமே வடிவானவன். குழந்தாய், இந்த ரொட்டி யுண்ணும் போது, "இறைவனே, இச்சிறு ரொட்டித் துண்டு கூடக் கிடைக்காது பட்டினி கிடக்கும் கோடானு கோடி ஏழை மக்களைக் காப்பாற்றும்!" என்று கண்ணீர் வடிக்கிறேன். அந்த இரக்கமே என் அமுதம்.

கோஸத்:—மாட்டேன்; அதெல்லாம் கேட்க மாட்டேன்; என்னைப்போல நீயும் நன்ருகச் சாப்பிட வேண்டும். உம் உம்...........

கோஸத்:—அழாதே, குழந்தாய், சில நாட்கள் இறைவனுக்கு நிவேதனம் செய்து நீ தருவதை உண்கிறேன்.

ஜாம்வல்:—உஹூம் தினம்...........

இவ்வாறு கோஸத் அன்பாகப் பேசுவாள்; தன்னைத் தென்னடியப் பேய்களிடமிருந்து காத்தவன் இத்தந்தையே என்று நினைந்துருகுவாள். கதியற்ற தனிக் காட்டிருளில் கைகொடுத்து, அடிமை தீர்த்து, கொடுமை விலக்கி, கண்ணீர் துடைத்துத் தன்னைப் பாசத்துடன் நேசிக்கும் இந்த முதிய பேரன்பை எண்ணி யெண்ணி நன்றி கூறுவாள்; தனக்கொரு தாய் இருந்திருக்கவே வேண்டுமென்று நினைப்பாள்;

"அப்பா, என் அம்மாள் எப்படி யிருந்தாள்? எப்படி வாழ்ந்தாள்? அவள் பெயரென்ன? ஊரென்ன? உறவென்ன?" என்றெல்லாம் கேட்பாள்; தாயின் ஆவிக்காகத் தொழுவாள்; "நேற்றிரவு கனவில் என் அம்மாள் இரண்டு தங்கச் சிறகுகளுடன் பறந்து வந்து, என்னை யணைத்து முத்தமிட்டாள்" என்பாள்; "என் அம்மாள் தேவதைகளுடன் இருக்கிறாள்" என்பாள். ஜாம்வல்ஜான் புன்னகைப்பான்; தாயைப் பற்றி எதுவும் சொல்லான். பாந்தின் பட்ட கஷ்டங்களை நினைந்து இரண்டு சொட்டுக் கண்ணீர்விட்டு மௌனமாவான். அவள் எளிமையால் வருந்தி, மானத்தை விற்றும் அளித்த கதைகளெல்லாம் கோஸத்திற்குச் சொல்வது பொருந்தாதென்றே ஜாம்வால்ஜான் பேசாதிருந்தான்; தாயின் ஆவி பரிசுத்தமாகத் தொழச் சொல்லுவான். வெளியே செல்லும்போது கோஸத் ஜாம்வல்ஜானுடன் கிளி மொழி பேசிச் செல்வாள். ஜாம்வல்ஜான் ஏராளமாகப் படித்துவைத்தான். தான் படித்ததை யெல்லாம் கோஸத்திடம் சொல்லுவான்; நல்ல கதைகளை உருக்கமாகச் சொல்லுவான்; உயர்ந்த எண்ணங்களைப் புகட்டுவான்.

72. பருவ மலர்ச்சி

கோஸத் தன்னை அழகற்றவள் என்றே கருதினாள்; பிறரும் அவ்வாறே சொல்லக் கேட்டிருந்தாள். பேணி வளர்க்கும் பெற்றோரில்லாது அவள் குழந்தைப் பருவம் கண்ணீரில் மிதந்தது.

ஒரு நாள் கோஸத் நிலைக் கண்ணாடியில் தன்னைப் பார்த்தாள்; "ஆ! நான் எவ்வளவு அழகாயிருக்கிறேன்!" என்றாள். ஆ! மொட்டு மலர்ந்தது! பருவ மலர்ச்சி அவளுக்குப் புதிய அழகை யீந்தது. கன்னி மடத்தில் இருக்கையில், "நான் அவளைப்போல அழகாயிருக்க மாட்டேனா?, இவளைப்போல் வனப்பாயிருக்கமாட்டேனா?" என்று மற்ற மடந்தையரைப் பார்த்து ஏங்குவாள் கோஸத்; இப்போது தானே மடந்தையானாள்; பருவத்திற்குரிய வனப்பும் பெற்றாள். அதற்கேற்ற கனவுப் படலங்கள் இரவும் பகலும் அவள் உள்ளத்தில் எழுந்து கொண்டேயிருந்தன. அவள் உள்ளம் ஏதோ ஒன்றை ஆவலாக விரும்பியது. அதில்லாது தன் வாழ்வின் வேர் வரண்டு போகும் என்று அவள் உணர்ந்தாள்; ஆடம்பரமான உடைகளணிந்து தன்னை அழகு செய்து கொண்டாள்; தந்தையுடன் உலாவப் போகும்போது, எதிரில் வருவோர் தன் வடிவழகைப் பார்த்து, வியந்து, "அழகான மடந்தை" என்று சொல்வதைக் கேட்டுப் பெருமை கொண்டாள். ஒரு நாள், "கொகொகொ கொஹசத்

அஅஅழகுற்றுரா யிருக்கிறாள் ரொ ரொ ரோஜாமமம மாதிரி” என்று திக்கினாள் துஸேன்.

ஜாம்வல்ஜான் மட்டும் இந்த அழகைக் கண்டஞ்சினான். “இது என்னமோ தெரியவில்லையே!” என்று ஐயுற்றான். கோஸெத் உடல் பெருத்தாள்; முகம் பொலிவுற்றாள். அவள் கூந்தலும் புதிய வனப்புற்றது. கண்கள் புதுப் பொலிவும் புதுப் பார்வையும் பெற்றன. வசந்தக் காற்றுடன் விளையாடும் வன மலர்க்கொடி போல ஒரு நாணம் அவளை அசைத்தது. அவள் புன்னகை, பவழச் செப்பில் முத்துக்களைப் பதித்தது போலிருந்தது. அவள் குரலில் புதிய பாட்டெழுந்தது. தோட்டத்தில், பூச்சி, புட்களுடன் விளையாடுவது அவளுக்கு அலுத்துப் போனது. அவள் வாழ்வு வேறொரு விளையாட்டை விரும்பியது. வாழ்வின் வினா விடைகளை அவள் மனம் அடுக்கியது. தன் உள்ளக் கனவை உலகில் வாழ அவள் விரும்பினாள். அந்தியழகில் யாரையோ எதிர் பார்த்துத் தோட்டத்திலுள்ள கல் மேடையில் அவள் தனியே நெஞ்சம் படபடக்க வீற்றிருந்தாள்.

இந்தப் பருவ மலரின் அழகையும் வனப்பையும் கண்டு ஜாம்வல்ஜானுக்குக் கிலி பிடித்தது. அவள் முகம் பொலியப் பொலிய, அவன் மனம் நலிந்தது. பத்தொன்பது ஆண்டுகள் கடுஞ் சிறையில் வருந்தி, உலகை வெறுத்து, தன்னை வெறுத்து, சாது மிரியலால் மனிதனானான் ஜாம்வல்ஜான்; ஏழைகளுக்கு உதவி செய்வதே தன் பணி யெனக் கருதி

ஞன். கோஸத் வந்த பிறகே அவன் மனத்தில் அன்பு துளிர்த்தது. கோஸத்தின் அன்பு அந்த அன்பை வளர்த்தது. இப்போது அவள் எய்திய புத்தழகு அந்த அன்பை அசைப்பது போலுணர்ந்தான். அவன் உலக வாழ்வை விரும்பவில்லை; கோஸத், "அப்பா" என்று தன்னிடம் அன்பு செய்வதையே விரும்பினான். அவன் வானின்பத்தை விரும்ப வில்லை; கோஸத்தின் அன்பையே யாதினும் பெரிதென மதித்தான். சிறையின் இருளிலும், துறவின் வரட்சியிலும் வாழ்ந்தவனுக்கு அழகின் இன்பம் தெரியவில்லை. கோஸத்தின் அழகு வெற்றி பெறப் பெற, ஜாம்வல்ஜான் தன் அன்பு தோல்வி பெற்றது போலுணர்ந்தான். ஒரு தாய் மகிழ்வதை ஜாம்வால்ஜான் அஞ்சினான்.

அரிவையின் வெற்றிவேல், அழகு; அதைக் கொண்டே அவள் தான் விரும்பும் இன்பப்பொருளை வெல்ல வேண்டும். கோஸத் பழைய உடைகளைக் கழற்றி யெறிந்தாள்; அசல் பாரிஸ் மடந்தையாரும் வியக்கும் படியான நாகரிக உடைகளைக் கவனமாக அணிந்தாள்; முகச் சாயங்களைப் பூசிக் கொண்டாள்; கண்டார் மனத்தைக் கவரும்படி தன்னை அலங்கரித்துக் கொண்டு, தந்தையுடன் உலாவச் சென்றாள். 'ஐயோ! இதென்ன விபரீதமான அழகு! இதற்கு இறக்கை முளைத்துவிடும் போ லிருக்கிறதே! என் கதி என்னவாகுமோ!' என்று ஒவ்வொரு நாளும் அஞ்சினான் ஜாம்வல்ஜான்.

"அப்பா, நான் எப்படி யிருக்கிறேன்?" என்பாள் அலங்காரி. "நன்றாயிருக்கிறாய்!" என்று பெரு மூச்சு விடுவான் ஜாம்வல்ஜான்.

அழகும் வனப்பும் பெற்ற கோஸத்தின் இளமையும் பெருமூச்சு விட்டது. கிழவனான தந்தையின் கையைப் பிடித்து உலாவச் செல்லும் கோஸத்தின் இளமை, ஒரு வாலிபன் கையைப் பிடித்துலாவ நாடியது என்று வெளிப்படையாகச் சொல்லுவோம். அத்தகைய வாலிபனும் இப்போது அவள் உள்ளத்தைக் கவர்ந்தான். யாரவன்? அவனே மாரியன்.

---

73. காதற் போர்

காதல் என்ற பேச்சே கன்னியர் மடத்திற் கேட்பதில்லை. பிரெஞ்சு மொழியில் காதலுக்கு "ஆமூர்" (Amour) என்பர். பாட்டுக்களில் "ஆமூர்" என்று வருமிடமெல்லாம்; மடத்தில் "தம்பூர்" அல்லது "பண்டூர்" என்று வாசிப்பர். தம்பூர் ஒரு வாத்தியம். பண்டூர் என்றால் முரட்டு மனிதன். சிறுமிகள் இரகசியமாக, "அடி, 'தம்பூர்' எவ்வளவு இனிமையா யிருக்கிறது! எனக்குத் தம்பூர் வேண்டாமடீ; ஒரு பண்டூர் வேண்டும்" என்று பரிகாசமாகப் பேசுவர்; காதல் இன்பம் என்றால் அப்படியிருக்குமோ! இப்படி யிருக்குமோ! என்று கனவு காண்பர். குரங்கை

நினைக்காதே என்றால், அதையே மனம் நினைக்கிறதல்லவா? "தம்பூரை நினைக்காதே" என்றால், "ஒரு பண்டிர் என் தம்பூரை மீட்டினால்" எவ்வளவு சுகமாயிருக்கும் என்று சிறுமிகள் மனத்தில் ஏக்கங் கொண்டிருப்பர். கோஸத் கன்னி மடத்தினின்று வந்தபோது, காதல் என்றால் என்ன விலை என்று அறியாள். மாரியன் விழியுடன் தன் விழி கலந்ததும், அவள் உள்ளத்தில் ஏதோ புதிய விறுவிறுப்புண்டாயிற்று. கண் மின்னல் கலக்கக் கலக்க, இருவர் மனத்திலும் காதலென்னும் மின்சாரப் புயலெழுந்தது. ஒருவரை யொருவர் பார்க்கும் போதும், நினைக்கும்போதும், ஒரு இன்பப் படபடப்பினால் உடல் சிலிர்த்தது. ஒருவரை யொருவர் வியந்தனர்; மனத்துட் புணர்ந்தனர்; வணங்கினர்; உடல் இரண்டாயினும், தாம் ஒருவரே என்று நினைத்தனர்; ஒருவரின்றி மற்றொருவர் வாழ்வு பாழெனக் கருதினர். "அவனே என்னுயிர்" என்றாள் கோஸத். "அவளே என்னுலகம்" என்றான் மாரியன். வான் வரவைப் பார்க்கும் பசும் பயிர்போல ஒருவர் வரவை மற்றொருவர் ஆவலாக நோக்கி நின்றனர்.

பேசாது பேசி, கூடாது கூடி, கைப்பற்றாது மனம் பற்றும் காதலின் அற்புத சக்திதான் என்னே!

இந்தச் சக்தியின் ஆற்றலை ஜாம்வல்ஜான் அறியான்; கோஸத்திற்கு ஒரு புதிய பேய் பிடித்ததென றஞ்சினான்; மறைவாயிருந்து புத்தகம் படிப்பதுபோல அவளையே குறிப்பாகப் பார்த்து வந்த

மாரியனை வெறுத்தான்; 'ஐயோ! நான் எவ்வளவோ துயர்ப்பட்டேன்; இடருண்டேன்; உலகில் ஒரு சுகங் காணேன். என் இறுதி நாட்களில் கோஸத் ஒரு ஆறுதலாக, அன்பாக என் முன்னிருக்கிறாள். இவள் மனத்தைக் கொள்ளை கொள்ள வந்தானே இந்தப் பாவி. கோஸத்தை யிழந்தால் நான் உயி ரிழப்பேன். அவளே என் செல்வம்; என் அன்பு; என் இன்பம்' என்று பதறினான்; குஞ்சைக் கொத்த வரும் பருந்தைக் கோழி பார்ப்பதுபோல மாரியனைப் பார்த்தஞ்சினான்; திருடனைப் பார்க்கும் நாய் விழிபோல அவனைக் குறித்தான். அது ஜாம் வல்ஜான் தன் வழக்கப்படி மூன்று மாதம் ஆயுதக் காரன் தெருவில் வசித்த காலம். மாரியன் கோ ஸத்தைத் தொடர்ந்து வீட்டைக் கண்டான்; வீட்டுக் காவற்காரனைக் கேள்வி கேட்டான். இந்த விபரம் அறிந்ததும் ஜாம்வல்ஜான் மறு நாளே புளுமது தெருவிலுள்ள இத் தனி வீட்டிற்கு வந்துவிட்டான். காதலை உள்ளடக்கிக்கொண்டு, கோஸத் பொறுமை யாயிருந்தாள். மூன்று மாதம் கழித்து, "கோஸத், லுக்ஸம்பூர் வனத்திற்கு வருகிறாயா?" என்றான் ஜாம்வல்ஜான். 'ஆஹா' என்று புறப்பட்டாள் கோஸத். எதற்காக? காதலனைக் காணவே. அங்கு மாரியன் வருவதில்லை என்று அவள் அறிந்து ஏமாந் தாள். மறுநாள், "கோஸத், லுக்ஸம்பூர் செல் வோமா?" என்று கேட்டான் ஜாம்வல்ஜான். "வேண்டாம், அங்கே ஒன்றுமில்லையே" என்று

மௌனமானாள் கோஸத்; மாரியனையே நினைத்துருகினாள்; 'அவனன்றி உலகில்லை, உயிரில்லை' என்று கருதினாள்; தனியே புலம்பினாள்; நினைந்தாள்; நலிந்தாள்; மெலிந்தாள். ஜாம்வல்ஜானுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

'கோஸத், உனக்கென்ன உடம்பு?' என்று கேட்டான் ஜாம்வல்ஜான்.

'ஒன்றுமில்லை' என்று மௌனமானாள் கோஸத்.

இரவும் பகலும் ஜாம்வல்ஜான், 'கோஸத்திற்கு ஏதோ நோய்! சொல்ல மாட்டேனென்கிறாள்' என்று நினைத்து வருந்தினான்.

'அப்பா, உனக்கு என்ன உடம்பு?' என்றாள் கோஸத்.

'எனக்கா? ஒன்றுமில்லை' என்றான் ஜாம்வல்ஜான்.

கோஸத்தின் மனத்தை மாற்ற முயன்றான் ஜாம்வல்ஜான்; அமைதியான அருணோதயத்தில் மலரழகு நிறைந்த ஒரு தனி மைதானத்திற்கு அவளைத் தன்னுடன் உலாவ அழைத்துச் சென்றான். கதிரெழுச்சியின் அழகை அவள் விரும்பினாள்; 'இருட்பனியைப் பிளந்துகொண்டு கதிரவன் எழுகின்றான். அது போலக் கவலையிருளைப் பிளந்து, என் காதலன் எழுந்தருளானோ!' என்று கலங்கினாள். இவ்வாறு உலாவவே, ஒரு காலையில் ஏழெட்டு வண்டிகளில் பொலீஸ்காரர் ஜன்மக் கைதிகளை

விலங்கு போட்டழைத்துக்கொண்டு அவ்வழியே சென்றனர். சங்கிலிகளின் கலகலச்சத்தம், பளிச்சுப் பளிச்சென்று விழும் சவுக்கடிச் சத்தம், 'மடையா, தடியா, விலங்கே, குரங்கே' என்ற வசவுச் சத்தம், 'ஐயோ! அப்பா, தெய்வமே, துயர் பொறுக்க முடியவில்லையே' என்று கைதிகள் துடித்தழும் கூக்குரல், 'பசி, பசி' என்ற முறையீடு, நாய்கூடச் சாப்பிடாத காய்ந்த ரொட்டியைக் கடித்துண்ணும் கரகரச் சத்தம்! இவற்றிடையே,

"ஐயோ தலைவிதியே—எங்கள்
ஆவி துடிக்குதம்மா!
உய்ய வழியில்லையோ—இந்த
ஊன நரகினின்றே!
தெய்வமும் சோதிக்குதே—ஐயோ
தீயிற்பட் டப்புழுப்போல்
மெய்யுயிர் வாடுதையே—இனி
வேதனை யைப்பொறுக்கோம்!"

என்று சவுக்கடி படும் கைதிகள் ஊளைக்குரலெடுக்கின்றனர். இக்காட்சியைக் கண்ட ஜாம்வல்ஜான் குடல் நடுங்கிற்று; மனம் திகைத்தது; தலைசுழன்றது. அவன் சில ஆண்டுகளுக்கு முன்னே இவ்வாறு ஜன்மக் கைதியாக இவ்வழியே தூலோனுக்குச் சென்றதை நினைத்தான்; உயிர்பதைத்தான். ஏழைக் கைதிகளின் கதியை நினைந்து, இரக்கம் மேலிட்டுக் கண்ணீர் விட்டு, உணர்வற்று நின்றான்.

கோஸத் :—அப்பா, இதென்ன? இவர்கள் மனிதர்களா?

ஜாம் :—ஆம், இவர்கள் கைதிகள்.

கோஸத் :—இவர்கள் எங்கே போகிறார்கள்?

ஜாம் :—கடுஞ்சிறைக்குப் போகிறார்கள்.

ஜாம்வல்ஜான் வெகு விரைவாகக் கோஸத்தைக் கூட்டிக்கொண்டு வீடு சேர்ந்தான். கோஸத் அக் காட்சியைப் பற்றியே கேள்வி கேட்டாள். ஜாம்வல் ஜான் அவள் அதை மறந்துவிட வேண்டுமென்றான்; மறுநாள் முதல் காலை உலாவச்செல்வதைவிட்டான்; பாரிஸில் எளியவர் எங்கு வசிக்கிறார்களோ அங்குச் செல்வான்; அவர்களுக்கு உண்ண, வுடுக்க வேண்டியதைத் தருவான். அப்போது கோஸத் தும் உடன் செல்வாள். ஏழைகளின் துயர் கண்டு அவள் மனம் இளகியது. அவர்களுக்குத் துணை செய்வது அவளுக்குப் பெரிய ஆறுதலாயிருந்தது. இச்சமயந்தான் ஜாம்வல்ஜான் தெனார்டியத் திருடரிடம் சிக்கித் தெய்வா தீனமாகத் தப்பி வந்தான். அவன் கையில் தீப்புண் இருந்ததல்லவா? அதற்குக் கட்டுக் கட்டி, கோஸத் வேண்டிய சிகிச்சை செய்தாள்; தந்தைக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொன்னாள்; தந்தைக்குத் தான் உதவியாயிருப்பதுபற்றி மகிழ்ந்தாள். அந்த மகிழ்வில் அவள் மனமும் ஏக்கமற்றுத் தெளிந்தது. அப்போது வசந்த காலம். தோட்டத்தில் பூவும் புட்களும் நிறைந்தன. கோஸத் இயற்கைப் பொலிவில்

ஆடிப்பாடி மகிழ்ந்தாள். ஆனால் இன்னும் காதலனை அவள் உள்ளம் எதிர் நோக்கியது.

---

74. கள்ளனுக்குக் கனிமொழி

தென்னடியத் திருடர் முன் சுட்டுக்கொண்ட புண் ஆறியது. "ஐயோ! வறுமையா லல்லவா ஏழைகள் பாபம் செய்கிறார்கள்" என்று தென்னடியருக்கு இரங்கினன் ஜாம்வல்ஜான்; தன் வாழ்வு முழுதும், முடிந்தமட்டும் இருந்ததைக்கொண்டு ஏழைகளுக்கு உதவுவதென்று மீண்டும் உறுதி பூண்டான்; அப்போது கோஸத்தை அழைத்துச் செல்வதில்லை; தனியே சென்றான். அந்தி மயக்கத்தில் இவ்வாறு தனியே செல்லுதல் ஆபத்து. பாரிஸ் காலிகள் புலி, நரி மாதிரி ஆட்களை வேட்டையாடி வழி பறிப்பர். அந்த அபாயமும் ஜாம்வல்ஜானை ஒரு நாள் பதம் பார்த்தொழிந்தது.

பாரிஸ் காலிகளில் தென்னடியர் மகன் குரோஷனை வாசகருக்குத் தெரியும். குரோஷனுக்கு அன்று உணவு கிடைக்கவில்லை. பசி பொறுக்க முடியவில்லை; உணவிற்காக அங்குமிங்கும் தேடியலைந்து, முடிவில் மாபோவின் தோட்டத்திற்கு வந்தான்; வேலி வழியே பார்த்தான். கை யெட்டுந் தூரத்தில் ஒரு ஆப்பிள் (பேரிலந்தை) இருந்தது. அது கிடைத்தாற் போதும். ஆனால் இரண்டடி தள்ளி ஒரு கல்

மேடையில் கிழவன் மாபோ கவலையுடன் உட்கார்ந்திருந்தான். அவனுக்குத் துணை செய்யும் கிழவி புளுதார்கு விசனப்பட்டுக்கொண்டிருந்தாள்.

கிழவி :—மாபோ, மூன்று தவணை வாடகைப் பணம் தரவேண்டும்.

மாபோ :—கனிகள் வளமில்லை. விற்கவில்லை; பணமில்லை.

கிழவி :—வீட்டுக்காரன் நம்மை வெளியேற்றி விடுவான் நாளை.

மாபோ :—வெளியேற்றட்டுமே.

கிழவி :—பிறகு எங்கே வசிப்போம்?

மாபோ :—ஆகாசத்தின் கீழே வசிப்போம்.

கிழவி :—குளிர் நடுக்குமே! நெருப்பு?

மாபோ :—வெயில் காய்ந்தால் போதும். கதிரே ஏழைகளின் கணப்பு.

கிழவி :—கசாப்புக்காரன் புலால் தரமாட்டேனென்றான்.

மாபோ :—பீடை விட்டது. ஊனை ஒழிப்போம். ரொட்டி சாப்பிடுவோம்.

கிழவி :—ரொட்டிக்காரனும் ரொக்கங் கேட்கிறானே.

மாபோ :—தோட்டத்திலுள்ள ஆப்பிள் சாப்பிடுவோம்.

கிழவி :—இப்படி எத்தனை நாள் நடக்கும்?

மாபோ :—விதியுள்ளவரை நடக்கட்டும். இறைவனிச்சை............

இதைக் கேட்ட குரோஷன் மனம் இளகியது. தன்னைப்போல இக்கிழவரும் பட்டினி கிடப்பதைக் பார்த்துருகினான் குரோஷன்.

மாபோ கல்மேடையில் கண்மூடிக்கொண்டு, 'தெய்வமே' என்று படுத்துக்கொண்டான். குரோஷன் அங்கொரு புதரில் ஒளிந்துகொண்டிருந்தான்.

அச்சமயம் அந்த வழியாக இருவர் வந்தனர். ஒருவனை அவனுக்குத் தெரியும். அவனே பெத்ரோமின்னத் திருடன் மோம்பர்னஸ். மற்றொருவர் கிழவர், ஜாம்வல்ஜான். "ஐயோ! கிழவருக்கு வந்தது ஆபத்து" என்று வருந்தினான் குரோஷன். ஆபத்து வந்தே விட்டது.

ஜாம்வல்ஜான் மென்னியை யாரோ ஒருவன் புலிமாதிரிப் பற்றித் திருகினான். திரும்பினான் ஜாம்வல்ஜான்; திருடனைப் பார்த்தான்; தனது இரும்புக் கைகளால் அவனைப் பற்றினான். குஸ்தி நடந்தது. திருடனை வீழ்த்தினான் ஜாம்வல்ஜான்; அவனை முழங்காலால் அழுத்தினான்: கையைப் பலமாகப் பிடித்துக்கொண்டான். மோம்பர்னஸ் மூச்சு வாங்கினான்; 'நமது பாச்சா இவனிடம் பலியாது' என்றுணர்ந்தான்.

ஜாம்வல் :—வாலிபனே, உன் வயதென்ன?

மோம்பர் :—பத்தொன்பது.

ஜாம்வல் :—நீ இளங்காளையாயிற்றே! வேலை செய்து பிழைப்பதற்கென்ன?

மோம்பர் :—வேலை என் விரோதி.

ஜாம்வல் :—நீ என்ன செய்கிறாய்?

மோம்பர் :—ஒன்றுஞ் செய்யவில்லை.

ஜாம்வல் :—உனக்கு ஒரு வேலையுமில்லையா?

மோம்பர் :—திருடுவதே என் வேலை.

ஜாம்வல் :—யோசித்துச் சொல். உனக்கு நல்ல வேலை தரவா? என்ன வேலை செய்ய உனக்குப் பிரியம்?

மோம்பர் :—திருட்டு, கொலை, வழிப்பறி—இவைதான் எனக்குப் பிரியம்.

ஜாம்வல் :—அப்பனே, கெட்டுப்போகாதே; மனிதப் பிறப்பை வீணாக்காதே; பாபம் சுமக்காதே; கேள்: சோம்பல் ஆளைக் கெடுக்கும். அது வாழ்வை நரகமாக்கும். திருட்டு, பாவமப்பா. ஒரு தரம் பிடிபட்டுச் சிறைக்குப் போனால், அத்தோடு உன் வாழ்க்கை யொழிந்தது. அப்பனே, இங்கு வேலை செய்யச் சோம்புகிறாய். சிறையில்? ஐயோ! அதை நினைத்தாலும் பகீரென்கிறது! கை காலில் விலங்கு மாட்டி உள்ளே அடைப்பார்கள்; வரட்டு ரொட்டியும், புழுத்த பண்டங்களும், தண்ணீரும் தருவார்கள். பகலெல்லாம், "தூக்கு மூட்டை, உடை கல், இழு செக்கு" என்று தலை நிமிராது வேலை யேவுவார்கள். 'உஸ் அப்படா' என்று மூச்சுவிட்டால் விழும் சவுக்கடி. பராக்குப் பார்த்தால் விழும் அறை. அப்பனே, அப்படி அங்கே கைதியாக வேலை செய்யச் சம்மதமா உனக்கு? சிறையை விட்டுத் தப்பலாம் என்றெண்ணுகிறாயோ? அதற்குச் சுவரிலே கன்னமிட

வேண்டும்: ஒரு நாணயத்தைக் கூராக்கிக் கதவுக் கம்பிகளைப் பெயர்க்க வேண்டும். படுக்கும் ஜமக்காளத்தைக் கிழித்துக் கயிறு போலத் திரித்து, ஜன்னலிற் கட்டிக் கீழே குதிக்க வேண்டும். அல்லது புகைப் போக்கி வழியாகத் தப்பவேண்டும்: அல்லது கக்கூஸில் ஒளிந்திருந்து தப்பவேண்டும். கண்டு பிடித்தால் அதோகதிதான். இருட்டறையில் போடுவார்: புழுத்த நாயினும் கேடாக நடத்துவர். வேண்டாமப்பா, திருட்டுத்தொழில். நீ நல்ல ஜவான். உடம்பில் பலமிருக்கிறது. ஒரு ஒழுங்கான தொழில் செய்து பிழை அப்பனே. 'நான் ஏழை: பணமில்லை' யென்கிறாயா? அது நியாயம். இந்தா இதில் ரூ. 300 உள்ளது. இதைக்கொண்டு ஏதேனும் யோக்கியமான தொழில் செய். ஒரு கடையேனும் வைத்துப் பிழை. அப்பனே, இந்தா பணம். நீ ஒழுங்கா இரு. நல்ல பெயர் வாங்கு, என்ன?

மோம்பர்னெஸ், 'சரி, சரி' யென்று தலை யாட்டிப் பணத்தை வாங்கிக்கொண்டு, 'போ, போ, கிழட்டு மடையா, அப்பாசு!' என்று போனான். ஜாம்வல்ஜான் வீட்டிற்குச் சென்றான்.

ஜாம்வல்ஜான் சொன்னது திருடன் மனத்தைக் கலக்கியது. பல நினைப்புகளுடன் திருடன் சென்று கொண்டிருக்கையில், புதரில் ஒளிந்த குரோஷன் பூனைபோலச் சென்று, திருடன் சட்டைப் பைக்குட் கையைவிட்டுப் பணமுடிப்பை யெடுத்தான்; 'தந்தை மாபோ கஷ்டப்படுகிறார்; இது அவருக்கு' என்று

மாபோ முன்னே விழும்படி வீசியெறிந்து ஒரு ஆப்பிளுடன் சென்றான்.

'ஆ! பணம்! ஆகாசத்திலிருந்து விழுந்தது!' என்று வியந்தான் மாபோ. குரோஷன் காலிப்பயல் தான். ஆனால் அவனிடம் இரக்கமும் வீரமும் விளங்கின.

---

75. காதற் கடிதம்

இவ்வாறு ஜாம்வல்ஜான் ஏழைகளை நாடிச் செல்லும் அந்தியில் கோஸத் தனியே தோட்டத்தில் உட்கார்ந்து தெருவை நோக்குவாள். ஜாம்வல்ஜான் அந்தப் பக்கமே தலை காட்டமாட்டான். இளம் பருவம், இயற்கை, வசந்தம், தென்றல், குயில், மலர்க் காட்சிகளெல்லாம் அவள் உள்ளத்தில் பல ஆசைப் புயல்களை யெழுப்பும். காதலன் நினைப்பை அவள் அடக்கிக் கொள்வாள். இக்காலந்தான் மாரியன் தேடித்தேடி யலுத்து, முடிவில் எபோனியின் துணையால் வீட்டைக் கண்டுபிடித்தான். பணம் வேண்டிய போதெல்லாம் ஜாம்வல்ஜான் இரண்டு மூன்று நாட்கள் வெளியே சென்று வருவான். யாருக்கும் அவன் செல்லுமிடம் தெரியாது. வந்ததும், தாராளமாக அவன் பணஞ் செலவிடுவான். இவ்வாறு ஜாம்வல்ஜான் வீட்டிலில்லாத ஒரு நாள், கோஸத் ஹார்மோனியம் வாசித்துக்கொண்டே,

'காட்டிலலையும் வேடர்காள்,
கண்ணிவைக்கும் வேடர்காள்,
கண்ணிவைத்துக் கிளிபிடித்துக்
கூட்டிலடைக்கும் வேடர்காள்'

என்று பாடி நிறுத்தினாள்; மணி பத்து; தோட்டத்தில் காலடிச் சத்தம் கேட்டது; திடுக்கிட்டாள்; நிலா அடித்தது; ஜன்னல் வழியே பார்த்தாள். ஆளைக் காணோம். கோஸத் அச்சமற்றவள். மறுநாள் தோட்டத்தில் உலாவும்போதும் செடிமறைவில் யாரோ இருப்பது போலக் காலரவங் கேட்டது. கோஸத் போகும்போது யாரோ மறைவாகத் தன்னை துஷ்யந்தப் பார்வை பார்ப்பது போலுணர்ந்தாள்; நிலாவில் ஆளின் சாயலும் தெரிந்தது; யாரென்று பார்க்கத் திரும்பினாள்; ஆளைக் காணோம். ஜாம்வல்ஜான் வந்ததும் இதைச் சொன்னாள். ஜாம்வல்ஜான் ஒரு தடியை வைத்துக்கொண்டு வேலிக்கதவின் அருகே இரவில் நின்று பார்த்தான். ஆளைக் காணோம். வீட்டுப் புகைப் போக்கியின் நிழல் நிலவில் தெரிந்தது. அது ஒரு தொப்பிவைத்த ஆளின் நிழல் போலிருந்தது. அதைக்கண்டுதான் கோஸத் அப்படிச் சொன்னதாக நிச்சயித்தான் ஜாம்வல்ஜான். மறுநாள் ஜாம்வல்ஜான் வெளியே சென்றிருந்தான். சோஸத் தோட்டத்தில் உலாவினாள். அவள் சற்றுச் சென்று வந்து மேடையில் அமரும்போது அதில் ஒரு கூழாங்கல் இருந்தது. அப்போது தான் யாரோ அதை வேலிக் கதவு வழியாக நுழைத்துப்

போட்டிருக்க வேண்டும். பெண்மணி திடுக்கிட்டாள்; வீட்டிற்குள் ஓடினாள். "அப்பா வந்தாரோ?" என்று துஸேனைக் கேட்டாள். "இஇஇஇல்லை" என்றாள் துஸேன். தினம் ஜாம்வல்ஜான் இரவில் நேரங்கழித்தே வருவான்.

கோஸத் :—துஸேன், வெளிக்கதவை நன்றாய்ச் சாத்திப் பூட்டவேண்டும். ஆள் நடமாட்டம் தெரிகிறது.

துஸேன் :—ப ப ப ப பயப் ப ப ப ப படட்ட வெவ் வெவ் வெவ் வேண்டாம். ந ந ந ந நான் இ இ இ இருக்கிறேன்.

கோஸத் :—அப்பா நாழி கழித்து வருகிறார். இந்தப் பொட்டலில் பெண்கள் தனியா யிருக்கிறோம்.

துஸேன் :—தி தி தி திருடனே வ வ வ வந்தாலும் கெ கெ கெ கேள்வியில்லை. க க க க காலம் ச ச சரியாயில்லை. க க க கத்தி கொ கொ கொ கொண்டு க க க கழுத்தை வெ வெ வெ வெட்டுவான் தி தி திருடன்.

கோஸத் :—யாரோ ஒருவன் நான் உட்காரும் கல்மேடையில் கூழாங்கல்லைப் போட்டிருக்கிறான். எனக்குச் சந்தேகமா யிருக்கிறது.

துஸேன் :—க க க க கள்ளனை ந ந ந ந நான் க க க க கண்டு பி பி பிடிக்கிறேன்.

அன்றிவு கோஸத் ஏதேதோ கனவுகள் கண்டாள். மறுநாட் காலை ஏழு மணிக்குத் தோட்டத்திற்கு ஓடினாள். அங்கே பெரிய கூழாங்கல் இருந்தது; எடுத்-

தாள். ஆ! அதனடியே கடிதப்பை இருந்தது. அது திறந்திருந்தும், விலாசமில்லை; கையெழுத்தில்லை; பைக்குள் ஒரு குறிப்புப் புத்தகம் இருந்தது. அதில் எழுதியிருந்ததை ஆவலாகப் படித்தாள் கோஸத்:

காதலே யுலகம்! காதலே வாழ்க்கை!
காதற் களிப்பே கடவுட் களிப்பாம்;
காதலின் மறுப்பே கவலையுந் துயரும்!
காதலின் அளிப்பே கட்டறு மின்பம்!
காதலால் உயிரைக் கடவுள் படைத்தான்;
காதலிற் றின்னுங் கண்ணிலம் பெருகவே!
விண்மீன் கணங்களு மிளிர்வன காதலால்!
தண்ணுறுங் காற்றுந் தவழ்வன காதலில்!
உண்கனி விளைவதும் உள்ளக் காதலால்.
புன்னகை யொன்றுற் பூத்திடுங் காதல்;
கண்கள் கதுவிக் கனவுகள் காணும்;
இன்னிய காதலால் எண்ணம் உயரும்;
பொன்னொளிர் வனப்பும், புதுப்புது மகிழ்வும்,
நாளொரு மேனியும், நாண்மலரழகும்,
வாள்விழி நோக்கின் வரப்பிர சாதம்.
புள்ளின் பாட்டும், பூவின் மணமும்,
கள்ளுண் வண்டும், காற்றின் உயிர்ப்பும்
அன்னமும், மானும், அழகிய கிளியும்,
வன்ன வியற்கையும், வசந்தப் பசுமையும்,
காதலர் தூதே! காசினி யெல்லாம்
காதலர் கடிதம், காதலர் பேச்சு!

காலமும் இடமும் காதலை வெல்லா ;
கால மிடத்தைக் காதலே வெல்லும் ;
காதலே காய கற்பமு மாகும் ;
காதலே தேவர் சோதிக் கனவாம் ;
கண்களாற் பேசிக் கருத்திரண் டிணைத்துப்
புண்களை யாற்றிப் புலன்களைப் பற்றி,
இமையவ ரின்பமும் இணையிலா இன்பம்
இமையி னளித்திடும் இன்பமே காதல் !
காதல் வாழ்க ! காதலர் வாழ்க !
காதலால் வாழ்வுக் கற்பக மோங்குக !
ஓங்குயர் காதலே உயிர்க்கடை யாளம் !
நீங்காக் காதலே நித்திய வாழ்வு ;
காத லற்றவர் கட்டையைப் போல்வர்.
உயிரின் இன்பமே, உயிரெனும் பசிய
பயிரினை வளர்க்கும் பைம்முகிலே யுனைப்
பிரிந்து வாழேன் ; பிதற்றியுன் பெயரை
விரிந்த வுலகெலாம் வெறிகொண் டலைந்தேன் ;
நீவே றில்லை ; நான்வே றில்லை ;
பூவே றில்லை ; நிறம்வே றில்லை ;
நானுன் யாக்கை ; நீயென் னுவி ;
நானுன் வாழ்க்கை ; நீயென் வையம் ;
உள்ளந் தாராய் ; உயிரைத் தாராய் ;
உள்ளம் வணங்கும் ஒள்ளிய காதலே !

படிக்கப் படிக்கக் கோஸத்தின் உள்ளம் படபடத்தது. இவை பல நாட்கள் எழுதிவந்த

குறிப்புகள்; பல நிற மைகளால் எழுதப்பட்டிருந்தன. முத்துப்போன்ற எழுத்துக்கள்! காதலன் உள்ளமும், உயிர்ப்பும் ஒவ்வொரு வரியிலும் விளங்குகின்றன. கன்னிமடத்தில் கற்காத காதல் இலக்கணத்தை இக்கடிதத்தில் நன்கு கற்றாள் கோஸத்.

காதலின் அற்புதத்தைக் கண்டாள்; காதலேயானாள். இக்கடிதத்தில் ஊர், பெயர், விலாசம் எதுவுமில்லை. எனினும், "அவனே! அவனே! அவனே எழுதி இங்கு வைத்திருக்கிறான். நான் இரவில் கேட்பது அவன் காலடிச் சத்தமே. அவனே என்னை நாடி இங்கு வருகிறான். என் காதலன், என் உயிர்க் காதலன் வருகிறான்" என்று மனமகிழ்ந்தாள்; தன் அறைக்குட் சென்று கதவடைத்துக்கொண்டு மீண்டும் மீண்டும் அக்காதல் வேதத்தைப் படித்தாள்; கண்ணில் ஒற்றிக்கொண்டாள்; மார்பில் வைத்துக் கொண்டாள்; உடல் பூரித்தாள்; உளம் பூரித்தாள்; பரவசமானாள்.

---

76. காதலர் கூடல்

மறுநாள் அந்திப் போதில் ஜாம்வல்ஜான் வழக்கம் போல ஏழைகளுக்குதவ வெளியே சென்றான். கோஸத் அழகான உடையணிந்து, தன்னை நன்றாக அலங்கரித்துக் கொண்டாள்; தன் கணவன் வீட்டிற்குச் செல்வது போலவே தோட்டத்திற்குச்

சென்ருள்; மணையில் அமர்வதுபோலக் கல் மேடையில் அமர்ந்தாள்; நேற்று அங்கு வந்த கல்லையெடுத்து முத்தமிட்டாள்; அப்போது யாரோ அவள் பின்னல் நின்றது போலுணர்ந்தாள்; சட்டென்று திரும்பினுள். யாரது? அவனே! அவனே! நாணத்தால் ஒதுங்கினுள் நங்கை. அவன் அவளை அணுகி, "மன்னிக்கவேண்டும். வெகு சிரமப்பட்டுத் தங்களிடம் தேடி வந்தேன். நான் நேற்று வைத்த கடிதத்தைப் பார்த்திருப்பீர்கள்; என் உள்ளத்தை அறிந்திருப்பீர்கள்; என்னைத் தாங்கள் அறிவீர்கள். லுக்ஸம்பூரில் நமது கண்கள் பொருந்தின. தாங்கள் என்னைப் பார்த்துச் சென்றீர்கள். தங்கள் விழிகள் என்னுடன் பேசின. தங்களிடம் என் மனம் ஈடுபட்டது. தாங்களே என்னுயிர் நிலை. தங்களைக் காணமுடியாமல் ஓராண்டாகத் தவித்தேன்; இப்போதுதான் தங்கள் இருப்பிடம் அறிந்தேன்; இரவுதோறும் இங்கு வந்து தங்களுக்காகக் காத்திருக்கிறேன். தாங்கள் பாடுவதைக்கேட்டு இன்புற்றேன்; தங்கள் பின்னல் வந்தேன்; தாங்கள் திரும்பியதும் மறைந்தேன். அணங்கீர், என் மனக் கோயிலில் தங்களை வணங்குகிறேன். என் காதல் தங்களுக்குப் பிடிக்கவில்லையா? ஆயின், வாழ்வும் எனக்குப் பிடிக்கவில்லை. இக்காதற் பித்தன் இப்படிப் பேசுவது தங்களுக்குக் கோபமா?" என்ருன்.

"ஓ, அம்மா!..." என்று கோஸத் வியந்து நாணி நின்ருள். காதல் கொழுந்தேறியது. மாரியன்

கன்னியைத் தொட்டான்; மார்புறத் தழுவினான். இருவர் உதடுகளும் ஒன்றாயின. இருவர் கன்னங்களும் பொருந்தின. இருவர் மார்பும் பட் பட்டென்று தந்தியடித்துக் காதல் மின்சாரம் பாய்ச்சின. இருவர் உடல்களும் ஒன்றாயின.

மாரியன் :—என்னை நீ காதலிக்கிறாய்; உண்மை தானே?

கோஸத் :—பேசாமலிரு. தெரிந்ததுதானே!

அந்தி மயங்கியது. இரு மனங்களும் ஒன்றினொன்று மயங்கின. புட்கள் பாடிக் கூண்டில் அடைந்தன. இருவர் மனங்களும் மௌனக் கூண்டில் அடைந்தன; கல் மேடை, பனி விழுகிறது; தனித் தோட்டம். காதலர் உலகையே மறந்தனர். இருவரும் ஒருவரானார். கோஸத் மாரியனானாள். மாரியன் கோஸத்தானான். காதலன் காதலியுள்ளமானான். காதலி காதலனுள்ளமானாள்.

கோஸத் :—காதலா, உன் பெயர்?

மாரி :—மாரியன். காதலி, உன் பெயர்?

கோஸத் :—கோஸத்.

ஊசியும் காந்தமும் ஒன்றாயின.

ரோமியன், ஜூலியைக் காதலித்தது போல் மாரியன் கோஸத்தைக் காதலித்தான். தோட்ட வேலிக் கதவில் ஆள் நுழையும்படியாக ஒரு இடை வெளியிருந்தது. பொழுது பட்டதும் மாரியன அதன் வழியே தோட்டத்திற்குள் நுழைந்து கல் மேடையில் அமர்வான். இருவரும் வேடிக்கையா

கப் பேசுவர்; கொஞ்சுவர்; குலாவுவர்; கைகோத்து நடப்பர்; "கண்ணே, உயிரே, கிளியே, குயிலே, மயிலே" என்று இன்னுரையாடி யணைவர். ஒருவர் அழகை மற்றவர் புகழ்வர்; தங்கள் காதல் லுக்ஸம்பூரில் துளிர்த்து, இந்தத் தனித் தோட்டத்திற் கனிந்த கதையை வர்ணிப்பர். பொழுது போவதே தெரியாது.

"என் பெற்றோர் காலஞ் சென்றனர். என் தந்தை போமெர்ஸி பிரபு. நான் மாரியன் பிரபு. என் பாட்டனார் பெரிய பணக்காரர்; முன் கோபக்காரர். அவர் கொள்கை பிடிக்காததால் நான் விலகி வந்து விட்டேன். நான் வக்கீல்" என்றெல்லாம் மாரியன் சொல்லுவான்.

"என் தாயார் காலஞ்சென்ருள். என் தந்தை பெயர் போஷல்வான். அவர் மிகவும் நல்லவர்; தினந்தோறும் ஏழைகளுக்குத் தருமஞ் செய்கிருர்; என்னிடம் உயிராயிருப்பார்" என்றெல்லாம் கோஸத் சொல்லுவாள். இருவர் மனமும் உயிரும் ஒன்று. வருங் காலத்தைப்பற்றி அவர்கள் கவனிக்கவில்லை; காதலாற் கண்டனர்; காதலாற் பேசினர்; காதலாற் கூடினர்; காதலே நாடினர். இருவர் கருத்தும் கனவும் ஒன்ருயின.

கோஸத்தின் அகமும் முகமும் புத்தொளி வீசின. மாரியன் அன்பும் அழகும் அவள் உள்ளத்திற் கோயில் கொண்டன. மகள் மகிழ்ச்சியுடனிருப்பது கண்டு ஜாம்வல்ஜான் மகிழ்ச்சியுற்ருன். புதிய

மகிழ்ச்சியின் காரணம் அவனுக்குத் தெரியாது. மாரியனை அவன் மறந்து போனான். மாரியன் பகலில் தலை காட்டுவதில்லை. இரவில் தான் காதலர் கூடுவர். அதுவும் தோட்டத்தில்: வீட்டுப் பக்கம் அடிவைப்பதில்லை மாரியன்; பத்து மணிக்கே வருவான்; நள்ளிரவு மட்டும் காதலியுடனிருந்து, பிறகு கூர்பெரன் அறைக்குச் செல்வான். கூர்பெரன் நண்பர், "மாரியன், சொல் உண்மையை, குட்டி யார்?" என்று கேலியாகக் கேட்பர். மாரியன் சிரித்துக் கொண்டு பேசாமலிருப்பான். மாரியனுக்கு உலகமெல்லாம் கோலத் மயமே. மாரியன் புளூமது தெருவிற்கு வரும்போது யாரும் அவனைக் காணார். அவன் போக்கு வரவுகள் ஒரே ஒருத்திக்கே தெரியும். அவளே தென்னாடியன் மகள் எபோனி. எபோனி பாரிஸை வட்டமிட்டுக்கொண்டிருப்பாள்; கிடைத்ததை யுண்பாள்: எதிர்ந்த இடத்திற் படுப்பாள்; மாரியன் புளூமது தெருவிற்குச்செல்வதைச் சில நாள் மௌனமாகக் கவனித்து வந்தாள். ஓரிரவில் மாரியன் அங்குச் சென்று கொண்டிருக்கும் போது, யாரோ, "வந்தனம், மாரியன்" என்றனர். அவன் திடுக்கிட்டுத் திரும்பினான்.

மாரியன்:—ஆ! எபோனியா?

எபோனி:—மாரியன், என்னை மறந்து போனாய்?....சரி இருக்கட்டும்!

அத்துடன் ஓடி மறைந்தாள் எபோனி; மறுநாள் போகாமல் மாரியனைத் தொடர்ந்து சென்று,

வெளியின் மறைவினின்று காதலரைக் கவனித்து நெஞ்சழிந்தாள். இக்காதலரை இங்குச் சற்று விடுத்து, ஜாம்வல்ஜானுக்கு வந்த மற்றோர் ஆபத்தைக் காண்போம்.

---

77. அனாதிக் குழந்தைகள்

தெனார்டியருக்கு ஐந்து குழந்தைகள் இருந்தனர். அசலம், எபோனி ஆகிய இருவரையே அவர்கள் தம்முடன் வைத்துக் கொண்டனர்; குரோஷனைத் தெருவில் முன்பே விரட்டியடித்தனர்; கடைசி யிரண்டு குழந்தைகளையும் விற்று விட்டனர்; யாருக்கு? மிஞ்ஞைனுக்கு. மிஞ்ஞைன யார்? அவள் ஒரு கூட்டுக் களவாணி; ஜில்நார்மனுக்குத் தன் வேலைக்காரி மூலம் இரண்டு குழந்தைகள் (மூத்தது பெண், அடுத்தது ஆண்) பிறந்தனவென்று முன் சொன்னோமல்லவா? இந்த மிஞ்ஞைனதான் அவள். குழந்தைகளுக்காக மாதம் ரூ. 5 கொடுத்து வந்தான் ஜில் நார்மன்; ஆறுமாதத்திற் கொருதரம் குழந்தைகளைக் காண்பான். தன் மானத்தைக் காத்துக்கொள்ள மிஞ்ஞைன, முகமறியாதபடி ஒரு சிறு சந்தில் வசித்தாள். அப்போது பாரிஸில் பரவிய கொடிய தொத்து நோயால் அந்த இரண்டு குழந்தைகளும் இறந்தன. அவற்றை அடக்கமாகப் புதைத்து விட்டாள் மிஞ்ஞைன; இச்செய்தி கேட்டால், குழந்தைகளுக்காக ஜில் நார்மன்

கொடுத்துவந்த ஐந்து ரூபாயும் போய்விடும். ஆத
லால் அதே வயதுள்ள தென்னடியர் குழந்தைகளை
மாதம் ஒரு ரூபாய் தருவதாகச் சொல்லி விலைக்கு
வாங்கித் தன் குழந்தைகளென்று காட்டினாள். மிஞ்
ஞையுடன் ஒரு ஆங்கிலப் பெண்ணும் இருந்தாள்—
படுவிபசாரி. இருவரும் திருடர்களுக்கு உடந்தையா
கிப் பல குற்றங்களைச் செய்தனர். பெத்ரோமின்னத்
திருடருக்கு இவர்கள் துப்புச் சொல்வதுண்டு. இதே
சமயம் தென்னடியன் ஜாந்தரதன் என்ற பொய்ப்
பேருடன் கோர்போ வீட்டிற் குடியேறினான். ஜாந்த
ரதன் கைதியானதும், அத்தகைய குற்றவாளிகளைத்
துப்பு விசாரித்துப் பொலிஸார் கைதுசெய்தனர்.
அச் சமயந்தான் சிறையிலிருந்த பாபே ஒரு ரொட்டி
யில் சிட்டு மடித்தெறிந்து, புளூமது தெருவில் கிராதி
வெளி போட்ட வீட்டை உளவு பார்க்கச் சொன்
னது. அச்சிட்டை மிஞ்ஞை எபோனியிடம் தந்
தாள். எபோனி, "அங்கே ஒன்றுமில்லை" என்று
பிஸ்கோத்துக் கந்தகை நாம் அறிவோம். பொலி
ஸார் உளவறிந்து, மிஞ்ஞையைக் கைது செய்தனர்.
அவளிடமிருந்த ஆங்கிலப் பெண்ணும் கைதியானாள்.
வீடு, சாமானெல்லாம் ஜப்தியாயின. அப்போது
குழந்தைகள் விளையாடச் சென்றிருந்தன; வந்து
பார்த்ததும் மிஞ்ஞையைக் காணோம். வீடு பூட்டி
யிருந்தது. ஒரு கனவானுக்குச் சீட்டெழுதி அதைப்
பெண் குழந்தை கையிற் கொடுக்கும்படி செய்திருந்
தாள் மிஞ்ஞை. அந்தச் வீட்டு விலாசம் தெரிய

வில்லை. சிட்டை ஒரு சூறுவளிக் காற்றுப் பறித்துச் சென்றது. குழந்தைகளும் தெருவழியாக, "அம்மா, பசி, அம்மா எங்கே?" என்று அழுது சென்றனர்.

பனியிரவு; குளிர் வாடை வீறிட்டடிக்கிறது. எல்லாரும் மயிராடையும் கம்பளியும் போர்த்து, வீட்டுக்குள் அடைந்து கிடக்கிறார்கள். அப்போது தெருவழியே,

"குளிர்நடுக்குது ; பசி பிடுங்குது ;
குஷி பிறக்குதடா !—சவாசு
குஷி பிறக்குதடா !"

என்று பாடிச் சீழ்க்கை யடித்து வரும் அந்தப் பையனே குரோஷன் ; யாரோ பெண்கள் கட்டிக் கிழித்ததெல்லாம் மேலே வாரிப் போட்டுக்கொண்டு நடனமாடி வருகிறான் ; "ஆ! இன்றுதானே சேவ் வாய்க்கிழமை? அண்ணாத்தை வருவானே !" என்று நினைப்பூட்டிக் கொள்ளுகிறான். குரோஷன் ஒரு க்ஷவரக் கடையில் அலங்கரித்து வைத்துள்ள காதலர் பொம்மையைப் பார்த்து, "சவாசண்ணே, புருசன் பெண்சாதி பலே சோக்கா யிருக்கிறாங்களே—ஷோக்கூ" என்று தமாஷ் பேசிக்கொண்டு, அங்கு விற்பனைக்காக வைத்திருந்த சோப்புக் கட்டிகளில் ஒன்றைத் திருடப் பார்த்தான். நாசுகன் விழித்த பேர்வழி; கவனமாயிருந்தான். அச்சமயம் முன் சொன்ன இரண்டு குழந்தைகள் குளிரில் ஆடிக் கொண்டு, பல்லுக் கிட்டிப்போய், "அம்மம்மா, பசிக்கிறதே" என்று கடைமுன் நின்றனர். "போங்

கள் சோம்பேறிக் காலிக் கழுதைகளா'' என்று கடைக்காரன் பிடித்துத் தள்ளி விரட்டினான். குழந்தைகள், "ஹோ'' என்றழுதுகொண்டே வழி நடந்தனர். குரோஷன் ஓடிப்போய் அவர்களை ஆற்றினான்.

குரோ:—அவன் கிடக்கிறான் பிச்சைக்காரப் பயல்: அழாதீர்கள், என்னருமைக் குழைந்தைகளா, உங்களுக்கு என்ன வேண்டும்?

குழ:—குளிர் நடுக்குது; இராத்திரி எங்கே படுப்போம்?

குரோ:—இதற்குத்தானா? நம்ப பங்களா இருக்கிறது. வாருங்கள் பின்னே. இதற்காக அழுவார்களா!

இரண்டு குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு மஹா பெரிய மனிதன் மாதிரி பஸ்தில் தெருவை நோக்கி ஜம்பமாகச் சென்றான் குரோஷன்:

"தலை வழிக்கும் கனவான்-தூ-தூ
தயவையும் வழித் தெறிந்தான்!''

என்றொரு பாட்டுப் பாடிக்கொண்டே சென்றான். ஒரு சீமாட்டி இந்த மூவரையும் பார்த்துச் சிரித்தாள். "வந்தனம், பொதுக்கை வண்டி!'' என்று குரோஷன் கேலி செய்து சென்றான்; ஒரு பூட்டுக்காரன் வீட்டுக்குச் சென்றான்;

"கதவு திறங்கள் அண்ணாத்தே,
காசு கொடுங்கள் அண்ணாத்தே''

என்று குழந்தைகளையும் பின்பாட்டுப் பாடச்சொல்

லிக் கதவை ஓங்கி யிடித்தான். "யாரடா பிச்சைப் படை, எடு செருப்பை!" என்று விழுந்தது வசவு.

"வசவைச் சிந்தி அண்ணாத்தே,
வாயிலே மேல்லுங்கள் அண்ணாத்தே!"

என்று பாடியாடிச்சென்றான் குரோஷன். ஒரு வீட்டில் ஒரு பிச்சைக்காரி, "ஒரு பழைய கந்தை தாருங்கள், குளிர் நடுக்குதே!" என்று முறையிட்டாள். வீட்டுக்காரன், "தடி முண்டை, போ" என்று விரட்டினான். பிச்சைக்காரி, தொடை தெரியும்படி இடுப்பில் ஒரு சிறு கந்தை யணிந்து, உடலில் ஒன்று மில்லாது குளிரிலே ஆடினாள்.

குரோஷன் மனமிளகினான்; "இந்தா இந்தப் போர்வை உனக்கு; போர்த்துக்கொள்" என்று தன் மேலிருந்த பழம் போர்வையைப் பிச்சைக் காரிக்குத் தந்தான்.

அவள், "அப்பா, நீ நல்லா யிருக்க வேண்டும்" என்று வாழ்த்தினாள்.

"ஏழைக்கேழை கைதருவான்
ஈயாக்கருமி பணக்காரன்"

என்று அந்த வீட்டிற்கு ஒரு பாட்டுப் பாடிச் சென்றான் குரோஷன். குளிர் ஆட்டுகிறது............

"ஆட்டு குளிரே—என்னை
வாட்டு குளிரே
ஆனந்தமாய்ப் பாடுகிறேன்
ஆட்டு குளிரே!"

என்று குஷியாகப்பாடிக் கூத்தாடினான் குரோஷன். குழந்தைகள் "இன்றைக்குச் சாப்பிடல்லே" என்றழுதன.

குரோஷன் :—உங்களுக்குத் தாய் தகப்பன்மார் இருக்கிறார்களா ?

குழந்தைகள் :—அம்மா, அப்பா எங்கே போனாரோ தெரியாது.

குரோஷன் :—ஹல் ; அப்படித்தான், அதுவும் சரி! நமக்கெல்லாம் தாய் தகப்பன் தலைவிதிதான்; நடுத்தெரு தான் வீடு. தெருவில் ஏதும் கிடைக்கவில்லையா?

குழந்தைகள் :—தெருவில் ரொட்டித் துண்டுகள் தேடினோம்; எல்லாம் நாய் சாப்பிட்டு விட்டது.

குரோஷன் :—நம்முடன் நாயும் போட்டி போடுகிறதே! (ஒரு ரொட்டிக்கடை வந்தது. குரோஷன் தனது சட்டைப்பைகளைத் தடவிப் பார்த்தான்; "ஆ! சபாஷ், அடி சக்கே! இந்தா ஒரு துட்டு!" என்றெடுத்தான்.) அண்ணே, இந்தா காசு; மூன்று பேர் சாப்பிட ரொட்டி கொடு (கடைக்காரனிடம் தந்தான்.) முதலாளி ரொட்டியறுத்தான். அண்ணே, நாங்கள் விருந்து சாப்பிட வேணும்; உண்டெனக் கொடு பார்ப்போம். முதலாளி ஒரு துட்டுக்கேற்ற ரொட்டியை மூன்றாக அறுத்துத் தந்தான்.

குரோஷன், "குழந்தைகளா, குண்டு தள்ளுங்கள் !" என்று ஆளுக்கொரு ரொட்டித்துண்டு தந்தான். குண்டு தள்ளுவதென்றால் காலிப் பேச்சில்

தின்று நொருக்குவது. குழந்தைகளுக்குப் புரிய வில்லை. "உங்களுக்கு என் பேச்சுப் பாடம் பண்ணி வைக்கிறேன்" என்று அழைத்துச் சென்றான் குரோஷன்; தான் ஒரு துண்டைச் சாப்பிட்டான்;

"ரோட்டிக்காரச் சுப்பன்
துட்டுத் தந்தால் இழிப்பான்!"

என்று பாடிக்கொண்டே பஸ்தீலை நோக்கிச் சென்றான். ஒரு இருட்டுச் சந்து, அங்கே முகமூடி போட்ட ஒரு ஆள் எதிர்ந்தான்.

குரோ: — மோம்பர்னுஸா?

மோம் :—குரோஷனு?

குரோ :—அட, ஆள் ஷோக்கா யிருக்கிறாயே! மாப்பிள்ளை மாதிரி யிருக்கிறாய்!

மோம் :—உஷ், பெலக்கப் பேசாதே, வா இப்படி, இந்தச் சந்துப் பக்கம்.

குரோ :—சரி, விடு.

மோம் :—நான் எங்கே போகிறேன் தெரியுமா?

குரோ :—ஊஞ்சலாடத்தான் போகிறாய்.

(ஊஞ்சல் ஆடுதல் = தூக்கு மேடை யேறுதல்.)

மோம் :—அட, கோமாளிப் பயலே, நான் பாபேயை அழைத்து வரப்போகிறேன்.

குரோ :—ஆ, பாபே பள்ளிக்கூடத்தில் இருக்கிறானே!

மோம்ப :—இன்னிக்கி அவனைச் சிறை மாற்றும்போது மெல்ல வேறே பக்கம் போய் ஒளிந்து கொட்டை பிதுக்கிட்டான்!

குரோ:—அடி சவ்வாசு; பலே பாபே!

மோம்:—அவனைக் கூட்டிக்கொண்டு பள்ளிக்கூடத்திலிருந்து இன்னும் மூன்று பேரைக் கொட்டை பிதுக்கிக்கொண்டு வரவேண்டும். அடலே, உன் உதவி வேண்டும்.

குரோ:—தமாஷாச் செய்வோம்; நம்ம வேலையே அதுதானே! கலியாணஞ் செய்வதும், பள்ளிக்கூடம் போவதும், கொட்டை பிதுக்குவதும்.

மோம்:—அடலே, உன்னை வந்து எழுப்புவேன்.

குரோ:—குசாலாக!

மோம்:—இந்தக் குட்டிகள் யார்?

குரோ:—அது நம்பப் பட்டாளம்! க்ஷவரக் கடையிலே சேர்த்தேன்.

மோம்:—நீ எங்கே செல்லுகிறாய்?

குரோ:—இந்தக் குட்டிகளை நம்ப பங்களாவில் படுக்கவைக்க.

மோம்:—அட அறுதிப் பயலே, உனக்குப் பங்களா வேறா?

குரோ:—ஆமா, நான் எனக்கு ராஜா, தனியாக அகப்பட்ட இடமெல்லாம் நமது பங்களாதான்!

மோம்:—எங்கே யிருக்குதடா உன் பங்களா?

குரோ:—யானை.

மோம்:—யானையா? யானையா?

குரோ:—அட தெரியாதா உனக்கு? நெப்போலியன் கட்டி வைத்தானே நாற்பதடி உயரத்தில், அந்த யானை தான்.

மோம் :—அட பயலே, அதிலே எப்படிடா இருப்பாய் ?

குரோ :—அதன் வயிற்றிலே ஒரு பெரிய காலி யிடம் உள்ளது. அதற்குள் நுழைய ஒரு சிறு கதவு கண்டு பிடித்தேன். உள்ளே குளிருக்கும் அடக்கமாயிருக்கும்.

மோம் :—அதில் எப்படி யேறுவாய் ?

குரோ :—'அத்தரிமாக்கு' என்று ஒரு தாவுத் தாவி உள்ளே செல்வேன்.

மோம் :—இந்தக் குழந்தைகள் ?

குரோ :—அங்கே ஒரு பழைய ஏணியிருக்கிறது. அதன் வழியே ஏற்றிவிடுவேன்.

மோம் :—நாய் வந்தால் (நாய் போலீஸ்)?

குரோ :—நாய் இன்னும் மோப்பம் பிடிக்கவில்லை. சத்தம் போடாதே, அது மறைவான இடம்; நமது பங்களா.

மோம் :—அட பயலே, நேற்றுச் சாயங்காலம் ஒரு கிழவன் வேதாந்தம் பேசி என் பிராணனை வாங்கிவிட்டு ஒரு பண முடிப்புத் தந்தானடா.

குரோ :—நிசந்தானா? அதெங்கே? டோக்-டாக்-டிக் ஆயிடுத்தோ ? (டோக்=நாய் ; டாக்=கத்தி ; டிக்=பெண். பொலீஸில் பறிகொடுத்தாயா, கூட்டுக் களவாணிகளுக்குத் தந்தாயா, அல்லது வைப்பாட்டிக்குக் கொடுத்தாயா என்கிறான்).

மோம்:—இல்லையடா, யாரோ என் பைக்குள்ளே கைவிட்டு அஸ்திக்கொண்டு போயிட்டாண்டா ?

குரோ:—அட உன்னையும் ஏமாற்றிக் கொக்குக் காட்டிட்டானா? யாரது? இப்படி ஏமாறலாமா? அதுவும் நீ! ஹ, ஹ!

மோம்:—அது கடக்கட்டுண்டா, ஒரு பலமான கலியாணம் நடக்கப் போகிறதடா.

குரோ:—அதற்குத்தான் சம்பந்திகளைக் கூட்டி வரப் போகிறாயோ?

மோம்:—ஆமடா, பயலே, உன் யானைப் பங்களாவிலே வந்து, "கிக்ரிகோ" என்பேன். எழுந்து ஓடி வரவேணும். தெரிந்ததா?

குரோ:—நான் "கோக்ரேகோ" என்று தாவி வருகிறேன். நீ இப்படித் தானே வருவாய்?

மோம்:—இல்லே, பாரு நம்மை (ஜோபியிலிருந்து பொய் மீசை யெடுத்து வைத்துக்கொண்டு) எப்படி?

குரோ:—அட ஜம்மின்னிருக்கிறாயடா? மண்டைக் கருவம் பிடித்த மட்டித்துரை மாதிரி யிருக்குதடா!

மோம்:—அட, கேளியா? இப்படித்தான் வருவேன். பெயர் போரிஷேனல் என்பேன். இந்தத் தடி வைத்திருப்பேன்.

குரோ:—அட, இது நல்ல உலக்கைத் தடிடா! எங்கே, உள்ளே என்ன? (தடியைத் திறக்கிறான்). என்ன வேலையடா! வெளியே தடி; உள்ளே கத்தி! சபாஷ்!

மோம்:—சரி, அதோ நாய், நாய்! நான் போகிறேன் கிக்ரிகோ............கவனம்!

குரோஷ:—சரி, போய் வா; கொக்ரெகோ !........

பொலீஸ்காரன் தொலைவில் வந்தான்; மோம்பர்னஸ் ஒரு சந்து வழியே ஓடினான். குரோஷன் குழந்தைகளை அழைத்துக்கொண்டு சந்துபொந்துகளில் நுழைந்து பஸ்தீலுக்கு அருகேயிருக்கும் 'யானை'க்கு வந்தான். யானையைச் சுற்றி இருட்டு 'கும்' மென்றிருந்தது; சுற்றுமுற்றும் ஆளரவமில்லாச் சுடுகாடுமாதிரி யிருந்தது. நெப்போலியன் கட்டின இந்தப் பெரிய யானையை இப்போது யாரும் கவனிப்பதில்லை. காரையெல்லாம் பிளந்து, கறுத்துப் பாசி பிடித்துப் புல் மேவிப் போயிருந்தது. யாரும் விரும்பாத இந்த யானையின் வயிற்றில் ஒரு சிறு கதவிருந்தது. அதைத் திறந்தால், உள்ளே இரண்டு பேர் படுக்க இடமிருந்தது. வெளியே பகலில் வேலை செய்யும் கூலிகள் வைத்த ஏணியிருந்தது. அதை யானையின் முன் காலிற் சாத்தினான் குரோஷன்.

குரோஷன், "நண்டுகளா, ஏறுங்கள்" என்றான். 'பயமா யிருக்கே" என்றன குழந்தைகள்.

"பயமா? அந்த வார்த்தையைச் சொல்லாதேயுங்கள். நாம் தைரியப் புலிகள் அல்லவா? இதோ ஒரே தாவு!" என்று ஏணியிற் கூடக் கால் வைக்காமல் ஏறிக் கதவைத் திறந்து உள்ளே புகுந்தான் குரோஷன்; பிறகு பெண் குழந்தையை ஏறச் சொன்னான். "அப்படி, சபாஷ், பலே, வஹ்வா,

சரி” என்று அவளைத் தைரியப்படுத்திக் கை கொடுத்து உள்ளே வாங்கினான்; உடனே கீழே குதித்தான்; “குழந்தை, நீ யேறு, குட்டி, நான் கீழிருந்து தள்ளுகிறேன்; நீ இவனை மேலே யிழு” என்றான். “சபாஷ், விடாதே, ஏலய்யா” என்று குழந்தையையும் உள்ளே கொண்டு சேர்த்து, ஏணியை அப்புறப்படுத்தித் தானும் உள்ளே குதித்தான். இரவில் காலிகளைக் கண்டாலே பொலீஸ்காரர் பிடித்துக்கொள்வர். இப்படிப் பழைய கட்டிடங்களில் இருக்கக் கண்டால், “சரித்திர சம்பந்தமான கட்டிடங்களைப் பாழ்படுத்தினர்” என்று கடுமையாகத் தண்டிப்பர். எதற்கும் துணிந்துதான் குரோஷன் இங்கிருந்தான்.

“இது தான் நமது பங்களா, தெரியுமா?” என்றான் குரோஷன்.

“குளிருக்கு அடக்கமா யிருக்கிறது” என்றனர் குழந்தைகள்.

குரோஷன் சட்டென்று ஒரு எண்ணெய்ப் பந்தத்தைக் கொளுத்தினான். யானை வயிற்றுக் குகை நன்றாய்த் தெரிந்தது. “குகை போலிருக்கிறதே” என்றான் குழந்தை. “அடே, நண்டுப் பயலே, உனக்கு இது போதாதோ? உனக்குத் துயிலெரி அரண்மனை வேண்டுமோ? உம்... ... வெளியே மழை, பனி, குளிர்; இங்கே எவ்வளவு அடக்கமா யிருக்கிறது பார். வெளியே நாய்கள், மனிதர்; இங்கே நாம் தான். வெளியே நிலாக்

கூட இல்லை; இங்கே இதோ என் விளக்கு" என்றான் குரோஷன். குரோஷன் தனது யானைப் பங்களாவில் ஒரு மூலைக் குகையில் பாய், விரிப்பு, தலையணை போட்டிருந்தான்; பாய்களில் குழந்தை களைப் படுக்க வைத்தான்; தனது போர்வையைச் சின்ன குழந்தைக்குப் போர்த்தினான்; கந்தைகளை மூட்டை கட்டிப் பெண்ணுக்குத் தலையணையாக வைத்தான்; விளக்கை யணைத்துத் தானும் ஒரு தாயைப்போல அவர்கள் பக்கத்திற் படுத்து வேடிக் கையாகப் பேசினான்; தைரியம் சொன்னான்; ஆர்கோப் பேச்சுச் சொல்லிக் கொடுத்தான். குழந் தைகள் வந்தனம் செய்து சந்தோஷப்பட்டன.

குழந்தைகாள், இனி அழக்கூடாது; தெரியுமா? தைரியமா யிருக்கவேண்டும்—என்ன வந்தாலும் சரி; நமக்கு எங்கேயாவது சாப்பாடும் இடமும் கிடைக் கும்; நானிருக்கிறேன்; தைரியமாயிருங்கள்; என் னோடிருங்கள்; எவ்வளவு வேடிக்கையாகக் காலம் போகும் தெரியுமா? உங்களை ரயிலுக்குக் கூட்டிச் செல்வேன்; ஏரிக்கு அழைத்துச் செல்வேன்; அங்கே தொப்புத் தொப்பென்று குதித்து நீந்துவேன்; அங்கே ஆடை வெளுக்கும் வண்ணாத்திகள் கோபித் துக் கொள்ளுவர். வேடிக்கையாயிருக்கும். உங் களைக் காட்சிச் சாலைக்கு அழைத்துச் செல்வேன்; நாடகத்திற்குக் கூட்டிச் செல்வேன். எனக்கு நண் பர் இருக்கிறார்கள். நான் கூட ஒரு தரம் வேஷம் போட்டு ஆடியிருக்கிறேனே. அப்புறம் பாட்டுக்

கச்சேரிக்குக் கூட்டிச் செல்வேன்; எல்லாரும் பணங் கொடுத்துச் செல்வார்கள். நான் மட்டும் சும்மாதான் போவேன்; அப்புறம் தூக்கு மேடைக்கு அழைத்துச் செல்வேன். அங்கே கூடை கூடையாகத் தலைகள் இருக்கும். தூக்குப்போடும் அண்ணாத்தையை எனக்குத் தெரியும்; காட்டுவேன். நான் பாடுவேன்; குதிப்பேன்; வேடிக்கை செய்வேன்; சிரிக்கலாம்” என்றெல்லாம் பேசி விளக்கணைத்துப் படுத்தான் குரோஷன். வானம் குமுறியது. இடியிடித்தது. ஜோவென்று மழை கொட்டியது. உள்ளே எலிப் பட்டாளங்கள் கீச்சிட்டுத் திரிந்தன. எலிகள் நுழையாதபடி பின்னற் கம்பியினால் தனது படுக்கை யறையைத் தடுத்திருந்தான் குரோஷன். குழந்தைகள் பயப்பட்டன. “பயப்படாதீர்கள்: நானிருக்கிறேன்: எலிகள் கிட்ட வந்தால் விரட்டுகிறேன்” என்று தைரியஞ் சொன்னான் குரோஷன். எல்லாரும் யானை வயிற்றில் நன்றாகத் தூங்கினர்.

மணி நான்கு. “கிகிரீகி” என்று சத்தம் கேட்டது. “கொக்ரோகோ” என்று பதில் கொடுத்துக் கதவைத் திறந்து கீழே குதித்தான் குரோஷன். போலிஷெனல் (மோம்பர்னாஸ்), “வா சீக்கிரம் பின்னோடே” என்று குரோஷனைக் கையோடு இழுத்துச் சென்றான். மழை! இருள்! நகரம் உறங்குகிறது. இவர்கள் எங்கே செல்லுகிறார்கள்? பார்ப்போம்.

78. சிறை தப்புதல்

பாபே, குல்மேர், புருஜன், தென்னுடியர் ஆகிய நால் வரும் சிறையை விட்டு எப்படியோ போய்க்க ஏற்பாடு செய்துவிட்டனர். இவர்களுக்கு மோம்பர் னுஸ் வெளியிலிருந்து துணைசெய்தான். காலையில் சிறை மாற்றும்போது, பாபே கிழக்கே செல்வதற்குப் பதிலாக மேற்கே சென்று கக்கூஸில் ஒளிந்து தப்பி விட்டான். சிப்பாய்கள் அவனைக் கண்டுபிடிக்கப் பரபரப்பா யிருக்கும்போது இரவில் மற்ற மூவரும் தப்ப வழி செய்தனர். சிறை கல்லுக்கட்டிடம்; இரும்புக் கதவுகளால் பந்தோபஸ்து செய்யப்பெற் றது. சுவரின் உயரத்தில் ஒரு பலகணி யிருக்கும். அதன் மூலமே வெளிச்சம் வரும். புருஜன் முதலில் இருந்த சிறையில் எப்படியோ ஒரு கயிறு திரித்து வைத்துக் கொண்டான். அபாயமானவனென்று அவனைப் பந்தோபஸ்தான அறையில் அடைத்தனர். அங்கு அவன் குல்மேரைக் கண்டு மகிழ்ந்தான். அங்கு அவனுக்குப் பலமான ஆணியும் கிடைத்தது. அவனிருந்தது ஒரு பழைய அறை. அதில் ஒரு நீண்ட புகைபோக்கி யிருந்தது. அதனருகேதான் இரண்டு கைதிகளின் படுக்கையுமிருந்தன. நரியும் பலியும் சேர்ந்தால் கேட்பானேன்? தென்னுடியன் அவர்களுக்கு நேரே மேலறையில் இருந்தான். அவ னுக்குப் பலமான காவல் இருந்தது. அப்படி யிருந்

தும் எவ்விதமோ ஒரு புட்டி விஷங் கலந்த சாராய மும், ஒரு பெரிய ஆணியும் அவன் வசப்பட்டன.

பாபே ஓடிப்போனதைக் கேட்டதும் புருஜன் ஆணியால் புகைப்போக்கியை அடைத்துக்கொண்டிருந்த காரையை நோண்டியெறிந்தான். காரை தன் படுக்கையில் விழுந்ததால் சத்தம் கேட்கவில்லை. மேலும் மழையும் இடியுமா யிருந்தது. இரவு ஒரு மணிக்குப் புருஜனும், குல்மேரும் புகைப்போக்கிக் குழாய்வழி யேறி, உச்சியிற் சென்று, கூரையில் இறங்கினர்: அங்கே நீட்டிக்கொண்டிருந்த ஒரு உத்தர நுனி வளையத்தில் கயிறு கட்டிக் கீழே யிறங்கி, வெளிப்புறக் கதவைத் திறந்துகொண்டு தெருவிற்கு வந்து தப்பினர். அங்குப் பாபேயும் மோம்பர்னேஸும், "சபாஷ்! நல்லாக் கொட்டை பிதுக்கினீங்க!" என்று தட்டிக் கொடுத்தனர். புருஜன் புகைப் போக்கியில் ஏறித் தப்புவதைப் பார்த்த தெனார்டியன் தானும் எழுந்தான்.

தெனார்டியன் அபாயமான கொள்ளைக்காரனென்று மேலே தனியறையில் அடைக்கப்பட்டான்; ஐம்பது ராத்தல் கனமுள்ள விலங்கு மாட்டப்பெற்றான்; மாலை நாலு மணிக்குக் கறுப்பு ரொட்டியும் மொச்சைக் குழம்பும் பெற்றான். கண்கொட்டாது இரண்டு மணிக்கு ஒரு காவலாள் அவனைக் கவனித்தான். இரண்டு மணிக்கு ஒரு காவற்காரன் வந்து அவனைப் பார்த்துச் சென்றான். அவனுக்குப் பதிலாக இன்னொருவன் வந்தான். நாலு மணிக்குப் பதி

லான் வரும்போது இவன் மயங்கிக் கிடந்தான். அவனது துப்பாக்கியைக் காணோம். சாராயப்புட்டி பாதி காலியாயிருந்தது. ஐயோ! திருடர் தப்பிவிட்டனர்! வாருங்கள்! வாருங்கள்! என்று கூச்சலிடுகின்றார் காவலர். அப்போது தென்னாடியன் கூரைக்குக் கூரை ஏறிக் குதித்துக் குளிக்கும் அறையில் தாவிக் குதித்து, மற்றொரு சுவரேறி அபாயமான நிலையிலிருந்தான். சிறிது தாமதித்தால், காவலர் பிடித்துக் கொடுமை செய்வர்; கீழே குதித்தால் ஆள் செத்தான். காவலர் விளக்குப்போட்டுக் கைதிகளைத் தேடுகின்றனர். தென்னாடியன் திகைக்கிறான். அப்போது சுவரின் கீழே தெருவில் ஒருவன் சும்மா நின்றான். இருவர் பேசினர்.

"அட இங்கேயிருந்தால் மறுபடி பள்ளிக்கூடம் போகவேண்டியது தான்.

"நில்லடா பாபே" கிடங்கண்ணனைக் கூட்டிச் செல்வோம். (கிடங்கண்ணன் = கட் கிடங்குத் தென்னாடியன்).

"ஆ! அதோ வந்துட்டாண்டா கிடங்குக்காரன். அட வீசுடா கயிறு!"

"அட, ஒரு சிறு பயலை மேலே யேற்றிக் கயிறு தரச் சொல்ல வேணுமடா."

"ஆம், இதோ பயலைக் கொண்டு வருகிறேன்." இச்சமயந்தான் மோம்பர்னாஸ் ஓடிச்சென்று, 8-நிமிஷத்தில் குரோஷனுடன் வந்தான். குரோஷன், "அச்சா, அண்ணாத்தைகளா, சரி, சரி" என்றான்.

மோம்பர் :—பயலே, இந்தா கயிறு; மேலேறு. "நான் பெரியவன்; நீங்கள் குழந்தைகள்" என்று சொல்லிக் குரோஷன் மேலேறினன்; "ஆ! என் அப்பனு, சரி சரி" என்ருன்.

தென்னடியன் கயிற்றைக்கட்டி யிறங்கித் தெருவில் வந்து குதித்தான்.

குரோஷன், "என் குழந்தைகளைக் கவனிக்க வேண்டும்" என்று யானைப் பங்களாவிற்கு ஓடினன்.

தேன் :—சரி, தப்பினேம். மூர்த்தம் எங்கே?

தூல்மோர் :—அந்தக் கிராதி வீட்டில்தான்; சரியான கலியாணம்; தாலிகட்ட வேண்டும்.

பாபே :—மின்னைதான் பிஸ்கோத்துத் தந்தாளேடா.

குல்மோர் :—இருந்தாலும், போய்ப் பார்ப்போம்.

மோம்பர் :—அந்த விசுக்கான் யார் தெரியுமா?

தேன் :—எந்த விசுக்கான்?

மோம்பர் :— சுவரேறி உனக்குக் கயிறு தந்தானே அவன். அவன் உன் மகன்.

தேன் :—அப்படியா? இருக்கட்டும்.

———

79. திருடர் வருகை

இனிப் புளூமது தெருவின் தனி வீட்டிற்கு வருவோம். 3-6-1832. மாரியன் கோஸத்தைப் பார்க்க வழக்கம்போல வந்தான்; வழியில் எபோனியைக் கண்டான்; காணுதவன்போல வேறு தெருவழியே திரும்பிப் புளூமது வீட்டுத் தோட்டத்தில் நுழைந்தான். எபோனி அவனை மெல்லத் தொடர்ந்து சென்று, வேலிக் கதவருகே ஒளிந்து கொண்டாள். மணி பத்து. யாரோ ஒரு தடியாள் தோட்டக் கதவண்டை வந்தான்; சுற்றிப் பார்த்துச் சென்றான்; பிறகு ஆறு பேர் வந்தனர். அவர்கள் கையில் வாளும், துப்பாக்கியும் இருந்தன. அவர்கள் காதோடு பேசினர்.

திருடர் :—இங்கேதான் கலியாணம் (கொள்ளை).

ஜாந்தரதன் :—வெள் வெள் (நாய்) இருக்குதோ?

திருடர் :—இல்லை; இருந்தால், மருந்து (விஷந் தட்விய இறைச்சி) இதோ.

ஜாந்தரதன் :—தாலி கட்டத்தானே (ஆளைக் கொல்லத்தானே)?

திருடர் :—ஆமாம், எல்லாம் பளபளான்னிருக்குது....

ஜாந்தரதன் :—இந்தக் கிராதி இற்றுப்போனது (அசைத்து).

திருடர் :—ஒரே போடு, உள்ளே போ.

ஜாந்தரதன் :—வேண்டாம். இதோ ஒன்று ஆடுது. அதை விலக்கிக்கொண்டு நுழைவோம்.

திருடர் :—சரி, நடத்து வேலையை.

பாரியன் எந்தக் கிராதியை விலக்கி உள்ளே நுழைந்தானோ அதையே ஒரு திருடன் விலக்கினான். சட்டென்று யாரோ அவன் கையைப் பற்றித் தடுத்தனர்.

அடே, 'வெள் வெள்' என்று திடுக்கிட்டான் ஜாந்தரதன் ஆள். திடீரென்று அவன் முன் ஒரு பெண் எழுந்தாள்.

திருடர் :—அடே, உன் மகளடா!

ஜாந்தரதன் :—கழுதை, இங்கெங்கு வந்தாய்? போ.

கிராதியை அசைத்தவன் தென்னடியன். கையைப் பிடித்தவள் எபோனி. வந்தவர் திருடர்: குல்மேர், க்ளாக்ஸூ, பாபே, புருஜன், மோம்பர்னஸ்; சிறையினின்று தப்பி ஜாம்வல்ஜான் வீட்டைக் கொள்ளையடிக்கக் கொலைக் கருவிகளுடன் வந்தனர். எபோனி அவர்களைத் தடுத்தாள். தென்னடியன் முனிந்தான்.

ஜாந்தரதன் :—எங்கள் பிழைப்பைக் கெடுக்காதே போ, பைத்தியமே : எங்களைத் தடுக்காதே. ஏனிங்கு வந்தாய்?

எபோனி :—நீயேனிங்கு வந்தாய்அப்பா? நான் தான் மீன்ஜைமூலம் பிஸ்கோத் அனுப்பினேனே. இங்கே ஒன்றுமில்லை. அப்பா, நீ போ. என்னை

அணைத்துக்கொள், அருமை யப்பா, நீ சிறையைத் தப்பினயா ?

ஜாந்தரதன் :—சரி, உன்னைத் தழுவிக் கொள்ளுகிறேன். நான் பள்ளிக்கூடத்திலிருந்து வந்துவிட்டேன். இத்துடன் செல்.

எபோனி :—எப்படித் தப்பினுய் ? அம்மா எங்கே? சொல் விவரமாய்.

ஜாந்தரதன் :—அம்மாள் பள்ளிக்கூடத்தில் சுகமாயிருக்கிருள். நீ போ உடனே, உம்........

எபோனி :—நான் போகமாட்டேன், உஹூம்.

ஜாந்தரதன் :—போ, கழுதை. இத்தனைப் பேர் வேலையைக் கெடுக்காதே, போ.

எபோனி :—நல்லது, புருஜன்; வந்தனம் மோம்பர்னஸ்; என்னைத் தெரிகிறதா குல்மோர் ? வந்தனம் பாபே, க்ளாக்ஸூ.

ஜாந்தரதன் :— எல்லாருக்கும் வந்தனம், எபோனி. நீ பேசாது போ. கலியாணம் தடைப்படுகிறது; நேரமாயிற்று.

எபோனி:—என்னருமை மோம்பர்னஸ்.

மோம்பர்னஸ் :—சீ, என் கையைப் பிடிக்காதே. உருவிய வாள் இருக்கிறது, கவனம்.

ஜாந்தரதன் :—உம், விலகு................

எபோனி :—குல்மோர், உன் கையை என் மார்பில் ஒற்றிக்கொள்ளுகிறேன்.

குல்மோர் :—சரி, விடு கையை. நாங்கள் உள்ளே போகிறோம்.

எபோனி :—உள்ளே என்ன இருக்கிறது? நான் சொல்லுவதில் நம்பிக்கை யில்லையா? இங்கு யாரு மில்லை. வீடு காலி.

குல்மோர் :—அதோ விளக்குத் தெரிகிறது. இங்கே இரண்டு பெண்கள் இருக்கின்றனர்.

எபோனி :—அவர்கள் ஏழைகள். கையில் ஒரு காசு கிடையாது.

குல்மோர் :—நீ போ, பேயே. நாங்கள் வீட்டில் நுழைந்து எங்கள் வேலையை முடிக்கிறோம். போ.

ஜாந்தரதன் :—நுழை உள்ளே.

எபோனி :—மோம்பர்னஸ், நீ நல்ல பிள்ளை. உன்னைக் கெஞ்சுகிறேன். உள்ளே வராதே.

மோம்பர்னஸ் :—உனக்குத் தாலி கட்டி (உன் கழுத்தை வெட்டி) இந்த வீட்டில் கலியாணம் நடத்துவேன். உஷார்.

எபோனி :—இந்த வீட்டில் நுழைவீரா?

மோம்பர்னஸ் :—ஆம், ஆம், தடுக்காதே.

எபோனி :—முடியாது. நான் விடமாட்டேன். இந்தக் கதவைத் தொட்டால் நான் கூப்பாடு போடு வேன். அதோ நாய்கள்: உங்களைப் பிடித்துக் கொள்ளும். போங்கள் பேசாமல்.

ஜாந்தரதன் :—இந்த எழவு குட்டி எல்லாம் செய்வாள், துணிந்த கழுதை.

திருடர்கள் :—இதை ஒரு போடு போட்டுப் போ அண்ணே.

எபோனி :—நீங்கள் நாலு ஆண் பிள்ளைகள்,

நான் ஒரு பெண் பிள்ளை. பார்ப்போம். எனக்குப் பயமில்லை. நூறு ஆண் பிள்ளைகளுக்கு நான் பதிற் சொல்லுவேன். கிட்ட வந்தால் சத்தம் போடுவேன். உஷார்; நீங்கள் வேறிடம் பாருங்கள். இங்கே வரக் கூடாது. இது என் ஆணை.

திருடர்கள் :—எங்களைக் கண்டு பயமில்லையா உனக்கு?........இதோ பார்........பெண்ணே........

எபோனி :—பயமில்லை; ஆணுக்குத்தான் தைரியம், பெண்கள் பேதைகள் என்று எண்ணினீர்களோ? பாருங்கள் என் தைரியத்தை. உங்கள் கையில் வாள் இருந்தால் என் காலில் பழஞ் செருப்பிருக்கிறது. ஆண் பிள்ளைகளுக்கு நான் அஞ்சுவேனென்று நினைத்தீர்கள்? உம்........வைப்பாட்டிகளிடம் அந்தப் பாச்சா....என்னிடம் செல்லாது. நான் யாருக்கும் அஞ்சேன்.

ஜாந்தரதன் :—உன் அப்பனுன எனக்கு?

எபோனி :—உனக்குக் கூடப் பயப்பட மாட்டேன்.

திருடர்கள் :—கொல்லுவோம்.

எபோனி :—கூவுவேன். என்னை வெட்டுங்கள். நான் சாகவேண்டியதுதானே! என் உயிருள்ள மட்டும் உங்களை இங்கே வரவிடேன். நீங்கள் ஆறு திருடர்கள். நான் ஒரு பெண். நான் சத்தம் போட்டால், உலகெல்லாம் ஏன் என்று கேட்கும். அதோ நாய்கள் சுற்றுகின்றன. உஷார். இதோ சத்தம் போடுகிறேன், போ-ங்-க-ளடா-கிட்ட வராதீர்கள்.

ஜாந்தரதன் :—மகளே, வேண்டாம். சத்தம் போடாதே. நாங்கள் வரவில்லை. ஆனால் தந்தையிடம் உனக்கு இரக்கமில்லையா? நாங்கள் வயிறு வளர்க்க வேண்டாமா? பிழைப்பைக் கெடுக்காதே.

எபோனி:—போ, வேறிடம். இங்கே வராதே. அவ்வளவுதான்.

திருடர் அப்புறம் சென்று யோசித்தனர்:- "இது பக்கா வீடு. உள்ளே இரண்டு பெண்களும் ஒரு கிழவனும் இருக்கிறார்கள். கிழவன் பின்புறமே இருக்கிறான். மாடியில் கட்டியுள்ள திரை பணக்காரத்திரை. வீட்டில் பசையிருக்கிறது; நுழைவோம்" என்றான் மோம்பர்னஸ்.

"அந்தக் குட்டி காள் காளென்று கத்தினால்?" என்று தடுத்தான் பாபே.

"குட்டியை நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் உள்ளே போங்கள்" என்றான் மோம்பர்னஸ்.

"இன்று காலை நல்ல முகத்திலே முழிக்கவில்லை. காலை இரண்டு மைனாக்கள் சண்டையிட்டன. இப்போது ஒரு பெண்பிள்ளை கச்சை கட்டிக்கொண்டு நம்மைத் தடை செய்கிறாள். இது அபசகுணம். போவோம், நாளை வருவோம்" என்றான் புருஜன்.

"அட, ஒரு பெண்பிள்ளைக்குப் பயந்தா போவது இத்தனை ஆண்பிள்ளைகள்" என்றான் மோம்பர்னஸ்.

"அது சத்துமடா, கழுதை" என்றான் குல்மேர்.

"கத்தினல் ஒரே வெட்டு. இதோ பார் பளா பளான்னு" என்று கத்தியைக் காட்டினன் மோம் பர்னஸ்.

"பெண் பிழைத்துப் போகட்டும். நாம் போவோம். இன்று எங்கே படுப்போம்?"

"பாரிஸுக்கு மேலே கனவான்கள் வசிக்கிருர்கள். பாரிஸுக்குக் கீழே நாம் வசிக்கிறேம். பாலத்திற்குக் கீழே படுப்போம் வா" என்று திருடர் மறைந்தனர். எபோனியும் அவர்கள் மறையுமட்டும் சென்று பார்த்தாள்.

---

80. காதலர் கலக்கம்

கடவுள் காத்தார். வேலிக்குள் காதலர்; வேலிக்குப்பின் காதகர். எபோனியின் மனத்துணிவில் கடவுள் காதலரைக் காத்தார்.

மாரியன் காதல் வெண்கொழுந்தேறியது. அவன் தனது அன்பின் ஆர்வத்தையெல்லாம் கோஸத்தின் உள்ளத்திற் பொழிந்தான்; ஆவியுறத் தழுவினன். முத்து மழை பெய்தது.

ஆனல், கோஸத்முகமலர் வாட்டமுற்றிருந்தது. அவள் மனம் தளர்ந்தது. அவள் கண்ணீர் விட்டாள்; "நாதா" என்ருள்.

மாரியன் :—என்ன, கண்மணி, ஏன் வருந்துகிருய்?

கோஸத் :—விதி அவ்வாறு !

மாரியன் :—என்ன? என் அன்னமே, செய்தியென்ன ?

கோஸத் :—என் தந்தை, "இன்று காலை ஊரைவிட்டுக் கிளம்பவேண்டும், தயாராயிரு" என்ருர்.

ஆ! இடி விழுந்தாற்போல் இருந்தது செய்தி! கோஸத்துள் மாரியன் வசித்தான். மாரியனுள் கோஸத் வசித்தாள். இருவர் கருத்தும் ஒன்று, உயிரும் ஒன்று, உடலும் ஒன்றே.

இந் நிலையில் பிரிவென்னும் சுடுசரம் அவர்களைக் குறி வைத்தது.

மாரியன் :—கண்ணே, விளக்கமாகச் சொல்லு.

கோஸத் :—காதலா, எனது தந்தைக்கு இவ்வூர் பிடிக்கவில்லை; இங்கிலாந்துக்குப் போவார் போலிருக்கிறது.

மாரியன் :—ஆ....காதலீ........எப்போது புறப்படுகிருர் ?

கோஸத் :—நாளைக் குறிக்கவில்லை.

மாரியன் :—இங்கிலாந்திலிருந்து எப்போது திரும்புவார் ?

கோஸத் :—தெரியாது.

மாரியன் :—என் கண்ணே, என்னுயிரே, என்னைத் தவிக்கவிட்டு நீ பிரிந்து செல்வாயா ?

கோஸத் :—தந்தை போனல் ?

மாரியன் :—ஆதலால் என்னைப் பிரிவது உனக்குச் சம்மதமா ?

கோஸத் :—வருந்த வேண்டாம், காதலா, நான் போகும் இடத்தைத் தங்களுக்குத் தெரிவிப்பேன். தாங்கள் வந்து சேரலாம்.

மாரியன் :—காதலீ, உன்னோடு நான் வந்து என் செய்க? நான் ஏழை. என்னிடம் பணமில்லை. இப்போதே நண்பன் கூர்பரனுக்குப் பத்துப் பொன் கடன். பழைய தொப்பி ஆறணா கூடப் பெறாது. என் குடுத்துணி முழங்கையிற் கிழிந்துள்ளது. நீ என்னை இரவிற் பார்க்கிறாய். பகலில் பார்த்தால், காலணா பிச்சை தந்தனுப்புவாய். கோஸத், நான் ஏழை. இங்கிலாந்தில் என் செய்வேன்? கப்பலுக்குக் கூடப் பணமில்லையே! ஹா! கோஸத், நான் பரிதாபமான ஏழை........

மாரியன் ஒரு மரத்தின் புறம் திரும்பிக்கொண்டு தலையில் கைவைத்துக் கவலையுற்றிருந்தான். கோஸத் விம்மி விம்மி யழுதாள். மாரியன் கோஸத்தின் முன் மண்டி போட்டுக் கைகுவித்தான்; காதலியின் காலைத் தூக்கி முத்தமிட்டான்; "அழாதே" என்றான்.

கோஸத் :—"என்னுடன் தாங்கள் வர முடியாதா?

மாரியன் :—என்னை நீ காதலிக்கிறாயா?

கோஸத் மீண்டும் தேம்பித் தேம்பி யழுதாள்; "நான் தங்களையே கடவுளென வணங்குகிறேன்" என்றாள்.

மாரியன் :—அழாதே, என் கண்ணே.

கோஸத் :—என்னை நீர் நேசிக்கிறீரா?

மாரியன் :—என்னிடம் சொல்லொன்று செயலொன்றில்லை. கண்ணே, நீ பிரிந்தால் நான் இறப்பேன்.

கோஸத் குடல் நடுங்கி அழுதாள்.

மாரியன் :—கண்ணே, இரண்டு நாட்கள் பொறு. விடைகொடு.

கோஸத் :—ஐயோ! என்ன செய்யப் போகிறீர்கள்? (கோஸத் தன் கரங்களால் மாரியன் கன்னங்களைப் பற்றினாள்; கண்களை நோக்கினாள்).

மாரியன் :—கண்ணே, இரண்டு நாளில் வருகிறேன்.

கோஸத் :—காதலா, இரண்டு நாள் எப்படிப் பிரிந்திருப்பேன்?

மாரியன் :—பொறுத்திரு. எதற்கும் என் விலாசம் தருகிறேன்.

மாரியன் :—16, வெர்ரரித் தெரு. இதை இக்கத்தி முனையால் இக்காரைச் சுவரில் எழுதிச் செல்லுகிறேன்.

கோஸத் :—என்ன செய்ய நினைப்பு? நான் அறியலாகாதா?

மாரியன் :—நாளை நின்று நீ அறிவாய். என்னை நம்பு. விடை கொடு.

கோஸத் :—தாங்கள் என் தலைவர். தங்கள் இச்சைப்படி நடக்கட்டும். நான் தங்களுக்காக இந்த இரண்டு நாளும் கடவுளைத் தொழுது கொண்டிருப்பேன்.

மாரியன் :—அவ்வாறே செய் கண்ணே, கடவுள் நமது காதலை நிறைவேற்றட்டும்.

இருவரும் மார்புறத் தழுவிக் கொண்டனர்; கண்ணீர் விட்டனர் ; ஒருவர் உயிரை இன்னொருவர் உள்ளத்தில் ஊற்றினர். நெடு நேரம் அவ்வாறிருந்து மாரியன் விடை பெற்றுச்சென்றான்.

மாலை நாலு மணிக்கு ஜாம்வல்ஜான் மார்ஸ் மைதானத்தில் தனி மூலையில் அமர்ந்து சிந்தனையில் ஆழ்ந்தான்; அப்போது அவ்வழியே தெனார்டி யன் மாறுவேடம் பூண்டு செல்வதைக் கண்டான். தெனார்டியன் புளூமது தெருப் பக்கம் திரிகிறான் ; தன் வீட்டைக் குறிவைத்திருக்கிறான் என்று அறிந்து கொண்டான் ஜாம்வல்ஜான். தெனார்டியன் என்றால் அபாயந்தான். பாரீஸ் வாழ்வும் அவனுக்குப் பிடிக்கவில்லை. மேலும் பாரிஸில் இப்போது அரசியல் புரட்சியொன்று குமுறி யெழுந்தது. கொஞ்சம் இரகசியமாக வாழ்வோரை யெல்லாம் ஒற்றர்கள் கண்டுபிடித்துக் கடுமையாகத் தண்டித்தனர்; தன்னையும் அவசியம் கண்டுபிடிப்பர். ஆதலால், பிரான்ஸையே விட்டு, இங்கிலாந்திற் போய் வாழ ஜாம்வல்ஜான் தீர்மானித்தான்; மறுநாட் காலையில் தனது கொல்லைச் சுவரில் “16, வெர்ரரித்தெரு” என்றெழுதியிருக்கக் கண்டான். அன்று மாலை நான்கு மணிக்கு வழக்கம்போல் மார்ஸ் மைதானத்தில் ஒரு மூலையிற் சிந்தித்துக் கொண்டிருந்தான். திடீரென்று அவன் மடியில் ஒரு சீட்டு வந்து விழுந்தது.

"வீடு மாற்றிப் போ" என்று அதில் எழுதி யிருந்தது. அச்சீட்டைப் போட்டவள் ஒரு ஆணுடை பூண்ட பெண். அவள் சட்டென்று மறைந்து ஓடி ஞள். அவளே எபோனி. ஜாம்வல்ஜான் உறுதி கொண்டெழுந்தான்: உடனே வீட்டைக் காலி செய்து வேறு வீட்டிற்குச் சென்றான்.

இனி மாரியனைத் தொடர்வாம்.

---

81. தாத்தாவின் கேலி

"மாரியன் வருவான், வருவான், 'தாத்தா, மன்னி யுங்கள்' என்று காலில் விழுவான்" என்று ஜில்நார்மன் மனப்பால் குடித்துக்கொண்டிருந்தான். நான்காண்டுகள் ஆயின. "ஐயோ! இனி வரு வானே அவன்!" என்று தாத்தாவுக்கு ஏக்கம் பிடித் தது. 'காடு வா வா என்கிறது; வீடு போ போ என்கிறது'. உடல் தளர்ந்தது. 'வயது காலத்தில் நம்மை மதியாது, இந்த நன்றி கெட்ட பயல் இப்படி ஓடிப் போனானே!' என்று ஜில்நார்மன் நொந்தான்; மாரியனைப் பாசமுடன் மனத்தில் நேசித்தான்; வாய்தான் டமாரமடிக்கும்; மாரியன் தாயார் படத்தை வைத்துப் பார்த்துக்கொண்டே, 'அந்தப் பயல் தாயார் போலவே யிருக்கிறான்' என்பான்.

ஒரு நாள், மூத்த பெண், "அப்பா, அவன் மேல் இன்னும் கோபமா?" என்றாள்.

ஜில் :—எவன் மேல்?

பேண் :—அப்பாவி, அந்த மாரியன் மேல்.

ஜில் :—என்ன சொன்னுய்? அப்பாவியா? அந்த வெட்கங் கெட்ட, நன்றி கெட்ட, மானங் கெட்ட, அறிவு கெட்ட போக்கிரிப் பயல் பேச்சை எடுக்காதே. ஏதடா வயதானவராயிற்றே, மரியாதையாக வணக்க வொடுக்கமாக நடந்துகொள்ள வேண்டுமென்று தெரியவில்லை. அந்த ராங்கி பிடித்த அதிகப்பிரசங்கிப் பயல் பேச்சை என் காதிலே போடாதே.

அன்று முதல் மாரியன் பேச்சை யெடுப்பதில்லை மூத்த பெண். மாரியன் வராவிட்டால், தன் வீடுவாசலெல்லாம் யாருக்கு எழுதி வைப்பது என்ற யோசனையும் உண்டாயிற்று. தனக்குப் பிரியமான ராணுவ உத்தியோகஸ்தன் தியோதலனுக்கு எழுதிவைக்கலாம் என்ருள் மூத்த மகள். "அவன் பேச்சும் நடத்தையும் எனக்குப் பிடிக்கவில்லை. அவன் தன் கூத்தியாளைப் பற்றியே பேசுகிருன்; தமாஷா யிருக்கிருன். ஆனுல் அவன் பேச்சு இனிமையாயில்லை. மேலும் இந்தக் கத்தி வீசுகிற பயல்களைக் கண்டால் எனக்குப் பிடிக்கவில்லை" என்று சொல்லி, மாரியனையே நினைத்து நினைத்து, மறைவாகக் கண் கசிந்துருகினுர் பாட்டனுர்.

ஒரு நாள் அந்தி வேளையில் தனியாகக் கணப்புத் தீ முன் கால் நீட்டி அமர்ந்து, கன்னத்திற் கை வைத்து, மாரியனைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்

தார் பாட்டனர். "அவன் வருவானே? அவனைக் கண் கண்டு மூடுவேனே? இல்லையேல், அந்தப் பாவிப் பயலைப் பாராது சாவேனே? ஏது, முரட்டுப்பயல் வரமாட்டான்; அந்த நன்றிகெட்ட போக்கிரிப்பயல்" என்று இரண்டு சொட்டுக் கண்ணீர் வடித்தார் பாசம் பிடித்த பாட்டனர்.

அப்போது சேவகன் வந்து, "ஐயா, திரு. மாரியன் வந்திருக்கிறார். உள்ளே வர உத்திரவு கேட்கிறார்" என்றான்.

தாத்தா :—என்ன ! மாரியனா? ஆ !

சேவகன் :—ஆமாங்க.

தாத்தா :—வரச்சொல்லு............

மாரியன் வந்தான்; பஞ்சை போல உடையணிந்து வந்தான். பாட்டனர் குறிப்பாகப் பார்த்தார். "அவன்தான் ; மாரியன்தான்." மகிழ்ச்சி பொங்கியது. 'பயல் அழகாயிருக்கிறான்; கட்டுக் குட்டென்றிருக்கிறான்; மூக்கும் முழியும் சிலையடித்தாற்போலிருக்கின்றன. ஆளாகிவிட்டான்' என்றெல்லாம் மனத்தில் நினைத்து மகிழ்ந்தார்.

"ஆனல், இந்தப் பயல் வந்ததும், 'தாத்தா வந்தனம்' என்று கழுவிக்கொண்டு, தான்செய்த குற்றத்திற்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்ளவில்லை" யென்ற உணர்ச்சி மேலிட்டது. வெளிக்கு மிக்க செருக்குடன் பேசினர் பாட்டனர்.

தாத்தா:—இங்கே எதற்கு வந்தீர்ங்காணும்?

மாரியன்:—ஐயா........(தாத்தா என்னவில்லை).

தாத்தா:—ஐயாவுக்கு என்ன? எங்கு வந்தீர்....?

மாரியன்:—ஐயா ?

தாத்தா:—உன் குற்றத்தை யுணர்ந்தாயா? மன்னிப்புக் கேட்பாயா ?

மாரியன்:—மாட்டேன்......ஐயா.

தாத்தா:—மாட்டாயா ? பின்னே என்னை யென்ன செய்யச் சொல்லுகிறாய்?

மாரியன்:—ஐயா, எனக்கு மனமிரங்குங்கள்.

தாத்தா:—உனக்கு மனமிரங்குவதா ? என்ன சொன்னாய் ? 91 வயது கிழவன்—என்னைத் தவிக்க விட்டுச் சென்றாய். நேற்றுப் பிறந்த பயல். நீ வாழ்வை அனுபவிக்கப்போகிறாய். நான் வாழ்வினின்று விடைபெற்றுக் கொள்ளப் போகிறேன். நீ இருபத்தொரு வயது காளை ; பலசாலி; நீ நடனசாலை, நாடகசாலை, விளையாட்டுச் சாலைகளுக்குப் போவாய். இளம்பெண்கள் உன்னைக் காதலிப்பர். நீ அவர்களைக் காதலிப்பாய். நான் கிழவனானேன். கை கால்கள் ஆடுகின்றன. பார்வை மங்கிப் போனது. தீனி சுருங்கிப் போனது. நீ நன்றாய்ச் சாப்பிட்டுச் சுகமாயிருப்பாய். உன் தலை கறுப்பு. என் தலை கொக்குப்போல நரைத்துப் போனது. உனக்கு முப்பத்திரண்டு பற்களும் உறுதியாயிருக்கின்றன. என் பற்கள் உதிர்ந்து போயின. மறதி வந்து விட்டது. உனக்கு முன் வாழ்வின்பம் உள்ளது. எனக்கு முன் புதை குழி யுள்ளது. எனக்கல்லவோ நீ இரங்கவேண்டும். கேலியாகப் பேசுகிறாய்.

வக்கீல்வாள் வந்தனம். போக்கிரிப் பயலே, எங்கு வந்தாய்? என்ன வேண்டும்?

மாரியன்:—ஐயா, என்னைப் பார்த்தால் தங்களுக்கு எரிச்சல் வருகிறது. நான் இதோ போய்விடுகிறேன். ஒரே ஒரு விஷயம் மட்டும் தெரிவித்துத் தங்கள் சம்மதம் பெற்றுச் செல்லுகிறேன்.

தாத்தா:—நீ ஒரு முட்டாள். உன்னை யார் போகச் சொன்னது? நான் உன் பாட்டனார். என் வீட்டை விட்டு, பெரியம்மாளைத் தவிக்க விட்டு, எங்கேயோ போய்ப் பிலுக்குப் பண்ணித் திரிகின்றாய். எனக்குத் தகவல் கூடத் தரவில்லை. நாலாண்டுகள் கண்டபடி திரிந்துவிட்டு, "ஐயா" என்று வருகிறாய். சரி, சொல்லித் தொலை. என்ன வேண்டும்?

மாரியன்:—ஐயா...........

தாத்தா:—ஆமாம். பிறகு?

மாரியன்:—நான்....

தாத்தா:—சரி.

மாரியன்:—கலியாணம் செய்துகொள்ள உத்திரவு தரவேண்டும்.

தாத்தா:—சரி, சரி, சரி,........கலியாணமா........?

ஜில்நார்மன் தன் மூத்த மகளைக் கூப்பிட்டான்.

"இந்தக் கனவான் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறாராம். கேள் அவர் சொல்வதை" என்றார் ஜில்நார்மன். மூத்த மகள் ஒன்றும் பேசாது மச்சுப்படியேறி சென்றாள். தாத்தா பேரனை நையாண்டி செய்யத் தொடங்கினார்.

ஜீல்:—கலியாணமா உனக்கு? இருபத்தொரு வயது பயல், நேற்றுப்பயல், என்னைக் கேட்காமல் பெண்ணைத் தீர்மானம் பண்ணி விட்டாயோ? உட்காருங்கள், கனந் தங்கிய வக்கீல்வாள். நீர் குடியரசு கட்சியல்லவா? நீர் மாரியன் போமெர்ஸி பிரபு அல்லவா? கண்ட காலிப்பயல்களுக்கெல்லாம் குடியரசில் பிரபுப் பட்டம் கிடைக்குமல்லவா? பிரபுவானதனால் இஷ்டம்போலக் காரியத்தைப் பண்ணி, என் ஆமோதிப்பை முடிவில் கேட்க வந்தீராக்கும். மகாப்பிரபுவுக்கு அமைந்த பெண் யாரென்று கேட்கலாமா? ஆம், நீர் வக்கீல், சம்பாத்தியம் பண்ணிக் குவித்து விட்டீர்; பெண்டாட்டி கட்டப் போகிறீர்! வக்கீல் பிரபுவுக்கு மாதம் என்ன வரும்படியாம்.

மாரி:—ஒரு வரும்படியுமில்லை.

ஜீல்:—ஒன்று மில்லையா? நான் அனுப்பும் 1,200 பிரான்க் தவிர உமக்கு வேறே வக்கில்லை? (அந்தப் பணத்தை மாரியன் திருப்பி யனுப்பி விட்டான்). ஆனால் பிரபுவுக்கு அமைந்த ஜோடி கோடிஸ்வரியோ?

மாரி:—இல்லை. அவளும் என்னைப்போல் ஏழை.

ஜீல்:—என்ன? அவளும் வெங்கமா? அவள் தகப்பனார் விவரமென்ன?

மாரி:—எனக்குத் தெரியாது.

ஜீல்:—சரி, உன் காதலியின் பெயரென்ன?

மாரி:—கன்னி போஷல்வான்.

ஜில்:—என்ன போஷலா, பூஷலா............

மாரி:—போஷல்வான்.

ஜில்:—பிஸ்த்! மாரியன் பிரபு தன் சிமாட்டிக்கு நல்ல ஆடை வாங்கவாவது வழியுண்டா?

மாரி:—அதெல்லாம் இருக்கட்டும். ஐயா, நான் உங்களைப் பணிந்து கேட்டுக்கொள்ளுகிறேன். நான் அவளை மணம் புரிய உத்திரவு தாருங்கள்.

ஜில்:—ஆ! ஆ! என்ன சொன்னாய்? ஓரணை கொடுத்துச் சொன்னபடி கேட்கச் சொல்லட்டுமா? நீ ஒரு பாட்டனாயிருந்து நான் இருபத்தொரு வயது காளையாயிருந்து, ஏதோ தெருவிலே போகும் ஒரு பெண்ணைக் காதலித்தால் சம்மதிப்பாயா?

"கிழவனாரே, நான் உன் பேரன்: ஒரு அநாம தேயப் பேர்வழியின் அனாதைப் பெண்ணை நான் மணம் புரிய வேணும். நான் வெங்கம். அவளும் அப்படி. என் ஜோடு கிழிசல்; அவள் ஆடை பீத்தல். நாங்களிருவரும் கலியாணம் செய்து கொள்ள வேண்டும். என் இளமை, கல்வி, அந்தஸ்து, அறிவு, ஆற்றலெல்லாம் ஒரு அநாமதேயத்தைக் கட்டிக்கொண்டு, தரித்திரக் கிடங்கில் கொட்ட வேண்டும். நீர் தடை செய்யாது மகிழவேண்டும்.

'சபாஷ்! அப்படித்தான் செய்' என்ன வேண்டும்" என்றால் உனக்குச் சம்மதமாகுமா? ஒருக் காலுமாகாது. டிஸ்ஸல்வானும், குப்பல்வானும், நானா சம்மதிப்பேன்? மாட்டேன், ஒரு காலும் மாட்டேன், மாட்டேன்.

தாத்தா ஒரே விறைப்பாக நின்று செருக்காடினார். மாரியன் வெட்கிப் போனான்; கிழவன் இணங்க மாட்டான் என்றெண்ணி வந்த வழியே காலெடுத்து ரேழியைத் தாண்டினான். கிழவன் பரபரப்புடன் பின்னே விரைந்து, "எங்கே போகிறாய்? வாடா பயலே" என்றிழுத்து வந்து உட்காரவைத்து, "சொல், உன் ஜோடியின் கதையை விபரமாகச் சொல்லு" என்றார்.

மாரியன் :—தாத்தா.

தாத்தா :— ஆ, அப்படிச் சொல்லு. என்னைத் தழுவிக்கொண்டு தாத்தா என்று கூப்பிடு.

மாரியன் :—என் அருமைத் தாத்தா.

தாத்தா :—சபாஷ்டா பயலே, அப்படி வா, இப்போது சொல் உன் காதலி கதையை.

மாரியன் :—எனது பிரியமுள்ள தாத்தா.

தாத்தா :—பேஷ்-சபாஷ் - இப்போது நீ என் பேரன்; மாரியன், ஏன் அழுக்குத் தொப்பி போட்டுக் கொண்டிருக்கிறாய்? பயத்தியக்காரப் பயலே, மாரியன் பிரபு பீத்தல் தொப்பியா போடுவது? இந்தா நூறு லூயி. நல்ல தொப்பி வாங்கிக் கொள்.

மாரியன் :—வந்தனம், என் அருமைத் தாத்தா.

தாத்தா :—சபாஷ்; சொல்லு கதையை.

மாரியன் :—என் அன்புள்ள தாத்தா, நான் அவளை முதலில் லுக்சம்பூரில் சந்தித்தேன். அவளும் என்னைப் பார்த்தாள். இருவரும் காதல்

கொண்டோம். பிறகு இரவு தோறும் அவள் வீட்டுத் தோட்டத்திலே அவளைச் சந்தித்துப் பேசி வந்தேன். நான் அவளுயிர். அவள் என்னுயிர். இப்போது அவள் தகப்பனார் இங்கிலாந்திற்குப் போகப் போகிறார். தாத்தா, அவளைப் பிரிந்தால் நான் பைத்தியம்பிடித்துச் சாவேன். அவளை நான் மணந்தே தீரவேண்டும். இல்லாவிட்டால் உயிரை விடுவேன். அவள் புளூமது தெருவில் ஒரு தோட்ட வீட்டில் இருக்கிறாள். தாத்தா, நான் சொல்ல வேண்டியது இவ்வளவே.

தாத்தா :—(ஒரு பட்டைப் பொடியை உறிஞ்சி விட்டுத் தொடங்கினார்)

புளூமது தெருவா..........................ஆ! புளூமது தெரு, ஆம், உன் மச்சான் தியோதலன் அந்தப் பக்கந் தானே சுத்தி விளையாடித் திரிகிறான். ஆம், அவன் பக்காப் பேர்வழி. அது சரி. வாலிபக் காளைகள் காதலிக்க வேண்டியதுதான். குடியரசு என்று பேசுவதைவிட எனக்கு வாலிபர் காதலியைப் புகழக் கேட்டால் சந்தோஷம். என் வாலிபத்தில் எத்தனையோ காதலிகளைப் பார்த்திருக்கிறேன். உன்னைப்போலவே எத்தனையோ இளம் பெண்களை இரவில் கூடிப் பேசி யிருக்கிறேன். நான் ஒரு அழகான பெண்ணைக் காதலித்தேன். அவள் எவ்வளவு ஜோராயிருப்பாள் தெரியுமா ? என் ஜோருக்குத் தகுந்த ஜோடி. தகப்பனாருக்குத் தெரியாமல் அவள் என்னோடிருப்பாள். அதெல்லாம் பெரிய

கதை. என் அருமைப் பேரனாகிய நீயும் என் போலப் பெண்களை நேசி. தடை சொல்லவில்லை. பணம் வேணுமா? தருகிறேன். கொடு உன் ஆசைக் காதலிக்கு. ஆனால் அவளை வைப்பாகக் கருது. விவாகப் பேச்சு வேண்டாம்.

மாரியன் முகம் சுருங்கியது. கண்ணிற் கனல் பறந்தது.

தாத்தா:—பயலே, நான் சொல்வதைக் கேள். பணம் கொடு; அவளை வைப்பாட்டியாக வைத்துக் கொள். கலியாணம் வேண்டாம். நானும் வாலி பத்தில் எத்தனையோ வைப்பாட்டிகளை வைத்துக் கொண்டிருந்தேன். நீ அந்தக் குட்டியை வைப் பாட்டியாகவே கருது.

மாரியன்:—ஹா! என் அருமைக்காதல் மனை வியை வைப்பாட்டி யென்றீரா? ஐந்தாண்டுகளுக்கு முன் என் அருமைத் தந்தையைத் துச்சமாய்ப் பேசி னீர். இப்போது என் அருமைக் காதலியை, என் ஆருயிர்த் துணைவியைத் துச்சமாகப் பேசினீர். இனி உம்மை யொன்றும் கேட்க வேண்டியதில்லை. நான் போகிறேன்.

மாரியன் ஒரே ஓட்டமாகப் பறந்தான். "ஐயோ! பிடியுங்கள். பிடியுங்கள் அவனை. ஐயோ! அவன் போய்விட்டானே! தெய்வமே, நான் என்ன சொன் னேன்? என் அன்பையும் பாசத்தையும் அறியாது போய்விட்டானே! ஐயையோ!!" என்றெழுந்து வாசலுக்கு ஓடினார் கிழவனார். அவர் சேவகர்

ஓடினர்; 'மாரியன், மாரியன், மாரியன்' என்று அலறினர். மாரியன் ஓடியே போனான். ஜில்நார்மன் சோகம் மேலிட்டுக் கலங்கித் தவித்தார்.

---

82. ஏமாற்றம்

மாரியன் துயர் மேலிட்டுத் தன்னுணர்வில்லாது எங்கெங்கோ சுற்றி, அன்றிரவு இரண்டு மணிக்குக் கூர்பரன் அறையில் வந்து படுத்தான்; மனம் அலைகடல் போலப் பல எண்ணங்களை வீசியடிக்கக் காலை ஏழுமணிக் கெழுந்தான். கூர்பெரன், அஞ்சாலரன், ஃபையன், கொம்பேரன் ஆகிய எல்லாரும் சுறு சுறுப்பாக இருந்தனர். "மாரியன், இன்று சேனாபதி லாமாக் இறந்து போனார். அவரை அடக்கம் செய்ய எல்லாரும் போகிறார்கள். நாங்களும் போகிறோம். நீயும் வருகிறாயா? அங்கு ஒரு பெரிய விசேஷம், தயாராக வா" என்றான் கூர்பெரன். மாரியன், சட்டை மாட்டிக்கொண்டு முன்னே ஜாவர் கொடுத்த துப்பாக்கியைப் பைக்குட் போட்டுப் புறப்பட்டான். அவன் உயிரெல்லாம் கோஸத்திடம் இருந்ததால், நடைப்பிணம் போலத் தெருவழியே சென்றான். சாப்பிட ஒரு ரொட்டி வாங்கினான்; அதைப் பைக்குட் போட்டுக் கொண்டான்; சாப்பிட மறந்து போனான்; தன்னுணர்வின்றி ஸேன் நதியில் இறங்கினான்; குளித்துக்

கரையேறி, உடம்பு துடைத்துக்கொண்டு புறப்பட்டான். அவன் மனத்தில் தீயலைகள் புரண்டன. அவன் உலகை வெறுத்தான்; உயிரை வெறுத்தான்; இரவு எப்போது வரப்போகிறதென்று ஆத்திரமாகக் காத்திருந்தான்; இரவு 9 மணிக்குக் கோஸத்தை நாடி வந்தான்; கதவைத் திறந்து தோட்டத்துள் விரைந்தான்; "காதலி" என்று கூவினான்; பேச்சு, மூச்சில்லை; "கோஸத், கோஸத்" என்று முறையிட்டான்; கோஸத் இல்லை; ஒவ்வொரு மரத்தடியிலும் போய்ப் பார்த்தான்; மரங்களை உலுப்பிப் பார்த்தான்; "கோஸத், கோஸத்" என்று உரக்கக் கூவிக் கொண்டே வீட்டிற்குள் சென்றான்; கதவு மூடியிருந்தது; ஆளில்லை; வீடு காலி; "கோஸத், என் அருமைக் கோஸத், என் காதலீ" என்று முறையிட்டான்; கதவையிடித்தான்; வீட்டில் யாரும் இல்லை; ஒன்றுந் தோன்றாமல் அங்கேயே சோர்ந்து உட்கார்ந்து, "கோஸத், கோஸத், எங்கே என் கோஸத்?" என்று திக்பிரமை பிடித்தழுதான்; அப்போது தெருவிலிருந்து யாரோ அவனை அழைப்பதைக் கேட்டான்.

எபோனி:—மாரியன், ஓ மாரியன்.

மாரியன்:—ஏன்?

எபோனி:—மாரியன், சாவேரித் தெருவில் நண்பர் உன்னை எதிர்பார்க்கிறார்கள்.

மாரியன் ஓடித் தோட்டக் கதவைத் திறந்து, தெருவிற் போய்ப் பார்த்தான். அதற்குள் பேசின

வர் மறைந்தனர். கேட்டகுரல் எபோனியின் குரலே. மாரியன் உயிரை வெறுத்துச் சாவேரித் தெருவை நோக்கினன்.

---

83. மாபோவின் வறுமை

ஜாம்வல்ஜான் பணம் மாபோவிற்குப் பயனுகவில்லை. ஆகாசத்திலிருந்து விழுந்தாலும், உழைக்காத பணம் தனக்கு வேண்டாம் என்றான் மாபோ; அப்பணத்தைத் தான் கண்டெடுத்ததாகச் சொல்லிப் பொலீஸ் அதிகாரிகளிடம் கொடுத்து விட்டான். அவுரித் தோட்டமும் கட்டி வரவில்லை. நில வாடகை, வீட்டு வாடகை தரக்கூடப் பணமில்லை. உண்ண வகையில்லை. தனக்குப் பணி செய்யும் கிழவி நோய்வாய்ப் பட்டாள். அவளுக்கு மருந்து வாங்கக்கூட வகையில்லை. பயிர் வாடுகிறது. என் செய்வான் மாபோ! ரொட்டியும் உருளைக் கிழங்குந்தான் அவன் சாப்பிட்டு வந்தான். அதற்குக்கூட இப்போது பணமில்லை. மாபோ பெரிய படிப்பாளி; ஞானி, மானி; தன் வீட்டுச்சாமான், பாத்திரங்களை யெல்லாம் விற்று விட்டான்; பிறகு சட்டை, துணிகள் எல்லாம் விற்றான்; பிறகு தன் சேய்களைப்போலப் பேணிய செடிகளை விற்றான். இனியுள்ளவை அவன் உயிர்போல மதிக்கும் நூல்களே. மாபோ படிப்பில் பசியை மறப்பவன்.

அவன் அருமையாக மதித்த சாத்திரங்களையெல்லாம் இப்போது விற்க நேர்ந்தது; மாலைதோறும் ஒரு புத்தகத்தை எடுத்துச்சென்று, பழம் புத்தக வியாபாரிகளிடம் விற்று, எட்டணு அல்லது பத்தணுக் கொண்டுவந்து கிழவியிடம் கொடுப்பான். கிழவனது தேவையை யறிந்த புத்தகக்காரர், ஐந்து ரூபாய் நூலுக்கு அரை ரூபாய்தான் தந்தனர். இவ்வாருகக் கடைசியான புத்தகமும் விற்றுனது. மாபோ பட்டினி கிடந்தான். தாவர சாத்திரத்தில் அவன் நிபுணன்; தோட்டச் சங்கத்தில் சேர்ந்திருந்தான். அச்சங்க நண்பன் ஒருவன் மாபோவின் நிலைமைக் கிரங்கி, அவன் பெயரைச் சர்க்கார் விவசாய மந்திரிக்குச் சிபாரிசு செய்தான். மறு நாள் மந்திரி வீட்டில் விருந்து நடந்தது. மாபோவிற்கும் அழைப்பு வந்தது. அவன், 'இனி வழி பிறந்தது' என்று நம்பி, மழை பெய்ததால் ரிக்ஷாவில் மந்திரி வீட்டிற்குச் சென்றுன். அங்கு யாரும் அவனை வாவென்றழைக்கவில்லை; முகம் கொடுத்துப் பேசவில்லை. அவன் வாசலிலேயே காத்திருந்தான். மந்திரி மனைவி வந்து, "அடே சேவகா, ஏன் இந்தக் கிழவன் திண்ணையிற் பழி போடுகிருன்?" என்று தொண்டையெடுத்தாள். மாபோ வெட்கி, மனமுட்கி, மழையில் நனைந்து வீடு திரும்பினுன். ரிக்ஷாச் செலவு விணுனது. அவன் உயிரை வெறுத்தான்; முடிவாக அவனிடமிருந்த ஒரு அரிய நூலைப் பத்தணுவிற்கு விற்றுக் கிழவியிடம் பணத்தைக் கொடுத்

தான். தான் சல்லேஹனம் செய்து உயிர்விடத் தீர்மானித்தான்.

அப்போது குண்டுகள் வெடிக்கும் சத்தம் கேட்டது. தெருவில் சென்ற ஒருவனை, "என்ன சத்தம்?" என்று மாபோ கேட்டான்.

ஒருவர் :—ஐயா, புரட்சி, கலகம்!

மாபோ :—யார் கலகம் செய்வது?

ஒருவர் :—குடிகள்.

மாபோ :—எதற்காக?

ஒருவர் :—சுதந்திரத்திற்காக.

மாபோ :—எங்கே கலகம் நடக்கிறது?

ஒருவர் : அதோ அந்தத் தெருவில்.

மாபோ :—சரி, வந்தனம்.

மாபோ தடியை ஊன்றி யெழுந்து விரைந்தான்.

---

84. புரட்சி

புரட்சி யென்றா லென்ன? இயற்கையில் ஒவ்வொரு பொருளும் விடுதலை தேடுகிறது; அடக்கு முறையைச் சாடுகிறது. கண்டபடி சுமை யேற்றினால் வண்டி மாடு சண்டித்தனம் பண்ணுகிறது. சுமை தாங்க முடியாவிட்டால் பொதிக்கழுதை கூடப் புரட்சி பண்ணுகிறது. வகையில்லாது போட்டுத் திணித்தால், வயிறு கூட வம்பு பண்ணுகிறது. தன்னை

அடைத்து வைக்கும் கரைகளில் கர்ஜித்து மோதிக் கடல் புரட்சி செய்கிறது. ஒருவர் ஆணவத் திமிர் மற்றொருவரை ஏறி மிதிக்கும் போது, மனிதான்மாவின் சம உரிமை யுணர்ச்சி கிளர்ந் தெழுவதே புரட்சி. உலகில் ஆண்டை அடிமை, மேற்சாதி கீழ்ச்சாதி, எசமான் சேவகன், அரசன் குடி என்றிருக்குமட்டும் புரட்சியும் பொரு பொருப் பும் இருக்கத்தான் செய்யும். கட்டுள்ள மட்டும் கலகந்தான். ஏனெனில், சுதந்திரம் மனிதான்மா வின் இயல்பு.

புரட்சி செய்வோர் யார்? மனப்புண் பட் டோர், சினப்புண் பட்டோர், உரிமை யுணர்வார், சண்டைக்கென்றே கத்தி தீட்டிக்கொண்டிருப்பவர், அடிமைத் தளையை அறுப்போர், கட்டை வெட்டு வோர், மாறுதல் வேண்டுவோர், வாழ்வில் ஏமாற் றங் கொண்டோர், உடலை வெறுத்தோர், வீரப் புகழில் விருப்பமுடையவர் ஆகிய எல்லாருந்தான் புரட்சியிற் கலப்பர். மாணவர், தொழிலாளர், தெருக்காலிகள், பிச்சைக்காரர், வேலையில்லாது ஆட்களைத் தொந்திரவு செய்து வயிறு வளர்ப்போர், சண்டை, கலகம், என்றால் முண்டாத்தட்டும் பேர் வழிகள், அனாதைகள்—எல்லாருந்தான் புரட்சியிற் பங்குகொள்வர். நேற்றுக் கந்தலுடன் கையேந்திப் பிழைத்தவன், இன்று தனது வீரவெறியால் புரட்சித் தலைவனாகி விடலாம். குலம், கல்வி, செல்வம் எல்லாம் பொருட்டல்ல. யார் புலிபோலப் பாய்கிறானோ,

சிங்கம்போல நெஞ்சுடையானே அவனே புரட்சியில் தலை தூக்குவான். புரட்சி ஒரு சமுதாய பூகம்பம்; தேசிய எரிமலை: சுதந்திர ஊழி வெள்ளம். அது பழமைத் தளைகளைச் சாம்பலாக்கிப் புதுமைப் பயிருக்கு உரஞ்செய்யும். மஹாத்மாக்களின் புண்ணியக் கோயிலான நமது பாரத பூமிதான் இரத்தஞ் சிந்தாத சாத்விகப் புரட்சிசெய்ய வல்லது. ஏனெனில், ஆயுத பலத்திலும் ஆயிர மடங்கு வீறு பெற்ற ஆத்ம பலம் மஹரிஷிகளின் சந்ததியான நமது பாரத சமுதாயத்திற்கே இயல்பானது. ஏனெனில், ஜீவ காருண்யம் பாரத ஜாதியின் இரத்தத்தில் ஊறிப் போயிருக்கிறது. உயிரிரக்கமில்லாது கொன்றருந்தியே வாழும் வெண்ணாடுகள் இரத்தங் கொதித்து, இரத்தப் புரட்சிசெய்து, இரத்த வெள்ளமே பெருக்குகின்றன. அங்கொரு புரட்சி யென்றால் கோடிக் கணக்கான பணமும், இலட்சக்கணக்கான உயிர்களும் நாசமாகின்றன. கொலை, இரத்த வெள்ளம், கொள்ளை, கொடுமை, தீ, புயல், அழிவு, வறுமை, நோய் எல்லாம் புரட்சியால் வருகின்றன.

1832-ம் ஆண்டு பாரிஸில் மாணவத் தலைவர் நடத்தியது கலகமன்று. அது ஒரு சிறு புரட்சி. கலகம் என்றாலென்ன? புரட்சி யென்றாலென்ன? கலகம் சிறிது. புரட்சி பெரிது. கலகம் சிலர் பலரை யெதிர்ப்பது. புரட்சி பலர் சேர்ந்து வன்மையான ஒருவரை யெதிர்ப்பது. பிரான்ஸ் ஜனங்கள் பஸ்தீலை யிடித்து, லூயியைத் தூக்கிட்டது

புரட்சி. ஸிஸியனைக் கொல்ல ரோம் எழுந்தது கலகம். மோசேயை எதிர்த்து, இஸ்ரேல் எழுந்தது கலகம். புரட்சி எரிமலை. கலகம் வைக்கோல் தீ. 1832-ம் ஆண்டு, மாணவரும், தொழிலாளரும், ஊர்க்காலிகளும் சேர்ந்து நடத்திய புரட்சி ஒரு எரிமலைதான்.

1832-ம் ஆண்டு, ஜனவரி மாதம், 5-ந்தேதி லாமார்க் இறந்தார். லாமார்க் பெரிய தளகர்த்தர்; வீரர்; அரசவையில் தமது நாவன்மையால் பொது ஜனங்களுக்காகப் பேசிப் புகழ்பெற்றவர். அவருடைய உடல் சிறப்பான அரச மரியாதைகளுடன் ஊர்வலஞ் செய்து புதைக்கப்பெற்றது.

அன்று காலை, பாரிஸ் ஜனங்களிடையே ஒரு புதிய ஒற்றுமையும் உறுதியும் கிளர்ந்தன. நகரெங்கும் இந்த மாதிரிப் பேச்சுக்கள் கிளம்பின:—

—அடே, லாமார்க் இறந்த நாள் இது. தெரியாதா?

—அடே, நமது அடிமைத்தன மொழிந்து, சுதந்திரம் பிறந்த நாள் இது—தெரியாதா?

ஃ ஃ ஃ

—அட, உனக்குத் துப்பாக்கி யிருக்கிறதா? ரவை யிருக்கிறதா?

—அதெல்லாம் இதோ கக்கத்தில் இருக்கிறது. இந்தச் சோற்று மூட்டையிலே ரவை யிருக்கிறது.

ஃ ஃ ஃ

—அண்ணே, எனக்குத் துப்பாக்கி யில்லையே!

—கடப் பாறையைத் தூக்கிக்கொள். மண்வெட்டி, கோடரி, ஏதாயினும் கைக்கு வந்ததை எடுத்துப் போடண்ணே.

ஃ ஃ ஃ

—தொழிலாளர்களே, உஷார்! இதோ, பணம் வாங்கிக் கொள்ளுங்கள் கள்ளுக்கும் ரொட்டிக்கும். கிளம்புங்கள்!

—இதோ புயலாய்க் கிளம்புகிறோம். முடியரசு வீழ்க! குடியரசு வாழ்க!

ஃ ஃ ஃ

—தம்பி, உனக்கு வேலை யில்லையா?

இல்லையண்ணே............

—போ, அந்தச் சாப்பாட்டுக் கடைக்குப் பின்னால். அங்கே கருமருந்தரைக்க ஏராளமான ஆட்கள் வேண்டும்.

ஃ ஃ ஃ

—பள்ளித் தோழர்களே—உம்!

—உம், தயார்! வாழ்க குடியரசு!

ஃ ஃ ஃ

இந்த மாதிரி ஊரெங்கும் கலவரமானது. லாமார்க்கின் ஊர்வலம் வெகு சிறப்பாக நடந்தது. அவரது சவப்பெட்டியைப் பகட்டாக அலங்கரித்து வீர வாலிபர் இழுத்துச் சென்றனர். இரண்டு படையணிகள் முரசு கொட்டி முன் சென்றன. சுமார் பதினாயிரம் போர் வீரர் அணி வகுத்து முன் சென்றனர். அரச வூழியரெல்லாம் கறுப்புடையணிந்து

அலரிக்கொம்பு (Laurel) தாங்கிப் பாடையின் பின்னே வணக்கமுடன் சென்றனர். அவர்களுக்குப் பின்னே, எள்ளு விழ இடமில்லாமல் திரளான ஜனங்கள் சென்றனர். இந்தப் பொது ஜனங்கள் ஒரு கட்டுப்பாட்டுடன் சென்றனர். அவர் பேச்சி லும் நடையிலும் கலகக் குறிப்புத் தென்பட்டது. அவர் சட்டைக்குள்ளும், கையிடுக்கிலும் ஆயுதங்கள் இருந்தன. அவர்கள் கருங்கற்களை மூட்டை கட்டிக் கையில் வைத்துக் கொண்டிருந்தனர். பாடை பஸ் திலுக் கருகே வந்தது. ஜனங்களிடையே ஒரு பரபரப் புண்டானது.

ஆஸ்தர்லிட்ஜ் பாலத்தைத் தாண்டிச்சென்று, பிணப்பவனி முதுகாட்டைச் சேர்ந்தது. அங்கு லஃபாயத், லாமார்க்கின் ஆவிக்கு வணக்கம் சொன் னன். [லஃபாயத் அமெரிக்கச் சுதந்திரப் போரில் வாஷிங்டனுக்கு வலக்கரமா யிருந்து ஆங்கிலே யருடன் போர் புரிந்த தளகர்த்தர்.] குருக்கள்மார் சடங்குகளைச் செய்தனர். எல்லாரும் தொப்பியை யெடுத்து, லாமார்க்கின் ஆவிக்கு வந்தனம் செலுத் தித் திரும்பினர். கூட்ட நெருக்கடியில், "குடியரசு வாழ்க!" என்று ஆயிரக்கணக்கான குரல்கள் ஆர்த் தன. காலிக் கூட்டங்களுக்கு உற்சாக வெறி யேறி யது. அவர்கள், "முடியரசே, சூ, சூ, ஓடு" என்று விண்விண்ணென்று கல் வீசினர்; பதினாயிரக் கணக் கான கற்கள் பட்பட்டென்று அரசாங்கச் சிப்பாய்கள் முதுகிலும், தோளிலும், மண்டையிலும் விழுந்தன.

அரசாங்கப் படைத் தலைவன் அபாயக் கொம்பூதி, "சுடுங்கள், சுட்டுப் பொசுக்குங்கள்" என்று ஆத்திரமுடன் கட்டளையிட்டான். புரட்சியெரிமலை புகைந்து வெடித்துக் கனலுமிழ்ந்தது. போர் மந்திரி கவலை கொண்டார். லூயி பிலிப் மன்னன் துயிலெரி யாண்மனையில் தனியே யமர்ந்து சிந்தனையில் ஆழ்ந்தான். அவனரியணை ஆட்டங் கொடுத்தது. முகம் வாட்டங் கொடுத்தது. திருமுடி சாய்ந்தது. அவன், 'முடியாட்சி ஒய்ந்தது' என்றே யுணர்ந்தான். புரட்சிக்காரர் கடைகளைக் கொள்ளையடித்தனர்; துப்பாக்கி, வெடிமருந்து, வாள் உள்ள இடங்களில் நுழைந்து ஆயுதங்களைக் கைப்பற்றினர்; வீடு வீடாக நுழைந்து, வாள், துப்பாக்கிகளைக் கைப்பற்றினர். ஸாந்தெனிஸ், ஸாந்தாந்துவான், ஸாம் மார்தின் போன்ற முக்கியமான தெருக்களிலெல்லாம் பீப்பாய்களால் மதிலெழுப்பி அதன் மறைவிலிருந்துகொண்டு புரட்சிக்காரர் சர்க்கார்ப் படைகளை முற்றுகை போட்டுச் சுட்டனர்.

போக்குவரவுகள் நின்றன. பெண்கள் வீட்டை யடைத்துக்கொண்டு உள்ளே பதுங்கினர். பாரிஸ் அதலகுதலப்பட்டது.

85. குரோஷன் வருகிறுன்

ஊர்க்காலிகள் எவ்வளவு உற்சாகத்துடன் இப் புரட்சியிற் கலந்துகொண்டார்களென்பதற்குக் குரோஷன் உதாரணமே போதும்.

குரோஷன் தனது யானைப் பங்களாவிலிருந்து குஷியாகப் பாடிக்கொண்டு புறப்பட்டான்:—

கட்டில்லாத காற்றுப் போலே
சுற்றுவேன், சுற்றுவேன்!....

லாமார்க்கின் பிணப்பவனியுடன் ஜோராகக் கலந்துகொண்டான். கையில் ஒரு அலரிக்கொம்பை வைத்துக்கொண்டே,

"குடியரசு வாழ்க!
முடியரசு வீழ்க!"

என்று பல்லவி பாடிக்கொண்டே நடந்தான். வழியில் ஒரு பழஞ்சரக்கு வியாபாரியின் கடையில் ஒரு ஓட்டைத் துப்பாக்கியிருந்தது. அதைப் பசக்கென்று எடுத்துக்கொண்டு, கூட்டத்தில் மறைந்து, "இதோ துப்பாக்கி, நானும் புரட்சி வீரன்" என்று சென்றுன். பிணப்பவனியிலிருந்து திரும்பும்போது, வழியில் ஒரு கந்தைத் துணி விற்கும் கிழவி யிருந்தாள்; "இந்த இழவு ஊர்க்காலிகள் ராசாவை எதிர்த்துக் கிளம்பித் தொலைக்கிறுர்களே!" என்று புலம்பிக்கொண்டிருந்தாள். அவள் எதிரே தன் ஓட்டைத் துப்பாக்கியைக் காட்டி, மூக்கையும் முகத்

தையும் நொருக்கி, "கிழவி, சொல், குடியரசு வாழ்க!" என்று கொஞ்சம் வம்பிழுத்துச் சென்றான். இன்னொரு தெரு நெடுக:

"போர்கிளம்புது புகைகிளம்புது !
புரட்சி செய்திடுவோம்"

என்று பாடிக்கொண்டே சென்றான். முன்னே இரண்டு அநாதிக் குழந்தைகளை விரட்டியடித்தானல்லவா ஒரு நாசுவன்? அவன் இப்போது ஒரு சிப்பாய்க்கு மயிர்வெட்டிக் கொண்டிருந்தான். அந்தச் சிப்பாய் நெப்போலியனிடம் வேலை பார்த்தவன்; மாரெங்கோப்போரில் தான் பட்ட காயங்களையும் நெப்போலியன் போர்த்திறத்தையும் பற்றிப் பேசிக் கொண்டிருந்தான். அப்போது பட்டென்று ஒரு கல் விழுந்ததால், ஜன்னற்கண்ணாடி நொருங்கியுதிர்ந்தது.

'ஐயோ! நமது கடைகளையும் புரட்சிக் காலிகள் முற்றுகை போடுகிறார்கள் போலிருக்கிறதே!' என்று திடுக்கிட்டெழுந்தான் நாவிதன். "சொல், புரட்சி வாழ்க! குடியரசு வருக!" என்று ஓட்டமெடுத்தான் குரோஷன். 'அட காலிப்பயலே' என்று வைதான் நாசுகன். இவ்வாறு சுட்டித்தனம் செய்துகொண்டே குரோஷன் புரட்சித்தலைவர் இருக்குமிடத்திற்கு வந்தான்.

அஞ்சாலைரன், கூர்பெரன், கெம்பீரன், ஃபையபன், புரூவரன் எல்லாரும் போரணிபூண்டு, "வாழ்க! குடியரசு" என்று வாளோங்கி வந்தனர்.

"வாழ்க குடியரசு!
வீழ்க முடியரசு!"

என்று குரோஷன் உரக்கப் பாடிக்கொண்டே அவர்களுடன் போய்ச் சேர்ந்து கொண்டான்; "அண்ணே, எனக்கொரு நல்ல துப்பாக்கி மட்டுந் தந்திடுங்க; எத்தனைப் படை வந்தாலும் தமாஷாகச் சுட்டெரிக்கிறேன்" என்றான். "பலேடா பயலே!" என்று தட்டிக் கொடுத்தனர் தலைவர். அப்போது தான் மாபோ தடியை ஊன்றிக்கொண்டு அங்கு வந்தார். கூர்பெரன் அவரைத் தடுத்தான்.

கூர் :—தாத்தா, எங்குப் புறப்பட்டீர்கள்?

மாபோ :—இங்குந்தான்.

கூர் :—திரும்புங்கள் வீட்டிற்கு.

மாபோ :—ஏன்?

கூர் :—அங்கே போர் நடக்கிறது.

மாபோ :—நல்லதுதானே!

கூர் :—குண்டு விழுந்தால்?

மாபோ :—நல்லது தானே.

கூர் :—செத்துப் போவீர்.

மாபோ :—நிரம்ப நல்லது........நாட்டு விடுதலைக்காக என் உயிரைத் தரக் கொடுத்துவைக்க வேண்டுமே!

"மாபோவுக்கு வயோதிகம் போயிற்று. வாலிபம் வந்தது. "புறப்படுங்கள் போர்க்களத்திற்கு" என்று வீராவேசமாகச் சொன்னார் குடியரசு கட்சியாரிடம் இக்கிழவர்.

"தாத்தாவுக்கு ஜே!" என்று குதித்தான் குரோஷன்.

"அரசனில்லை ஆண்டியில்லை
யாவரும் சமானமே!"

என்று ஒரு பிர்க்கா வாங்கினன். எல்லாரும் தேனி முனிவர் (St. Denis) தெருவில் பகைவரை முற்றுகைபோடச் சென்றனர்.

---

86. கோரிந்து ஓட்டல்

தேனி முனிவர் தெரு (St. Denis) வை யொட்டிச் சாவே தெரு (Chanvrerie) உள்ளது. அதில் 300 ஆண்டுகளாகப் புகழ்பெற்ற கோரிந்து ஓட்டல் உள்ளது. கொரிந்து திராட்சைப் பழங்களினின்று பிழிந்த சாராயமும், மீன் பணியாரமும் அங்கு விசேஷம். ஏராளமான பேர் அங்குச் சாப்பிட வருவர். அதன் தலைவர் ஹூஷ் லூப் (Huche loup) என்பவர் சில சமயம் கண்டிப்பும் கடுகடுப்புமாயிருந்தாலும், நல்ல மனமுள்ளவர்: பண்டங்களைச் சுசி ருசியாகச் சுடச்சுடப் பரிமாறுவார்: தமாஷாகவும் இருப்பார்: சாப்பிடுகிறவர் குடி வெறியில் என்ன கூச்சற்போட்டு அட்டகாசம் பண்ணினாலும் பொறுத்துக் கொண்டிருப்பார். அங்கே சாப்பிட்டுத் தமாஷாகக் கூடிக் கூத்தாடவே பலர் வருவர்.

இந்த ஒட்டல் மிடாக்குடியனை கிராந்தேரனுக்குப் பிடித்திருந்தது. அவன் சிபார்சு செய்துதான் கூர்பெரன், போஸ்வே முதலிய A. B. C. தலைவரெல்லாம் இங்குச் சாப்பிட்டு வந்தனர். 1830-ம் ஆண்டில் ஹூஷ் லூப் இறந்துபோனார். இப்போது (1832) அவர் மனைவி ஹூஷ் லூப் அம்மாள் தான் ஒட்டலை ஏனோதானோவென்று நடத்தி வருகிறாள். பண்டங்கள் முன்போல நயமில்லை. என்றாலும் ஹூஷ் லூப் அம்மையின்மேல் இரக்கங்கொண்டு கூர்பெரன் வகையறாக்கள் இங்கேயே குடித்துச் சாப்பிட்டு வந்தனர்.

இன்று காலை, கிராந்தேரன், போஸ்வே, ஜோலி ஆகிய மூவரும் இங்கே வந்து தமாஷாகக் குடித்தனர். கிராந்தேரன் இரண்டு பெட்டியைக் காலி பண்ணி விட்டு, "இன்னும் கொண்டா" என்றான். "அட வுன் வயிற்றிலே பெருச்சாளியா?" என்று போஸ்வே கேலி செய்தான். கிராந்தேர் இன்னொரு புட்டி போட்டுவிட்டுத் தமாஷாக வைப்பாட்டி வர்ணனையில் இறங்கி, வாய்மழை பொழிந்தான்: "என்ன சொன்னாலும், உலகில் இரண்டுதான் இன்பம்: குடி, கூத்தி. நீ இன்று ஏதோ புரட்சி என்று பேசுகிறாய்; ஆம், புரட்சிதான்; எனக்கு வேண்டியது காதல் புரட்சி."

ஜோலி:—க்ராந்தேர், மாரியன் மனத்தில் அந்தப் புரட்சி பலமாயிருக்கிறது.

கிராந்:—மாரியனா? பயலுக்கு அனுபவம்

போதாது. வாடா என்றால், அவன் வெட்கிப் பதுங்குகிறான். மெனக்கெட்டுப் பாலுக்கு (Ball) அழைத்துச் சென்றால், கூச்சப்பட்டுக் கொண்டு நழுவிப் போகிறான். மாரியன் நல்ல சனி. கவிகளெல்லாம் பித்துக் குளிகள் தானே. உலகம் தெரியாத காவியப் பித்துக்களுக்கு யாராவது உதவாக்கரைப் பெண்கள் தாம் வருவர். ஆகாயத்தைப் பார்க்கும் பேர்வழி! எந்த ஓடுகாலி அவனை இழுத்துக்கொண்டாளோ தெரியவில்லை.......அனுபவம் வேண்டுமப்பா! என் வைப்பாட்டியைப் பாரு........

மீண்டும் வைப்பாட்டி வர்ணனையிலே பிடித்தான் கிராங்கேரான். அப்போது சுமார் பத்து வயது சிறுவன் மழையில் நனைந்துகொண்டு அங்கு வந்தான்.

சிறுவன் :—போஸ்வே யார்?

போஸ்வே :—நான் தான். நீ யார்?

சிறுவன் :—நான் நாவே; குர்பேராக்குடைய தோழன்.

போஸ்வே :—என்ன வேண்டும்?

சிறுவன் :—அங்கே ஒரு பெரிய நெட்டை மனிதர் (அஞ்சோல்ரஸ்) இங்கே போஸ்வே கிட்ட "A. B. C. தயார்" என்று சொல்லச் சொன்னார்; அதற்காக ஒன்றரையணா தந்தார்.

போஸ்வே :—சந்தோஷமான செய்தி; பலே, பையா, இந்தா மூன்றணா கூட. இங்குச் சாப்பிடு.

சிறு :—மாட்டேன்; லாமார்கின் பிண ஊர்

வலத்தில் பெரிய தமாஷ் நடக்கிறது. நான் குரோஷனுடன் 'குடியரசிற்கு ஜே' போடவேண்டும்.

பையன் ஓடிப் போனன்.

போஸ்வே :—கிராந்தேர், லாமார்க்கைப் புதைக்கப்போகிறார்கள். நமது A. B. C. நண்பர் அரசாங்கப் படையைப் புதைக்கப் போகிறார்கள். நாமும் போவோமே.

ஜோலி :—மழையில் நான் வரமாட்டேன். எனக்கு ஜலதோஷம். இங்கே நடக்க வேண்டிய காரியத்தைப் பார்ப்போம்.

கிராந்தேர் :—முதல் காரியம் ஹாயாகப் படுத்துக் குறட்டைவிட வேண்டியது.

போஸ்வே :-அட, சுதந்திரம் பெறவேண்டாமா?

கிராந்தேர் :—முதல் சுதந்திரம் இந்த ஹுஷ்லூப் அம்மாளை இறுகத் தழுவிக் கொள்வதுதான். அம்மா, ஒரு முத்தம்.

போஸ்வே :—அட, கிழவியைத் தொந்திரவு பண்ணதேடா.

இச் சமயம் டப், டப்பென்று மிதியடிச் சத்தம் கேட்டது. சாவேரித் தெரு முழுதும் அதிர்ந்தது. அஞ்சாலரன், கூர்பெரன், ஃபையன், கம்பீரன், புரூவரன், பஹேரால் எல்லாரும் துப்பாக்கியும் கையுமாகப் போருடை யணிந்து வந்தனர். குரோஷனும் தனது ஒட்டைத் துப்பாக்கியைக் கொண்டு, பெரிய தளகர்த்தன் மாதிரி விறைப்பாக வந்து, "குடியரசுக்குஜே!" என்று கூவினன். "கூர்பெரன், இங்கே

தான் வழி மறைத்து முற்றுகை போடவேண்டும்'' என்றான் அஞ்சாலரன். "சரியான இடம்; காரியத்தைத் தொடங்குவோம்'' என்றான் கூர்பெரன்.

கொரிந்து ஓட்டலில் தலைவர் முகாம் போட்டனர்; அங்கு வெடிமருந்து, தோட்டாக்கள் முதலியன தயாரிக்க ஏற்பாடு செய்தனர். ஹூஷெலூப் பதறினாள். அஞ்சாலரன் அவளைத் தைரியப் படுத்தி, இரண்டாவது மாடியில் இருக்கச் செய்தான். தெருக் கூறைகளையும், கட்டிகளையும், மர மட்டைகளையும், கடைகளிலிருக்கும் பீப்பாய்களையும் பிடுங்கி வந்து, குறுக்கே ஏழடி உயரம் தடுப்பு (Barricade) எழுப்பித் தெருவை அடைத்தனர் வீரர். அங்கே ஒரு குதிரை வண்டி வந்தது. அதை அவர் கைப் பற்றினர்; வண்டியிலிருந்தவரைப் பத்திரமாக அப்புறம் கொண்டு சேர்த்தனர்; குதிரையை யவிழ்த்து விட்டனர்; தடுப்பிற்கருகே செங்குத்தாக நிறுத்தி, அதன் மேல் இரத்தப் புரட்சிக் கொடியைப் பறக்க விட்டனர். குரோஷுவுக்குக் குதூகலித்துக் கொண்டது. சேதுப்பாலங் கட்டக் குரங்குகள் கற்களைக் கொண்டு வந்தது போல, குரோஷன் அங்கும் இங்கும் பாய்ந்து, வீடு வீடாக நுழைந்து, மரம், மட்டைகளை ஏராளமாகக் கொண்டுவந்தான். இந்தத் தடுப்பினால் கொரிந்து ஓட்டல் பலமாகக் காக்கப் பெற்றது. பகைவர் அங்கு நுழைய முடியாது.

பாதுகாப்பு வேலை முற்றியதும் வாசற் கதவை அடைத்துக் காவல் வைத்துவிட்டு, அஞ்சாலரன்

A. B. C படைக்கு ஆயுதங்களை வழங்கினன்; முக்கியமான போர் வீரர்களுக்குச் சுழல் துப்பாக்கியும், 30 தோட்டாக்களும் தந்தான்; மற்றப் பேருக்கு வெடி மருந்துக் குழாய், வாள், ஈட்டி முதலான ஆயுதங்களைத் தந்தான்; ஒவ்வொருவரும் நிற்கவேண்டிய இடத்தையும், செய்யவேண்டிய வேலையையும் குறிப்பிட்டான். "நாட்டு விடுதலைக்காக நமதுயிர்ப் பலி தரும் வேளை இதோ நம்மை அழைக்கிறது; தோழர்களே" என்றான் அஞ்சாலரன். தம்மையே சார்ந்திருக்கும் உற்றார் உறவினரை நினைத்துத் தோழர் பாடிப் பிறகு போர்க்களத்திற் குதிக்க உறுதி பெற்றனர்:

கட்டி முத்தங்கொடுக்கும்-இளங்
காதல் மனைவியர்காள்,
பெற்று வளர்த்தவர்காள்-உடன்
பிறந்த சோதரர்காள்,
உற்ற வுறவினர்காள்-எங்கள்
உள்ளன்பு நேயர்களா,
வெற்றி விடுதலைக்கே-இன்று
வீரச் சமர் புரிவோம்!
வென்றுயிர் கொண்டுவரின்-எங்கள்
வீரப் புகழுரைப்போம்;
கொன்றுயிர் மாய்ந்துவிடின்-எங்கள்
கொற்றம் உலகுரைக்கும்.
பொன்றுமுடல் கொடுத்தே-இந்தப்
பூமி நலம்பெறவே

சென்று சமர்புரிவோம்-உங்கள்
சீரிய பேர்விளங்க!
ஆசி யளித்திடுவீர்-எங்கள்
அன்பிற் குரியவர்காள்,
ஆசி யளித்திடுவீர்-எங்கள்
ஆண்மை பெருகிடவே!
ஆசி யளித்திடுவீர்-உங்கள்
ஆன்ற புகழ்விளங்க;
தேச விடுதலைக்கே-சமர்
செய்து ஜயம்பெறுவோம்!

இப் பாட்டை உருக்கமாகப் பாடியதும், இந்த வாலிபர் உள்ளத்தில் ஒரு வீராவேசம் பிறந்தது. வீரர்கள் புரட்சியை அணிவகுத்துப் படையை ஆங்காங்கு நிறுத்தினர்; கொரிந்து ஓட்டல் சமையலறையில், ஈயம் காய்ச்சித் துப்பாக்கி மருந்து தயாரித்தனர். அதைப் பார்க்க அஞ்சாலரன் சென்றான். அங்கே குரோஷன் வெகு உற்சாகமாக வேலை செய்து கொண்டிருந்தான்; அஞ்சாலாரனைக் கண்டதும், "மாமா, மாமா" என்றான்.

அஞ்:—என்டா, பயலே, வேலையைக் கவனி.

குரோ:—மாமா, எனக்குப் பெரிய துப்பாக்கி வேணும். நானும் சுடுவேன்.

அஞ்:—பெரியவர்களுக்குத் தான் துப்பாக்கி. சின்னப்பயல் உனக்கு ஒட்டைத் துப்பாக்கிப் போதும். அதனால் பகைவரை மண்டையில் அடி.

குரோ:—மாமா, என்னைச் சின்னப்பயல் என்று

னைத்தீர்கள்? துப்பாக்கி தந்து பாருங்கள். என்ன மாய்ச் சுடுவேன் தெரியுமா? நான் வீரன்! வீரன்! வீரன்!

அஞ் :—சரி, முதலில் ரவை குண்டுகளைச் செய்வோம். பிறகு பார்ப்போம்.

அஞ்சாலரன் திரும்பினான். குரோஷன் குண்டு செய்யப் போனான். அந்தச் சமயம் A. B. C. படைகளோடு படையாய் ஒரு நெட்டை மனிதன் அங்கு மெல்ல நுழைந்து, சுற்றிப் புலிக்கண் வீசினான். 'யாரிவன்?' என்று குரோஷன் சந்தேகித்தான்; 'ஓகோ........' என்று அஞ்சாலரனிடம் ஓடினான். "மாமா, அந்த ஆள் ஒற்றன்; எனக்கு அவனைத் தெரியும்; என்னை ஒரு நாள், 'சுட்டித்தனம் பண்ணுதே' என்று குட்டினான்" என்றான். அஞ்சாலரன் ஊழித்தீ மாதிரி சினந்து வந்தான்; ஆளை உற்று நோக்கினான்.

அஞ் :—நீர் யார்?

ஜா :—நான்........நான்........

அஞ் :—எங்கு வந்தீர்?

ஜா :—இங்குத்தான்........பார்க்க வந்தேன்.

அஞ் :—நீர் ஒற்றரல்லவா?

ஜா :—நான் அரசாங்க தூதன்.

அஞ் :—பெயர்?

ஜா :—ஜாவர்.

"இவனைப் பிடித்துக் கட்டுங்கள்" என்றான் அஞ்சாலரன். நான்கு புரட்சி வீரர் ஜாவரை ஒரு

னொயிற் பற்றித் தூணில் பலமாகக் கட்டினர். அஞ்சாலரன் ஜாவரின் துப்பாக்கியைக் கைப்பற்றினான்; சட்டைப் பையைச் சோதித்தான். "சாவேரித் தெரு, கொரிந்து ஓட்டலில் புரட்சிக்காரரை கண்காணிக்க வேண்டியது. இங்ஙனம் 50 வயதுள்ள பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜாவருக்கு, பொலீஸ் தலைவர் ஜிஸ்கே இட்ட உத்திரவு" என்று ஒரு சீட்டிருந்தது. இன்னொரு சீட்டில், "சாவேரித் தெரு நடவடிக்கைகளை உளவு பார்த்து அறிவித்த பிறகு, சென் நதியில் வலக்கரையில் இருந்து புரட்சிக்காரர் யாரும் தப்பியோடாது பிடித்துச் சிறையிட வேண்டியது" என்று ஒரு உத்திரவிருந்தது.

அஞ்சா :—எங்கள் முற்றுகை முடிவதற்கு இரண்டு நிமிஷத்திற்கு முன்பு உன்னைச் சுட்டுக் கொல்வோம்.

ஜாவர் :—ஏன் இப்போதே சுடலாமே.

அஞ்சா :—வெடிமருந்து தயாராகிறது.

ஜாவர் :—கத்தியினாற் குத்தலாமே.

அஞ்சா :—நாங்கள் கொலைக்காரர்களல்லோம்; தக்க சமயமும் காரணமும் இல்லாமல் யாரையும் கொல்ல மாட்டோம்.

இச்சமயம் வாசலில், 'ஐயோ! ஐயோ!' என்று சத்தங்கேட்டது. அஞ்சாலரன் ஓடினான். அங்கே காவற்காரன் இரத்த வெள்ளத்தில் பிணமாய்க் கிடந்தான். அவனருகே ஒரு தடியன் இருந்தான். அவனே காவற்காரனைச் சுட்டவன். "கதவைத்

திறக்க மாட்டேனென்றான், சுட்டேன்" என்று அஞ்சாமற் பேசினான் தடியன்.

அஞ்சாலரன் அவனைக் கட்டிப் பிடித்தான்.

அஞ்சா :—உன் பெயரென்ன?

தடி :—கழக்கன்.

அஞ்சா :—ஒரே நிமிஷம்; கழக்கா, கடவுளைத் தொழு.

கழக்கன் திமிறினான்; முக்கினான்; கடித்தான்; நடக்கவில்லை. ஒரு நிமிஷம் ஆனது. டபாஅர்! ஒரே வேட்டு; கழக்கன் மண்டை சிதறி விழுந்தது.

வேட்டுச் சத்தம் கேட்டு நண்பர் ஓடி வந்தனர்.

"நண்பர்களே, இவன் நமது காவற்காரனைச் சுட்டான். நான் இவனைச் சுட்டேன். இவனிடம் இன்னொரு குற்றமுள்ளது. நாம் புரட்சி வீரர்; முழு விடுதலை வேண்டுவோர்; குடி அரசுக்காரர். இவன் நம்மை அடிமையாக்கும் சாத்தான் கும்பலைச் சேர்ந்தவன். இவனிடம் அன்பிருந்தால் நம்மிடமும் அன்புண்டு. இவனை இழுத்து அப்புறப் படுத்துங்கள்" என்றான் அஞ்சாலரன். கழக்கனை இழுக்கும்போது ஒரு சீட்டு அவன் பையிலகப்பட்டது. "க்ளாக்ஸ-ெ, அரசாங்க ஒற்றன், **கழக்கன்** என்ற புனை பெயரால் கொரிந்து ஓட்டலில் புரட்சிக்காரரை உளவு பார்த்து வருக" என்று பொலீஸ் உத்திரவிருந்தது.

இதன் பிறகு எல்லாரும் முற்றுகைக்குச் சென்றனர். அரசாங்கத் துருப்புகளும் வெகு ஆத்திரத்தோடு ஊழிக்கனல் வெள்ளம்போல வந்தன.

87 மாரியன் போர்க்கோலம்

கோலத் காணுமையால், வீடு காலியாயிருந்தது. மாரியன் மனங் கலங்கிநின்றான். அப்போது, "மாரியன், சாவேரித் தெருவில் நண்பர் உனக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றனர்" என்றொரு குரல் கூவி ஓடியதல்லவா? மாரியன் பித்துப் பிடித்தவன்போலத் தன்னுணர்வற்றுச் சாவேரித் தெருவை நோக்கி வந்தான். இருட்டு! அங்கிமிங்கும் சிவப்பு லாந்தர்கள் எரிந்தன. கடைகள் மூடியிருந்தன. ஜனங்கள் கும்பல் கும்பலாகச் சென்றுகொண்டிருந்தனர். தேனி முனிவர் தெருவிலிருந்து அபாயக் குறி பிறந்தது. அங்கு ஜன நடமாட்டமில்லை. ராணுவப் படைகளே அணிவகுத்து நின்றன. மாரியன் எப்படியோ படைகளைத் தாண்டிச் சிறிது முன் சென்றான். மேலே செல்ல முடியவில்லை. தடுப்பு; இருட்டு கும்மென்றிருந்தது. ஒரு விளக்குக் கூட இல்லை.

விளக்கு வெளிச்சம் தென்பட்டால் அங்கு டபார் என்று குண்டு வந்து விழும். ஆட்களை மறைவாக ஒளியவைத்துச் சமயம் பார்த்துச் சுடுவது தான் போர்முறை. புரட்சிப் படைகள் இருளிற் பதுங்கிக் கொண்டிருந்தன. எதிரிகள் அங்குமிங்கும் வட்டமிட்டனர்: சமயம் பார்த்துச் சுட்டனர். குறுக்கிக போனல் குண்டு விழும். கலகத்தை முற்ற விடாமல் அன்றிரவுக்குள் புரட்சிக்காரரைச் சுட்டுக்

கொல்லவேண்டுமென்பது அரசர் ஆணை. ஆதலால் பலமான துப்பாக்கிப் படை வந்திருந்தது.

மாரியன் புரட்சிக்காரர் எழுப்பிய தடுப்பி னருகே வந்து சிந்தித்தான்: "ஆம், எனது தந்தை போமெர்ஸி பிரபு குடியரசிற்காகவே போர் புரிந் தார்; நெப்போலியனுடன் அரேபியா, அலெக்ஸாந் திரா, கெய்ரோ, ஜினிவா, மிலான், மாத்ரித், வியன்னு, பெர்லின், மாஸ்கோ, பெல்ஜியம் முதலிய இடங்களி லெல்லாம் போர் புரிந்தார். அத்தகைய வீரத் தந்தையின் குருதி எனது நாடிகளில் ஓடுகிறதல் லவா? நானும் தந்தையைப்போல வீரனுவேன்; குண்டுகளை எதிர்ப்பேன்; போர்முனையிற் குதிப் பேன்; பகைவரை யழிப்பேன்; உரிமையைக் காக்க அறப்போர் புரிவேன். ஆ! இப்போது எனது தந் தையின் வீர வாள் கையிலில்லையே! அதை என் பாட்டன் விற்றது எவ்வளவு இறுமாந்த கொடுமை! இருக்கட்டும், என் தந்தையின் வாள் கையிலில்லா விட்டாலும் என் மனத்திலுள்ளது. இதோ போகி றேன் போர் முனைக்கு" என்று கொரிந்து ஓட்டல் வாசலுக்கு வந்தான். அங்கு முன்னே கிளாக்ஸா சுட்டு இறந்த காவற்காரன் பிணம் கிடந்தது. அங்கு மிங்கும் ஆட்கள் பூனைபோல் நடமாடினர்; மெது வாகக் காதும் காதும் வைத்தாற் போலப் பேசினர்.

இச்சமயம் அரசாங்கத் துப்பாக்கிகள் இடியுங் கனலும் பொழிந்தன. புரட்சிக்காரர் வண்டிக்கு மேலே கட்டிய செங்கொடி கீழே விழுந்தது. "அதை

யாராயினும் சரியாக எடுத்துப்போடட்டும்" என்றான் அஞ்சாலரான். யாரும் முன்வரவில்லை. தடுப்பிற்கப்புறம் தலை நீட்டினால் விழும் குண்டடி. "நமது ஜண்டாவை எடுத்து உயர்த்த யாரும் விரும்பவில்லையா?" என்று விசாரப்பட்டான் அஞ்சாலரான்.

அச்சமயம், "இதோ நான்! குடியரசுக்கு ஜே!" என்றொரு நொண்டி கிழவர் தோன்றினார். அவரே நமது மாபோ. மாபோ, சுதந்திரப் போரில் தம்மைப் பலிகொடுத்து, இந்த வறுமை வாழ்வை ஒழிக்கவே அங்கு வந்தார்.

அஞ் :—ஐயா, நீர் 84 வயது கிழவர்.

கிழ :-அதனாலென்ன? என் மனம் கிழடல்லவே?

அஞ் :—மாபோ அண்ணா, நீர் பேசாமல் வீடு சேரும்.

கிழ :—மண் வீடு அலுத்துப்போனது. வீரவிண் வீடு சேரவேண்டுமடா தம்பி.

மாபோ தடுப்பில் எப்படியோ தத்தித்தள்ளாடியேறி, அந்தப்புறம் குதித்தார்; புரட்சிக் கொடியை எடுத்தார்; மீண்டும் மேலேறி, அதைப் பறக்கவிட்டு, "வாழ்க புரட்சி! வாழ்க குடியரசு! சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம்—வாழ்க! வாழ்க!" என்று உரக்கக் கூவினார். எதிரேயிருக்கும் இராணுவத் தலைவன், "இருப்பதார்?" என்றான். மாபோ, "புரட்சி வாழ்க! பொதுநலம் வாழ்க! ஒற்றுமை, விடுதலை, நேயம்—வாழ்க!" என்று பெருங்குரலெடுத்துக் கூவினார். "சுடு" என்றான் இராணுவத் தலை

வன். படைகள் சுட்டன. மாபோ அடிபட்டு, "வாழ்க சுதந்திரம்!" என்று மல்லாந்தார்; உடனே இறந்தார். இக்கிழவரது வீரம் வாலிபரைப் பன்மடங்கு ஊக்கியது. "தோழர்களே, நாம் தயங்கினோம். இப்பெரியார், 84 வயது கிழவர், நம் சுதந்திரக் கொடியை எடுத்து உயர்த்தினார். தம் உயிரைத் துரும்பென மதித்து, நாட்டுக் கொடியைக் காத்த இப்பெரியார் வீரம் அற்புதமானது. இவர் வீரத்தை வணங்குவோம். இவரைப் பார்த்து நமது கோழைத்தனம் குறைக!" என்று ஆவேசமாகப் பேசினான் அஞ்சாலரன்; மாபோவின் நெற்றியை முத்தமிட்டான்; மாபோவின் உடலை ஜாவருக்குப் பக்கத்திலிருந்த ஒரு நீண்ட மேஜையில் மரியாதையாக வைத்தான். இவையெல்லாம் கண்ட குரோஷன், "நானும் வீரமாகப் போர் புரிவேன்" என்றான்; "புலி, எலிப் பொறியிலே அகப்பட்டதா?" என்று ஜாவரைக் கேலி பண்ணி, அவன் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு புறப்பட்டான். இச்சமயம் நகரக் காவற்படை, 'பட் பட்' டென்று சுட்டுக்கொண்டே முன்வந்து தடுப்பைக் கைப்பற்றியது. படைத தலைவன் பஹோரனைச் சுடப்போகும்போது, குரோஷன் அவனைக் குறிவைத்து வீழ்த்தினான். எதிரி, "ஐயோ!" என்று விழுந்தான். இன்னொரு எதிரி வந்தான். அவனும் சுட்டு வீழ்த்தப்பட்டான். "இரண்டு தோட்டாவிற்கு இரண்டு கழுகைச் சுட்டேன்; இன்னும் தோட்டாப் பொறுக்கி வருகிறேன்" என்று குண்டுகளுக்

கிடையே பாய்ந்தான் குரோஷன்; அங்கே சுடப்பட்டு வீழ்ந்த வீரர் மடியைத் தடவித் தடவி ஒரு கூடை நிரம்பத் தோட்டாக்களைக் கொண்டுவந்தான். "சபாஷ்டா குட்டி வீரா" என்று எல்லாரும் குரோஷனைத் தட்டிக் கொடுத்தனர். பகைவர் பஹோரானைச் சுட்டே தீர்த்தனர். ஒருவன் குரோஷனைக் குறி வைத்தான். குரோஷனுக்குப் பின்னால் ஒரு புதிய ஆள் வந்து பகைவனைச் சுட்டு வீழ்த்தினான். இன்னொரு பகைவன் கூர்பெரனைக் குறிவைத்தான். அப் பகைவனையும் சுட்டு வீழ்த்தினான் புதிய ஆள்.

"வா, வா, மாரியன், நன்றி, வந்தனம்" என்று புதிய ஆளைத் தழுவிக் கொண்டான் கூர்பெரன்.

"நீங்களில்லாமற் போனால், என் வேலை தீர்ந்து போயிருக்கும்" என்று நன்றி செலுத்தினான் குரோஷன்.

பகைவர் கம்பீரனைக் கைது செய்து சுட்டனர். 'குடியரசு வாழ்க! தேசம் வாழ்க!' என்று கம்பீரன் கம்பீரமாகக் கூவி யிறந்தான். மாரியன் வீரமாகப் போர்புரிந்தான். ஒரு பகைவன் அவன் கன்னத்தில் துப்பாக்கியை நீட்டிச் சுடப்போனான். சட்டென்று ஒரு வாலிபன் அத்துப்பாக்கியைப் பிடித்து விலக்கினான். மாரியன் தப்பினான். 'மாரியன், மாரியன்' என்றொரு பெண் குரல் கேட்டது. மாரியன் பார்த்தான். காலடியில் ஒரு உடல் கிடந்து துடித்தது. "மாரியன், என்னைத் தெரியவில்லையா?" என்றது மறுபடி.

மாரி :—ஆ! எபோனியா?

எபோ :—ஆம், மாரியன்.

மாரி :—இங்கே என்ன செய்கிறாய்?

எபோ :—சாகிறேன்.

மாரி :—ஆ! இங்கேனம்மா வந்தாய்?

எபோ :—உனக்காகத்தான்; உன் முகத்திற் சுடப்போன துப்பாக்கியை நானே தடுத்தேன். அது என் கையிற் சுட்டு, மார்பில் பாய்ந்துவிட்டது.

மாரி :—ஆ! எபோனி, தூக்கிச்சென்று உன் புண்ணைக் கட்டுகிறேன்.

எபோ :—இந்தப் புண் கிடக்கிறது; என் மனப் புண்ணிற்கு முதலில் வைத்தியம் பண்ணு.

மாரி :—என்ன செய்யவேண்டும்?

எபோ :—என்னை யணைத்து ஒரு முத்தமிடு; போதும். உன் பணத்தை விசியெறிந்தேன்; உன் மனத்தையே விரும்பி வந்தேன்; என்னுயிரைத் தந் தேன்; ஒரு முத்தந் தா. அத்துடன் நான் உலகி னின்று விடை பெற்றுக்கொள்ளுகிறேன்.

எபோனி மாரியனைக் காதலித்திருந்தாள். மாரி யன இதை யறிந்தான்; இறக்கும் ஆன்மாவின் இறுதி விருப்பத்தை நிறைவேற்றுவது கடனென்றுணர்ந் தான்; முழந்தாள் பணிந்து, எபோனியின் நெற்றி யில் முத்தமிட்டான். எபோனி தனது கன்னத்தை மாரியன் தொடையில் வைத்தாள்; அவன் கையால் தன் மார்பை ஒற்றிக்கொண்டாள். "ஆ! என்ன சுகம்! என் ஆவி மகிழ்ந்தது" என்றாள்.

இச்சமயம்,

“ கட்டுகளை யுடைப்போம்—எங்கள்
கைவலி யுள்ளமட்டும்
முற்றுகை போட்டெதிர்ப்போம்—எதிர்
முளும் பகைச்சினவாள்
வெட்டி மடித்திடினும்-அஞ்சா
வீரர்களாய் விழுவோம்!
சுட்டுப் பொசுக்கிடினும்-நாங்கள்
சுதந்திரராய் இறப்போம் ”

என்று குரோஷன் உரக்கப் பாடினன்.

“ஆ! என் தம்பி பாடுகிறான்” என்றான் எபோனி.

மாரி:—உன் தம்பியா?

எபோ:—ஆம், குரோஷன் என் தம்பி. அவனை இங்கு அழைத்து வரவேண்டாம். நான் விடைபெற்றுக்கொள்ளுகிறேன். மாரியன், என் பையிலுள்ள இந்தக் கடிதத்தை எடுத்துப் படித்துப்பார். இது உனக்கு. இன்னொரு முத்தங்கொடு. நான் மகிழ்வுடன் இறக்கிறேன்.

மாரியன் தொடையில் தலையை வைத்துக் கொண்டு ஒரு முத்தம் பெற்றதும், எபோனி உயிர் நீத்தாள்.

* * *

மாரியன் விளக்கு வெளிச்சத்தில் கடிதத்தைப் பார்த்தான். அது கோஸத்தின் கடிதமே. அதை அவன் முத்தமிட்டான்; கண்ணிலொற்றிக் கொண்டான்; படித்தான்:—

"என் அருமைக் காதலா, தந்தையின் விருப்பப்படி அந்த வீட்டை விட்டு இன்று ஆயுதக்காரத் தெரு, 7-வது எண் வீட்டில் இருப்பேன். இன்னும் எட்டு மணி நேரத்தில் இங்கிலாந்தில் இருப்போம்."

—கோஸத்து.

எபோனி, கொஞ்ச நாளைக்கு முன் ஒரு ஊர்க்காலியுடன் உடை மாற்றிக்கொண்டாள்; பெண்ணுடையை அவனுக்கீந்தாள்; அவனது ஆணுடையைத் தான் வாங்கியணிந்தாள். அவளே ஜாம்வல்ஜானை "வீட்டைக் காலிபண்ணு" என்று எச்சரிக்கை செய்தவள். அவள் மாரியன்மேல் அடங்காக் காதல் கொண்டாள். தன் காதலன் வேறொரு பெண்ணைத் தொட்டால் பொறுமையா யிருக்குமல்லவா? 'எப்படியாவது கோஸத்தையும் மாரியனையும் பிரித்துவிட வேண்டும். மாரியனை முத்தமிட வேண்டும்' என்ற இரண்டே அவளாசை. ஜாம்வல்ஜான் வீடு மாற்றிச் செல்லும்போது, கோஸத் தனது புதிய விலாசத்தை மாரியனுக்குத் தெரிவிக்க விரும்பினாள். கடிதம் எழுதினாள். யாரிடம் அனுப்புவது? அவள் தனியாகக் கடிதச் சாலைக்கும் போகமாட்டாள்; தூஸாந்திடம் தந்தால், அவள் ஜாம்வல்ஜானிடம் காட்டி விடுவாள். கோஸத் வழக்கம் போலத் தோட்டக் கதவண்டை நின்று சிந்தித்தாள். அப்போது கூலி மாதிரி உடையணிந்து ஒரு பையன் அங்குச் சென்றான். அது எபோனியே. அவனுக்குப் பத்தணா கூலி கொடுத்துக் கடிதத்தை உடனே விலாசக்காரரிடம்

சேர்க்கச் சொன்னாள். ஏபோனி மாரியனைத் தேடித் திரிந்தாள்; உடனே கொடுத்தால் அவன் கோஸத்தை நாடிச் செல்வானெனத் தாமதித்தாள்; மாரியன் ஆசை தீரத் தன்னை முத்தமிட்ட பிறகு, கடிதத்தை அவனிடந் தந்து உயிர் நீத்தாள்.

காதலி தன்னை மறக்கவில்லையென்று மகிழ்ந்தான் மாரியன். எனினும், அவளைத் தான் மணந்து வாழ முடியாதெனத் தளர்ந்தான்; சாகவே துணிந்தான்: காதலிக்கு இவ்வாறு இறுதிக் கடிதம் எழுதினான் :—

"நாம் மணம் புரிய முடியவில்லை. எனது பாட்டனார் இணங்கவில்லை. நான் ஏழை. எனக்கு அதிட்டமில்லை; உனக்குந்தான். உன்னைத் தேடி வந்தேன்; காணவில்லை.

நான் உன்னிடம் முடிவாகச் சொன்னபடியே இறக்கிறேன். இக்கடிதத்தை நீ படிக்கையில், என்னாவி உன் பக்கத்திலிருந்து புன்னகைக்கும்."

உன்னையே காதலிக்கும் மாரியன்.

மாரியன் கடிதத்தை நாலாக மடித்தான். "திருமதி கோஸத் போஷல்வான், போஷல்வான் வீடு, எண் ஏழு, ஆயுதக்காரத் தெரு" என்று விலாசம் எழுதினான்: கூப்பிட்டான் குரோஷனை.

மாரி :—குரோஷன் !

குரோ :—இதோ.

மாரி :—எனக்கொரு காரியம் செய்கிறாயா ?

குரோ:—எல்லாம் செய்கிறேன்; தாங்கள் என்னைக் காப்பாற்றிய வீரரல்லவா!

மாரி:—இக்கடிதத்தை நாளைக் காலை விலாசதாரிடம் சேர்க்கவேண்டும். குண்டுபட்டுச் சாகாது தப்பியோடு.

குரோ:—ஓ! நான் கோழையோ? இன்று போர் புரிந்து நாளைக் காலைக் கடிதம்கொண்டு போகிறேன்.

மாரி:—ஊஹூம் உடனே நீ தப்பியோடு—போ, போ.

குரோஷன் ஒரே ஓட்டமாக ஒளிந்து மறைந்து சென்று, அன்றிரவே ஆயுதக்காரன் தெருவை யடைந்தான். தனது தந்தையைக் காத்த தென்னாடியன் மகனைப் போர்க்களத்தினின்று காக்க வேண்டுமென்றுதான் மாரியன் குரோஷனை உடனே ஓடிப் போகச்சொன்னான். குரோஷனோ, "கடிதங்கொடுத்ததும், போர்புரிய வருவேன்" என்று சென்றான்.

மாரியன் சாவை யெதிர்க்க உறுதிகொண்டான்.

"என் பெயர் மாரியன் போமேர்ஸி. என் சவத்தைக் கல்வரித்தெரு ஆறுவதெண்ணுள்ள வீட்டிலிருக்கும் என் பாட்டனார் ஜில் நார்மனிடம் கொண்டு சேர்க்கவும்" என்று மாரியன் ஒரு சீட்டை எழுதிச் சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டான்; போர் வினையிற் புகுந்தான்.

---

88. ஜாம்வல்ஜானது கலக்கம்

ஆயுதக்காரத் தெரு அதிக நடமாட்டமில்லாது அமைதியாயிருந்தது. ஊரில் கலவரம் நடக்கும் இச்சமயம், தாந்தாம் கவனமாயிருந்துகொண்டு பிறர் வேலையிற் குறுக்கிடாதிருந்தனர் அத்தெருவார். ஜாம்வல்ஜான் தனி விட்டு மாடியில் சுகமாகவே யிருந்தான். மாடியில் இரண்டு படுக்கையறைகள் இருந்தன. ஒரு சமையலறை, ஒரு சாப்பாட்டறை, ஒரு பரண் இருந்தன. பரணில் தூஸாந்து படுத்தாள். கோஸத்திற்குத் தனியாக ஒரு நல்ல காமரா உள் அமைந்தது. அங்கு நாள் முழுதும் அவள் மாரியன் சிந்தனையிலேயே ஆழ்ந்திருந்தாள்; தான் நேற்றனுப்பிய கடிதத்திற்குப் பதிலை எதிர் பார்த்தவண்ணமிருந்தாள்.

ஜாம்வல்ஜான் லண்டன் பயணத்தைப் பற்றிச் சிந்தித்தான்: உலகில் அவன் பாசத்துடன் விரும்பும் ஒரே பொருள் கோஸத். அவன் அவள் உடனிருந்தால் தானெங்கிருந்தாலும் பரவாயில்லை யென்றுணர்ந்தான்; உலகில் சமூகக் கொடுமையாலும், சட்டக் கொடுமையாலும் தான் பட்ட துயரையெல்லாம் இந்த ஒரு அபிமானத்தால் மறந்தான். இரவு கோஸத் தனது அறையில் உறங்கினாள். கோஸத்தின் மேஜையில் அமர்ந்து ஜாம்வல்ஜான் சிந்தித்தான். விளக்கெரிந்தது. மேஜையில் ஒரு நிலைக்கண்ணாடி பதித்திருந்தது. அதில் ஏதோ சில வரிகள் எதிரொளித்தன. மேஜையிலிருந்த மைவொற்றியில் படிந்த வரிகளே அவை. படித்தான் ஜாம்வல்ஜான் :—

"என்னருமைக் காதலா, தந்தையின் விருப்பப்படி அந்த வீட்டை விட்டு இன்று ஆயுதக்காரத் தெரு, 7-வது எண் வீட்டிலிருப்பேன். இன்னும் எட்டு மணி நேரத்தில் இங்கிலாந்திலிருப்போம்.

கோசத்."

ஜாம்வல்ஜானுக்குத் தூக்கி வாரிப்போட்டது. கோஸத் தன்னையே நேசிக்கிறாள் என்று அவன் எண்ணியிருந்தான்; தனது தாய், தங்கை, தோழி, குழந்தை எல்லாம் அவளே யென்றெண்ணினான்; அவளும் தன்னையே தந்தை, சகோதரன் மாதிரி சிநேகிக்கிறாள் என்றிருந்தான். 'இப்போது அவள் மனமெல்லாம் யாரோ ஒரு காதலனிடமல்லவா சென்றுவிட்டது. அட செய், இது ஆகுமா? வந்தது மோசம்! இவளை நம்பித்தானே இவ்வுலகில் வாழுவது. இவள் தன் மனத்தை வேறொருவனிடம் வைத்தாளே!' என்று ஜாம்வல்ஜான் கவலைக் கடலில் ஆழ்ந்தான். 'யாரிந்தக் காதலன்? எனது அருமை மகளின் மனத்தைக் கவர்ந்த இக்கள்வன் யார்?' என்று சிந்தித்தான். 'ஓகோ, அந்த வாலிபன் தான்; ஆக்ஸப்பூர் தோட்டத்தில் வந்து வலை போட்ட வாலிபனே! இளம்பெண்களை இப்படி வாலிபர் வசப்படுத்துவது என்னே கொடுமை!' என்று பல்லைக் கடித்தான். தூக்கம் வரவில்லை. அப்போது தூஸாந்து, "உஉஉளரிலே, சசசண்டை பொபொபொ போடுராங்களாம்!" என்றாள்.

"எங்கே?" என்றான் ஜாம்வல்ஜான்.

"அ-அ-அந்த ச-ச-சவேரித் தெ-தெ-தெருவிலே" என்றாள் தூஸந்து. ஜாம்வல்ஜான் துப்பாக்கிச் சத்தம் கேட்டான்; தன் வீட்டு வாசலில் அமர்ந்து கவலையுற்றிருந்தான். வீட்டருகே ஒரு சர்க்கார் லாந்தர் எரிந்தது.

பால் முனிவர் கோயிலில் பதினொரு மணி யடித்தது. ஜாம்வல்ஜான் இன்னும் சிந்தனையில் மெய்ம்மறந்திருந்தான். 'கோஸத் கைநழுவி விட்டால், பிறகு இருந்தென்ன? இறப்பதே மேல்' என்பதே அவன் சிந்தனைச் சுருக்கம்; அப்போது ஆளரவம் கேட்டது; பார்த்தான். ஒரு பையன் வீடு வீடாகப் பார்த்துக்கொண்டு தன்னருகே வந்தான். அவனே குரோஷன். அவன் 7-வது எண் வீட்டைக் குறித்து வந்தான். ஜாம்வல்ஜான் அவனை வினவினான்:

ஜாம்:—பையா, என்ன செய்தி?

குரோஷ:—நீர்தான் பையன், நான் வீரன்.

ஜாம்:—அதிருக்கட்டும், என்ன வேண்டும்?

குரோஷ:—பசிக்கிறது.

ஜாம்:—முன் இந்தா பத்தணா—சாப்பிடு.

குரோஷ:—வயிற்றுப் பசியல்ல, சுதந்திரப் பசி; இந்தச் சர்க்கார் விளக்கை ஒரு போடு போட்டுத் தள்ளப் போகிறேன். நீர் பத்தணா லஞ்சம் கொடுத்து என்னைத் தடுக்காதேயும். நான் குடியரசு வீரன்: லஞ்சம் வாங்கமாட்டேன். இந்தாரும் உமது பணம்.

குரோஷன் ஒரு கல்லெடுத்து வீசினன். லாந்தர் பட படவென்று நெரிந்துடைந்து பெரிய சத்தத்துடன் கீழே யுருண்டது. எதிர் வீட்டிலிருந்தவர்கள், "ஐயோ! நமது தெருவிலும் புரட்சிக்காரர் வந்து விட்டனர்" என்று அஞ்சிப் பதுங்கி உள்ளிருந்தே கூச்சலிட்டனர். "ஆ! அப்படி, உருள் சர்க்கார் விளக்கு! நாளை நமது குடியரசு விளக்கெரியும்" என்று குதூகலித்தான் குரோஷன்.

ஜாம்:—அப்பனே, உனக்குத் தாயார் இருக்கிருளா?

குரோஷ:—இருக்கலாம்.

ஜாம்:—இந்தா, அவளிடம் இந்தப் பணத்தைக் கொடு, ஏழை.

குரோஷ:—சரி. குடியரசு உண்டியில் போடுகிறேன். என் தாயார் சுதந்திரை. தாங்கள் நல்ல மனிதர், தாங்கள் இந்தத் தெரு தானே?

ஜாம்:—ஆமாம், ஏன்?

குரோஷ:—7-வது எண் வீடேது?

ஜாம்:—கேட்பதேன்? ஆ! கடிதம் தர வேண்டுமோ? அதைத்தான் எதிர்பாக்கிறேன்.

குரோஷ:—உமக்கா? நீர் பெண்ணல்லவே?

ஜாம்:—திருமதி கோஸத்திற்குக் கடிதம், இல்லையா?

குரோஷ:—ஆ! ஆம்.

ஜாம்:—கொடு கடிதத்தை. நானே அவளிடம் அதைச் சேர்க்கவேண்டும்.

குரோஷ:—நான் புரட்சிப்போர் முனையிலிருந்து வந்திருக்கிறேன். அறிவீரா?

ஜாம்:—நன்கறிவேன்; கொடு.

குரோஷ:—நமது குடியரசு தளகர்த்தர் உத்திரவை நிறைவேற்ற வந்தேனைக்கும். நீர் கடிதத்தை உடனே கோஸத்தம்மையாரிடம் சேர்ப்பீரா?

ஜாம்:—ஆம், உறுதி.

குரோஷ:—கவனம்; உடனே விலாசதாருக்குக் கடிதம் சேரவேண்டும். செல்லும்.

ஜாம்வல்ஜான் கடிதத்தைப் பெற்றுக் கொண்டு உள்ளே சென்றான். குரோஷேன் தனது கடமை தீர்ந்ததென்று தொண்டையை நீள அவிழ்த்து விட்டுக் குஷியாகப் பாடிச்சென்றான்:

ஃ ஃ ஃ

சாயுதடீ தங்கமுடீ-தில்லாலே!
சட்டமெல்லாம் ஓடியுதடீ-தில்லாலே
பாயுதடீ வீரவெள்ளம்-தில்லாலே
பறக்குதடீ சிகப்புக்கொடி
தில்லாலங்கடித்-தில்லாலே
ஓயுதடீ முடியரசு-தில்லாலே
ஓங்குதடீ குடியரசு-தில்லாலே
மாயுதடி அடக்குமுறை-தில்லாலே
வாழுதடீ சுதந்திரமே-தில்லாலங்கடி
தில்லாலே!

இப்படி ஒரு பெரிய குரலெடுத்துப் பாடி

யாடிக்கொண்டே இன்னொரு லாந்தரைக் கல்லா லடித்து உடைத்தெறிந்தான் குரோஷன்.

"பறக்குதடி, சிவப்புக்கோடி
தில்லாலங்கடி தில்லாலே!"

என்று பாடிக்கொண்டே குரோஷன் சென்றான். சர்க்கார் அச்சுக்கூட வாசலில் ஒரு கைவண்டி இருந்தது. அதில் ஒரு சேவகன் படுத்திருந்தான். குரோஷன் அவனை உற்றுப்பார்த்தான்; "குடிமயக்கத்திலே படுத்திருக்கிறாயா, அண்ணாத்தே, கிழே படு" என்று ஆளைக் கீழே மெல்ல இழுத்து விட்டான்; அதில், "இந்த வண்டி குடியரசுக்காகக் கைப்பற்றப் பட்டது. குடியரசு வீரன் குரோஷன்" என்றெழுதி, ஆளின் சட்டைப்பையில் போட்டான்; வண்டியைத் தள்ளிக்கொண்டு விரைந்தான். அப்போது லாந்தர் நொறுங்கிய சத்தம் கேட்டும், பாட்டுச் சத்தம் கேட்டும், பொலீஸார், 'டட்டடேய்' என்று வந்தனர். ஒரு சிப்பாய் மட்டும் முன் வந்து குரோஷனை நிறுத்தினான்.

சிப்பாய் :—நீ யார்?

குரோ :—என்னைக் கேட்க நீ யார்?

சிப் :—அட பயலே, எங்கே போகிறாய்? திருட்டுப் பயலே, நீ தானே பாடினாய்? உன் தொண்டையிலே சில்லு வண்டா பூந்திருக்கிறது? யார் உனக்குத் தொண்டைக்குழி தோண்டியது?

குரோ :—ஏ, நம்ம கிட்ட மரியாதையாய்ப் பேசுமையா, வார்த்தை வீசாதேயும்.

சிப் :—எங்கே போகிறாயடா பயலே?

துரோ :—என் பெண்டாட்டிப் பிரசவம். டாக்டரைக் கூட்டிவர வண்டி கொண்டு போகிறேன். உனக்கென்ன?

சிப் :—சுடுகிறேன் உன்னை.

சிப்பாய் துப்பாக்கியை நீட்டினான். குரோஷன் வண்டியை கிமிர்த்தி அவன் மேலே மோதியடித்து ஒரே ஓட்டமாக ஓடி மறைந்தான். வேட்டு ஆகாயத்திற் பறந்தது. ஆள் கீழே யுருண்டு விழுந்தான். 'திருடனைச் சுட்டு விட்டான் நமது சிப்பாய்' என்று மற்றச் சிப்பாய்களெல்லாம் தமது நிலையத்திற்குச் சென்றனர். இவ்வாறு சுட்டித்தனம் செய்து கொண்டு, ஒளிந்து மறைந்து குரோஷன் கோரிந்து ஓட்டலுக்கு வந்து கடிதம் கொடுத்து விட்டதாக மாரியனிடம் தெரிவித்துப் போர்முனையிற் புகுந்தான்.

ஜாம்வல்ஜான் கடிதத்தைப் படித்தான். ஆத்திரம் ஒரு புறம்: 'நமது மகள் மனத்தைக் கவர்ந்த திருடன் சாகப் போகிறான்; பீடைவிட்டது; இனிக் கோஸத் நமக்கேதான்' என்ற மகிழ் வொருபுறம். ஆயினும், "நீ இக்கடிதத்தைப் படிக்கும்போது என்னுடைய ஆவி உன் பக்கமிருக்கும்" என்றதைப் படித்ததும் ஜாம்வல்ஜான் மனமிளகியது. 'காலையில் தான் இக்கடிதம் தரும்படி ஏவியுள்ளான்; இதற்குள் இறந்திரான். நாம் அந்த வாலிபனைக் காப்பாற்றுவது கடமை. அவன் இறந்தது அறிந்தால் ஒரு

வேளை கோஸத்தும் உயிர் நீப்பாள். அவனைக் காப் பதே நமது கடமை' என்று உறுதி கொண்டெழுந் தான் ஜாம்வல்ஜான்; அரசாங்கப் போர்வீரன் மாதிரி சட்டையணிந்து, உடனே சாவேரித் தெரு விற்குப் புறப்பட்டுச் சென்று, கொரிந்து ஓட்டலை யடைந்தான்.

---

89. போர் முனையில் ஜாம்வல்ஜான்

வீடுகள் தகர்கின்றன. ஜன்னல், கதவுகளெல்லாம் உடைந்து உதிர்கின்றன. கலகக்காரர் கண்ட தையெல்லாம் இடித்து, வீழ்த்தி, இழுத்து வந்து தெருவின் குறுக்கே பலமான தடைச் சுவர் எழுப் பினர்; முன்னே பஸ்தீல் சிறையிருந்த இடத்தில் ஒரு பெரிய தடைச் சுவரெழுப்பிப் போர்புரிந்தனர்; ஆந்தோனி முனிவர் தெருவில் மலைபோன்ற தடைச் சுவரெழுப்பிப் பயங்கரமான போர் தொடுத்தனர். இதைப் போர் என்பதினும் இரத்தக் கொதிப்பு என்பதே தகும். எங்கும் வாட்காடு. துப்பாக்கி படவி. சிவப்புக் கொடி வா, வா, என்றழைக் கின்றது. ஜனங்கள் கையில் அகப்பட்ட ஆயுதங் களைத் தூக்கிக்கொண்டு போர் வெறி பிடித்து வந் தனர். போர் முரசம் திசைபிளக்க வீறிட்டது. பெண்கள் மார்முரசம் அடித்தலறியது; குழந்

தைகள் பரிதாபக் கண்ணீர் வடித்தலறினர். ஊர்க் காலிகள் குஷியாகப் பாடினர். இரவில் காரிருளில் பதினாயிரக்கணக்கான ஆயுதப்படைகளுடன் தொழிலாளரும் மாணவரும் போர் புரிந்தனர்.

சாவேரித் தெருவில், கொரிந்து ஓட்டலில், பாசறை யமைத்துப் போர்புரியும் வீர நண்பரைப் பாருங்கள். இரண்டொருவர்தாம் சிறிது நேரம் கண்ணயர்த் தெழுந்தனர். மற்றவர்கள் கண் மூட வில்லை; ஈயத்தை உருக்குகின்றனர்; வெடி மருந்து கலக்குகின்றனர். குண்டுகளும், ரவைகளும், தோட்டாக்களும் செய்து குவிக்கின்றனர் ஓரிடத்தில். அவற்றைத் தோட்டையில் வாங்கிக்கொண்டு போர் முனைக்குச் செல்லுகின்றனர் வீரர்; பகைவரைப் பார்த்துச் சுடுகின்றனர். குண்டுகள் சென்று எதிரிகளை வீழ்த்துகின்றன. குண்டுகள் ஊழித்தீ யுமிழ்ந்து வந்து கலகக்காரரைக் கொன்று வீழ்த்து கின்றன. தடைச் சுவர் தகர்கிறது: மீண்டும் மரம் பட்டைகளைக் கொண்டு நிமிர்கிறது! வீரர், காயப் பட்ட எதிரிகளை ஒருபுறம் இழுத்துச் செல்கின்றர்; இறந்த எதிரிகளைப் பிண மலைகளுடன் குவிக்கின்ற னர்; அவர் அணிமணிகளை உறிஞ்சுகின்றனர்; புண் பட்ட புரட்சி வீரரைக் கொரிந்து ஓட்டலின் சமைய லறையிற் கொண்டு சென்று, கவனமாகச் சிகிச்சை செய்கின்றனர்; இறந்த புரட்சிவீரரை ஓரிடத்தில் வணக்கமுடன் வைக்கின்றனர். புண்பட்டவர் பலர், காயங்கட்டிக் கொண்டெழுந்து, மீண்டும்

போராரங்கத்திற் குதிக்கின்றனர். பதினொரு மணி நேரமாக இவ்வாறு விடாப்போர்புரிந்து, இப்போது 37 பேர்களே மிச்சமிருக்கின்றனர். ஒட்டலில் இருந்த சாப்பாடெல்லாம் அருவாயின. இனி ஒரு ரொட்டித் துண்டு கூட இல்லை. பசி, தாகங்களை யெல்லாம் மறந்து, அதோ வரும் பட்டாளப் புயலை எதிர்த்துப் போராடவேண்டும். "ஐயோ! பசி, ஐயோ தாகம்!" என்று சிலர் அலறுகின்றனர். "நான்கு மணி நேரம் பொறுங்கள். மேலுலகிற்குச் சென்று சாப்பிடுவோம்" என்கின்றனர் மற்றோர். அஞ்சாலரன் அவர்களுக்குச் சிறிது பிராந்திமட்டும் தந்தான். போஸ்வேயும், கொம்பேரனும் வீரர் கதைகளைப் பேசினர்: "வீரர்களே, நாம் 37 பேர். இப்பெரிய சர்க்காரை எதிர்க்கிறோம். நாம் சாவோம். உலகம் எள்ளி நகைக்குமென்று அஞ்சுகிறீர்களா? ஜுவால்(Zoile) என்பவன் ஹோமரைப் பழித்தான். மேவியன் (Meavius) விர்ஜிலைப் (Virgile) பழித்தான். விஸே (Vise) மோலியரைப்பழித்தான். போப் (Pope) ஷேக்ஸ்பியரைப் பழித்தான். பிரேரன் (Freron) வால்தேரைப் பழித்தான். ஸீஸர் 31 வாட் புண்கள் பட்டிறந்தான். ஸீஸரை மந்திரிகள் குத்தினர். ஏசுநாதரைக் கேவலமாகத் துப்பிப் புடைத்தனர், வைதனர் இழிபகைவர். உலகில் அறிஞரும் வீரரும் இகழ்வுண்டனர்; பிறகு புகழுண்டனர். இசை, வசைகளைப் பாராட்டாமல் நாம் நாட்டிற்காகப் போர்புரிவோம், வாருங்கள்!!"

இரவெல்லாம் இவ்வீரர் அஞ்சாது எதிரிகளைச் சுட்டு வீழ்த்தினர். புரட்சிக்காரருக்கே வெற்றி யானது. சர்க்காரப் படையும் கலங்கிப் பதுங்கி நின்றிற விட்டது. "நமக்கே வெற்றி, காலையில் பாரிஸ் நகர் முழுதும் கிளரும். மாலையில் புரட்சிப் போர் நடக்கும். பிறகு தாயிலெரியைத் தகர்த்துக் குடியரசை நிலைநாட்டிவிடுவோம்" என்று தன் வீர ருக்குத் தைரியம் சொன்னான் அஞ்சாலரன். எண்ணம் ஏமாறியது.

காலை ஆறு மணி. மெல்லிய பூங்காற்றுத் தவழ்ந்து வருகிறது. புட்கள் பாடுகின்றன. இந்த அமைதியைப் போர் முரசம் கலக்குகிறது. காலையின் மணத்தை இங்குக் குவிந்து கிடக்கும் பிண நாற்றம் கலக்குகிறது. அஞ்சாலரன் மாடியிலேறிக் களத் தைப் பார்த்தான். ஆ! வருகிறது அரசன் படை! கடற் புயலைப் போல வருகிறது. ஊழி வெள்ளம போல உருமி வருகிறது. இனி வெற்றிக்கிடமில்லை.

"புரிவோம் வீரப்போர்! வீரமா யெழுந் தோம்; வீரமாய்ச் சாவோம்!" என்று கர்ஜித்தான் அஞ்சாலரன்.

"துளி இரத்தம் உள்ள மட்டும் சுதந்திரப் போர் புரிவோம். வாழ்க குடியரசு!" என்று வீரர் கர்ஜித்தனர்.

அஞ்சாலரன்:—"வீரர்களே, யாருக்காவது உயி ராசை யிருந்தால், ஓடிப் போகலாம்.

எல்லாரும்:—எங்களுக்கு உயிரைவிடச் சுதந்

திரத்திலேதான் ஆசை யதிகம். அஞ்சோம்; போர் புரிவோம்.

அஞ்சா :—உங்கள் வீரம் வாழ்க. ஆனால், இங்கே மனைவி மக்கள் உள்ள ஐவர் உள்ளனர். இதோ நான்கு சர்க்கார்ப் படை வீரர் உடுத்தும் உடையுள்ளது. ஐவரில் யாராயினும் நால்வர் இவற்றைப் போட்டுக்கொண்டு தப்பி யோடவேண்டும்.

ஐவர் :—மாட்டோம். மார் காட்டி வந்தவர் புறங்காட்டி யோடோம். அப்படிச் செல்லவும் வழியில்லை. இந்த மாறுவேஷத்திற் போனாலும் தெருவெங்கும் உள்ள ராணுவ வீரரும், ஒற்றரும் கண்டு பிடித்துச் சுட்டு விடுவர். பகைவர் கையிற் பட்டிறப்பதை விட இங்குப் போர்புரிந்து இறப்பதே மேல்.

அஞ்சா :—நீங்கள் போகத்தான் வேண்டும். மனைவி, மக்கள் உங்களுக்காகக் கவலைபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

ஐவர் :—நாங்கள் தேசம் விடுதலைபெறக் கவலை கொண்டிருக்கிறோம். நாட்டிற்கே உயிர்ப்போம்; நாட்டிற்கே இறப்போம்.

அஞ்சா :—உங்கள் நாட்டன்பை மெச்சுகிறேன். நாட்டிற்கு உயிர் கொடுக்க நாங்கள் இருக்கிறோம், போதும். நீங்கள் வீட்டைக் கவனியுங்கள். செல்லுங்கள் உடனே.

ஐவர் :—வீட்டினும் நாடே பெரிது.

கோம்பேரன் : —கேளுங்கள் தோழர்களே,

உங்களை நம்பிப் பெண்டு பிள்ளைகளெல்லாம் அங்கு மனம் பதைக்கின்றனர்: கண்ணீருடன் உங்கள் வரவை எதிர்பார்க்கின்றனர். நீங்கள் இங்கு வீணாக இறந்தால், அங்கு அத்தனைப் பேரும் வருந்தி இறப்பர்: தற்கொலை புரிந்துகொள்வர். உங்கள் தாய்மார்கள் உளம் வெடித்திறப்பர். "அம்மா, நான் பிழைத்து வந்தேன்" என்று நீங்கள் முன்னின்றால், அவர்கள் ஆறுதலடைவர். நீங்கள் இங்கு எதற்காயினும் இறந்தால், குடும்பத்தின் கதி யென்னவாகும்? அபலைகள் என்ன செய்வர்? தற்கொலை அல்லது மானத்தை விற்றுப் பிழைத்தல்—இரண்டே அவர்கள் கதி. வறுமையிலே தான் விலை வாழ்வு வருகிறது. உங்களை இன்புறுத்தி, நீங்களே உயிரென வாழும் இள மடந்தையர், தமது உடலை இன்னொருவருக்கு விற்று, நோயாலும், அவமானத்தாலும் வருந்துவது உங்கள் விருப்பமா? உங்களை மணந்த அல்லிக்கரங்கள், கண்ட பேரை யணையப் பார்ப்பீர்களா? ஐயோ! பரிதாபப் பெண்கள் என் செய்வார்கள்! தங்கள் கணவர் பிணங்களைக்கண்டு மனந்துடிப்பர்! இறப்பர்! அநாதைக் குழந்தைகளின் கதி யென்ன? அவை ஆதரவின்றி, 'அம்மா, பசி, பசி' யென்றலறித் தெருவழியே சென்று கண்டதை யுண்டு சாகுமே! ஒரு கலகத்தின்போது ஒரு தந்தை இறந்தான். தாய் தற்கொலை புரிந்து கொண்டாள். அவரது சவலைக் குழந்தை, "அம்மா, அம்மா" என்று அழுது அலறியது. அறியாக் குழந்தை பசிக்கொடு

மையால் அடுப்புச் சாம்பலையும் மண்ணையும் உண்டு இறந்தது. இதே மாதிரி பல குழைந்தைகள் மண்ணும், சேறும் உண்டு மடிந்தன. அன்பர்களே, நீங்கள் வீட்டைக் கவனியுங்கள். நாங்கள் இங்குச் சாக நிற்கிறோம். நீங்கள் பிழைத்து உங்கள் குடும்பத்தைச் சாவினின்று காப்பாற்றுங்கள்.

மாரியன் :—கலியாணமாகிக் குழந்தை குட்டியுள்ளவர்கள் உடனே தனியாக நில்லுங்கள்; சீக்கிரம்.

அஞ்சாலரன் :—உம், சீக்கிரம்.

ஐந்து பிள்ளை குட்டிக்காரர் முன் வந்தனர். இவர்கள் ஊர்க்காவலர் உடையில் தப்பிச் செல்ல வேண்டும். உள்ளது நான்கு உடைகளே.

மாரியன் :—நாலு உடைகள் உள்ளன. உங்களில் ஒருவர் இங்கிருக்கலாம். யாரிருப்பது?

ஐவரும், 'நான், நான், நான்!' என்று கூவினர். இச்சமயம் எங்கிருந்தோ இன்னொரு உடை வந்து விழுந்தது. அது மிச்சமிருக்கும் ஒருவருக்குப் போதும். ஐவரும் தப்பிப்போகலாம்.

"யார் அந்த உடையை யெறிந்தது?" மாரியன் நிமிர்ந்து பார்த்தான். ஜாம்வல்ஜான் (ஃபோஷல்வான்) எதிரே நின்றான். ஜாம்லல்ஜான் ஊர்க்காவலன் உடைதரித்து, யாருக்கும் தெரியாமல் இந்த நெருக்கடியான சமயத்தில் அங்குத் தோன்றினன். அப்போதுதான் மேற்சொன்ன ஐவர் பேச்சு நடந்தது. ஐவரும் தப்பிச்செல்ல இன்னொரு உடை

வெல்ஜெயன் றறிந்ததும், உடனே தனது உடையை கழற்றி வீசினான் ஜாம்வல்ஜான்.

போலங்லே:—யாரவர்?

கோம்பேரான்:—பிறரைக் காக்கும் புண்ணியவான்.

மாரியன்:—எனக்கு அவரைத் தெரியும்.

அஞ்சொல்ரன்:—நல்லது சரி, தோழரே, வாருங்கள், இங்கு நாங்கள் இறுதிப் போர் நடத்தி இறக்க நிற்கிறோம் என்றறிவீரா?

ஜாம்வல்ஜான் பேசவில்லை; புன்னகைத்தான்; தப்பிச்செல்ல வேண்டிய ஐவருக்கும் உடையை மாட்டினான்; அவர்களைப் பத்திரமாக வழி நடத்தித் தப்புவித்தான்; பிறகு வந்து, காயம்பட்டவர்களைக் காத்து வருவதும், இறந்தவரை அப்புறப்படுத்து வதுமாகத் தொண்டு செய்தான்.

இறுதி வீரக்கனல் போரில் இறக்கப் போகும் வீரர் முன் அஞ்சொல்ரன் கம்பீரமாக நிற்கின் றான்; செங்கண் போலச் சுற்றி நோக்கி, ஆவேசமாகப் பேசுகிறான்:

"தோழர்களே,

நாம் இதோ நமது உயிரைத் தொலைக்கப்போகிறோம், எதற்கு? மனித சமுதாயத்தின் சம உரிமைக்கு; எல்லாரும் ஒரு நிகர் என்னும் உண்மைக்கு. எனது வீரத்தோழர்களே, நாளுக்கு நாள் அறிவு விரிவாகி வருகிறது. மனிதனுக்குள் உள்ள சுதந்தர சக்தி கனன்றெழுந்து, தப்பித் தடைகளைத் தகர்த்து

வருகிறது. அந்த மஹாசக்திக் கனலை அகண்ட வேள்வித் தியாகத் தூண்டவே நமது உயிரை ஆகுதியாக வழங்குகிறோம். இனி வரும் மனித சமுதாயம் நிறைவான ஒருமையும், பெருமையும், சமவுரிமையும் பெற்றோங்கவே நாம் இன்று உயிரைத் தருகிறோம்.

தோழர்களே,

வீடுதோறும் அறிவொளி பொங்கவேண்டும். வீதியெல்லாம் செல்வஞ் செழிக்க வேண்டும். வாழ்வெல்லாம் அழகும் அமுதும் ஊறவேண்டும். ஊரெல்லாம் பொன்னும் பசுமையும் குலுங்க வேண்டும். ஒருவர் உணவை யொருவர் பறித்துண்ணும் கொடுமை யொழிய வேண்டும். பயிர் வளமும், தொழில் வளமும் பெருகி, வறுமை நலிய வேண்டும். அவரவர் மனச் சாட்சிப்படி நடக்கச் சுதந்திரம் வேண்டும். உழைத்த தொழிலாளி வயிறார உண்ணவேண்டும். செல்வச் செருக்கொழிய வேண்டும். போர், பகை, போட்டி, பொறாமை, சாதி மதச் சண்டைகள் கட்டோடொழிந்து, அமைதியும், அன்பும், ஒற்றுமையும், கூட்டுறவும், சகோதரத்வமும், சமத்துவமும், சுதந்திரமும், ஆண் பெண் அடங்கலுக்கும் தழைத்தோங்க வேண்டும். இதற்காகவே இன்று சுதந்திர யாக குண்டத்தில் நமது உயிரை வார்க்கிறோம். மனித மூளை, கடலைக் கப்பலால் வென்றது; தரையை ஆவி வண்டியால் வென்றது; வானைப் பறவைக் கப்பலால் வென்றது; இரவை மின் சக்தியால் வென்றது; ஜடப் பொருள்

களிலுள்ள சக்தியால் இவ்வளவு வெற்றி பெற்ற
மனித அறிவு, தன்னிடமுள்ள தெய்வ சக்தியால்
இன்னும் அளவற்ற வெற்றி பெறலாம்.

மனந் திருந்தினால், இனந் திருந்தும். மனச்சாட்
சியே அறவழி. அதன்படி மனிதன் நடந்தால், வேறு
புறச் சட்டங்களின் தேவையே யில்லை. அவரவர்
மனச்சாட்சியே அவரவர் அரசன். மனிதன் மனி
தனை அடக்கி, அடிமைப் படுத்தியாளும் கொடுமை
யொழியவேண்டும். இதற்கே நாம் இன்று வாள்
முனையில் உயிரைக்காட்டி நிற்கிறோம். அதற்கே நாம்
பெற்றோர், சுற்றம், அருமை, பெருமைகளையெல்லாம்
மறந்து, உண்மையைத் தந்தையாகவும், உரிமையைத்
தாயாகவும் மதித்து, இங்குப் பலிதானமாகிறோம்.
என்னை ஆள எனக்கே உரிமையுண்டு; பிறர்க்கில்லை.
எனது நாட்டவருக்கே யுரிமையுண்டு; தனி மனி
தனுக்கில்லை. குடிகளை யாளக் குடிகளுக்கே யுரிமை
யுண்டு என்னும் இந்த ஜனவுரிமைக்கே நாம்
இன்று இரத்தஞ் சிந்துகிறோம். ஒளி, உண்மை, உரி
மை—இவற்றிற் காகவே நாம் உயிரைத் தருகிறோம்.
தோழர்களே, அடிமை பிணிப்பொருது, நாம் வீர
ராக வீழ்வோம். நமது சாம்பலினின்று சுதந்திரக்
கனல் எழுந்தொளிரும். அதன் அருட்சுடர் அச்ச
விருளைத் துடைக்கும்; அடிமைப் பேயை மடிக்கும்;
மறவலியை வீழ்த்தும்; அறிவலியைப் பெருக்கும்;
மதச் சண்டைகளை விலக்கும். நாட்டுக்கு நாடு
போட்டிபோட்டுப் படையெடுத்துக் கோடிக் கணக்

நான மாந்தரைச் சுட்டுத்தள்ளும் இரத்த வெறியைத் தீர்க்கும். மனிதனை மனிதர் மதித்து நடப்பர். சுரண்டல், வரண்டல், பஞ்சம், பட்டினி, கொள்ளையின்றி உழைப்பும் பிழைப்பும் பெருகி, உலகம் பொதுவுடைமையாகி யோங்கும். உலகம் இயற்கை நெறிப்படி சூரியனைச் சுற்றிவருவது போல, மனித வாழ்வு யார் கட்டும் காவலுமின்றி, மனச்சாட்சியைப் பின்பற்றி, உண்மை யொளியைச் சுற்றி நடக்கும். ஒவ்வொருவரும் அனைவருக்கும், அனைவரும் ஒவ்வொருவருக்கும் வாழ்வார். அப்போதே உலகில் உண்மையான சுதந்திரமும், சமத்துவமும், சகோதரத்துவமும் நிலவும். அப்போதே உலகில் விண்ணரசு விளங்கும்.

தோழர்களே, மனித சமுதாயம் இத்தகைய இன்பம் பெற, நாம் இரத்த வெள்ளம் பொங்கும் துன்பக் கடலிற் குதிப்போம். நாம் இன்று இறப்போம். நாம் கடைப்பிடித்த உண்மை இறவாது. நாம் நாளையே மீண்டும் பிறந்து, அந்த உண்மை வெற்றி பெறச் செய்வோம். யார் உண்மைக்காகவும் உரிமைக்காகவும் உயிர் கொடுக்கிறானோ, அவனே என்றும் வாழ்கிறான். யார் தனது உயிருக் கஞ்சி உண்மையை ஒளித்து, அதர்மத்தின் காலைப்பிடித்துப் பிழைக்கிறானோ அவனே வாழ்வை யிழக்கிறான். கோழை நீடு வாழ்ந்தும் நடைப்பிணமே. தருமவீரன் இறந்தும் அமரனே. தோழர்காள், உங்களுக்கு எது வேண்டும்? அடிமைவாழ்வா? ஆண்மையான சாவா?”

எல்லாரும்:— அன்னையுடன் உரிமைக்குப் போராடிச் சாவதே எங்கள் வாழ்வென மதிக்கிறோம்.

அஞ்சா:—ஆனால் வாருங்கள். அதோ அரசாங்கப் படையெல்லாம் வருகிறது. போராடுவோம்.

அஞ்சாலரான் இடங் குறிப்பிட்டு ஒவ்வொருவரையும் நிறுத்தினான்; அவர்களுக்கு மீதியிருந்த பீர் புட்டிகளை உடைத்துத் தந்தான். சர்க்கார் படையெல்லாம் ஓசைப்படாமல் வந்து, தடைச்சுவரை நோக்கிச் சுட்டது. 'சுடுங்கள், தைரியமாய்' என்று தன் வீரருக்குக் கட்டளையிட்டான் அஞ்சாலரான். புரட்சி வீரர் குறிவைத்துச் சுட்டனர். பகைவர் சிலர் விழுந்தனர். எங்குப் பார்த்தாலும் வெடிப்புகை சூழ்ந்தது. அப்புகையினூடே, "இதோ, வந்துவிட்டேன்" என்றொரு பையன் மான் போலத் துள்ளி வந்து அஞ்சாலரான் பக்கம் நின்றான். யாரது? குரோஷனே. மாரியன் திடுக்கிட்டான்.

மாரியன்:—நீ இங்கு எதற்காக வந்தாய்?

குரோ:—நீர்? நான் வீரன்; சுதந்திரப் போர் புரிய வந்தேன்.

மாரியன்:—கடிதத்தைக் கொடுத்தாயா?

குரோஷ:—கோஸத் அம்மாள் தூங்கிக்கொண்டிருந்தாள்; வாசற் காவற்காரரிடம் கடிதங் கொடுத்தேன். அவர் காலையில் அந்த அம்மாளிடம் சேர்ப்பார்.

மாரியன்:—இதோ இந்தக் கிழவனைத் தெரியுமா?

ஜாம்வல்ஜானை இருட்டில் பார்த்ததால் குரோஷனுக்கு அடையாளந் தெரியவில்லை. ஃபோஷெல்வான் வரவு கண்டதுமே கடிதம் சேர்ந்திருப்பதை மாரியன் அறிந்து கொண்டான்.

ஒரு பீரங்கிப் படை வந்தது. அதன் தலைவன் இருபத்தைந்து வயது காளை; நல்ல அழகன். அவனைச் சுடக் கொம்பேரனுக்கு மனம் வரவில்லை. "போர்முனையில் புண்ணியம்பார்த்து முடியுமா? செய்வது செய்க" என்று அஞ்சாலரன் சுட்டான். பீரங்கித் தலைவன் மார்பில் குண்டு பாய்ந்து விழுந்தான்; அரசாங்கத் துருப்பிற்கு வெகு கோபம் வந்தது. தடைச் சுவரை நோக்கித் தீ மழை பெய்தது. சுவர் ஒருபுறம் தகர்ந்தது; அதை உடனே ஒரு தடுக்கு வைத்தடைக்க வேண்டும். இல்லையேல் அத்தனைப் பேரும் இறப்பர். வழியென்ன? இப்போது தான் ஜாம்வல்ஜான் எழுந்தான்; அஞ்சாலரனிடம் துப்பாக்கியை வாங்கிக்கொண்டான்; எதிர்ப் பக்கம் ஆறு மெத்தை வைத்த ஒரு வீட்டு மாடியில் ஒரு பலமான தடுக்கு இரண்டு கயிறுகளால் கட்டித் தொங்கியதைக் கண்டான்; குறி வைத்து ஒரு வேட்டு விட்டான்; ஒரு கயிறு அறுந்தது. பட்! இன்னொரு கயிறும் அறுந்தது. தடுக்குத் தடைச்சுவருக் கப்புறம் விழுந்தது. யார் அதை எடுப்பது? அங்குத்தான் எதிரிகளின் குண்டுகள் வந்து பொழிந்தன. உயிரை வெறுத்து இறங்கினன் ஜாம்வல்ஜான்; ஒரு ஓட்டத்தில் தெருவில் விழுந்த தடுக்கை எடுத்து வந்து

தலைச்சுவரில் வைத்து இறுகக் கட்டி விட்டான். எல்லாரும் ஜாம்வல்ஜான் வீரத்தை வியந்தனர். "தோழரே, இந்த வீரச்செயலுக்காகக் குடியரசு தங்களுக்கு வந்தனமுள்ள நன்றியைத் தெரிவிக்கிறது" என்றான் அஞ்சாலரன். ஜாம்வல்ஜான் செய்த உதவியால், கூட ஒரு மணிநேரம் வீரர் போர் தொடுக்க முடிந்தது. இதன்பின் ஜாம்வல்ஜான் ஒதுக்கமாக உட்கார்ந்து, ஏதோ சிந்தித்துக் கொண்டிருந்தான். "தாங்களென் பகைவரைச் சுடாதிருக்கிறீர்கள்?" என்று கேட்டான் போஸ்லே. ஜாம்வல்ஜான் பதிற் சொல்லவில்லை.

ஃபானிகன் (Fannicot) என்னும் கொடிய தளகர்த்தன் அரசாங்கப் படையை நடத்தி வந்தான். "சுடுங்கள்" என்றான் அஞ்சாலரன். "பட், பட், பட், பட், பட்!". ஃபானிகன் தனது படையுடன் மண்ணில் உருண்டான். அரசாங்கப் படைகள் இன்னும் சினவெறி கொண்டு வந்தன. இச்சமயம் பாரிஸ் நகரம் கிளர்ச்சி செய்து, தன்னுதவிக்கு வருமென்று எதிர்பார்த்தான் அஞ்சாலரன்; ஏமாந்தான். அரசாங்கப் படைகள் சந்து பொந்துகளிலும் புகுந்து, வீட்டை விட்டுத் தலை நீட்டிய பேரைச் சுட்டெரிக்கத் தொடங்கின. எல்லாரும் கதவைத் தாழிட்டு விட்டு உள்ளேயே பதுங்கினர். வீடுகள் சமாதிகள் போலப் பேச்சு மூச்சில்லாதிருந்தன. வீரர் கலங்கவில்லை; உயிருள்ள மட்டும், முடிவுவரைப் போராடவே துணிந்தனர். பீரங்கிப்படை தி

யுமிழ்ந்து நெருங்கியது. "தொடர்ந்து சுடுங்கள்" என்றான் அஞ்சாலரன். 'படார், படார்' என்று எழெட்டுத் தடவை தொடர்ந்து சுட்டனர் வீரர். பீரங்கிச் சிப்பாய்கள் பிண மலை குவித்தனர். வீரர், "வாழ்க குடியரசு!" என்று கூவினர். இன்னொரு வலுத்த பீரங்கிப் படை வந்தது. ஆனால் வீரரிடம் தோட்டாக்கள் மிகச் சிலவே இருந்தன. "ஆஹா, நம்மிடம் பத்துத் தோட்டாக்களே உள்ளன. எப்படிச் சுடுவோம்!" என்று விசனித்தான் அஞ்சாலரன்.

---

90. குரோஷன் வீரம்

கேட்டான் குரோஷன்; ஒரு பெரிய கூடையுடன் தடைச் சுவரேறிக் குதித்துப் போர்முனையிற் பாய்ந்தான். துப்பாக்கிக் குண்டுகள் "படார் படார்" என்று வந்து தெறிக்கின்றன. பிணங்கள் குவிந்தன. குரோஷன் விழுந்த எதிரிகளிடமிருந்து தோட்டாக்களைக் கையுடன் பறித்துக் கூடையில் போட்டான்.

கூர்:—அட குட்டி வீரா, என்ன செய்கிறாய்?

குரோ:—என் கூடையை நிரப்புகிறேன்.

கூர்:—குண்டுகள் வருவது தெரியவில்லையா?

குரோ:—அதற்கென்ன! மழை பெய்யட்டுமே

கூர்:—வாடா உடனே....

குரோ:—இதோ வந்துவிட்டேன்....

குரோஷன் கூடையை நிரப்பிக்கொண்டு சிட்டாய்ப் பறந்து வந்தான். அவன் கொணர்ந்த தோட்டாக்கள் சமயத்திற் குதவின. அவற்றைக் கொட்டி விட்டு மீண்டும் கூடையுடன் போர்முனையிற் குதித்தான் குரோஷன். குரோஷன் ஒரு பிணத்தின் மடியிலிருந்து வெடி மருந்துப் பையைப் பறிக்கும் போது, அதன்மேல் ஒரு குண்டு வந்து விழுந்தது. "பூ! செத்த பாம்பை அடிக்கும் வீரப் புலிகளா!" என்று சிரித்தான் குரோஷன். குரோஷனுக்குப் பாட்டுக் கிளம்பியது:—

"பட் பட் டென்று சுடு குண்டே
பயப்பட மாட்டேன் வெடிகுண்டே!"

மறுபடியும் ஒரு குண்டு குரோஷன் காலடியில் விழுந்தது. "அடசீ!" என்று துள்ளிக் குதித்துத் தப்பினான் குரோஷன்.

"டம்டம் என்றே அடி குண்டே
டடடா வென்பேன் நகை கொண்டே!"

என்று அவன் உரக்கப் பாடினான். இப்பையனை எதிரிகள் கவனித்து வியந்தனர்; "எவ்வளவு தைரியமடா இந்தப் பயலுக்கு" என்று சுட்டனர்.

"டும்டும் டும்டும் வெடிகுண்டே
துணிந்தே உன்முன் நிற்கின்றேன்"

என்று ஒரு தாவுத் தாவித் தப்பி, மீண்டும் தோட்டாப் பொறுக்கினான். மீண்டும் பகைவர் குறி வைத்துச் சுட்டனர். மீண்டும் துள்ளிக் குதித்து,

"டேட்டேம் டேம்டேம் வெடிகுண்டே
தூரப் போவே ஞேவெருண்டே"

என்று பாடிக்கொண்டே வெடி மருந்தைச் சேர்த்துக் கூடையை நிரப்பித் திரும்பும் சமயம், இன்னொரு பலமான குண்டு வந்து முகத்திற் படாரென்று பட்டு மண்டையைப் பேர்த்துவிட்டது.

"தும்தும் தும்தும் வெடிகுண்டே
குடியரசிற்கேன் வன்றேண்டே!"

"வாழ்க குடியரசு!" என்று வீழ்ந்திறந்தான் வீரக் குரோஷன்.

மாரியன் திடீரெனக் குதித்துக் குரோஷன் உடலைத் தூக்கி மாபோவின் பக்கத்திற் கொண்டு சேர்த்தான். குரோஷன் வீரத்தை எல்லாரும் போற்றினர். அவன் இறுதியிற் சேர்த்த வெடிமருந்தைத் தோட்டாச் செய்து பங்கிட்டனர். குரோஷனால் வீரர் இன்னும் சில நாழிகை தம்மைக் காத்துக் கொள்ள முடிந்தது.

---

91. வஞ்சந் தீர்த்தல்

நண்பகல்; சர்க்காரப் படை தடைச்சுவரைத் தகர்த்தெறிந்து, புரட்சிக்காரரைச் சுட்டொழிக்க வெகு உக்கிரமாக வந்தது. துணைத் தலைவனான மாரியன் தடைச்சுவர் மேலேறிப் பகைவர் படை

யைக் குறித்தான். மீதியிருந்தவர் 26 வீரரே. 34 துப்பாக்கிகள் மருந்துடன் தயாராயிருந்தன. 20 வீரர் மாரியனுடன் தடைச்சுவரினின்று பகைவரைச் சுட்டனர். ஆறுபேர் ஜன்னலினின்று சுட்டனர். அப்போது அஞ்சாலரான் விழிகள் ஜாவர்மேல் விழுந்தன. அவன் தூணில் கட்டியிருந்த ஜாவரை மெல்ல அவிழ்த்து, மாபோவின் அருகே ஒரு பலகையில் படுக்கவைத்துக் கட்டினான்; "உன்னை மறக்கவில்லை; இதோ சுடப்போகிறோம்" என்றான். "இந்தச் சர்க்கார் நரியை இங்குச் சுட்டு, நமது வீரர் உடலுடன் வைக்கத் தகாது; இவனை அதோவுள்ள சந்தில் கொண்டுபோய்ச் சுட்டுவிடவேண்டும்" என்றான் இன்னொரு வீரன். இச்சமயம் ஜாம்வல்ஜான் எழுந்து வந்தான்:

ஜாம்:—தாங்கள் தானே புரட்சித் தலைவர்?

அஞ்:—ஆம்.

ஜாம்:—எனக்குத் தாங்கள் நன்றி தெரிவித்தீர்களல்லவா?

அஞ்:—ஆம், குடியரசு, இரண்டு வீரர் செய்த நன்றியை என்றும் மறவாது: ஒருவர் மாரியன் போமேர்ஸி. மற்றொருவர் தாங்கள்.

ஜாம்:—தங்களிடம் ஒரு கைம்மாறு கேட்கலாமா?

அஞ்:—ஆஹா, தாராளமாக; என்ன வேண்டும்?

ஜாம்:—இந்த ஒற்றன் மண்டையில் என் கையாற் சுடவேண்டும்.

அஞ்:—நிரம்பச் சரி. இவனை அந்தச் சந்திற்கு இழுத்துச் சென்று, மண்டையிற் சுட்டுக் கொன்று போடுங்கள்.

ஜாம்வல்ஜான் ஜாவரை அவிழ்த்தான். ஜாவர் ஜாம்வல்ஜானை நன்கு கண்டுகொண்டான்; வியந்து திகைத்தான். 'ஆம், நியாயம். நான் இந்த மனிதனைக் கெடுத்தேனல்லவா? நானன்றோ புண்ணிய மதேலனைக் காட்டிக் கொடுத்துச் சிறையிலிட்டு நாய் மாதிரி நடத்தினேன்? அவன் கையால் என்னைச் சுடுவது நியாயமே' என்று ஜாவர் ஜாம்வல்ஜான் இழுத்தபடி மெல்லச் சென்றான். சீக்கிரம், "இந்த ஒற்றனைச் சுடும்" என்று மாரியன் கட்டளையிட்டான். "ஹ, ஹ, ஹ, உங்களுக்கும் என் கதிதான்" என்று நகைத்து, ஜாம்வல்ஜானைப் பின்பற்றிச் சந்திற்கு வந்தான் ஜாவர். ஜாம்வல்ஜான் அவனைப் பலியாடுபோல இழுத்துச் சென்றான்.

இப்போது ஜாவர் ஜாம்வல்ஜான் கையில் இருந்தான். இருவரும் தனியாயிருந்தனர். மனச்சாட்சி தவிர வேறு யாரும் அவர்களைப் பார்க்கவில்லை. ஒரு பெரிய பிண மலை அவர்களை மறைத்து நின்றது. அப்பிணமலையில் எபோனியின் உடலும் இருந்தது. ஜாம்வல்ஜான் கையில் துப்பாக்கிப் பிடித்து ஜாவரைக் குறித்தான்.

ஜாம்வல்:—ஜாவர், நான் ஜாம்வல்ஜான்.

ஜாவர்:—தெரிகிறது. இப்போது வஞ்சம் தீர்த்துக்கொள்.

ஜாம்வல்ஜான் மடியிலிருந்து ஒரு சூரி யெடுத்தான்.

ஜாவர் :—அதுவும் சரி. என்னைச் சரிகையால் கண்டதுண்டமாக்கு. தீர் வஞ்சம்.

தன் வாழ்வை யெல்லாம் கெடுத்து, நாயினும் கேடாக நடத்திய இந்த சரிபனப் புலியை ஜாம்வல்ஜான் என்ன செய்தான்? ஜாம்வல்ஜான் வஞ்சந் தீர்த்ததெப்படி? ஜாவரின் கழுத்திலும், கைகால்களிலும் கட்டிய பலமான கயிறுகளைப் படக்குப் படக்கென்று அறுத்தான்: "விடுதலையானீர். செல்லும்" என்றான்.

ஜாவரின் வியப்பிற்கு அளவில்லை. கடும் பகைவனை தன்னைச் சுடும் உரிமையும், ஆற்றலும் பெற்ற ஜாம்வல்ஜான், இவ்வாறு கட்டவிழ்த்து விடுவித்த கருணையைக்கண்டு பேச்சற்று நின்றான் ஜாவர்.

ஜாம்வல்:—நான் இந்தப் போர்க்களத்தினின்று வெளிப்பெறுவேனென்று தோன்றவில்லை. அப்படி ஒருவேளை பிழைத்துச் சென்றால், நான் ஆயுதக்காரன் தெரு, 7-வது எண் வீட்டில் இருக்கிறேன். என் பெயரைப் போஷல்வான் என்று மாற்றிக் கொண்டிருக்கிறேன்.

ஜாவர் :—உஷார்.

ஜாம்வல் :—சரி, போம்.

ஜாவர்: —போஷல்வான்....ஆயுதக்காரன் தெரு.

ஜாம்வல் :—7-வது எண் என்பதையும் குறித்துக் கொள்ளும்.

ஜாவர் :—என் எழு. தாங்கள் என்னைச் சுட்டு விடுங்கள்.

ஜாம்வல் :—தாங்கள் தப்பிச் செல்லுங்கள். உடனே ஜாவர் சட்டையைச் சரியாய் மாட்டிக் கொண்டு, ஜாம்வல் ஜானைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்று மறைந்தான்.

உடனே ஜாம்வல்ஜான் ஆகாயத்தை நோக்கி ஒரு வெட்டுப்போட்டு, மாரியனிடம் வந்து, "வேலை ஆயிற்று" என்றான். மாரியன் இந்தப் பொலீஸ் ஒற்றன் பெயர் 'ஜாவர்' என்று கேள்விப்பட்டுத் திடுக்கிட்டான். ஜாவர் முன்னே தந்த துப்பாக்கியால்தான் அவன் இப்போது பகைவரைச் சுட்டான்.

---

92. துன்பக்காடு

தெருக்கள் அதிரக் குதிரைப் படைகள் நடந்தன. பீரங்கிப் படைகள் எரிமலைபோலத் தீயுமிழ்ந்தன. பாரிஸ் நகரம் அதல குதலப்பட்டது. "டமார், டமார்" என்று குண்டுச் சத்தம் திசையைப் பிளந்தது. எமனுக்கு நல்ல வேட்டை. மாந்தர் குடல் நடுங்கியது. வீடுகளெல்லாம் உயிர்க்கும் புதை குழிகள் போல உறக்கங் கொண்டன. கதவைத் தட்டினாலும் திறப்பாரில்லை. 'அபாயம்! கதவைத் திறக்காதே' என்று எங்கும் சர்க்கார் விளம்பரம்

ஒட்டியிருந்தது. போர் நடந்த தெருக்களெல்லாம் பிணக்காடும் இரத்த வெள்ளமும், வெடி மருந்துக் குவியலும் நரகக்காட்சியுமாயின. 'மக்களை ஆளும் உரிமை மக்களுக்கே' என்றும் உண்மைக்காக எத்தனைப்பேர் பலியாயினர். ஆ! உண்மை எவ்வளவு பயங்கரமானது! அதன் பலிபீடத்தில் வீரர் தலைகள் மலை மலையாகக் குவிந்துள்ளன. உண்மை இரத்த வெள்ளத்தில் நீந்துகிறது. உண்மை தனது மார்பைப் பீரங்கி வாயிற் காட்டுகிறது. உண்மை தன் அன்பரைத் துயர்தந்து சோதிக்கிறது. ஆனால், உண்மை, துண்டு பீரங்கியாலும் கொடுங்கோலாலும் இறப்பதில்லை. உண்மைக்காகப் பலியான வீரர் புகழுடல் பெற்று வாழ்கின்றனர். அவர் சிந்த ஊனுடற் சாம்பலே உரமாகக் கொண்டிட உண்மைப் பயிர் தழைக்கிறது. மனிதன் மனிதனை மனிதனாக மதித்து நடக்கும் வரையில், அடக்குமுறைகளும், அழுக்கு முறைகளும், பிறர் வற்புறுத்தலும், பயமுறுத்தலுமின்றித் தூய மனச்சாட்சியின் சட்டப்படி மனிதன் நடக்க உரிமை கிடைக்கும் வரையில், அசுர மாயங்கள் ஒழிந்து, அறம் உலகை அவரவர் உள்ளத்தினின்று ஆளும் வரையில், செல்வர் செருக்கும், வறியோர் வறுமையும் தீரும் வரையில், உலகில் இந்தப் போராட்டம் இருந்தே தீரும். பயங்கரமான தியாகங்களின் மேல் உரிமையின் ஊர்வலம் முன்னேறுகிறது.

A. B. C. நண்பர் ஒரு நாட் செய்த புரட்சியால் ஊர் துன்பக்காடானது. எத்தனை உயிர்ச்

சேதம்! பொருட் சேதம்! ஆண்களின் பிண மலையைப் பார்த்துப் பெண்கள் மார் புடைத்து அழுகின்றனர். அனாதைக் குழந்தைகளின் துயர் சொல்ல வேண்டா. ஒரு உதாரணம் கொடுப்போம்:—

அருகே போர் நடப்பதால் லுக்ஸம்பூர்த் தோட்டம் பூட்டப்பெற்றிருந்தது. அதில் யாரும் நுழைய முடியாது. எனினும், இரண்டு அனாதிக் குழந்தைகள் எப்படியோ அதனுள் ஒளிந்து கொண்டன. இக் குழந்தைகளே குரோஷனுடன் யானைப் பங்களாவில் தங்கிய குழந்தைகள்; மின்னை விலைக்கு வாங்கி, ஜில்நார்மனுக்குப் பிறந்தவை யென்று வளர்த்த தென்னடிய மக்கள். இவை எங்கெங்கோ திரிந்து, காற்றிலும் தூசியிலும் அடிபட்டு, உணவின்றி, இடமின்றி, முடிவில் லுக்ஸம்பூர்த் தோட்டத்தில் அன்னங்களை அடைத்த ஒரு கூண்டிற்குப் பின் வந்து பதுங்கிக் கொண்டன. ஒரு குழந்தையின் கை போல இயற்கைத் தளிரழகு குலுங்கியது. அருகேயுள்ள நீர்த் தடம் அறிஞர் உள்ளம்போலத் தெளிந்திருந்தது. அதில் கடவுளொளிபோலக் காலைக் கதிரொளி பிறங்கியது. தோட்டமெல்லாம் தியானத்தில் ஆழ்ந்த ஞானியின் மனம்போல் மௌனமாயிருந்தது. தோட்டமெங்கும் மலர்கள் புன்னகை புரிந்தன. காற்றுனது அமைதியான பூமணங் கமழ்ந்தது. பல நிற வண்ணாத்திப் பூச்சிகள் மலர்களிடையே பறந்தன. வண்டுகள் தேனுண்டு விளையாடின. இந்த வசந்த அழகில் எல்லா உயிர்

களும் தமக்குரிய உணவுண்டு, தங்கள் இனத்துடன் கூடிக் குலாவி மகிழ்ந்தன.

மகிழ்வும் அழகும் பொலிவும் இவ்வனத்தில், இரண்டுயிர்களே, 'பசி பசி' யென்றேக்கம் பிடித்து, நடக்கக் கூடச் செயலற்று, ஒரு மூலையில் ஒண்டிக் கிடந்தன.

அச்சமயம் ஒரு தனவான் தனது செல்வக் குழந்தையுடன் அங்கு உலாவ வந்தான். துக்லம்பூர்த் தோட்டத்தைச் சார்ந்து சில தனவான்கள் பங்களா உண்டு. அந்தத் தனவான்கள் மட்டும் தோட்டத்திற்கு எப்போது வேண்டுமானாலும் வர உரிமை யிருந்தது. அவர்களிடம் தோட்டச் சாவி யிருந்தது.

தனவான் பையனிடம் ஒரு பெரிய பணிகாரந் தந்து, "சாப்பிடு, என்னருமைக் குழந்தாய்" என்றான்.

பையன் :—அப்பா, எனக்குப் பசிக்கவில்லை.

தன :—பணிகாரம் சாப்பிடப் பசி யென்ன? சும்மாப் போட்டு விழுங்கு.

பையன் :—வயிறு நிரம்பியிருக்கிறதே !

தன :—இன்னும் நிரம்பட்டும்; உருசியான பணிகாரம்; உள்ளே விட்டுப் போடு, குழந்தாய்.

பையன் :—தாளி சாப்பிடுகிறேன். எனக்குத் தெவிட்டிப்போனது.

தன :—சை, சாப்பிடென்றால் சாப்பிடவேண்டும். என் கண்ணே இல்லையோ, சாப்பிடு.

பையன் :—வயிறு கொள்ளாது.

கன :—போடா வம்பா ; சாப்பிட்டால் தானே வயிறு கொள்ளும். சாப்பிடா விட்டால் வயிறு வாடிப்போகும்; சாப்பிடு.

பையன் :—மாட்டேன்.

கன :—பின்னே இதை என்ன செய்வது?

பையன் :—அதோ அந்தக் குளத்தில் போடு கிறேன். அன்னங்கள் வந்து சாப்பிடட்டும்.

பையன் பணிகாரத்தைக் குளத்தில் வீசியெறிந் தான். அன்னங்கள் அதைச் சாப்பிடுவதைப் பார்க்க விரும்பினான் பையன். "நீ பார்த்தது போதும்" என்று கனவான் பையனை இழுத்துச் சென்றான். பணிகாரம் குளத்தில் மிதந்தது.

உடனே முன் சொன்ன இரண்டு அனாதிக் குழந் தைகளும், குளத்தங்கரையில் நின்று, ஒரு கம்பினால் அந்தப் பணிகாரத்தை இழுக்க முயன்றன; எட்ட வில்லை. இச்சமயம் அன்னம் அதைக் கௌவ விரைந்து வந்தது. அந்த வேகத்தில் பணிகாரம் முன்னே மிதந்து வந்தது. இச்சமயம் மூத்த குழந் தை, கம்பினால் தள்ளி இழுத்துப் பணிகாரத்தைக் கையிலெடுத்து, அதை இரண்டாகப் பிட்டு, "தம்பீ, சாப்பிடு" என்று பெரிய பாதியைத் தந்து, தான் மற்றதை யுண்டது. எப்படியோ இந்த அனாதை களுக்கும் ஏழைப்பங்காளன் படியளக்கிறான் பாருங் கள். இந்த மாதிரிப் பஞ்சையாகத் திரிந்த குழந்தை கள் பலர். மண்ணையும் சாம்பலையும் தின்று இறந்த குழந்தைகளும் பலர்.

ஆ! சில வாலிபர்கள் செய்த புரட்சி ஊரைத் துன்பக் காடாக்கியது; பிணக் காடாக்கியது.

---

93. இறுதிப் போர்

இடிக் கூட்டங்கள் போலப் போர் முரசார்த்தது; பகைப்படைகள் புயல் மேகம்போலச் சூழ்ந்தன. பீரங்கிகள் ஊழித்தீ கக்கி உருமின. பகைவர் படலம் தடைச் சுவரை முட்டித் தகர்த்தது. இடியும் மின்னலும் தீப்புயலும் போலக் குண்டுகள் தாவி ஊழித்தாண்டவம் புரிந்தன. எதிரிகள் எமபடர்கள் போல ஆரவாரித்துத் தடைச்சுவரைத் தாண்டினர்.

வீரர் சிங்கக்கூட்டம்போலப் போர்புரிந்தனர். அஞ்சாலரன் ஒரு மூலையில், மாரியன் மற்றொரு மூலையில் தலைமை வகித்துப் போர் தொடுத்தனர். 'விர், விர்ர்' என்று குண்டு மாரி யடித்தது. மாரியன் கைசுட்டது; மனம் ஏதோ கனவு கண்டது. கூர்பெரன் தலைக்கு ஒரு குண்டு வந்தது. அது தொப்பியை மட்டும் நூக்கி யடித்துச் சென்றது.

26 வீர வாலிபர்கள், பழைய துப்பாக்கிகளையும் வாட்களையும் கொண்டு, சோறு தண்ணீரில்லாமல், பசி தாகத்தை மறந்து, அவ்வளவு பெரிய ராணுவப் படையை யெதிர்த்துப் போர் புரிந்தது பெரிய ஆச்சரியம்! இந்தச் சுதந்திர வீரர் பலர் காயமுண்டனர். சிலருக்குக் கால் ஒடிந்தது. ஆனால், அவர்

கள் கையினால் சுட்டனர். வலக் கை முறிந்தவர் இடக் கையால் வாள் பிடித்தனர். இடுப்பொடிந்தவர் படுத்துச் சுட்டனர். இரத்தம் ஒழுக வொழுக இவ் வீரர் உயிரை மதியாது குண்டுகளை எதிர்த்து நின்றனர். தெர்மாபொலியில் லியோனிதன் செய்த போரும், ஹல்தி கட்டத்தில் பிரதாப சிம்மன் செய்த போருமே இவர் செய்த போருக்கிணையாகும். சர்க்கார் படை, தடைச்சுவரைத் தாண்டிக் கொரிந்து ஒட்டலிற் புகுந்தது. தோட்டாக்கள் தீர்ந்துபோயின. அறுபது பேருக்கு ஒருவராக நின்று, வீரர், கையாலும், காலாலும், வாளாலும், துப்பாக்கி முனையாலும் குத்தி, வெட்டி, அடித்து, மிதித்து முண்டினர். ஃபையன் இறந்தான், கூர்பெரன் இறந்தான். கொம்பேரன் குத்துண் டிறந்தான். அஞ்சாலரன் பாய்ந்து பாய்ந்து பகைவரைக் குத்தினான்; ஒரு ராணுவ அதிகாரியைக் கொன்றான். மாரியன் வெளியே நின்று போர் தொடுத்தான். அவன் முகமெல்லாம் இரத்தம்! உடலெல்லாம் இரத்தம்! அதோ ஒரு குண்டு! பட்! மாரியன் தோளில் தைத்தது. மாரியன் மயக்கம் மேலிட்டு விழுந்தான்; கண்ணை மூடினான்; அப்போது ஒரு வலிய கை அவனைத் தூக்கிச் சென்றதாக வுணர்ந்தான். "ஆ! சிறைப்பட்டேன்; பகைவர் என்னைச் சுட்டுக் கொல்லுவர்" என்று நினைத்தான் மாரியன்; பிறகு உணர்வற்றான். அஞ்சாலரன் மாரியனைக் காணாது பகைவரிடம் சிறையுண்டதாகவே நினைத்தான். கொரிந்து ஒட்

டல் நிர்ந்தூளியானது. மீதியுள்ள இரண்டொருபேர் சாராயப் புட்டிகளைக்கொண்டு பகைவர் மண்டையிலடித்துப் போராடி வெட்டுண்டிறந்தனர்.

அஞ்சாலரன் ஒருவனே பாக்கி. வாளில்லை. குண்டில்லை. துப்பாக்கி முனையால் பகைவரைக் குத்தினான் அஞ்சாலரன்.

“இவன் புரட்சித் தலைவன். இவனே நமது பீரங்கி வீரனைக் கொன்றவன். உடனே சுடுங்கள் இவனை” என்று இடி முழக்கஞ் செய்தான் ஒரு ராணுவ வீரன்.

அஞ்சாலரன் :—ஆம், சுடுங்கள் என்னை; இதோ மார்பைக் காட்டுகிறேன்; சுடுங்கள்.

பார்த்தனர் பகைவர். மன்மதன், அபாலன், அர்ஜுனன், லியோனிதன் போலே நின்றான் அஞ்சாலரன்: அழகிய வாலிபன்; வைரம் பாய்ந்த நெஞ்சன். சுதந்திரமே அவன் மூச்சு. தைரியமே அவன் பேச்சு. ‘இந்த வீர மலையையோ நாம் சுடுவது!’ என்று பகைவர் தயங்கினர். பன்னிரண்டு துப்பாக்கிகள் அவனைச் சுடக் குறி வைக்கப் பெற்றன. குதிரையைத் தட்ட மனம் வராது எல்லாரும் மயங்கி நின்றனர்.

பகைவர் :—அஞ்சா வீரனே, உன் கண்களைக் கட்டிச் சுடவா?

அஞ்சா :—வேண்டாம்; இப்படியே சுடுங்கள்.

பகைவர் :—தாங்கள் தானா எமது பீரங்கி வீரனைக் கொன்றவர்?

அஞ்சா :—ஆம்.

இச்சமயம், 'குடியரசு வாழ்க! இதோ வந்து விட்டேன்!' என்றொரு பேய்த்தொண்டை கேட்டது. யாரது? கிராங்தேர் முத்தண்ணு. முத்தண்ணுவை மறந்தே போனோம். 24-மணி நேரமாக, பீரங்கி யுத்தம் அமளிபட்டது. கிராங்தேர் குடி மயக்கத்தில் உறங்கிக் கொண்டிருந்தான். அவனுடைய குறட்டை "டுர்டுஸ்" என்று துப்பாக்கி வேட்டுகளுக்குப் பதிற் சொல்லிக் கொண்டிருந்தது. அவனருகே இப்போது ஒரு குண்டு விழுந்தது; உடனே அவன் விழித்தெழுந்தான். சுற்றிலும் இரத்தமும், பிணமும், வெடி மருந்துகளும் கண்டு, "அட, புரட்சி நடந்துபோனதா? இதோ வந்து விட்டேன்! குடியரசு வாழ்க!" என்று அஞ்சாலரன் பக்கம் நின்றான். இருவரும் தழுவிக் கொண்டனர். அஞ்சாலரனைச் சுட நிற்கும் பகைவரை நோக்கி, "என்னையும் சுடுங்கள்" என்றான் கிராங்தேர். பட், பட், பட் பட்....! அஞ்சாலரனை எட்டுக் குண்டுகள் தாக்கின. "குடியரசு வாழ்க!" என்று உரக்கக் கூவிப் புன்னகையுடன் அவன் வீழ்ந்தான். கிராங்தேரனும் ஒரு குண்டு பட்டு அவனடியில் வீழ்ந் திறந்தான்.

A. B. C. தலைவர் ஒருவர் மீதியில்லாமல் இறந்தனர். A. B. C. புரட்சி அத்துடன் ஒய்ந்தது. இரத்தப் புரட்சி இரத்தம் வடித்திறந்தது. இவர்கள் தியாகம் வீண் போகவில்லை. இது நடந்த சில ஆண்டுகளில் குடியரசு வென்றோங்கியது.

94. ஜாம்வல்ஜான் தியாகம்

மாரியன் சிறையுண்டான். யார் கையில்? ஜாம்வல்ஜான் கையிலேதான்! ஜாம்வல்ஜான் யாரையும் கூடவில்லை; பொரவில்லை; போரில் காயப்பட்ட வீரரை சிகிச்சை செய்யுமிடத்திற்குத் தூக்கிவந்தான்; இறந்தவரைப் பிணக் கும்பலுடன் கொண்டு சேர்த்தான்; இது பெரிய வுதவி. அத்துடன் மாரியன் மேல் கண்ணாயிருந்தான். மாரியன் தோளில் அடிபட்டு மயங்கி விழுந்ததும், புலிபோலப் பாய்ந்து, தனது இரும்புக் கைகளால் அவனைப்பற்றித் தூக்கி விரைந்தான். இச்சமயம் இராணுவப்படை கொரிந்து ஒட்டலுக்குள் அஞ்சாலரனுடன் போர் செய்து கொண்டிருந்தது. வீட்டிற்குப் பின்புறம் ஜாம்வல்ஜான் மாரியனைத் தூக்கிக் கொண்டோடியதை யாரும் கவனிக்கவில்லை.

ஜாம்வல்ஜான் மாரியனை ஒரு இடத்தில் வைத்துச் சுற்றிப் பார்த்தான். எங்கும் பிணக்காடு! வாட்படைகளும் துப்பாக்கிப் படைகளும், பிரங்கிகளும் சுற்றி நின்றன. ராணுவப்படை புரட்சியாட்களைத் தேடிப் பிடித்துக் கட்டது. இந்த இடத்தைவிட்டு யாரும் தப்பிப் போகமுடியாது. இறக்கையிருந்தால் ஆகாயத்திற் பறந்து செல்லலாம். அவ்வளவு தான். அங்குமிங்கும் பரபரப்புடன் வழி தேடினான் ஜாம்வல்ஜான். முடிவில் ஒரு சாக்கடை தெரிந்தது. அதுவும் கம்பிக் கதவால் தடுத்திருந்தது. கதவை

மெல்லப் பெயர்த்து, மாரியனை முதுகில் வைத்துக் கொண்டு, சாக்கடைத் தூம்பிற்குள் நுழைந்து, யாரும் சந்தேகப் படாதபடி கதவை மீண்டும் அடைத்துவிட்டு உள்ளே சென்றான் ஜாம்வல்ஜான். மாரியனுக்காக ஜாம்வல்ஜான் செய்த ஒப்பற்ற தியாகத்தைப் பாருங்கள்!

95. பாரிஸ் சாக்கடை

பயிர்களுக்கு விருந்துணவு எது? நாம் சாக்கடை வழியே ஒதுக்கித் தள்ளுவதையெல்லாம் பயிர்களுக்கு உரமாகப் போட்டால், அவை செழு செழுவென்று தழைக்கும். இது தெரியாமல் சாக்கடைச் சரக்குகளைப் புறக்கணிக்கின்றனர். அதனால் விவசாயத்தில் இலட்சக்கணக்காக வரும் பணம் நட்டமாகிறது. சாக்கடை நாற்றங்களை யெல்லாம், வாய்க்கால்கள் வழியே, ஆற்றிலோ, கடலிலோ கொண்டு தள்ளுகின்றனர். அதனால் தண்ணீர் கெட்டுப்போய்த் தொத்து நோய்கள் பரவுகின்றன. சீனர்கள் மலத்தை விணாக்காது உடனுடன் பானைகளில் கொண்டு போய்ப் பயிருக்கு உரம் போடுவர்.

பாரிஸுக்கு அடியே மற்றொரு பாரிஸ் உள்ளது. மேலே யிருப்பது மனை மக்கள் வசிக்கும் பாரிஸ். கீழே யிருப்பது சாக்கடைச் செல்வங்களும்

சாக்கடைப் பூச்சிகளும், சாக்கடைக் கனவான்களும் (திருடர்) வசிக்கும் பாரிஸ். பாரிஸ் நகரில் வீதிகள், சந்து பொந்துகள் இருப்பதுபோலவே, சாக்கடைப் பாரிஸிலும் கிளைகளும் வாய்க்கால்களும் உள்ளன. சாக்கடை, பாரிஸின் பெருங்குடல் போன்றது. பாரிஸ் மக்களும் விலங்குகளும் தின்னும் தீனிக் கழிவுகளெல்லாம் முடிவில் பாரிஸ் சாக்கடைக்கே வந்து சேரும்.

சமுதாய வாழ்வின் வரலாற்றை ஆராயப் பாரிஸ் சாக்கடை பெருந்துணையாகும். ஒரு பெட்டி மூடியைத் திறப்பதுபோலப் பாரிஸ் நகரத்தைத் தரையோடு கிளப்பிவிட்டு, அடியிலே பார்த்தால், சாக்கடை வாய்க்கால்களும், ஆயிரக்கணக்கான கிளை வாய்க்கால்களும் தோன்றும். அவற்றின் ஆபாசங்களெல்லாம் முடிவில் ஸேன் நதியிற் போய்ச் சேரும். ஒவ்வொரு வாய்க்கால் சேற்றிலும் பாரிஸ் சமுதாய வரலாற்றை ஆராயலாம். ஊர்க்கழிவெல்லாம் இங்கேதான் வந்துசேரும். தீனிச்சக்கையெல்லாம் இங்கேதான் வந்து குவியும். குதிரை, ஆடு, மாடு, கோழி, புறு, மீன், குருவிகளைக் கொன்று, மென்று தின்று, மனிதன் தன் வயிற்றைச் சுடுகாடாக்குகின்றானல்லவா! அந்த அநியாயப் படுகொலையை யார் கேட்கிறார்கள்? அந்த நாற்றம் இந்தச் சாக்கடையை எட்டிப் பார்த்தால் குப், குப் பென்றடிக்கும். கொம்புகள், எலும்புகள், சிதள்கள், குடல்கள், நரம்புகள், மயிர்கள், விழிகள், கால்கள், குளம்

புகள் இங்கே குவிந்து கிடக்கும். ரொட்டி, பிஸ்கோத்து, தின்பண்டங்களில் சிந்தியது, சேதமானது, எல்லாம் இங்கேதான் வரவேண்டும். பழுதுபட்ட இனுமற் பாத்திரங்கள், உடைந்த சட்டிப்பானைகள், துருப்பிடித்த இரும்பு, தகரப்பாத்திர உடைசல்கள், ஓட்டை டப்பாக்கள் எல்லாம் இங்கேதான் வந்து குவியும். உயிர்களைக் கொன்று உண்பது தவிர, மனிதன் இன்னொரு பாவம் செய்கிறான்—அதுதான் குடியைக் கெடுக்கும் கட்குடி. ஷாம்பைன், விஸ்கி, பிராந்தி, சாராயம், கள், பீர் முதலிய பல தினுசுக் குடிகள் உண்டல்லவா? அவை வைத்த புட்டிகளின் உடைசல்கள் எங்கே போகும்? இங்கேதான். மனிதன் எத்தனையோ வகை மருந்து சாப்பிடுகிறானல்லவா? உடைந்த மருந்துப் புட்டிகள், டப்பாக்கள், கிழிந்த அட்டைப் பெட்டிகள், வாந்தியெடுத்த மருந்துகள் எல்லாம் இந்தச் சாக்கடைக்குத்தான் வரவேண்டும். அது மட்டுமா? காமக்கொலை, குரோதக் கொலை, கோபக் கொலை, திருட்டுக் கொலை, விபசாரக் கொலை, இரகசியமாகப் பிள்ளை பெற்ற கன்னியரும், விதவைகளும் செய்யும் சிசுக் கொலைகளுக்கெல்லாம் அத்தாட்சி எங்குக் கிடைக்கும்? இதோ இந்தச் சாக்கடை நாற்றத்தைக் கிண்டிப் பார்த்தால், ஊர் நாற்றம் தெரியும். எத்தனைக் காய்கள், பிண்டங்கள், குழந்தை யுடல்கள், கைகள், கால்கள், மண்டைகள், முண்டங்கள் இதில் ஊறி நாறிக் கொண்டிருக்கின்றன! இச்சாக்கடைச் சேற்றுடன்

எவ்வளவு இரத்தம் கலந்துள்ளது! வாழ்வை வெறுத்துத் தூக்குப்போட்டுக் கொண்டவர் கயிறுகள் எத்தனையோ இங்கு அகப்படும். ஊர்த் தெருக்களை ஒரு எஞ்ஜினியர் ஆராய்வதுபோலவே இந்தச் சாக்கடை வாய்க்கால்களை மனப்படம் வரைந்து ஆராயும் சில கனவான்கள் உண்டு. இன்ன சாக்கடை வாய்க்கால் இன்ன தெருவிற்குப் போகிறது என்று அவர்களுக்கு ராப்தாவாகத் தெரியும். இந்தச் சாக்கடைக் கனவான்களை நாம் முன்னே சொன்ன பெத்ரோ மின்னத் திருடர் போன்றவர்கள். இவர்கள் கொன்ற பிணங்கள் இந்த சாக்கடையிலே விழும். இவர் திருடிய நகை, நாணயங்கள் இங்கேதான் ஒளிந்திருக்கும். பகலில் இவர் அஞ்ஞாத வாசம் செய்வதும் இச்சாக்கடைப் பொந்துகளே. அதனால் இவர்களைச் சாக்கடைக் கனவான்கள் என்றோம்.

1805-ம் ஆண்டு, நெப்போலியன் ஆட்சியில், புருநேசன் (Bruneseau) என்ற உத்தியோகஸ்தர் பாரிஸ் சாக்கடையைத் தூர்வெடுக்கப் புகுந்தார். அதன் நாற்றம் சில கூலியாட்களைக் கூட மூச்சைப் பிடித்துக் கொன்றது. சேற்றை அள்ளிச் சோதிக்கையில், நகை, நாணயங்கள், தங்கம், வெள்ளி, வைரமணிக் கற்கள், தங்கப் பதக்கங்கள் எத்தனையோ அகப்பட்டன. பாரிஸ் காட்சிச் சாலையினின்று காணாமற் போன ஒரு குரங்கின் எலும்புக்கூடு கிடைத்தது. சில ஆண்டுகளுக்கு முன்னே மாரன் என்னும் ஒரு பிரபு காணாமற் போனார். அவருடைய தங்க முடி

இந்தச் சாக்கடையிற் கிடைத்தது. அவர் வைத்திருந்த வேசை, மோசமாக அவரைக் கொன்று, இந்தச் சாக்கடையில் புதைத்துவிட்டாள் என்பது தெரிந்தது. இவ்வாறு எத்தனையோ இரகசியங்கள் புலப்பட்டன.

புருநேசன் நூற்றுக்கணக்கான வேலையாட்களுடன் ஏழாண்டுகள் சிரமப்பட்டுப் பாரிஸ் சாக்கடையைச் சுமாராகச் சுத்தம் செய்தான். அது முதல் அதிகாரிகள் பார்வையில் சாக்கடை அவ்வப்போது முடிந்தமட்டும் சுத்தம் செய்யப்பெற்றது.

1806-ம் ஆண்டில் பாரிஸ் சாக்கடை 23,300 மீடர் இருந்தது. பாரிஸ் நகரம் பெருக்கமடைய அடையச் சாக்கடையும் நீண்டது. நெப்போலியன் 4800 மீடர் நீளம் அதிகமாகச் சாக்கடை கட்டினான். பதினெட்டாம் லூயி 5700 மீடர் கட்டினான். லூயி பில்லிப் 29,008 மீடர் அதிக நீளமான சாக்கடை கட்டினான். ஆகக்கூடி இப்போது சாக்கடையின் நீளம் 22,661 மீடர். இப்போது 60 முதன்மையான வாய்க்கால்கள் உள்ளன. அவை முன்னைவிட இரண்டு பங்கு அகலமும் உயரமும் உள்ளன. இருந்தாலுமென்ன? சாக்கடைச் சேறும், நாற்றமும், கரடுமுரடான கற்களும், குப்பைகளும், விஷப்பூச்சி, புழுக்களும், சாக்கடையில் எப்போதும்போல நிறைந்திருந்தன. இவற்றுடன் சாக்கடைக் கனவான்கள் அங்கு மறைந்திருந்தனர். எப்போதாவது இரும்புக் கதவுகளைத் திறந்து சுத்தம் செய்யும்போது

தான் வேலைக்காரர் இந்தச் சாக்கடை நரகத்தில் கவனமாக இறங்கி, வேலையானதும் வெளி வருவர். வேலையாட்கள், தீய நாற்றத்தாலும், விஷப்பூச்சி, புழுக்களாலும் நோயுற்று இறப்பதும் உண்டு. பாரிஸ் சாக்கடையென்றால் பயம்! யாரும் உள்ளே போக மாட்டார்கள். "ஆள் சாக்கடைக்குள்ளே போய் விட்டான்" என்றால், ஆள் பைசல் என்பது பொருள்.

---

96. சாக்கடையில் ஜாம்வல்ஜான்

இப்படிப்பட்ட அபாயமான சாக்கடை முழையில், முடை நாற்றத்தோடு ஜாம்வல்ஜான் மாரியனைத் தூக்கிச் செல்லுகிறான். என்ன தியாகம்! வீரம்! கருணை!

சாக்கடை, புதை குழிபோலே இருட்டுக் கும்மென்றிருக்கிறது. வெளியே இரத்தம்! பெரும் போர்க்களத்தை விட இங்கே அபாயம் அதிகம். திடீரென்று ஒரு மேட்டில் முட்டிக்கொள்ள நேரும். திடீரென்று ஒரு பள்ளத்தில் விழ நேரும். இவ்வளவு ஆபத்தோடு தான் கொண்டு செல்லும் வாலிபனுக்கு உயிர் உள்ளதா இல்லையா என்று தெரியவில்லை. மாரியன் அசையவில்லை. ஜாம்வல்ஜானுக்கு மேலே, ரஸ்தாக்களில், அரசாங்கத் துருப்புக்கள் புரட்சியில் சம்பந்தப்பட்ட பொது மக்களையெல்லாம் சுட்டு,

வெட்டி வீழ்த்துகின்றன. அந்த ரகளைகூட இங்கே கேட்கவில்லை. இருட்டில் வலக்கையினால் மாரியனை முதுகில் தாங்கிக்கொண்டு, இடக் கையினால் வழி தடவிக்கொண்டே சென்றான் ஜாம்வல்ஜான்; கையை இருபுறமும் தொட்டுத் தடவிச் சாக்கடை நேராகச் செல்லுகிற தென்றறிந்து சென்றான். சிறிது தூரம் சென்றதும் கொஞ்சம் வெளிச்சம் தெரிந்தது. சாக்கடைக்கு மேலே இரும்புக் கம்பிகள் போடப்பட்டிருந்தன. ஆ! அங்குச் சிப்பாய்கள் நடக்கும் சத்தம் கேட்டது. கண்டால் அவர்கள் ஆளைச் சுட்டுவிடுவர். மாரியனைச் சற்று இறக்கிவைத்துச் சுற்றிப் பார்த்தான் ஜாம்வல்ஜான். மற்றொரு இருள் முழை தெரிந்தது. அவன் சட்டென்று மாரியனைத் தூக்கிக்கொண்டு அதனுள் விரைந்தான். ஆங்கே சாக்கடை, பல கிளைகளாகப் பிரிந்தது. எவ்வழியின் பற்றுவது? பிசகான வழியிற் சென்றால், ஸேன் நதியிற்போய் விழ நேரிடும். சிந்தித்தான் ஜாம்வல்ஜான். ஸேன் நதிப் பாலத்திற்குப் பதினைந்து நிமிஷத்திற்குள் போகக்கூடிய ஒரு வழியை யறிந்தான். மாரியன் கைகள் ஜாம்வல்ஜான் கழுத்தைக் கட்டிக்கொண்டிருந்தன. கால்கள் முதுகைச் சுற்றியிருந்தன. ஒரு கையால் மாரியனைத் தாங்கிக் கொண்டு, இன்னொரு கையால் வழி தடவிச் சென்றான் ஜாம்வல்ஜான். மாரியன் இரத்தம் ஜாம்வல்ஜான் உடம்பில் வடிந்தது. மாரியன் மூச்சு விட்டான். நெஞ்சு துடித்தது. மாரியனுக்கு உயிர் இருக்கிறது என்ற நம்பிக்கையால் தனது பசி தாகந்

களையும் பொறுத்துக் கொண்டு, 'கடவுளே துணை' என்று இருட்டில் விரைந்தான் ஜாம்வல்ஜான். மற்றொரு பெரிய ஆபத்து! பொலீஸ்காரரும் சிப்பாய்களும் விளக்குப் பிடித்துக்கொண்டு, சாக்கடைகளில் கலகக்காரர்கள் ஒளிந்திருக்கிறார்களாவென்று பார்த்தனர். ஜாம்வல்ஜான் இப்போது போகும் வழியே மேலே ஒரு கம்பிக் கதவிருந்தது. அதன் வழியே பொலீஸ்காரர்கள் உள்ளே பார்த்தனர். ஜாம்வல்ஜான் சட்டென்று ஒரு மூலையில் ஒளிந்துகொண்டான். பொலீஸார், "இங்கு ஆள் இல்லை" என்று அப்புறம் சென்ற பிறகே ஜாம்வல்ஜான் மேலே வழி தொடர்ந்தான்.

இக்காலம் எங்கும் போரும் கிளர்ச்சியுமாயிருந்தாலும், பொலீஸ்காரர் தமது கடமையைச் சரிவர நிறைவேற்றினர்: நகர சுகாதாரத்திற்கு வேண்டிய விதி முறைகளைக் கட்டுப்பாடாகக் கொண்டு செலுத்தினர். ஒற்றர்கள் எங்கும் வட்டமிட்டுக் குற்றவாளிகளைக் கண்டுபிடித்தனர்.

இச்சமயம் ஸேன் நதிக்கரையில் ஒரு நீண்ட சட்டையணிந்த நெடியன் சுற்றிலும் வேவு பார்த்து நிற்கிறான். யாரோ ஒரு கள்ளனையே அவன் எதிர் பார்த்து நிற்கிறான். இந்தச் சேற்று நிலத்திலும் இவ்வளவு கருத்துடன் தனது கடமையைக் காக்கும் இப் பொலீஸ் தலைவன் யார்? ஜாவர்தான். அவன் துணையாள் சற்றுத் தூரத்தில் அங்கும் இங்கும் சுற்றி உளவு பார்க்கிறான். அருகே ஒரு குதிரை வண்டியும்

தயாராயிருக்கிறது. இந்த ஒற்றரையும் ஏமாற்றி, யாரோ ஒருவன் பூனை மாதிரிப் பதுங்கிப் பதுங்கி வந்து, மதகின் கதவைத் திறந்துகொண்டு சாக்கடைக்குள்ளே நுழைந்து, உடனே கதவை மூடிப் பூட்டி உள்ளே சென்றொளிந்தான். யாரிந்தச் சாக்கடைக் கள்வான்? இதோ அவனை அறியப் போகிறோம்.

ஜாம்வல்ஜான் உயிரைக் கொடுத்து முன் செல்லுகிறான்; மாரியன் இடி படாதபடிக் குனிந்து இடுப்புக் கடுக்கக் கடுக்கச் செல்லுகிறான். பசி வயிற்றைப் பிடுங்குகிறது. தாகம் தவிக்கிறது. நாக்கு வரண்டு போயிற்று. சாக்கடைச் சேறும் நீருந் தவிர அங்கு வேறில்லை. கோட்பட்டை விண்ணிட்டுப் போகிறது. எலிகளும் விஷப் பூச்சிகளும் கால்களினிடையே செல்லுகின்றன. கடவுளை நம்பியே ஜாம்வல்ஜான் செல்லுகிறான். ஸேன் நதிப் பாலத்திற்குச் செல்லும் சாக்கடையில் ஜாம்வல்ஜான் இப்போது நுழைகிறான். அங்கு இடம் சிறிது அகலமாயிருந்தது; கொஞ்சம் வெளிச்சமும் இருந்தது. சுமை பொறுக்க முடியாமல், அங்கு ஜாம்வல்ஜான் மாரியனை மெல்ல இறக்கி வைத்தான். மாரியன் கண்ணைத் திறக்கவில்லை; முகமெல்லாம் இரத்தம்; தலைமயிர் இரத்தந் தோய்ந்து உலர்ந்து சடைப்பிடித்திருந்தது. கழுத்துப் பட்டையில் இரத்தம் கட்டிபாக நிறைந்திருந்தது. ஜாம்வல்ஜான் சட்டையை மெல்ல ஒதுக்கி, மாரியனுடைய நெஞ்சைத் தொட்டுப் பார்த்தான்; நெஞ்சம் துடித்தது; உயிர் இருக்கிற

தென்று மகிழ்ந்தான்; தனது சட்டையைக் கிழித்து மாரியன் இரத்தத்தைத் துடைத்துப் புண்ணைக் கட்டினான்; பிறகு மாரியன் சட்டைப் பையைத் தடவிப் பார்த்தான். அதில் அவன் நேற்று மாலை வாங்கி உண்ணா மறந்த ரொட்டித் துண்டிருந்தது. அதை ஜாம்வல்ஜான் கடித்துண்டான். பசி சற்றே தணிந்தது. இன்னொரு பையில் ஒரு கைக்குறிப் பிருந்தது. அதன் முதற் பக்கத்தில்,

"என் பெயர் மாரியன் போமேர்ஸி. கல்வரித் தெரு, 6-வது எண் வீட்டிலிருக்கும் என் பாட்டனார் திரு. ஜில் நார்மனிடம் என் சவத்தைக் கொண்டு சேருங்கள்"

என்றெழுதி யிருந்தது. ஜாம்வல்ஜான் சிந்தித்துப் பார்த்தான்; அந்த விலாசத்தைத் தெரிந்து கொண்டான்; மாரியனை முதுகிலேந்திச் சாக்கடைக்குள் முன் சென்றான்; செல்லச் செல்லச் சேறு அதிகரித்தது; முழங்கால் மட்டும் சேற்றில் ஆழ்ந்து வெகு சிரமப்பட்டுச் சென்றான்; புயலில் அகப்பட்ட படகுபோலத் தத்தளித்தான். இன்னும் கொஞ்ச தூரம் இப்படியிருந்தால், ஆள் அங்கேயே புதைந்து சாக வேண்டியதுதான். இப்போது சாக்கடைச் சேற்று நீர் இடுப்புமட்டும் வந்தது. பயங்கரமான காட்சி! பிறரானால் வாய்விட்டலறி உயிர் நீத்திருப்பர். இடர்கள் வரவர ஜாம்வல்ஜானின் உறுதியும் பொறுமையும் அதிகரித்தன. இரண்டு

தடவைப் பலமாகக் கல் தடுக்கி விழுந்தான்; 'கடவுளே துணை!' என்று நினைத்து மீண்டும் எழுந்து மேற்சென்றான். சிறிது தூரம் கும்மென்று இருந்தது இருள். பிறகு சிறிது வெளிச்சம் வந்தது. இறைவன் வழி காட்டினான். சாக்கடை முனைக்கு வந்தான் ஜாம்வல்ஜான். ஆனால் வெளியே செல்ல வேண்டுமே! மதகின் கதவு பூட்டியிருந்தது. அவன் 'தெய்வமே!' என்று திகைத்தான்; 'இப்படியா என் ஆயுள் முடியவேண்டும்' என்று வருந்தினான்; கோஸத்தின் கதியை நினைந்துருகினான்; மாரியனைப் பார்த்துப் பரிதபித்தான். அப்போது, "அண்ணே, சரி பங்கு" என்றொரு சத்தம் கேட்டது. யாரது? யாரோ ஒருவன் சாக்கடையிருட்டிலிருந்து வந்தான். "ஆ! தேன்னடியனா!" என்று திடுக்கிட்டான் ஜாம்வல்ஜான். முன்னே மதகைத் திறந்து கொண்டு உட்புகுந்த சாக்கடைக் கனவான் தென்னடியனே. பொலீஸுக்குப் பயந்து பகலெல்லாம் அவன் சாக்கடையில் ஒளிந்துவந்தான். ஜாம்வல்ஜான் முகமெல்லாம் இரத்தமும் சேறுமா யிருந்ததால் தென்னடியனுக்கு அடையாளந் தெரியவில்லை.

தேன் :—அண்ணே, எப்படி வெளியேறுவாய்?

ஜாம்வல்ஜான் பேசவில்லை.

தேன் :—எனக்குப் பாதி பங்கு கொடுத்தால், காரியம் நடக்கும்.

ஜாம் :—தாங்கள் சொல்வது விளங்கவில்லை.

தேன் :—அண்ணே, பணத்தைப் பறித்துக் கொண்டு, நீ கொன்ற இந்த ஆளை ஆற்றில் தூக்கி யெறியத்தானே போகிருய். பணத்தில் பாதி எனக்குத்தா. மதகைத் திறக்கிறேன். பார், சாவி வைத்திருக்கிறேன். போடு பணம்.

முன்னே போர்க்களத்தில் ஒரு சமுசாரி தப் பிக்கத் தன் சட்டையைக் கழற்றிப் போட்டானல் லவா ஜாம்வல்ஜான்? அதிலிருந்த தன் பணத்தை அவன் எடுத்துக்கொள்ளவில்லை; அது அந்த வீரனுக்குப் பயனுகட்டும் என்று நினைத்தான். இப்போது சட்டைப் பையைத் தடவிப் பார்த்ததில் முப்பது பணமிருந்தது. அதைத் தருமுன் தென்னு டியனே ஜாம்வல்ஜான் பையைத் தடவி யெடுத்துக் கொண்டான்: மாரியன் பையைத் தடவினுன்; ஏதுமில்லை; அடையாளத்திற்காக மாரியன் சட்டை யில் ஒரு துண்டு கத்தரித்து வைத்துக்கொண்டான். பாதிப்பங்கு கேட்டவன் இருந்ததை யெல்லாம் எடுத்துக்கொண்டு, "வா, அண்ணே" என்று மெல்ல மதகைத் திறந்து ஜாம்வல்ஜான் வெளியே சென்ற தும் அடைத்துப் பூட்டினுன். கீல்களுக்கு எண் ணெய் போட்டிருந்ததால் ஓசைப்படவில்லை. பல தடவை இந்த மதகு இவ்வாறு திறந்து மூடுவதாகத் தெரிந்தது.

ஜாம்வல்ஜான் சாக்கடையைத் தாண்டி ஸேன் நதிக்கரையை அடைந்தான்.

97. ஜாவர் கையில் ஜாம்வல்ஜான்

வேலன் நதி மாலை வந்தனம் பாடிச் செல்லுகிறது. இளந் தென்றல், 'ஓம், சாந்தி, சாந்தி' என்று குழலூதுகிறது. யோகியின் அமைதிபோன்று எல்லையற்ற வானம் விரிந்திருக்கிறது. மேற்கே இரவி விடைபெற்றுச் செல்லுகிறது. மாந்தருக்கு ஆறுதலைத் தரும் இரவு தனது நட்சத்திரத் தோகையை விரிக்கிறது. அந்தி மயக்கத்தில் புட்கள் ஆடிப் பாடிக் கூடிக் குலாவிக் கூடடைந்து மௌனமாகின்றன.

ஜாம்வல்ஜான் தான் பட்ட துயர்களையெல்லாம் மறந்தான். அந்தி வானத்தில் புன்னகைக்கும் சுக்கிரன் போல அவன் மனத்தில் அமைதி புன்னகைத்தது. அவன் அந்தியின் அழகிற் சிந்தை யூன்றினான்; ஆங்கே கடவுளின் கருணை முகத்தைக் கண்டான்; சற்றே கண்ணை மூடி இறைவனைத் தியானித்தான்; உடனே தன் கடமையைச் செய்ய முற்பட்டான்; கையினால் ஆற்று நீரெடுத்து மாரியன் முகத்தில் தெளித்தான். மாரியன் கண் விழித்திலன்; வாய் மட்டும் திறந்து மூச்சு வாங்கினான். மீண்டும் அவன் முகத்தைத் துடைத்துக் கையால் ஆற்று நீரை அள்ளினான் ஜாம்வல்ஜான்; அச்சமயம் யாரோ தன் பின்னால் நின்றதை யுணர்ந்தான்; சட்டெனத் திரும்பிப் பார்த்தான்; திடுக்கிட்டான். அங்கு நின்றவன் ஜாவர்.

ஜாவர் தென்றாடியரைத் தேடிப் பிடிக்கவே அங்கு நின்றான். தென்றாடியன் தந்திரமாகச் சாக்கடைக்குள் ஒளிந்து தப்பினான். சாக்கடையினின்று வெளியே வந்த ஜாம்வல்ஜான் அகப்பட்டுக் கொண்டான்.

ஜாவர் :—நீர் யார்?

ஜாம்வல் :—நான்.

ஜாவர் :—பெயர்?

ஜாம்வல் :—ஜாம்வல்ஜான்.

ஜாவருக்கு முதலில் அடையாளம் தெரியவில்லை. ஜாம்வல்ஜான் முகமெல்லாம் இரத்தமும் சேறும் தோய்ந்திருந்தன. உற்றுப்பார்த்த பிறகே ஆளையறிந்து புலிபோலப் பார்த்தான் ஜாவர். யாளி கையில் அகப்பட்ட சிங்கம்போலத் திகைத்தான் ஜாம்வல்ஜான்.

ஜாம்வல் :—இன்ஸ்பெக்டர் ஜாவர், என்னைத் தாங்கள் கைது செய்யலாம். இன்றுகாலை முதல் தங்கள் கைதியாகவே என்னைக் கருதியுள்ளேன். எனது விலாசத்தைக் கூடத் தங்களுக்குத் தெரிவித்தேன் அன்றோ? என்னைப் பிடித்துக் கொள்ளுங்கள். ஆனால் ஒரு உபகாரம் மட்டும் செய்யுங்கள்.

இம்மொழிகள் ஜாவரின் மனச்சாட்சியை ஊடுருவின. அவன் ஒன்றுந்தோன்றாமல் சற்றுத் திகைத்தான்; பிறகு, "தாங்கள் இங்கே என்ன செய்கிறீர்கள்? இம்மனிதன் யார்?" என்று கேட்

டான். ஜாவர் ஜாம்வல்ஜானைத் "தாங்கள்" என்று மரியாதையாகப் பேசினான்.

ஜாம்வல் :—இம்மனிதனை அவனுடைய பாட்டனரிடம் சேர்க்கவேண்டும்.

ஜாவர் :—ஆ! இவர் மாரியன் அல்லவா? போர் முனையில் இவரைக் கண்டேனே!

ஜாம்வல் :—இவர் காயப்பட்டு மயக்கமடைந்து கிடக்கிறார்.

ஜாவர் :—மயக்கமா? ஆள் தீர்ந்துபோனான்.

ஜாம்வல் :—உயிர் இருக்கிறது. கல்வரித்தெரு, 6-வது எண் வீட்டிலுள்ள ஜில்நார்மன் என்பவர் இவர் பாட்டனார். அவரிடம் இவரைச் சேர்க்க வேண்டும்.

மாரியனை ஜாம்வல்ஜான் காப்பாற்றிய விதத்தை ஜாவர் அறிந்து கொண்டான்; மாரியன் பையிலிருந்த கைக்குறிப்பில் ஜாம்வல்ஜான் சொன்ன விலாசத்தைக் கண்டான்; உடனே அருகில் தயாராயிருந்த வண்டிக்காரனுக்கு உத்தரவிட்டான். மாரியனை வண்டியிலேற்றி இருவரும் அதில் ஏறினர். குதிரை சிட்டாய்ப் பறந்தது.

வண்டி ஜில்நார்மன் வீட்டு முன் வரும்போது இருட்டிப் போயிற்று. வீட்டில் எல்லாரும் உறங்கிக் கொண்டிருந்தனர். புரட்சிக் காலத்தில் இப்படியே சீக்கிரம் படுத்துறங்குவர் பிரபுக்கள். ஜாவர் கதவைத் தட்டினான். வாயிற் காப்பான் கதவைத் திறந்தான். "இது ஜில்நார்மன் வீடா?" என்று ஜாவர்

போலீஸ் தோரணையிற் கேட்டான். "ஆம், என்ன வேண்டும்?" என்றான் காவற்காரன்.

"இதோ, அவர் பையன் போரில் இறந்து போனான்; உடலைக் கொண்டு வந்திருக்கிறோம்" என்றான் ஜாவர். சேவகன் திக்பிரமை பிடித்து நின்றான். "இவர் புரட்சியில் சம்பந்தப்பட்டுத் துப்பாக்கியாற் சுடப்பட்டு இறந்துபோனார். நாளை இங்கொரு கருமாதி நடக்கும். இவர் தந்தைக்குத் தகவல்கொடு, போ!" என்றான் ஜாவர். காவற்காரன் பாஸ்க் என்னும் வேலைக்காரனை எழுப்பினான். பாஸ்க் நிகோலத்தை எழுப்பினான். நிகோலத் ஜில்நார்மன் மகளை எழுப்பினாள். மாரியனை ஜாம்வல்ஜான் உள்ளே தூக்கிச்சென்றான்; ஜில்நார்மன் பள்ளியறைக்கு முன்னுள்ள அறையில் ஒரு கட்டிலில் மாரியனைப் படுக்க வைத்தான்.

ஜாவர் ஜாம்வல்ஜான் முதுகைத் தொட்டான். ஜாம்வல்ஜான் குறிப்பறிந்து, ஜாவர் பின்னே சென்றான். "ஆயுதக்காரத் தெரு, 7-வது எண் வீடு" என்று உத்திரவிட்டு ஜாம்வல்ஜானுடன் வண்டியில் ஏறியுட்கார்ந்தான் ஜாவர். வண்டி விரைவாகச் சென்றது.

98. ஜாவரின் தற்கொலை

வண்டி ஆயுதக்காரத் தெருவிற்கு வந்தது. இருவரும் இறங்கினர். ஜாவர் வண்டிக்காரன் கேட்டபடி 60 பிரான்க் வாடகை கொடுத்து, அவனை அனுப்பினான். ஜாம்வல்ஜான் தன் வீட்டுக் கதவைத் தட்டினான். கதவு திறந்தது. "வாருங்கள் என்னுடன் மச்சுக்கு" என்றான் ஜாம்வல்ஜான். "நான் இங்கேயே காத்திருக்கிறேன்" என்று கீழே நின்றான் ஜாவர். ஜாம்வல்ஜான் படியேறித் தன் அறைக்குச் சென்றான்; கோஸத்திடம் மாரியன் இருக்குமிடத்தைச் சொல்லி, இன்னும் சில வார்த்தைகளையும் தெரிவித்ததும், ஜாவருடன் செல்லவே கருதினான். மச்சு ஜன்னல் வழியே லாந்தர் வெளிச்சத்தில் தெருவை நோக்கினான்; அங்கே ஜாவர் திரும்பிச் செல்வதைக் கண்டான்; ஏன்?

ஜாவர் மனச்சாட்சி அவனை வாள் போலறுத்தது. எப்போதும் நிமிர்ந்தே யிருக்கும் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு ஜாவர் நேராக ஸேன் நதிப் பாலத்திற்குப் போனான். பாலத்தடியில் தண்ணீர் வெகு வேகமாகச் சுருண்டு சுழன்று வீறிட்டோடியது. அதில் விழுந்தவனைக் கண்டுபிடிக்க முடியாது. பாலத்தினின்று ஸேன் நதி வெள்ளத்தைப் பார்த்துக்கொண்டே ஜாவர் சிந்தித்தான். அவன் மனத்தில் ஒரு பெரிய புரட்சி நடந்தது. அதாவது

பிடிவாதம் பிடி சாம்பலானது. புலிக்கண் ஜாவர் பூனைபோலானான். ஜாவர் என்ன சிந்தித்தான்?

'என் முன் இரண்டு கடமைகள் உள்ளன:

நான் சர்கார் உப்பைத் தின்கிறேன்; துலோன் சிறையினின்று தப்பியோடி மறைந்து வாழும் இப் பழைய திருடனைப் பிடித்துத் தருவது எனது கடமை. ஆ! அதை நினைக்கும்போதே என்னை மனச்சாட்சி வாள்போலறுக்கிறதே! என் குடல் நடுங்குகிறதே! ஜாம்வல்ஜான் திருடனா? அவன் மஹான்! புண்ணியாத்மா! தன் உயிரைக் கொடுத்தும் பிறவுயிர்களைக் காப்பவன். தந்தை மதேலன் எத்தனை ஏழைகளுக்கு உபகாரியா யிருந்தான். தனது தொழில் திறமையால் ஒரு நகரத்தையே செழிக்கச் செய்தான். ஆயிரக் கணக்கான ஏழைகள் அவனை யண்டி மகிழ்வுடன் வாழ்ந்தனர். அன்பும், அறமும், இரக்கமும், ஈகையும், தூய வாழ்வுமே மதேலன். எனது உத்தியோகச் செருக்கினால் மதேலனுக்குத் துரோகம் செய்தேன். அந்த ஏழைப்பெண் ஃபாந்தேனைக் காப்பாற்றத் தனது வாழ்வையே ஆபத்திற்குள்ளாக்கிக் கொண்டான் மதேலன். நான் அவனைக் காட்டிக்கொடுக்குமுன் தானே ஜாம்வல் ஜானென்று நீதி மன்றத்தின் முன்னின்று தைரிய மாக உண்மை யுரைத்தான். இந்தச் சத்தியவந்தனை, இந்தத் தருமாத்மாவை நான் கைதிபோல நடத்தினேன். ஆ! என்ன பாதகம் செய்தேன். மதேலன் சிறையுண்ட பிறகு, பதினாயிரக் கணக்கான ஏழைகள்

பிழைப்பின்றித் தவித்தனர். அந்தப் பாபம் யாரைச் சூழும்? இந்தப் பாவியையே. மதேலன் சிறையி லின்று தப்பிக் கோர்போ வீட்டில் மறைந்து வசித் தான். அப்போது தன்னிடமுள்ள பணத்தைக் கொண்டு அவன் எளியவருக்குத் தருமம் செய் தான். அப்போது அவனை நாய் மாதிரித் துரத்தி னேன்; எமாந்தேன்; பிறகு போர் முனையில் அவனைச் சந்தித்தேன். அங்கே என்னுயிர் அவன் கையில் சிக்கிக்கொள்ள, நான் கைதியாகக் கட்டுண்டிருந் தேன். என்னை அவன் ஒரே வேட்டில் மண்டையைப் பிளந்திருக்கலாம். "அட பாதகா, என் வாழ் வைக் கெடுத்த துரோகியே, உனது துரோகத்தின் பலனை அனுபவி" என்று குத்திக் கொன்றிருக்க லாம். அவன் கையில் அதிகாரமும் துப்பாக்கியும் இருந்தன. அவன் என்னைச் சுட்டுக் கொல்லக் கார ணமும் இருந்தது. இருப்பினும், அந்தப் புண்ணிய வான், என் கட்டை யவிழ்த்து விடுதலை செய்தான்: தனது விலாஸத்தையும் சொன்னான். என்னே அவன் கருணை! பகைவனுக்கும் பரிவைக் காட்டிய இந்தப் பரம சாதுவையோ திருடனென்பது? இவனையோ மீண்டும் நான் சிறைக் கனுப்புவது? போர் முனையில் அவன் யாரையும் சுடவில்லை; புண்பட்டவரைச் சுமந்து வந்து காப்பாற்றினான்; மனிதன் புகுந்து வெளியேற முடியாத பாரிஸ் சாக்கடையினூடு மாரி யஸை சுமந்து வந்து காப்பாற்றினான். "நீ யார்?" என்றதும், உண்மையைச் சொன்னான். இந்தப்

பரம தியாகியையோ திருடனென்பது? பிறர்க்கென வாழும் இப்பெருந் தகையாளையோ சிறையிலிடுவது? சீ! என்ன நினைத்தேன்! இவன் புண்ணிய புருஷன் எனக் கும்பிடத்தக்கவன். ஆனால், நான் சர்க்கார் ஊழியன். சிறை தப்பிய ஒரு பழங்கைதி அகப்பட்டும், அதிகாரிகளிடம் ஒப்பிக்கா விட்டால், எனது கடமை மாசுறாதா? ஆ! கடமையைச் செய்வதோ? அல்லது இக்கருணை வடிவான ஜாம்வல்ஜானுக்கு மீண்டும் துரோகம் செய்வதோ? வண்டியிற் செல்லும்போது அவனைப்பற்றிக் கைதுசெய்யப் பலமுறை என் மனம் ஆத்திரத்துடனெழுந்தது. என் கைகள் அவனைப் பற்றிலவே! அவனைக் கண்டால் என் மனத்தில் ஒரு வணக்கமுள்ள அச்சம் உதிக்கிறதே. 'மீண்டும் இந்தப் பாவத்தைச் செய்யாதே' என்று என் மனச்சாட்சி சூடு கொடுக்கிறதே. கடமை, கருணை—எது பெரிது? அறம், அரசாங்கம்—எது பெரிது? எதற் குதவுவேன்? ஒன்றுந் தோன்றவில்லையே! ஜாம்வல்ஜானைச் சும்மா விட்டுவிட்டால், சர்க்காருக்கு நான் துரோகம் செய்தவனாவேன். இப்புண்ணியாத்மாவை நான் மீண்டும் சிறையிலடைத்து வருத்தினால், தரும தேவதைக்கே துரோகம் செய்தவனாவேன். என்னுயிரைத் தந்த கருணையாளனையோ கைதியாக்குவது? அனைத்திற்கும் காரணம் நானே! நானில்லாவிடில் இச்சஞ்சலம் இல்லை—சேன் நதியே இதோ வருகிறேன். இதோ இன்றைக் கடமையைத் தீர்த்து உன்னிடம் வருகிறேன்.'

ஜாவர் அருகிலிருந்த பொலீஸ் கச்சேரிக்குச் சென்றான். தனது அடையாளத்தைக் காட்டியதும், பொலீஸ் சேவகன் சலாம் போட்டு ஜாவரை உள்ளே கூட்டிச் சென்றான். ஜாவர் அன்று தான் செய்த கடமைகளையும், தான் ஒற்றுப் பார்த்த விவரத்தையும், பொலீஸ் அதிகாரிகளுக்குத் தான் தெரிவிக்க வேண்டியதையும் விவரமாக எழுதி வைத்தான். 'இன்ன இடத்தில் கவனமாகக் காவல் காக்க வேண்டும். இன்னாரைக் கண்காணிக்க வேண்டும். இன்ன பொலீஸ் சேவகனுக்கு இன்ன சௌகரியங்கள் வேண்டும். இன்னின்ன இடங்களில் இன்னின்ன விசேஷங்கள்' என்றெல்லாம் விவரமாக எழுதி வைத்து, அரசாங்கத்தாருக்கு இன்ஸ்பெக்டர் ஜாவரின் அறிக்கை என்றெழுதிக் கையெழுத்துப் போட்டான்; ஒரு காயிதத்தில் ஏதோ எழுதித் தன் பைக்குள் போட்டுக்கொண்டு எழுந்தான்; வெகு விரைவாக ஸேன் நதி பாலத்திற்கு வந்தான். இருட்டுக் 'கும்' மென்றிருந்தது. நக்ஷத்திரங்களைக் கூட மேகம் மறைத்து விட்டது. எங்கும் தனிமை. ஸேன் நதியின் அழைப்பும் மனச்சாட்சியின் பேரொலியுமே ஜாவர் கேட்டவை. ஜாவர் பாலச் சுவரின் மேல் ஏறினான். ஆற்று வெள்ளம் பொங்கி யொலித்தது. ஜாவர் மரம் போல நின்றான்; பிறகு தனது தொப்பியை எடுத்துப் பாலத்தின் மேல் வைத்தான்; எழுந்தான்; முன்னே குனிந்தான்; ஆற்றில் விழுந்தான்; மறைந்தான்.

மறு நாள் மானிடேர் என்ற பத்திரிகையில் அடியில் வரும் செய்தி வெளியானது:—

"ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் தற்கொலை"

"இன்ஸ்பெக்டர் ஜாவர், பாலத்திலிருந்து ஸேன் நதியிற் குதித்து, நேற்றுத் தற்கொலை செய்து கொண்டார். அவர் உடல் ஒரு படகின் கீழிருந்து எடுக்கப் பெற்றது. பொறுக்க முடியாத மன நோயால் தாம் தற்கொலை செய்துகொண்டதாக அவர் சட்டைப்பையில் ஒரு சீட்டெழுதி வைத் திருந்தார்."

தரும சங்கடம் தற்கொலையில் முடிந்தது. ஜாம் வல்ஜான் இச்செய்தி யறிந்தான். இனி அவனைக் காட்டிக் கொடுப்பவர் யாருமில்லை. எனினும், அவன் தன் இறுதி நாட்களில் இன்ன மாதிரி வாழ்வ தென்று தீர்மானிக்கலானான். மோம்ஃபெர்மேல் காட்டில் ஒரு இரகசியமான வெளியில், ஒரு மரத்தின் கீழ் தான் புதைத்து வைத்திருந்த பெருந் தொகை முழுதும் எடுத்து வந்தான். அதில் 500 பிரான்க் எடுத்து ஒரு பெட்டியில் வைத்தான். மீதி 5,54,000 பிரான்கை அவன் முடிப்புக் கட்டி யாருக்குத் தந்தான்?

99. தாத்தாவின் பிரலாபம்

மாரியன் கண் திறக்கவில்லை; படுக்கையில் மயங்கிக் கிடந்தான்; இரண வைத்தியர் ஓடி வந்தார்; மாரியனைச் சோதித்தார். நாது இன்னும் அடித்தது. நெஞ்சில் காயமில்லை. நெஞ்சு சரியாகத் துடித்தது. சில்லு மூக்குடைந்து இரத்தம் வந்தது. அதை நிறுத்திஞர் வைத்தியர். குண்டு பட்டுக் காறை யெலும்பு முறிந்தது. பக்கத்தில் குண்டு பட்டுக் குறிப்புப் புத்தகத்தால் தடையுண்டு உள்ளே செல்லவில்லை. இரத்தம் அதிகமாக வடிந்ததால், மாரியன் களைத்து மயங்கி யிருந்தான். 'அபாய மில்லை, பிழைத்துக் கொள்வான்' என்று வைத்தியர் உறுதி கொண்டார்.

ஜில் நார்மன் மகள் மாரியனைப் பார்த்துத் திகிலடைந்து, "ஐயோ! தெய்வமே, இப்படியும் வருமோ!" என்று வருந்தி, ஒரு மூலையிலிருந்து ஜப மாலையை உருட்டிக் கொண்டிருந்தாள். பாஸ்கும் நிக்கோலத்தும் காயங் கட்டத் துணி தயாரித்தனர். வைத்தியர் மருந்து போட்டுப் பஞ்சு வைத்துக் காயத்தைக் கட்டி, இரத்தம் வடிதலை நிறுத்திஞர்; வெந்நீரினல் தலை, மயிர், முகம், கை, மார்பெல்லாம் இரத்தக்கறை போகக் கழுவினர். அதனல் ஒரு அண்டாத் தண்ணீர் செந்நீராயிற்று. இச்சமயம் எதிர் அறையின் கதவு திறந்தது. வந்தார் ஜில்நார்மன். நேற்று நடந்த புரட்சி அவருடைய கோபத்தைக்

கிளப்பியது. தாத்தாவுக்குத் தூக்கமில்லை. அடுத்த அறையில் வெளிச்சந் தெரிந்தது. சத்தம் கேட்டது. உடனே எழுந்து வந்தார் பாட்டனர்; பார்த்தார் போரனை; இரத்தம் பீறிடுவதைக் கண்டார்; மாரியன் கண் மூடி மயங்கிக் கிடப்பதை நோக்கினர்; உடல் நடுங்கினர்; குடல் நடுங்கினர். கைகள் நடுங்கின. நரம்புகள் துடித்தன.

“ஐயோ! மாரியன், மாரியன், ஐயோ! இதென்ன கோலம்” என்று ஜில்நார்மன் அலறினர். போர் முனையிலிருந்து மாரியனை யாரோ இங்குத் தூக்கி வந்தார் என்று சேவகன் சொன்னன்.

“ஐயோ! செத்துப்போனனே? அட களவாணிப் பயலே, இப்படியா என் வாயில் மண்ணைப் போட்டாய்! டாக்டர், சொல்லும், உயிர் இருக்கிறதோ போயிற்றோ?” என்று பாட்டனர் முறையிட்டார். டாக்டர் இன்னது செய்வதென்று தெரியாது சும்மா இருந்தார். விருத்தர் ஜன்னலண்டை சென்று, கூக்குரலிடத் தொடங்கினர்:—“பாவி போய்விட்டான்! இறந்தே போனன்! என்மேல் வன்மம் வைத்துக்கொண்டு, அந்தப் புரட்சித் திருடருடன் போய்ச்சேர்ந்து, இப்படிச்செய்தானே சண்டாளன்! ஐயோ! என்ன துயரம்! குத்து, வெட்டு, காயம், இரத்த வெள்ளம், உடல் சின்னபின்னம்! என்ன கொடுமை! அட பாவிப்பயலே, என் பாசமறியாயா! நீ வந்து ‘தாத்தா’ என்று நின்றால் போதுமே! இந்த வீட்டிற்கு நீ எஜமானு யிருப்பாயே! அட

பாதகா, என்ன பிடிவாதம்! நான் முடியரசுவாதியாம்! குடியரசுவாதியாகி, என் குடியைக் கெடுத்தாயே பாவி! இந்தக் கிழவன்மேலே கோபித்துக் கொண்டு இப்படித் துப்பாக்கிக் குண்டிற்கு இரையானனே! அட பாவி, அட பாவி, அட பாவி!"

கூக்குரல் பொறுக்க முடியாமல், வைத்தியர், "பேசாதிரும்" என்று ஜாடை செய்தார்.

தாத்தா :—ஐயா, வைத்தியரே, வந்தனம். நான் பேசாமலிருக்கிறேன். நானும் மனிதன். பதினலாம் லூயி இறந்ததைப் பார்த்திருக்கிறேன். எல்லாம் இந்தப் பத்திரிகைகளால் வரும் வினை. ஐயா, நீண்ட மேடைப் பேச்சு, அரசியல் கிளர்ச்சி, சுதந்திரக் கூச்சல், முன்னேற்றக் கெடுபிடி, உரிமைப் போராட்டம், பத்திரிகை விளம்பரம்—எல்லாம் இப்படி முடிகின்றன. வைத்தியரே, இவன் நான் வளர்த்த குழந்தை. சிறுவனாயிருக்கையில் துயிலெரி அரண்மனையில் இவன் விளையாடுவான். அப்போதே துடுக்காக, "லூயி XVIII வீழ்க" என்று கத்துவான். நான் அவன் வாயை யடைப்பேன். அது அவன்மேற் குற்றமில்லை. அவன் தாயார் நல்லவள்; இறந்துபோனாள். அவன் அப்பன் புரட்சித்திருடன். அப்பன் வாசனை பிள்ளைக் கடித்தது. இவன் இவ்வளவு உயரப் பையனாயிருக்கும்போது வெகு அழகாயிருப்பான். எல்லாரும் அவனழகைக் கண்டும், கிளிபோன்ற பேச்சைக் கேட்டும் வியப்பார்கள். 'அட பயலே' என்று பிரம்பைக் காட்டி

மிரட்டுவேன்; பயப்படமாட்டான். இவனை உயிர் போல் நேசித்தேனையா! ஆ! மாரியன், மாரியன், எனக்கு முன்னே போனையா! குண்டு பட்டு இறந்தாயா! அட பாவி, அட பாதகா, இனி எதைக் கொண்டு உலகில் மகிழுவேன்? இதோ நானும் இறக்கிறேன். அட பாவிப்பயலே, வீட்டிலே விருந்துண்டு, இளமைக்குரிய சுக போகங்களை அனுபவிக்காமல், குடியரசாம், சுதந்திரமாம், போராம், புரட்சியாம். இருபது வயது காளை இளம் பெண்களுடன் ஆடிப் பாடித் தமாஷா யிருக்காமல் புரட்சிக் காலிகளுடன் சேர்ந்து, என் குடியைக் கெடுத்தாயே! வைத்தியரே, இந்த மருந்தெல்லாம் எதற்கு? பயல் போய் விட்டான். இதோ நானும் போகிறேன்! நாளை இந்த வீட்டிலிருந்து இரண்டு பாடைகள் புறப்படும். அந்தப் புரட்சிக்காரப் பயல்கள், திவர்த்தித் தடிப் பயல்கள், கொள்ளைக்காரப் பாவிகள் என் பேரனைக் கொன்றுவிட்டார்கள். அட பாவி, உன்னால் நான் சாகிறேன்.

இச்சமயம் சிகிச்சையால் மாரியன் விழி திறந்து தாத்தாவை நோக்கினான். "மாரியன், என்னருமை மாரியன், என் கண்ணே, என் அன்பே, கண்ணைத் திறந்தாயா? என்னைப் பார்க்கிறாயா? நீ உயிரோடிருக்கிறாயா? ஹா! மாரியன்! மாரியன்!"

பாட்டனார் மூர்ச்சித்தார்.

100. தாத்தாவின் கொண்டாட்டம்

பல நாட்கள் நினைப்பற்றுப் படுக்கையிலே யிருந்தான் மாரியன்; குண்டுபட்ட புண்கள் ஆறியும், அதிர்ச்சியினால் மயங்கிக் கிடந்தான். காய்ச்சலடித்தது. இடையிடையே ஜன்னி கண்டு அவன் உளறினான்; "கோஸத், கோஸத்" என்று இரவில் அடிக்கடி புலம்பினான். பாட்டனார் பேரன் பக்கத்திலேயே இருந்தார்; புண்கட்ட உதவினார். தினந்தோறும் ஒரு கிழவனார் ஒரு யுவதியுடன் வந்து, சேவகனிடம் மாரியன் உடம்பைப்பற்றி விசாரித்து, அவன் புண்ணைக் கட்ட ஒரு துணிப் பந்து கொடுத்துச் செல்வார். நான்கு மாதங்களுக்குப் பிறகு, மாரியன் சிறிது குணமடைந்தான்; காரை யெலும்பு இன்னும் வலித்ததால், மேற்கொண்டு இரண்டு மாதம் பெரிய சாய்வு நாற்காலியிற் படுத்திருந்தான். புரட்சிக்காரரைத் தேடிச் சென்று கொன்றமுடியரசாங்கம் மாரியனைத் தொடரவில்லை. அவன் நோயா யிருந்ததாலும், ஆறுமாதம் சென்றதாலும், மாரியனை அரசாங்கத்தார் ஒன்றும் செய்யாது விட்டுவிட்டார்கள். ஆறுமாதஞ் சென்று, "இனி அபாயமில்லை. மாரியன் குணமடைந்தான்" என்று வைத்தியர் சொன்னார். தாத்தாவுக்குச் சந்தோஷ வெறி பிடித்துவிட்டது. அவர் தம் வயதை மறந்து வாலிபராய்விட்டார்.

"காத லென்னுங் கள்ளை யுண்ணுவோம்;
காத லென்னும் விண்ணை நண்ணுவோம்;
காத லின்ப வாழ்வை யெண்ணுவோம்;
காதல் யாழைச் சுருதி பண்ணுவோம்;
காதல் காத லென்று பாடுவோம்;
காத லர்கை கோத்தின் றாடுவோம்;
காத லின்ப மெங்குந் தேடுவோம்;
காத லாம்வ னத்திற் கூடுவோம்"

என்று பெரிய தொண்டை யெடுத்துப் பாடிக் கூத் தாடினார் பாட்டனார்; அதன் பிறகு தனியாகச் சென்று முழந்தாட் பணிந்து, "கடவுளே, நீயே மாரியனைக் காப்பாற்றி எனக்கும் உயிர்ப்பிச்சை யிந்தாய். உன் அன்பு வாழ்க!" என்று வணங்கினார். இது காறும் உலகின்பமே இன்பம் என்றறிந்தவர், இன்றே கடவுளின் கருணையை நினைந்தார். பழைய தாத்தா புதிய தாத்தாவானார்; மாரியனை மாரியன் பிரபு என்றழைத்தார்.

"குடியரசு வாழ்க வாழ்கவே!
முடியரசு வீழ்க வீழ்கவே!
கோடி யுயர்த்தி வீரபேரிகை
கோட்டுவோம் உலக மெங்கிலும்;
குடியரசு வாழ்க வாழ்கவே!"

என்று குடியரசைப் பாட்டனார் வாழ்த்தினார். அன்று முதல் அவர் புரட்சிக்காரரைத் திட்டுவதில்லை; புரட்சியைப் போற்றினார்; மாரியன் உண்ணும் போது கிட்ட இருந்து ஊட்டினார்; அவனை வீட்டுத்

தலைவனாகக் கருதினார்; தான் பேரனுக்குப் பேரன் போல நடந்துகொண்டார். மாரியன் உடம்பு முற்றிலும் குணமானது. சிலையி லடித்தாற் போன்ற அவனழகையும், வனப்பையும், அறிவையும் கண்டு பாட்டனார் களிப்புற்றார்.

மாரியனுக்குக் கோஸத்தே நினைப்பு. கல்வரித் தெருவில் போர்முனையில் தான் நின்றதும், பகைவரைச் சுட்டதும், எபோனி, குரோஷன், மாபோ முதலியோர் போரில் வீழ்ந்ததும் அவனுக்கு நினைப்பிருந்தது. தன்னை யார் இங்கேகொணர்ந்தது என்பது அவனுக்குத் தெரியாது; யாருக்குந் தெரியாது. ஓரிரவில் அவனை இரண்டு பேர் வண்டியிலேற்றி வந்தனர் என்று சேவகர் சொன்னதைத் தவிர வேறு விபரம் தெரியவில்லை. பிழைத்தது சரி. இனிக் கோஸத் இல்லாமல் தான் வாழ முடியாது. அவளைத் தேடி மணம்புரிவதே தனது முதற்கடமை யென்றுணர்ந்தான் மாரியன்; அதற்குப் பாட்டனார் சம்மதியார் என்றே நினைத்தான்; தனது வீரத் தந்தையை அவமதித்த கிழவர் தன் காதலியையும் அவமதிப்பார் என்றே நினைத்தான்.

ஆனல் பாட்டனார் மாரியன் மனத்தையறிந்தார்; ஒரு நாள், பிரியமாக, "மாரியன், உன் உடம்பு தேறவேண்டும். இந்தப் புஷ்டியான உணவைச் சாப்பிடு" என்று உணவு தந்தார்.

மாரியன்:—என் உடல் உறுதியானது. என் மன வுறுதியைத் தங்களிடம் சொல்ல வேண்டும்

தாத்தா :—சொல்லு, சொல்லு, மாரியன்.

மாரியன் :—நான் மணம் புரிந்து கொள்ள வேண்டும்.

தாத்தா :—அதை அப்போதே தீர்மானம் செய்தே வைத்திருக்கிறேன்.

மாரியன் :—தங்கள் தீர்மான மென்ன?

தாத்தா :—நீ காதலித்த கன்னியை உனக்கு மணம் புரிவிக்கவே நான் தீர்மானித்திருக்கிறேன்.

தாத்தாவின் மனமாறுதலைக் கண்டு வியந்தான் மாரியன்.

தாத்தா :—ஆம். நீ உன் காதலியை மணம்புரி. அவள் நல்ல பெண். நீ நோயாயிருந்தபோது தினம் உனக்காகக் கடவுளைத் தொழுதாளாம். உன் புண்ணைக் கட்டத் துணி தயாரித்துத் தந்தையுடன் இங்குக் கொண்டுவந்து கொடுத்து, உன் உடல் நலத்தை விசாரித்துச் சென்றாள் அந்தக் கன்னிகை. அவள் ஆயுதக்காரன் தெரு, ஏழாவது எண் வீட்டில் இருக்கிறாள். அவளைப்பற்றி எல்லாம் விசாரித்து வைத்திருக்கிறேன். மாரியன், பழைய மனஸ்தாபங்களை மற. நான் கிழவன். நான் வாய் தவறி ஏதாகிலும் சொல்லியிருந்தாலும், வக்கீல்வாள் மனத்தில் வைத்துக்கொள்ள வேண்டா. இனி எல்லாம் உன் மனப்படி நடக்கும். மாரியன், கேள்: என் வயதில் நான் எத்தனையோ குட்டிகளைப் பார்த்து எவ்வளவோ அனுபவம் பெற்றிருக்கிறேன். உன் காதலியைப் பற்றி விசாரிக்காமற் போவேனா? அக்

கன்னிகை நல்லழகி; குணவதி; புத்திசாலி; உன்னை உயிர்போலக் காதலிக்கிருள். அவள் இந்த வீட்டிற்கு அணிகலமாவாள். இனிப் பேச்சென்ன? என்னருமை மாரியன், காதல் செய்; கோஸத்தை மணம் புரிந்து கொள், இந்த வீட்டிற்கு எஜமானுக நீடூழி க்ஷேமமாக வாழ்ந்திரு.

ஜில்நார்மன் இவ்வண்ணம் கூறிக் கண்ணீர் விட்டழுதார் ; மாரியனை மார்புறத் தழுவிக் கொண்டார்.

தாத்தா :—என்னை விட்டு நீ அப்படிப்போயிருக்கலாமா? என்னருமை மாரியன், என் கண்மணி, என்னுயிரே!

மாரியன் :—என்னருமை அப்பா, அப்பா.

தாத்தா :—என்னை நீ நேசிக்கிருயா?

மாரியன் :—ஆம், அப்பா.

தாத்தா :—என் மனம் குளிர்ந்தது.

மாரியன் :—அப்பா, நான் அவளைப் பார்க்க வேண்டும்.

தாத்தா :—நாளை.

மாரியன் :—இன்றே, அப்பா.

தாத்தா :—சரி, உன் விருப்பம். இதோ ஆளையனுப்புகிறேன்.

ஆயுதக்காரத்தெருவிற்குச் சென்று, கோஸத்தையும் ஃபோஷல்வானையும் அழைத்து வரப் பாஸ்கை உடனே யனுப்பினுர் பாட்டனுர்.

101. நிச்சிதார்த்தம்

ஃபோஷல்வானும் (ஜாம்வல்ஜான்) கோஸத்தும் வந்தனர். ஜில்நார்மன் அவர்களை நல் வரவேற்று அமர்த்தினர். 'என்ன அழகு! என்ன சாந்தம்! இந்தப் பயலுக்குச் சரியான ஜோடியிவளே' என்று பாட்டனர் கோஸத்தைப் பார்த்து மகிழ்ந்து வியந்தார்; "க்ராஷல்வான் அவர்களே, (பெயர்களை இவ்வாறு மாற்றிச் சொல்வது தாத்தா வழக்கம்) எனது பேரன் திரு. மாரியன் போமெர்஫ி பிரபுவுக்கு, உமது மகளைத் தருமாறு மகிழ்ச்சியுடன் வேண்டுகிறேன்" என்றார். ஃபோஷல்வான் வணக்கமுடன், "அவ்வாறே ஆகட்டும்" என்றான். "இனிக் காதலர் இருவரும் பேசிக் கொள்ளுங்கள்" என்றார் பாட்டனர். மாரியன் புன்னகைத்தான். கோஸத் அவனுடன் மெல்லப் பேசினள். "உம், தாராளமாகப் பேசுங்கள், சங்கோசம் வேண்டாம்" என்று பாட்டனர் காதலரை ஊக்கினார்.

கோஸத் :—ஆ! கடவுளே, எவ்வளவு ஆபத்து வந்தது! 'தங்களை மீண்டும் காண்பேனே' என்று வருந்தி யழுதேன். நான்கு மாதங்களாக என்னுயிர் என்னிடம் இல்லை. தங்கள் புண்ணைக் கட்டத் துணி தயாரிப்பதும், தங்கள் உடல் நலத்திற்காகக் கடவுளைத் தொழுவதுமா யிருந்தேன். என்ன காரியம் செய்தீர்கள்! ஏன் புரட்சியிற் சேர்ந்தீர்கள்? ஐயோ! தங்கள்மேல் பட்ட குண்டு என்னுயிரிற்

பட்டது போலிருந்தது. தங்கள் புண்ணைக்கண்டு என் மனம் புண்பட்டுப் புழுங்கியது. இனிக் கவனமாயிருங்கள். தங்கள் பாட்டனார் மிகவும் நல்லவர். இப்போது தான் என் மனம் நிம்மதியடைந்தது.

மாரியன்,கோஸத்தின் கனிமொழிகளைப் பருகி, "நீ ஒரு தெய்வ மாது" என்றான். இரண்டு காதலரையும் பாட்டனார் வெகுமகிழ்ச்சியுடன் நோக்கினார்; கோஸத்தைப் பார்த்துப் பார்த்துக் களித்தார்; "சரியான ஜோடி! மாரியன், சரியான காதலியைத் தேடிக் கொண்டாய்! என்ன அழகு! அடக்கம்! அன்பு! கோஸத், உன் அழகும் வனப்பும் என் மனத்தைக் கவர்ந்தன. நான் கிழவனாய் விட்டேன். எனக்கு மட்டும் 50 ஆண்டுகள் குறைவா யிருந்தால், வாட்சண்டை போட்டு, இந்த மாரியனை வென்று, நான் உன்னை மணந்திருப்பேன். நல்லது, என் மனங் குளிர்ந்தது. இனித் திருமணம் நடக்கட்டும். பால் முனிவர் கோயிலில் உங்களுக்குக் கலியாணம் நடக்கட்டும். கன்னியாயிருப்பது நல்லதல்ல. இனி நீ மனைவியாய் யிருக்கவேண்டும். "மரபை வளர்" என்று வேதம் சொல்லுகிறது. ஜனங்களைக் காப்பாற்ற ஒரு மூராந்தார்க் வேண்டும். உலகில் ஜனத்தொகையை வளர்க்க நல்ல தாய்மார் வேண்டும். நீங்களிருவரும் மணம் புரிந்து நீடூழி வாழுங்கள்.

மாரியன், கோஸத் ஆகிய இருவர் கரங்களையும் தமது முதிர்ந்த கரத்தால் பற்றினார் பாட்டனார்;

"என்னருமைக் குழந்தைகளா, நன்றாகக் காதலித்துச் சுகமாகப் பெற்றுப் பெருகி வாழுங்கள்" என்று ஆசிர்வதித்தார்.

"நீடூழி வாழுங்கள்! நீடூழி வாழுங்கள்!
நேசிக்குங் காதலர்காள்,
பீடுறு மக்களுஞ் செல்வமுஞ் சீர்த்தியும்
பெற்றின்ப மோங்கிடவே;
நீடூழி வாழுங்கள்! நீடூழி வாழுங்கள்!
நித்தியக் காதலர்காள்,
நாடு தழைத்திட, வீடு தழைத்திட
நல்லற மோங்கிடவே!"

என்று பாட்டனார் ஆனந்தக் கூத்தாடினார்.

இச் சமயம், "கன்னி யூஃப்ராஸி போஷல்வானுக்கு 6 லட்சம் பிராங்க்" என்று சொல்லி ஒரு பெரிய பண முடிப்பை மேஜைமேல் வைத்தான் ஃபோஷல்வான். பாட்டனார் வியந்தார்; "யூஃப்ராஸி போஷல்வான் யார்?" என்று வினவினார். "அது தான் என் பெயர்" என்றாள் கோஸத். "ஆறு லட்சம் பிராங்க்கா!" என்று பாட்டனார் வியந்தார். "அதற்கு 4000 அல்லது 5000 பிராங்க் குறைந்திருக்கலாம்" என்றான் ஃபோஷல்வான். தொகை அவ்வளவும் நோட்டாயிருந்தது. எண்ணிக் கொடுத்தான் ஜாம்வல்ஜான். இதுவே அவன் மோம்ஃபெர்மேல் காட்டிற் புதைத்து வைத்திருந்த சொத்து.

தாத்தாவுக்கும், மூத்த மகளுக்கும் மனங் குளிர்ந்தது. "மாரியன், உனது கோஸத் அழகின் அவதாரம்; அன்பின் ஊற்று; கற்புச்சுடர். இத் தகைய நங்கையுடன் நீ பேரின்ப மடைவாய். மாரி யன், என்னருமைக் குழந்தை மாரியன், நீ பிரபு, நீ செல்வன், நீயே பாக்கியவான்!" என்று புகழ்ந்து மகிழ்ந்தார் ஜில்நார்மன். புதைகுழியினின்று திடீ ரென்று இன்ப விண்ணிற்கு உயர்ந்தது போலக் காதலர் மகிழ்ந்தனர். தனது கோஸத் இன்புறுவது கண்டு ஜாம்வல்ஜான் எல்லையற மகிழ்ந்தான். திரு மணம் பதிவாக வேண்டும்; அதற்குக் கோஸத்தின் பெற்றோர் பெயர் அவசியம் தெரியவேண்டும். ஜாம் வல்ஜான் சிந்தித்தான். கோஸத் தன் மகளல்ல; தான் எடுத்து வளர்த்த அனாதை. அவளது உற்றார், பெற்றாரெல்லாம் இறந்து போயினர். தன்னுடன் பிக் புஸ் மடத்தில் வேலை செய்த மற்றொரு ஃபோஷல் வான் மகளே அவள் என்று சொல்லிக் காரியத்தை நிறைவேற்றினான் ஜாம்வல்ஜான். திருமதி யூஃப்ராஸி ஃபோஷல்வான்என்றே அவள் பெயர் பதிவு செய் யப்பெற்றது. "காலஞ் சென்ற ஒரு உறவினர் கோஸத்திற்குத் தரும்படி பணித்ததொகையே தான் கொடுத்த 6-லட்சம் பிரான்க். அதில் 5000 பிரான்க் கன்னி மடத்திற்குத் தந்தாயிற்று. கோஸத்தின் கல்விக்காக அவ்வாறுதந்தது என்று கூறினான் ஜாம் வல்ஜான். "நான், எனது" என்னும் உணர்வையே மறந்த இந்த ஞானியை என்னென்பது! கோஸத்தின்

அன்பெல்லாம் மாரியனிடம் சென்றது. தனது உண்மைத் தந்தை ஜாம்வல்ஜானல்ல, இன்னொரு ஃபோஷெல்வான் என்றறிந்தும் ஜாம்வல்ஜானைக் கோஸத் இன்னும் 'தந்தை' யென்றே யழைத்தாள்.

பாட்டனார் உற்சாகம் கொழுந்து விட்டோங்கிற்று. அவர், தமது மனைவி, மகள், வைப்பாட்டிகள் ஆகிய அனைவர் ஆடையாபரணங்களும் நிறைந்த அலமாரிகளின் சாவிகளையெல்லாம் கோஸத்திடம் கொடுத்து, "இஷ்டப்படி விதவிதமாக உன்னை அலங்கரித்துக்கொள்" என்றார்; கோஸத்திற்குத் தினம் ஏதாவது ஒரு புதிய பரிசு வழங்கினார்; மாரியனுக்கு நல்ல உடுப்புகள் தைத்துக்கொடுத்தார். தாம் வசிக்கும் அலங்காரமான அறையை மாரியனும் கோஸத்தும் வசிக்க ஒழித்துவிட்டார்; "என்னறை எப்போதும் காதலர் சந்தோஷமாயிருக்கவே பயனுகட்டும்" என்றார்; தமது புத்தகசாலையிலிருந்த நீண்ட அறையில் மாரியன் சட்டத்தொழில் நடத்தச் செய்தார்.

நிச்சிதார்த்தம் நடந்த நாள் முதல் பாட்டனார் ஓயாமல் கலியாணப் பேச்சே பேசிக்கொண்டிருந்தார்:—"இந்தப் பத்தொன்பதாவது நூற்றாண்டிலுள்ளவர்களுக்குக் கலியாணம் செய்யும் விதமே தெரியவில்லை. இவர்கள் கலியாணத்தில் எனக்குக் குஷி பிறக்கவில்லை.

அது ஏதோவொரு வியாபாரம் போலிருக்கிறது. எனக்குத் தமாஷில் இம்மி குறையைச்

கூடாது. பூசி மெழுகும் வெறும் வேலை எனக்குப் பிடிக்காது. கலியாணச் செலவு தாராளமாய் நடக்க வேண்டும். என் கலியாணம் எவ்வளவு சிறப்பாக நடந்தது தெரியுமா? எத்தனை இலட்சம் பிரபுக்கள் வந்தனர்! வகை வகையான கனிகள், பலகாரங்கள், பானங்களுடன் ஏராளமாக விருந்து நடந்தது. சதிரும், பாட்டுக் கச்சேரியும் அமளிபட்டன. மாரியன், நீ எனக்குச் செல்வப் பேரன். உனக்குக் கிளி போன்ற மனைவி வாய்த்தாள். ஹோமர் பார்த்தால் அவளை மற்றொரு ஹெலன் என்றே வர்ணிப்பார். உன் கலியாணத்தை ஜோராக நடத்த வேண்டுமப்பா. விருந்து ஊரெல்லாம் மணக்க வேண்டும். திசையதிர வாத்தியங்கள் கோஷிக்க வேண்டும். பாட்டுக் கச்சேரி பலமாக நடக்க வேண்டும். இந்த ஊரில் பிரபலமான தாசிகளை வரவழைத்துச் சதிர்க் கச்சேரி நடத்த வேண்டும். ஊர்வலம் ஜகஜ்ஜோதியாக நடக்க வேண்டுமடா பயலே” என்று பேசிக் கலியாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார் பாட்டனார்.

ஃபோஷல்வான் தினந்தோறும் கோஸத்தை அழைத்து வருவான். மாரியன் தனது காதலியுடன் பிரியமாகப் பேசுவான். ஃபோஷல்வான், காதலர்கள் இன்புறக்கண்டு தானும் இன்புறுவான்.

மாரியன் இரண்டு பேர்வழிகளைக் கண்டுபிடிக்க முயன்றான். ஒருவன் தேன்னாடியன். தென்னாடியள் சிறையில் இறந்து போனாள். தென்னாடியன் சிறை

தப்பினன். அரசாங்கத்தார் அவனுக்குத் தூக்குத் தண்டனை விதித்தனர். ஆள் அகப்பட்டால் தூக்கி லேறுவான்: அதனுல் நிலை தெரியாது மறைந்தான். இரண்டாவது தன்னைப் போர் முனையினின்று கொண்டுவந்த புண்ணியவான் யார் என்று மாரியன் விசாரித்த வண்ணமிருந்தான்: முடிவில் தன்னை யேற்றிவந்த வண்டிக்காரனை விசாரித்துப் பாரிஸ் சாக்கடை வழியாக யாரோ ஒருவர் தன்னைச் சுமந்து வந்தார் என்பதை அறிந்தான்: அவ்வாறு தன்னைக் காத்த புண்ணியவான் அகப்பட்டால், ஃபோஷெல் வான் கொடுத்த ஸ்ரீதனமாகிய ஆறுலட்சம் பிரான்க் கையும் அவனுக்குத் தருவதாக வாக்களித்தான். இந்தப் பேச்சையெல்லாம் கேட்டும் ஜாம்வல்ஜான் ஒன்றும் தெரியாதவன் போலிருந்தான். போர்க் களத்திற்கு வந்த ஃபோஷெல்வான்கூடத் தானில்லை யென்று மாரியன் நம்பும்படி செய்தான்.

---

102. திருமணச் சிறப்பு

16—2—1833, செவ்வாய்க்கிழமை இரவு மாரி யனுக்கும் கோஸெத்கிற்கும் திருமணம் சிறப்பாக நடந்தது. அன்று கிறிஸ்தவர்கள் விசேஷமாகக் கொண்டாடும் செவ்வாய்த் திருநாள். அன்று ஊரார் பல வேஷங்கள் போட்டு ஆடுவர். காலிக்கும் பலுக்கெல்லாம் அன்று பெரிய கொண்டாட்டம்.

மாரியன் கலியாணத்திற்கு உற்ரூர், உறவின ரெல்லாம் ஏராளமாக வந்தனர். எல்லாரும் நல்ல செல்வர்கள். கோஸத்திற்குத் தூஸேன் கூட இருந்து உதவினுள்; அலங்கரித்தாள். சம்பந்தி ஃபோஷல்வானுக்குப் பலமான உபசாரங்கள் நடந்தன. ஜாம்வல்ஜான் வலக் கையில் வெட்டுக்காயம் என்று சொல்லித் துணி கட்டிக்கொண்டிருந்தான்.

ஜில்நார்மன் மாளிகையிலிருந்து வதூவரரைப் பால் முனிவர் கோயிலுக்கு அழைத்துச் சென்றனர். ஒரு சாரட்டில் கோஸத், ஜில்நார்மன் மகன், தூஸேன் ஆகிய மூவரும் அமர்ந்தனர். இன்னொரு சாரட்டில் ஜில்நார்மன் ஆடம்பரமான உடைகளுடன் அமர்ந்தான். அவனுக்குப் பக்கத்தில் அலங்கார உடைகளணிந்து மாரியன் கம்பீரமாக அமர்ந்தான். அவன் பக்கத்தில் ஜாம்வல்ஜான் அமர்ந்தான். இவ் வண்டிகளுக்குப் பின்னுல் உற்ரூர், உறவினர் ஏறிய வண்டித் தொடர்கள் வந்தன. பாண்டு வாத்தியம் முழங்கப் பவனி புறப்பட்டது. வழி யெங்கும் செவ்வாய்த் திருநாட் கூட்டம் 'ஜே, ஜே' என்று நெருங்கியது. ஆண் குழந்தைகளும், பெண் குழந்தைகளும், குமரிகளும், வாலிபர்களும், முதியோரும் பல வேஷங்கள் போட்டுக்கொண்டு, வேடத்திற்குத் தக்க நடிப்புடனும் கொட்டு முழக்குகளுடனும் தெருவிற் சென்றனர். ஊர்க் காலிகளெல்லாம் முக மூடிகளை யணிந்து, ஆடிப்பாடி

யிருக்கவேண்டும்; தங்கள் கை வேதனையை மறக்க வேண்டும்; தமாஷா யிரும். இந்த மாதிரி வதூ வரரைக் காண்பதே பேரின்பமல்லவா? சிரியுமையா, சிரியும்" என்று ஜாம்வல்ஜானைத் தூண்டினார். ஜாம்வல்ஜான் நடப்பதை யெல்லாம் பற்றற்ற ஞானி போலப் பார்த்திருந்தான்.

பாரின் மேயரும், கோயில் சாமியாரும் கேட்ட மாமூல் கேள்விகளுக்கு வதூவரர் சரியான விடை கொடுத்தனர்: ஒருவரை யொருவர் உயிர்போல நேசிப்பர் என்றும், எக்காலமும் ஒருவரை யொருவர் பிரிவதில்லை யென்றும் உறுதி கூறினர். நகரப் பதிவுப் புத்தகத்திலும், கோயில் பதிவுப் புத்தகத்திலும் வதூவரர் கையெழுத் திட்டுத் தமது திருமணத்தை உறுதி செய்தனர்: மோதிரம் மாற்றிக் கொண்டனர்; இறைவனைப் பணிந்தனர். சாமியார் மங்கல வாழ்த்துக் கூறினார். கடவுள் வணக்கம் நடந்தது. கலியாண மாயிற்று. சுபமஸ்து! மாரியன் கோஸத்தின் கையைப் பிடித்துக்கொண்டு ஒரு சாரட்டில் ஏறி யமர்ந்தான். அவர்களுக் கெதிரே ஜில்நார்மனும் ஜாம்வல்ஜானும் அமர்ந்தனர். ஊர் வலம் வெகு சிறப்பாக ஜில்நார்மன் மாளிகைக்குப் போய்ச் சேர்ந்தது. மங்கல வாத்தியங்கள் முழங்கின. மலர்களாலும் மணி விளக்குகளாலும் அலங்கரிக்கப் பெற்ற கூடத்தில் வதூவரர் அமர்ந் தனர். ஜாம்வல்ஜான் கூடக் கதவண்டையில் அமர்ந் தான். கோஸத் மிகவும் அன்புடன், "அப்பா, உனக்

குச் சந்தோஷந்தானே" என்றாள். "ஆமாம், சந்தோஷந்தான்" என்றான் ஜாம்வல்ஜான். "ஆனால், சிரி" என்றாள் கோஸத். ஜாம்வல்ஜான் சிரித்து மகிழ்ந்தான். அச்சமயம் மூன்று பிடில்களும் ஒரு புல்லாங்குழலும் இசைவிருந்தளித்தன. பின்னர், எல்லாரும் விருந்திற் கெழுந்தனர்.

விருந்துக்கூடம் கண்ணுக்கினிமையாக அலங்கரிக்கப் பெற்றிருந்தது. விளக்குகள் பளிச்சென் றெரிந்தன. அந்த விளக்குகளிற் பலவகைப் பட்சிகளின் உருக்கள் மிளிர்ந்தன. சுவர்களில் நிலைக் கண்ணாடிகள் பதிக்கப்பெற்றிருந்தன. ஒரு பெரிய மேஜையில் பளபளப்பான பீங்கான் தட்டுகளில் உணவுகள் பரிமாறப் பெற்றிருந்தன. கண்ணாடிக் கோப்பைகளில் ஷாம்பைன் வைக்கப்பெற்றிருந்தது. விருந்தினரெல்லாம் அமர்ந்தனர். ஜில்நார்மன் ஒரு பெரிய நாற்காலியில் அமர்ந்தார். அதற்கடுத்துச் சம்பந்தி ஃபோஷல்வானுக்கு ஒரு வெல்வெட் நாற்காலி போட்டிருந்தது. ஆனால் சம்பந்தியெங்கே? "கைவலித் தொந்திரவென்று சொல்லி வீட்டிற்குப் போனார். 'விருந்திற்கு உட்காரமுடியவில்லை, மன்னிக்க வேண்டும்' என்று தங்களிடம் சொல்லச் சொன்னார்" என்றான் சேவகன் பாஸ்க். "அட, இச்சிறிய புண்ணிற்காக இந்த விருந்தின் பத்தையா இழப்பது; சரி நடக்கட்டும்" என்று பாட்டனார் மாரியஸை அந்த இடத்தில் அமர்த்தினார். கோஸத் மாரியன் பக்கத்தில் அமர்ந்தாள். அவே

வரும் தமாஷாக விருந்துண்டனர். முடிவில் வதூவரரை வாழ்த்தப் பாட்டனூர் எழுந்தார்; கையில் ஷாம்பைன் கோப்பையை வைத்துக் கொண்டு, ஆனந்த பரவசத்துடன் பேசினூர்:—

"கோயிலில் நீங்கள் சாமியார் உபதேசங்களைக் கேட்டீர்கள் இப்போது இந்தப் பாட்டனூரின் உபதேசத்தைக் கேளுங்கள். சந்தோஷமாயிருங்கள்; சஞ்சலத்திற்கு இடங்கொடாதீர்கள்; 'ஆசை தளர்க' என்கிறுன் வேதாந்தி; 'ஆசை வளர்க' என்கிறேன் நான். வேதாந்தம் வேதாந்திகளுடன் நிற்கட்டும். 'நாம் உலக வாழ்வில் இன்பந் தேடுவோம்' என்கிறேன் நான். 'இன்றைக்கிருப்பாரை நாளைக் காணும்' என்று அழுகிறுன் வேதாந்தி. 'இருக்குமட்டும் இன்புறு: அழாதே; என்னுடன் சிரி' என்கிறேன் நான். 'உலகின் உறவு நிலையில்லை' யென்கிறுன் வேதாந்தி. 'உறவுள்ள மட்டும் ஓங்கி மகிழ்' என்கிறேன் நான். 'இன்ப துன்பங்களைப் பாராட்டாதே' என்கிறுன் வேதாந்தி. 'இன்பத்தைப் பாராட்டு: துன்பத்தை விரட்டு' என்கிறேன் நான். எல்லாரும் மகிழுங்கள். வாழ்வை இன்ப விருந்தாக்குங்கள். காதல், காதல், காதலே வாழ்வு! காதலிக்கக் கூச்சம் வேண்டாம். வெளிப்படையாக, சுதந்திரமாக எவ்விதமான அச்சமும் இல்லாமல் காதலியுங்கள். காதலின்பமே இன்பம். காதலில்லாத வாழ்க்கை சக்கை போலாகும். வானம் காதலித்துத்தான் சூரியனைப் பெறுகிறது. சூரியன்

காதலித்தே உலகம் வளர்கிறது. உலகிற்கு மழையும் கதிரும் எப்படியோ, அப்படியே ஆண் பெண் காதலும். வாழ்வின் விசை பெண்ணிடம் உள்ளது. இந்த மாரியன் மனத்தைக் கொள்ளையடித்தது அதோ அந்தப் பெண் தெய்வமல்லவா! ஆதாம் யார்? ஏவாளின் காதல் வடிவல்லவா? பெண்களை விரும்புங்கள். பெண்மையே காதலுக்கு உயிர்; வாழ்வுக்கு இன்பம். பெண்ணின்றி உலகமில்லை. காதல், பெண், முத்தம், புணர்ச்சி, மக்கட்பேறு, வாழ்வின்பம்—இவற்றை ஒரு நாளும் அனுபவிக்க மறவாதீர்கள். 'வாழ்க்கை குறுகியது' என்கிறான் வேதாந்தி. 'ஆமாம், அப்படித்தான்; ஆதலால் குறுகிய வாழ்வைக் காதலால் பெருக்கிய வாழ்வாக்குக' என்கிறேன் நான். நான் கிழவன் என்று பார்க்கிறீர்களா? என் தோல்தான் கிழம்; என் காதல் இன்னும் வாலிபத்துடனேதா னிருக்கிறது.

"மாரியன், கோஸத், நீங்கள் பிரியாக் காதலை வளர்த்து நீடூழி வாழ்க! ஒருவருள் ஒருவர் வாழுங்கள்; ஒருவரை யொருவர், 'கண்ணே, விண்ணே, கட்டிக் கரும்பே' என்று வியந்து கொஞ்சுங்கள். இன்பப் பட்சிகளா, இவ்வுலக வாழ்வென்னுஞ் சோலையில் நிரம்பக் கனியுண்ணுங்கள். காதலித்தல், காதலிக்கப் பெறுதல், காதலை வளர்த்தல் ஆகிய இம் மூன்றுமே வாழ்வின் பயனாகும். உலகம் உண்டான போதே காதல் உண்டானது. உலகின் உயிர் காதலே. மாரியன் கோஸத்திற்குச் சூரியனாகுக!

மாரியனுக்குக் கோஸத் மகிதலமாகுக! கோஸத்தின் இன்பக் கண்ணீர் மாரியன் வாழ்வுப் பயிரை வளர்க் கட்டும். மாரியன் புன்னகைச் சுடர் கோஸத்தின் வாழ்வை இன்ப நிலவாக்கட்டும். பெண்மை வாழ்க! ஆண்மை வாழ்க! காதல் வாழ்க! என்னருமைக் குழந்தைகளா, என்னருமைச் செல்வி கோஸத், என்னருமைச் செல்வ மாரியன், உங்கள் மணவாழ்வு மங்களமாகுக!"

நாவிற்கினிய விருந்துடன், செவி விருந்தாகிய தாத்தாவின் பேச்சும் சேர்ந்து, விருந்தினரை இன் புறுத்தின. விருந்திற்குப் பிறகு நடனமாடினர். அதன் பிறகு வதூவரர் பள்ளியறைக்குச் சென்றனர். அங்கு நடந்த காதற் பரவச விருந்திற்கு இருவரே உரியர். காதலால் இருவர் ஒருவரானர் என்று குறிப்பிட்டு இக் கலியாண வர்ணனையை முடிப்போம்.

---

103. மனப் போர்

கோஸத்திற்குச் செய்ய வேண்டிய கடமை நிறை வேறியது. ஜில்நார்மன் பேச்சையும், விருந் தின் கோலாகலத்தையும், இடையே கோஸத் இனி மையாகப் பாடியதையும் மறைவாயிருந்து கேட்டு மகிழ்ந்து, ஜாம்வல்ஜான் தன் வீட்டிற்கு வந்தான். வீடு வெறிச்சென்றிருந்தது. கோஸத்தின் சாமான்

களெல்லாம் அவள் புகுந்த வீட்குற்குச் சென்றன. கோஸத்திற்குப் பத்தாண்டுகளுக்கு முன் தான் தந்த கருப்புடைகளையும் அவள் சிறு பெண்ணுயிருக்கும் போது தந்த ஆடைகளையும் பார்த்தான் ஜாம்வல் ஜான்; அவற்றை முத்தமிட்டான். தென்னுடியப் புலிகளிடம் குழந்தை பட்ட பாடும், தான் அவளை விடுவித்துப் பிரியமாக வளர்த்ததையும், தன்னிடம் அவள் வைத்த பாசத்தையும் நினைந்துருகினுன். யாரு மில்லாத அத்தனி வீட்டில் அன்றிரவு, "கோஸத், கோஸத்" என்று ஒரு குரல் விம்மி யழும் சத்தம் கேட்டது. ஜாம்வல்ஜான் தன்னையறியாது, கோஸத் தின் பிரிவைச் சகியாது அழுது கொண்டேயிருந் தான்.

இனித் தனது இறுதி நாட்களை எப்படிக் கழிப்பதென நினைக்கும்போதே மனப்போர் தொடங்கியது. அதுவே அவன் வாழ்வின் இறுதிப் போராக முடிந்தது. அவன் மனத்தைப் பல நினைப்பு கள் அலைத்தன. இரண்டு வழிகள் அவன் முன் தோன்றின. ஒன்று வாழும் வழி; மற்றொன்று சத்தியத்திற்காக வீழும் வழி. ஒன்று ஆசைவழி. மற்றொன்று தியாகவழி. "மாரியனைக் காத்தேன்; கோஸத்தின் மனோரதத்தை நிறை வேற்றினேன். இருவரும் ஒருவராகி இன்பமாக வாழுகின்றனர். அவர்களுக்கு வேண்டிய செல்வமும் கொடுத்தேன். இனி எனக்குரியகடமை யென்ன? நானும் அவர் களுடன் சேர்ந்து வாழ்வதா? சட்டத்தின் தண்ட

ளுக்கு மறைந்து திரியும் இந்த ஜன்மக் கைதி, அந்தப் பெரிய மனிதன் வீட்டில் அனைவருடனும் சரிசமமாகி வாழ்வதா? வாழ்வா? வாய்மையா?—எது பெரிது? உலகிற்கு ஒளியலாம். மனச்சாட்சிக்கு எப்படி ஒளிய முடியும்? எனது நெஞ்சை அது கலக்குகிறதே! நெஞ்சிலிருப்பது வெளிவந்து தீர வேண்டும்! என்னை நான் வஞ்சியேன். உலகையும் வஞ்சியேன். ஆராவில் என்னை நான் வெளிப்படுத்தி ஷாம்முத்தையாவைத் தப்புவித்தேன்; இன்று என்னை இன்னுனென்று சொல்லி எனக்கே யான் உண்மையாவேன்.

இவ்வாறு மனச் சாட்சியின் முன் குப்புற விழுந்து, கைகளைப் பரப்பிச் சிந்தித்து மறுநாள் மாரியனைப் பார்க்கச் சென்றான் ஜாம்வல்ஜான். பாஸ்க் ஃபோஷல்வானை வணக்கமுடன் வரவேற்றான்; "யாரோ வொருவர் தங்களைப் பார்க்க வந்திருக்கிறார்" என்று மாரியன் பிரபுவிடம் தெரிவிக்கச் சொன்னான் ஜாம்வல்ஜான். சேவகன் தெரிவித்தான். மாரியன் எழுந்துவந்து பார்த்தான். அவன் முகத்தில் ஒரு புதிய இன்பந் துலங்கியது.

மாரியன்:—ஆ! தந்தையா! வரவேண்டும்; தங்களைப் பார்க்க மிக்க மகிழ்வடைகிறேன். நேற்று விருந்திற்குத் தாங்கள் இல்லையே யென்று வருத்தமாயிருந்தேன். கை தேவலையா? தங்களைப்பற்றி நாங்களிருவரும் வெகு நேரம் புகழ்ந்து பேசினோம். தாங்கள் இனி இங்கே எங்களுடனேயே இருக்க

வேண்டும். தங்களுக்கென எங்கள் பக்கத்தில் ஒரு தனியறை ஏற்பாடு செய்துள்ளோம். அது தோட்டத்தைப் பார்த்த அறை. அதன் ஜன்னலருகேயுள்ள மரத்தில் வசந்தகாலம், குயில் கூடு கட்டி முட்டையிடும். இரவெல்லாம் குயிலோசை கேட்கலாம். பகலெல்லாம் கோஸத்தின் இனிய குரலைக் கேட்கலாம். தங்களுக்குப் படுக்கை யெல்லாம் தயாராயுள்ளன. தங்களுக்கு வேண்டிய நூல்களைக் கோஸத் அடுக்கி வைத்திருக்கிறுள். எனது பாட்டனூர் தமாஷாயிருப்பார். சீட்டாட்டத்திற்கு ஆள் கிடைத்தாற் போதும் அவருக்கு. தாங்கள் அவருடன் சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருக்கலாம். நான் அரண்மனைக்குப் போகும்போது தாங்களும் கோஸத்துடன் வரலாம். ஆயுதக்காரத் தெருவிற்கு இனிப்போகவேண்டாம். இன்றுமுதல் இங்கேயேயிருங்கள். வாருங்கள் சாப்பிட................

ஜாம்வல்:—எல்லாம் சரி. ஆனுல் நான் தங்களுக்கு ஒரு உண்மையைச் சொல்லவேண்டும்.

மாரியன்:—சொல்லுங்கள்.

ஜாம்வல்:—ஐய, நான் ஒரு பழங்கைதி. இதோ பாருங்கள் என் கையில் காயமொன்றுமில்லை. நேற்றுக் கையெழுத்துப் போடுவதினின்று தப்ப அவ்வாறு துணி கட்டிக்கொண்டிருந்தேன்.

மாரியன்:—எனப்படி?

ஜாம்வல்:—ஐயா, போமெர்ஸி பிரபுவே, நான் 19 ஆண்டுகள் திருட்டுக் குற்றத்திற்காகக் கடுஞ்

சிறை காத்தேன். மீண்டும் என்னை ஆயுட் கைதி யாக்கினர். மீண்டும் சிறையினின்று தப்பி இவ்வாறு மறைந்துறைகின்றேன்.

மாரியன்:—தாங்கள் கோஸத்தினுடைய தந்தை யன்றோ?

ஜாம்வல்: — இல்லை, இல்லை; கடவுளுக்குப் பொதுவாகச் சொல்லுகிறேன்; நான் ஃபாவெரோ லில் ஒரு ஏழைக் குடியானவன்; மரம் வெட்டிப் பிழைத்துவந்தேன். என் பெயர் ஜாம்வல்ஜான். கோஸத்திற்கும் எனக்கும் எவ்விதமான உறவுமில்லை.

மாரியன்:—அத்தாட்சியென்ன?

ஜாம்வல்:—நானே, என் மனச்சாட்சியே அத் தாட்சி.

மாரியன்: - தாங்கள் கோஸத்தின் தந்தைதான்.

ஜாம்வல்: —இல்லை, யில்லை. பத்தாண்டுகளுக்கு முன் கோஸத்தை நான் அறியேன்; தாய் தந்தை யற்ற அனாதைக் குழந்தையாக அவளைக் கண்டேன். என் பாசமெல்லாம் வைத்து, அக்குழந்தையை வளர்த்தேன். அவளுக்காகவே நான் இங்கு வாழ்ந் தேன். அவள் திருமதி போமெர்ஸியாகிவிட்டாள். எனது கடமை தீர்ந்தது. அவள் தங்களுடன் சுக மாக வாழட்டும். நான் தங்களுக்குக் கொடுத்த 6 லட்சம் பணங்கள் நான் பாங்கில் போட்டிருந்த தொகை. அதை நான் எப்படிச் சம்பாதித்தே னென்று தெரியவேண்டியதில்லை. அது கோஸத் திற்குச் சேரவேண்டிய பணந்தான்.

மாரியன்:—இதெல்லாம் என்னிடம் எதற்காகச் சொல்லுகிறீர்கள்? தங்களை யாரும் கண்காணிக்க வில்லை. தாங்கள் பேசாமல் இங்கிருங்கள்.

ஜாம்வல்:—இருக்கலாம்; தங்கள் உயர் குலத்தில் நானும் சேர்ந்து, சுகபோகங்களை அனுபவித்துக் கொண்டிருக்கலாம்; தங்கள் சீமாட்டியின் அன்பைப் பெற்றிருக்கலாம். தங்கள் அனைவருடன்கூடி யானும் விருந்துண்ணலாம். எனது உண்மை யுருவை மறைத்துக்கொண்டு யோக்கியன் மாதிரி யிருக்கலாம். ஆனால், 'அடா கைதீ, அடா ஜெயிலைத்தப்பிய ஜென்மக் கைதியே' என்று மனச்சாட்சி உள்ளே சவுக்கடி தருமே! அதைப் பொறுப்பதா? உங்களுடன் ஒன்றாக நான் வசிக்கவேண்டுமானால் எனக்கே யான் பொய்யனாக வேண்டும். ஆ! எனக்கும் குடும்ப வாழ்வா? எனக்கும் மாளிகைச் சுகமா! சுகமா! ஆ, மாரியன் பிரபுவே, நான் அப்படியெல்லாம் சுகப்படப் பிறக்கவில்லை. நான் இடர்ப்பட்டேன். இனியும் இடர்ப்படவே பிறந்துள்ளேன். நான் ஆயுட் கைதி, என்னை எந்த நிமிஷமும் அதிகாரிகள் கண்டுபிடித்துச் சிறையிடலாம். தாங்கள் பெரிய மனிதர்; தங்கள் சீமாட்டியுடன் தாங்கள் துயிலெரி மாளிகைக்குச் செல்வீர்கள். என்னையும் கூட அழைத்துச் செல்வீர்கள். அங்கு யாராயினும் தெரிந்தவர்கள் என்னைக் கண்டு, "அடே கைதி" என்றால் என்ன செய்வது?

மாரியன்:—எப்போதோ செய்த சிறுகுற்றத்தை

யெண்ணி யேங்கவேண்டாம். அப்படியேதாயினும் தங்களுக்கு அபாயம் வருமானல், என் பாட்டனர் அதிகாரிகளிடம் பேசி அதைத் தீர்ப்பார்.

ஜாம்வல்:—அதிகாரிகளுக்கு அச்சமில்லை. நான் துலோன் கடலில் இறந்துபோனதாக விளம்பரம் செய்துவிட்டனர். இறந்தவனைச் சட்டம் என்ன செய்யும்? என்னையறிந்த ஒரு மனிதனும் இறந்து போனன். ஐயனே என் மனச்சாட்சியாகிய சட்டத்திற்கே யான் அஞ்சுகிறேன். எனது உண்மையை ஒளித்துப் பொய் வேடம் புனைந்து, பொய்ப் பெயர் வைத்துக்கொண்டு, தங்கள் உயர் குலத்திற் புகுந் துறைவது பெரிய வஞ்சமல்லவா? உலகை நான் வஞ்சிக்கலாம். என் அந்தராத்மாவை நான் வஞ்சிக்க முடியாது. ஐய, நான் ஒரு ஏழை; மரம் வெட்டிப் பிழைத்தவன்; பசியின் கொடுமையால் ஒரு ரொட்டித் துண்டைத் திருடிப் பத்தொன்பதாண்டுகள் சிறையில் வருந்திய கைதி நான்; மீண்டும் ஒரு திருட்டுக் குற்றத்திற்காக என்னை ஜன்மக் கைதியாக்கினர். சிறையினின்று நான் தப்பிவந்து இந்நகரில் பொய் வேடம் பூண்டு ஃபோஷல்வான் என்ற பெயருடன் வாழுகிறேன். நான் சில காலம் பிக்புஸ் கன்னி மடத்தில் தோட்ட வேலை செய்தேன். அப்போது என்னுடனிருந்த நண்பர் அப்பெயரை எனக்கீந்தார். கோஸத்தை என்னுயிர்போல வளர்த்தேன். தாங்கள் அவளை மணம்புரிந்தீர்கள். அவளுக்காக வைத்த சொத்தைத் தங்களிடம் தந்தேன். என் கடமை

தீர்ந்தது. முன்பு பசிக்காக ரொட்டி திருடினேன். இப்போது நான் பிழைக்க ஒரு பெயரைத் திருட மாட்டேன். என் உண்மைப் பெயர் **ஜாம்வல்ஜான்.**

மாரியன் :—தந்தையே, இதெல்லாம் சொல்லி யென்ன பயன் ? சும்மா இரும் இங்கே.

ஜாம்வல் :—என் மனச்சாட்சி இப்போது இன் புறுகின்றனது. 'சபாஷ், உண்மை பேசினாய்' என்று அது என்னைத் தட்டிக் கொடுக்கிறது. அதுவே பயன். இனி உலகம் என்னை எள்ளி நகைத்து இழித்த போதிலும் பரவாயில்லை. நேற்றுத் திருமதி மாரி யனுக்குரிய கடமையைச் செய்தேன் ; இன்று மனச் சாட்சிக்குரிய கடமையைச் செய்கிறேன்.

இச்சமயம் கோஸத் தூங்கியெழுந்து வந்தாள். அவள் முகத்தில் ஒரு புதிய இன்பம் புன்னகைத் தது. அவள் தனது கணவனுடன் தமாஷாகப் பேசத் தொடங்கினாள்.

கோஸத் :—என்னோடிராமல், இங்கு அரசியல் பேச்சுப் பேசிக்கொண்டிருக்கிறீர்களா ?

மாரியன் :—இல்லை, கோஸத் ; அது லௌகிக விஷயம். பணத்தை எங்குப் போடுவதென்று யோசிக்கிறோம். நீ போ.

கோஸத் :—உம், என்னையா ஏமாற்றுகிறீர்கள் ? அது நடக்காது. என் தந்தை, "மனச்சாட்சி, கடமை" என்று ஏதேதோ பேசினாரே ; நான் கேட்டேனே ; இங்கே யாரும் அரசியல் சம்பந்த மாகப் பேசக்கூடாது ; தெரியுமா ?

மாரி :—இல்லை கோஸத், என்னருமைக் கோஸத்; நாங்கள் தொகை விஷயமாகக் கணக்குப் பார்க்கிறோம். நீ உள்ளே போயிரு.

கோஸத் :—உம், நான் இங்கேதான் உட்காருவேன். அப்பா, எனக்குப் பரிந்து பேசு என் கணவருடன்........

மாரி :—கோஸத், நாங்கள் தனித்துப் பேச வேண்டும்.

கோஸத் :—என்னப்பா சும்மா இருக்கிறாய்? என்னருமை அப்பா, உன் கை யெப்படியிருக்கிறது?

ஜாம்வல் :—கை சொஸ்தமாயிற்று.

கோஸத் :—இரவில் தங்களுக்குத் தூக்கம் பிடிக்க வில்லையோ? தாங்கள் ஏன் விசனமாயிருக்கிறீர்கள்?

ஜாம்வல் :—நான் சரிபாகவே யிருக்கிறேன்.

கோஸத் :—பின்னை, என்னைத் தழுவி முத்தமிடுங்கள்.

ஜாம்வல் :—சரி (கோஸத்தின் நெற்றியில் முத்தமிடுகிறான்).

கோஸத் :—அப்பா, சிரியுங்கள்.

ஜாம்வல்ஜான் சிரித்தான். ஆனால் அச் சிரிப்பில் ஜீவ களை யில்லை.

கோஸத் :—அப்பா, என்னுடனே யிருங்கள். உங்களுக்கு எல்லாம் ஏற்பாடாகச் செய்து வைத்திருக்கிறேன்.

ஜாம்வல்ஜான் பதிற் சொல்லவில்லை.

மாரியன் :—கோஸத், என்னருமைக் கோஸத், நாங்கள் தனித்துப் பேசவேண்டும்; நீ உள்ளே போ.

கோஸத், "என்னுயிரே, என்னருமைக்காதலா" என்று மாரியனைத் தழுவிக் கொண்டாள். பிறகு, "நான் இங்குத்தான் இருப்பேன்" என்று கொஞ்சினாள்.

மாரியன் :—கூடாது.

கோஸத் :—இந்த ஆண்களே முரட்டுப் பிடிவாதக்காரர். உங்களோடே "டு". நான் போகிறேன்.

கோஸத் செல்லச் சினத்துடன் உள்ளே சென்றான்.

ஜாம்வல் :—ஆ! கோஸத்தின் காதில் இவையெல்லாம் விழுந்தால், மோசம். மாரியன் பிரபுவே, கோஸத்திடம் நான் சொன்னவற்றை யெல்லாம் சொல்வதில்லை யென்று தாங்கள் உறுதி கூற வேண்டும்.

ஜாம்வல்ஜான் முகத்தை அப்புறம் திருப்பிக் கொண்டு விம்மி விம்மி யழுதான். "ஆ! நான் இறந்து போகிறேன்" என்று பரிதபித்தான்.

மாரியன் :—தாங்கள் நிம்மதியாயிருங்கள். நான் தாங்கள் சொன்னதை யெல்லாம் இரகசியமாக வைத்துக்கொள்ளுகிறேன். இது வுறுதி.

ஜாம்வல் :—வந்தனம்; இன்றொரு விண்ணப்பம். இந்தப் பத்தாண்டுகளாகக் கோஸத்தை நான்

என் மகள்போலே அருமையாக நேசித்தேன்; என் பாசமெல்லாம் அவளிடம் வைத்தேன்; அவள் என்னுயிரினும் அருமையானவள். அவளை நான் அடிக்கடி வந்து பார்க்கத் தங்கள் உத்திரவு வேண்டும்: சாயங்காலந்தான் எனக்கு வரச் சரிப்படும்.

மாரியன்:—அந்தி தோறும் தாங்கள் வந்து கோஸத்தைப் பார்க்கலாம்; அவள் தங்களை வரவேற்பாள்.

ஜாம்வல்:—வந்தனம், ஐயா, தங்கள் அன்பிற்கு வந்தனம். நான் கோஸத்தைப் பார்த்தாற் போதும்.

பின்னர் ஜாம்வல்ஜான் விடைபெற்றுச் சென்றான். மாரியனும் மரியாதையாக ஜாம்வல் ஜானை வழியனுப்பினான்.

தான் கொஞ்சும் பறவைக் கூண்டில் தேள் புகுந்தது போலிருந்தது மாரியனுக்கு. 'தன்னை நேசிப்போனல்லவான் கைதி ஜாம்வல்ஜானு!' என்று மாரியன் மனந் திகைத்தான். கோஸத்துடன் தான் நுகரும் இன்ப விண்ணில் ஒரு நரகச் சிறை எதிர்ந்ததுபோல வருந்தினான். மாரியன் நீண்ட சிந்தனையில் ஆழ்ந்தான்:—"கோர்போ வீட்டுச் சம்பவத்தில் பொலீஸ்காரர் வருமுன் ஜாம்வல்ஜான் ஓடிப்போன காரணம் இப்போதறிந்தேன். இந்த மனிதன் போர் முனைக்கு வந்ததும் ஒற்றனாகிய ஜாவரைக் கொன்று தன் வன்மந் தீர்த்துக்கொள்ளவே; ஜாவரை ஜாம்வல்ஜான் சுட்டுக் கொன்றான். அந்தக்

குற்றத்திற்காகவே அரசாங்கம் அவனைக் கண்டால் தண்டிக்கும். இந்தக் கைதியின் கையில் கோஸத் எப்படி அகப்பட்டாள்? பேயிடம் சேய் எப்படி வளர்ந்தது? நரியுடன் இந்த ஆட்டுக்குட்டி எப்படி வசித்தது? ஒன்பதாண்டுகள், எனது காதல் தெய்வம் இந்தக் கைதியிடம் வளர்ந்தது வியப்பே. ஆம்; நன்மையும் தீமையும், அபெலும் (Abel) கெய்னும் (Cain) சேர்ந்ததே உலகம். என் மாசிலாமணியை, இத் திருடன் எப்படிப் பிழையறக் காத்தான்? அவளை இவன் பிரியமாகவே வளர்த்திருக்கிறான். தொழிலின் முடிவு சரிதான்; தொழிலாளி பயங்கரமானவன். கோஸத் அப் பழக்கில்லாத நங்கை. அதுவே என் மகிழ்ச்சி. எனக்கு வேண்டியது அவளே. ஜாம்வல்ஜான் ஒரு வழிப்போக்கன்; தான் வழியிற் கண்ட கொடியை வளர்த்து என்னிடம் தந்து விட்டான். கோஸத்தும் தனக்கேற்ற கணவனை யடைந்து மகிழ்ந்தாள். இனி ஜாம்வல்ஜான் எப்படிப் போனலென்ன? வண்ணாத்திப் பூச்சி வெளிவந்தபின் பூச்சிக் கூட்டாற் பயனென்ன? இவன் நமது குடும்பத்துடன் சேராது விலகுவதே நல்லது. ஆனால் தனது குற்றத்தை அவன் வெளிப்படையாகச் சொல்லுகிறான். ஆள் பொய்யனல்லன். இருந்தாலும் இம் மனிதன் என் மூளைக்கு ஒரு புதியனாகவே காண்கிறான். இவன் கொடுத்த 6 லட்சம் பணங்களும் திருட்டுச்சொத்தாயிருக்குமோ என்று சந்தேகிக்கிறேன். உண்மை

தெரியுமட்டும் நான் அதைத் தொடமாட்டேன்” மாரியன் இவ்வாறு நீண்ட சிந்தனையிலாழ்ந்த பின், பணத்தைப்பற்றி ஆராய்ந்தான்; ‘மதேலன் என்ற ஒரு பெரிய புண்ணியவாளன் லஃபித் பாங்கில் ஏராளமான பணம் போட்டிருந்தான். அதைப் பொய்க் கையெழுத்துப் போட்டு ஒருவன் வாங்கிக் கொண்டு போய்விட்டான்’ என்றொரு செய்தி கேள்விப்பட்டான். ‘அப்பணத்தை மோசஞ் செய்தவன் ஜாம்வல்ஜான்: அதையே தனக்கு ஸ்ரீதனமாகக் கொடுத்திருக்கிறான்’ என்று நினைத்தான் மாரியன். அன்றிரவு மாரியன் கோஸத்தைப் பல கேள்விகள் கேட்டான். ஜாம்வல்ஜானது அன்பு, கருணை, தூய வாழ்வு, தியாகம்—இவற்றைக் குறித்துக் கோஸத் மிகவும் புகழ்ந்து பேசினாள். ஒவ்வொரு மாலையும் ஜாம்வல்ஜான் கோஸத்தைப் பார்க்க ஏற்பாடு செய்தான் மாரியன்.

---

104. காயக்கிலேசம்

மறுநாள் மாலை ஜாம்வல்ஜான் கோஸத்தைப்பார்க்க வந்தான். சேவகன் மரியாதையாக அவனை உள்ளே யழைத்துச் சென்றான். காடிகானாவிற் கருகிலுள்ள ஒரு பழைய அறையில் ஜாம்வல்ஜான் நின்றான். அதற்குமேல் உள்ளே செல்ல மறுத்தான்.

அங்கேயே இரண்டு பழைய நாற்காலிகள் போடப் பட்டன. அந்த அறையில் வெளிச்சம் சரியாயில்லை. பழைய சிசாக்கள் மூலையிற் குவிந்து கிடந்தன. சுவர் களுக்கெல்லாம் தாடி முளைத்தாற்போல ஒட்டடை கள் நிரம்பி யிருந்தன. அவற்றில் ஈக்கள் அகப்பட்டுத் தொங்கின. தரை குப்பையும் செத்தையுமாயிருந் தது. சுவர்க்காரை யெல்லாம் உப்பரித்து உதிர்ந் தது. அந்த அறையிலேதான் கோஸத்தைப்பார்க்க விரும்பினான் ஜாம்வல்ஜான்.

பட்டத்தரசிபோலச் சிங்காரித்துக் கொண்டு கோஸத் வந்தாள்.

கோஸத்:—அப்பா, வந்தாயா? நன்றாயிருக் கிறது. உனக்கு நான் அழகான இடம் ஏற்பாடு செய்துவைத்திருக்கிறேன். எங்களுடன் சாப்பிட் டுக்கொண்டு சுகமாயிருப்பதை விட்டு, அந்த ஆயுதக்காரத் தெரு முழையிலே தனியாக அடைந்து கிடப்பதேன்? அப்பா, இதென்ன பிடிவாதம்?

ஜாம்வல்ஜான் கோஸத்தின் முகத்தையே பேசாமற் பார்த்துக்கொண்டிருந்தான்.

கோஸத்:—ஏனப்பா பேசமாட்டேனென்கி றாய்? அப்பா, முதலில் என்னைத் *தழுவி நெற்றியில் முத்தமிடு.

ஜாம்வல்ஜான் பேசாதிருந்தான்.

கோஸத்:—அப்பா, இது என்ன பைத்தியம்?

---

* ஒருவரை யொருவர் தழுவி முத்தமிடல் வெள் ளையர் நாகரிகம்.

இரு நான் ஜில்நார்மன் காத்தா கிட்டச் சொல்லி உன்னை வசத்திற்குக் கொண்டுவரச் செய்கிறேன். அப்பா, என்னருமை அப்பா.

ஜாம்வல்:—அம்மையே, நான் தங்கள் தந்தையில்லை.

கோஸத்:—இதென்னடீ அதிசயம்! அம்மையாம், தாங்களாம்! அப்பா.

ஜாம்வல்:—நான் அப்பா அல்ல: என்னை 'ஜான்' என்றழையுங்கள்.

கோஸத்:—ஏனப்பா இப்படிப் பேரை மாற்றுகிறாய்?

ஜாம்வல்:—நீ போமெர்ஸி சீமாட்டியானாய்; நான் ஜானானேன்.

கோஸத்:—எனக்கொன்றும் விளங்கவில்லை. நான் செய்த குற்றமென்ன? ஏன் என்னுடன் நீ சுகமாயிருக்கக் கூடாது? நான் செய்யும் உபசாரங்களை ஏன் அங்கீகரிக்கவில்லை? நான் கலியாணஞ் செய்துகொண்டு கணவனுடன் சந்தோஷமாக வாழுவது உனக்குப் பிடிக்கவில்லையா?

ஜாம்:—நீ சந்தோஷமாயிரு கோஸத். உன் இன்பத்திற்காகத்தானே நான் உயிர் வைத்திருந்தேன். நீ இன்புறக் கண்டேன். இனி என்ன?

கோஸத்:—அப்பா, இப்போதாயினும் என்னை "நீ" என்றழைத்தாயே, அப்பா.

ஜாம்:—அம்மையே, சந்தோஷம், சுகமாயிருங்கள். நான் சென்று நாளை மாலை வருகிறேன்.

இனித் தங்களை ஏக வசனத்திற் பேசமாட்டேன். தங்கள் கணவனிடம் இதைத் தெரிவிக்கவும்.

அத்துடன் ஜாம்வல்ஜான் சென்றான். இதெல்லாம் கேட்ட ஜில்நார்மன் "சுத்தப் பைத்தியம், விபரீதம்; த்ரான்ஷல்வானுக்குச் சுகமாயிருக்கக் கொடுத்துவைக்கவில்லை" என்றார். மாரியன் ஜாம்வல்ஜானை ஒரு மனிதனாகவே மதிக்கவில்லை. அவன் வரும் வேளையில் தான் வெளியே சென்றான். "ஜாம்வல்ஜானை இனித் தந்தை யென்று கூப்பிட வேண்டாம்; ஒட்டுறவாக அவனுடன் பேசவேண்டாம்" என்று மாரியன் தனது மனைவிக்குக் கட்டளையிட்டான்.

மறுநாள் அந்தி நேரம் ஜாம்வல்ஜான் வந்தான். கோஸத் நேற்றைப்போலப் பிரியமாகப் பேசவில்லை. ஜாம்வல்ஜான் தன்னை அம்மையே, சீமாட்டியே என்றழைப்பதைத் தடுக்கவில்லை. நாளடைவில் நீங்கள் தாங்கள் என்றழைப்பதே வழக்கமாயிற்று. முடிவில் கோஸத் "ஜான்" என்றும் அழைக்கத் தொடங்கினாள். "அதுதான் சரி" என்றான் ஜாம்வல்ஜான். ஆனால் ஜாம்வல்ஜானுக்குக் கோஸத்திடம் பாஸம் நாளுக்குநாள் அதிகரித்தது. இவளைக் காணும்போதே அவன் உயிர்த்தான். அவன் உணவு கொள்வதில்லை; ஸல்லேஹன மிருந்தான். கோஸத்தைக் காண்பதே அவன் விருந்தாயிருந்தது. இவன் மனப் புண்ணிற்கெல்லாம் கோஸத்தின் காட்சி மருந்தாயிருந்தது. ஆனால் கோஸத்தின் மனம் மாரியனி

டம் ஏற்பட்டு நாளுக்குநாள் ஜாம்வல்ஜானிடமிருந்த அபிமானம் குறைந்து வந்தது. சில நாட்கள் மாலை கோஸெத் மாரியனுடன் புளூமது தெரு வீட்டிலுள்ள தோட்டத்தைக் காணச் செல்வாள். ஜாம்வல்ஜான் வழக்கம்போல வந்து காத்திருந்து, ஏமாந்து செல்வான். தான் ஸ்ரீதனமாகத் தந்த ஆறுலட்சம் பிராங்க்கை மாரியன் சந்தேகத்துடன் கட்டிவைத்திருப்பதாக அறிந்து வருந்தினான் ஜாம்வல். வரவைத் தன்னை மாரியன் அலட்சியம் செய்வதாக ஜாம்வல்ஜான் உணர்ந்தான். ஒருநாள் வழக்கம்போல அந்த அறையில் ஏற்றும் கணப்பில்லை. இன்னொரு நாள் உட்கார ஒரு நாற்காலியுமில்லை. நின்றுகொண்டே கோஸெத்தைப் பார்த்துத் திரும்பினான் ஜாம்வல்ஜான். தன் வரவை இவர்கள் விரும்பவில்லையென்றறிந்து அன்றுடன் தன் வீட்டிலேயே யிருந்தான் ஜாம்வல்ஜான். கோஸெத் ஆளனுப்பி, ஜாம்வல்ஜான் வராத காரணத்தைக் கேட்கச் சொன்னாள். ஜாம்வல்ஜான் வெளியூருக்குச் சென்றிருப்பதாகவும் தினம் பதில் கிடைத்தது.

* * * *

ஒரு முதிர்ந்த கிழவன் ஒவ்வொருநாள் அந்தி வேளையிலும் பட்டினியால் மெலிந்த உடலுடன் கல்வரித் தெரு முனைமட்டும் செல்வான். அங்கு அவன் முகத்தில் ஒரு குறுநகை தோன்றும். கண்ணீர் பெருகும். உடனே ‘ ஊஹூம் ’ என்று தலையை ஆட்டிவிட்டு அவன் வீடு திரும்புவான். மறுநாள் இக்கிழவன் சிறிது தூரம் நடந்து சென்று, அவ்வாறே

வீட்டிற்கு வருவான்; மறுநாள் நூறடி சென்று திரும்புவான்; மறுநாள் 50 அடி; இன்னொரு நாள் 25 அடி; இன்னொருநாள் தெருவை எட்டிப்பார்த்து விட்டு, "ஹூம்! போ யென்ன பயன்! ஹா கோஸத்!" என்று வீட்டிற்குட் சென்றான். அவனே ஜாம்வல்ஜான். அவன் உயிர் கோஸத்தின் பாசத்தால் ஊசலாடியது. சாவிகொடுக்காத போதாட்டி (clock) யின் தொங்கி (pendulum) மாதிரி அவன் கால்கள் அபிமானத்தால் முன்னே சென்று சென்று மீண்டு, முடிவில் வீட்டுடன் நின்றது. அவன் வாழ்வுக் கடிகாரமும் இதோ நிற்கப்போகிறது. வீட்டு வேலைக்காரக் கிழவி சமைத்துப் போடுவாள். ஜாம்வல்ஜான் ஒரு பருக்கை தொடமாட்டான். "என்ன அநியாயம்! இப்படிப் பட்டினி கிடக்கிறீர்களே!", என்று வேலைக்காரி விசனித்து முறையிடுவாள். "இந்தப் பானையிலுள்ள தண்ணீர் போதும்" என்று ஒரு வாய் நீர் குடித்து ஜான் சும்மாவிருப்பான். ஒரு நாள் ஜாம்வல்ஜான் வாசற்கதவைத் திறந்தான். குரோஷன் முன்னே மாரியனிடமிருந்து கடிதம் கொண்டுவந்து கொடுத்த அதேயிடத்தில் சிறிது நின்றான்; மேலே செல்ல முடியாது வீட்டிற்குள் வந்தான்; தனது படுக்கைக் கெதிரே சிலுவையை மாட்டினான்; சாது உத்தமர் கொடுத்த வெள்ளி விளக்கில் மெழுகு திரியைச் சொருகி ஏற்றினான்; கோஸத்திற்கு முதலில் தான் கொடுத்த கறுப்புடையைப் படுக்கையில் விரித்தான். அதன்மேற் படுத்

தான்; "ஆ! இதோ என்னுயிர் போகப்போகிறது. இன்றாயினும் என்னருமைக் கோஸத்தை ஒருமுறை பார்ப்பேனோ! ஆ கோஸத்! உன் முகத்தைப் பார்த்தால் ஆறுதலுடன் சாவேன்" என்று தன்னுட் புலம்பினான். பிறகு பேனா பிடித்து, மை தோய்த்து, ஒரு காயிதத்தில் இவ்வாறு எழுதினான்:—

"என்னருமைக் கோஸத், உன் கணவன் மிகவும் நல்லவன். அவனை எப்போதும் நேசி. என்னை அவன் ஒதுக்கியதற்குக் காரணம் உள்ளது. ஆனால் ஒரு சந்தேகத்தை மட்டும் நிவர்த்தி செய்யவே இதை யெழுதுகிறேன். என்னருமைக் கோஸத், நான் உனக்கு ஸ்ரீதனமாகத் தந்த 6 லட்சம் பிராங்க்கும் என்னால் யோக்கியமான தொழில் செய்து சம்பாதிக்கப் பெற்றது: நான் கண்ணாடித் தொழிலைப் புதிய வழியிற் செய்து........" அவ்வளவுதான்! பேனாவைக் கீழே போட்டான்: படுக்கையோடு படுக்கையாகச் சாய்ந்தான். பிறகு எழுந்திருக்க முடியவில்லை: சிலுவையையும், சாது உத்தமரின் விளக்குகளையும் பார்த்துக்கொண்டே யிருந்தான். வேலைக்காரி குடுகுடுவென்றோடி ஒரு வைத்தியனை யழைத்துவந்தாள். வைத்தியன் பார்த்துவிட்டு மீண்டும் வருவதாகச் சென்றான். "கோஸத், கோஸத், இனியுன்னைக் காணேன்—ஆ, கோஸத்" என்று புலம்பினான் ஜாம்வல்ஜான். இச்சமயம் கதவை யாரோ தடதடவென்று தட்டினர். அது யார் என்றறியுமுன்னே, மற்றொரு சம்பவத்தை இங்கே குறிப்பாம்.

105. ஆ! ரக்ஷகா!

இன்று மாலை உணவு கொண்டதும், மாரியன் தன் அறைக்குச் சென்றான். அப்போது சேவகன் ஒரு கடிதங் கொண்டுவந்து தந்தான். கடிதம் கண்டபடி மடித்து அழுக்காயிருந்தது. புகையிலை நாற்றமடித்தது. அதை விரித்துப் பார்த்தான் மாரியன். அதில் எழுதியிருந்ததாவது :—

"மஹாப்பிரபுவே, எனக்குமட்டும் கடவுள் கிருபையிருந்தால் நானும் சர்வகளாஷாலையில் இடம் பெற்று ஒரு பிரபுவாகவும் புளவனாகவும் விலங்குவேன். நான் காலஞ்சென்ற தேன்னார் பிரபுவின் நண்பன். என் பெயரும் தென்னார். தங்கல் வீட்டிற் புகுந்து வஷிக்கும் ஒரு ஆலைக் குறித்து ரகஷியங்கல் எனக்குத் தெரியும். தங்கல் மேன்மை தங்கிய குடும்பத்தினின்றும் அந்த ஆலை விரட்டியடிக்க ஒரு நல்ல வலி சொல்லுகிறேன். தங்கல் புண்ணிய மாலிகையின் பெயர் இத்தகைய குற்றவாலியால் கெட்டுப்போகாது காக்கவேண்டும். தங்கலை உடனே பேட்டிகாணக் காத்திருக்கிறேன். தங்கள்

தேன்னார்"

தென்னார், தென்னாடியனே என்று அறிந்து அவனை உள்ளே வரவிட்டான் மாரியன். ஆசாமி உள்ளே வந்து தொப்பியை யெடுத்து வணங்கி நின்றான். பார்த்தான் மாரியன். ஆள் முற்றிலும் வேறு. அவன் சரியான ஆங்கிலக் கனவான் மாதிரி

உடையணிந்திருந்தான். உயர்ந்த கறுப்புச் சட்டை, மூக்குக் கண்ணுடி, அழகான கழுத்துப்பட்டை, சட்டைப் பையில் கடிகாரம்—எல்லாம் சரிதான். ஆனல் இந்த அணிகள் அவனுக்குக் கொஞ்சம் மிகையாயிருந்தன. அவை அவனுக்காகத் தைக்கப்பட்டன வல்ல.

[உண்மையென்ன? பாரிஸில் உடுப்பு மாற்றும் வியாபாரி ஒருவனிருந்தான். அவனிடம் பல வகை உடைகள் இருந்தன. சீமான், சீமாட்டி, அரசன், ஆண்டி, மந்திரி, வக்கில், டாக்டர், பள்ளிக்கூட உபாத்தியாயர், பாடகன், நடனமாடுவோன், பிச்சைக்காரன் முதலிய எந்த வேஷம் வேண்டுமானலும் அங்கே போட்டுக்கொண்டு வரலாம். பல திருடர்களுக்கு இந்த உடுப்பு மாற்றும் கடை சௌகரியமாயிருந்தது. ஒரு திருடன் கடைக்குட் சென்று, ஒரு பெரிய கனவான் மாதிரிச் சட்டைகளை மாட்டிக்கொண்டு வந்து ஊரை ஏமாற்றுவான். சட்டைக்கு வாடகை நாள் ஒன்றிற்கு அரை ரூபாய். அவ்வாறு சட்டை மாற்றிக்கொண்டு வந்தவனே தென்னர்.]

மாரியன்:—தங்களுக்கு என்ன வேண்டும்?

தென்னர்:—எனக்குப் பல பிரபுக்கள் நண்பர். தங்களை இளவரசி பகீரதி வீட்டிலோ அல்லது காம்ப்ரே பிரபு வீட்டிலோ பார்த்த நினைப்பு.

மாரியன்:—இவர்கள் பெயரையே நான் கேட்டதில்லை.

தேன்ஞர்:—புலவர் ஷாதோபிரியன் (chateau briand) எனது நண்பர். ஆம், அவர் வீட்டில் தான் தங்களைப் பார்த்திருக்கிறேன்.

மாரியன்:—நான் ஷாதோபிரியன் வீட்டிற்கே சென்றதில்லை. சரி, சுருக்கமாகத் தங்களுக்கு என்ன வேண்டுமென்று சொல்லுங்கள்.

தேன்ஞர்:— மஹாப்பிரபுவே, கேளுங்கள்: அமெரிக்காவில், பனமாவிற் கருகே, "ஜோயா" என்றொரு கிராமம் உள்ளது. அதில் ஒரே வீடு தான் உள்ளது. அந்த வீட்டிற்கு மூன்று மாடிகள்; மச்சுப்படிகள், ஜன்னல், கதவு, விட்டங்கள் எல்லாம் ஒழுங்காயிருக்கின்றன; பொழுது விழுந்தால் கதவை யடைத்து விடவேண்டும். ஏனென்று கேட்பீர்களா? அது அபாயமான இடம்............

மாரியன்:—இந்தக் கதையெல்லாம் எதற்கு? வந்த காரியமென்ன?

தேன்ஞர்:—இதோ சொல்லுகிறேன். நான் ஒரு பெரிய ராஜதந்திரி. நான் நீண்ட வுழைப்பாற் களைத்துப் போனேன். நான், என் மனைவி, எமது பெண்—மூவரும் ஜோயாவிற் குடியேறப்போகிறோம். அந்த நீண்ட பிரயாணத்திற்காகக் கொஞ்சம் பணம் வேண்டும்.

மாரியன்:—பிறகு?

தேன்ஞர்:—ஐயா, நான் ஒரு இரகசியம் சொல்லுகிறேன். அது தாங்கள் அவசியம் அறிய வேண்டியதொன்று.

மாரியன்:—சொல்லும்.

தேன்ஞர்:—தங்கள் வீட்டில் ஒரு திருடன் புகுந்துள்ளான்.

மாரியன் :—என் வீட்டிலா? இல்லையே.

தேன்ஞர்:—பிரபுவே, தங்களுக்குத் தெரியாது. அவன் திருடன் மட்டுமல்ல, கொலையாளியுங் கூட. நான் கண்ணால் பார்த்ததைச் சொல்லுகிறேன். தங்களுக்கு இனமாக அவன் பெயரைச் சொல்லுகிறேன். அவன் பெயர் ஜாம்வல்ஜான்.

மாரியன்:—தெரியும்.

தேன்ஞர்:—அவன் ஒரு ஜன்மக் கைதி.

மாரியன்:—தெரியும்.

தேன்ஞர்:—நான் சொன்ன பிறகுதானே தெரியும்.

மாரியன்:—அதற்கு முன்பே தெரியும்.

தேன்ஞர்:—இனி நான் சொல்லப்போவது பெரிய ரகசியம். அது எனக்கே தெரியும். கொடுங்கள் 20,000 பிராங்க்; சொல்லுகிறேன்.

மாரியன்:—அந்தப் பெரிய ரகசியமும் எனக்குத் தெரியும்.

தேன்ஞர் :—பதினயிரம் பிராங்க்காவது தாருங்கள் சொல்லிவிடுகிறேன்; அரிய ரகசியம்.

மாரியன்:—தங்களிடம் ஒரு ரகசியமும் கேட்க வேண்டியதில்லை. அது எனக்குத் தெரியும்.

தேன்ஞர்: —பிரபுவே, அது பரம ரகசியம். உமக்காகச் சொல்லுகிறேன். இருபது பிராங்க்காவது தாருங்கள்.

மாரியன்:—(ஆளைக் குறிப்பாகப் பார்த்தறிந்து) தங்கள் இரகசியமும் எனக்குத் தெரியும். தங்கள் பெயரைச் சொல்லட்டுமா?

தேன்ஞர்:—இதென்ன பிரமாதம், என் கடிதத்திலேயே அது இருக்கிறதே.

மாரியன்:—ஏன் இந்த வேடம்? தாங்கள் மோம்ஃபெர்மேலில் சாராயக்கடை வைத்திருந்த தேன்ஞடியரல்லவா?

தேன்ஞ:—ஒருகாலுமில்லை.

மாரியன்:—பொய், பொய்.

தேன்ஞ:—அதிருக்கட்டும் இன்றைக் காலட்சேபத்திற்கு ஐந்து பிராங்க்காவது கொடுங்கள். இரகசியத்தைச் சொல்லுகிறேன்.

மாரி:—தேன்ஞடியரே, தங்கள் பெயரைச் சொன்னேன். இனித் தாங்கள் விலைகூறும் இரகசியத்தையும் சொல்லுகிறேன்: ஜாம்வல்ஜானைத் திருடன், கொலையாளி என்றீர்கள். அதன் காரணம் எனக்குத் தெரியும். 1822-ம் ஆண்டு மதேலன் என்ற பெரிய புண்ணியச் செல்வன் இருந்தான். அவன் கலே (Calais) யின் பக்கத்தில் கருப்புக் கண்ணுடிச் சாமான்களும், அரக்கும், தாரும் செய்யும் பெரிய தொழிற்சாலையை நிலைநாட்டினன். அவனால் ஒரு பெரிய பட்டணம் இன்பமாக வாழ்ந்தது. தனது பெருஞ் செல்வத்தைக் கொண்டு அவன் ஆயிரக்கணக்கான ஏழைகளைக் காப்பாற்றினன்; பள்ளிக்கூடங்களும் மருத்துவ சாலைகளும்

சிறவினான். எளியவர்களுக்குத் தந்தை போல விளங்கினான். அவனைத் 'தந்தை மதேலன்' என்று அனைவரும் அழைத்தனர். அதிகாரிகள் அவனை நகராதிபதி யாக்கினர். அவன் பாரிஸில் லஃபித் பாங்கில் சுமார் 6 லட்சம் பணம் போட்டிருந்தான். ஏதோ பழி சுமத்தி ஒரு பாதகன் அப்புண்ணியவானைச் சிறை காக்கச் செய்தானாம். அதுதான் சமயமென்று ஜாம்வல்ஜான் பொய்வேடம்போட்டுப் பொய்க்கையெழுத்திட்டு மதேலன் லஃபித் பாங்கில் போட்டிருந்த 6-லட்சம் பணத்தையும் வாங்கிக் கொண்டு மறைந்தானாம். இவ்வாறு மதேலனைத் திவாலாக்கியது ஜாம்வல்ஜானே. ஆதலால் அவன் திருடன். அவன் புரட்சியில் ஜாவர் என்னும் பொலீஸ் அதிகாரியைச் சுட்டுக்கொன்றதால் கொலைகாரன்—இவைதானே நாங்கள் சொல்ல வந்த இரகசியம்.

தென்னா :—இரண்டும் சுத்தப் பொய்.

மாரியன் :—எப்படி ?

தென்னா :—ஜாம்வல்ஜானே தந்தை மதேலன். மாந்த்ரேயில் கண்ணாடித் தொழில் நடத்தியது ஜாம்வல் ஜானே. அதற்கு அத்தாட்சி இதோ பாருங்கள்.

மதேலன் தூலோன் சிறையில் அடைபட்டதும் வெளிவந்த சர்க்கார் விளம்பரத்தைக் காட்டினான் தென்னாடியன். அதை முன்பே வெளியிட்டுள்ளோம். அதைப் படித்ததும் 'இத்தகைய புண்ணியவானா ஜாம்வல்ஜான்' என்று மாரியன் வியந்தான்.

தேன்ஞ:—ஜாவரைக் கொன்றது ஜாவரே. அவன் ஆற்றில் குதித்துத் தற்கொலை புரிந்து கொண்டான்.

மாரியன்:—அவனைச் சுட்ட துப்பாக்கிச் சத்தம் நான் கேட்டேனே.

தேன்ஞ:—ஜாவர் தற்கொலைக்கு அத்தாட்சி இதோ பாருங்கள். மோனிதர் பத்திரிகையில் அதைப்பற்றிச் செய்தி வந்தது. பாருங்கள் அச் செய்தியை :—

மாரியன், 15-6-1932, மோனிதரில் அடியிற் கண்ட செய்தியைப் படித்தான் :—

"ஜாவரின் தற்கொலை"

"ஜாவர் பொலீஸ் இன்ஸ்பெக்டர்; தனது தொழிலை நேர்மையாகச் செய்பவன். சாவேரித் தெருவில் நடந்த புரட்சியில் அவன் புரட்சிக்காரரிடம் சிறையுண்டு மரண தண்டனை யடைந்தான். ஒரு கருணையுள்ள புரட்சிக்காரன் அவனைச் சுடுவதாக அழைத்துச் சென்று, கட்டவிழ்த்து விடுதலை செய்தான். அந்தக் கருணையுள்ள கனவான் ஆகாசத்தைப் பார்த்துச் சுட்டுவிட்டுச் சென்றான். ஜாவர், தான் மனக் கலக்கத்தால் தற்கொலை புரிந்து கொள்வதாக எழுதி வைத்து விட்டு, நேற்றிரவு ஸேன் நதியில் விழுந்திறந்தான். அவனுடைய பிரேதம் ஒரு படகிற் கடியிலிருந்து கிடைத்தது"

மாரியன் :—ஆ! ஜாம்வல்ஜான் கருணை வடிவு. அவனே உண்மை வீரன்; முனிவன்.

தென்ஞு :—இல்லை, இல்லை, அவன் திருடன்; கொலைகாரன்.

மாரியன் :—அவன் 40 ஆண்டுகளுக்கு முன்னே ஒரு ரொட்டி எடுத்ததைச் சொல்லுகிருயோ ?

தென்ஞு :-இல்லை. நானே நேராகப் பார்த்தேன். இந்த இரகசியத்தைச் சொல்லத் தாங்கள் எனது ஜோயா யாத்திரைக்காவது பணம் தரவேண்டும்.

மாரியன் :—இப்படி யுட்கார்ந்து சொல்லும்.

தென்ஞு :—ஒருவர் அரசியற் குற்றத்திற்காகப் பொலீஸுக்குப் பயந்து சாக்கடையில் ஒளிந்திருந்தார். அவர்தான் இப்போது பேசுபவர். 6-6-1832-ல் ஒரு ஆள் ஒரு பணக்கார வாலிபனைக் கொன்று, தன் முதுகிற் சுமந்துகொண்டு, சாக்கடை வழியாகக் கஷ்டப்பட்டு வந்து கொண்டிருந்தான். அவனே ஜாம்வல்ஜான். அவன் கொன்ற வாலிபன் முகம், உடலெல்லாம் இரத்தம் ஒழுகியது. நான் பையைத் தடவிப் பார்த்ததில் விசேஷமாகப் பணமில்லை பணத்தைக் கொள்ளையடித்து, எங்கோ புதைத்து விட்டுப் பிணத்தை மட்டும் ஆற்றில் ஆழ்த்தத் தூக்கி வந்தான் ஜாம்வல்ஜான். நானே அவனுக்கிரங்கிச் சாக்கடைக் கதவைத் திறந்துவிட்டு வெளியேற்றினேன். அந்தவாலிபன் சட்டையில் ஒரு துண்டு கத்தரித்து வைத்திருந்தேன். அதை இதோ பாரும்.

மாரியன் ஆவலாக அந்தத் துணித்துண்டை வாங்கினன். தான் இரத்தமொழுக வீட்டிற்குக் கொண்டுவரப் பட்டபோது போட்டுக்கொண்டிருந்த

சட்டையில் ஒரு மூலை கத்தரித்திருந்தது. துண்டு அத்துடன் பொருந்தி யிருந்தது. சந்தேகம் தெளிந்தது.

மாரி:—ஆ! எனது ரக்ஷகன் ஜாம்வல்ஜான்! புண்ணியன், முனிவன், பரோபகாரி, தியாகி—ஜாம்வல்ஜான்! என்னுயிரைக் கொடுத்தவன் ஜாம்வல்ஜான்—உடனே அவனைச் சென்று பார்க்கிறேன். தென்னடிய அயோக்கியனே, இந்தா 1500 பிராங்க். வாதர்லூவில் எனது தந்தையைக் காத்தாயல்லவா? அதற்காக இது. ஓடிப்போ, உன் மகள் அசலம்மாவுடன். உடனே அமெரிக்காவிற்குக் கப்பலேறு. நீ பாரிஸில் இன்னும் போக்கிரித்தனம் செய்து திரிவாயானால், பொலீஸார் கையில் அகப்படுவாய். உனக்குத் தூக்குத் தண்டனை விதித்திருக்கிறார்கள். கவனம். உன் மனைவி சிறையில் இறந்து போனதறிவாய். மகளைக் கூட்டிக்கொண்டு ஓடு அமெரிக்காவிற்கு ....

தென்னடியன் பணத்தை வாங்கிக்கொண்டு வந்த காரியம் ஆனதென்று சென்றான்.

சேவகனை வண்டி கொண்டுவரச் சொல்லி மாரியன் உடனே கோஸத்துடன் ஜாம்வல்ஜானைப் பார்க்கச் சென்றான்.

“ஆ! கோஸத், என்னுயிரைத் தந்ததும், உன்னை எனக்குத் தந்ததும், நமது இன்பவாழ்விற்குக் காரணமாயிருந்ததும் அந்தப் புண்ணியாத்மா தான். அவரைச் சென்று வணங்குவோம். “ஆ! ரக்ஷகா!” என்று மாரியன் ஆவேசமாகப் பேசினான்.

மாரியனும் கோஸத்தும் கதவைத் தட்டினர். "திறந்துகொண்டு வாருங்கள்" என்றொரு ஈனக்குரல் கேட்டது. இருவரும் உள்ளே வந்தனர். ஜாம்வல்ஜான் திகைத்து மகிழ்ந்து பொங்கினான். வார்த்தை தழு தழுத்தது.

ஜாம்வல்:—ஆ! கோஸத், கோஸத், என் அருமைக் கோஸத்! உன்னைக் காண்பேனோ என்றிருந்தேன். வந்தாயா! என் குழந்தாய், என்னை மன்னித்தாயா? வாருங்கள். மாரியன் போமெர்லி, என்னை மன்னித்தீரா?

கோஸத்: மாரியன்:—தந்தையே, தந்தையே, வணக்கம். வணக்கம். தாங்கள் நோயாயிருப்பதாக ஏன் தகவல் தரவில்லை........?

கோஸத்:—என்னருமைத் தந்தையே, என்னை அருமையாக, உயிர்போலப் பேணி வளர்த்த தந்தையே, என் மேல் தங்களுக்கென்ன கோபம்? தங்களுக்காக ஒரு அழகான அறையை ஒழித்து எல்லாம் ஏற்பாடாக வைத்திருக்கிறேன். தாங்கள் வழக்கப்படி அந்திநேரங்கூட அங்கு வருவதில்லையே. வேலையாளை யனுப்பி விசாரித்தால் வெளியூருக்குப் போயிருப்பதாகவே தினம் தகவல் கிடைத்தது. வெளியூருக்குப் போய் எப்போது வந்தீர்கள்? ஏன் உடம்பு இளைத்திருக்கிறது? அப்பா, அப்பா, உடம்பு வெளுத்துப் போனதே! சாப்பிட்டீர்களோ இல்லையோ?

உஹறாம், உடனே நீங்கள் புறப்பட்டு எங்களுடன் வந்திருக்க வேண்டும். வண்டி கொண்டு வந்திருக்கிறோம். வாரும், தங்கள் அறைக்குப் பக்கத்தில் தோட்டம் உளது. அதில் குயில் கூடுகட்டி யிருக்கிறது. அழகான மலர்கள் பூத்திருக்கின்றன. அந்த மலர்களைக் கொஞ்சி வரும் தென்றல் தங்களுக்கு இன்பமளிக்கும். அப்பா, நடக்க முடியாவிட்டால் நாங்கள் தங்களைத் தூக்கிக்கொண்டு வண்டியிலேற்றிச் செல்லுகிறோம். இன்று முதல் தாங்கள் எங்களுடனே தான் இருக்கவேண்டும்.

ஜாம்வல்:—என்னருமைக் கோஸத், நான் இங்கும் இருக்கமாட்டேன். அங்கும் இருக்கமாட்டேன். என்னுவி இறைவன் மலரடியை நோக்குகிறது. உங்களிருவரையும் பார்க்கவே நான் ஆவலானேன். இறைவனருளால் எனது விருப்பம் நிறைவேறியது. மாரியன், என்னை மன்னிப்பீரா? கோஸத்தை ஏகவசனத்திற் பேச அனுமதிப்பீராக! மாரியன், தங்களையும் நான் மிகவும் நேசிக்கிறேன்.

மாரியன்:—ஹா! தந்தையே, தந்தையே, என் உயிரைக் கொடுத்த தந்தையே, என் உயிரினும் அருமையானகோஸத்தை எனக்குக்கொடுத்த தந்தையே, தங்களிடம் இச்சிறுவன் தாள் பணிந்து மன்னிப்புக் கேட்கிறேன். தாங்கள் புண்ணிய புருஷர்; பரோபகாரி; தியாகி; வீரர். தங்கள் துயருக் கெல்லாம் காரணமாயிருந்த பகைவன் ஜாவரைச் சுடத் தங்களுக்கு அதிகாரமும், சந்தர்ப்பமும், பலமும் இருந்

தும், மன்னித்து விட்டீரே! ஏசுநாதர் பகைவரை மன்னித்தது போலவே, தாங்களும் ஜாவரை மன்னித்தீர்கள். போர்க்களத்தினின்று நான் குரோஷின் மூலம் கோஸத்திற்குக் கடிதம் அனுப்பினேன். அக்கடிதத்தைக் கோஸத் பார்க்கும்போது நான் இறந்து போயிருப்பேன் என்றெழுதியிருந்தேன். அக்கடிதம் பார்த்திருந்தால் என்னருமைக் கோஸத்தும் உயிர் நீத்திருப்பாள். தெய்வாதீனமாக அக்கடிதம் தங்கள் கையிற் கிடைத்தது. உடனே என்னைக் காப்பாற்றவே தாங்கள் சாவேரித் தெருமுற்றுகைக்கு வந்தீர்கள். அங்குத் தாங்கள் யாரையும் சுடவில்லை; காயம் பட்டவர்களைச் சுமந்து வந்து உதவினீர்கள். என்மேலேயே கண்ணாயிருந்தீர்கள். நான் காரையெலும்பில் குண்டுபட்டுக் கீழே விழுந்ததும், ஒரு வலிய கரம் என்னைப்பற்றித் தூக்கியதாக உணர்ந்தேன். அப்போது நான் பகைவர் கையிற் பட்டதாகவே நினைத்தேன்: பகைவர் என்னைச் சுட்டுக் கொல்லப்போகிறார்கள் என்றே எண்ணினேன். என் ரக்ஷகரே, என் அப்பரே, தாங்கள் என்னைச் சுமந்துகொண்டு, போர்க்களத்தில் குவிந்து கிடக்கும் பிணமலையைத் தாண்டி, புரட்சிக்காரரைத் தேடிச் சுட்டுக் கொல்லும் அரசாங்கப் படைகளையும் எப்படியோ ஏமாற்றி, யாரும் நுழைய முடியாத பாரிஸ் சாக்கடைக்குள் நுழைந்தீர்கள். இருளும், சேறும், நாற்றமும், விஷப்பூச்சியும் நிறைந்த அந்த அபாயமான நரகத்தூடும் என்னைச் சுமந்துகொண்டு

வெளியேறி, வீடு சேர்த்தீர். அவ்வாறு தாங்கள் என்னைக் காப்பாற்றி யிராவிட்டால், பகைவர் என்னைச் சுட்டுக்கொன்றிருப்பர். என் ரக்ஷகரே, இந்தத் தியாகம் செய்து எனக்கு உயிர்ப்பிச்சை தந்த தங்களைக் கண் கண்ட தெய்வமென வணங்கு கிறேன். என் தெய்வமே, இவ்வளவு தியாகம் செய் தும் நான் இவ்வாறு செய்தேன் என்று ஒரு வார்த்தை கூடப் பேசவில்லையே! தங்கள் அடக்கப் பணிவும், உண்மையும், வீரமும், தியாகமும் என் உள்ளத்தைக் கரைக்கின்றனவே! தந்தையே, என்னு யிரைக் காத்தீர்; அதனால் என்னுயிருக் குயிரான கோஸத்தின் உயிரையும் காத்தீர். நாங்கள் இரு வரும் இன்புறவே தங்களைப் பலிதான மாக்கினீர்; தாங்கள் சம்பாதித்த 6 லட்சம் பணத்தையும் எங்களுக்கே தந்தீர்; தாங்கள் வறுமையணிந்தீர்; நாங்கள் செய்ய விரும்பும் அன்புப் பணியைக்கூட ஏற்க மறுக்கிறீர்; தங்களைப்போல யார் இருக்க முடியும்? தங்களைப்போலச் சுய நலமற்ற தியாகி உலகில் அரிது! இப்போதே எங்களுடன் வரவேண் டும் தாங்கள். இனித் தங்கள் பணிவிடையால் நான் புண்ணியம் பெறுவேன்.

ஜாம்வல்:—மாரியன், தாங்கள் என்னை மன் னித்ததைப்பற்றி மகிழ்கிறேன். நான் போர்க்களத் திலிருந்து தங்களைத் தங்கள் வீட்டிற்குக் கொண்டு வந்த செய்தியைச் சொல்லியிருந்தால், என்மேல் அன்பு மேலிட்டுத் தங்களுடன் இருக்க வற்புறுத்து

விர்கள். அதனாலே நான் சொல்லவில்லை. மாரியன், நான் கொடுத்த சிறு பணம் நான் யோக்கியமாகச் சம்பாதித்தது. இதோ உங்களுக்காக அதைப் பற்றி ஒரு சீட்டுக் எழுதி வைத்தேன். மேற்கொண்டு எழுத முடியவில்லை. கேளுங்கள்: "இங்கிலாந்திலிருந்து கருங்கண்ணாடி வருகிறது. நார்வேயிலிருந்து வெண்கண்ணாடி வருகிறது. நான் அவற்றுடன் அரக்கைக் கலந்து புதிய கண்ணாடி செய்யும் விதம் கண்டுபிடித்தேன். அதைக்கொண்டு பல கண்ணாடிச் சாமான்கள் செய்து ஏராளமாகச் சம்பாதித்தேன். அதில் சேர்த்துவைத்த பணத்தை நான் லப்பித் பாங்கில் போட்டுவைத்தேன். அப்பணந்தான் உங்களுக்கு நான் அன்பளிப்பாகத் தந்த 6 லட்சம். மாரியன், அதைத் தாங்கள் கோஸத்துடன் அனுபவியுங்கள். நன்றாகச் சாப்பிடுங்கள்; நல்ல ஆடை யணியுங்கள்; எளியவர்களுக்கு நிரம்பக்கொடுங்கள். என் குழந்தைகளா, என் இறுதி நேரத்தில் உங்களைக் காணக் கொடுத்து வைத்தேனே! அதுவே எனக்குப் போதும்.

கோஸத்:—அப்பா, அப்பா, நீ இரு, இரு; எங்களுடன் வாழ்ந்திரு.

மாரியன்:—தந்தை வாழ்க! தியாகத் தந்தை வாழ்க!

கோஸத் அழுதாள்; ஜாம்வல்ஜானை அணைத்து முத்தமிட்டாள்; தன்னை வளர்த்த புண்ணியக் கரங்களைக் கன்னத்தில் ஒத்திக்கொண்டாள். ஜாம்

வல்ஜான் ஆனந்தக் கண்ணீருகுத்தான்; புன்னகைத்தான்; திடீரென்றெழுந்தான்; சுவரில் மாட்டிய சிலுவையை யெடுத்து நெஞ்சில் வைத்துக் கொண்டு, "இச்சிலுவையில் வருந்திய தியாகத் தந்தையிடம் என் மனம் ஈடுபட்டுள்ளது. பரமபிதா என்னை யழைத்துவிட்டார்" என்று படுக்கையிற் சாய்ந்தான். அதே சமயம் வைத்தியர் வந்தார். "வாருங்கள் வைத்தியரே, நான் இதோ உலகினின்று விடைபெற்றுக் கொள்ளுகிறேன்" என்றான் ஜாம்வல்ஜான். வைத்தியர் ஜாம்வல்ஜான் கையைப் பார்த்தார். நாது விழுந்து விட்டது. பிராயச்சித்தத்திற்குக் குருக்களைக் கூட்டிவரச் சொன்னார்.

ஜாம்வல் :—என் குருக்கள், என்னைத் திருத்திப் புனிதனாக்கிய சாது, அதோ உயர இருந்து புன்னகைக்கிறார். என் குற்றங் குறைகளை யெல்லாம் மன்னிக்கும்படி நான் அவரை வேண்டிக்கொண்டேன், அது போதும். என்னருமைக் குழந்தைகளா, கோஸத், மாரியன்—நீங்கள் இருவரும் நன்றாயிருங்கள். அதோ அந்த இரண்டு வெள்ளி விளக்குகளையும் கவனமாக வைத்துப் பரம்பரையாகக் காப்பாற்றுங்கள். அவை என் தங்க விளக்குகள்; இக்கொடியவனையும் நல்வழி காட்டி நடத்திய ஞான விளக்குகள். என் வாழ்வில் எத்தனையோ இடர்கள் வந்தன. அவற்றோடும் அந்த விளக்குகளைக் காப்பாற்றினேன். இனி அவை உங்கள் குலத்திற்கு மங்கல தீபங்களாகுக!

கோஸத், மாரியன் :—தங்கள் ஆணைப்படி செய்கிறோம். ஆனால் தந்தையே, தாங்கள் இருங்கள்; எங்களுடன் வாழ்ந்திருங்கள். இவ்வளவு தியாகம் செய்த புண்ணியத் தந்தையாகிய தங்களை ஆவலாகப் பார்த்து அழைத்துச் செல்ல நாங்கள் வந்தோம். அந்தோ! தாங்கள் கண்ணை மூடிச் செல்வதையோ காண்போம்! தந்தையே, எங்கள் உயிரைக் காக்கத் தங்கள் உயிரைக்கொடுத்த மஹாத்மனே....ஆ!

கோஸத் :—அப்பா, அப்பா!

இருவரும் விம்மி விம்மி யழுதனர்; ஜாம்வல் ஜான் கையை முத்தமிட்டனர்.

ஜாம்வல் :—அழாதீர்கள் என் செல்வர்காள், நான் கொடுத்த பணத்தை வைத்துக்கொண்டு சுகமாக வாழுங்கள். கிட்ட வாருங்கள். உலகில் நான் உங்கள் மேல் பேரன்பு வைத்தேன். அன்புக் கண்மணிகாள், நீங்கள் மங்கலமாகப் பெற்றுப் பெருகி நீடூழி வாழுங்கள். உங்களைப் பார்த்து என் மனம் குளிர்ந்தது. கோஸத், நீ கணவனுடன் இன்பமாக வாழ்ந்திரு. மாரியன், நீ நல்லவன்; வீரன்; மாசற்றவன். கோஸத் உன்னை உண்மையாக நேசிக்கிறாள். உடலும் உயிரும்போல நீங்கள் இருவரும் வாழுங்கள். நான் சொன்ன கண்ணாடித் தொழில் செய்தால் ஏராளமாகச் சம்பாதிக்கலாம். சுகமாக வாழலாம். நீங்களும் சுகமாக வாழுங்கள். எளியவர்களுக்குந் தாராளமாகக் கொடுங்கள். என் அருமைக் குழந்தைகளா, நான் இறந்தபின்

எனக்கு எவ்விதமான சடங்குகளும் செய்ய வேண்டாம். கோஸத், நீ அழுவாய்; அதிகமாக அழாதே. இந்தக் கஷ்டப்பட்ட ஜன்மம் போவதே நல்லது. இத்துன்ப உலகினின்று பிரிந்து, பரம பிதாவின் திருவடியைத் தேடிச் செல்லுகிறது என் ஆவி. மாரியன், என் புதை குழிமேல் ஒரு கல்லை நடவேண்டும். அதில் ஒன்றும் எழுதக்கூடாது. நீங்கள் எப்போதாயினும் என் கல்லறைக்கு வந்து காணும்போது, என்னுவி உங்களைக் கண்டு மகிழும். என்னருமைக் கோஸத், என்னருமை மாரியன், நீங்கள் இருவரும் சந்தோஷமாக, க்ஷேமமாக வாழ்ந் தால் அதுவே என்னுவிக்குப் பரமானந்த மளிக்கும். அதோ அந்தப் பெட்டியில் 500 பிரான்க் உள்ளன. என்னுவி பிரிந்ததும், அவற்றைத் தெருவிற் போகும் ஏழைகளுக்குத் தந்துதவுங்கள். அதுதான் எனக்கு நீங்கள் செய்யும் ஈமக்கடன்.

என்னருமைக் கோஸத், மோம்ஃபெர்மேல் காட்டில் நீ தனியாக அழுதபோது உன்னை ஆறுதல் செய்து உன் வாளியை நான் கொண்டுவந்தது நினைப் பிருக்கிறதா? ஆ! தென்னுடியரிடம் நீ என்ன பாடு பட்டாய்? தென்னுடியரை நீ மன்னித்து விடு. என் அன்பு உன்னுல் வளர்ந்தது. அன்று உனக்குத் தைத்துக் கொடுத்த கறுப்புடை இதோ உள்ளது. கோஸத் எவ்வளவு இடர்களூடு இறைவன் நம்மைக் காத்தான். என் கண்ணே, என்னை ‘அப்பா’ என்று மீண்டும் அழைக்கக் கேட்டேனே! அதுவே என்

துயர்களுக்கெல்லாம் சஞ்சீவியானது. எனக்காக நீ சிந்தும் ஒரு துளி அன்புக் கண்ணீரே, என் ஆவியின் தாகந் தணியும் அமுத வூற்று. கோஸத், இப்போது தெரிந்துகொள். உனது தாயின் பெயர் ஃபாங்தேன். அவள் மிகவும் நல்லவள்: உன்னை உயிர்போல நேசித்தாள்; உனக்காகவே உயிர் கொடுத்தாள். உன்னைக் காப்பாற்ற அவளிடம் வாக்களித்தேன். அந்த வாக்கை நிறைவேற்றத் திருவருள் துணை புரிந்தது. அதோ அவளாவி இன்று நீ இன்புறுவதைப் பார்க்கிறது. என்னாருயிர்க் கோஸத், உனது தாயார் ஃபாங்தேனுக்காகத் தினம் தொழுகை நடத்து. என் குழந்தைகளா, இதோ என்னாவி பிரிகிறது. என்னாருமைக் கோஸத், மாரியன், நீங்கள் க்ஷேமமா யிருங்கள். என்மேல் சாய்ந்து கொள்ளுங்கள். அன்பு வாழ்க! அருள் வாழ்க! அறம் வாழ்க!...........எல்லா வுயிர்களும் வாழ்க! உத்தமகுரு வாழ்க! ஜயகிருஸ்து!....பரம பிதாவே! பர .... ம .... பி .... தா .... வே...................!

ஆவி பிரிந்தது. கோஸத்தும் மாரியனும் முழங்காலிட்டுத் தொழுதனர்; அழுதனர்; தங்களுக்காக உயிர்கொடுத்த தியாகியைப் பணிந்தனர்; மீண்டும் தமது ரக்ஷகன் கரங்களை முத்தமிட்டனர்; வெள்ளி விளக்குகளைத் தமது குல விளக்குகளெனக் கொண்டனர்; மஹாத்மா ஜாம்வல்ஜான் பெயரால் ஏழைகளுக்குத் தான தருமங்களைச் செய்தனர். ஜாம்வல்ஜானது புண்ணிய வுயிர் பரமபதம் சேர்ந்தது.

சமூகக் கொடுமையாலும், அரசாங்கச் சட்டத்தாலும், வாழ்வில் வந்த சொல்லொணாத் துன்பங்களாலும் இடர்ப்பட்ட அவனுடல் இதோ இங்குப் புதைந்து மண்ணானது. அதன்மேல் ஒரு கல்லிருக்கிறது. அதில் பேரில்லை. அடியில் வரும் கவிதை யெழுதப்பட்டிருந்தது. காலத்தால் அழிந்துபோன அக்கவிதை அடியில் வருமாறு :—

உண்மை யுளத்தன்; உயிர்களுக் கினியன்,
நன்மைக் குயிர்த்தான்; நலிந்தோர்க் குதவினான்;
திண்மன வீரன், தியாக புருஷன்,
புண்ணிய வாளன், பதைகுழி யிதுவே !

"ஏழை படும் பாடு"
முற்றிற்று.

அன்பு மலர்

விக்தர் ஹ்யூகோ பிரெஞ்சுக் கவியரசர், நாவலரசர், சுதந்திர வீரர். அவர் நூல்களி லெல்லாம் மிகச் சிறந்தது "லே மிஸரபிள்." அது சுமார் 3000 பக்கங்கள் கொண்ட மிகப் பெரிய நாவல்.

சுத்தானந்த பாரதியார் பிரேஞ்சு மொழியில் தேர்ச்சி பெற்றுக் கவிப்புலமை வாய்ந்தவர். விக்தர் ஹ்யூ கோவின் காவியங்களையும், நாவல்களையும், நாடகங் களையும் ஆர்வமுடன் படித்து நன்கு சுவைத்தவர். உலக நாவல்களிற் சிறந்த இந்த லே மிஸரபிள் கதை யைத் தமது எளிய இனிய நடையில் எழுதி எமக் களித்தார். உலகில் சமூகக் கோடுமையாலும், ஈர மற்ற சட்டங்களாலும், ஏழைகள் படும் பாட்டை இந்நூலிற் படிக்கையில் உள்ளம் கரைகின்றது. திருப்பித் திருப்பிப் படித்துச் சுவைக்க வேண்டிய இலக்கிய மணிகளில் இந்நூல் ஒன்றாகும்.

அன்பு நிலயம்
இராமச்சந்திரபுரம்
திருச்சி ஜில்லா

அன்பு மலர்

விக்தர் ஹ்யூகோ பிரெஞ்சுக் கவியரசர், நாவலரசர், சுதந்திர வீரர். அவர் நூல்களி லெல்லாம் மிகச் சிறந்தது "லே மிஸரபிள்." அது சுமார் 3000 பக்கங்கள் கொண்ட மிகப் பெரிய நாவல்.

சுத்தானந்த பாரதியார் பிரெஞ்சு மொழியில் தேர்ச்சி பெற்றுக் கவிப்புலமை வாய்ந்தவர். விக்தர் ஹ்யூ கோவின் காவியங்களையும், நாவல்களையும், நாடகங் களையும் ஆர்வமுடன் படித்து நன்கு சுவைத்தவர். உலக நாவல்களிற் சிறந்த இந்த லே மிஸரபிள் கதை யைத் தமது எளிய இனிய நடையில் எழுதி எமக் களித்தார். உலகில் சமூகக் கொடுமையாலும், ஈர மற்ற சட்டங்களாலும், ஏழைகள் படும் பாட்டை இந்நூலிற் படிக்கையில் உள்ளம் கரைகின்றது. திருப்பித் திருப்பிப் படித்துச் சுவைக்க வேண்டிய இலக்கிய மணிகளில் இந்நூல் ஒன்றாகும்.

அன்பு நிலயம்
இராமச்சந்திரபுரம்
திருச்சி ஜில்லா